# நூல் தேட்டம்

*(தொகுதி 7)*

*தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பெற்ற*
*ஈழத்துத் தமிழ் நூல்கள்*

குறிப்புரையுடனான
## நூல்விபரப்பட்டியல்

**என்.செல்வராஜா**

**அயோத்தி நூலக சேவைகள்**
மே 2011

**© Copy Right 2011 by N.Selvarajah**
All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

# *நன்றி*

*நூல்தேட்டத்தின் ஏழாவது தொகுதியை உங்கள் கரங்களில் இன்று கையளிப்பதற்குத் தோன்றாத் துணையாக இருந்த அனைவருக்கும் முதலில் நன்றிகூறுவது என் தலையாய பணியாகும்.*

*நூல்தேட்டம் அன்று என் மனதில் கருக்கொண்ட வேளை, தன் பல்கலைக்கழக வாழ்வின் நெருக்கடிகளுக்குள்ளும் ஓடித்திரிந்து நூல்களைத் தேடித்தந்து என்னை ஆர்வத்துடன் செயற்படவைத்து மகிழ்ந்துவிட்டு இன்று எம்மிடையே இல்லாது இளமையிலேயே காலன் வசப்பட்டு, என்றும் இளமையாக எங்கள் மனதில் நிலை கொண்டுவிட்ட எம் இனிய மருமகள் சுகந்தியையே எப்பொழுதும் முதலில் நினைவுகூர்வதுண்டு.*

*ஏழாவது தொகுதிக்கான தேடலில் இறங்கியிருந்த வேளையில் தமது நூற்சேர்க்கையைப் பார்வையிட மனமுவந்து அனுமதியளித்தவர்கள், தமது நூல்களை பதிவின்பொருட்டு, அன்பளிப்பாக வழங்கியவர்கள், எனது பணிகள் பற்றிய கட்டுரைகளை எழுதி தாயக, புகலிட ஊடகங்களில் பதிவாக்கியவர்கள், எழுத்தாளர்களுடனான ஒன்றுகூடல்களை தன்னார்வ முனைப்புடன் ஒழுங்குசெய்தவர்கள் என்று இப்பட்டியல் நீளும். சிலரின் பெயர்கள் தவறுதலாக விடுபட்டிருக்கலாம். மனதில் நிலைத்தவர்களை முடிந்தவரையில் இங்கு மீட்டிருக்கின்றேன்.*

*ஆறாவது தொகுதியை உரியகாலத்தில் அழகுற அச்சிட்டுத் தந்ததுடன், அத்தொகுதியை இலங்கையில் பரவலாக அறிமுகம் செய்யும் பொறுப்பினையும் கொழும்பு, குமரன் புத்தக இல்ல அதிபர் கணேசலிங்கம் குமரன் ஏற்றிருந்தார். ஏழாவது தொகுதியையும் அச்சேற்றி விநியோகித்துத் தரும் பொறுப்பினையும் அவரே ஏற்றிருந்தார். அவருக்கு என் நன்றி.*

*இலண்டன், ஐரோப்பிய, ஸ்கன்டிநேவிய நகரங்களில் தங்கள் அரிய நூற்சேர்க்கைகளிலிருந்து தேவைப்பட்ட நூல்களை இத்தொகுதிக்காக நான் பயன்படுத்த அனுமதியளித்ததுடன் மேலும் பலரின் தொடர்புகளையும் தாயகத்திலும் புகலிடத்திலும் ஏற்படுத்தித் தந்தவர்கள் பலர். இலண்டனிலிருந்து திரு திரு. ஐ.தி.சம்பந்தன், தேசம் த.ஜெயபாலன், அ.மயூரன், எஸ்.கே.ராஜென் ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள்.*

*ஏழாவது தொகுதிக்கான நூல்தேடலுக்கான எனது இலங்கைப் பயணத்தின்போது மூன்று வாரங்கள் வரையில் பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தின் தமிழ்ச் சேர்க்கைகளைப் பார்வையிட்டு அரிய பல ஈழத்து நூல்களைப் பதிவுசெய்ய முடிந்தது. அதற்கான ஒழுங்குகளை கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன் , பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட துணைநூலகர் இ.மகேஸ்வரன் அவர்களின் உதவியுடன் மேற்கொண்டிருந்தார். திரு புன்னியாமீன் தனது இல்லத்திலேயே என்னைத் தங்கவைத்ததுடன் தனது அலவலக ஊழியர் திருமதி இல்முன் அவர்களையும் எனது பணிகளுக்கு உதவும் வகையில் நாள்தோறும் கூடவே அனுப்பிவைத்திருந்தார்.*

*சுமார் 700 நூல்களின் தகவல்களை குறுகிய மூன்று வாரகாலத்தில் பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தில் மாத்திரம் திரட்டமுடிந்தமைக்கு சகோதரி இல்முன் அவர்களது அர்ப்பணிப்பும், உதவி நூலகர்களான திருமதி ரிபா சாஹிட், ரொட்னி மற்றும் தமிழ்ப் பிரிவின் ஏனைய நூலக ஊழியர்களின் தன்நலம் கருதாத ஒத்துழைப்புமே காரணமாகும். இவர்கள் அனைவருக்கும், இவர்களின் பின்னணியில் நின்று செயற்பட்ட பேராதனைப்*

*பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட துணைநூலகர் இ.மகேஸ்வரன் அவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள்.*
*இலங்கையில் தாம் அச்சிடும் நூல்கள் அனைத்திலும் ஒரு பிரதியை எனது பணிக்காக வழங்கிவரும் சேமமடு பொத்தகசாலை உரிமையாளர் பத்மசீலன் கொழும்பு குமரன் புத்தக இல்ல உரிமையாளர் கணேசலிங்கம் குமரன், ஆகியோருக்கும் எனது உளம்நிறைந்த நன்றிகள். இவர்களின் வழியில் ஈழத்துத் தமிழ் நூல் வெளியீட்டாளர்கள் அனைவரும் நூல்தேட்டப் பதிவுக்காகத் தமது வெளியீடுகளை வழங்க எதிர்காலத்தில் சமூகப் பொறுப்புடன் முன்வருவார்கள் என்றும் நம்புகின்றேன். தனிப்பட்டமுறையில் அக்கறையுடன் அவ்வப்போது மலையக வெளியீடுகளைத் திரட்டித் தந்துவரும் நண்பர் அந்தனி ஜீவாவுக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து தனது நூல்ச்சேர்க்கைகளை மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் எனக்கு அனுப்பிவைக்கும் கவிஞர் முருகு அவர்களுக்கும் எனது நன்றிகள். தாயகத்திலும், புகலிடத்திலும் காலத்துக்குக் காலம் எனது நூல்தேட்டம் தொகுப்பு முயற்சிகளுக்கு ஆதரவான செய்திகளைப் பிரசுரித்தும், விமர்சனக் கட்டுரைகளை வெளியிட்டும் எனக்கு ஆதரவை வழங்கிய சிறுசஞ்சிகை ஆசிரியர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் எனது நன்றிகள்.*
*எனது வாழ்வின் பெரும்பகுதி நேரத்தை விழுங்கிவிடும் நூல்தேட்டம் தொகுப்புக் கடமைகளின்போது எமது குடும்பச்சுமைகளை முழுமையாகத் தாங்கி என்னைச் சுதந்திரமாக இயங்கவிட்டதுடன் எனக்குத் துணையாகவிருந்து நூலாக்கக் கடமைகளிலும் முடிந்தவரை உதவிவரும் என் அன்புத் துணைவி விஜிக்கு நன்றி செலுத்தத் தவறினால் மிக முக்கியமான பதிவொன்றினை இங்கு மேற்கொள்ளத் தவறியவனாவேன். குடும்பத்தின் நிதி நிலைமையை மிகச் சிக்கனமாகக் கையாண்டு ஒவ்வொரு நூல்தேட்டம் தொகுதிக்கும் தேவையான மேலதிக நிதியை சேமித்து வழங்கும் இமாலயப்பணியும் இவருடையதாகும். இந்நூலைக் கணணியில் பொறிக்கும்வேளை என் அறியாமையினால் நான் விடும் இமாலயத்தவறுகள் அனைத்தையும் பல்கலைக்கழகம், மற்றும் வீட்டுவேலைக் கடமைக்கிடையேயும் முகம்கோணாது சீர்செய்து விட்டு, எனக்குக் கணணியறிவைச் சிறிது புகட்ட எத்தனித்துத் தோற்றுப்போகும் என் மகன் கௌதமனுக்கும் எனது நன்றிகள். இறுதியாக, நிறுவனரீதியான நிதியுதவிகள் ஆதரவுகள், எதுவுமின்றி, தனிமனிதமுயற்சியாக மேற்கொள்ளப்படும் இந்த ஆவணப்பதிவின் அவசியத்தையும், ஆழத்தையும் புரிந்துகொண்டு, இந்நூலைக் கொள்வனவுசெய்து எனது முயற்சியின் நிதிச் சுமையைக் குறைக்கும்வகையில் தங்களாலான பங்களிப்பை நல்கிவரும் இனிய தமிழ் உறவுகளுக்கு என் மனம் கனிந்த நன்றிகள். உங்கள் ஆதரவில் நம்பிக்கைவைத்து, நூல்தேட்டத்தின் எட்டாவது தொகுதியுடன் அடுத்த ஆண்டில் உங்களைச் சந்திப்பேன் என்ற உறுதியுடன் விடைபெறுகிறேன்.*

**-என்.செல்வராஜா-**
***05.04.2011***

# முன்னுரை
# நூல்தேட்டம்
## (ஓர் அறிமுகம்)

*ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல்விபரப்பட்டியலான நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதி 2002இலும், இரண்டாவது தொகுதி 2004இலும், மூன்றாவது தொகுதி 2005இலும், நான்காவது தொகுதி 2006இலும், ஐந்தாவது தொகுதி 2008 இலும், ஆறாவது தொகுதி 2010இலும் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியான ஏழாவது தொகுதி இதுவாகும். இதில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களினதும், வெளியீட்டாளர்களினதும் ஆயிரம் நூல்கள் பற்றிய அடிப்படை நூலியல் குறிப்புகளும் அதனையடுத்து நூல் பற்றிய சிறு அறிமுகக் குறிப்பும் இடம்பெற்றுள்ளன. தொடர் இலக்கங்கள் முதலாவது தொகுதியிலிருந்து தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் ஏழாவது தொகுதியில் இடம்பெறும் நூல்களுக்கு 6001இலிருந்து 7000வரை தொடரிலக்கமிடப்பட்டுள்ளன.*

### தொகுப்பும் தவிர்ப்பும்

*இது ஒரு தேர்ந்த நூற்பட்டியலன்று. இங்கு பட்டியலாக்கப்பட்டுள்ள தனி நூல்கள் (*Monographs*) எவையும் எவ்வித தரக்கட்டுப்பாட்டுக்கும் உட்படவில்லை. இன்று பார்வையிடக்கூடிய ஈழத்துத் தமிழ் நுல்கள் அனைத்தையும், ஒரு தொகுதிக்கு 1000 நூல்கள் என்ற எண்ணிக்கையில் பட்டியலிடுவதே நூல்தேட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். வெளியீட்டின் பௌதிகத் தன்மை கருதி சில பிரசுரங்கள் நூல்தேட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. துண்டுப்பிரசுரங்கள், வரைபடங்கள், அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதிகள், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், இறுவெட்டுகள் என்பன இத்தொகுப்பில் சேர்க்கப்படவில்லை.*

*பெரும்பான்மையான கல்வெட்டுகள், ஞாபகார்த்த மலர்கள், சஞ்சிகைகள், என்பனவும் இத்தொகுதியில் தவிர்க்கப்பட்டுள்ளன. ஆயினும், தனி ஆவணமாகக் கருதும்வகையில் வெளியிடப்பட்டிருக்கும் சஞ்சிகைகளின் சிறப்புமலர்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. மேலும், சில கல்வெட்டுக்களும், ஞாபகார்த்த மலர்களும் தனிநூலின் வகைக்குள் அடங்கக்கூடியதான கனதியான அம்சங்களுடன் வெளிவந்திருப்பதால் அவற்றையும் இத்தொகுதியில் சேர்த்துக்கொண்டுள்ளோம்.*

*இதில் தொகுக்கப்பட்டுள்ள நூல்கள் எவ்வித கால எல்லைகளுக்கும் வரையறுக்கப்படவில்லை. ஒரு நூலின் பின்னைய பதிப்புகள் வெளிவரும்போது அவை புதுக்கியோ, சுருக்கியோ, வெளிவரும் வாய்ப்பிருப்பதாலும், முற்றிலும் வேறான நூலியல் தகவல்களை அவை கொண்டிருப்பதாலும் குறித்தவொரு நூலின் பல்வேறு பதிப்புகளும் இங்கு ஒரே பதிவிலக்கத்தின் கீழ் இடம்பெறுகின்றன.*

*முன்னைய பதிவிலக்கத்தைப் பெற்ற மீள்பதிப்புக்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.*

### பதிவுகளின் ஒழுங்கமைப்பு

*நூல்தேட்டம் ஒரு உசாத்துணை நூலாகும். ஒரு நூலைப் பற்றிய நூலியல் தகவல்களைக் குறுகிய நேரத்தில் வாசகர் கண்டறிய வகைசெய்யும் வண்ணம் இத்தொகுதி மூன்று பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.*

*முதற்பிரிவில், நூல் பற்றிய பிரதான பதிவுகள் பாடஒழுங்கில் வகைப்படுத்தப்பட்டு தொடரெண்கள் மூலம் அடையாளமிடப்பட்டுள்ளன. பாடவாரியாக ஒரு நூலைத்தேடும் வாசகர் இப்பிரிவின் மூலம் பயனடைவர்.*

இரண்டாவது பிரிவு, தலைப்பு வழிகாட்டியாகும். முதற்பகுதியில் நூல்கள் பாடவாரியாக முதலில் ஒழுங்குபடுத்தப்பட்டு, பின்னர் அகரவரிசையில் காணப்படுவதால் ஒரு நூலின் தலைப்பைக் கொண்டு நூலைத் தேடவிழையும் வாசகர் இரண்டாவது பிரிவில் அகரவரிசையில் காணப்படும் தலைப்பு வழிகாட்டியின் வாயிலாக நூலின் தொடர் இலக்கத்தைக் கண்டறிந்து முதற்பகுதியில் உள்ள பிரதான பதிவைப் பார்வையிட முடியும். இங்கு தலைப்புக்கள் அகரவரிசை எழுத்தொழுங்கில் அல்லாது சொல்லொழுங்கிலேயே அகரவரிசைப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.
ஆசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், மூல ஆசிரியர் ஆகியோரின் விபரங்களைக் கொண்டு ஒரு நூலைத்தேடும் வாசகர் மூன்றாவது பிரிவின் மூலம் பயனடைவர். இங்கு ஆசிரியர் அகர வரிசையில் நூல்களின் தொடர் எண்களைக் கண்டறிந்து அதன் மூலம் தான் தேடும் நூலைச் சென்றடைய முடியும். ஆசிரியர் அகரவரிசையில் புனைபெயர்களும் இடம்பெறுகின்றன. ஒரு நூலாசிரியர் இயற்பெயரிலும் புனைபெயரிலும் நூல்களை எழுதுவதால் புனைபெயரின் கீழ் நூலைத்தேடும் வாசகர் ஆசிரியரின் இயற்பெயரிலும் அவற்றைத் தேட உதவும் வகையில், **பார்க்க, மேலும் பார்க்க** போன்ற வழிகாட்டி அம்சங்கள் தேவை கருதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இரு ஆசிரியர்கள் ஒரே புனைபெயரில் வலம் வருவதையும் இங்கு காணமுடிவதால் புனைபெயரில் நூலைத்தேடும் வாசகர்கள் அவதானமாக இருக்க வேண்டும். வாசகரின் தேடுகை நேரத்தை குறைக்கும் வகையில் புனைபெயரிலும் இயற்பெயரிலும் எழுதும் ஆசிரியரின் பிரபல்யமான ஒரு பெயரின்கீழ் மட்டும் இயன்றவரை அவரது நூல்களின் தொடர்எண்களைக் குறித்துள்ளோம்.

## நூலியல் பதிவுகள்

பிரதான பகுதியில் நூல் பற்றிய தகவல் மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன.
முதற்பகுதியில் நூலின் தலைப்பு, உப தலைப்பு, அந்நூலின் ஆக்கத்துக்கு அதிகாரபூர்வ உரித்துடைய ஆசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர் விபரங்கள், வெளியீட்டு விபரம், பதிப்பு விபரம், ஆகியனவும் அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்ட நூலின் குறித்த பதிப்பிற்கான அச்சகத்தின் விபரமும் தரப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறுமிடத்து சர்வதேச தராதர நூல் எண்களும் இப்பகுதியில் இடம்பெறுகின்றன.
ஆசிரியர் பற்றிய தகவலில் ஆசிரியரின் இயற்பெயர், புனை பெயர் பற்றிய குறிப்புகளும் அறியமுடிந்தால் தரப்பட்டுள்ளன. பதிவுக்குள்ளாகும் நூலின் உரித்தாளர் மூலநூலாசிரியராக இல்லாதவிடத்து, அவரின் பங்களிப்புப் பற்றிய தகவல் அவரது பெயரையடுத்து அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது.
நூலின் வெளியீட்டாளர் பற்றிய தகவல் குறிப்பில் வெளியீட்டாளரின் இயங்குதளம், வெளியீட்டகத்தின் பெயர், முகவரி என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு வெளியீட்டகம் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் தனது கிளைகளைப் பரப்பியிருக்கும் வேளை, பதிவுக்குள்ளாகும் நூலில், குறிப்பாக ஒரு இயங்குதளத்தை மட்டும் வெளிப்படுத்தியிருந்தாலன்றி, பதிவுத்தேவை கருதி, நூல் அச்சிடப்பட்ட நாட்டில் உள்ள வெளியீட்டகத்தின் கிளை அமைந்த ஊரே அதன் இயங்குதளமாகப் பதியப்பட்டுள்ளது. ஆசிரியரே வெளியீட்டாளராகவும் இருக்கும்போது, நூலில் காணும் ஆசிரியரின் முகவரி வெளியீட்டக முகவரியாகக் கொள்ளப்பட்டுள்ளது.
நூலின் பதிப்பு விபரத்தில், பதிவுக்குப் பெறப்பட்ட நூலின் பதிப்பு விபரமும், அப்பதிப்பு வெளியிடப்பட்ட திகதியும் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நூல் முதற்பதிப்பு அல்லாதவிடத்து முன்னைய பதிப்புகள் பற்றிய திகதி விபரங்களும் நூலில் தரப்பட்டவாறாகப் பதியப்பட்டுள்ளன. சில வெளியீட்டாளர்கள், மறுபதிப்பு நூல்களையும் முதற்பதிப்பாகக் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வெளியீட்டாளரின் முதற் பதிப்பாகவே அது கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவ்விபரங்கள் நூலியல் நேர்மை கருதி, பதிப்பு நூலில் குறிப்பிடப்படவேண்டியது அவர்களது கடமையாகும் என்பதை இங்கு வலியுறுத்துதல் அவசியமாகின்றது. பெரும்பான்மையான தமிழக மீள்பதிப்புக்களில் இத்தவறுகள் காணப்படுகின்றன.

நூலின் அச்சக விபரம் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது. இந்த விபரம் பதிவுக்குரிய நூலின் குறித்த பதிப்புக்கு மட்டும் உரியதாகும் என்பதும் கவனத்துக்குரியது.
நூலியல் பதிவின் இரண்டாவது பகுதியாக அமைவது நூலின் பௌதீகத் தகவல்களாகும். இதில் நூலின் பக்கங்கள், சிறப்பம்சங்கள், விலை, அளவு, தராதர எண் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.
நூலின் பக்கங்கள் மூன்று வகையில் குறிப்பிடப்படுகின்றன. அவை ரோமன் இலக்கமிடப்பட்ட பக்கங்கள், இலக்கமிடப்படாத பக்கங்கள், அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்கள் என்பனவாகும். ரோமன் இலக்கமும், அரேபிய இலக்கமும் இடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை அவ்வவ்விலக்கங்களாலேயே சுட்டப்பட்டுள்ளன.
இலக்கமிடப்படாத பக்கங்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன. (உதாரணம்: VII, (12), 243 பக்கம்). பெரும்பான்மையான தமிழ் நூல்களில் முகவுரைப் பக்கங்கள் இலக்கமிடப்படாவிடினும் அவை பின்னர் அரேபிய இலக்கங்களாகத் தொடர்கின்றன. அத்தருணங்களில் அவை அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்களாகவே கருதப்பட்டுள்ளன.
பக்கங்கள் பற்றிய குறிப்பை அடுத்து அமைவது சிறப்பம்சங்களாகும். இங்கு வரைபடங்கள், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், தகடுகள் பற்றிய குறிப்புகள் காணப்படும். விலை விபரம் காலவரையறைக்குட்பட்டதாக அமைவதாயினும் வரலாற்றுத்தேவை கருதி மட்டுமே நூல்தேட்டத்தில் அவை சேர்க்கப்பட்டுள்ளது. நூலில் குறிப்பிடப்படும் விலை அந்நாட்டு நாணய அலகின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை ரூபாவுக்கு மாத்திரம் நாடு குறிப்பிடப்படவில்லை. இது ஒரு வர்த்தக நூற்பட்டியல் இல்லையென்பதால் தேவைப்படுமிடத்து நூலின் தற்போதைய விலை பற்றிய தகவலை அதன் விற்பனையாளர்களிடமே வாசகர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.
நூலின் பௌதீக விபரங்களில் அடுத்ததாக வருவது, நூலின் அளவாகும். இது சதம மீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இப்பிரிவில் இறுதியாக அமைவது நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண் (International Standard Book Number) பற்றிய தகவலாகும். ஈழத்துத் தமிழ் நூல்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்களே இவ்விலக்கத்தைத் தாங்கி வெளிவந்திருப்பினும் அதிகரித்து வரும் அதன் முக்கியத்துவம் கருதி இவ்விலக்கம் இப்பிரிவில் இடம்பெறுகின்றது. எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் பயன்பாடு கருதி ISBN பற்றிய விரிவான கட்டுரையொன்று **முதலாவது** தொகுதியில் xiv-xviii பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.
நூலியல் தகவலின் மூன்றாவது, இறுதிப்பிரிவு நூல்பற்றிய சுருக்கக் குறிப்பாகும். இது ஒரு திறனாய்வுக் குறிப்பாகவோ, விளம்பரமாகவோ அல்லாது நூலினதும் நூலாசிரியரினதும் சிறு அறிமுகமாக மாத்திரம் அமைவது குறிப்பிடத்தக்கது. அரியநூல்களின் வைப்பிடம் பற்றிய குறிப்பு 3வது தொகுதியிலிருந்து வழங்கப்படுகின்றது. உதாரணமாக பெறுதற்கரிய சில ஈழத்து நூல்கள் பிரித்தானிய நூலகங்களிலும், மலேயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறையிலும் காணமுடிந்தது. அவை பற்றிய இருப்பு விபரம் இப்பகுதியில் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

## பகுப்பாக்கம்

இந்நூலின் பிரதான பகுதியில் நூல்கள் பாட ஒழுங்கில் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்கென நாம் தேர்ந்தெடுத்துள்ள பாட ஒழுங்கு வரிசை, டூவியின் தசாம்சப்பகுப்பு முறையாகும். (Dewey Decimal Classification Scheme) தென்னாசியாவிலும் ஐரோப்பாவிலும் நூலகங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் இப்பகுப்பு முறை தமிழ் வாசகர்களுக்குப் பரிச்சயமானதொன்றென்ற வகையில் இப்பகுப்பாக்கத்தைப் பின்பற்றத் தீர்மானித்தோம். இப்பகுப்பாக்கத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று பிராந்தியத் தேவைகருதி இப்பகுப்பு முறையில் தேவைப்படும் மாற்றத்தைப் புகுத்தமுடியும் என்பதாகும். ஈழத்துத் தமிழ்நூல்களின் பகுப்புத்தேவை கருதி இப்பகுப்பு முறை சில மாற்றங்களுடன் பயன்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பகுப்பாக்கம் அறிவுத்தேட்டத்தை

முதலில் பத்துப் பெரும்பிரிவுக்குள் அடக்குகின்றது. பின்னர் ஒவ்வொரு பெரும்பிரிவும் பத்து உபபிரிவுகளாகின்றன. அந்த உப பிரிவுகள் மேலும் பத்து உபபிரிவுகளாகின்றன. இத்தகைய ஒரு தசாம்சப்பகுப்பு முறை பற்றிய விரிவான விளக்கத்தை இங்கே தரமுடியாவிடினும் வாசகரின் தேவை கருதி இந்நூலில் பயன்படுத்தும் பகுப்புத் திட்டம் சுருக்கமாக இந்த அறிமுகப் பகுதியையடுத்துத் தரப்பட்டுள்ளது.

## வாழ்க்கை வரலாறு

பகுப்பாக்க ஒழுங்கில் இறுதிப்பிரிவாக அமைவது வரலாறாகும். இதில் பிரதேச வரலாற்றுடன், வாழ்க்கை வரலாற்று நூல்களும் ஞாபகார்த்த மலர்களும் இடம்பெறுகின்றன. பகுப்பாக்கத்தின் போது பன்முகத்தோற்றம் பெற்ற பெரியார்களின் வரலாற்று நூல்களைத் தரம்பிரிக்கும்போது பிரதான பதிவை ஏதாவது ஒரு பிரிவுக்குள் பதிய வேண்டிய கட்டாயத்தேவை ஏற்பட்டது. ஒருவரது ஆளுமை எத்துறையில் பிரகாசித்தது என்பதை விட குறிப்பிட்ட நூலில் அவரது பன்முகப்பட்ட ஆளுமையின் எப்பகுதி ஆய்வுக்கெடுக்கப்பட்டது என்ற அடிப்படையிலேயே அவரது நூலுக்கான பகுப்புப் பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்டது. அதனால் இப்பிரிவைப் பார்வையிடும் வாசகர்கள் தயவு செய்து பல்வேறு வாழ்க்கை வரலாற்றுப் பிரிவுகளிலும் கண்ணோட்டம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புக்கள்

இரண்டாம் தொகுதியிலிருந்து மேலதிக அம்சமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் பகுதி இதுவாகும். இன்றைய ஈழத்து இனப்பிரச்சினையின் சர்வதேசமயப்படுத்தல் காரணமாக ஈழத் தமிழரல்லாத பன்நாட்டவர்களிடையே உருவாகிவரும் ஈழத்தமிழர்சிக்கல் பற்றிய தேடலின் விளைவாக, தமிழகத்திலும் மலேசியாவிலும் ஐரோப்பாவிலும் ஈழத்தமிழர் பற்றிய நூல்களின் வரவு அதிகரித்திருப்பதைக் காணமுடிகின்றது. இவற்றில் பல தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதன்விளைவாக, நூல்தேட்டத்தில் இவ்வாக்கங்களுக்கான ஆவணமாக்கலும் அவசியம் என்று கருதியதால், தனியானதொரு பிரிவாக அவை இடம்பெறுகின்றன.

## முன்னைய பதிவுகளுக்கான மேலதிக தகவல்கள்

நூல்தேட்டம், ஈழத்தமிழரின் நூலியல் முயற்சிகளில், இயன்றவரை நிறைவான ஆவணமாக்கலையே மேற்கொள்ள விழைகின்றது. முன்னைய தொகுதியில் இடம்பெற்ற ஒரு நூல் திருத்திய மறுபதிப்பாக வெளியிடப்பட்டால், அதுபற்றிய தகவலையும் இத்தொகுதியில் தந்திருக்கின்றோம். தொகுப்பு முயற்சியில் குழப்பங்களைத் தவிர்க்கும் பொருட்டு இவை கொள்கையளவில் புதிய பதிவாகக் கருதப்பட மாட்டாது. இதனால் அப்பதிவிற்குத் தனியான தொடர் இலக்கத்தை வழங்காது, அதை பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளோம். வாசகர்களின் பயன்கருதி குறிப்பிட்ட இந்நூற்பதிவின் மூலப்பதிப்பின் தொடர் இலக்கத்தையும் குறிப்புப் பகுதியில் தந்துள்ளோம்.

## நிறைவுக் குறிப்பு

நூல்தேட்டத்தின் முன்னைய தொகுதிகளை எமது சக்திக்கெட்டியவரை சர்வதேச நூற்பட்டியல்களின் சிறப்பம்சங்களைக் கூர்ந்து கவனத்துக்கெடுத்துத் தொகுத்திருந்தோம். இத்தொகுதிகளில் காணப்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டி, காத்திரமான ஆலோசனைகளைப் பலர் வழங்கியிருந்தனர். அவற்றில் நாம் ஏற்றுக்கொண்ட பல விடயங்களை இத்தொகுதியிலும் சேர்த்திருக்கின்றோம். அடுத்து வரவுள்ள எட்டாவது தொகுதி மேலும் சிறந்ததாக அமைய உங்கள் மேலான ஆதரவை எதிர்பார்க்கின்றோம். இத்தொகுதி வர்த்தக நோக்கமற்றதொரு தனிமனித முயற்சியாகும். நிறுவனரீதியில் மேற்கொள்ளப்படவேண்டிய இத்தகைய உசாத்துணை வெளியீட்டு நடவடிக்கைகள் தனிமனித முயற்சியாக மலரும்போது நிதி, காலம், நிபுணத்துவ உதவி என்பன எப்பொழுதும்

வரையறைக்குட்பட்டதாகவே அமைகின்றன. இதை மனதில் கொண்டு, இத்தொகுதியின் பரந்துபட்ட அறிமுகத்திற்கும் விநியோகத்திற்கும், விற்பனைக்கும் உங்களாலான பங்களிப்பை வழங்குவீர்கள் என்று நம்புகின்றோம். இதன் விற்பனை மூலம் பெறப்படும் நிதி எமது அடுத்த தொகுதியின் துரித உருவாக்கத்துக்கு உறுதுணையாக அமையும் என்று எதிர்பார்க்கின்றோம். உலகெங்கும் பரந்துவாழும் ஈழத்தமிழர்கள் தாம் புலம்பெயர்ந்துவாழும் நாடுகளிலுள்ள நூலகங்களையும் நூல்தேட்டத்தின் அனைத்துத் தொகுதிகளும் சென்றடைவதற்குத் தங்களாலான பங்களிப்பினை நல்குவதைத் தார்மீகக் கடமையாகக் கொள்வீர்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

# நூல்தேட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வகுப்புப் பிரிவு

*(டூவி தசாம்சப் பகுப்பை அடிப்படையாகக் கொண்டது)*

## பிரதான பிரிவுகள்

***000-099 பொதுப்பிரிவு***
***100-199 மெய்யியல்துறை***
***200-299 சமயங்கள்***
***300-399 சமூக விஞ்ஞானங்கள்***
***400-499 மொழியியல்***
***500-599 தூய விஞ்ஞானங்கள்***
***600-699 பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பம்***
***700-799 கலைகள், நுண்கலைகள்***
***800-899 இலக்கியம்***
***900-999 புவியியல், வரலாறுகள்***

## விரிவான பிரிவுகள்

### *000 பொதுப்பிரிவு*

*000* பொது அறிவு ***6001-6011***
*020* நூலகவியல், தகவல் விஞ்ஞானம் ***6012-6015***
*050* பொதுப் பருவஇதழ்கள், சிறப்பிதழ்கள், வழிகாட்டிகள், சுட்டிகள் ***6016-6022***
*051* பருவஇதழ் சிறப்பிதழ்கள் ***6023-6025***
*060* பொது நிறுவனங்கள் ***6026***
*070* ஊடகவியல், வெளியீட்டுத்துறை ***6027-6030***

### *100 மெய்யியல்துறை*

*100* மெய்யியல் (தத்துவவியல்) ***6031- 6035***
*150* உளவியல் ***6036-6038***
*158.1* மானிட மேம்பாடு ***6039-6048***
*160* தர்க்கவியல் ***6049- 6052***
*170* ஒழுக்கவியல் ***6053-6059***
*180* இந்து தத்துவம் ***6060-6064***
*190* சோதிடம், வானசாஸ்திரம் ***6065-6067***

### *200 சமயங்கள்*

*294.3* பௌத்தம் ***6068-6069***
*294.5* இந்து சமயம் ***6070- 6095***
*294.5(1)* இந்து நிறுவனங்கள், மாநாடுகள், மலர்கள் ***6096-6099***
*297* இஸ்லாம் ***6100-6135***

### *300 சமூக விஞ்ஞானங்கள்*

*301* சமூகவியல் ***6136-6140***
*301.1* பண்பாடு ***6141-6143***
*302* பெண்ணியம் ***6144-6152***
*305.5* சாதியம் ***6153***

*306 கலாச்சாரம்* ***6154-6155***
*320 அரசறிவியல்* ***6156-6177***
*323 மனித உரிமை* ***6178-6181***
*330 பொருளியல்* ***6182-6188***
*331.88 தொழிற் சங்கங்கள்* ***6189***
*336 நிதியியல், வங்கியியல்* ***6190-6191***
*338 பொருளாதார வளங்கள், மீன்வளம்* ***6192-6193***
*340 சட்டவியல்* ***6194-6197***
*340.59 இஸ்லாமியச் சட்டங்கள்* ***6198-6200***
*342 அரசியலமைப்புச் சட்டம்* ***6201-6206***
*350 பொது நிர்வாகம்* ***6207***
*360 சமூக சேவை நிறுவனங்கள்* ***6208-6209***
*363 சுற்றாடல், சூழல் மாசுபடுதல்* ***6210-6220***
*369.4092 சாரணர் இயக்கம்* ***6221***
*370 கல்வியியல்* ***6222-6298***
*370.1 கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள்* ***6299-6302***
*380 வர்த்தகம், தொடர்புகள், போக்குவரத்து*
*381 வர்த்தகம்* ***6303***
*390 நாட்டாரியலும் பழக்க வழக்கங்களும்* ***6304***
*392 வாழ்வியல் வழக்குகள், வாழ்க்கை முறைமைகள்* ***6305-6307***
*392.5 திருமணங்கள், மரணச்சடங்கு முறைமைகள்* ***6308-6309***
*398 கிராமிய இலக்கியங்கள்* ***6310-6319***
*398.1 பழமொழிகளும் விடுகதைகளும்* ***6320***

## *400 மொழியியல்*

*494.8 தமிழ் மொழி* ***6321- 6324***
*494.8(1) தமிழ் இலக்கணம்* ***6325- 6328***
*494.8(2) தமிழ்ப் பாடநூல்கள்* ***6329-6339***

## *500 தூய விஞ்ஞானங்கள்*

*500 தூய விஞ்ஞானம்* ***6340***
*510 கணிதம்* ***6341-6349***
*550 புவியியல் விஞ்ஞானம்* ***6350***
*551.47 சுனாமி* ***6351***
*570 உயிரியல்* ***6352-6354***

## *600 தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்*

*601 தொழில்நுட்பம்* ***6355-6356***
*610 மருத்துவம்* ***6357***
*612 உடற்கூற்றுத் தொழிலியல்* ***6358***
*613 பொது உடல்நலவியல்* ***6359***
*614 பொதுச் சுகாதாரம்* ***6360-6361***
*616 நோய்கள்* ***6362***
*618 பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம்* ***6363- 6364***
*619 கீழைத்தேய மருத்துவம்* ***6365***
*640 இல்லப்பொருளியல், குடும்பக்கலை*
*649 குழந்தைப் பராமரிப்பு* ***6366-6367***

*650 முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம்* ***6368-6371***
*657 கணக்கியல்* ***6372***

## *700 கலைகள், நுண்கலைகள்*
*701 பொதுக்கலைகள்* ***6373***
*750 ஓவியக்கலை* ***6374-6375***
*750.(1) ஒப்பனைக் கலை* ***6376***
*780 இசைக்கலை* ***6377***
*790 நிகழ்கலைகளும் பொழுதுபோக்குக் கலைகளும்*
*791 நாட்டியக் கலை* ***6378***
*791.1 நாட்டிய நாடகங்கள்* ***6379***
*792 அரங்கியல், நாடகக்கலை* ***6380-6385***
*793 திரைப்படக்கலை* ***6386***
*796 உடற்பயிற்சி, விளையாட்டுகள்* ***6387-6390***

## *800 இலக்கியம்*
*801 சிறுவர் இலக்கியங்கள்*
*801.(1) சிறுவர் பாடல்கள், கவிதைகள்* ***6391-6420***
*801.(4) சிறுவர் சிறுகதைகள்* ***6421-6429***
*801.(5) சிறுவர் நாவல்கள்* ***6430-6446***
*801.(6) சிறுவர்க்கான கட்டுரைகள்* ***6447***
*894.8 தமிழ் இலக்கியம்*
*894.8(1) தமிழ்க் கவிதைகள்* ***6448-6584***
*894.8(2) தமிழ் நாடகங்கள்* ***6585-6617***
*894.8(3) தமிழ்க்கவிதை நாடகங்கள்-காவியங்கள்* ***6618-6625***
*894.8(4) தமிழ்ச் சிறுகதைகள்* ***6626-6717***
*894.8(5) தமிழ் நாவல்கள், குறுநாவல்கள்* ***6718-6809***
*894.8(6) இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வுகள்* ***6810-6894***
*899 பிறமொழி இலக்கியங்கள்*
*899.(1) பிறமொழிக் கவிதைகள்* ***6895-6898***
*899.(4) பிறமொழிச் சிறுகதைகள்* ***6899***
*899.(5) பிறமொழி நாவல்கள், குறுநாவல்கள்* ***6900-6901***

## *900 புவியியல், வரலாறுகள்*
*901 பொது வரலாறு* ***6902***
*909 நாகரீகங்கள்* ***6903-6906***
*915 பிரதேசப் புவியியல்* ***6907***
*920 வாழ்க்கை வரலாறு, ஞாபகார்த்த மலர்கள்*
*920.01 துறைசாரா வாழ்க்கைவரலாறுகள்* ***6908***
*920.1 ஊடகவியலாளர், ஒலிபரப்புத்துறையினர்* ***6909***
*922 சமயத் தலைவர், சிந்தனையாளர்* ***6910-6914***
*923 சமூகவியல்துறை சார்ந்தோர்*
*923.2 அரசியல் துறையினர்* ***6915-6916***
*923.4 சட்ட அறிஞர்கள்* ***6917-6918***
*923.6 சமூக சேவகர்கள்* ***6919-6920***
*923.61 விடுதலைப் போராளிகள்* ***6921-6923***

*923.7* கல்வியியலாளர்கள் ***6924-6931***
*923.8* வர்த்தகர்கள் ***6932***
*925* விஞ்ஞானிகள் ***6933***
*927* கலைஞர்கள்
*927.5* ஓவியக்கலைஞர்கள் ***6934***
*928* இலக்கிய அறிஞர்கள் ***6935-6943***
*940* ஐரோப்பிய வரலாறு ***6944***
*941* பிரித்தானிய வரலாறு ***6945-6946***
*950* ஆசிய வரலாறு ***6947***
*954* இந்திய வரலாறு ***6948-6953***
*954.93* இலங்கை வரலாறு
*954.93(1)* இலங்கையின் பொது வரலாறு ***6954***
*954.93(2)* இலங்கை இனப்பிரச்சினை வரலாறு ***6955-6974***
*954.93(3)* இனங்கள் இன உறவுகள் ***6975-6985***
*954.93(4)* பிரதேச வரலாறு ***6986-6990***

*999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்*
*999 பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்* ***6991-7000***

*பின்னிணைப்பு* **7A01- 7A31**

..........................................................

# நூல்தேட்டம் தொகுதி 7
# வகுப்புப் பிரிவு

## *000 பொதுப்பிரிவு*

### *000 பொது அறிவு*

***6001***

***2009 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள்: தொகுதி 1.*** *பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (உடத்தலவின்ன: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே). 48 பக்கம், விலை: ரூபா 97.50, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-1779-22-1.*

*வன்னிப் போர் அவலத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெயர்ந்து வவுனியா தடுப்புமுகாம்களில் வாழும் சிறார்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்புள்ளவர்களின் பயன்பாட்டுக்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட செயல்நூலின் முதலாம் தொகுதி. லண்டன் தேசம்நெற் வெளியீட்டகத்தின் நிதியுதவியுடன் உடத்தலவின்ன சிந்தனைவட்டம் மேற்கொண்ட செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக இலவசமாக இந்நூல் வழங்கப்பட்டது. உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 302ஆவது வெளியீடாக இந்நூலை வெளியிட்டுள்ளது.*

***6002***

***2009 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள்: தொகுதி 2.*** *பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (உடத்தலவின்ன: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே). 48 பக்கம், விலை: ரூபா 97.50, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-1779-23-8.*

*வன்னிப் போர் அவலத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெயர்ந்து வவுனியா தடுப்புமுகாம்களில் வாழும் சிறார்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்புள்ளவர்களின் பயன்பாட்டுக்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட செயல்நூலின் இரண்டாம் தொகுதி. லண்டன் தேசம்நெற் வெளியீட்டகத்தின் நிதியுதவியுடன் உடத்தலவின்ன சிந்தனைவட்டம் மேற்கொண்ட செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக இலவசமாக இந்நூல் வழங்கப்பட்டது. உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 303ஆவது வெளியீடாக இந்நூலை வெளியிட்டுள்ளது.*

***6003***

***2009 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள்: தொகுதி 3.*** *பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, மே 2009. (உடத்தலவின்ன: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே). 48 பக்கம், விலை: ரூபா 97.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-1779-24-5.*

*வன்னிப் போர் அவலத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெயர்ந்து வவுனியா தடுப்புமுகாம்களில் வாழும் சிறார்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்புள்ளவர்களின் பயன்பாட்டுக்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட செயல்நூலின் மூன்றாம் தொகுதி. லண்டன் தேசம்நெற் வெளியீட்டகத்தின் நிதியுதவியுடன் உடத்தலவின்ன சிந்தனைவட்டம் மேற்கொண்ட செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக இலவசமாக இந்நூல் வழங்கப்பட்டது. உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 304ஆவது வெளியீடாக இதனை வெளியிட்டுள்ளது.*

**6004**

**2009 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள்: தொகுதி 4.** பீ.எம்.புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன். உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, மே 2009. (உடத்தலவின்ன: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே).
48 பக்கம், விலை: ரூபா 97.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-1779-25-2.

வன்னிப் போர் அவலத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெயர்ந்து வவுனியா தடுப்புமுகாம்களில் வாழும் சிறார்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்புள்ளவர்களின் பயன்பாட்டுக்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட செயல்நூலின் நான்காம் தொகுதி. லண்டன் தேசம்நெற் வெளியீட்டகத்தின் நிதியுதவியுடன் உடத்தலவின்ன சிந்தனைவட்டம் மேற்கொண்ட செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக இலவசமாக இந்நூல் வழங்கப்பட்டது. உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 305ஆவது வெளியீடாக இந்நூலை வெளியிட்டுள்ளது.

**6005**

**சர்வதேச நினைவு தினங்கள் பாகம் 1.** பீ.எம்.புன்னியாமீன். கண்டி: சிந்தனை வட்டம், த.பெ.இலக்கம் 01, பொல்கொல்லை, 1வது பதிப்பு, ஜுலை 2010. (கண்டி: சீ.வீ.பப்ளிஷர்ஸ், த.பெ.இலக்கம் 01, பொல்கொல்லை).
196 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1779-43-6.

சர்வதேச நினைவுதினங்கள் ஒரு குறித்த விடயத்தை மையப்படுத்தி அவ்விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கில் அனுஷ்டிக்கப்படுவதுடன் குறித்த விடயத்தை நினைவு கூருவதாகவும் அமைகின்றது. இத்தினங்கள் பல ஐ.நா.சபையினால் அங்கீகரிக்கப்பட்டவை. மேலும் சில குறித்த விடயம் தொடர்பான சர்வதேச கவன ஈர்ப்பினைப் பெறும்வகையில் சர்வதேச நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படுபவை. பீ.எம்.புன்னியாமீன் தினக்குரல் வார இதழில் தொடராக எழுதிய சர்வதேச நினைவுதினங்கள் தொடர்பான 25 கட்டுரைகள் இந்நூலில் தனித்தொகுப்பாக இடம்பெற்றுள்ளன.

**6006**

**புதிய பொது அறிவுச் சுடர் 1996.** S.L.M.மஹ்ரூப். கண்டி: கலைவாணி புத்தக நிலையம், 231 டீ.எஸ்.சேனநாயக்கா வீதி, 5வது பதிப்பு, 1996, 1வது பதிப்பு 1992, 2வது பதிப்பு, 1993, 3வது பதிப்பு, 1994, 4வது பதிப்பு, 1995. (கொழும்பு 13: Quick Graphics Print, 5-1/20 Super Market, Kotahena).
xxiv, (8), 184 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இந்நூல் தகுதிகாண் ஆசிரியர் போட்டிப் பரீட்சையுட்பட கணித, விஞ்ஞான, ஆரம்பக்கல்வி, சமய ஆசிரியர் பரீட்சைகள், வங்கி எழுதுவினைஞர் பரீட்சைகள், பொது இலிகிதர் பரீட்சைகள், அதிபர் தரப் போட்டிப் பரீட்சைகள், கணனி ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சைகள் ஆகியனவற்றிலும், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சமூகக் கல்விப் பாடத்தில்உயர் சித்தியை எதிர்பார்த்து தயாராவோருக்கும் ஏற்ற வழிகாட்டியாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

**6007**

**புலமைக் களஞ்சியம்: தரம் 3,4,5.** S.A.M.சஹாப்தீன். கொழும்பு 12: லோயல் பதிப்பகம், 125 A, New Moor Street, 2வது பதிப்பு, டிசம்பர் 2009, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).
218 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-1711-27-6.

தமிழ், கணிதம், விஞ்ஞானம், சுற்றாடல் செயற்பாடுகள், அழகியல், பொது அறிவு, ஆங்கிலம், சிங்களம் ஆகிய விடயங்களை ஒருங்கே கொண்டுள்ள 23 அலகுகளில் அமைந்த நூல். புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்குரியது.

**6008**

**பொது அறிவு.** எஸ்.பி.சுபாகரன். முல்லைத்தீவு: எஸ்.பி.சுபாகரன், முள்ளிவாய்க்கால் கிழக்கு, 1வது பதிப்பு, 2007. (கண்டி: சண் பிரின்ட்ஸ்).

*96 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 20x14 சமீ.*

*பேராதனைப் பல்கலைக்கழக மாணவனாகப் பயிலும் எஸ்.பி.சுபாகரன், க.பொ.தராதர உயர் வகுப்பு மாணவர்களின் நலன்கருதி எழுதிய பொது அறிவுத் தகவல்கள் கொண்ட நூல். அரசியல், பொருளாதாரம், விருதுகள், விளையாட்டுகள், சூழலியல், விண்வெளி, இலக்கியம், மக்கள் தொகை, சர்வதேச அமைப்புகள், நாடுகளும் அவற்றின் சிறப்புப் பெயர்களும் என்பவை பற்றிய விபரங்கள் இந்நூலிலே தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூல் அண்மைக்காலத்தின் உலக விடயங்களையும்,அவை இடம்பெற்ற பிரதேசங்களின் புவியியல் அமைவிடத்தினையும் ஒருங்கே தருவதன்மூலம் ஏனைய பொது அறிவு நூல்களிலிருந்து வேறுபடுகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 615441).*

***6009***

***பொது அறிவு.*** *க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா வெளியீடு, காங்கேசன்துறை வீதி, 7வது பதிப்பு, நவம்பர் 1997, 1வது பதிப்பு, 1982. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை,* G.L.1/2 *டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).*
*(4), 176 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 21x13.5 சமீ.*

*பூமி-உலகம்-இலங்கை, அறிவியல் உண்மைகள், விண்வெளி விந்தைகள், உயிர்ச்சூழல், உலகப் பெரியார்கள், பல்துறைத் தகவல்கள் ஆகிய ஆறு பிரிவுகளில் பொது அறிவுக்குரிய விடயங்களை உள்ளடக்கியதாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

***6010***

***பொது அறிவுச் சுடர்.*** S.L.M.*மஹ்ரூப். ஹந்தஸ்ஸ:* S.L.M.*மஹ்ரூப், 132 ஏ, தவுலகல, 3வது பதிப்பு, ஏப்ரல் 1995, 1வது பதிப்பு, டிசம்பர் 1991, 2வது பதிப்பு, ஒகஸ்ட் 1993. (கொழும்பு 12: டொப் பிரின்ட், 35ஏ, 1வது பள்ளித் தெரு).*
viii, *184 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.*

*தொழில்வாய்ப்பை எதிர்பார்த்திருப்போருக்கான போட்டிப் பரீட்சைகளுக்காகப் பயன்படுத்தவும், க.பொ.த. சாதாரண, உயர்தர வகுப்பு மாணவர்களின் பாடநூல் அறிவை விருத்தியாக்கிக்கொள்ளவும் இந்நூல் உதவுகின்றது.*

***6011***

***பொது உளச்சார்பு நுண்ணறிவு பொது விவேகம்: சகல போட்டிப் பரீட்சைகளுக்குமான வழிகாட்டி.*** *ஏ.எல்.எம்.பளீல். இலங்கை: பல்கலைக் கல்வி நிலையம், 5ஆவது பதிப்பு, 1999, 1வது பதிப்பு, 1994, 2வது பதிப்பு, 1995, 3வது பதிப்பு, 1996, 4வது பதிப்பு, 1998. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B*, புளூமெண்டால் வீதி).*
*168 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 20.5x13.5 சமீ.*

*ஒருவரின் மெய்த்திறனை அறிந்துகொள்ள உதவும் வகையில் பரீட்சிக்கப்படும் பொது உளச்சார்புப் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்காக எழுதப்பட்டுள்ள நூல் இது. எண் புலமை, கணிதப் புலமை, சொற் புலமை, மொழிப் புலமை, கட் புலமை, ஆய்ந்தறிதற் புலமை, தர்க்கப் புலமை ஆகிய ஏழு அம்சங்களிலும் அவற்றின் பாடத்திட்டத்திற்கமைவாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.*

## *020 நூலகவியல், தகவல் விஞ்ஞானம்*

***6012***

***தகவல் வளங்களும் சேவைகளும்.*** அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி. கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 *ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம்,* B3-G3 *ரம்யா பிளேஸ்).*
xx, *290 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 900., அளவு: 24.5x18 சமீ.,* ISBN: *978-955-659-170-5.*

நூலகத்தின் உசாத்துணை சேவை வளங்களைப் பயன்படுத்தவிரும்பும் ஒருவருக்கு இந்நூல் அடிப்படைத் தகவல்களை வழங்குகின்றது. யார், எது, எங்கே, எப்போது, எப்படி, ஏன் என்ற கேள்விகளுடன் நூலகத்தின் உசாத்துணைப் பிரிவுக்குள் நுழையும் ஒருவர் தான் தேடும் பதில்களை நேரடியாகப் பெறுவதற்கோ, அத்தகவல்கள் பற்றிய மேலதிகத் தேடலுக்கான வழிகாட்டியாகவோ அமையும் உசாத்துணை நூல்கள் பற்றிய விபரங்களை இந்நூல் தருகின்றது. இந்நூலில் உள்ள பதினாறு அத்தியாயங்களின் மூலம் தாள்களில் உருவான சாதனங்கள் மட்டுமே நூலகத்திற்குரியவை என்ற தவறான கருத்துநிலை களைந்தெறியப்படுவதுடன் எம்மைச் சுற்றியுள்ள தகவல் வளங்களையும் சேவைகளையும் ஆசிரியர் சிறப்பாக விபரித்துள்ளார். நூல்தேட்டம் பற்றிய உசாத்துணைக் குறிப்பு இந்நூலின் 202-203ஆம் பக்கங்களில் காணப்படுகின்றன. அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் கல்விசார் நூலகராகப் பணியாற்றுகின்றார்.

**6013**

**நூலகப் பகுப்பாக்கம்: ஓர் அறிமுகம்.** எம்.பீ.எம்.பைரூஸ் (மூலம்), யோகேஸ்வரி சண்முகசுந்தரம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ்).
viii, 86 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-198-9.

தகவல்களைச் சிரமமின்றி இலகுவாக வழங்க நூலகப் பகுப்பாக்கம் உதவுகின்றது. பகுப்பாக்கமும் அதன் பண்பும், கோலன் பகுப்பாக்கத்திட்டம், காங்கிரஸ் நூலகப் பகுப்பாக்கத் திட்டம், சர்வதேச தசம பகுப்பாக்கத்திட்டம், தூவி தசாம்ச பகுப்பாக்கத்திட்டம் (1, 2, 3) ஆகிய தலைப்புக்களின்கீழ் பல்வேறு பகுப்பாக்கத் திட்டங்களை இந்நூல் விபரிக்கின்றது. நூலாசிரியர் பைரூஸ் (1955-2006), பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப் பட்டதாரி. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் பிரதம நூலகராகக் கடமைபுரிந்த இவர் நூலகச் சங்கத்தின் விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். பதிப்பாசிரியர் யோகேஸ்வரி சண்முகசுந்தரம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நூலகராகப் பணியாற்றியவர். இலங்கை நூலகச் சங்கத்தின் டிப்ளோமா பாடநெறிகளுக்கான விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

**6014**

**நூலகப் பட்டியலாக்கம்: ஓர் அறிமுகம்.** எம்.பீ.எம்.பைரூஸ் (மூலம்), யோகேஸ்வரி சண்முகசுந்தரம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ்).
viii, 92 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-208-5.

நூலக, தகவல் விஞ்ஞானத்துறையில் மிக முக்கியமானதொரு பகுதியாக பட்டியலாக்கம் விளங்குகின்றது. நூலகத்தில் நூலின் இருப்பிடத்தை அறிய உதவும் சாதனமாகப் பட்டியல்கள் உதவுகின்றன. நூலகவியல்துறை மாணவர்களுக்கும், நூலகப் பணியாளர்களுக்கும் துணைநூலாக அமையும் இந்நூல், பட்டியலாக்க வரலாறு, நூலொன்றின் முக்கிய கூறுகள், வாசகர் அணுகுமுறையும், பட்டியற் பதிவுகளும், பட்டியல்களின் வடிவங்களும், பொருள்வாரியான பட்டியலாக்கம், AACR-II குறிப்பிடும் விவரணங்களும் குறியீடுகளும், AACR-II குறிப்பிடும் அணுகுமுறைத் தெரிவு பற்றிய விதிகள், தலையங்கங்கள், சுட்டிக்குறிப்புகள், பருவ இதழ்களைப் பட்டியலாக்கல், அச்சுருவில் இல்லாத ஆவணங்களைப் பட்டியலாக்குதல், பகுத்தாய்வு காணும் பட்டியலாக்கம், கூட்டுறவுப் பட்டியலாக்கம், அல்லது கூட்டிணைப்புப் பட்டியலாக்கம், பட்டியற் பதிவுகளைக் கோவைப்படுத்தல், தன்னியக்கமயமாக்கப்பட்ட பட்டியலாக்கம் ஆகிய 12 இயல்களில் இந்நூல் அமைந்துள்ளது. நூலாசிரியர் பைரூஸ் (1955-2006), களுத்துறை முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப் பட்டதாரி. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் பிரதம நூலகராகக் கடமைபுரிந்த இவர் கொழும்பு தேசிய நூதனசாலை நூலகத்திலும், கொழும்பு, காலி, களுத்துறை ஆகிய பொது நூலகங்களிலும் நூலகராகக் கடமையாற்றியவர். நூலகச் சங்கத்தின் விரிவுரையாளராக நீண்டகாலம் பணியாற்றியவர். பதிப்பாசிரியர் யோகேஸ்வரி சண்முகசுந்தரம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நூலகராகப் பணியாற்றியவர்.

**6015**

***பேராசிரியர் மர்ஹூம் எம்.எம்.உவைஸ் அவர்களின் பிரத்தியேக நூலகத்தை கையேற்கும் வைபவத்தை முனனிட்டு வெளியிடப்படும் சிறப்பிதழ்.*** *மலர்க்குழு. அட்டாளைச்சேனை: நூலகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, மார்ச் 1997. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*73 தாள்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.*

*இச்சிறப்பிதழில், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட நூல்களின் நூல்விபரணப் பட்டியல், 383 பதிவுகளில் தரப்பட்டுள்ளது. அதனையடுத்து நூலகர் எஸ்.ரூபசிங்கம் அவர்கள் எழுதிய* **Uwise Sri Lankan Islamic Studies Collection** *என்ற கட்டுரையும், க.இரகுபரன் எழுதிய* ***வியத்தகு உவைஸ்,*** *எம்.எல்.எஸ்.றாஹிலா எழுதிய* ***கலாநிதி அல்லாமா மர்ஹூம் ம.மு.உவைஸ் அவர்களுடைய வாழ்க்கைக்குறிப்பு, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் உவைஸ் சேகரிப்புகள்*** (Professor Uwise Collection) *ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. ஏதோ காரணத்தின் நிமித்தம் இந்நூலின் தாள்களில் ஒவ்வொரு பக்கங்கள் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 495193).*

*050 பொதுப் பருவஇதழ்கள், சிறப்பிதழ்கள், வழிகாட்டிகள், சுட்டிகள்*

***6016***
***காரை வசந்தம் 2007.*** *கந்தப்பு அம்பலவாணர், கணேசபிள்ளை சக்திவேல், கணேசன் திருமாறன் (மலர்க்குழு உறுப்பினர்). கனடா: காரை கலாச்சார மன்றம், ஸகார்பரோ, 1வது பதிப்பு, 2007. (கனடா: அச்சக விபரம் தரப்படவில்லை).*
*(170) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.*

*கனடா-காரை கலாச்சார மன்றம் வழங்கும் காரை வசந்தம் 2007 விழாவின்போது 27.10.2007 அன்று வழங்கப்பட்ட சிறப்பு மலர். இதில் உலகளாவிய காரைநகர் நலன்புரி மன்றங்களும், பிரமுகர்களும், வழங்கிய ஆசியுரை மற்றும் வாழ்த்துரைகளும், காரைநகரில் இயங்கும் பொது அமைப்புகள் அனுப்பிவைத்த வேலைத்திட்ட அறிக்கைகளும், காரைநகர் தொடர்பான கட்டுரைகளும், கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.*

***6017***
***நானிலம்: கலாசார விழா சிறப்பு மலர் 2006.*** *மலர் வெளியீட்டுக் குழு. செங்கலடி: கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், ஏறாவூர் பற்று, 1வது பதிப்பு, 2006. (மட்டக்களப்பு: கணா டிஜிட்டல் அச்சகம், திருமலை வீதி).*
*81 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.*

*ஏறாவூர்பற்று பிரதேச கலாசாரப் பேரவையினரால் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்பட்டுவரும் கலாசார விழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். ஏறாவூர்பற்றிலுள்ள பழம்பெரும் பதிகளில் ஒன்றான சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் சிறப்பு, கிழக்கில் அருகிவரும் கிராமிய கலைவடிவங்கள்: மட்டக்களப்பின் மரபுவழிக் கூத்துக்கள், மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள், "றானையடி முறிவு" (சிறுகதை), பாடசாலைக் கல்வி அபிவிருத்தி, தங்கச் சுனாமியா தத்துவச் சுனாமியா (கவிதை), ஏறாவூர்பற்றில் வரலாற்றுச் சின்னங்கள், சூழல் பாதுகாப்பில் எமது அக்கறையின்மை, பேரழிவின் பின் தொடரும் பிறழ்வு நடத்தைகள், கலியுகக் கந்தனை நினைத்து அனுஷ்டிக்கும் முதன்மை விரதம் கந்த சஷ்டி ஆகிய ஆக்கங்களுடன், கலைஞர் கௌரவிப்பு, கலாசாரப் போட்டி முடிவுகள் என்பனவும் இம்மலரில் இடம்பெறுகின்றன.*

***6018***
***நானிலம்: கலாசார விழா சிறப்பு மலர் 2007.*** *மலர் வெளியீட்டுக் குழு. செங்கலடி: கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், ஏறாவூர் பற்று, 1வது பதிப்பு, 2007. (மட்டக்களப்பு: கணா டிஜிட்டல் அச்சகம், இல. 143, திருமலை வீதி).*
xii, *74 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18 சமீ.*

*ஏறாவூர்பற்று பிரதேச கலாசாரப் பேரவையினரால் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் கலாசார விழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். ஏறாவூர்பற்றிலுள்ள பழம்பெரும் பதிகளில்*

ஒன்றான ஏறாவூர் 4ம் குறிச்சியைச் சேர்ந்த அருள்மிகு பத்திரகாளியம்பாள் ஆலயச் சிறப்புகள், மட்டக்களப்பு மாவட்டமும் நெல் வேளாண்மையும், ஒழுக்கமுறைப் பண்பாடும் மாற்றங்களும், "நியதி"(சிறுகதை), நாட்டாரியல் விளையாட்டுக்களும் அதனுடன் இணைந்த பாடல்களும், கஷ்டப் பிரதேசங்கள் எதிர்கொள்ளும் கல்விப் பிரச்சினைகள், "வேண்டும் சமாதானம்" (கவிதை), நாளையப் பொழுது நமது பக்கம், தமிழிற் பெண்களின் காதல் கவிதைகள், கடலக மீன்பிடி தொழில்நுட்பம் ஆகிய ஆக்கங்களுடன், கலைஞர் கௌரவிப்பு, கலாசாரப் போட்டி முடிவுகள் என்பனவும் இம்மலரில் இடம்பெறுகின்றன.

**6019**

**நானிலம்: கலாசார விழா சிறப்பு மலர் 2008.** மலர் வெளியீட்டுக் குழு. செங்கலடி: கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், ஏறாவூர் பற்று, 1வது பதிப்பு, 2008. (மட்டக்களப்பு: கணா டிஜிட்டல் அச்சகம், இல. 143, திருமலை வீதி).

xi, 93 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

ஏறாவூர்பற்று பிரதேச கலாசாரப் பேரவையினரால் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் கலாசார விழாவின்போது வெளியிடப்படும் ஐந்தாவது சிறப்பு மலர் இதுவாகும். இந்து சமயம் காட்டும் வாழ்க்கை நெறிமுறைகள், ஏறாவூர்பற்று பிரதேசத்தின் கிராமியக் கலை வடிவங்கள், நாகரீக மாற்றமும் கலாசார சீரழிவும், மீண்டும் ஜனனம் (சிறுகதை), ஏறாவூர் நாட்டார் பாடல்களில் அகத்திணைச் சங்கமம், தமிழர் பண்பாட்டில் வெற்றிலையின் முக்கியத்துவம், விவசாயத்தில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம், பொழியும் மழையில் நிரம்பும் குளங்கள் (கவிதை), ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவம், கிழக்கு இலங்கையின் மாந்திரீக மருத்துவ இலக்கியம், வந்தாறுமூலை க.மயில்வாகனத்தின் சிவனார் அந்தாதியும் அதில் காணப்பட்ட ஒரெச்சர் (orature) மரபுகளும் இலங்கையில் எதிர்நோக்கப்படும் சமூகப் பிரச்சினைகள் ஆகிய ஆக்கங்களுடன், கலைஞர் கௌரவிப்பு, கலாசாரப் போட்டி முடிவுகள் என்பனவும் இம்மலரில் இடம்பெறுகின்றன.

**6020**

**நானிலம்: கலாசார விழா சிறப்பு மலர் 2009.** மலர் வெளியீட்டுக் குழு. செங்கலடி: கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், ஏறாவூர் பற்று, 1வது பதிப்பு, 2009. (மட்டக்களப்பு: கணா டிஜிட்டல் அச்சகம், இல. 143, திருமலை வீதி).

xii, 85 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

ஏறாவூர்பற்று பிரதேச கலாசாரப் பேரவையினரால் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் கலாசார விழாவின்போது வெளியிடப்படும் ஆறாவது சிறப்பு மலர் இதுவாகும். சித்தர்கள் கண்ட தமிழ்முறை எண்கணித சோதிடம், ஏறாவூர்பற்று பிரதேசத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் பழமொழிகள், ஈழத்து நவீன நாடக படிநிலையில் மட்டக்களப்பு நவீன நாடகத்தின் நிலை, மட்டக்களப்பு மாவட்டத்தில் வேளாண்மைச் செய்கையில் மறைந்து வருகின்ற கலாச்சார அம்சங்கள் பற்றிய ஒரு நோக்கு, கனவுகள் கானலாய் (சிறுகதை), தமிழர் பண்பாட்டில் தடம்பதித்த தைப்பொங்கல், பீடைநாசினிகளின் பயன்பாடும் தொடர்பான பிரச்சினைகளும், ஏறாவூர்ப் பற்றின் எழில் (கவிதை), நடத்தை மாற்றம் (சிறுகதை), சோதிடக்கலை பகரும் சுபகருமங்கள், தமிழில் மரபினுள் புதுமை: ஓர் பார்வை ஆகிய ஆக்கங்களுடன், கலைஞர் கௌரவிப்பு, கலாசாரப் போட்டி முடிவுகள் என்பனவும் இம்மலரில் இடம்பெறுகின்றன.

**6021**

**மலையகத் தமிழ்ச் சஞ்சிகைகள்: ஓர் ஆய்வு.** இரா.சர்மிளாதேவி. கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, 25, அவ்வல் சாவியா வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (கொழும்பு 13: டிசைன் லாப், 173-P2, ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை).

x, 86 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-095-04-6.

தமிழ்ச் சஞ்சிகைகள் பற்றிய இவ்வாய்வு, மலையகத் தமிழ்ச் சஞ்சிகைகள் வரலாற்றில் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. மலையகச் சஞ்சிகைகள் என்ற அடிப்படையில் மட்டுமின்றி, மலையகம் தொடர்பான விடயங்களைப் பிரதானமாகக் கொண்டு மலையகம் தவிர்ந்த பிற பிரதேசங்களில் இருந்து வெளிவந்த- வெளிவருகின்ற சஞ்சிகைகளும் இவ்வாய்வில் சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வின் முதலாவது இயலில் தமிழில் சஞ்சிகையும் ஈழத்தில் அதன் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி நோக்கப்பட்டுள்ளன. இரண்டாவது இயலில், மலையகமும் தமிழ்ச் சஞ்சிகைகளும் பற்றி நோக்கப்பட்டுள்ளது. மூன்றாவது இயலில் மலையகத் தமிழ்ச் சஞ்சிகைகள் பிரதிபலிக்கும் மலையகத் தமிழ் அரசியல், சமூக, பண்பாடு பற்றி விரிவாக நோக்கப்பட்டுள்ளது. நான்காம் இயலில் மலையகத் தமிழரின் கலை, இலக்கியம், ஆகியன பற்றி தனித்தனியாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது. இறுதி இயலில் மலையகத் தமிழ்ச் சஞ்சிகை பற்றிய ஒரு மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது. கண்டி கலஹாவைப் பிறப்பிடமாகக் கொண்ட இரா.சர்மிளாதேவி, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் பயின்று சிறப்புக் கலைமாணித் தேர்வில் முதலாம் வகுப்பில் சித்தியெய்தியவர். கண்டி திரித்துவக் கல்லூரியில் ஆசிரியையாகப் பணியாற்றுகின்றார். புரவலர் புத்தகப் பூங்காவின் 22ஆவது வெளியீடு இதுவாகும்.

**6022**

**மன்னல்: மன்னார் பிரதேச இலக்கிய விழா 2008 சிறப்பு மலர்.** தமிழ்நேசன். மன்னார்: மன்னார் பிரதேசச் செயலகம், 1வது பதிப்பு, ஜுன் 2008. (மன்னார்: மன்னார் பிளாஷ், சின்னக்கடை).
xxvi, 150 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x20 சமீ.

மன்னார் உலக தரிசன நிறுவனத்தின் நிதி உதவியுடன் வெளியிடப்பட்ட சிறப்புமலர். மன்னார் மறைக்கல்வி நிலைய இயக்குநரான அருட்பணியாளர் தமிழ்நேசன் மலர்க்குழுத் தலைவராகவும், மன்னார் பிரதேச செயலாளர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல் ஆலோசகராகவும் இருந்துள்ளனர். வாழ்த்துச் செய்திகள், மன்னார்ப் பிரதேச கலை இலக்கிய மற்றும் வரலாற்றுப் பதிவுகள், மன்னார்ப் பிரதேச கலை இலக்கியங்கள் தொடர்பாக ஈழத்துத் தமிழறிஞர்களின் ஆக்கங்கள், மன்னார்ப் பிரதேச இலக்கியவிழாப் போட்டி முடிவுகள், மன்னார் மண்ணின் இரு கலைஞர்கள் (அலெக்சாண்டர் அலெக்ஸ், நாவண்ணன்) பற்றிய நினைவுகள், மன்னார்ப் பிரதேச நூல் விபரப்பட்டியல், இலக்கிய விழாவின்போது விருதுபெற்ற கலைஞர்களின் பதிவுகள் ஆகிய அம்சங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

## 051 பருவஇதழ் சிறப்பிதழ்கள்

**6023**

**அகிலம்: வருடாந்த சிறப்பு மலர்.** கே.வி.இராமசாமி (ஆசிரியர்). கண்டி: அகிலம் பப்ளிக்கேஷன்ஸ், 308, டி.எஸ்.சேனநாயக்க வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2008. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(128) பக்கம், விலை: ரூபா 200., அளவு: 25x18.5 சமீ.

மலையகத்தில், கண்டியிலிருந்து வெளிவரும் அகிலம்: அறிவியல் சஞ்சிகையின் மே-ஜுன் 2008க்குரிய இதழ் (மலர் 2, இதழ் 15), சிறப்பு மலராக வெளியிடப்பட்டுள்ளது. அறிவியல், கலை, இலக்கியம் சார்ந்த 34 கட்டுரைகளை இவ்விதழ் உள்ளடக்கியுள்ளது. இலங்கைத் தமிழ் அறிஞர்கள் பலரின் துறைசார் ஆக்கங்களாக இவை அமைந்துள்ளன.

**6024**

**காலம்: ஏ.ஜே.கனகரட்ணா சிறப்பிதழ்.** செல்வம் (இதழாசிரியர்). கனடா: காலம், த.பெ.எண் 7305, 509 St. Clair Ave. West, Toronto, Ontario M6C 1C0, 1வது பதிப்பு, ஜுன் 2002. (இந்தியா: ஹேமமாலா சிண்டிகேட், சிவகாசி 626 123).
136 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x22 சமீ., (காலம் இதழ் 16, ஜுன் 2002).

கனடாவிலிருந்து வெளிவரும் காலம் சஞ்சிகையின் சிறப்பிதழாக வெளிவந்துள்ள இவ்விதழில் வழமையான அம்சங்களுடன், சிறப்புக் கட்டுரைகளாக ஈழத்துத் தமிழ் அறிஞரான ஏ.ஜே.கனகரட்ணா பற்றிய பல்வேறு தகவல்களை உள்ளடக்கிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ரெஜி சிரிவர்த்தனா, ஹர்ஷா குணவர்த்தனா, சுப்பிரமணியம் சிவநாயகம், எம்.ஏ.நுஃமான், நடேசன், சுரேஷ் கனகராஜா, ஏ.எஸ்.பன்னீர்செல்வம், செல்வா கனகநாயகம், எஸ்.வி.ராஜதுரை ஆகியோரின் ஏ.ஜே.பற்றிய பன்முகப் பார்வைகளையும், ஏ.ஜே.கனகரட்ணா எழுதிய இலங்கையின் மூன்று

*பரம்பரைகளின் கதை, ஒப்புமைகளும் உருவகங்களும், தேசிய இலக்கியம் சில சிந்தனைகள், மௌனி வழிபாடு, ஆகிய ஆக்கங்களும் இவ்விதழைச் சிறப்பிக்கின்றன.*

***6025***

***தமிழர் தகவல்: 19ஆவது ஆண்டு மலர்: கனடாவில் தமிழர்- கால் நூற்றாண்டு.*** *எஸ்.திருச்செல்வம் (பிரதம ஆசிரியர்),* Canada: Tamil's Information, Ahilan Associates, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4, *1வது பதிப்பு, பெப்ரவரி 2010. (*Canada: Ahilan Associates, Printers and Publishers, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4*).*
*156 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21.5 சமீ.,* ISSN:*1206-0585.*

*பெப்ரவரி 1991 முதல் கனடாவிலிருந்து வெளிவரும்* ***தமிழர் தகவல்*** *மாத சஞ்சிகையின் 19ஆவது ஆண்டு நிறைவு மலர். (18ஆவது ஆண்டு மலர் இலங்கையில் வன்னிமண்ணில் 2009இல் நிகழ்ந்த மனிதப்பேரழிவு அவலங்களினால் வெளிவரவில்லை). அமெரிக்க, கனடியத் தமிழ் மக்களினதும், ஐரோப்பியத் தமிழர்களினதும் 100க்கும் மேற்பட்ட அறிவியல் ஆக்கங்களைத் தாங்கி இது வெளிவந்துள்ளது. கனடாவில் தமிழர்: கால்நூற்றாண்டு என்ற சிறப்புத் தலைப்புடன் வெளியாகியுள்ள இம்மலரின் முதல் 25 கட்டுரைகளும் கனாவில் வாழும் ஈழத்தமிழர் பற்றியதான வரலாற்றுப்பதிவாகும். தமிழர் தகவல் ஆண்டுதோறும் வழங்கும் விருதுகளைப் பெறுவோர் பற்றிய விபரங்களும் இம்மலரில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. 2010இல் கனடாவின் ரொரன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபா மண்டபத்தில் இடம்பெற்ற ஆண்டு விழாவின்போது இம்மலர் வெளியிடப்பட்டது.*

***மேலும் பார்க்க:*** *6993*

*060 பொது நிறுவனங்கள்*

***6026***

***உத்தேசிக்கப்பட்டுள்ள இலங்கை விஞ்ஞானத் தொழில்நுட்ப இலங்கை நூதனசாலை பற்றிய விஞ்ஞான நூதனசாலைக் குழுவின் அறிக்கை.*** *நூதனசாலைக் குழு. கொழும்பு: செயலாளர் கருமாலயம், த.பெ.எண் 500, அரசாங்க வெளியீட்டு அலுவலகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1970. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகப் பகுதி).*
*70 பக்கம், விலை: ரூபா 2.70, அளவு: 24*x*15.5 சமீ.*

*1970 பருவப்பத்திரம் இலக்கம்* VIII *ஆக வெளியிடப்பட்ட அறிக்கையின் தமிழ்மொழிப் பதிப்பு இதுவாகும். உத்தேசிக்கப்பட்ட விஞ்ஞானத் தொழில்நுட்ப இலங்கை நூதனசாலையின் நோக்கெல்லையும் தொழில்களும், உத்தேசிக்கப்பட்ட நூதனசாலையின் அமைப்பு, கட்டடங்கள், காட்சிப் பொருள்களின் விலை, விஞ்ஞான தொழில்நுட்ப நூதனசாலையின் இடவமைவு, அமைப்பு முறை, நிறுவலுக்கு வேண்டிய அண்ணளவான செலவு, விஞ்ஞான தொழில்நுட்ப நூதனசாலை வரைவுச் சட்டம், விஞ்ஞான தொழில்நுட்ப நூதனசாலைச் சட்டத்தின்கீழ் உத்தேசிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் ஆகியன இங்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 328158).*

*070 ஊடகவியல், வெளியீட்டுத்துறை*

***6027***

***ஊடகவியல்: புதினப்பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைகாட்சி.*** *அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை, 30, கடைச்சாமி வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2009. (யாழ்ப்பாணம்: கங்கை பிறின்டேர்ஸ், 781 சிவலிங்கப்புளியடி, காங்கேசன்துறை வீதி).*
xiv, *172 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20*x*14.5 சமீ.*

*புதினப்பத்திரிகை வாசிப்போமா, அழகிய சஞ்சிகைகள், பிரயாணம் போவோமா, நகைச்சுவையாக எழுதும் கலை, எல்லா ஊடகங்களுக்கும் நாடகம் எழுதுதல், நாடகம்: நாட்டுக்கூத்து*

ஆட்டப்போட்டி, வானொலி நாடகத்தின் சிறப்பு, இலங்கை வானொலி தமிழ் நாடகங்களுக்கும் பேச்சு, வழக்குத் தமிழுக்கும் ஒரு பாராட்டு, நவீன நாடகத்தின் சிறப்பு, நவீன இலக்கியச் சிறப்பிதழ், நவீன இலக்கியங்களைக் கற்பித்தல், யாழ்ப்பாண மாவட்ட கலைஞர் விபரத் திரட்டு, நல்லூர் பிரதேச கலைஞர் விபரத்திரட்டு, நூல் விமர்சனம், ஆசிரியர் எழுதிய நூல்கள் ஆகிய 14 தலைப்புகளில் எழுதப்பட்ட கட்டுரைகள் இந்நூலில் உள்ளடங்கியுள்ளன.

**6028**

**கருத்துச் சுதந்திரம்.** அஷ்-ஷெய்க் ஏ.பீ.எம்.இத்ரீஸ் (நளீம்). மல்வான: தாருல் அர்க்கம் பதிப்பகம், 28 சீ, ரக்ஷபான, 1வது பதிப்பு, டிசம்பர் 1994. (கொழும்பு 10: Iqra Instant Print, 143, 1st Division, Maradana). 40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13.5 சமீ.

சுதந்திர உணர்வு மனிதனின் அடிப்படை உணர்வாகும். அவனது இயல்பான உந்துதல் காரணமாக மனிதநிலைக்கு ஒவ்வாத வழிகளிலும் அவன் சுதந்திரமாகச் செயற்பட முனைகிறான். இக்கண்ணோட்டம் இஸ்லாத்தை வாழ்க்கைமுறையாகக் கொண்டவர்களிடமும் வளர்ந்துவருவதை சல்மான் ரூஷ்டி, தஸ்லிமா நஸ்ரீன் போன்றவர்களை உதாரணமாகக்காட்ட முனையும் ஆசிரியர், அவர்களது எழுத்தாக்கங்களை சுதந்திரச் சிந்தனையின் வெளிப்பாடென அங்கீகரிப்பதா அல்லது கட்டுப்பாட்டை மீறிய வெளிப்பாடென நிராகரிப்பதா என்ற வாதப்பிரதிவாதங்களின் பின்னணியில் இந்நூலை எழுதியிருக்கிறார். வாசகரின் சிந்தனையை நெறிப்படுத்தும் வகையில் அல்குர் ஆன் சுன்னாவினதும், ஸலபி, கலபி அறிஞர்களினதும் கண்ணோட்டத்திலும் தர்க்கரீதியான விளக்கங்களை இந்நூலில் முன்வைக்கின்றார். நூலாசிரியர் வாழைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நளீமிய்யா கலாபீடத்தில் பட்டம் பெற்றவர்.

**6029**

**குற்றவாளிக் கூண்டில் தஸ்லீமா நஸ்ரின்.** எஸ்.எச்.எம்.இஸ்மாயில் (ஸலபி). கட்டுகஸ்தொட்டை: ஜம் இய்யதுத் தபப்வதிஸ் ஸலபிய்யா, 59/B, கலதெனியா, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, பெப்ரவரி 1995. (சென்னை: எம்.முஜிபுர் ரஹ்மான, அல் ஜன்னத் அச்சகம்). 88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

இஸ்லாமியர்களின் மத்தியில் சர்ச்சைக்குரிய எழுத்தாளரான தஸ்லிமா நஸ்ரீன் பற்றிய விமர்சனமாக இந்நூல் இஸ்லாமியப் பார்வையில் வெளிவந்துள்ளது. லஜ்ஜை என்ற தனது நூலிலும், பிற உரைகளிலும் இஸ்லாமிய சம்பிரதாயங்கள் பற்றிய மாற்றுக்கருத்தாளராகத் தன்னை இனம்காட்டியவர். இந்நூலின் முதற்பகுதியில் தர்சிமாவைத் தெரிந்துகொள்ளுங்கள் என்ற தலைப்பில் அவரது தனிப்பட்ட வாழ்க்கையை விமர்சிக்கும் ஆசிரியர், இரண்டாம் பகுதியில் கற்பனை நீதிமன்றத்தின்முன் தர்சிமாவை நிறுத்தி விசாரணைக்குட்படுத்துகின்றார்.

**6030**

**சமாதான ஊடகவியல்: பிரச்சினைத் தீயை பேனா மையினால் அணைப்போம்.** என்னபல் மெக்கோல்ட்ரிக் மற்றும் ஜேக்லிஞ்ச். கொழும்பு 08: ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், A 3 -1/1 Manning Town, 1வது பதிப்பு, ஜுலை 2006. (கொழும்பு: ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்). 72 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ., ISBN: 955-8919-02-0.

என்னபல் மெக்கோல்ட்ரிக் பிரித்தானியாவில் மெய்டன்ஹெட் பிரதேசத்திலுள்ள முரண்பாட்டுக்கும் சமாதானத்துக்குமான அமைப்புகளின் இணை ஸ்தாபகராவார். ஜேக்லிஞ்ச் தொலைக்காட்சி செய்திப் பத்திரிகைகளுக்கான அனுபவம் மிக்க சர்வதேச நிருபராகப் பணியாற்றுகின்றார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 613644).

**மேலும் பார்க்க:** 6111

## 100 மெய்யியல்துறை

### 100 மெய்யியல் (தத்துவவியல்)

**6031**

**சங்ககாலச் சமூகமும் சமய-மெய்யியற் சிந்தனைகளும்.** சோ.கிருஷ்ணராஜா. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).

viii, 94 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-659-084-6.

பண்டைத்தமிழரின் சமய-மெய்யியற் சிந்தனைகளை, அவர்களது உலகக் கண்ணோட்டத்தைச் சரிவரப் புரிந்து கொள்வதற்கான அடிப்படை திணைக்கோட்பாடாகும் என்பதே இந்நூலின் முக்கிய செய்தியாகும். அது மட்டுமல்லாது, தமிழர் அழகியல் பற்றிய புரிதலுக்கும் எவ்வாறு திணைக்கோட்பாடு உறுதுணையாகின்றது என்பதும் இந்நூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. சங்ககால சமூகப் பின்னணி, சமய மெய்யியற் சிந்தனைகள், சங்கத் தமிழர் அழகியல் ஆகிய அத்தியாயங்களுடன் பின்னிணைப்பாக சிலப்பதிகாரத்தில் பெண் என்கின்ற கட்டுரையும் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தத்துவத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

**6032**

**தர்சனம்.** எஸ்.சுபாஷினி, டீ.கமிலஸ் (இதழாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: மெய்யியற் கழகம், மெய்யியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

x, 144 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மெய்யியற் கழகத்தினால் வெளியிடப்பட்ட முதலாவது இதழ். மனித இருப்பின் இரகசியங்களையும், மனப்பாங்கு நாட்டங்களையும் ஊடுருவித் தரிசிக்க வழிவகுக்கும் இவ்விதழ், பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா மெய்யியல்துறையின் தலைவராக இருந்த காலத்தில் உருவாக்கப்பட்டது. மெய்யியல் துறையில் 8 கட்டுரைகளையும், உளவியல் துறையில் 12 கட்டுரைகளையும், அளவையியல் துறையில் 9 கட்டுரைகளையும் இந்நூல் கொண்டுள்ளது.

**6033**

**மெய்யியல்.** நா.ஞானகுமாரன். பருத்தித்துறை: செல்வம் வெளியீடு, 1வது பதிப்பு, மார்ச் 2003. (யாழ்ப்பாணம்: ஹரிஹரணன் பிரின்டர்ஸ்).

viii, 204 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x15 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மெய்யியல்துறையில் பணியாற்றும் ஆசிரியரின் இந்நூல் மெய்யியல் பற்றிய விரிவான அறிமுகத்தை வழங்குகின்றது. மேலைத்தேய மெய்யியல், கீழைத்தேய மெய்யியல்-இந்திய மெய்யியல், சீன மெய்யியல், ஜப்பானிய மெய்யியல், திபெத்திய மெய்யியல், அறிவாராய்ச்சியியலுக்கு ஓர் அறிமுகம், ஒழுக்கவியலுக்கு ஓர் அறிமுகம், உளவியலுக்கு ஓர் அறிமுகம், மனமெய்யியலுக்கு ஓர் அறிமுகம், சமயமெய்யியலுக்கு ஓர் அறிமுகம், ஒழுக்கவியலாய்வில் தண்டனை, அறிவினோடு எவ்வாறு பரிச்சயம், சமய மெய்யியலில் அற்புதங்கள், சமகால மெய்யியலில் தர்க்கப் புலனறிவாதம் ஆகிய 14 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 600525).

**6034**

**மெய்யியல்: அறிமுக உரைகள்.** எம்.எஸ்.எம்.அனஸ். பேராதனை: பண்பாட்டு வட்டம் (Cultural Study Circle), சீ 72, மீவத்துர, 1வது பதிப்பு, மே 2003. (பேராதனை: அஸ்மினா கொம்பியுட்டர் என்டர்பிரைஸஸ், மீவத்துர).

vi, 150 பக்கம், விலை: ரூபா 260., அளவு: 24x17.5 சமீ.

பல்கலைக்கழக மாணவர்களின் பயன்கருதித் தயாரிக்கப்பட்ட உரைகள். ஆதி கிரேக்க மெய்யியல், மெய்யியல் ஓர் அறிமுகம் (மெய்யியலும் விஞ்ஞானமும், பௌதீகவாதம், பெறுமானங்கள்), நவீன மெய்யியல்-அனுபவவாதம், பகுப்பாய்வு மெய்யியல் (தர்க்க அனுவாதம், தர்க்கப் புலனெறிவாதம், வாய்ப்புப்பார்த்தல் கோட்பாடு), நிர்ணயவாதமும் சுயாதீன சித்தமும், அறிவும் நம்பிக்கையும் (உண்மை கோட்பாடுகள், அறிவின் ஏற்புடைமை, ஐயவாதம்), உடல்-உளப் பிரச்சினைகள் (மனித

இயல்பு, இருமைவாதம், றையிலின் மொழியியல் தீர்வு), கடவுள் இருப்பும் சமயங்களும் (சமயத்தின் தோற்றம், சமயங்களின் கடவுள் கோட்பாடு, கடவுள் இருப்பு நிரூபணங்கள்), சமூக அரசியல் சிந்தனைகளில் நீதி எண்ணக்கரு (ஹியூன் நீதி, பிளேட்டோவின் நீதி, நீதியும் ஒழுக்கமும்), ஒழுக்கவியல் நோக்கில் தண்டனைக் கோட்பாடு (சட்டமும் ஒழுங்கும், பயன்வழிவாத நோக்கு, காண்டின் நோக்கு), கலைமெய்யியலின் இரசனையியலும் மதிப்புகளும் (பெறுமானத் தீர்ப்புகள், அழகு எண்ணக்கரு, கலையும் இரசனையும்) ஆகிய 11 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 574284).

**6035**

**மெய்யியல்: ஓர் அறிமுகம் 1.** கனகசபை சிவானந்தமூர்த்தி, கந்தசாமி அன்ரன் டயஸ். யாழ்ப்பாணம்: அம்பாள் வெளியீட்டகம், புத்தூர், 2வது பதிப்பு, செப்டெம்பர் 1999, 1வது பதிப்பு விபரமில்லை. (கொழும்பு 6: அட்மிரல் கிராப்பிக்ஸ், 403 1/1, காலி வீதி).
viii, (4), 213 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x14 சமீ.

இந்நூல் மெய்யியலை ஒரு பாடமாகப் பயிலும் உள்வாரி, வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்களின் ஒரு பகுதித் தேவையினையும், அளவையியலைப் பயிலும் மாணவர்களது சில தேவைகளையும் நிறைவுசெய்கிறது. மெய்யியல் ஓர் அறிமுகம் (மேலைத்தேய நோக்கில் மெய்யியல், இந்திய நோக்கில் மெய்யியல்), ஐயவாதம், இருப்புவாதம், தருக்கப் புலனறிவாதமும் அதன் பின்னிணைவுகளும், சமகால இந்திய மெய்யியல் ஒரு நோக்கு, மெய்யியல் நோக்கில் அழகியல், பன்முகப்படுத்தப்பட்ட தலைமைத்துவ அமைப்புகள்-சமூக உளவியல் நோக்கு, போதைவஸ்து ஒரு சமூக உளவியல் நோக்கு, தண்டனையும் தண்டனை பற்றிய கொள்கைகளும், அளவையியலில் வாதம், வென் வரைபடமும் வகுப்பளவையியலும் ஆகிய 11 தலைப்புகளில் இந்நூல் விரிந்துள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 544622).

## 150 உளவியல்

**6036**

**அடிப்படை உளவியல்.** மணியம் சிவகுமார். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, யுஜீ 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை).
276 பக்கம், விலை: ரூபா 480., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-53-0.

அடிப்படையான உளவியல் எண்ணக்கருக்களை, சிந்தனை முறைகளை நமக்கு இந்நூல் அறிமுகம் செய்கின்றது. உளவியல் ஓர் அறிமுகம் என்ற பிரிவில் உளவியல் முறைகள், உளவியல் வகைகள்-கருத்துப் பள்ளிகள் ஆகியனவும், உளவியல் பிரிவுகள் என்ற பிரிவுக்குள் கல்வி உளவியல், சமூக உளவியல், குழந்தை உளவியல், இளையோர் உளவியல், முதுமை நிலை உளவியல், இல்வாழ்வியல் உளவியல், சிற்றின்ப உளவியல், பிறழ்வு உளவியல் உள்ளிட்ட 36 உளவியல் பிரிவுகள் பற்றிய அறிமுகங்களும் இந்நூலில் உள்ளடக்கப்படுகின்றன.

**6037**

**ஆளுமை உளவியல்.** மணியம் சிவகுமார். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, யுஜீ 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2009. (கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை).
112 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1857-54-7.

மனிதர்-மனித வாழ்க்கை-சமூக வாழ்க்கை முதலான புலங்களில் மையம்கொள்ளும் மனித ஆளுமையின் பல்பரிமாணங்களை விளங்கிக்கொள்ளும் வகையில் இந்நூலாக்கம் அமைந்துள்ளது. உள்ளம் ஒரு அறிமுகம், ஆளுமை ஓர் அறிமுகம், ஆளுமை வகைகள், ஆளுமைக்கூறுகளும் பேச்சுக் கோளாறுகளும், ஆளுமைக் கோட்பாடுகள், ஆளுமைச் சோதனை முறைகள் ஆகிய தலைப்புகளில் இந்நூல் அமைந்துள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 633908).

**6038**

**மார்க்சிய உளவியலும் அழகியலும்.** சபா.ஜெயராசா. கொழும்பு 6: இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம். 18, 6/1 கொலிங்வுட் பிளேஸ், 1வது பதிப்பு, மார்ச் 2010. (கொழும்பு 6: R.S.T. என்டர்பிறைஸஸ், 114 W.A. சில்வா மாவத்தை).
102 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1810-12-2.

பேராசிரியர் கைலாசபதியின் மறைவின் 27ஆவது ஆண்டு நினைவாக, மார்க்சிய உளவியலும் அழகியலும் என்ற பேருரையை பேராசிரியர் சபா. ஜெயராசா நிகழ்த்தியிருந்தார். அதன் நூல்வடிவம் இதுவாகும். பேராசிரியர் கைலாசபதி மேற்கொண்ட ஆய்வுப் பரப்புகளுள் ஒன்றாக அழகியல் அமைந்தது. மார்க்சிய அழகியல் பல்வேறு வாதப்பிரதிவாதங்களுக்கு உட்படுத்தப்படும் அறிபொருளாக மேலெழுந்துள்ள சூழலில், அதன் பல்வேறு பரிமாணங்களையும் நோக்கவேண்டியுள்ளது. அழகியலாக்கத்தின் ஒரு சிறப்பார்ந்த பெருங்கூறாக அமைவது உளவியலாகும். மார்க்சிய உளவியல் பரப்பும் அழகியல் விளக்கங்களும் இந்நூலிலே 26 இயல்களில் அணுகப்படுகின்றன.

**மேலும் பார்க்க:** 6032

### 158.1 மானிட மேம்பாடு

**6039**
**ஆரோகணம்: இளைஞர் உளமேம்பாட்டு நூல்.** தேவதாசன் ஜெயசிங் (மூலம்), ரூபராஜ் ஜெயசிங் (பதிப்பாசிரியர்). தங்கொட்டுவை: தாசன் வெளியீட்டகம், 16, கொவிஜனசேவா மாவத்தை, ஹல்தண்டுவான, 1வது பதிப்பு, ஜுலை 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).
96 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 21x14.5 சமீ.

இன்றைய இளைய தலைமுறையினரின் வளர்ச்சி-எழுச்சி-முதிர்ச்சி நிலைகளில் ஒரு விழிப்புணர்ச்சியைத் தரும்நோக்கோடு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தனது வாழ்க்கை அனுபவங்களையும் அறிவுரைகளையும் கொண்டதாக இளைஞர்களுக்கு நல்ல படிப்பினைகளை வழங்கும் நோக்கோடு வெளியிடப்பட்டுள்ளது. ஏன் இந்த ஆரோகணம், இளநெஞ்சங்களே, நீங்கள் யார், இருமுது குரவர், அறிவாலயம், இறைவழிபாடு, அடிச்சுவடுகள், நோக்கும் போக்கும், அறுகாற் சிறுபறவை, நட்பும் நம்பிக்கையும், விமர்சனம், நில் கவனி, அட்சய பாத்திரம், சறுக்கல்கள், தீர்மானம் ஆகிய தலைப்புகளில் இவ்வறிவுரைகள் அமைகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 567383).

**6040**
**ஆவி உலகம்: ஆப்ரகாம் டி.கோவூர் நூற்றாண்டு நினைவு வெளியீடு.** ஏபிரகாம் கோவூர். சென்னை 600007: திராவிடர் கழக வெளியீடு, பெரியார் திடல், 50, ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி, 1வது பதிப்பு, 1998. (சென்னை 600007: விடுதலை ஆ்ஃப்செட் பிரிண்டர்ஸ், 50, ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி).
(4), 92 பக்கம், விலை: இந்திய ரூபா 15., அளவு: 21x14 சமீ.

டாக்டர் ஏபிரகாம் கோவூர் கேரளத்தில் பிறந்தவர். இலங்கையில் நீண்டகாலம் வாழ்ந்து மறைந்த மனோதத்துவ மருத்துவ அறிஞர். கடவுள், மூட நம்பிக்கை முதல் பேய், பிசாசு பிடித்தல் போன்ற பல வகையான மடத்தனங்களையும் மக்களுக்கு அறிவியல்-மருத்துவவியல் வழியாக அம்பலப்படுத்தியவர். அவருடைய அனுபவ நிகழ்ச்சிகளே இங்கு சகோதரிகளைப் பிடித்த ஆவி, ஆவி பேசியது, மர்ம மாளிகையில் நடந்தவை, பழிவாங்க வந்த கணவனின் ஆவி, நடுநிசியில் வந்த தீப்பந்தம், அகோர பத்ரகாளி, அழகி லதாவின் கதை, பல மொழி தெரிந்த டாக்டர், இறந்த மனைவியருடன் பேசியவர்கள், பித்த மயக்கமா ஆரூடமா, பின்னால் துரத்திவந்த கர்ப்பிணியின் பேய், தேவதூதர்கள் அழைத்துச் சென்றனரா, அம்பிகைக்கு நடந்ததென்ன ஆகிய 13 தலைப்புகளில் இடம்பெற்றுள்ளன.

**6041**

**இருளும் ஒளியும்: கோவூர் நூற்றாண்டு நினைவு வெளியீடு.** ஏபிரகாம் கோவூர். சென்னை: பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, 1வது பதிப்பு, 2001. (சென்னை 600007: விடுதலை ஆ.்.ப்செட் பிரிண்டர்ஸ், 50, ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி).
(4), 92 பக்கம், விலை: இந்திய ரூபா 25., அளவு: 22x14 சமீ.

டாக்டர் ஏபிரகாம் கோவூர் கேரளத்தில் பிறந்தவர். இலங்கையில் நீண்டகாலம் வாழ்ந்து மறைந்த மனோதத்துவ மருத்துவ அறிஞர். கடவுள், மூட நம்பிக்கை முதல் பேய், பிசாசு பிடித்தல் போன்ற பல வகையான மடத்தனங்களையும் மக்களுக்கு அறிவியல்-மருத்துவவியல் வழியாக அம்பலப்படுத்தியவர். அவருடைய அனுபவ நிகழ்ச்சிகளே இங்கு கடவுளின் காதலி, அச்சமே பேயானது, கணவனை சந்தேகித்த காரிகை, வஞ்சிக்கப்பட்ட வஞ்சி, புடலங்காய், ஆவியா கோவூரா, ஆன் கண்ட அருங்காட்சி, பித்தம் பிடித்த பேதை, மூடநம்பிக்கை, மருத்துவரே நோயாளியானார், பெண்ணோ பேயோ, தன்னை உணர்ந்த தையல், அழகி லதாவின் கதை ஆகிய 13 தலைப்புக்களில் பதிவுக்குள்ளாகியுள்ளன.

*6042*
**இன்னும் வரக் காணனே: காணாமற் போனோர் குடும்பங்களுக்கான கையேடு.** சாந்திகம். யாழ்ப்பாணம்: சாந்திகம், 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரி-நல்லூர் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2007. (கொழும்பு 6: ஈசி வேய்ஸ், 4, ஐ.பீ.சீ. ரோட்).
iv, 39 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x16 சமீ.

ஒருவரது இருப்பு, இடம் போன்ற இன்னோரன்ன விடயங்கள் எதுவுமே தெரியாது அவர் திடீரென்று மறைந்து போவாராயிருந்தால், அதனைக் காணாமற் போதல் என அழைக்கும் வழக்கம் ஒன்றுள்ளது. இலங்கையின் யுத்தகாலங்களிலும் சுனாமிப் பேரழிவின்போதும் இக்காணாமல்போதல் அதிகளவில் இடம்பெற்றன. இந்நூல் காணாமல்போதல் பற்றிய உளவியல்ரீதியான கருத்துக்களையும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அப்பாதிப்புகளிலிருந்து உளரீதியாக மீள்வதற்கான வழிமுறைகளையும் வழங்குகின்றது. காணாமல் போதல்-சில பொதுமையான அனுபவங்கள், காணாமல் போதலைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய மன உணர்வு, காணாமல் போனோர் குடும்பங்களிலுள்ள சிறுவர்கள், காணாமல் போதல் என்னும் இழப்பைக் கையாளுதல், சிறுவர்களின் விருத்திக்கு உதவுதல் ஆகிய தலைப்புகளில் இவ்விடயம் விளக்கப்படுகின்றது.

*6043*
**உள்ளம் பெருங்கோயில்.** கோகிலா மகேந்திரன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, யுஜீ 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை).
184 பக்கம், விலை: ரூபா 390., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-56-1.

சீர்மிய உளவியல் தனிமனித சமூகப் புலங்களை ஊடறுத்துத் தெளிவான சிந்தனைகளை, மனப்பாங்குகளை, மாற்றங்களை, உருவாக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இதிலுள்ள 43 கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன. உள்ளத்தைப் புனிதமாகப் பேணிவரவேண்டும் என்ற கருத்தே கட்டுரைகளின் அடிநாதமாக உள்ளன. கோகிலா மகேந்திரன் ஆசிரியர், அதிபர் கல்வி நிர்வாகி எனக் கல்விப் பரப்பில் பல்வேறு நிலைகளில் தனது பணிகளை நிறைவுடன் மேற்கொண்டவர். வலிகாமம் கல்வி வலயத்தின் ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர். கலை இலக்கியத்தளத்தில் சிறுகதையாளர், நாவலாசிரியர், நாடகாசிரியர், விமர்சகர், கட்டுரையாளர் எனப் பன்முக ஆளுமையுடன் கனதியாக இயங்குபவர். சீர்மிய உளவியல் துறையில் தொடர்ந்து ஆழமான கற்கையும் தேடலும் உள்ளவர்.

*6044*
**உளவியல்சார் உளவளத்துணை அணுகுமுறை.** ரிட்லி ஜயசிங்க (ஆங்கில மூலம்), யூ.எல்.எம்.நௌபர் (தமிழாக்கம்). கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ்).
xvi, 128 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-226-9.

Psychological Counselling Approach என்ற ஆங்கில உபதலைப்புடன் வெளியாகியுள்ள நூல். ரிட்லி ஜயசிங்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளராகவும், இலங்கை தொழில்வாண்மை சமூக பணிப்பாளர் பொதுச்சங்கத்தின் தேசியத் தலைவராகவும் பணியாற்றுகின்றார். உளவியலுக்கும், உளவியல்சார் உளவளத்துணைக்கும் அறிமுகமாகவும் அமையும் இந்நூலில் தனியாள் உளவளத்துணை, குடும்ப உளவளத்துணை, குழுரீதியிலான உளவளத்துணை ஆகிய அம்சங்கள் விரிவாகப் பேசப்படுகின்றன.

*6045*

***கோர இரவுகள்.*** *ஏபிரஹாம்* T *கோவூர் (மூல ஆசிரியர்), எஸ்.என்.தனரத்தினம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு: வீரகேசரி பிரசுரம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, 1974. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).*
*(8), 132 பக்கம், விலை: ரூபா 3.40, அளவு: 17.5x12சமீ.*

*இலங்கையில் மனோதத்துவ வைத்தியராகப் பணியாற்றியவரும் மலையாளத்தவருமான ஏபிரஹாம்* T *கோவூர் அவர்களின் அனுபவப் பகிர்வுகளை 19 கதைகளாகத் தொகுத்திருக்கிறார். கற்பிழந்தவள், மரண மாளிகை, பேயின் காதல், கர்ப்பிணிப் பிசாசு, பேயை மணந்த பேயோட்டி, மலையாள சூனியம், விஞ்ஞானக் குழந்தை, புதுமைத் தாய், காட்டு மாமரப் பேய், சர்ப்ப பூஜை, காடேறி, மண்டைதீவு மர்மம், யார் பைத்தியம், ஊமைகள் பலவிதம், யுவதியை பலாத்காரம் செய்த ஆவி, பேயோட்டிகளுக்கு சவால்விட்ட பேய், கர்ப்பிணியின் வயிற்றில் விஷம், செய்வினை, பேய்வீடு ஆகிய 19 தலைப்புகளில் இவை விறுவிறுப்பாக எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 308581).*

*6046*

***சிந்தனைப் பூக்கள் பாகம் 3.*** *எஸ்.பத்மநாதன். கனடா: நான்காவது பரிமாணம் வெளியீடு, 1வது பதிப்பு, 2010. (கனடா:* J.J.Printers, Toronto, Ontario*).*
xi, *110 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*இந்நூல் உளவியல்சார்ந்த 25 கட்டுரைகளைக் கொண்டுள்ளது. குழந்தைகள், குழந்தைகளும் பிரச்சினைகளும், குட்டிப் பேரரசர்கள், தன்வய பன்னிலை குறைபாடு (*Autism Spectrum Disorder*), இளம் மேதாவிகள், மனக் கிளர்ச்சிகள், முதுமையும் உளவியல் ஒழுங்கீனங்களும், அல்சைமர் நோய் (*Alzheimer Disorder*), உளமாய நோய் (*Schizophrenia*), மேனியா (*Mania*), உணவு உட்கொள் ஒழுங்கீனங்கள், கொழுப்புமிகை (*Obesity*), நித்திரை, கனவுகள், பயம், கவலைகள், தியானம், இளையோர் பிரச்சினைகள், போதைப்பொருள் பாவனை, மதுபாவனை, நுகர்வோர் உளவியல், சமூக செல்வாக்கு, படைப்பாற்றல், பெண்ணுரிமை, வாசிப்பு ஆகிய 25 தலைப்புகளில் ஆசிரியரின் உளவியல் கட்டுரைகள் அடங்கியுள்ளன. சிந்தனைப் பூக்கள் என்ற தொடரில் இது ஆசிரியரின் மூன்றாவது தொகுதியாகும்.*

*6047*

***டாக்டர் கோவூரின் பகுத்தறிவுப் பாடங்கள்.*** *ஏபிரகாம் கோவூர் (மூலம்), கருணானந்தம் (மொழிபெயர்ப்பு). சென்னை 600007: திராவிடர் கழக வெளியீடு, பெரியார் திடல், 50, ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி, 2வது பதிப்பு, 2005, 1வது பதிப்பு, 1986. (சென்னை 600007: விடுதலை ஆ.்.ப்செட் பிரிண்டர்ஸ், 50, ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி).*
*176 பக்கம், விலை: இந்திய ரூபா 25., அளவு: 21.5x14 சமீ.*

*டாக்டர் ஏபிரகாம் கோவூர் கேரளத்தில் பிறந்தவர். இலங்கையில் நீண்டகாலம் வாழ்ந்து மறைந்த மனோதத்துவ மருத்துவ அறிஞர். கடவுள், மூட நம்பிக்கை முதல் பேய், பிசாசு பிடித்தல் போன்ற பல வகையான மடத்தனங்களையும் மக்களுக்கு அறிவியல்-மருத்துவவியல் வழியாக அம்பலப்படுத்தியவர். அவருடைய பகுத்தறிவியல் அனுபவங்கள் இந்நூலில் 31 இயல்களில் சுயசரிதையாக வழங்கப்பட்டுள்ளன.*

*6048*

**வாழ்வும் வயதும்.** தி.இரா.கோபாலன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2004. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
vi, 94 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 18x12 சமீ.

தினக்குரல் வார இதழில் பிரசுரமான முதுமை தொடர்பான 20 தன்முனைப்புக் கட்டுரைகளின் தொகுப்பு. வயதும் இருவகைதான், எழுபதிலும் இளமை வரும், வயதும் ஒரு இலக்கணம், வாழ்வே தேவை, காலை ஒரு கணமான அடிப்படை, சரியான தூக்கம் சரியான ஊக்கம், நள்ளிரவுக்கு முன்னும் பின்னும், உடலாகிய யாப்பிலக்கணம், சுகம் தரும் மரபு உலகம், மூக்குணம் அறிந்தால் நற்குணம் பெறலாம், வாசிப்பு மூளைக்கு மசாஜ், இலக்கை அடையாமலே வாழ்வு முடிவதேன்? மாறும் நிலையிலுள்ள ஜப்பானிய சமுதாயம், ஆன்ம பலத்திலிருந்து அபரிமிதமான சக்தி உருவாகிறது, பஞ்சபூதங்களால் ஆனது உடல், உடல் மனம் ஆன்மா, பார்வை நன்றாக அமையவேண்டும், ஒத்திப்போடும் நோய், எல்லா வயதினரும் என்ற சரியான கூட்டணி, நண்பனே எழுந்திரு ஆகிய 20 தலைப்புக்களில் இக்கட்டுரைகள் அமைகின்றன. நூலாசிரியர் வத்தளையைச் சேர்ந்தவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 598855).

**மேலும் பார்க்க:** 6268

## 160 தர்க்கவியல்

### 6049
**சைவப் பிரகாசனம்.** சங்கர பண்டிதர் (மூலம்), வி.சிதம்பரராமலிங்கம்பிள்ளை (குறிப்புரை). சென்னை: தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 2வது பதிப்பு, குரோதன வருடம் ஜுலை 1925, 1வது பதிப்பு, ஆவணி 1882 (சென்னை: சீ.முனிசாமி முதலியார் அன்.சன்ஸ்).
(14), 98 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

யாழ்ப்பாணத்து நீர்வேலிச் சங்கரபண்டிதரால் எழுதப்பட்ட இந்நூல் 1882 ஆவணியில் முதற்பதிப்பு வெளிவந்தது. இது சைவஞான சாத்திரங்களை அறிவதற்கு இன்றியமையாது வேண்டப்படும் தருக்க அறிவையும், அதனை உபயோகிக்கும் முறையையும் நன்கு விளக்குகின்றது. இந்தியாவிலும் இலங்கையிலும் அன்றுதொட்டு முக்கிய நூலாகக் கருதிப்பயன்படுத்தப்பட்ட இந்நூலின் பிரதிகள் தீர்ந்த நிலையில் பண்டிதரின் பேரனாகிய சி.பண்டிதநடராஜா அவர்களின் அனுமதியோடு இப்பதிப்பு வெளியிடப்படுகின்றது. இலக்கணம், பிரமாணம், சுரதி நிரூபணம், சமய நிரூபணம், சைவச் சுரதி நிரூபணம், சைவசமய நிரூபணம் ஆகிய தலைப்புகளில் இந்நூல் அமைந்துள்ளது. இப்பதிப்பிற்கான குறிப்புரையினை எழுதியவர் திருநெல்வேலி இந்து கலாசாலைத் தமிழாசிரியர் வி.சிதம்பரராமலிங்கம்பிள்ளையாவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 267944).

### 6050
**தர்க்க கௌமுதி.** சோ.கிருஷ்ணராஜா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: ஆலயமணி வெளியீடு, 28 குமாரசுவாமி வீதி, கந்தர்மடம், 1வது பதிப்பு, மார்ச் 1990. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234 ஏ, காங்கேசன்துறை வீதி).
(10), 41 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x11 சமீ.

புலவர் ஈழத்து சிவானந்தனின் ஆலயமணி வெளியீடுகளில் முதலாவது பிரசுரமாக வெளிவந்துள்ள தர்க்கவியல் நூல். திருமதி சிவக்கொழுந்து சண்முகநாதனின் மறைவையொட்டி உருவாக்கப்பட்ட நினைவஞ்சலி மலராக இது வெளிவந்துள்ளது. இந்நூலின் பதிப்பாசிரியர் சோ.கிருஷ்ணராஜா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மெய்யியல்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். இந்நூலில் பதார்த்தம், திரவியங்களின் சாமானிய இலக்கணம், திரவியங்களின் விசேட இலக்கணம், குணம், காரணம், பிரத்தியட்சப் பிரமாணம், அனுமானம், ஏதுப்போலி, உவமானம், சத்தம், பிரமாணாந்தரமின்மை, பிரமாணியவாதம், குணநிரூபணம், கர்மம், சாமானியம், விசேஷ

சமவாயங்கள், சுபாவம், அவ்வியாப்தி ஆகிய 18 தலைப்புகளில் விடயதானங்கள் தரப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 422750).

**6051**

**தர்க்க பாஷை.** சிவப்பிரகாச சுவாமிகள் (மூலம்), குமாரசுவாமி முதலியார் கதிரைவேற்பிள்ளை (பரிசோதித்தவர்), சோ.கிருஷ்ணராஜா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: மெய்யியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கல்லச்சுப்பிரதியாக்கம்).
ix, 132 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x16 சமீ.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப்பட்ட தருக்க பாஷை என்ற இந்நூல் வடமொழியில் கேசவ மிஸ்ரர் என்பவரால் இயற்றப்பட்ட தர்க்கபாஷை என்ற நூலின் தழுவலாகும். வடமொழி நூலின் காலம் கி.பி.13ம் நூற்றாண்டாகும். நியாய-வைசேடிக மரபில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம்பெறும் மூலநூலிற்கு கோவர்த்தன மிஸ்ரர், சின்னபட்டர் என்போர் முறையே தர்க்கபாஷை பிரகாசிகை, தர்க்கபாஷை பிரவேசம் என்ற உரை விளக்கங்களைச் செய்துள்ளனர். தமிழ் மொழிமூலப் பதிப்பு 1880இல் முதலில் வெளிவந்தது. பல்கலைக்கழகத்தேவைக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல்துறைத் தலைவராகவிருந்த சோ.கிருஷ்ணராஜா இந்நூலை பதிப்பித்திருந்தார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 417335).

**6052**

**தருக்க சாத்திரச் சுருக்கம்.** சுவாமி ஞானப்பிரகாசர். யாழ்ப்பாணம்: பாலபண்டிதர் P.S. ஞானப்பிரகாசம், மிருசுவில், 1வது பதிப்பு, ஜுன் 1933. (தமிழ்நாடு: St. Joseph's Industrial School Press, Trichinopoly).
xxiii, 312 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ.

James Edwin Creighton, Robert Latta, Alexander Macbeath, J.Welton , Max Muller ஆகிய மேல்நாட்டறிஞர்களினதும், வடமொழி தென்மொழித் தர்க்க நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு இந்நூலை ஆசிரியர் எழுதியுள்ளார். தர்க்க சாத்திரத்தின் இயல்பும் நோக்கமும், காரண அனுமான வகைகள், காரிய அனுமான வகைகள் ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் விரிவான உபபிரிவுகளில் இந்நூல் விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27274).

## 170 ஒழுக்கவியல்

**6053**

**ஆங்கிலத்தில் திருக்குறள்.** செல்லையா யோகரத்தினம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600005: எம்.கே.என்டர்பிரைஸஸ்).
704 பக்கம், விலை: ரூபா 760., அளவு: 19x13 சமீ.

நூலாசிரியர் எழுத்தாளர் அ.பொ.செல்லையாவின் மனைவியும், கனடாவிலிருந்து வெளிவரும் தமிழன் வழிகாட்டியின் ஆசிரியர் செந்தி.செல்லையாவின் அன்னையாருமாவார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அதற்கான குறிப்புரை ஆங்கிலத்திலும் தமிழிலும் தரப்பட்டுள்ளது.

**6054**

**ஆத்திசூடி.** ஔவையார் (மூலம்). மு.வேங்கடசாமி நாட்டார் (உரையாசிரியர்). த.தமிழ்மாறன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
36 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 18.5x12.5 சமீ.

கொழும்பு, சேமமடு பதிப்பகத்தின் அங்கமான பத்மம் பதிப்பகத்தின் இளையோர் வரிசையில் இரண்டாவதாக வெளிவந்த நூல். ஔவையாரின் நீதிநூல்களுள் ஒன்றான ஆத்திசூடி தமிழகத்தின் நாவலர் மு.வேங்கடசாமி நாட்டாரின் உரைவிளக்கத்துடன் பிரசுரமாகியுள்ளது.

***6055***

***ஔவையின் அருள்மொழிகள்.*** *ஸ்ரீ பிரசாந்தன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: அமரர் திருமதி செல்லம்மா அருளம்பலம் நினைவு வெளியீடு, கோப்பாய் மத்தி, 1வது பதிப்பு, மாசி 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).*
vi, *74 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.*

ஔவையார் அருளிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி ஆகிய அருந்தமிழ் அறநூல்கள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வழங்கிய திருத்தமான உரையுடன் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. பதிப்பாசிரியரின் அப்பம்மாவின் நினைவஞ்சலி மலராக இது அமைந்துள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 617979).

***6056***

***கொன்றைவேந்தன்.*** *ஔவையார் (மூலம்). மு.வேங்கடசாமி நாட்டார் (உரையாசிரியர்). த.தமிழ்மாறன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).*
*36 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 18.5x12.5 சமீ.*

கொழும்பு, சேமமடு பதிப்பகத்தின் அங்கமான பத்மம் பதிப்பகத்தின் இளையோர் வரிசையில் மூன்றாவதாக வெளிவந்த நூல். ஔவையாரின் நீதிநூல்களுள் ஒன்றான கொன்றை வேந்தன் தமிழகத்தின் நாவலர் மு.வேங்கடசாமி நாட்டாரின் உரைவிளக்கத்துடன் பிரசுரமாகியுள்ளது.

***6057***

***தற்பெருமை வேண்டாம்.*** *எஸ்.எச்.எம்.இஸ்மாயில் (ஸலபி). பறகஹதெனிய: ஜம்மிய்யத்து அன்சாரிஸ் சுன்னத்தில் மொஹம்மதியா, தலைமை அலுவலகம், வே உட, 2வது பதிப்பு, நவம்பர் 1997, 1வது பதிப்பு, மே 1996. (பறகஹதெனிய: கே.எம்.மொகயிதீன், பிலால் பிரிண்டிங் ஏஜன்சி).*
*24 பக்கம், விலை: ரூபா 8.00, அளவு: 18x12 சமீ.*

இஸ்லாமியப் பண்பாட்டு வளர்ச்சிக்குத் துணைபுரிய வேண்டுமென்ற நல்லெண்ணத்துடனும், தீய பண்புகளை மக்களிடமிருந்து களையத்தூண்டவும் மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாக உண்மை உதயம் என்ற இஸ்லாமிய இதழின் ஆசிரியரான எஸ்.எச்.எம்.இஸ்மாயில் (ஸலபி) எழுதிய இந்நூல் அமைந்துள்ளது. ம:ஹத் தாருத் தௌஹீத் அஸ்ஸலபிய்யா அரபுக் கலாசாலையில் ஆறாம் ஆண்டு கல்வி கற்றுக்கொண்டிருக்கும்போது உள்நோய்கள் என்ற தலைப்பில் இவர் வரைந்த கட்டுரையொன்றின் ஒரு பகுதியே இதுவாகும். எஸ்.எச்.எம்.இஸ்மாயில் (ஸலபி), கட்டுகஸ்தொட்ட பிரதேசத்தின் உடத்தலவின்ன மடிகேயைச் சேர்ந்தவர்.

***6058***

***நல்வழி.*** *ஔவையார் (மூலம்). மு.வேங்கடசாமி நாட்டார் (உரையாசிரியர்). த.தமிழ்மாறன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).*
*40 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 18.5x12.5 சமீ.*

கொழும்பு, சேமமடு பதிப்பகத்தின் அங்கமான பத்மம் பதிப்பகத்தின் இளையோர் வரிசையில் முதலாவதாக வெளிவந்த நூல். ஔவையாரின் நீதிநூல்களுள் ஒன்றான நல்வழி தமிழகத்தின் நாவலர் மு.வேங்கடசாமி நாட்டாரின் உரைவிளக்கத்துடன் பிரசுரமாகியுள்ளது.

***6059***

**வாழ்வியல் வசந்தங்கள்: பாகம் 2.** பருத்தியூர் பால வயிரவநாதன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆ.ஃப்செட்).
xxii, 162 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 18.5x12.5 சமீ.

இந்நூல் ஒரு வாழ்வியல் கட்டுரைத் தொகுப்பாக அமைந்துள்ளது. இளமை, அம்மா, சுயசிந்தனை, சிக்கனம் ஒரு வருமானம், எல்லோரும் நம்மவரே, மனம் முறிந்தால் மணமுறிவா?, புறம் கூறுதல் அறம் ஒறுத்தலாகும், காலம் தவறாத பணிகள், சந்தேகம், தட்டிக்கேட்டல், திறந்த இதயம், நிறைந்த வாழ்வு, கடன், முக்காலங்கள், பொறுமை- நிதானம், வாக்குக் கொடுத்தல், எதிர்மறை எண்ணங்கள், சொர்க்கம் எங்கே, பலத்தினை வழங்குதல், எல்லை மீறாத உரிமைகள், இங்கிதத்தைச் சொந்தமாக்குங்கள், சட்டம்-கட்டுப்பாடான சமூகக் கோட்டையைச் சமைக்கும் ஆகிய 21 தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 605085).

## 180 இந்து தத்துவம்

**6060**
**இந்து நாகரிகத்தின் மூலங்கள்.** க.சி.குலரத்தினம். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
vi, (2), 94 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-173-6.

இந்து நாகரீகத்தின் மூலங்களை எடுத்துக்கூறுவதாக இந்நூல் அமைகின்றது. இந்து நாகரிகத்தின் ஆரம்ப வரலாறு, இந்துநதிக் கலாச்சாரம், வேதங்களில் காணப்படும் நாகரிகம், ஆகமங்களில் காணப்படும் நாகரிகம், இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களில் காணப்படும் மரபுகள், புராணங்களில் காணப்படும் மரபுகள், தர்மசாஸ்திரங்களில் காணப்படும் மரபுகள் என ஏழு அத்தியாயங்களினூடாக இந்நூல் இந்துநாகரிகத்தின் மூலங்களை விபரிக்கின்றது. பன்னூலாசிரியரான அமரர் க.சி.குலரத்தினம் (1916-1994), யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் பிறந்தவர். திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்றபின்னர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் பயின்றவர். திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி சைவப்பிரகாச வித்தியாசாலை உட்படப் பல கல்லூரிகளில் ஆசிரியராகப் பணியாற்றியபின் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

**6061**
**உண்மை விளக்கம்.** திருவதிகை-மனவாசகங் கடந்தார் (மூலம்), இ.செல்லத்துரை (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்க வெளியீடு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை, வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு, வைகாசி 1963. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226 காங்கேசன்துறை வீதி).
xvi, (6), 66 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 21x14 சமீ.

உண்மை விளக்கம் 55 செய்யுள்களைக் கொண்டது. முதல் வினாவாகிய ஆறாறு தத்துவம் எது? என்பதற்கு 4 தொடக்கம் 21 வரையுள்ள 18 செய்யுள்களாலும், இரண்டாம் வினாவாகிய ஆணவம் எது? என்பதற்கும் மூன்றாவது வினாவாகிய அன்றேதான் மாறா வினை ஏது? என்பதற்கும் 22ம் செய்யுளாலும், நான்காம் வினாவாகிய (நான்) ஆன்மா எது? என்பதற்கு 24 தொடக்கம் 26 வரையுள்ள 3 செய்யுள்களாலும், ஐந்தாம் வினாவாகிய (நீ) பதி எது? என்பதற்கு 27 தொடக்கம் 29 வரையுள்ள 3 செய்யுள்களாலும், ஆறாம் வினாவாகிய நாதன் நடம் ஏது? என்பதற்கு 31 தொடக்கம் 38 வரையுள்ள 8 செய்யுள்களாலும் ஏழாம் வினாவான ஐந்தெழுத்து எது? என்பதற்கு 40 தொடக்கம் 44 வரையுள்ள 5 செய்யுள்களாலும் இறுதியில் விண்ணப்பிக்கப்படும் (குறிப்பாயமைந்த) எட்டாம் வினாவாகிய முத்தியாவது யாது? என்பதற்கு 45 தெடக்கம் 52 முடியவும் வருகின்ற 7 செய்யுள்களாலும் ஞானாசாரியர் விடைகூறியுள்ளார். நூலின் உரையாசிரியர் இ.செல்லத்துரை சிறுப்பிட்டியைச் சேர்ந்தவர். இவர் யாழ்ப்பாணம் தட்டாதெரு இ.த.க.பாடசாலைத் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். இந்நூலுக்கான அணிந்துரையை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையும் உரைச் சிறப்புப் பாயிரத்தை

*வித்துவான் இ.திருநாவுக்கரசுவும் வழங்கியுள்ளனர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275638).*

**6062**

**சிவஞானசித்தியார் சுபக்கம்.** *அருணந்தி சிவாச்சாரியார் (மூலம்), மு.திருவிளங்கம் (புத்துரை). யாழ்ப்பாணம்: கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம், 411/1 காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, 1971, 1வது பதிப்பு, 1925. (யாழ்ப்பாணம்: கூட்டுறவு அச்சகம்).*
i-xxvi, i-viii, *17-672 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 19x13 சமீ.*

*பதினான்கு வகை மெய்கண்டசாத்திரங்களுள் மிக விரிவானது அருணந்தி சிவாசாரியார் அருளிய சிவஞானசித்தியாராகும். அது பரபக்கம், சுபக்கம் என இரு பிரிவுகளைக்கொண்டது. பரபக்கம் - ஏனைய சமயவாதிகளின் கூற்றுகளையும் அவற்றின் மறுப்புகளையும் கொண்டது. சுபக்கம் - சைவசித்தாந்த சமயத்தின் கோட்பாடுகளை மிக விரிவாகக் கூறி விளக்குவது. சிவஞான சித்தியார் சுபக்கத்திற்கு ஆறு உரைகள் உண்டு. மறைஞான தேசிகர், சிவாக்கிர யோகிகள், நிரம்பவழகிய தேசிகர், யாழ்ப்பாணத்து ஞானப்பிரகாசர், சிவஞான சுவாமிகள், சுப்பிரமணிய தேசிகர் ஆகியோர் எழுதிய இவ்வுரைகளை உள்வாங்கி, கொழும்பு திருவிளங்க தேசிகர் புத்துரை ஒன்றை எழுதியிருந்தார். அதுவே இந்நூலாகும். உரையாசிரியர் திருவிளங்கம் 30.4.1859இல் பிறந்து 22.2.1922இல் மறைந்தவர். அவரது வாழ்க்கை வரலாற்றையும் இந்நூலில் சுருக்கமாக சோ.இளமுருகனார் எழுதியுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 286427).*

**6063**

**சிவதத்துவ நிலை.** க.சிவசுப்பிரமணியம். கொழும்பு 5: பிரமஞானி க.சிவசுப்பிரமணியம், 25B, சமிற் தொடர்மாடி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: லக்ஷ்மி பிரின்டர்).
*(8), 32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*பிரளயம், சுனாமி, ஏற்படாமல் இருக்க பன்னிரு திருமுறைகளின் சாராம்சம் என்ற குறிப்புடன் வெளியிடப்பட்டுள்ள இந்நூலில் கடவுளின் அற்புத ஆற்றல், திருமூலரின் திருமந்திரத்தில் உள்ள பிரளயப் பகுதி, பன்னிரு திருமுறைகளின் சாரம், பிரமத்தின் மகிமை, பிரமம் தோன்றக்கூடிய நிலை என்பன பற்றிய விடயங்களை பாடல்களினூடாக எடுத்துக் காட்டுகின்றார். வெளியிட்ட ஆண்டு தரப்படாவிட்டாலும், இந்நூல் 2004 ஆழிப் பேரலையின் பின்னர் வெளியிடப்பட்டுள்மையை அறியமுடிகின்றது.*

**6064**

**சிவப்பிரகாசம்.** கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் (மூலம்), மு.திருவிளங்கம் (புத்துரை). கொழும்பு: மு.திருவிளங்கம், 2வது பதிப்பு, 1933, 1வது பதிப்பு, ஆனி 1918. (சுன்னாகம்: திருமகள் அச்சியந்திரசாலை).
*(6), 237 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

*சிதம்பரத்தைச் சார்ந்த கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் அருளிய இந்நூல் சைவசித்தாந்த சாத்திர நூல்களுள் முக்கியமான ஒன்று. சிவஞானபோதம் முதனூல் என்றும், சிவஞானசித்தியார் வழிநூலென்றும், சிவப்பிரகாசம் சார்புநூல் என்றும் வழங்குவர். 100 விருத்தங்களையுடைய இந்நூலின் முன்னைம்பதும் பொது அதிகாரம் என்றும் பின்னைம்பதும் உண்மை அதிகாரம் என்றும் வகுக்கப்பட்டுள்ளன. பொதுவதிகாரம் - பாயிரம், பதியிலக்கணம், பசுவிலக்கணம், பாசவிலக்கணம், அவத்தையிலக்கணம் என்றும், உண்மையதிகாரம் - ஆன்மவிலக்கணம், ஐந்தவத்தையினிலக்கணம், உணர்த்துந்தன்மை, ஞானவாய்மை, ஞானத்தால் வரும்பயன், புனிதனாமம், அணைந்தோர் தன்மை என்றும் பகுக்கப்பட்டிருக்கின்றன. சிவப்பிரகாசத்திற்கு ஏற்கெனவே மதுரைச் சிவப்பிரகாசர் என்பவரும், காஞ்சிபுரம் இலக்கணம் சிதம்பரநாத முனிவரும் உரை எழுதியுள்ளனர். அவற்றை உள்வாங்கி மேலதிக விளக்கங்களுடன் இவ்வுரை கொழும்பு திருவிளங்கம் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34126).*

**மேலும் பார்க்க:** *6049.*

*190 சோதிடம், வானசாஸ்திரம்*

***6065***

***சந்தான தீபிகை: மூலம் உரையுடன்.*** *இராமலிங்க முனிவர் (மூலம்), இ.சி.இரகுநாதையர் (பரிசோதித்தவர்). கொக்குவில்: சோதிட பரிபாலன மடம், 2வது பதிப்பு, பங்குனி 1940, 1வது பதிப்பு, 1901. (கொக்குவில்: சோதிடப்பிரகாசயந்திரசாலை).*
*60 பக்கம், விலை: அணா. 8.00, அளவு: 21.5x14 சமீ.*

*யாழ்ப்பாணம், நல்லூர் ச.இராமலிங்க ஐயர் 1649இல் பிறந்தவர். 16.5.1667இல் முதன்முதலில் வரருசி முனிவரின் வாக்கிய கணித விதிப்படி ஈழத்தில் முதல் வாக்கிய பஞ்சாங்கத்தைக் கணித்து கரலிகிதமாய் (கையெழுத்தேடு) வெளியிட்டவர். சந்தானதீபம் என்னும் சோதிட நூலை 1713இல் சங்கதத்திலிருந்து மொழிபெயர்த்துப் பாடியவர். அது இந்தியாவில் புரசைப்பாக்கம் விவேக விளக்க அச்சுக்கூடத்தில் 1868இல் அச்சிடப்பட்டது. அதனை சு.நடராசையர் பரிசோதித்து பொழிப்புரை செய்ய, ச.இ.சிவராமலிங்கையர் 1901ம் ஆண்டில் இலங்கையில் பதிப்பித்திருந்தார். அந்நூலின் திருத்திய பதிப்பாக அவரது மைந்தன் இ.சி.இரகுநாதையர் இதை வெளியிட்டிருக்கிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33609).*

***6066***

***செகராசசேகர மாலை மூலமும் உரையும்.*** *செகராசசேகரன் (மூலம்), வி.சபாபதி ஐயர் (பரிசோதித்தவர்). யாழ்ப்பாணம்: வி.சபாபதி ஐயர், ஸ்ரீபாஸ்கர யந்திரசாலை, வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு, சுபகிருது ஆண்டு ஆனி 1902. (யாழ்ப்பாணம்: ஸ்ரீபாஸ்கர யந்திரசாலை, வண்ணார்பண்ணை).*
*120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13.5 சமீ.*

*யாழ்ப்பாணத்து அரசரும் தமிழை விருத்திசெய்தவரும் மகாவித்துவானுமாகிய செகராசசேகர மஹாராஜாவால் இயற்றுவிக்கப்பட்ட இந்நூல் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச்சேர்ந்த சோதிடர் வி.சபாபதி ஐயரால் பரிசோதித்துத் தனது அச்சியந்திரசாலையிலேயே அச்சுவிக்கப்பட்டது. 1380-1414 காலகட்டத்தில் யாழ்ப்பாண சிங்கைநகரை ஆட்சிசெய்த செகராசசேகரன் காலத்தில் வடமொழியிலிருந்து தமிழில் பாவடிவில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட சோதிட, சித்தவைத்திய விடயங்களை உள்ளடக்கிய நூல் இதுவாகும். "பெண்கள் முதல்ருதுவாகுங் காலத்தில் உண்டான வாரம், திதி, நஷத்திரம், காலம் ஆதியானவைகளுக்கும், தனித்தனி உள்ள பலன்களும், விவாகப் பொருத்தங்களிலே இவையிவை மிகமுக்கியமானவைகளென்றும், அவற்றிற்குரியபலன்களும், கருப்பஸ்திரீகளின் நியதிகளும், சிசுக்களின் ஜனனகால அரிஷ்டமும் யோகமும், அவற்றின் பகுப்புக்களும், நோய்வந்தால் அப்போதுள்ள நஷத்திராதிகளைக்கொண்டு நோயின் சாத்திய அசாத்தியங்களும், பிராயச்சித்தமும், இன்ன ரோகங்களுக்கு இன்னநாட்களிலே மருந்துண்ணவேண்டுமென்பதும், தசனம் சஞ்சயனம், சிராத்தம் முதலியவைகளின் காலநியதிகளும், புதுவஸ்திரந்தரிக்க நாளாதிகளும் பலனும், கோசரங்களின் நன்மை தீமைகளும், அவற்றின் விசேஷ பலனும், பிரயாணத்துக்குரிய பலவித சிறப்புவிதிகளும், பிராயச்சித்தமும் மனைவகுத்தற்குரிய விதிகளும் பலனும், கமத்தொழிலுக்கும் நாற்கால் மிருகங்களுக்கும் உரிய பலவித நாட்களும் இராஜாக்களுக்குரிய பல கருமங்களுக்கு நாட்களும், பிள்ளைகளின் பலன் எதுவரை பிதா மாதாவுக்குள்ளதென்றும்" இந்நூல் விபரிக்கின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32535).*

***6067***

***சோதிடப் புரட்டு.*** *நக்கீரன் (இயற்பெயர்: வேலுப்பிள்ளை தங்கவேலு). சென்னை 600028: பெரியார் திராவிடர் கழகம், 27. 2வது தளம், கனகராய மலையப்பன் தெரு, இராசா அண்ணாமலைபுரம், 1வது பதிப்பு, ஜூன் 2006. (சென்னை: கிரியேட்டிவ் கிராப்பிக்ஸ்).*
*(26), 570 பக்கம், விலை: இந்திய ரூபா 250, அளவு: 23x15 சமீ.*

நக்கீரன் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் பிறந்தவர். புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்பவர். ரொரன்ரோ நகரிலிருந்து வெளிவரும் **முழக்கம்** வாரப் பத்திரிகையில் ஒன்றரை ஆண்டுகள் சோதிடப்புரட்டு என்ற தலைப்பில் தொடர்ச்சியாக இவர் எழுதிய 71 கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. பகுத்தறிவின் அடிப்படையில் சோதிடத்தையும் பிற மூட நம்பிக்கைகளையும் சாடுவதாக இக்கட்டுரைகள் அமைந்துள்ளன.

## 200 சமயங்கள்

### 294.3 பௌத்தம்

*6068*

**பூமியில் சமாதானம் நிலவட்டும்.** கே.ஸ்ரீதம்மானந்தா (ஆங்கில மூலம்), அன்பு மலர் (தமிழாக்கம்). நுகேகொடை: Ven. Uduwana Ratanapala Thero, 36 Sorata Mawathe, Gangodawila, 1வது பதிப்பு, ஏப்ரல் 2006. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
vi, 18 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 17.5x12.5 சமீ.

அறவணடிகள் கே.ஸ்ரீதம்மானந்தா Let peace prevail on earth என்ற தலைப்பில் எழுதிய ஆன்மீக நூலின் தமிழாக்கம். மலேசியாவிலுள்ள Sasana Abhiwurdhi Wardhana Society (Buddhist Maha Vihara, Brickfields, 50470, Kuala Lumpur) என்ற ஆங்கில மூல நூலை மே 2004இல் வெளியிட்டிருந்தது. அந்நூலின் தமிழாக்கம் இதுவாகும்.

*6069*

**லோவெட சங்கராவ அல்லது உலகாபிவிருத்தி மணிமாலை.** ஸ்ரீ ஞனாலங்கார தேரோ. பேராதனை: பௌத்த மத்தியஸ்தானம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1973. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(8), 46 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

தமிழ்த் தொகுப்பாளரும் மொழிபெயர்ப்பாளரும் பேராதனை சிரி சுபோதாராம பௌத்த மத்தியஸ்தான அதிபருமான கலபொடவத்தை ஸ்ரீ ஞானாலங்கார தேரோ அவர்கள் ஏற்கெனவே தமிழில் பல நூல்களை எழுதியுள்ள சிங்கள அறிஞர். புத்தபகவானின் அருளுரைகளைக்கொண்ட சிங்கள கவிதை உருவில் 140 பாக்களில் அமைந்த நுலான **லோவெட சங்கராவ** வீதாகம மகாதேரோவால் எழுதப்பட்டது. அந்நூலே இங்கு இவரால் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 336205).

### 294.5 இந்து சமயம்

*6070*

**அம்பாள் செய்யும் அற்புதங்கள்.** வே.வரதசுந்தரம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆர்ட்ஸ்).
xiv, 154 பக்கம், விலை இந்திய ரூபா 40., அளவு: 18x12 சமீ.

திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் மீது பேரன்பு பூண்ட நூலாசிரியர் தனது குலதெய்வமான அருள்மிகு பத்ரகாளி அம்பாள் செய்த 39 அற்புதங்களைத் தேடித்தொகுத்து கட்டுரைகளாகப் பதிவாக்கியுள்ளார். ஆதி சங்கரர், முத்துசாமி தீட்சிதர், திருமூலர், அருட்சோதி வள்ளலார், இராமகிருஷ்ண பரமஹம்சர், கவியரசர் கம்பர், சுவாமி விவேகானந்தர், கவிஞர் கண்ணதாசன், சுப்பிரமணிய பாரதியார், காளமேகப் புலவர், மணிவாசகர் போன்றோரின் வாழ்வில் நடந்த அற்புதங்களும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந்நூலில் "ஆச்சி நீ காளி" என்ற தலைப்பில் 108 கவிதைகளும் இவர் பாடி இணைத்துள்ளார். அறநெறிப் பாடசாலைகளுக்குச் செல்லும் சிறார்களுக்கு ஏற்ற நூல். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 598932).

*6071*

**ஆறாம் அறிவின் சிந்தனைக் கோவை: இனிய சிந்தனைப்பா இரு நூறும் பிறவும்: ஆறாம் அறிவால் தேறிய சிந்தனை.** வெற்றிவேல் விநாயகமூர்த்தி. மட்டக்களப்பு: பசிமுகம், பகுத்தறிவுச் சிந்தனை முத்தமிழ்க் கழகம், 14, சுப்பையா வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2002. (மட்டக்களப்பு: நியு கீன் அச்சகம், முனை வீதி).

xxiv, 94 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14 சமீ.

பன்குடாவெளி மூர்த்தி என்றும் அறியப்பெற்ற கலாசூரி வெற்றிவெல் விநாயகமூர்த்தி அவர்களின் 80ஆவது அகவையின்போது அவரால் எழுதிவெளியிடப்பட்ட இந்நூல் ஆசிரியரின் பத்தாவது படைப்பாகும். இந்துசமயக் கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. பதிப்புரை, போற்றுரை, சிறப்புரை, பாராட்டுரை, என்னுரை, முற்கூறு, சைவசமயம், ஆறாம் அறிவு சிந்தனைக்கோவை, நற்சிந்தனைகள், பத்திரிகைக் கட்டுரைகள், மிக்சிங், S.T.சிவமயக்கம், அறிக்கைகள், படங்கள் என இந்நூல் விரிகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 561534).

**6072**

**ஆனந்தப் பொய்கை: திருவெம்பாவைச் சித்திரம்.** சித்தமழகியான் (இயற்பெயர்: இ.முருகையன்). யாழ்ப்பாணம்: ஆசிரியர், 1வது பதிப்பு, ஆண்டு விபரமில்லை. (யாழ்ப்பாணம்: ஷாம்பவி பதிப்பகம், 276 கஸ்தூரியார் வீதி).

(6), 20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த முரசொலி பத்திரிகையில் மார்கழித் திருவெம்பாவையையொட்டி வெளிவந்த கட்டுரைத்தொடர் இதுவாகும். தாமரை பூத்த மார்கழி நன்னீர், மெட்டி ஒலித்தது மெல்ல நடந்தாள், தித்திக்கப் பேசும் முத்துநகை, ஒருகண் நித்திரை மிஞ்சுமோ, ஒரு பொல்லாப்பும் இல்லை, சிவன் என்றே வாய் திறப்பாய், திருவருள் சுரக்கும் சிவகாமசுந்தரி, பொய்கையிலே பாய்ந்த பூங்கொடியார், இடையறாப் பேரன்பு, மழையே நீ பொழிவாய் ஆகிய பத்து இலக்கியப் படையல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூலுக்கான பாயிரத்தை கல்வயல் வே.குமாரசாமி வழங்கியுள்ளார்.

**6073**

**இணுவைச் சின்னத்தம்பிப் புலவர் அருளிய சிவகாமியம்மை தமிழ்.** சின்னத்தம்பிப் புலவர் (மூல ஆசிரியர்), இ.க.கந்தசுவாமி (விளக்கக் குறிப்பு). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600014: பி.வி.ஆர்.ஆப்செட்).

xvi, 80 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17.5x12 சமீ.

நூலாசிரியர் சின்னத்தம்பிப் புலவர் வரலாறு, இணுவில் ஊர் வரலாறு, இணுவைச் சிவகாமி அம்மை திருத்தல வரலாறு, நூற்பகுதிகள் பற்றிய விளக்கக் குறிப்புகள், சிவகாமியம்மை சிறை நீக்கிய பதிகம், சிவகாமியம்மை பிள்ளைத் தமிழ், சிவகாமியம்மை துதி, திருவூஞ்சல், உரைக் குறிப்புகள், இந்நூலால் அறியப்பெறுவன, அரும்பதங்களும் பொருளும், பாக்களின் முதற் குறிப்புகள், பிற குறிப்புகள், நூலாக்கத்திற்கு உதவிய நூல்கள், திருத்தலப்படங்கள் ஆகிய தலைப்புகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் அமரர் இ.க.கந்தசுவாமி கொழும்பு ரோயல் கல்லூரியின் தமிழ் ஆசிரியராக இருந்தவர். கல்வி அமைச்சின் தமிழ்நூற் பாடத்திட்டப் பிரிவிலும் தமிழ் நூலாக்கப் பிரிவிலும் பணியாற்றியவர். கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் பொதுச் செயலாளராக நீண்டகாலம் பணியாற்றியவர்.

**6074**

**இந்து மதம் ஓர் ஆழமான பார்வை.** ச.ஏகாம்பரநாதன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 14: பி.வி.ஆர். பிரின்டர்ஸ்).

xvi, 456 பக்கம், விலை: இந்திய ரூபா 140., அளவு: 17.5x12 சமீ.

நூலாசிரியர் சண்முகம் ஏகாம்பரநாதன் (9.5.1930-6.6.2006) யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் பிறந்தவர். கொழும்பிலிருந்து சிலகாலம் வெளிவந்த மழலை என் செல்வம் என்ற சஞ்சிகையின்

*ஆசிரியர். சைவசமயம் பற்றிய பல்வேறு பார்வைகளை இந்நூலில் 50 கட்டுரைகளாகத் தந்திருக்கிறார். இவை பெரும்பாலும் சைவம் பற்றிய பல்வேறு வாழ்வியல் கருத்துக்களை எளிமையான வகையில் புரியவைப்பதாக உள்ளன.*

***6075***

***கதிரை மகத்துவம்.*** ரெ.மு.மாணிக்கவேலுப்பிள்ளை. கண்டி: ரெ.மு.மாணிக்கவேலுப்பிள்ளை, பள்ளேகலை, 1வது பதிப்பு, 1913. (யாழ்ப்பாணம்: கலாநிதி யந்திரசாலை, பருத்தித்துறை).
75 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

*1-40 பக்கம் வரையில் இடம்பெறும் இச்செய்யுள் வடிவ நூல், மதுரை ஜில்லா சிவகங்கை ஸமஸ்தானம் அருளிக்கோட்டையிலும், பின்னர் சிலோன் (இலங்கை) கண்டி பள்ளக்காலிலும் (தற்போது பள்ளேகல என்ற சிங்களப்பெயரில் மருவியுள்ளது) வசித்த ரெ.முத்திருளப்பபிள்ளை யவர்களின் குமாரர் மதுரகவி ரெ.மு.மாணிக்கவேலுப்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டு பருத்தித்துறையில் அச்சிடப்பட்டது. இந்நூலில் பக்கம் 41-50 வரை* ***திருப்பரங்கிரி அகவல்*** *என்ற செய்யுள் நூலும், பக்கம் 51-74 வரை* ***சோளீஸ்வரர் பேரில் தேவாரச் சந்தப் பதிகமும் தம்பிராட்டியார் பஞ்சரத்தினமும்*** *என்ற செய்யுள் நூலும், இணைக்கப்பட்டுள்ளன. மூன்று சிறுபிரசுரங்களுக்கும் தனித்தனியான தலைப்புப் பக்கங்கள் அச்சிடப்பட்டிருப்பினும், பக்க இலக்கம் தமிழ் இலக்கங்களில் தொடரிலக்கமாக வழங்கப்பட்டுள்ளதால் தனி நூலாகக் கருதி முதலாவது நூலாகவுள்ள* ***கதிரை மகத்துவம்*** *இப்பதிவிற்கான நூல்தலைப்பாக வழங்கப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 43483).*

***6076***

***சந்நிதிக் கந்தர் சதகம்.*** இ.நமசிவாய தேசிகர். கட்டுவன்: க.சின்னப்பு, முன்னாள் நில அளவையாளர், 1வது பதிப்பு, டிசம்பர் 1973. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்).
(2), 30 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

*தென் மயிலை பண்டிதர் இ.நமசிவாய தேசிகரால் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன் மேல் பாடப்பெற்ற பக்தி இலக்கியம் இதுவாகும். நூலின் இறுதியில் பொருட்குறிப்பும் தரப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 310419).*

***6077***

***சிவஜோதி.*** சிவ.மகாலிங்கம். யாழ்ப்பாணம்: சிவஜோதி, பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், 1வது பதிப்பு, மார்ச் 2005. (யாழ்ப்பாணம்: ஜய்ராம் பிறின்ரேஸ், வெலிங்டன் சந்தி).
xvi, 128 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

*சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் பலாலி ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராகவும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியராகவும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராகவும் பணியாற்றியவர். பல்வேறு கும்பாபிஷேக மலர்களிலும், சிறப்பு மலர்களிலும் இடம்பெற்ற ஆசிரியரது 16 ஆன்மீகக் கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும்.*

***6078***

***சுவாமி பிள்ளைத் தமிழ்.*** க.கி.நடராஜன். யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம், 411/1, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1969. (யாழ்ப்பாணம்: கூட்டுறவு அச்சகம்).
xi, 76 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12.5 சமீ.

*யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணை, பொன்னப்பா வீதியைச் சேர்ந்த இந்நூலாசிரியர் யாழ்ப்பாணம் சிவயோக சுவாமி மீது தீவிர பக்தி கொண்டவர். சிவதொண்டன் என்ற மாத இதழை மார்கழி 1934இல் தொடங்கி நீண்டகாலம் வெளியிட்டு வந்தவர். இவர் யோகர் சுவாமிகள் மீது கொண்ட பக்தியால், அவரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 1963இல் பாடப்பெற்ற பிள்ளைத் தமிழ்ப்*

பிரபந்தச் செய்யுட்கள் இவை. இவை அவ்வப்போது சிவதொண்டன் இதழ்களிலும் வெளியாகின. முழுமையான தொகுப்பாக நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 264936).

**6079**

**சூரிய வழிபாடும் கோளறு பதிகமும்.** க.சோமசுந்தரப் புலவர். யாழ்ப்பாணம்: க.வேலுப்பிள்ளை, நவாலி, 1வது பதிப்பு, டிசம்பர் 1935. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
16 பக்கம், விலை: சதம் 10., அளவு: 18x12 சமீ.

சூரிய வழிபாடு பற்றிச் சோமசுந்தரப்புலவர் பாடிய இச்சிறுநூலின் இறுதியில் எட்டாவது பாட்டில் சூரியவழிபாடு செய்து கோளறு பதிகம் ஓதிக் கும்பிடும் என்று பாடியதால், இந்நூலின் பதிப்பாளர் கோளறு பதிகத்தையும் இதனுடன் பக்கம் 13-16களில் இணைத்திருக்கிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37491).

**6080**

**சைவமும் நாமும்.** எஸ்.தில்லைநாதன். சென்னை 600017: திருமகள் நிலையம், 55 வெங்கட் நாராயணா சாலை, தி.நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 1991. (சென்னை: Onyx PT Printers).
xvi, (6), 176 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 18x12.5 சமீ.

கொழும்பு விவேகானந்தா கல்லூரி அதிபரான சைவப்புலவர் எஸ்.தில்லைநாதன் எழுதிய நூல். மானிட ஜென்மம் பயன்பெற்று, பெருவாழ்வு பெறுவதற்கு வழிகாட்டவல்லது இந்து மதம் என்ற நோக்கில், இந்த இலக்கினை அடிப்படையாகக்கொண்டு வேத சிவாகமங்களில் பொதிந்துள்ள மேலான உண்மைகளை வேண்டிய இடங்களில் வழங்கி, தத்துவப் பொருளைத் தெளிவாக விளக்கிக்காட்டி இந்நூல் 20 இயல்களில் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 447914).

**6081**

**ஞானதீபம்.** சிவ.மகாலிங்கம். யாழ்ப்பாணம்: சிவஜோதி, பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், 1வது பதிப்பு, 2009. (யாழ்ப்பாணம்: அகரம் கணினிப் பதிப்பகம், பிரவுண் வீதி, தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக).
xiv, 118 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ.

கீரிமலைச் சிவன் கோவில் நகுலேஸ்வரம், கீரிமலை மீண்டும் சிவபூமியாகும் நாள் என்றோ?, இந்து சமயத்தில் அறம், மூவர் தமிழ், தெய்வ வாசகமாகிய திருவாசகம், தவமுனிவனின் தமிழ் மந்திரம், வாக்கிற்கு அருணகிரி, இந்து சமயத்தில் குருதத்துவம், இந்துமதம் காட்டும் ஒழுக்கவியல், தவத்திரு முருகேசு சுவாமியார், அறப்பணிகள் புரியும் ஞானத்தாய் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகிய தலைப்புகளில் அமைந்த 11 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் பலாலி ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராகவும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியராகவும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராகவும் பணியாற்றியவர்.

**6082**

**தச்சைச் சிலேடை வெண்பா.** க.கணபதிப்பிள்ளை (மூலம்), வ.சிவராஜசிங்கம் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: தச்சை ஆதீனம், கரவெட்டி, 1வது பதிப்பு, ஜூன் 1977. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், 213 காங்கேசன்துறை வீதி).
xii, 112 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 18.5x12.5 சமீ.

இலங்கையின் வடபிரதேசத்தில் கரவெட்டி என்னும் சிற்றூரிலுள்ள ஒரு பகுதியே தச்சன்தோப்பாகும். அங்கே எழுந்தருளியுள்ள சிந்தாமணி விநாயகர்மேற் பாடப்பட்ட சொற்றொடர்நிலைச் செய்யுள்வடிவமான சிலேடை வெண்பாக்கள் இவையாகும். தச்சந்தோப்பு என்னும் தலம் மருத வளத்தாற் பொலிந்துள்ள நிலப்பரப்பாகும். இங்கு காணப்படும் செந்நெற் கழனிகளும், அவற்றின் நடுவில் மலர்ந்திருக்கும் தாமரைத் தடாகமும் அதில் நீராடி மகிழும் இளமங்கையர் செயல்களும்

இன்னோரன்ன பிற காட்சிகளும் ஆசிரியரின் தமிழ்மொழிவளத்துடன் அழகுற காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இரட்டுற மொழிதல் என வழங்கப்படும் சிலேடைகள் ஒரு சொல்மூலம் இரு கருத்துக்களை வழங்குவனவாகும். இவற்றுள் ஒரு சொல்லைப் பிரித்து எழுதுவதன் மூலம் இருவேறு கருத்துக்களையும் புலப்படச்செய்யலாம். இதை பிரிமொழிச் சிலேடை என்பர். இந்நூலை ஆசிரியர் பிரிமொழிச் சிலேடை வெண்பா வடிவிலேயே உருவாக்கியிருக்கின்றார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 337253).

**6083**

**தமிழகத்தில் முருக வழிபாடு: ஆதிகாலம் முதல் கி.பி.13ம் நூற்றாண்டு வரை.** அம்பிகை ஆனந்தகுமார். பேராதனை: அம்பிகை ஆனந்தகுமார், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, மார்கழி 2003. (முறுதகஹமுல்ல: வர்தா பதிப்பகம், 85 சீ, பிட்டுனுகம, முறுதகஹமுல்ல 20526).

(4), 61 பக்கம், விலை ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-98467-0-1.

கிறீஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் மத்தியில் முருகவழிபாடு நிலவிவந்திருப்பதை தொல்காப்பியர் குறிப்பிடும் "கொடி நிலை கந்தழி, வள்ளி" பாடல் மூலமும் சங்ககால திருமுருகாற்றுப்படை, பட்டினப்பாலை முதலியவற்றில் காணப்படும் பாடல்களினூடாகவும் நூலாசிரியை நிறுவியுள்ளார். கி.மு. நான்காம் நூற்றாண்டுக்கு முன்னரே முருக வழிபாடு தமிழகத்தில் மட்டுமல்லாது இந்தியா முழுவதிலும் வழக்கில் இருந்ததென்பதையும் பௌத்தாயன தர்ம சூத்திரம் நூலிலிருந்து உதாரணங்களைக் காட்டி வெளிப்படுத்தியுள்ளார். நூலாசிரியர் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை விரிவுரையாளராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 569824).

**6084**

**திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய திருக்கோளறு பதிகம்: பொழிப்புரையும் விளக்கவுரையும்.** சூ.யோ.பற்றிமாகரன். லண்டன்: ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய வெளியீடு, 5 Chapel Road, London W13 9AE, 1வது பதிப்பு, பெப்ரவரி 2010. (சென்னை 600002: காந்தளகம், 68 அண்ணா சாலை).

67 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ., ISBN: 978-81-89708-26-9.

இங்கு திருக்கோளறு பதிகத்தைத் தனது ஞானத்தமிழிற் தந்த ஞானசம்பந்தரின் பதிஞானத்தின் பக்குவத்தையும், இப்பதிகம் எழுதுவதற்குத் திருவுள்ளம்கொண்ட இடமான திருமறைக்காட்டின் திவ்ய வரலாற்றுப் பெருமையையும் திருக்கோளறு பதிகத்தின் நுண்பொருளையும் திட்பநுட்பமாக ஆசிரியர் விளக்கியுள்ளார். அத்துடன் இவ்விளக்கங்களை வரலாற்று நோக்கில் புராண, சாத்திர, தோத்திரச் சான்றுகளுடன் தந்திருக்கும் சிறப்பும் நோக்கத்தக்கது. நூலாசிரியர் சூ.யோ.பற்றிமாகரன், 34 வருட ஊடகவியல் அனுபவமும் 29 வருட ஆசிரிய அனுபவமும் கொண்டவர். தற்போது இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் ஒக்ஸ்போர்ட் நகரில் வாழ்ந்து வருகின்றார்.

**6085**

**திருத் திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் என்னும் ஈழத்துச் சிதம்பர புராணம்: பாட்டும் உரையும்.** சோ.இளமுருகனார் (மூலம்), இ.பரமேசுவரியார் (உரையாசிரியர்), க.வைத்தீசுவரக் குருக்கள் (பதிப்பாசிரியர்). காரைநகர்: ஈழத்துச் சிதம்பர தேவத்தானம், 1வது பதிப்பு, விரோதிகிருது ஆண்டு மார்கழி 1971. (யாழ்ப்பாணம்: திருச்சண்முகநாத அச்சகம், காங்கேசன்துறை வீதி).

xxx, 692 பக்கம், தகடுகள், விலை: ரூபா 20., அளவு: 22.5x15 சமீ.

நவாலியூர் புலவர்மணி சோ.இளமுருகனாரால் பாடப்பெற்றதே திண்ணபுரச் சுந்தரேசர் புராணம். இந்நூலில் பாயிரச் சருக்கம் (33 செய்யுள்), காரைவளச் சருக்கம் (149 செய்யுள்), திண்ணபுரச் சருக்கம் (84 செய்யுள்), தவம்புரி சருக்கம் (120 செய்யுள்), ஐயனார் கோயில்காண் சருக்கம் (70 செய்யுள்), சுந்தரேசர் கோயில்காண் சருக்கம் (60 செய்யுள்), சோமாற்கந்தச் சருக்கம் (72 செய்யுள்), திருக்கோயிற் பாதுகாவலர் சருக்கம் (17 செய்யுள்), அந்தணர் பூசைபுரி சருக்கம் (35 செய்யுள்), விழாவயர் சருக்கம் (166 செய்யுள்), ஆகிய சருக்கங்களாக மொத்தம் 806 செய்யுள்களும் அவற்றுக்கான உரையும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 287130).

6086

**திருமுருகாற்றுப்படை விளக்கவுரை.** நக்கீர முனிவர் (மூலம்), சு.இராஜேந்திரக் குருக்கள் (விளக்கவுரை). நீர்வேலி: அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1988. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).
iv, 60 பக்கம், விலை: ரூபா 10.00, அளவு: 19x12.5 சமீ.

செந்தமிழ் நூல்களில் நக்கீரர் பாடியருளிய திருமுருகாற்றுப்படை முக்கிய இடம்பெறுகின்றது. சமய நூலாகவும் பாராயண நூலாகவும் மட்டுமல்லாது, சங்க இலக்கிய நூலாகவும் இது போற்றப்படுகின்றது. சங்ககாலத்துப் பத்துப்பாட்டு நூல்களுள் முதலாவதாக, அந்தத் தொகுதிக்கு ஒரு கடவுள் வாழ்த்துப் போன்றும் திருமுருகாற்றுப்படை அமைகின்றது.

6087

**துதிப்பா திரட்டு.** நினைவு மலர்க் குழு. மாவிட்டபுரம்: அன்னை கந்தையா கனகம்மா நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, நவம்பர் 2003. (கொழும்பு: மயூரி அச்சகம்).
180 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

லண்டனில் 1.10.2003 அன்று மறைந்த திருமதி கந்தையா கனகம்மா அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட இந்நூலில் சைவசமய சாரம், நவராத்திரி விரதம், திருமணக்கிரியை நடைமுறை, பஞ்சபுராணம், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினொராம் திருமுறை, பெரியபுராணம், திருப்புகழ், விநாயகர் துதி, கந்தர் சஷ்டி கவசங்கள், சரஸ்வதி துதி, அபிராமியம்மை பதிகம், ஸ்ரீ துர்க்கா கவசம், அஷ்டலட்சுமி வணக்கம், நாராயண கவசம், பட்டினத்தார் பாடல்கள், தாயுமானவர் பாடல்கள், நவக்கிரக தோத்திரம், வாழ்க்கையின் விழுமியங்கள், கீதாசாரம் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

6088

**நவராத்திரி வழிபாடும் தோத்திரப் பாடல்களும்.** இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம். கொழும்பு 4: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2006. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
114 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

நவராத்திரி தினங்களில் படிக்கத்தக்க தோத்திரப் பாடல்களை நவராத்திரி வழிபாடும் தோத்திரப் பாடல்களும் என்ற பெயரில் வழிபாட்டு முறைகளும் தோத்திரப்பாடல்களும் என்ற உப தலைப்புடன் ஒரு பாமாலையாகத் தொகுத்து வெளியிட்டுள்ளனர்.

6089

**நாமகள் புகழ்மாலை.** க.சோமசுந்தரப் புலவர் (மூலம்), பா.பரமேசுவரியார் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: C.J.இளையதம்பி, St. John's College, இணைந்த வெளியீடு, சுன்னாகம்: S.இளமுருகனார், உடுவில் மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, கர வருடம் ஆவணி 1952. (யாழ்ப்பாணம்: The Orient Imports Ltd, 216/1, ஆஸ்பத்திரி வீதி).
vii, (13), 160 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 21x14 சமீ.

தனது 15ஆவது வயதில் பாட்டெழுதத் தொடங்கிய நவாலியூர் சோமசுந்தரப்பிள்ளை தன் 72ஆவது வயதினை அடைந்த நிலையில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. தமது குலதெய்வமான நாமகளைப் போற்றிப் பாடிய பிரபந்தங்கள் இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன. நாமகள் வணக்கத்திற்குரியதோடு சிறந்த இலக்கியமாகவும் இந்நூல் அமைகின்றது. நாமகளின் கருணைத்திறத்தைச் சிறப்புவகையில் கூறுமுகமாகப் புலவர் தமிழ்மொழியின் தொன்மையையும் கடவுள்தன்மையையும் இலக்கிய இலக்கியப் பொலிவினையும் உள்ளங்கை நெல்லிக்கனி போலப் புலப்படுத்துகின்றார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 152730).

6090

**பாராயணப் பாமாலை: திருமுறை மற்றும் அருட்பாடல்களின் தொகுப்பு.** ஆனந்ததியாகர். Essex CM19 5PE: தணிகை, 184, Church End, Harlow, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: Oskha Enterprises, 96 B, Ratnam Road).
(10), 240 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

திருமுறைகளையும் திருப்பாடல்களையும் திரட்டி லண்டன் வாழ் சைவ அன்பர்கள் பயனடையும் வண்ணம், குறிப்பாக லண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் பயன்பாட்டிற்காக இந்நூல் தொகுக்கப்பெற்றுள்ளது. நூலின் தலைப்புப் பக்கமோ, அடிப்படை நூலியல் தகவல்களோ இன்றி இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**6091**
**பிள்ளையார் கதை.** அகத்திய மாமுனிவர் (மூலம்). கரவெட்டி: வெல்லன் விநாயகர் ஆலயம், 1வது பதிப்பு, டிசம்பர் 1986. (நெல்லியடி: க.சிவகுரு, தமிழ்ப் பூங்கா அச்சகம், யாழ்.வீதி).
(4), 22 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

அகத்திய மாமுனிவர் அருளிச்செய்த பிள்ளையார் கதை, ஏட்டுப் பிரதிகளாக இலங்கையில் உலவிவந்தன. 1933ம் ஆண்டு கரவெட்டி பழைய மாணவர் சங்கத்தால் அச்சுருவில் இது முதலில் வெளியிடப்பட்டது. இந்நூலில் மூல ஏட்டிலுள்ள ஒரு பகுதி அதில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அதனால் பின்னாளில் அப்பகுதியை ஏட்டுடன் இணைத்தே படித்துவந்தனர். இந்நிலையில் இந்நூல் அக்குறையை நிவர்த்திசெய்யும்வகையில் முழுமையாக வெளிவந்துள்ளது.

**6092**
**மயிலணி அந்தாதி.** கு.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை. சுன்னாகம்: புலவரக வெளியீடு, மயிலணி, 1வது பதிப்பு, ஜுன் 1966. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
(4), 20 பக்கம், விலை: சதம் 50., அளவு: 18.5x12.5 சமீ.

அந்தாதி என்னும் நூல் 96 வகைப் பிரபந்தங்களிலொன்று. அது சிறு காப்பிய வகையைச் சார்ந்தது. அந்தாதியாவது ஒரு செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தாவது, அசையாவது, சீராவது, அடியாவது, அடுத்த செய்யுளின் முதலில் வரப்பாடப்படுவது. ஈற்றுச் செய்யுளின் அந்தமே முதற் செய்யுளின் முதலாகவும் அமைதல் வேண்டும். இவ்விதிகளுக்கமைவான இச்செய்யுள் நூல் யாழ்ப்பாணத்துச் சுன்னாகத்தின் வடபாலுள்ள மயிலணி என வழங்கும் திருத்தலத்திற் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முருகக் கடவுள்மீது அந்தாதித் தொடையமையக் கட்டளைக் கலித்துறை யாப்பினால் இயற்றப்பட்டது. மயிலணி, மடங்களுக்கும், ஆலயங்களுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் உறைவிடமாக விளங்கிய ஓர் பழமைவாய்ந்த இடமாகும். செய்யுட்களில் வரும் அருஞ்சொற்களுக்குப் பொருள் வழங்கப்பட்டுள்ளது. 14ஆவது புலவரக வெளியீடாக வெளிவந்தது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275727).

**6093**
**முருக மந்திரம்.** சிவ.மகாலிங்கம். யாழ்ப்பாணம்: சிவஜோதி, பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2007. (யாழ்ப்பாணம்: ஜய்ராம் பிறின்ரேஸ், வெலிங்டன் சந்தி).
xvi, 100 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ.

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் பலாலி ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராகவும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியராகவும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராகவும் பணியாற்றியவர். மேடைப்பேச்சுக்களின் மூலமும், கட்டுரைகள் வாயிலாகவும் தமிழ் மறைகளின் பெருமைகளை எடுத்துக்கூறி வருபவர் இவர். திருமுறைகளுக்கு அடுத்த நிலையில் திகழ்கின்ற முருக மந்திரங்கள் பற்றிய 17 கட்டுரைகளை இத்தொகுப்பில் வழங்கியுள்ளார். இவை முன்னர் ஞானக்கதிர் சஞ்சிகையில் தொடராக வெளிவந்தன.

**6094**

**யாழ்ப்பாண திருத்தலங்கள் மீது பாடப்பட்ட அருளிசைப் பாடல்கள்.** எஸ். சிவானந்தராஜா. *யாழ்ப்பாணம்: எஸ்.சிவானந்தராஜா, செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு, 1வது பதிப்பு, நவம்பர் 2002. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் தரப்படவில்லை).*
*24 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 20x14.5 சமீ.*

*யாழ்ப்பாணத் திருத்தலங்கள் மீது பாடப்பெற்ற கீர்த்தனைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் பாடல்கள், சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார் பாடல்கள், கீரிமலை நகுலேசுவரர் பாடல்கள், நல்லூர் முருகன் பாடல்கள், சுழிபுரம் சம்புநாதேசுவரர் பாடல்கள், பணிப்புலம் முத்துமாரியம்மன் பாடல்கள், தெல்லிப்பழை துர்க்கையம்மன் பாடல்கள், வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் பாடல்கள், பொன்னாலை வரதராசப்பெருமாள் பாடல்கள், அளவெட்டி ஸ்ரீ நாகவரதநாராயணர் பாடல்கள் ஆகியவை இந்நூலில் இடம்பெற்றுள்ளன.*

***6095***
**ஷேத்திரத் திருவெண்பா: பதினொராம் திருமுறையுள் அடங்குவது.** ஐயடிகள் காடவர்கோன் நாயனார் *(மூலம்), மு.கந்தையா (உரையாசிரியர்), க.வைத்தீஸ்வரக் குருக்கள் (பதிப்பாசிரியர்). கனடா: சைவ சித்தாந்த மன்றம், 1008-50,* Elm Drive East, Mississauga, Ontario L5A 3X2, *2வது பதிப்பு, செப்டெம்பர் 2001, 1வது இலங்கைப் பதிப்பு, மார்ச் 1984. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*24 பக்கம், விலை: கனேடிய டொலர் 2., அளவு: 21.5x14 சமீ.*

*1500 ஆண்டுகளுக்கு முன்னர் பல்லவர் குலத்தில் பிறந்து காஞ்சிபுரத்தை தலைநகராகக்கொண்டு அரசாண்ட ஐயடிகள் காடவர்கோன் நாயனார் எழுதிய நூல் இது. சித்தாந்த வித்தகர் பண்டிதமணி கலாநிதி மு.கந்தையா அவர்களால் உரை எழுதப்பட்டு க.வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களால் பதிப்பிக்கப்பெற்று காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் முதற்பதிப்பு 12.03.1984 அன்று வெளியிடப்பட்டது. கனடா சைவ சித்தாந்த மன்றம், தனது காப்பாளர்களுள் ஒருவரான இந்நூலின் பதிப்பாசிரியரது அகவை 85 பாராட்டு விழாவில் கனடா றிச்மண்ட்ஹில் இந்து ஆலயத்தில் வைத்து 22.09.2001இல் மீள்பதிப்பாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. அரசாட்சியை தன் மகனிடம் ஒப்படைத்துவிட்டு, தில்லைச் சிற்றம்பலம் முதலான சிவத்தலங்களுக்கும் சென்று வழிபட்டு ஒவ்வொரு தலத்துக்கும் ஒவ்வொரு வெண்பாவாகப் பாடி வழிபட்டு வந்தவர். யாக்கை நிலையாமையை வலியுறுத்திப்பாடப்பெற்ற இப்பாடல்கள் பதினொராம் திருமுறையில் சேர்க்கப்பட்டவை.*

**மேலும் பார்க்க:** *6306*

*294.5(1) இந்து நிறுவனங்கள், மாநாடுகள், மலர்கள்*

***6096***
**ஈழத்து நாககோட்டம்.** வடிவேலு ஞானகாந்தன். சென்னை *600005: தமிழ்மணி புத்தகப் பண்ணை, 281 காயிதே மில்லத் சாலை, 1வது பதிப்பு, மாசி 1998. (சென்னை 600092: சேதுமதி அச்சகம்).*
*60 பக்கம், விலை: இந்திய ரூபா 20.00, அளவு: 17.5x12.5 சமீ.*

*நாகவழிபாட்டினை முதன்மைப்படுத்தி எழுதப்பட்டுள்ள இந்நூலில் ஈழத்து நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் தலவரலாறு விரிவாகத் தரப்பட்டுள்ளது. நாக வழிபாடு, நாக வழிபாடு ஏன் தோன்றியது? நாகர், பத்தியிலக்கியத்தில் வரும் நயினை, நயினாதீவு நாகபூஷணி தல வரலாறு, நயினை நாகபூஷணி அம்மனின் இன்றைய கோவில் அமைப்பு, நாகம் சார்ந்த பெயர்கள், சித்திராபுத்திர நாயனார் பிறந்த இடம் நயினாதீவே, மணிமேகலையும் மணிபல்லவத் தீவும், ஆபுத்திரனும் அமுதசுரபியும், வெடியரசன் கதை, வையாபாடலில் நாக நயினாதீவு, போர்த்துக்கேயர் அட்டூழியம், மனித உரு நாகங்கள் ஆகிய தலைப்புகளில் இவ்வாய்வு விரிகின்றது.*

***6097***
**கல்வளை அந்தாதியும் கல்வளைப் பிள்ளையார் கோவில் வரலாறும்.** *சு.செல்லத்துரை (தொகுப்பாசிரியர்). சண்டிலிப்பாய்: தர்மகர்த்தா சபை, கல்வளைப் பிள்ளையார் கோவில், 1வது பதிப்பு, தாரண வருடம், ஐப்பசி 2004. (யாழ்ப்பாணம்: தயா அச்சகம், 138, நாவலர் வீதி).*

*146 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.*

*நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் (செயதுங்க மாப்பாணமுதலி 1700-1764) தமது 15ஆவது வயதில் இயற்றிய கல்வளை அந்தாதியின் மீள்பதிப்பு இதுவாகும். இப்பிரதியின் மூலநூல் 1934இல் இந்து சாதனம் பத்திராசிரியரான ம.வே. திருஞானசம்பந்தபிள்ளை எழுதிய பதவுரை, கருத்துரை, விசேடவுரை, நூலாசிரியர் வரலாறு என்பவற்றுடன் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் சைவப்பிரகாச யந்திரசாலையில் அச்சிட்டு வெளியிடப்பெற்றிருந்தது. 2004இல் வெளியாகியுள்ள இம் மீள்பதிப்பு இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய முன்னாள் அதிபர் கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் பதப்பிரிப்பு, கொண்டுகூட்டு, பதப்பொருள், என்பவற்றுடனும், தர்மகர்த்தா சபையினரின் கல்வளைப் பிள்ளையார் கோவில் வரலாற்றுடனும் சேர்த்து வெளியிடப்பட்டுள்ளது.*

***6098***

**தென்மராட்சி-கொடிகாமம்-கச்சாய் ஸ்ரீநரசிங்க பைரவர் ஆலய மான்மியம்.** ஏரம்பு தர்மலிங்கம் *(பதிப்பாசிரியர்). கொடிகாமம்: ஸ்ரீ நரசிங்க பைரவர் ஆலயம், கச்சாய், 1வது பதிப்பு, ஜுன் 2009. (சாவகச்சேரி: ஆதவன் பக்க வடிவமைப்பு, ஐயா கடையடி, சாவகச்சேரி வடக்கு).*
*36 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: அளவு: 20.5x15 சமீ.*

*தென்மராட்சி-கொடிகாமம்-கச்சாய் ஸ்ரீநரசிங்க பைரவர் ஆலய தல வரலாறு, கட்டிட வளர்ச்சியும் மக்களின் பங்களிப்பும், திருப்பொன்னூஞ்சல், ஸ்ரீ கெருடப்பத்து, பைரவர் தோத்திரங்கள், 2009ம் ஆண்டின் பெரும் பூசை விபரம் ஆகிய விடயங்களை உள்ளடக்கிய நூல். ஓய்வுபெற்ற புகையிரத லிகிதரான இதன் பதிப்பாசிரியர் சாவகச்சேரி சங்கத்தானை பெரிய அரசடி வீதியைச் சேர்ந்தவர்.*

***6099***

**பத்தாண்டு வளர்ச்சி: சீசெல்சு அருள்மிகு நவசக்தி விநாயகர் ஆலயம் 1992-2002.** விஜயரத்தினம் *சிவசுப்ரமணியம்.* Seychelles*: விஜயரத்தினம் சிவசுப்ரமணியம், தபால்பெட்டி எண் 644, 1வது பதிப்பு, மே 2004. (சென்னை 600002: காந்தளகம், 834 அண்ணா சாலை).*
xviii*, 150 பக்கம், வண்ணப்படத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x14 சமீ.*

*சீசெல்சு நகரின் இந்துக்கோவிலான அருள்மிகு நவசக்தி விநாயகர் ஆலயம் எழுந்தருளி பத்தாண்டுகள் பூர்த்தி செய்யும்வேளையில் அதன் நினைவாக வெளியான ஆங்கில நூலின் தமிழ் வடிவம் இதுவாகும். சீசெல்சு, சீசெல்சும் தமிழரும், ஆரம்பம், நிலமும் கட்டடங்களும், நிதி, சமய விழாக்கள், கலை, கலாச்சாரம், வெளியீடுகள், அமைப்பும் ஆள்கையும் ஆகிய ஒன்பது தலைப்புகளில் அந்நாட்டு வரலாறும், அங்கு வாழும் புலம்பெயர்ந்த தமிழர்களின் கலை கலாசார சமயப் பணிகளும், புகைப்படங்களுடன் பதிவுக்குள்ளாக்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை ஐயனார் கோவிலடியைச் சேர்ந்தவர்.*

**மேலும் பார்க்க:** *6912*

## *297 இஸ்லாம்*

***6100***

**அல்குர்ஆன் கூறும் ஆகார வகைகள்.** ஹிப்ஷி தௌபிக். வெலிகம: ஹிப்ஷி தௌபிக், கொலெ தண்ட, *1வது பதிப்பு, ஜுலை 1990. (வெலிகம: சுப்பர் பிரின்ட்).*
*(6), 48 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 18x13 சமீ.*

*ஆசிரியரின் முதலாவது நூல் இதுவாகும். முஸ்லிம் சமயத்தவர்களின் வேதநூலான அல் குர்ஆனில் கூறப்பட்டுள்ள சில உணவுவகைகள் பற்றி இந்நூல் தெளிவுபடுத்துகின்றது. இந்நூலில் விளக்கப்பட்டுள்ள ஆகாரவகைகளாவன- தேன், பால், தாய்ப்பால், மன்னூ ஸல்வாவும் தண்ணீரும், மரவகைகள், தண்ணீர், இறைச்சி, மது (விலக்கு), மீன், ஒலிவ் எண்ணெய், அத்தி, மாதுளை, பேரீச்சை என்பனவாகும்.*

*6101*

**அல்குர்ஆன் ஞானமணிக் கோவை: முதலாம் பாகம்.** *அபுல்கலாம் அல்ஹாஜ் அஸ்ஸெய்யித் பழீல் மௌலானா (தொகுப்பாசிரியர்). கல்முனை: அபுல்கலாம் அல்ஹாஜ் அஸ்ஸெய்யித் பழீல் மௌலானா, மௌலானா மஹால், மசூர் மௌலானா வீதி, மருதமுனை, 1வது பதிப்பு, டிசம்பர் 1995. (கல்முனை: முனைப்பு அச்சகம், பிரதான வீதி, மருதமுனை).*
*(8), 45 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.*

*நூலாசிரியரின் 75ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இஸ்லாமியர்களின் சமய போதனை நூலான அல்குர்ஆன், இந்நூலில் அல்லாஹ் ஜல்ல ஜலாலுஹூ, அல்குர்ஆனில் வல்லோனின் விதந்துரைகள், குர்ஆனின் சிறப்பியல்புகள், திருக்குர்ஆன் ஓதுவதைக் கேட்பதின் ஒழுங்கு, அல்குர்ஆனின் உருவமைப்பு, உட்பிரிவு, மாநபி பற்றி மாமறை, வான்மறையின் விஞ்ஞான வித்துக்கள், அல் குர்ஆன் தீன்வழி நிற்போம் ஆகிய எட்டுத் தலைப்புகளினூடாக விளக்கப்பட்டுள்ளது.*

*6102*

**அல்குர்ஆனின் எண்ணியல் அதிசயங்கள்.** எம்.எல்.நஜிமுதீன். காத்தான்குடி: நவ இலக்கிய மன்றம், *1வது பதிப்பு, டிசம்பர் 2009. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).*
*(4),* v, *78 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.,* ISBN: *978-955-52029-0-9.*

*காத்தான்குடி நவ இலக்கிய மன்றத்தின் பொன்விழா நினைவாக வெளியிடப்பெற்ற நூல். கி.பி.607 முதல் 630 வரையிலான 23 வருடங்களாக, இறைவனால் நபிகள் நாயகம் (முஹம்மத் நபி) அவர்களுக்கு அருளப்பட்டதென்பர். இஸ்லாமிய புனித நூலாகிய அல்குர்ஆனின் அரபு மொழியில் அமைந்த குறிப்பிட்ட எழுத்துக்களையும், சொற்றொடர்களையும், அவை விளக்கும் கருத்துக்களையும் எண்ணியல் அதிசயங்களாக இந்நூலில் பதிவுசெய்துள்ளார். அல்குர்ஆனில் விஞ்ஞான, வானியல், மருத்துவ, மற்றும் பல துறைகளில் பின்னாளில் கண்டறியப்படும் உண்மைகளை 1430 ஆண்டுகளுக்கு முன்னரே அல்குர்ஆனில் எதிர்வுகூறப்பட்டுள்ளதை ஆசிரியர் அல்குர் ஆன் வசனங்களுக்கூடாகத் தெளிவாகவும் சுவையாகவும் தான் கொண்ட மருத்துவ விஞ்ஞான அறிவின் பின்புலத்தில்நின்று விளக்குகின்றார். நூலாசிரியர் இலங்கையின் மகப்பேறு மாதர்நோய் விசேட வைத்திய நிபுணர்களுள் ஒருவராவார்.*

*6103*

**இறைதூதர் இன்றேல்.** *அபுல் ஹசன் அலி நத்வி (ஆங்கில மூலம்), எம்.ஏ.எம்.சுக்ரி (தமிழாக்கம்). கொழும்பு 1: இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கம், த.பெ. இலக்கம் 824, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1966. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231* Wolfandhal Street*).*
*60 பக்கம், விலை: ரூபா1.00, அளவு: 18.5x12.5 சமீ.*

*இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கத்தின் முதலாவது வெளியீடு இதுவாகும். எம்.ஏ.எம்.சுக்ரி இலங்கைப் பல்கலைக்கழக (கொழும்பு) அரபுக்கல்வி விரிவுரையாளராவார். அவ்வப்போது அவர் எழுதிய இஸ்லாமியக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275627).*

*6104*

**இறைதூதரும் இல்லற வாழ்வும்.** *முஹம்மத் அல் கஸ்ஸாலி (மூலம்), எம்.ஏ.எம்.மன்சூர் (தமிழாக்கம்). பேருவளை: நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம், தபால் பெட்டி எண் 1, 1வது பதிப்பு, நவம்பர் 1981. (கொழும்பு 9: எஸ்.எச்.நிலாப்தீன்,* I.P.C.Printing Press, 320 N.M.M.Ishak Mawathe*).*
*24 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18x12 சமீ.*

*ஜாமி ஆ நளீமிய்யாவுக்கு வருகைதந்த மூல ஆசிரியர்,* The Messenger of Allah and his married Life *என்ற தலைப்பில் 13.5.1980இல் ஆற்றிய உரையின் தமிழாக்கம். முஹம்மத் அல் கஸ்ஸாலி மலிக் அப்துல் அஸீஸ் பல்கலைக்கழக ஷரீ ஆ பகுதியின் முன்னாள் தலைவராவார். ஒருகாலத்தில் எகிப்தை*

ஆட்டிப்படைத்த அல்-இக்வானுல் முஸ்லிமுன் இயக்க முன்னணித் தலைவர்களுள் ஒருவராக இவர் இருந்து பின்னாளில் எஹிப்திலிருந்து நாடுகடத்தப்பட்டவர்.

6105

**இறைவனும் பிரபஞ்சமும்: இஸ்லாமிய தத்துவக் கருத்துகள்.** ஏ.எம்.முஹம்மத் சஹாப்தீன். கொழும்பு 7: ஏ.எம்.எம் சஹாப்தீன் டிறஸ்ட் பவுண்டேஷன், 10 வார்ட் பிளேஸ், 1வது பதிப்பு, ஜனவரி 1995. (சென்னை 600001: திறீயெம் பிரின்டர்ஸ், 83, அங்கப்ப நாயக்கன் தெரு).
xvi, 286 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

இறையனுபவமும் இறைஞானமும் தனிப்பட்டோருக்கு எப்படி சித்தியாகும் என்பதை ஆசிரியர் இந்நூலில் தெளிவாக விளக்குகின்றார். நூலில் ஆங்காங்கே தவஞான சீலர்களின் சீரிய கருத்துக்களை பொருத்தமாக எடுத்துக்காட்டியுள்ளார். இஸ்லாத்தின் சூபித்துவ இறைஞானம், பலதரப்பட்ட இருப்பு நிலைகளில் இறைவன் வியாபித்தல், இறைவன் சிருஷ்டிகளில் வியாபிக்கும் நிலையும் அந்நிலைக்கு அப்பாற்பட்ட ஏகத்துவ நிலையும், பரம்பொருளைச் சிந்திக்கும் இலக்கிய உருவகங்களும் குறியீடுகளும், ஆத்மீக முன்னேற்றப்பாதையும் தன்னைத் தானறியும் மெய்ஞானமும், இறை அனுபவமும் இறைஞானமும் ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 500485).

6106

**இஸ்லாத்தில் இனவாதத்திற்கு இடமில்லை.** உஸ்மான் சாஹிப். கல்முனை: ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் பதிப்பகம், 1வது பதிப்பு, நவம்பர் 2000. (கல்முனை: Goldene Offset Printers, 105 மட்டக்களப்பு வீதி).
20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இன்றைய காலகட்டத்தில் தேசியரீதியிலும் சர்வதேசரீதியிலும் இனத்தால், மதத்தால், மொழியினால் மற்றும் தேசத்தினால் வேறுபட்டு பல்வேறு பிரச்சினைகளுக்கும் மக்கள் முகம்கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் இஸ்லாத்தில் இனவாதத்திற்கு இடமில்லை என்ற கருத்தினை இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் இந்நூலினூடாக விளக்கமுற்படுகின்றார். பிரபல த..வா எழுத்தாளரான இந்நூலாசிரியர் உஸ்மான் சாஹிப் கிழக்கிலங்கையில் கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

6107

**இஸ்லாமிய வரலாறு.** S.H.ஆதம்பாவா. நிந்தவூர்: காஷிபுல் உலூம் அறபுக் கல்லூரி மாணவர் மஜ்லிஸ், 1வது பதிப்பு, 1997. (சாய்ந்தமருது: ஸ்டார் ஓப்செட் பிரின்டர்ஸ், பிரதான வீதி).
(8), 102 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 20x14.5 சமீ.

இஸ்லாத்துக்கு முந்திய அரேபியா, நபி(ஸல்) அவர்களது காலம் ஆகிய இரு பகுதிகளாக இந்நூல் பிரிக்கப்பட்டுள்ளது. இஸ்லாத்துக்கு முந்திய அரேபியா என்ற பிரிவில் ஜஸீரத்துல் அறப் அமைவிடம், மாகாணங்கள், அறபு மக்கள் அல்-அறபுல் பாயிதா, அல்-அறபுல் ஆரிபா, அல்-அறபுல் முஸ்தரிபா, குறைஷிகள், அறபு மொழி, அரசியல் நிலை, மக்காவின் அரசியல், பொருளாதார நிலை, இலக்கிய, சமுதாய, சமய நிலைகள் ஆகிய விடயங்கள் தரப்பட்டுள்ளன. நபி(ஸல்) அவர்களது காலம் என்ற பிரிவில் நபி (ஸல்) அவர்களின் பரம்பரை, பிறப்பு, நபி தூதரின் பெற்றோர் அப்துல் முத்தலிப், அப்துல்லாஹ், ஆமீனா, விளையும் பயிர், நபித்துவம் அருளப்படல், வஹியின் வகைகள், த..வாப்பணி ஆரம்பம், ஹிஜ்றாக்கள், அகபா, மதீனாவின் புதிய சமுதாயம், யுத்த மேகங்கள், பத்று யுத்தம், உஹது யுத்தம், அகழி யுத்தம், ஹுதைபிய்யா உடன்படிக்கை, மக்கா வெற்றி, இறுதி ஹஜ்ஜும் ஏந்தலின் வபாத்தும், மதீனாவில் இஸ்லாமிய அரசு போன்ற தலைப்புக்களில் இஸ்லாமிய வரலாறு விளக்கப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர், நிந்தவூர் காஷிபுல் உலூம் அறபுக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றியவர். அத்துடன் மஹரகம ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியின் தொலைக் கல்விச் சேவையிலும் இஸ்லாமிய ஆசிரியராகப் பணியாற்றியவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 604038).

6108

**இஸ்லாமிய வரலாறு: பாகம் 1, பகுதி 2.** A.M.அபூபக்கர். கல்முனை: இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகம், 62 ஒஸ்மான் வீதி, சாய்ந்தமருது-5, 3வது திருத்திய பதிப்பு, மார்ச் 2001, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1977, 2வது பதிப்பு, ஜுன் 1983. (கல்முனை: IRA Graphics, சாய்ந்தமருது).
vi, 136 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14 சமீ., ISBN: 955-8491-02-0.

நூலாசிரியர் எழுதிவரும் **இஸ்லாமிய வரலாறு** என்ற நூல்தொடரில் உள்ள முதலாம் பாகத்தின் இரண்டாம் பகுதி இதுவாகும். 1977இல் வெளிவந்த நூலின் முதலாம் பாகத்திலேயே இந்தப் பகுதியும் அடங்கியிருந்தது. விரிவாகத் திருத்தி எழுதும் முயற்சியில் அறியாமைக்கால அரேபியாவையும் நபி முஹம்மத் (ஸல்) அவர்களது வரலாற்றையும் கொண்ட முதலாம் பாகம் மிக நீண்டு விட்டமையால் நேர்வழி காட்டப்பெற்ற கலீபாக்கள் (குலபாஉர் ராஷிதன்) நால்வரினதும் அரசியல் வரலாற்றைக்கூறும் பகுதியைத் தனியாக வெளியிடவேண்டியதாயிற்று. அந்த வகையில் வெளியிடப்படும் தனிநூலாக இது அமைகின்றது. கிலாபத்தும் இஸ்லாமிய குடியரசும், கிலாபத் நிர்வாகம் ஆகிய இரு இயல்களாக இப்பகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது.

**6109**
**இஸ்லாமிய விழுமியங்கள்: பகுதி 1 (நம்பிக்கை சார்ந்தவை).** எம்.ஐ.அப்துர் ரஸ்ஸாக். கொழும்பு 9: Rihana Publishers, 23, Ketawalamulla Lane, 1வது பதிப்பு, நவம்பர் 1999. (பாணந்துறை: Far East Enterprise, 138, காலி வீதி, பள்ளிமுல்ல).
(12), 156 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14 சமீ., ISBN: 955-96937-0-0.

இந்நூல் இறை நம்பிக்கை பற்றிய விழுமியம், மலாஇகாமார்கள் பற்றிய நம்பிக்கை விழுமியம், இறைதூதுவர்கள், வேதங்கள் பற்றிய விழுமியம், மரணத்துக்குப் பின்னைய வாழ்க்கை, முன்னளப்பு பற்றிய நம்பிக்கை விழுமியம் ஆகிய நான்கு இயல்களில் இஸ்லாமிய விழுமியங்கள் பற்றி விளக்குகின்றது. நூலாசிரியர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அறபு, இஸ்லாமிய நாகரீக முதுநிலை விரிவுரையாளராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 533452).

**6110**
**இஸ்லாமிய வீரர்கள்: இப்னு ரூஷ்த்.** ரஷிட் ஹரூன் (அரபு மூலம்), ஹாபிஸ் இஸ்ஸதீன் (தமிழாக்கம்), பேருவளை: குர்தூபா வெளியீடு, 30 நவீன சந்தை முதலாம் மாடி, கலீ வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1997. (பேருவளை: ஏ.ஏ.பிரின்ட்ஸ்).
16 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 40., அளவு: 23x14 சமீ.

இஸ்லாமிய வீரர்கள் என்ற தொடர் வரிசையில் வெளியாகியுள்ள இச்சிறுவர் நூல்- அரேபியாவில் குர்துபா என்னுமிடத்தில் பிறந்த இப்னு ருஷ்த் என்னும் இஸ்லாமிய வீரன் பற்றியதாகும். குர்தூபா இஸ்லாமிய கல்வித் திட்டத்தின் ஒரு இணைந்த வேலைத்திட்டமாக மேற்கொள்ளப்படும் பல்வேறு வயதுப் பிரிவிலுமுள்ள சிறுவர்களுக்கான பரந்த அறிவியல் வாசிப்புக்கான நூல்களை வெளியிடும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

**6111**
**இஸ்லாமும் தொடர்பு சாதனங்களும்.** எஸ்.எச்.எம்.பழீல். பேருவளை: அல்-கலம் பதிப்பகம், 26/2, யூசுப் அவென்யு, சீனன்கோட்டை, 1வது பதிப்பு, மார்ச் 2006. (கொழும்பு 11: Quick Graphic Print).
48 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-9454-07-2.

இந்நூல், ஊடகவியலாளர்களுக்கு நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரி, ஊடகவியல் ஒழுக்கங்கள், ஊடகவியல் யுத்தமொன்று, ஊடகத்துறையும் முஸ்லிம்களும் ஆகிய நான்கு இயல்களில் தொடர்பு சாதனங்கள் பற்றிய செல்நெறியை இஸ்லாமிய கோட்பாடுகளின் அடிப்படையில் ஆராய முற்பட்டுள்ளது. நூலாசிரியர் ஜாமிஆ நளீமிய்யா சிரேஷ்ட விரிவுரையாளரும் முஸ்லிம் மீடியா போரம் அமைப்பின் அங்கத்தவருமாவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 602919).

**6112**

*ஈமானின் உண்மையை நீ அறிவாயா? எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரஹ்). கொழும்பு: அகில இலங்கை தரீக்கத்துல் முப்லிஹீன், கொழும்புக் கிளை, 3வது பதிப்பு, ஜுலை 2005, 1வது பதிப்பு, மே 1980. 2வது பதிப்பு, ஜுலை 2002 (கொழும்பு 6: பரணன் அசோஷியேற்ஸ், 403 1/1, காலி வீதி, வெள்ளவத்தை).*
*(8), 672 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.,* ISBN: *955-1212-02-9.*

*ஆத்மீகஞானி, சுல்தானுல் ஆரிபீன் ஷெய்ஹுல் முப்லிஹீன் எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரஹ்) அவர்கள் கல்முனை, மருதமுனையைச் சேர்ந்தவர். இவர் குர்ஆன், ஹதீஸ்களையும், கலிமத்துல் ஹக்கி, புத்துஹாத்துல் மக்கியா, புஸுஸுல் ஹிகம், இன்ஸான் காமில், கவாத்தி முல்ஹிகம், யவாகீத் வல்ஜவாஹிர்,இப்ரீஸ், தக்ரீபுல்உஸுல், கரீதத்துல்அஜாயிப் போன்றபல கீதாபுகளையும், இந்து சமய அத்வைத நூல்கள், உபநிடதங்களையும், கிறிஸ்தவ பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு நுஸல்களையும் ஆராய்ந்து அதன்வழியாக இஸ்லாமியக் கருத்துக்களை விதைக்கும் இந்நூலை உருவாக்கியிருக்கிறார்.*

***6113***
*ஏகத்துவப் பாடல்கள். எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரஹ்). கொழும்பு: அகில இலங்கை தரீக்கத்துல் முப்லிஹீன், கொழும்புக் கிளை, 3வது பதிப்பு, டிசம்பர் 2005, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1995, 2வது பதிப்பு, பெப்ரவரி 2003. (கொழும்பு 6: பரணன் அசோஷியேற்ஸ், 403 1/1, காலி வீதி, வெள்ளவத்தை).*
*(12), 291 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.,* ISBN: *955-1212-05-3.*

*ஆத்மீகஞானி, சுல்தானுல் ஆரிபீன் ஷெய்ஹுல் முப்லிஹீன் எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரஹ்) அவர்கள் எழுதி இசையமைத்துப் பாடிய இஸ்லாமிய இறைவழிபாட்டுப் பாடல்கள் 180 இந்நூலில் இடம்பெற்றுள்ளன. பின்னிணைப்பில் கலைச்சொற்களுக்கான விளக்கமும் தரப்பட்டுள்ளன.*

***6114***
*ஏகத்துவம் பற்றி அல்குர்ஆன்: அதன் ஆய்வுக்குரிய அரிய வழிமுறைகள். எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரஹ்). கொழும்பு: அகில இலங்கை தரீக்கத்துல் முப்லிஹீன், கொழும்புக் கிளை, 2வது பதிப்பு, டிசம்பர் 2006, 1வது பதிப்பு, டிசம்பர் 1993, (கொழும்பு 6: பரணன் அசோஷியேற்ஸ், 403 1/1, காலி வீதி, வெள்ளவத்தை).*
*(10), 444 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.,* ISBN: *955-1212-04-5.*

*இறை ஐக்கியத்தைத் தேடி அலையும் மக்களுக்கு, இறை ஐக்கியம் என்றால் என்ன? அதைப் பெறும் வழியென்ன? எமது சந்தேகங்களை நீக்கி, எங்களை உண்மையான தௌஹீதென்ற நேரான பாதைக்குக் குர்ஆன் ஹதீஸுகள் வழிகாட்டுமா? என்பதை விளக்கி, அவர்களுடைய உள்ளத்திலுள்ள சில இருட்திரைகளை நீக்கி நூர் என்ற ஒளியை ஏற்றிவைக்க வேண்டுமென்பதற்காகவே இந்த நூலைத் தான் எழுதியதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.*

***6115***
*கண்ணியத்திற்குரிய நபிமார்கள்: ஷிர்க்கை தகர்த்த இளைஞர் இப்றாஹீம் (அலை): சிறுவர்களுக்கானது. அகத்திமுறிப்பான் (இயற்பெயர்: செய்னுதீன் எஸ்.பரீத்). பறகஹதெனிய: ஜம்மிய்யத்து அன்சாரிஸ் சுன்னத்தில் மொஹம்மதியா, தலைமை அலுவலகம், வே உட, 1வது பதிப்பு, பெப்ரவரி 2008. (பறகஹதெனிய:* JASM *கணனி மையம்).*
*(2), 46 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 22.5x15 சமீ.*

*இஸ்லாமிய நம்பிக்கையின் மூல ஊற்றான தவ்ஹீத்-ஒரிறைக்கொள்கையை எல்லா நபிமார்களும் தமது சமுதாயத்துக்கு உணர்த்தி வழிகாட்டியுள்ளனர். இவ்வகையில் நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் தமது சமுதாயத்தவர்கள் மத்தியில் காணப்பட்ட ஷிர்க்கான செயல்களைத் தவிடுபொடியாக்கி, தவ்ஹீத்தை-ஒரிறைக்கொள்கையை முதன்மைப்படுத்திப் பிரச்சாரப்பணியில் ஈடுபட சிறுவயதிலிருந்தே முயற்சித்தார். இப்றாஹீம் அவர்களின் ஷிர்க்குக்கு எதிரான தீட்சண்யமானபோக்கையும், அவரது மனைவி அன்னை ஹாஜறாவின் அர்ப்பணிப்பையும். மகன் இஸ்மாஈல் (அலை) அவர்களது தியாகத்தையும் இலகுநடையில் இந்நூல் தெளிவுபடுத்துகின்றது.*

***6116***

**காதியானிகள் ஓர் எச்சரிக்கை.** அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம்.இஸ்மாயில் (ஸலபி). பறகஹதெனிய: ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் மொஹம்மதியா, தலைமை அலுவலகம், வே உட, 1வது பதிப்பு, ஜுன் 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).
vi, 7-28 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 21x14.5 சமீ.

நூலாசிரியர் "உண்மை உதயம்" மாத இதழின் ஆசிரியரும் ஜமா அத்தின் "தாயி"யுமாவார். பஞ்சாப் மாநிலத்தில் குர்தாஸ்பூர் மாவட்டத்தில் காதியான் என்ற ஊரில் 1835இல் பிறந்த குலாம் அஹ்மத் தன்னையும் நபி என்று வாதிட்டு அஹமதிய்யா முஸ்லிம் ஜமாஅத் என்ற பெயரில் ஒரு அமைப்பினையும் உருவாக்கினார். இன்றும் வளர்ச்சியுற்று வரும் இந்தக் காதியானிய அமைப்பின் ஸ்தாபகரான மிர்ஸா குலாம் அஹ்மத் அவர்களையும், அவரது அமைப்பையும் விமர்சனத்துக்குள்ளாக்கி இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

**6117**
**காதியானிப் பிரச்சினை.** ஸெய்யித் அபுல் அஃலாமௌதுதி (உருது மூலம்), யூ.எம்.தாசீன் (தமிழாக்கம்). கொழும்பு 9: இலங்கை ஜமாஅதே இஸ்லாமி, 77 தெமட்டகொட வீதி, மருதானை, 2வது பதிப்பு, ஒக்டோபர் 1996, 1வது பதிப்பு, மே 1963. (கொழும்பு 13: குயிக் கிராப்பிக்ஸ் பிரின்ட், 5-1/20, சுப்பர் மார்க்கெட், கொட்டஹென).
(8), 40 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 18x13 சமீ.

காதியானிசம் பற்றி மௌலானா அவர்கள் உருதூ மொழியில் எழுதிய நூலின் தமிழாக்கம் இதுவாகும். காதியானியின் உருவாக்கம், வரலாறு அதன் கொள்கைகள் பற்றிய விரிவான தகவல்களை இந்நூல் தருின்றது. காதியானிகளை **முஸ்லீம்களல்லாத** சிறுபான்மையினராக கருதப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் இந்நூல் முன்வைக்கின்றது. இந்நூலின் முதற் பதிப்பு அல் ஜிஹாத் புத்தக நிலையத்தினால் வெளியிடப்பட்டது.

**6118**
**கிண்ணியா ஜம் இய்யதுல் உலமா சபையினரின் திருத்தப்படவேண்டிய தீர்வுகள்.**
எஸ்.எச்.எம்.இஸ்மாயீல் ஸலபி. பறகஹதெனிய: ஜம்மிய்யத்து அன்சாரிஸ் சுன்னத்தில் மொஹம்மதியா, தலைமை அலுவலகம், வே உட, 1வது பதிப்பு, ஜுலை 1994 (பறகஹதெனிய: கே.எம்.மொகயிதீன், பிலால் பிரிண்டிங் ஏஜன்சி).
58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

இஸ்லாமிய அடிப்படையில் மார்க்க அறிஞர்களால் வழங்கப்பட்ட சில தீர்ப்புகள் வாதப்பிரதிவாதங்களுக்கும் விமர்சனங்களுக்கும் உட்படக்கூடியதாக அமைந்துவிடுகின்றன. இந்த வகையில் கிண்ணியா ஜம்மிய்யத்துல் உலமா சபையினரால் வழங்கப்பட்ட மார்க்கத் தீர்ப்பொன்று சர்ச்சையைத் தோற்றுவித்திருந்த நிலையில் இதற்குரிய பதில் அறிக்கையாக இந்நூல் வெளிவந்திருந்தது. இந்நூலாசிரியர் **உண்மை உதயம்** என்ற இஸ்லாமிய பத்திரிகையின் ஆசிரியரும் மார்க்க போதகருமாவார்.

**6119**
**சிறுவர்களே இஸ்லாத்தை தெரிந்துகொள்ளுங்கள்.** மௌலானா அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) (அரபு மொழி மூலம்). கொழும்பு 9: தாருல் அர்கம் பவுண்டேஷன், 77 தெமட்டகொட வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1996. (வத்தளை: முஜாஹித் மீடியா, 41 பேர்சி டயஸ் மாவத்தை, மாபோல).
(4), 10 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-9431-00-5.

இந்நூல் சிறுவர்களுக்கு இஸ்லாத்தை எளிய நடையிலும் தெளிவாகவும் விளக்குகின்றது. நபி ஆதம் (அலை) அவர்கள் முதல் முஹம்மத் (ஸல) அவர்கள் வரை வந்த எல்லா நபிமார்களது பணிகளையும் எடுத்துக்காட்டுகின்றது. முஹம்மத் (ஸல) அவர்களது காலத்தின் பின் வந்த ஸஹபாக்களின் பணிகள் மற்றும் குர் ஆன், ஹதீஸ் தொகுக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட விதம் ஆகியவற்றையும் விளக்குகின்றது. இது மௌலானா அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) அவர்கள் பாக்கிஸ்தான் வானொலியில் சிறுவர்களுக்காக ஆற்றிய உரையாகும். இவரே ஜமா அதே இஸ்லாமி என்ற இயக்கத்தை

உருவாக்கியவராவார். தமிழாக்கம் செய்த மொழிபெயர்ப்பாளர் பற்றிய விபரம் நூலில் தரப்படவில்லை.

**6120**

**தரீகாக்கள் அவசியம் தானா?** அல்லாமா அஷ் ஷெய்கு அப்துல் கனி ஹமாதா (அரபு மூலம்), எஸ்.எச்.பௌஸுர் ரஹீம் காதிரி (தமிழாக்கம்). உக்குவெல: S.H.Fawzur Raheem, 124/D1 Kiriwela, 1வது பதிப்பு, நவம்பர் 2000. (உக்குவெல: வின்டோஸ் சிஸ்டம்ஸ், 27 கண்டி வீதி, வரக்காமுற).
xii, 42 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ.

அல்லாமா அஷ் ஷெய்கு அப்துல் கனி ஹமாதா சிரிய நாட்டைச் சேர்ந்தவர். இவர் திக்ரு செய்பவர்களின் சிறப்பும் எதிர்ப்பாளர்களுக்கான மறுப்பும் (பள்ளுத்தாகிரீன் வர்ரத்து அலல் முன்கிரீன்) என்ற தலைப்பில் எழுதிய அரபுமொழிமூல நூலின் தமிழாக்கம் இதுவாகும். இந்நூலில் திக்ருடைய அமல்களின் சிறப்பு, ஸஹாபாக்கள், அவ்லியாக்களைப் புகழ்தல், இரட்சிப்பு, வஸீலா தேடுதல், நபிமார்களினதும் வலிமார்களினதும் சியாரங்களைக் கொண்டு பரகத்து தேடல், குழப்பங்களும் விளக்கங்களும், நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைக் கொண்டு இரட்சிப்பு தேடல், மீலாத் விழாக்களும் மௌலீது ஓதலும் ஆகிய 7 தலைப்புக்களில் இஸ்லாமியக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

**6121**

**தற்கால இஸ்லாமியச் சிந்தனை: இஸ்லாத்தில் நவீனத்துவவாதமும் புத்துயிர்ப்புவாதமும்.** எம்.எஸ்.எம்.அனஸ். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 2வது பதிப்பு, 2007, 1வது பதிப்பு, 2001. (சென்னை 5: மணி ஓப்செட்).
xvi, 400 பக்கம், விலை: இந்திய ரூபா 275., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-659-034-X.

இஸ்லாத்தின் நவீனத்துவ சிந்தனையின் தாக்கம் இஸ்லாமியச் சிந்தனை மரபிலும் பண்பாட்டிலும் நிகழ்ந்த திருப்புமுனையின் வரலாறாகும். ஒரு கட்டளைப்படிமநிலை நகர்வு (Paradigm shift) இங்கு நடந்தேறியுள்ளது. புரட்சிகர சிந்தனைகளை அது வெளிப்படுத்தியுள்ளது. அது கருத்துமோதல்களின் களமாக இருந்தது. இம்மாற்றங்களையும் அதற்குக் காரணமாக இருந்த அடித்தளச் சிந்தனைகளையும் அக்கால வரலாற்றினூடாக இந்நூல் ஆராய்கின்றது. மறுபுறமாக புத்துயிர்ப்புவாதம் எழுச்சி பெறுகின்றது. நவீனத்துவத்திற்கு அது சவாலாக இருப்பதுடன் தீவிர கருத்தியலின் ஊற்றுக்கண்களையும் அது திறக்கின்றது. தற்கால அரசியல் இஸ்லாத்தின் தோற்றத்தினை ஆராய்வதனூடாக புத்துயிர்ப்புவாதத்தின் மையக் கருத்துகளும் இந்நூலில் பரிசீலிக்கப்படுகின்றன. தற்கால இஸ்லாமியச் சிந்தனையின் பிரதான செல்நெறி இவ்விரு சிந்தனை இயக்கங்களின் சமய, சமூக. அரசியல் கருத்தியல்களின் விளக்கங்களையும் மோதல்களையுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதை இந்நூல் விளக்குகின்றது. இந்நூலாசிரியர் பேராதனை பல்கலைக்கழகத்தில் மெய்யியல் மற்றும் உளவியல்துறையின்தலைவர். பல்கலை, ஆய்வு ஆகிய இதழ்களின் ஆசிரியர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 616690).

**6122**

**திருக்குர் ஆன் தீர்ப்பு: முதலாம் பாகம்.** ஷெய்ஹுல் முப்லிஹீன் எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரஹ்). கொழும்பு: அகில இலங்கை தரீக்கத்துல் முப்லிஹீன், கொழும்புக் கிளை, 2வது பதிப்பு, ஏப்ரல் 2003, 1வது பதிப்பு, மார்ச் 1989. (கொழும்பு 6: பரணன் அசோஷியேட்ஸ், 403, 1/1, காலி வீதி, வெள்ளவத்தை).
(4), 223 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-1212-00-2.

இஸ்லாத்தின் முழுப்பகுதியும் குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ், பகுத்தறிவு ஆகிய ஐந்து மூலப் பிரமாணங்களைக் கொண்டும் நிலைப்படுத்தப்பட்ட ஒன்றாகும். தெளிவான ஆராய்வு இல்லாத சிலரால் எழுதப்பட்ட நூல்களையும், உபதேசங்களையும் மறுதலித்து இந்நூலில் இஸ்லாத்தின் அடிப்படை உண்மைகளை சரியான ஆதாரத்தோடு முன்வைக்க முயன்றிருக்கிறார்.

**6123**

**திருக்குர்ஆன் தீர்ப்பு: இரண்டாம் பாகம்.** ஷெய்ஹூல் முப்லிஹீன் எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரஹ்). கொழும்பு: அகில இலங்கை தரீக்கத்துல் முப்லிஹீன், கொழும்புக் கிளை, 2வது பதிப்பு, ஜனவரி 2005, 1வது பதிப்பு, ஜனவரி 1990. (கொழும்பு 6: பரணன் அசோஷியேட்ஸ், 403, 1/1, காலி வீதி, வெள்ளவத்தை).
(4), 414 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-1212-00-2.

பிரதான தத்துவங்கள், குர்ஆனின் நாலு பிரமாணங்கள், திருக்குர் ஆன் தரும் தெளிவான விபரம், உலக மக்களின் இரு அடிப்படைக் கொள்கைகள், இணை(ஷிர்க்) என்பது என்ன, ஷிர்க்கிற்குரிய இரண்டாவது காரணம், ஷிர்க்கிற்குரிய மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம் காரணங்கள், சில சொல் விளக்கங்கள், ஓர் தத்துவ ஞானம், குர்ஆனில் முரண்பாடு உண்டா? 2வது கொள்கை தௌஹீது, தௌஹீதில் பலவகையுண்டா? றசூல்(ஸல்) அவர்களின் கொள்கை எது?, முரண்பட்ட ஆயத்துக்கள், அர்ஷ் என்பது எங்கே உள்ளது?, இஸ்லாத்தின் லேபலில் இல்யாஸிஸம், மூலப் பிரமாணங்களின் முடிவு, பத்துவா (மார்க்கத் தீர்ப்பு), அ.இ.த.முப்லிஹீன் வழங்கும் பத்துவா, பைத்தியத்துக்கு வைத்தியம் அவசியம், கலிமாவின் கருப்பொருள், தௌஹீதினால் ஏற்படும் நன்மை தீமைகள், அறிவு என்பது என்ன, திருக்குர் ஆனின் பகிரங்க சவால், போட்டியில் பங்குகொள்பவர்களுக்கு நிபந்தனை, நிரூபணம் காண்பது எப்படி?, பிரத்தியட்சப் பிரமாணம் என்றால் என்ன?, அனுமானப் பிரமாணம் என்றால் என்ன?, மனித அறிவின் கேள்வி, இஸ்லாத்தின் கொள்கை துவித சித்தாந்தமா?, குர் ஆனைப் பற்றிய விபரம், இஜ்மாஉ என்பது என்ன ஆகிய 40 தலைப்புகளில் திருக்குர் ஆன் பற்றி இந்நூலில் கருத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**6124**
**திருமறையும் நபிவழியும்.** ஜின்னாஹ் ஷரிபுத்தீன். மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 1வது பதிப்பு, ஜனவரி 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).
xiv, 100 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x12 சமீ., ISBN: 955-97349-8-9.

புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீனின் மகனான ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்கள் குர்ஆனின் மணிக்கருத்துக்களையும், ஹதீஸ்களில் காணப்படும் இஸ்லாமிய கருத்துக்களையும் கூறும் 200 கவிதைகளை கட்டளைக் கலித்துறைக் கவிதைகளாக யாத்து அவற்றிற்கு பொருள் விளக்கமும் அளித்து இந்நூலை உருவாக்கியுள்ளார்.

**6125**
**தினமும் ஓதத் திருநபிகளாரின் திக்ர்கள்.** ஹலீம்தீன் (புனைபெயர்: கல்வீட்டுக் கவிராயர்). உடத்தலவின்னை: ஹாஜியானி ஹவ்வா உம்மா நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, ஜுலை 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).
24 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 18x11 சமீ.

கல்லூட்டு ஆலிம் என அழைக்கப்பட்ட காலஞ்சென்ற கல்ஹின்னையின் முன்னோடி உலமா அல்ஹாஜ் ஹமீத் லெப்பை அவர்களதும் மர்ஹுமா-ஹாஜியானி பாத்துமுத்து அவர்களதும் அருமை மகளும், மர்ஹூம் அல்ஹாஜ் எஸ்.யு.சாலிலெப்பை அவர்களின் மனைவியுமான ஹாஜியானி ஹவ்வா உம்மா அவர்கள் 04.07.2003 அன்று காலமானதை முன்னிட்டு அன்னாருக்கு ஸதகதுல் ஜாரியாவாக (நிலையான நன்மைபயக்கும் தர்மமாக) அமையும்பொருட்டு வெளியிடப்பட்ட நினைவுமலர்.

**6126**
**தொழுகை விவரம் ஷாபி.** ஹாதி புத்தக நிலையத்தார். கொழும்பு 11: ஹாதி புத்தக நிலையம், 52/7, 2ம் குறுக்குத் தெரு, 3வது பதிப்பு, பெப்ரவரி 2001, 1வது பதிப்பு, ஜுலை 1994, 2வது பதிப்பு, நவம்பர் 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(8), 95 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

இஸ்லாம், கலீமாக்கள் ஐந்து, சுத்தம், தொடக்கு, குளிப்பு, முழுக்கின் ஷர்த்துக்கள், அசுத்தம், தண்ணீர், வுழூவின் பர்ளுகள், பர்ளான தொழுகைக்குரிய நேரங்கள், தயம்மம் செய்வதன் விபரம், சுன்னத், தொழுகையின் ஷர்த்துக்கள், தொழுகையை முறிக்கும் காரியங்கள், போன்ற இன்னோரன்ன

*123 சிறு தலைப்புகளில் முஸ்லீம்களின் தொழுகை பற்றிய விபரங்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.*

***6127***

***பித்அத் துக்கு உண்மையின் சவுக்கடி: பாகம் 1.*** *எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரஹ்). கொழும்பு: அகில இலங்கை தரீக்கத்துல் முப்லிஹீன், கொழும்புக் கிளை, 2வது பதிப்பு, நவம்பர் 2006, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1987. (கொழும்பு 6: பரணன் அசோஷியேற்ஸ், 403 1/1, காலி வீதி, வெள்ளவத்தை).*
*(2), 112 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-8535-03-6.*

*ஆத்மீகஞானி, சுல்தானுல் ஆரிபீன் ஷெய்ஹுல் முப்லிஹீன் எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரஹ்) அவர்கள் எழுதியுள்ள இந்நூல் 01.06.1987இல் காத்தான்குடியைச் சேர்ந்த ஏ.அப்துல் றஊப் என்பவரால் எழுதி வெளியிடப்பட்ட "ஹமவோஸ்த்" என்ற நூலின் இஸ்லாமியக் கருத்துகளுக்கு மறுப்புரையாக இந்நூல் வெளிவந்துள்ளது.*

***6128***

***பித்அத் துக்கு உண்மையின் சவுக்கடி: பாகம் 2.*** *எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரஹ்). கொழும்பு: அகில இலங்கை தரீக்கத்துல் முப்லிஹீன், கொழும்புக் கிளை, 3வது பதிப்பு, நவம்பர் 2006, 1வது பதிப்பு, நவம்பர் 1992, 2வது பதிப்பு, நவம்பர் 2000, (கொழும்பு 6: பரணன் அசோஷியேற்ஸ், 403 1/1, காலி வீதி, வெள்ளவத்தை).*
*(4), 32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-1212-06-1.*

*01.06.1987இல் காத்தான்குடியைச் சேர்ந்த ஏ.அப்துல் றஊப் என்பவரால் எழுதி வெளியிடப்பட்ட "ஹமவோஸ்த்" என்ற நூலின் இஸ்லாமியக் கருத்துகளுக்கு மறுப்புரையாக முதற்பாகம் வெளிவந்திருந்தது. இந்நூல் ஏ.அப்துல் றஊப் 11.9.1992 அன்று எழுதி காத்தான்குடி ஹாஜாஜி கலை இலக்கிய வட்டத்தினால் வெளியிடப்பட்ட "நனவாகும் ஒரு கனவு" என்ற மற்றொரு நூலின் முடிவுரையில் கூறப்பட்ட கருத்துக்களை மறுத்தும் மேற்படி ஆசிரியருக்கும் எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் அவர்களுக்கும் உள்ள பிணக்கின் பின்னணி பற்றியும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

***6129***

***மதமும் அறிவியலும்.*** *எம்.ஏ.எம்.சுக்ரி. பேருவளை: அல்-கலம் பதிப்பகம், 26/2, யூசுப் அவென்யூ, 1வது பதிப்பு, 1994. (கொழும்பு 13: Quick Graphics Print, 5-1/20 Super Market, Kotahena).*
*(4), 54 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 19.5x14 சமீ.*

*மனித வரலாற்றில் மத நம்பிக்கைகள் செல்வாக்குச் செலுத்திய காலம் மறைந்து அறிவியல் ஆதிக்கம் செலுத்தும் புத்துலகம் தோன்றிவிட்டதாக ஒரு அபிப்பிராயம் தோற்றுவிக்கப்பட்டுள்ள இன்றைய உலகில், மதத்தினதும் அறிவியலினதும் களங்களையும், பரிமாணங்களையும் தெளிவுபடுத்தி ஐரோப்பிய வரலாற்றில் மத்திய காலப்பிரிவில் மதத்திற்கும் அறிவியலுக்குமிடையில் நடைபெற்ற போராட்டத்தின் வரலாற்றுப் பின்னணியை விளக்கி, மதத்திற்கும் அறிவியலுக்கும் இடையில் உள்ள தொடர்பு பற்றிய இஸ்லாமிய நோக்கை இந்நூல் தெளிவாக விளக்குகின்றது. மதமும் அறிவியலும், அறிவியல்-அதன்பண்பும் வரம்புகளும், அல்குர்ஆனின் அறிவியல் பரிமாணம், இறைத்தூதின் அவசியம் ஆகிய நான்கு தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 535025).*

***6130***

***முதலாம் கலீபா அபூபக்ர் ஸித்தீக் (றழி).*** *எம்.ஐ.எம்.அமீன். ஹெம்மாத்தகம: அல்-ஹஸனாத் வெளியீட்டுப் பதிப்பகம், முஅஸ்ஸலதுல் ஹஸனாத், கு 67, ஹிஜ்ராகம, 1வது பதிப்பு, ஜுலை 2004. (மாவனல்ல: எம்.ஜே.எம். ஒப்செட் பிரின்டர்ஸ், 119, பிரதான வீதி).*
viii, *64 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 21x14.5 சமீ.*

*இஸ்லாமிய வரலாற்றில் இறைதூதர் முகம்மது (ஸல்) அவர்களுக்கு அடுத்ததாகக் கணிக்கப்படுபவர் அபூபக்ர் சித்திக் (றழி) அவர்களாவர். அவரது வாழ்க்கை வரலாறு இளமைப்பருவம், ஆஇஷா (றழி)*

திருமணம், உரோமர் வெற்றி பற்றிய பந்தயம், சித்திக் என்ற பட்டம் சூட்டல், ஹிஜ்ரத்தில் பங்குகொள்ளல், மதீனாவில் அபூபக்ர் (றழி) ஹுதைபியா உடன்படிக்கை, நபிகளார் (ஸல்) அவர்களின் வபாத்து, ஸகீபா பனீஸஇதாவில், கலீபாவாகப் பதவிப் பிரமாணம், சிரியா எல்லையை நோக்கி உஸாமா (றழி), ஸகாத் தர மறுத்தோருக்கு எதிராக, பொய் நபிமார் தோற்றம், போலிகளுக்கு எதிராகப் போர், பாரசீகப் போர்முனை, சிரியாப் போர்முனை, கலீபாவின் மரணம், கலீபாவின் குடும்பத்தார், கலீபாவின் நிர்வாகம், குர்ஆன் தொகுப்பு ஆகிய தலைப்புகளில் இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் முஹம்மது இப்ராஹிம் ஆலிம் சாஹிப் முஹம்மது அமீன், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அறபு இஸ்லாமிய நாகரிகத்துறையின் முன்னாள் முதுநிலை விரிவுரையாளராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 605637).

**6131**

**முஹம்மதுற்றஸூலுல்லாஹ் (மக்காக் காலப் பகுதி).** எம்.ஐ.எம்.அமீன். ஹெம்மாத்தகம: அல்-ஹஸனாத் வெளியீட்டுப் பதிப்பகம், முஅஸ்ஸஸதுல் ஹஸனாத், கு 67, ஹிஜ்ராகம, 1வது பதிப்பு, பெப்ரவரி 2002. (மாவனல்ல: எம்.ஜே.எம். ஒப்செட் பிரின்டர்ஸ், 119, பிரதான வீதி).
xii, 100 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 21x14 சமீ.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளரான முஹம்மது இப்றாஹீம் அலிம் சாஹிப் முஹம்மது அமீன் எழுதிய இந்நூல் இஸ்லாமிய வரலாற்றின் ஒரு காலகட்டத்தை விபரிக்கின்றது. முகம்மது (ஸல்) அவர்களின் முன்னோர்கள், யானை ஆண்டு, சிறுவர் முகம்மது, ஹர்புல் பிஜார், ஹில்புல் புளுல், அல் அமீன், திருமணம், க.்.பா புனர்நிர்மாணம், ஹிராவில் தியானம், வஹி அருளப்படல், இரகசிய அழைப்பு, பகிரங்க அழைப்பு, இறைதூதை எதிர்த்ததேன், குறைசியரின் எதிர் நடவடிக்கைகள், அபீசீனிய ஹிஜ்ரத், இஸ்லாம் மக்காவில் காலூன்றல், மி.்.ராஜ், அகபா உடன்படிக்கை, மதீனாவை நோக்கி, மதீனா சாசனம் ஆகிய தலைப்புகளில் இஸ்லாமிய வரலாறு இங்கு விரிகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 605634).

**6132**

**ரமழான் என்றால் என்ன?** அஷ் ஷெய்க் அப்துல் அஸீஸ் பின் அப்துல்லாஹ் பின் பாஸ், அஷ் ஷெய்க்அப்துல் குத்தூஸ் அல் அன்ஸாரி (மூல ஆசிரியர்கள்), ஏ.ஆர்.எம்.ம.்.ரூப் (தமிழாக்கம்). கொழும்பு 10: முஸ்லிம் சமய கலாசார திணைக்களம், 1, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1986. (கொழும்பு 9: டெவலோபிரின்ட், 69 ஸ்ரீ தர்மராம வீதி).
40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான ரமழான் நோன்பைச் சரிவர அனுட்டிக்கவும் ஆன்மீக மேம்பாட்டை அடையவும் இந்நூல் உதவுகின்றது. இந்நூல் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீட்டத்திட்டத்தின்கீழ் பிரசுரிக்கப்படும் எட்டாவது நூலாகும். அஷ் ஷெய்க் அப்துல் அஸீஸ் பின் அப்துல்லாஹ் பின் பாஸ், சவுதி அரேபியாவில் அமைந்துள்ள தாருல் இ.்.ப்தா, மஜ்மஉ பிக்ஹில் இஸ்லாமிய்யி ஆகிய நிறுவனங்களின் தலைவராவார். அஷ் ஷெய்க்அப்துல் குத்தூஸ் அல் அன்ஸாரி பிரபல இஸ்லாமிய அறிஞராவார். இவ்விருவரது உரைகளையும் இந்நூல் கொண்டுள்ளது. அத்துடன் திணைக்கள ஆராய்ச்சி உத்தியோகத்தர் மௌலவி ஜே.மீராமுஹிதீன், கலாச்சார உத்தியோகத்தர் மௌலவி ஏ.சீ.ஏ.எம்.புஹாரி ஆகியோர் எழுதிய கட்டுரைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

**6133**

**ரமழான் நோன்பு: ஓர் ஆய்வு.** எம்.வை.எம்.மீஆது. மாவனல்ல: மஹிர் பப்ளிஷர்ஸ், Dumbuluwewa, Hemmathagama, 1வது பதிப்பு, பெப்ரவரி 1993. (மாவனல்ல: எம்.ஜே.எம்.பிரின்டர்ஸ், 119, பிரதான வீதி).
(4), 42 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 17.5x13 சமீ.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வட-கிழக்குப் பல்கலைக்கழகங்களின் இடம்பெயர்ந்த மாணவர்களுக்காக ஆங்கில போதனாசிரியராகக் கடமையாற்றும் நூலாசிரியரின் எட்டு

கட்டுரைகளின் தொகுப்பு இது. இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஏற்பட்டுள்ள பொருளாதார, சமூக, கலாச்சார, சமய மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு, இஸ்லாத்தின் நான்காம் கடமையான ரமழான் நோன்பை ஆய்வுரீதியாக ஆசிரியர் தனது கட்டுரைகளில் அணுகியுள்ளார். 1976ம் ஆண்டு தொடக்கம் தினகரன்-முஸ்லிம் மலர், ஆலமுன் இஸ்லாம், கலைமலர் சஞ்சிகை ஆகியவற்றில் வெளியான இவரது எட்டு கட்டுரைகளின் தொகுப்பாகும். நபிபிருமானின் நல்லுரைகள் என்ற இவரது கவிதைநூலை அடுத்து வெளிவரும் இரண்டாவது நூல் இது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 441979).

***6134***

**வழி கெடுக்கும் இயக்கங்கள்.** எம்.ஐ.அப்துஸ் ஸமத் மக்தூமி சாபிஈ ஸயலானி. ருக்கஹவில: எம்.ஐ.அப்துஸ் ஸமத் மக்தூமி சாபிஈ ஸயலானி, உடுகொட, 1வது பதிப்பு, மே 1990. (சென்னை 600001: பிறை பிரின்டர்ஸ் அன்ட் பப்ளிஷர்ஸ், 151, அங்கப்ப நாயக்கன் தெரு).
40 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 17.5x12 சமீ.

சவுதி அரேபிய தாருள் இப்தா தலைமையகத்தின் ஆசியாக் கண்ட இஸ்லாமிய த.்.வாப் பிரச்சாரப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் முஹம்மத் பின் இப்ராஹீம் பின் சுஊத் அவர்கள் எம்.ஐ.அப்துஸ் ஸமத் மக்தூமி சாபிஈ ஸயலானி அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், அபுல் அ.்.லா மௌதூதியையும் ஜமா அதே இஸ்லாம் இயக்கத்தினரையும் ஏசித் தூற்றிப் பேசுவது, அவர்களை எதிர்த்து ஆட்சேபணை செய்வது போன்றவற்றைக் கைவிட்டு அவர்களோடு இணைந்து செயற்படுமாறு எழுதிய கடிதத்திற்குப் பதிலாக இக்கட்டுரை எழுதப்பட்டது. 27.5.1990 அன்று கஹட்டோவிட்டவில் நடைபெற்ற சுன்னத் ஜமாஅத் கொள்கை விளக்க மாநாட்டில் இக்கட்டுரையின் நூல்வடிவம் பகிரங்கமாக விநியோகிக்கப்பட்டது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 453054).

***6135***

**ஹலாலும் ஹறாமும்.** யாஸின் மௌலானா (மூலம்), ஸலாஹுதீன் (பதிப்பாசிரியர்). கண்டி: சிபா பதிப்பகம், 34 மாத்தளை வீதி, கட்டுகஸ்தொட்ட, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).
16 பக்கம், விலை: 10 சதம், அளவு: 19x12.5 சமீ.

இந்நூலின் பதிப்பாசிரியர் மௌலவி ஸலாஹுதீன் இலங்கையில் ஒரு எழுத்தாளரும் மார்க்க போதகருமாவார். கண்டி, கல்ஹின்னையைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர், கண்டி ஹனபிப் பள்ளிவாசலின் பிரதம கதீப் (போதகர்) ஆகப் பணியாற்றுகின்றார். ஆங்கிலம், அறபு, உர்து, பாரசீகம், தமிழ், ஹிந்துஸ்தான் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம்பெற்ற அரபுக் கவிஞர்களுள் ஒருவரான ஆரிப் பில்லாஹ் குத்புல் வுஜூத் மர்ஹூம் ஸெய்யித், யாஸீன் மௌலானா அவர்களினால் நிகழ்த்தப்பட்ட வானொலி உரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. ஹலாலம் ஹறாமும் என்பது இஸ்லாத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், ஏற்றுக்கொள்ளப்படாததும் என்று பொருள்படும். இந்நூல் இடம்பெற்ற "உடத்தலவின்ன நூலகம்" இயங்கிய காலம் 1973-74களிலாகும். இந்நூல் அக்காலகட்டத்திற்கு முன்னர் வெளியிடப்பட்டிருக்கவேண்டும்.

**மேலும் பார்க்க:** 6029, 6139, 6154, 6305, 6448, 6449, 6621, 6815, 6843.

## 300 சமூக விஞ்ஞானங்கள்

### 301 சமூகவியல்

***6136***

**கருத்தியல் என்னும் பனிமூட்டம்: வரலாறும் கருத்தியலும் பற்றிய கட்டுரைகள்.** க.சண்முகலிங்கம். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
xii, 123 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-241-2.

ஒரு சமூகத்தின் மேலாதிக்கம் பெற்ற குழுக்கள் தம் மேலாதிக்கத்தை நியாயப்படுத்தவும், தம் நலன்களைப் பேணுவதற்கும் கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் உருவாக்கிக்கொள்கின்றன. இதனையே கருத்தியல் (Ideology) என்று சமூகவியலாளர் கூறுவர். கருத்தியல் அதிகாரத்துடன் தொடர்புடையது. அதிகாரம் அற்ற குழுக்களை கீழ்ப்படுத்தி வைக்கவும் சமூக சமத்துவமின்மையை நியாயப்படுத்தவும் கருத்தியல் பயன்படுகின்றது. மக்களின் சிந்தனையில் பனிமூட்டமாகக் கவியும் கருத்தியல் அவர்களை ஒடுக்கவதற்கான சம்மதத்தையும் பெற்றுத்தருகின்றது. ஒடுக்குதலின் வேதனையையும், துன்பத்தையும் தணித்து ஆறுதலையும்கூட வழங்குகின்றது. இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ள கட்டுரைகளில் பெரும்பாலானவை இலங்கைத் தமிழரின் சமூக, அரசியல், பண்பாட்டு அரசியலுடன் தொடர்புடையவை. இத்துறைகளில் பனிமூட்டமாகக் கவிந்துள்ள கருத்தியல் பற்றியவை. அரசாங்க நிர்வாகசேவையில் உயர் அதிகாரிகளுள் நிர்வாகத் திறனுடன், புலமைக் கணிப்பையும் பெற்ற மிகச்சில தமிழறிஞர்களுள் சண்முகலிங்கமும் ஒருவர். இவர் 1990 முதல்1996வரை இந்து கலாச்சார திணைக்களப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர்.

**6137**

**சமூக மோதல்கள்: ஓர் கோட்பாட்டு அறிமுகம்.** எஸ்.ஐ.கீதபொன்கலன். இலங்கை: சமாதான செயன்முறையின் தகவல் திறனை வலுவூட்டும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட இலங்கைக் கிளையின் சிறுநிதித் திட்டம், 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 13: Dreamland Printers, இல.139 சேர் ரத்னஜோதி சரவணமுத்து மாவத்தை).
36 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

சமாதான செயன்முறையின் தகவல் திறனை வலுவூட்டும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட இலங்கைக் கிளையின் சிறுநிதித் திட்டத்தின் (Strengthening Information capacities for the peace process: Small Grants Programme of the United Nations development Programme, Sri Lanka) அனுசரணையுடன் உருவாகிய இந்நூலில், முரண்பாடும் மோதலும், பயன்மிகு மோதல். மோதல் என்பது யாது? மோதல் மூலக்கூறுகள், மோதல் காரணிகள், மோதல் மட்டங்கள், மோதல்களின் வகைகள், மோதல் செயன்முறை, மோதல் ஆய்வு ஆகிய தலைப்புக்களில் சமூக மோதல்கள் கோட்பாட்டு ரீதியாக அணுகப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 611065).

**6138**

**சமூகப் பிரச்சினைகள் பாகம் 1.** பாத்திமா சிபானி. கண்டி: சிந்தனை வட்டம், த.பெ.இலக்கம் 01, பொல்கொல்லை, 1வது பதிப்பு, ஜுன் 2010. (கண்டி: சீ.வீ.பப்ளிஷர்ஸ், த.பெ.இலக்கம் 01, பொல்கொல்லை).
xvi, 104 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 270., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-1779-42-9.

சமூகப் பிரச்சினைகள், வறுமை, குற்றச்செயல்கள், போதைப்பொருள் பாவனை, தற்கொலை ஆகிய 5 இயல்களில் இலங்கையின் சமூகப்பிரச்சினைகளை இந்நூல் ஆய்வுரீதியில் ஆராய்கின்றது. மாத்தளை உக்குவெல பிரதேசத்தைச் சேர்ந்த நூலாசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல்துறை விரிவுரையாளராவார். இந்நூல் சிந்தனை வட்டத்தின் 321ஆவது வெளியீடாகும்.

**6139**

**சமூகப் புனரமைப்பில் மஸ்ஜிதுகளின் பங்கு.** ஸீ.எம்.ஏ.அமீன். Kalagedihena: ரேஷ்மா பதிப்பகம், 348/1, Warapalana Road, Thihariya, 2வது பதிப்பு, மார்ச் 1994, 1வது பதிப்பு, மே 1990. (கொழும்பு 10: குளோப் பிரிண்டிங் வேர்க்ஸ்).
iv, 26 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 18x12.5 சமீ., ISBN: 955-95661-0-5.

முஸ்லிம் சமூகத்தின் மையஸ்தலம் என்ற வகையில் மஸ்ஜித்துகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒரு சமூகத்தைப் புனரமைப்பதற்கு மஸ்ஜிதை எவ்வெவ்வழிகளில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற பல்வேறு கருத்துக்களை இந்நூல் விரிவாக முன்வைக்கின்றது. ஸக்காத் திரட்டல், விநியோகம் என்பவற்றை மஸ்ஜித்துகளின் வாயிலாக மேற்கொண்டு திரட்டப்படும் பணத்தின் ஒரு பகுதியை காணியற்ற ஏழைகளுக்கு காணிகளை வாங்கிக்கொடுப்பதிலும், வீட்டு வசதியற்றவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கும் பயன்படுத்தலாம் என இந்நூல் வழிகாட்டுகின்றது. ஊர்

ஜமாஅத்தார் மத்தியிலே நிகழும் பிணக்குகளையும் பிரச்சினைகளையும் தீர்த்துவைக்கும் செயலுரம்வாய்ந்த மையமாக மஸ்ஜித்துகள் பயன்படுத்தப்படலாம் என்றும் இந்நூல் கூறுகின்றது.

***6140***

***மனிதரும் சமூக வாழ்வும் (சமூக வரலாற்றுக் குறிப்புகள்).*** *சி.கா.செந்திவேல். நீர்வேலி: தாயக இல்ல வெளியீடு, பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி வடக்கு, 1வது பதிப்பு, புரட்டாதி 1994. (யாழ்ப்பாணம்: கபிலா பதிப்பகம், காங்கேசன்துறை வீதி).*
*80 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 21x13.5சமீ.*

*மனிதரும் சமூக வாழ்வும், உலகின் தோற்றம், உயிரின் தோற்றமும் பரிணாம வளர்ச்சியும், மனிதர்கள் உருவாகினர். சமூக விஞ்ஞானக் கண்ணோட்டம், ஆரம்பகால மனிதர்கள், புராதன பொதுவுடமை அமைப்பு, அடிமை சமூக அமைப்பு, நிலப்பிரபுத்துவ அமைப்பு, முதலாளித்துவ சமூக அமைப்பு, சோஷலிசமும் பொதுவுடமை அமைப்பும், மனிதரும் மதங்களும் ஆகிய பன்னிரு தலைப்புகளில் சமூக வரலாறு பற்றிச் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 462190).*

**மேலும் பார்க்க:** *6366, 6367, 6951*

*301.1 பண்பாடு*

***6141***

***உலகமயம் பண்பாடு எதிர்ப்பு அரசியல்.*** லெனின் மதிவானம். கொழும்பு 6: இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம். *5* B New Chapal Lane, வெள்ளவத்தை, *1வது பதிப்பு, ஜுன் 2010. (*கொழும்பு *6:* R.S.T. *என்டர்பிறைஸஸ், 114* W.A. *சில்வா மாவத்தை).*
*140 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x15 சமீ.,* ISBN: *978-955-1810-11-5.*

*பண்பாட்டில் உலகமயமாக்கத்தின் தாக்குதலும் புத்துயிர்ப்பும், பண்பாடு தோற்றமும் வளர்ச்சியும், அதன் மாற்றம், உலகமயமாக்கல் சூழலில் நாம் எதிர்நோக்கும் நெருக்கடிகள், அவற்றிற்கு எதிராக முகம்கொடுப்பது, போராடுவது, போராட்ட யுத்திகள் போன்ற பல விடயங்களை ஆசிரியர் விரிவாகவும் தெளிவாகவும் இந்நூலில் எடுத்துக்கூறியுள்ளார். ஹட்டனைப் பிறப்பிடமாகக்கொண்ட லெனின் மதிவானம் கல்வியமைச்சின் கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தின் உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளராகவும் தமிழ்ப்பிரிவின் தலைவராகவும் பணியாற்றுகின்றார்.*

***6142***

***பண்பாடு: சமூக மெய்யியல் நோக்கு.*** சோ.கிருஷ்ணராஜா. கொழும்பு *10:* குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ், *1வது பதிப்பு, 2010. (*கொழும்பு *10:* குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ்*).*
xii, *(2), 82 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-659-235-1.*

*பேராசிரியர் சோமசுந்தரம் கிருஷ்ணராஜா (1947-2009) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தத்துவத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர். இந்நூலில், பண்பாடு பற்றிய எண்ணக்கரு பற்றிய பல்வேறு அம்சங்களையும், பண்பாட்டின் துறைகளையும் பண்பாடு என்பது ஒட்டுமொத்தமாக எவையெவற்றை அடக்கியுள்ளது என்பது பற்றிய மேல்நாட்டறிஞர்களுடைய கருத்துக்களையும் சுருக்கமாகத் தொகுத்து வழங்கியுள்ளார்.*

***6143***

***யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் மடமும் மடக்கட்டடக் கலையும்.*** குமுதா சோமசுந்தரக் குருக்கள். கொழும்பு *12:* குமரன் புத்தக இல்லம், *361, 1/2,* டாம் வீதி, *1வது பதிப்பு, 2007. (*கொழும்பு *12:* குமரன் புத்தக இல்லம், *361, 1/2,* டாம் வீதி*).*
xii, *145 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-659-094-3.*

*இந்நூல் யாழ்ப்பாணத்து சமூக பொருளாதார பண்பாட்டுச் சூழமைவு என்பது எவ்வாறு தனித்துவமான தனக்கேயான மடக் கட்டடக்கலையினைத் தோற்றுவித்தது என்பதனையும் அதன் கட்டடக்கலைப் பெறுமானம் எவ்வாறானது என்பதனையும் நோக்க முயற்சித்துள்ளது. மடங்களும் அதன் வரலாற்றுப் பின்னணியும், யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் மடம், யாழ்ப்பாணத்து மடங்களின் கட்டடக் கலைப் பண்புகள், யாழ்ப்பாணத்து மடக் கட்டடங்களில் போஷகனின் வகிபாகம் ஆகிய நான்கு இயல்களில் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. மடங்கள் தொடர்பான புகைப்படங்களும், கள ஆய்வின்போது யாழ்ப்பாணத்தில் கிடைத்த மடங்களின் விரிவான பட்டியல் என்பனவும் ஆய்வுக்கு மெருகூட்டுகின்றன. குமுதா சோமசுந்தரக் குருக்கள் யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் கல்வி கற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறையில் தனது இளங்கலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர். தற்போது சென். ஜோன்ஸ் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.*

## *302 பெண்ணியம்*

***6144***

***கலாசாரமும் பெண் வெளிப்பாடும்.*** *கந்தையா சண்முகலிங்கம், தெ.மதுசூதனன் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 7: விழுது: ஆற்றல் மேம்பாட்டு மையம், 3 டொறிங்டன் அவெனியு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2006. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55 ஈ.ஏ.குரே மாவத்தை).*
*120 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 21x14 சமீ.*

*தமிழ் இலக்கியத்தில் பெண்நிலைவாத சிந்தனைகளின் வெளிப்பாடுகள் தொடர்பான சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகளினதும் புனைகதைகளினதும் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. வேதநாயகம்பிள்ளை, பாரதி, பாரதிதாசன், புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், அம்பை, உள்ளிட்ட பல இலக்கிய ஆளுமைகளின் எழுத்துக்கள் இவை. சொல்லும் பொருளும், பெண்நிலைவாதம் என்றால் என்ன? செல்லம்மாள், யுகசந்தி, ஆண்-பெண் உயிரியலும் சமூகவியலும், புனர், மாயூரம் ச.வேதநாயகம்பிள்ளையின் பெண் மானம்: இந்துச் சீர்திருத்த அரசியல், ஒரு உரையாடல், பாரதியின் எழுத்தக்களில் பெண் வெளிப்பாடு, பாரதிதாசனின் இயற்கைப் பாடல்களில் ஆண்-பெண் உறவு, தமிழ் யதார்த்த நாவல்களில் ஒடுக்கப்பட்டோரின் நிலையும் மேம்பாடும், பாடசாலைக் கல்வியில் பால்நிலை கருத்துக்களை உள்வாங்குவதன் அவசியம் ஆகிய 12 தலைப்புகளில் ஆக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 608282).*

***6145***

***சீடோ பற்றி பெண்கள் ஏன் அறிந்திருக்க வேண்டும்.*** *லக்மினி செனவிரட்ன. கொழும்பு 6: இலங்கை தேசிய சமாதான பேரவை, 12/14, புராண விகாரை வீதி, 1வது பதிப்பு, 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*(4), 22 பக்கம், சித்திரங்கள், அளவு: 15x21.5 சமீ., ISBN: 955-1274-13-X.*

*இலங்கை தேசிய சமாதானப் பேரவை, பிரபோதினி என்ற செயல்திட்டத்தினூடாக இலங்கையில் சமாதான நடைமுறையிலும் சிவில் சமூக செயற்பாடுகளிலும், பெண்களின் காத்திரமான பங்களிப்பை அதிகரிப்பதற்காக கடந்த 2003ஆம் ஆண்டிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் முன்னெடுப்புச் செய்தது. இச்செயற்திட்டமானது இரண்டரை வருடகாலப் பகுதியில் இலங்கையின் பத்து மாவட்டங்களில் முறையே யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை, மாத்தறை, நுவரெலியா, கண்டி, அனுராதபுரம், குருநாகலை ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. பிரபோதினி செயற்திட்டத்தினூடாக தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் செயற்பாட்டாளர்களின் ஆளுமையை கட்டியெழுப்பவதற்காக உரிமை அடிப்படை கல்வி, ஆற்றல் விருத்திக்கான பயிற்சிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. குறிப்பாக பெண் செயற்பாட்டாளர்களின் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பவதனூடாக தமது குடும்ப மற்றும் சமூக மட்டத்திலே தீர்மானமெடுக்கும் மட்டங்களில் பெண்கள் பங்களிப்புச் செய்வதற்கான ஆதரவு வழங்கப்பட்டது. கற்கையினூடாக பெண்களை வலுவூட்டும் நோக்கில் செயற்பட்டுவரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக மட்டக் குழுக்களைச் சார்ந்த பயிற்சியாளர்களுக்காக பல்வேறு*

கல்விசார் மற்றும் பயிற்சி நூல்களைத் தயாரித்து வழங்குவதில் பிரபோதினித் திட்டம் ஈடுபடுகின்றது. இவ்வகையில் உருவான நூல் இதுவாகும்.

**6146**

**சுனாமியினால் பாதிக்கப்பட்ட இலங்கை, மட்டக்களப்பு, டச்பாரைச் சேர்ந்த பறங்கியினப் பெண்கள்.** றோபேர்ட் குறூஸ் (ஆங்கில மூலம்), மு.பொன்னம்பலம் (தமிழாக்கம்), கொழும்பு 05: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 12, சுலைமான் டெரஸ், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ்).
(2), 46 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1772-54-3.

2004 டிசம்பர் 26 அன்று காலை 8.30க்கும் 9.30க்கும் இடையில் இலங்கையைத் தாக்கிய ஆழிப்பேரலையால் 35 500 பேர் கொல்லப்பட்டும் 800 000 பேர் உடனடி இடப்பெயர்வுக்கும் உள்ளாகினர். இலங்கையின் கிழக்குக் கரையில் மட்டக்களப்பு நகரின் டச்பார் எனப்படும் தனித்துவமான மதக் கலாச்சாரத்தைக் கொண்ட கடற்கரை வசிப்பிடப்பகுதி முற்றாகத் துடைத்தெறியப்பட்டது. 1500களில் இலங்கையில் குடியேறிய போர்த்துக்கீசர் வழிவந்தோரான மட்டக்களப்புப் பறங்கியர் வாழ்ந்த பிரதேசம் இது. மதிப்பீட்டின்படி ஒவ்வொரு வீட்டிலும் சராசரி 5 உறுப்பினர்களைக் கொண்ட 226 வீடுகள் அடித்துச்செல்லப்பட்டன. டச்பாரில் எழுப்பப்பட்ட நினைவுத் தூபியில் 163 பெயர்கள் காணப்படுகின்றன. இதில் 110 பேர் பறங்கிய சமூகத்தவர்கள். இதில் 82 பேர் (75 வீதத்தினர்) பெண்களாவர். இச்சிறு ஆய்வானது டச்பாரில் வசித்த பறங்கிப் பெண்கள் சுனாமியின் போதும் அதன் பின்னரும் முகம்கொடுத்த அனுபவங்களைத் தன் பார்வைக்கெடுக்கின்றது. நூலாசிரியர் றோபேர்ட் குறூஸ் களனியாவில் உள்ள துலானா ஆய்வு நிலையத்தின் ஊடக அலகின் பணிப்பாளர். The Tsunami-Affected Burgher Women of Dutch Bar, Batticaloa, Sri Lanka என்ற இவரது நூலின் தமிழாக்கமே இது. சமூக விஞ்ஞானிகள் சங்கத்தினால் (Social Scientist's Association) பிரசுரிக்கப்பட்டது.

**6147**

**தடைகளைத் தாண்டி : பெண்களின் இயலாற்றல்களை மேம்படுத்துதல் 1.** சாந்தி சச்சிதானந்தம். கொழும்பு 7: விழுது: ஆற்றல் மேம்பாட்டு மையம், 3 டொறிங்டன் அவெனியு, 1வது பதிப்பு, மார்ச் 2004. (கொழும்பு 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315 ஜம்பட்டா வீதி).
124 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x21.5 சமீ.

பெண்களின் ஆற்றல்களை ஏன் விருத்தி செய்யவேண்டும், கற்றலும் கற்பித்தலும்: பங்கேற்புமுறைப் பயிற்சிகளின் அடிப்படைக் கோட்பாடுகள், கற்றல் சூழ்நிலைகளை உருவாக்கும் விதங்கள், பயிற்சியாளர்களுக்கு இருக்கவேண்டிய தகைமைகள், பயிற்சியினைத் திட்டமிடுதலும் பாடவிதானங்களைத் தயாரித்தலும், பயிற்சி மாதிரி ஒன்றைத் திட்டமிடல், சில பயிற்சிப் பாடவிதானங்கள் ஆகிய ஆறு இயல்களில் இப்பயிற்சிக் கைநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. பின்னிணைப்புகளாக வாசிப்புத் துணையேடுகள் மூன்று இணைக்கப்பட்டுள்ளன. அவை பெண்ணியம் பற்றி நீங்கள் நினைத்த கேள்விகளும் அதற்கான பதில்களும், பெண்ணிய செயல்வாதம் பற்றி எழுப்பப்படும் சந்தேகங்கள், பெண்கள் செயற்படுவதற்கான வழிமுறைகளும் கருவிகளும் ஆகிய மூன்று தலைப்புகளில் தரப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 574514).

**6148**

**தாய் மகளுக்குத் தோழி.** வஸீரா ஹஸன். கொழும்பு 9: அல்-ஹஸனாத், 77, தெமட்டகொட வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2003. (கொழும்பு 13: கொம்பிரின்ட் சிஸ்டம், 334 ஏ, சிறில் சி.பெரேரா மாவத்தை).
xiv, 84 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-884-1-00-5.

இவ்வுரைகளில் ஒரு தாய், எவ்வாறு எதிர்காலத் தாயை உருவாக்கவேண்டும் என மிக அழகாகச் சித்திரித்திருக்கிறார். இஸ்லாத்தை தவறாக விளங்கிக்கொண்டதால் ஏற்படுத்தப்பட்ட பத்தாம்பசலிக் கொள்கைகளைக் கண்டித்து விலக்கும் அதே வேளை, இஸ்லாத்தைத் தம் பிள்ளைகளுக்கு முறையாகப் போதிக்க முன்வராத பெற்றோரையும் சாடுகின்றார். நவீன சிந்தனைகளுடன் இஸ்லாத்தை பிள்ளைகளிடம் சேர்ப்பிப்பதில் அன்னையருக்கு பல ஆலோசனைகளை

இத்தொகுப்பிலுள்ள 16 உரைச்சித்திரங்களிலும் விளக்கியிருக்கிறார். குழந்தையா குமரியா, பருவம் ஒரு பாடம், கற்றது கைம்மண்ணளவு, ஒரு முன்மாதிரி, சவாலே சமாளி, பிக்பொக்கட்காரி, காசா லேசா, பிரார்த்தனை பலிக்குமா, கற்றலும் ஒரு கலையே, சமைத்துப் பார்ப்போம் வாரீர், தொலைபேசியா தொல்லைபேசியா, காதல் காதல் காதல், துணிந்துநில் தொடர்ந்து செல். பாவம் இனிப் பகிடிவதை, உழைப்பும் ஓய்வும், தாயே உயிர்த்தோழி ஆகிய 16 தலைப்புகளில் இவை வழங்கப்பட்டுள்ளன. இவை முன்னர் அல்ஹஸனாத் (Al-Hasanath) சஞ்சிகையில் அவ்வப்போது வெளிவந்தவை. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 563770).

**6149**

**பண்பாடும் பெண்.** நூருல் அயின் நஜ்முல் ஹுசைன். கொழும்பு 14: ஸ்ரீலங்கா முஸ்லிம்கள் முன்னணி (Sri Lanka Muslims Front), 253, Layards Broadway, 1வது பதிப்பு, மார்ச் 1997. (கொழும்பு 12: டொப் பிரின்ட்ஸ்).
xviii, 19-78 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x13.5 சமீ.

சமூகவியல்சார்ந்த 30 குறுங்கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். 1975இல் ரஷீத் நூருல் அயின் என்ற பெயரில் எழுத்துலகில் அறிமுகமான இவர், மலையகத்தின் உடுதெனிய முஸ்லிம் கிராமத்தைச் சேர்ந்தவர். தினபதி-சிந்தாமணி பத்திரிகையின் மூலம் வளர்த்தெடுக்கப்பட்டவர். அங்கு நிருபராகவும், உதவி ஆசிரியராகவும் பணியாற்றியபோது சிந்தாமணியிலும், தினபதி இஸ்லாமியப் பூங்காவிலும் நிறைய எழுதியுள்ளார். பின்னாளில் அரசாங்க தகவல் திணைக்களத்திலும் பணியாற்றியவர்.

**6150**

**பெண்நிலைவாதமும் கோட்பாட்டு முரண்பாடுகளும்: ஒரு சமூகவியல் நோக்கு.** செல்வி திருச்சந்திரன். கொழும்பு: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 1வது பதிப்பு, ஜுன் 1998. (கொழும்பு 13: ஸ்பார்ட்டன் கிராப்பிக்ஸ் லிமிட்டெட், 154 Wolffendhal Street).
106 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22.5x14.5 சமீ.

இந்நூலில் பெண்ணிலைவாதக் கோட்பாடுகள், கற்பனாவாத சோஷலிசமும் பெண்ணிலைவாதத்தின் கற்பனாவாதங்களும், முற்போக்குவாத, தேசிய பால்நிலை உருவாக்கங்களும் அவற்றின் முரண்பாடுகளும், தேசியவாத, ஏகாதிபத்திய வாதங்களின் பெண்நிலைவாத முரண்பாடுகள் ஆகிய தலைப்புக்களிலான கட்டுரைகள் இத்தொகுப்பில் காணப்படுகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 517544).

**6151**

**பேரழிவுகளுக்குப் பெண்கள் முகம் கொடுத்தல்: தென்னாசிய அனுபவங்களும் சவால்களும்.** சரளா இமானுவல், சித்திரலேகா மௌனகுரு (தொகுப்பாசிரியர்கள்). மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், இலக்கம் 20, டயஸ் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
x, 168 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-8695-04-3.

2005ம் ஆண்டு ஜுலை மாதம் 15, 16ம் திகதிகளில் மட்டக்களப்பில் நடைபெற்ற "சுனாமிக்குப் பின்னரான மீள்கட்டுமானத்தின்போது பெண்களின் அக்கறைகள்: பொது உபாயங்களைத் திட்டமிடலும் வளங்களைப் பகிர்ந்துகொள்ளலும்" என்ற பொருளில் நடைபெற்ற தென்னாசியப் பெண்கள் மகாநாட்டில் வழங்கப்பட்ட கட்டுரைகளினதும் ஆவணங்களினதும் தமிழாக்கம். சுனாமிக்குப் பின்னரான சூழல் பற்றிய உரிமை அடிப்படையிலான அணுகுமுறை (சுனிலா அபயசேகர), பால்நிலை, அரசு மற்றும் சுனாமி மீள்நிர்மாணம்: இந்தியா, இலங்கைக்கு இடையிலான ஒப்பீட்டுப் பகுப்பாய்வு (ரீட்டா மன்சந்தா), சுனாமிக்குப் பின்னரான மீள்கட்டுமானப் பணிகளில் பால்ரீதியான கவனம் (ருத் மனோராமா), சுனாமி மறுவாழ்வுப்பணியில் அரசின் கொள்கைகளும் பெண்களின் நிலைப்பாடும் (எஸ்.சிவகாமி), சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களின் குடித்தனக் கணக்கெடுப்பு: இலங்கை, மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சில ஆரம்பகட்டத் தகவல் (சரளா இமானுவல்), பெண்களின் வாழ்வாதாரங்களுக்கு மதிப்பளித்தல் (ஷாலினி ஜாவர், சிந்து ஷாலி), பேரழிவிற்குப் பின்னரான சந்தர்ப்பங்களில் பெண்களின் செயல்வாதம் (சுமிகா பெரேரா),

மட்டக்களப்பில் சுனாமிக்குப் பின்னரான சூழலில் பெண்களின் கூட்டுச் செயல்வாதம் (சித்திரலேகா மௌனகுரு), சுனாமிக்குப் பின்னர் ஆச்சேயின் புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டுமானப் பணிகளில் பெண்களின் பங்களிப்பு (சித்தி மைசாரா), குஜராத்தில் அரச ஆதரவுடனும் உடந்தையுடனும் மனிதன் அநர்த்த நிலையை உருவாக்கினான்: 2002 குஜராத் மனிதப் படுகொலையும் தற்போதும் (ஷீபா ஜோர்ஜ்), பேரழிவிற்கான ஆயத்தநிலையில் பாலின விவாத விடயங்கள்: இலங்கை அனுபவம் (தனுஷா சேனநாயக்க), பேரழிவிற்குத் தயார் படுத்திக்கொள்ளும் செயற்பாட்டில் வலுவான உள்ளூர் மற்றும் பிராந்தியக் கொள்கைகளின் அவசியம் (அபிததுல் பாத்திமா) ஆகிய 12 ஆய்வுக் கட்டுரைகளும் விதப்புரையும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

***6152***

**வென்றெடுத்த உரிமைகள்: பாகம் 2.** செங்கொடி பெண்கள் இயக்கம். கண்டி: செங்கொடி பெண்கள் இயக்கம், 443/1/1 வில்லியம் கொபல்லாவ மாவத்த, 1வது பதிப்பு, 2010. (கண்டி: கிராப்பிக் லாண்ட்).
(8), 28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

Global Fund நிறுவனத்தின் நிதி உதவியுடன் தயாரிக்கப்பட்ட இந்நூல் இலங்கையில் பெண்கள் உரிமைகள் பற்றிய விளக்கத்தை வழங்குகின்றது. மலையகத் தொழிலாளப் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளிலிருந்து அவர்கள் விடுதலை பெறுவதற்கு பல வழிகள் இருக்கின்றன என்று கூறும் இந்நூல் அவ்வகையில் மலையகப் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு சட்டரீதியாக எவ்வாறான நிவாரணங்கள் காணப்படுகின்றன என்பதை இலகு நடையில் இந்நூல் சுருக்கமாக விளங்குகின்றது.

**மேலும் பார்க்க:** *6239, 6496, 6609, 6845, 6851*

*305.5 சாதியம்*

***6153***

**பஞ்ச கம்மாளர்.** இராசையா ஸ்ரீதரன். யாழ்ப்பாணம்: இராசையா ஸ்ரீதரன், 291 நாவலர் வீதி, ஆனைப்பந்தி, 1வது பதிப்பு, மே 2009. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் அச்சகம், நல்லூர்).
viii, 80 பக்கம், வண்ணத் தகடுகள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் வாழ்ந்துவந்த விஸ்வப் பிரம்மகுலத்தைச் சேர்ந்த உபதபாலதிபர் இராசையா-திருமதி இரத்தினம்மா தம்பதியினரின் இளைய புதல்வர் ஸ்ரீதரன், ஓர் ஆன்மீக எழுத்தாளரும் பத்திரிகையாளருமாவார். வில்லிசைக் கலைஞரும் சைவப்புலவரும், கவிமணி, மரபுக்கலைச்சுடர், கலைஞானச்சுடர், சிவநெறிக் கலாநிதி ஆகிய பட்டங்களையும் பெற்றவர். விஸ்வப்பிரம்மகுலத்தின் பெருமையையும் பஞ்ச கம்மாளர்களான கொல்லர் (இரும்பு), தச்சர் (மரம்), கன்னார் (செம்பு, பித்தளை), சிற்பி (கல்), தட்டார் (பொன்) ஆகியவர்களது தொழிற்சிறப்பையும், மனு, மய, துவஷ்டா, சிற்பி, விஸ்வக்ஞ ஆகிய அவர்களது வம்சப் பெருமைகளையும் பற்றிய விளக்கங்களையும் எடுத்துக்காட்டும் நூல் இதுவாகும்.

*306 கலாச்சாரம்*

***6154***

**இஸ்லாம் - முஸ்லிம் சமூகம் - முஸ்லிம் உலகம்: மதிப்பீடு.** கே.எம்.எச்.காலிதீன். கொழும்பு: அகில இலங்கை கதீப்மார்கள் சம்மேளனம், 1வது பதிப்பு, டிசம்பர் 1993. (கொழும்பு கிரசென்ட் பப்ளிக்கேஷன்ஸ் லிமிட்டெட்).
xii, 134 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

இஸ்லாத்தின் ஏகத்துவக் கோட்பாடு, இறை விசுவாசமே சாந்திக்கு வழி, மனிதகுல மீட்சிக்கு வழிவகுக்கும் இஸ்லாம், இனமோ, மொழியோ, தேசியமோ மனிதனை வேறுபடுத்த முடியாது, மனித குலத்தை சமத்துவப்படுத்தும் தொழுகை, செல்வத்தைத் தூய்மைப்படுத்தும் ஏழை வரி ஸகாத், ஸகாத் கணிப்பு பற்றிய சில விதிமுறைகள், மனித ஆளுமையைப் புனிதமாக்கும் நோன்பு, மனித குலத்துக்கு போதனையும் பயிற்சியும் வழங்கும் ஹஜ் பயணத்தின் சிறப்பு, இஸ்லாமிய அமைப்பில் அரசியல் ஒரு

*பிரிக்கமுடியாத அங்கம், பெண்களைப் பராமரிப்பது ஆண்களின் பொறுப்பு, இஸ்லாமிய அடிப்படைவாதம் சில குறிப்புகள், இஸ்லாமிய புத்தாண்டின் தத்துவங்கள், அறபுமொழி கட்டாயபாடமாக்கப்பட வேண்டும், மாறிவரும் கல்வித் திட்டததில் அறபு மொழியின் பங்கு, புதிய கல்வித் திட்டத்தில் இஸ்லாமிய நாகரீகத்தின் பங்கு, அஹதிய்யா இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும், பேராதனைப் பல்கலைக்கழகப் பள்ளிவாசல், மக்காவிலுள்ள இலங்கை விடுதி, இஸ்லாமிய வாழ்க்கைத் திட்டத்தின் மத்திய நிலையம் மக்கா மதீனா, சமுதாய வளர்ச்சியில் மஸ்ஜித்களின் பணி, ஹிஜ்ராவின் வரலாற்றுப் பின்னணி, இஸ்லாமிய உலகம் ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம், முஸ்லிம் உலகின் எழுச்சிக்கு வித்திட்ட இமாம் கொமெய்னி, சிந்தனையில் மாற்றம் தோன்றட்டும், கதிப்மார் சம்மேளனத்தின் பணி, கதீப்மார்களின் பணி மறுமலர்ச்சி பெறவேண்டும், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவைப் பலப்படுத்துவோம், இஸ்லாமிய சர்வதேசத்துவம் பற்றிய கருத்தரங்கு, அல் இஸ்லாம் ஓர் அறிவியல் நோக்கு: ஓர் அறிமுகம், புவியியல்துறைக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு, இஸ்லாமிய நிறுவனங்களின் ஊடுருவல் ஆகிய தலைப்புகளிலான கட்டுரைகள் நான்கு பிரிவாக இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 580982).*

***6155***

***மட்டக்களப்பில் இந்து சமய கலாச்சாரம்.*** எஸ்.தில்லைநாதன். சென்னை 17: மணிமேகலைப் *பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2006. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆ/ப்செட்)*
***236** பக்கம், விலை: இந்திய ரூபா **60.**, அளவு: **18x12.5** சமீ.*

*மட்டக்களப்பு பிரதேச கண்ணோட்டம், இந்து சமய அனுட்டானங்கள், வழிபாடுகள் ஆகிய மூன்று பகுதிகளில் வழங்கப்பட்டுள்ள இவ்வாய்வின் முதற்பகுதியான மட்டக்களப்புப் பிரதேச கண்ணோட்டத்தில் முற்குகர், வெள்ளாளர், சீர்பாதர், கரையார் ஆகிய குடிகளைப்பற்றிய விரிவான அறிமுகம் தரப்பட்டுள்ளது. 2வது பகுதியான இந்து சமய அனுட்டானங்களில், பதினாறு அனுட்டானங்கள், ருது சங்கமனம், மரபுவழித் திருமணச்சடங்கு, வேதாகம வழித் திருமணக்கிரியை, மரணச்சடங்கு, ஆகமவழி தகனக்கிரியை, சிரார்த்தம், தீட்டு (ஆசௌசம்), ஆகியன விபரிக்கப்பட்டுள்ளன. மூன்றாவது பகுதியில் சக்தி வழிபாடு (அம்மன் சடங்கு, கொம்பு முறித்தல்), வைரவர் வழிபாடு, பிள்ளையார் வழிபாடு, முருக வழிபாடு, சிவ வழிபாடு, விஷ்ணு வழிபாடு, ஐயனார் வழிபாடு, வதனமார் வழிபாடு, நாக வழிபாடு, பெரியதம்பிரான் வழிபாடு, சூரிய வழிபாடு ஆகியன பற்றி விளக்கப்பட்டுள்ளன. துறைநீலாவணையைப் பிறப்பிடமாகவும் மண்டூரை வாழ்விடமாகவும் கொண்டவர் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய சைவப்புலவர் சா.தில்லைநாதன் அவர்களாவார்.*

**மேலும் பார்க்க:** *6144*

*310. புள்ளிவிபரவியல்*

**மேலும் பார்க்க:** *6248*

*320 அரசறிவியல்*

***6156***

***அரசறிவியல்: ஓர் அறிமுகம்.*** சி.அ.யோதிலிங்கம். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், *361, 1/2,* டாம் வீதி, 1வது பதிப்பு, *2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*
xvi, ***272** பக்கம், விலை: ரூபா **350.**, அளவு: **21.5x14.5** சமீ.,* ISBN: ***978-955-659-071-4.***

*நூலாசிரியரின் எட்டாவது நூல் இது. க.பொ.த. உயர்தர மாணவர்களின் பயன் கருதி வெளியிடப்பட்டுள்ள இந்நூல் அரசறிவியல் பாட வினாத்தாளில் பகுதி ஒன்றில் அடங்கும் பாடப் பரப்பினை உள்ளடக்கியது. இந்நூலில் அரசறிவியலின் இயல்புகள், அரசறிவியல் அணுகுமுறைகள், அரசு-அரசாங்கம் பற்றிய விளக்கங்கள், அரசாங்க முறைகள், அரசியல் யாப்புகள், உரிமைகள், சுதந்திரம், சமத்துவம், இறைமை, வலுவேறாக்கம், பிரதிநிதித்துவ முறைகள், அரசியற்கட்சி முறை,*

அமுக்கக் குழுக்கள், பொதுசன அபிப்பிராயம் என்பன பற்றி இயன்றளவு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் யாழ்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல்துறையில் முதுமாணிப் பட்டத்தினையும், இலங்கைச் சட்டக் கல்லூரியில் சட்டத்தரணிப் பட்டத்தையும் பெற்றவர். கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர்மடத்தில் ஆசிரியராகப் பணியாற்றும் இவர், இனங்களுக்கிடையே சமாதானத்திற்கான ஆய்வகத்தின் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றுகின்றார்.

*6157*

***அரசறிவியல் மூல தத்துவங்கள்.*** *அம்பலவாணர் சிவராஜா. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 2வது மீளச்சுப் பதிப்பு, 2008, 1வது பதிப்பு, 1987, 2வது பதிப்பு, 2000. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*

xii, *177 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN*: 955-9429-70-1.*

*பேராசிரியர் அ.சிவராஜாவின் இரண்டாவது நூல் இது. க.பொ.த. உயர்தரத்திலும், பல்கலைக்கழக முதல்வருடத்திலும் பயிலும் மாணவர்களுக்கேற்ப உருவாக்கப்பட்ட நூல். இம்மாணவர்கள் கற்கவேண்டிய பாடநெறியில் உள்ள அரசின் தோற்றம், தன்மை, தேவை என்பன முதல், இன்றைய அமுக்கக் குழுக்கள், சமஷ்டி ஒழுங்கு முறைகள், அதிகார வேறாக்கம், போன்ற பண்புகள் ஈறாக அரசியல் மூலதத்துவக் கொள்கைகளைச் சுருக்கமாகவும், கருத்துக் குழைவுகள் ஏற்படாவண்ணமும் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.*

*6158*

***அரசியல் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், பொதுசன அபிப்பிராயம்.*** *வேலுப்பிள்ளை குணரத்தினம். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*

x, *102 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN*: 978-955-659-181-1.*

*அரசியற் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், பொதுசன அபிப்பிராயம் ஆகியவை ஒரு ஜனநாயக நாட்டின் நல்லாட்சிக்கான காரணிகளாகும். இவை ஆட்சியாளரைத் தீர்மானிப்பதற்கும், அரசாங்கத்தின் உறுதித் தன்மை, பலம், பலவீனம் என்பவற்றை மதிப்பிடுவதற்கும் கட்சி பற்றிய பொது மதிப்பீட்டை மேற்கொள்வதற்கும் துணைபுரிகின்றன. இந்நூல் அத்தகைய அரசியற்கட்சிகள், அமுக்கக்குழுக்கள், பொதுசன அபிப்பிராயம் அகியவற்றை கோட்பாட்டுரீதியாக ஆய்வு செய்கின்றது. பிரித்தானியா, அமெரிக்கா, இந்தியா, பிரான்ஸ், இலங்கை ஆகிய தெரிவுசெய்யப்பட்ட சில நாடுகளில் இவ்விடயங்கள் எவ்விதம் பிரயோகிக்கப்படுகின்றன என்பதையும் எடுத்துக்கூறுகின்றது. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் தனது இளங்கலைமாணி சிறப்புப் பட்டத்தினையும், முதுதத்துவமாணிப் பட்டத்தையும் பெற்றவர். கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞானத்துறை தலைவராகப் பணியாற்றுகின்றார்.*

*6159*

***அரசியல் விஞ்ஞானம்: அரசியல் செயற்பாடும், அரசியல் செயல்முறையும்.*** *தனபாலசிங்கம் கிருஷ்ணமோகன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, யுஜீ 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை).*

*156 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5*x*15 சமீ.,* ISBN*: 978-955-1857-61-5.*

*இந்நூல் மூன்று பிரிவுகளில் அரசியல் செயற்பாடுகளையும் செயல்முறைகளையும் இனம்காணுகின்றது. பொதுக் கொள்கை வகுத்தலும், பொது நிர்வாகமும் என்ற முதலாவது இயலில் பொதுக்கொள்கை, பொது நிர்வாகவியலின் இயல்புகள், பொது முகாமைத்துவம் ஆகியன பற்றிக் கூறப்படுகின்றது. மோதலும், மோதலைத் தீர்த்தல் தொடர்பான எண்ணக் கருக்களும் என்ற இரண்டாவது பிரிவில் மோதலை விளங்கிக்கொள்ளல், மோதலும் வன்முறையும், மோதலும் அஹிம்சையும், மோதலைத் தடுத்தல், மோதலைத் தீர்த்தல், மோதல் முகாமைத்துவம், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், சமாதானக் கற்கை ஆகியன பற்றி விளக்கப்படுகின்றது. மூன்றாவது பிரிவான சர்வதேச அரசியலை விளங்கிக்கொள்ளல் என்ற பிரிவில் சர்வதேச அரசியல், வெளிநாட்டுக்*

கொள்கை, யுத்தம், கூட்டுப் பாதுகாப்பு, அதிகாரச் சமநிலை, சர்வதேசச் சட்டம், ஆயுதக் கட்டுப்பாடும் ஆயுதக் களைவும் ஆகிய விடயங்கள் பற்றிப் பேசப்படுகின்றன. நூலாசிரியர் மட்டக்களப்பில் செங்கலடி, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறையின் முதுநிலை விரிவுரையாளராவார்.

***6160***

***அரசியல் விஞ்ஞானம்: அரசு பற்றிய கற்கையும், அரசை இனங்காணலும்.*** *தனபாலசிங்கம் கிருஷ்ணமோகன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, யுஜீ 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை).*

*136 பக்கம், விலை: ரூபா 360., அளவு: 21.5x15 சமீ.,* ISBN: *978-955-1857-60-8.*

*இந்நூல் மூன்று பிரிவுகளில் அரசியல் விஞ்ஞானத்தை இனம்காணுகின்றது. அரசியல் விஞ்ஞானத்தை இனம்காணல் என்ற முதலாவது இயலில் அரசியல் விஞ்ஞானத்தின் இயல்புகள், அதன் செயற்பரப்பெல்லை, அதைக் கற்பதற்கான அணுகுமுறை, ஏனைய விஞ்ஞானப் பாடங்களுடனான ஒப்புவமை ஆகியவற்றை விளக்குகின்றது. அரசு பற்றிய கற்கையும், அரசை இனம்காணலும் என்ற இரண்டாவது பிரிவில் அரசின் தோற்றமும் வளர்ச்சியும், அரசினை இனம்காண்பதற்கான அடிப்படைகள், அரசுடன் தொடர்பான எண்ணக்கருக்கள் என்பன பற்றிக் கூறுகின்றது. அரசு பற்றிய கோட்பாடுகளை விளங்கிக்கொள்ளல் என்ற மூன்றாவது இயலில், தெய்வீக வழியுரிமைக் கோட்பாடு, சமூக ஒப்பந்தக் கோட்பாடு, தாராண்மைக் கோட்பாடு, பாசிசக் கோட்பாடு, மார்க்சிசக் கோட்பாடு, அரசு பற்றிய பலக் கோட்பாடு, படிமுறை வளர்ச்சிக் கோட்பாடு, தந்தைவழி தாய்வழிக் கோட்பாடு ஆகிய கோட்பாடுகள் பற்றி விளக்குகின்றது. நூலாசிரியர் மட்டக்களப்பில் செங்கலடி, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறையின் முதுநிலை விரிவுரையாளராவார்.*

***6161***

***இணக்கப்பாட்டின் மூலம் சமாதானத்தை நோக்கி: மோதல் தீர்வு பற்றிய அண்மைக்கால சர்வதேச அனுபவங்கள்.*** *ரஞ்சித் அமரசிங்க (தொகுப்பாசிரியர்). கொழும்பு 3: சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான பிரிவு, அரசியலமைப்பு அலுவல்கள் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, இல 310, காலி வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 10*: Print and Print Graphics Ltd., *இல. 6, போதிராஜராம மாவத்தை, மாளிகாவத்தை).*

*194 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *978-955-1194-09-03.*

*இந்தோனேஷியக் குடியரசின் அரசாங்கத்திற்கும் சுதந்திர ஆச்செ இயக்கத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் (ரஞ்சித் அமரசிங்க), சியாரா லியோன் அரசாங்கத்திற்கும் சியாரா லியோன் புரட்சிகர ஐக்கிய முன்னணிக்குமிடையில் இடம்பெற்ற லோமே சமாதான உடன்பாடு (ரஞ்சித் அமரசிங்க), பங்களாதேஷ் மக்கள் குடியரசினால் அமைக்கப்பட்ட சிட்டகொங்கின் மலைப்பாங்கான நிலப்பரப்புகள் பற்றிய தேசியக் குழுவிற்கும் பர்பாத்திய சட்டகிராம் ஜனசங்கதி சமித்திக்கும் இடையிலான சமாதான உடன்பாடு (ரஞ்சித் திக்வெல்ல, ரேணுக பிரியந்த), நேபாளம் 2006 சமாதான ஒப்பந்தம் (லக்சிறி பர்ணாந்து), பெரிய பிரித்தானியாவின் ஐக்கிய இராச்சிய, வட அயர்லாந்து அரசாங்கத்திற்கும் அயர்லாந்து அரசாங்கத்திற்கும் இடையிலான உடன்பாடு (ரஞ்சித் அமரசிங்க) ஆகிய கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 629087).*

***6162***

***இலங்கை முஸ்லிம்களின் அரசியல் இதயம்: அம்பாறை மாவட்டம்.*** *ரவூப் ஹக்கீம். கொழும்பு 2: முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகம், தாருஸ் சலாம், வொக்சோல் வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2004. (கொழும்பு 12: கொம்பிரின்ட் சிஸ்டம்).*

*(2), 46 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*2001ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினூடாகப் போட்டியிட்டு வெற்றியீட்டிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தறைமுக அபிவிருத்தி கப்பற்றுறை கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் சமய விவகார அமைச்சராகப் பணியாற்றிய காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற சில விழாக்களிலும் கூட்டங்களிலும் நிகழ்த்திய*

*உரைகளின் தொகுப்பு இதுவாகும். இந்நூலின் மேலட்டையில் "தலைவரின் உரைகளிலிருந்து... சமகால அரசியல் சிந்தனைகள்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது.*

***6163***

***இலங்கையின் தேர்தல் தொடர்பான அரசியல் வன்செயல்கள் பற்றிய வரலாறு.*** *வெளியீட்டுக்குழு. கொழும்பு 6: சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு, 93/10 துட்டுகெமுனு வீதி, இணை வெளியீடு, ஜப்பான்: உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி, 1வது பதிப்பு, 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.*

*சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டின் வெளியீடான இச்சிறு நூலில் எமது நாட்டு அரசியல் செயற்பாடுகளின்-குறிப்பாக தேர்தல் வன்முறைகள் பற்றிய சுருக்கமான தகவல்கள் உள்ளடங்கியுள்ளன. வன்முறையற்ற அரசியலைக் குறிக்கோளாகக் கொண்ட செயற்பாடுகளிலே ஈடுபடுவதற்கு பிரசைகளை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டு இதுவரை பிரதேச மட்டத்தில் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பெற்றுள்ளன. ப.்.ப்ரல் அமைப்பும் ஏனைய சிவில், சமூக அமைப்புகளும் ஊடகங்களும் தொடர்பாடல் பிரிவுகளும் ஆராய்ச்சிக் குழுக்களும் இச்செயற்பாட்டை இறுதிவரை முன்னோக்கிக் கொண்டுசெல்ல அர்ப்பணிப்புடன் இயங்கினர். அம்முயற்சியின் ஒரு அங்கமாகவே இச்சிறு நூல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 599958).*

***6164***

***இலங்கையின் பத்தாவது பொதுத் தேர்தலும் (1994) முஸ்லிம்களும்: ஒரு கண்ணோட்டம்.*** *எம்.எல்.ஏ.காதர். பேராதனை: இலங்கை அரசியல் ஆய்வுக் கழகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

xx, *194 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *955-8310-00-*X.

*ஐந்து அத்தியாயங்களைக்கொண்ட இந்நூலில் தேர்தற்களம் என்ற முதலாம் இயலில் அரசியற்பண்பு-அன்றும் இன்றும், பரம்பரை முஸ்லிம்களும், பிரதிநிதித்துவமும், விகிதசம பிரதிநிதித்துவமும் முஸ்லிம்களும், மேல்வகுப்புத் தலைமைத்துவம், முஸ்லிம்களின் ஒற்றுமையின் நோக்கம் ஆகிய விடயங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. அபேட்சகர் நியமனம் என்ற இரண்டாம் இயலில் தேர்தற்களமும் முஸ்லிம் வேட்பாளர்களும், சந்திரிகா-அஷ்ரப் ஒப்பந்தமும் அதன் விளைவுகளும், மறைந்திருக்கும் மற்றுமொரு சிறப்பம்சம், முஸ்லிம் தலைமைத்துவத்தின் நிலைப்பாடு, தனித்துவ அரசியற் பாணியும் பொது மக்களும் ஆகிய தலைப்புகளின்கீழ் ஆராயப்பட்டுள்ளன. தேர்தற் பிரச்சாரம் என்ற மூன்றாம் இயலில் தேர்தற் பிரச்சாரத்தின் நோக்கம், முஸ்லிம் காங்கிரசின் தேர்தல் மேடை, முஸ்லிம் பிரச்சினைகளும் வேட்பாளர்களின் பங்களிப்பும், ஐக்கிய தேசியக் கட்சி முஸ்லிம் அபேட்சகர்களின் தேர்தல் மேடை ஆகிய விடயங்களும், தேர்தல் மாவட்டங்கள் என்ற நான்காம் இயலில் புதிய சவால்கள், அனுராதபுர மாவட்டம், குருநாகல் மாவட்டம், புத்தளம் மாவட்டம், பொலநறுவை மாவட்டம், அம்பாறை மாவட்டம் ஆகிய தனித்தனி தலைப்புகளிலும் விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. இறுதி இயலான முஸ்லிம்களின் பிரச்சினை என்ற தலைப்பில் பாராளுமன்ற பிரதிநிதித்துவமும் முஸ்லிம் பிரச்சினையும், தேர்தல் மாவட்டமும் முஸ்லிம்களும், கண்டி ஆண்கள் பாடசாலை ஆகிய மூன்று தலைப்புகளில் முஸ்லிம்களின் பிரச்சினை பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது. நூலாசிரியர் (ஒலுவில்) தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராகப் பணியாற்றுகிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 532797).*

***6165***

***உலக அரசியலும் நடைமுறை பிரச்சினைகளும்.*** *சி.புஷ்பராஜ். பேராதனை: தகவல்-நலன்புரி அமைப்பு, சீ 72, பல்கலைக்கழக விடுதி, மீவதுர, 1வது பதிப்பு, ஏப்ரல் 2008. (கண்டி: வினோ பிரின்டெல்).*

xiv, *136 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 22x15 சமீ.,* ISBN: *978-955-50958-0-8.*

இந்நூல் பேராதனை பல்கலைக்கழக கலைப்பீடத்தின் அரசறிவியல் விஞ்ஞானத்துறையின் இறுதி வருட மாணவனான சி.புஷ்பராஜ் எழுதியது. பயங்கரவாதம், மதவாத அரசியல், நவீன அரசமுறைமையும் மனித உரிமைகளும், உலக முறைமையில் பெண்களின் நிலை, உலகப் பொருளாதாரமும் அரசியலும், உலக நாடுகளும் சமூகப் பிரச்சினைகளும், உலகை அச்சுறுத்தும் சூழல் மாசு, பாதுகாப்பினை பலப்படுத்தும் அணுவாயுதங்கள், தென்னாசியாவும் உலக அரசியலும் ஆகிய 10 பிரிவுகளின்கீழ் சமகால உலக அரசியல் அலசப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 618734).

**6166**

**எனது நோக்கில் இலங்கைப் பாராளுமன்றம்.** செல்லப்பா நடராசா. கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், இல.7, 57ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1986. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
xviii, 150 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 18x12 சமீ.

இந்நூலாசிரியர் இலங்கையின் பாராளுமன்றத்தின் (கோட்டே) சிரேஷ்ட ஹன்சார்ட் அறிக்கையாளராகப் பணியாற்றியவர். "மெழுகுதிரி வெளிச்சத்தில் நிகழ்ந்த பாராளுமன்றக் கூட்டம்" என்ற தலைப்பில் தனது முதலாவது கட்டுரையை 1964ம் ஆண்டில் தினகரன் பத்திரிகையின் வாரவெளியீட்டில் வழங்கியிருந்தார். தொடர்ந்தும் இலங்கைப் பாராளுமன்றத்தின் மரபுகளையும் நடைமுறைகளையும் உள்வீட்டுப் பிள்ளையாகவிருந்து இலக்கியச் சுவையுடன் எழுதியுள்ளார். அவற்றில் 20 தேர்ந்த கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 410102).

**6167**

**ஒப்பியல் அரசாங்கம்.** சி.அ.யோதிலிங்கம். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2006. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
251 பக்கம், விலை: ரூபா 295., அளவு: 21.5x14 சமீ.

இந்நூலில் அமெரிக்கா, பெரிய பிரித்தானியா, இந்தியா, பிரான்ஸ், சோவியத் யூனியன் ஆகிய நாடுகளின் அரசியல் யாப்புமுறைகள் பற்றியும் அதன் சாதக பாதகங்கள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளன. இன்று இலங்கையில் அரச அறிவியல் துறையில் புலமைபெற்ற தமிழர்களுள் யோதிலிங்கம் கணிப்புப் பெற்றவர். இந்நூலின் நோக்கம் இரண்டு தளங்களை நோக்கி விரிவுபடுகின்றது. ஒன்று அரசறிவியல். மற்றது இலங்கையின் இன நெருக்கடி அரசியலை உள்வாங்கிப் பிரயோகிப்பது சம்பந்தமானது. மாணவர்களுக்கு ஒரு நிலைப் பாடப்புத்தகமாகவும், உசாத்துணை நூலாகவும் அமைகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 604185).

**6168**

**சமஷ்டி எண்ணக்கரு.** எஸ்.சிவகுருநாதன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 7: சமஷ்டி ஆட்சிகளின் மன்றம் (Forum of Federations), மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 24/2, 28ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2005. (கொழும்பு 10: குளோப் பிரிண்டிங் வேர்க்ஸ்).
164 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ., ISBN: 955-8037-82-6.

இலங்கை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், பொது மக்களின் கொள்கைகள் தொடர்பான விவாதங்களுக்கு சிவில் சமூகத்தின் ஒத்துழைப்பைப் பலம்மிக்கதாக்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன் அமைக்கப்பட்ட ஒரு நிறுவனம். இது ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றினூடாக அரச நிர்வாகத்திலும் மற்றும் மோதல் தவிர்ப்பிற்குரிய பிரச்சினைகளிலும் தனது கவனத்தைச் செலுத்துகின்றது. இந்தப் பின்னணியில் சமஷ்டிபற்றிய பன்னாட்டறிஞர்களின் கட்டுரைகளை இத்தொகுப்பில் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவின் அணிந்துரையுடன் வெளியிட்டுள்ளது. இதில் சமஷ்டி எண்ணக்கருவின் புத்தெழுச்சி (பொப்ரே), கனேடிய சமஷ்டி ஓர் அறிமுகம் (டேவிட் ஆர். கமரன்), இந்திய சமஷ்டியின் மாதிரி (ரேக்கா சக்சேன), பெல்ஜியத்தின் சமஷ்டி முறைமை (ஜொஹான் பொயிறியர்), சுவிட்சர்லாந்தின்

சமஷ்டிமுறை (ஜொஹான் பொயிறியர்), சமஷ்டி-மூடநம்பிக்கைகளும் யதார்த்தமும் (ரொஹான் எதிரிசிங்க) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

**6169**

**சமாதான ஆதரவுக்குழு சகல அரசியல் கட்சிகளுக்கும் ஒரு பகிரங்கக் கடிதம்.** சமாதான ஆதரவுக்குழு. கொழும்பு 7: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 3, 2/3 பிளவர் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2001. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).
20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இலங்கையில் இடம்பெற்ற 2001 பொதுத் தேர்தலின் முன்னோடியாக இலங்கையின் நிரந்தர சமாதானத்துக்கான ஒரு நிகழ்ச்சிநிரலாக சமாதான ஆதரவுக் குழுவினரால் முன்மொழியப்பெற்ற பகிரங்கக் கடிதம் இதுவாகும். 30.10.2001 அன்று சுனிலா அபயசேகர, சுனில் பஸ்ரியான், ராதிகா குமாரசுவாமி, சுனந்த தேசப்பிரிய, ரொஹான் எதிரிசிங்க, கேதீஸ்வரன் லோகநாதன், ஜெஹான் பெரேரா, பாக்கியசோதி சரவணமுத்து, ஜீவன் தியாகராஜா, ஜோ வில்லியம், ஜாவிட் யூசுப் ஆகிய பதினொரு சமூகவியலாளர்கள் கையொப்பமிட்டு இவ்வறிக்கையைத் தயாரித்திருந்தனர். அதன் நூலுருவே இதுவாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 546455).

**6170**

**சர்வதேச அரசியல் சில பார்வைகள்.** கே.ரீ.கணேசலிங்கம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
80 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1857-77-6.

மேற்கு-இந்திய-சீன முரண்பாடும் இலங்கை அரசியலும், நிதி நெருக்கடியும் உலக அரசியலும், உலக நாடுகளும் காபன் அரசியலும் கோபன்ஹேகன் மாநாடும், தென்னாசிய நாடுகள் எதிர்கொள்ளும் சவால்களும் இந்தியாவின் வளர்ச்சியும் ஆகிய நான்கு இயல்களை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. கே.ரீ.கணேசலிங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார். இந்நூலுக்குரிய ISBN இலக்கம் 978-955-1857-74-5 என தவறுதலாக வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

**6171**

**சுயநிர்ணய உரிமையில் முஸ்லிம்கள், மலையக மக்கள்.** இமயவரம்பன். சென்னை 600002: புதிய பூமி வெளியீட்டகம், சவுத் ஏஷியன் புக்ஸ், 6/1, தாயார் சாஹிபு 2வது சந்து, 1வது பதிப்பு, மார்ச் 1994. (சென்னை 600020: இராசகிளி பதிப்பகம்).
60 பக்கம், விலை: இந்திய ரூபா 8, அளவு: 18x12.5 சமீ.

இலங்கையில் கடந்த இரு தசாப்தங்களாகக் கூர்மையடைந்து வந்துள்ள தேசிய இனப்பிரச்சினையானது இன்று எரிந்துகொண்டிருக்கும் ஒன்றாகி நிற்கிறது. இப்பிரச்சினையின் மத்தியில் சுயநிர்ணயஉரிமை, பிரிந்து செல்லுதல், தேசியவாதம் பற்றிய விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. இச்சூழலிலேயே மார்க்சிய அடிப்படையில் சமகால நோக்கில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. தேசிய இனப் பிரச்சினையில் முஸ்லிம்களினதும், மலையக மக்களினதும் தனித்துவமான அம்சங்கள் எவ்வகையிலும் புறக்கணிக்கப்படமுடியாதவை என்பதை வலியுறுத்தும் நோக்கில் இக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 460894).

**6172**

**தேர்தல் முறைகளும் அவற்றின் பரிமாணங்களும்.** கனகையா இரகுநாதன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
xii, (4), 101 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-141-9.

*இன்றைய உலகில் ஜனநாயகத்துக்குச் செயலுருக்கொடுக்கும் கருவியாகத் தேர்தல்கள் விளங்கிவருகின்றன. இந்நூலில் உலகளாவிய தேர்தல் முறைகள் வகைப்படுத்தப்பட்டு அவற்றின் பண்புகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. தேர்தல் முறைகள்: ஓர் அறிமுகம், பிரதிநிதித்துவ அரசாங்க முறைக்கான சில அடிப்படைகளும் அவற்றின் வெவ்வேறு வகைகளும், தேர்தல் முறைகளின் வகைகள், பொருத்தமான தேர்தல் முறைகள் தொடர்பான சில கருத்துகளும் முடிவுரையும் ஆகிய நான்கு தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது. பின்னிணைப்பாக சுதந்திர அரசுகளதும் அவற்றின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களினதும் தேர்தல் முறைகள் (1997), உலகத் தேர்தல் முறைகளும் அவற்றைப் பின்பற்றும் நாடுகளின் எண்ணிக்கையும், தேர்தல் முறைகளின் பிரதேச ரீதியான பங்கீடு ஆகிய மூன்று அட்டவணைகள் காணப்படுகின்றன. க.இரகுநாதன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணிப் பட்டத்தையும், முது தத்துவமாணிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டபின் அதே பல்கலைக்கழகத்தில் அரசறிவியற்துறையில் முதுநிலை விரிவுரையாளராக கடமையாற்றிவருகின்றார். இவர் தனது கலாநிதிப் பட்டத்தினை புதடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

***6173***

**பாராளுமன்றத்தில் ரவுப் ஹக்கீம்.** *ரவுப் ஹக்கீம். கண்டி: கண்டி மாவட்ட அரசியல் ஆய்வகம், 3/10 ஏ.ஏ.தர்மசேன மாவத்தை, 1வது பதிப்பு, ஜுன் 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*41 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.*

*கண்டி மாவட்ட முஸ்லிம்களுக்கு காணிப்பகிர்வில் அநீதி இழைப்பு, கலகெதரவில் இனவெறியாட்டம்: கலவரங்களைத் தூண்டுவது யார்? உடுநுவர முஸ்லிம்களைக் கூறுபோட அனுமதிக்கமுடியாது, அரச சேவைக்கு ஆட்சேர்ப்பில் இன விகிதாசாரம் பேணப்படவேண்டும், இனவாதிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகும் முஸ்லீம்கள், முஸ்லிம்களின் கல்வி மறுமலர்ச்சிக்கு வழிகோலிய கலாநிதி பதியுதீன் மஹ்முத், உரிமைகள் மீறப்படும்போது தட்டிக்கேட்போம் ஆகிய தலைப்புகளில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான ரவூப் ஹக்கீம் அவர்களின் பாராளுமன்ற உரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தாபகரான அமரர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின் அடியொற்றி வளர்ந்தவர் ரவுப் ஹக்கீம். கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டி நகரில் 13.4.1960 அன்று பிறந்தவர் இவர். 1984இல் உயர்நீதிமன்ற சட்டத்தரணியாகப் பணியாற்றியவர்.*

***6174***

**புது யுகத்தை நோக்கி.** *எம்.எச்.எம்.அஷ்ரப் (ஆங்கில மூலம்), ஏ.எம்.எம். ஹாஸிம் (தமிழாக்கம்). கொழும்பு 2: தேசிய ஐக்கிய முன்னணி வெளியீட்டகம், 53, வொக்சோல் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜுலை 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
vi, *30 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 21x13.5 சமீ.*

*1999ம் ஆண்டின் வரவு-செலவுத்திட்ட விவாதத்தின்போது கௌரவ அமைச்சரும், தேசிய ஐக்கிய முன்னணி ஸ்தாபகரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவருமான எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் 12.11.1998 அன்று ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.*

***6175***

**மோதல் தீர்வு எண்ணக் கருக்கள்.** *எஸ்.ஐ.கீதபொன்கலன். இலங்கை: சமாதான செயன்முறையின் தகவல் திறனை வலுவூட்டும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட இலங்கைக் கிளையின் சிறுநிதித் திட்டம், 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 13:* Dreamland Printers, *இல.139* சேர் *ரத்னஜோதி சரவணமுத்து மாவத்தை).*
*(6), 34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.*

*சமாதான செயன்முறையின் தகவல் திறனை வலுவூட்டும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட இலங்கைக் கிளையின் சிறுநிதித் திட்டத்தின் (*Strengthening Information capacities for the peace process: Small Grants Programme of the United Nations development Programme, Sri Lanka*) அனுசரணையுடன் உருவாகிய இந்நூலில், அறிமுகம், மோதல் தீர்வு, சமாதானம், மோதல் தீர்வு அணுகுமுறைகள், நலன் அடிப்படை மோதல் தீர்வு, சமாதானக் கட்டுமான மட்டங்கள் ஆகிய*

*தலைப்புக்களில் சமூக மோதல்கள் தீர்வு எண்ணக்கருக்கள் அணுகப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 611067).*

***6176***

**மோதல் தீர்வும் சமாதான செயன்முறைகளும்.** *எஸ்.ஐ.கீதபொன்கலன். இலங்கை: சமாதான செயன்முறையின் தகவல் திறனை வலுவூட்டும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட இலங்கைக் கிளையின் சிறுநிதித் திட்டம், 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 13:* Dreamland Printers, *இல.139 சேர் ரத்னஜோதி சரவணமுத்து மாவத்தை).*
***(2), 34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.***

*சமாதான செயன்முறையின் தகவல் திறனை வலுவூட்டும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட இலங்கைக் கிளையின் சிறுநிதித் திட்டத்தின் (*Strengthening Information capacities for the peace process: Small Grants Programme of the United Nations development Programme, Sri Lanka*) அனுசரணையுடன் உருவாகிய இந்நூலில், அறிமுகம், சமாதான செயன்முறை, முன்-பேச்சுவார்த்தைக் காலம், நேரடிப் பேச்சுவார்த்தைகள், பேச்சுவார்த்தை வழிகாட்டி, பின்-பேச்சுவார்த்தைக் காலம், முடிவுரை ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 611062).*

***6177***

**விடுதலை.** *அன்ரன் பாலசிங்கம். (புனைபெயர்: பிரம்மஞானி). லண்டன்: பெயர்மக்ஸ் பதிப்பகம், த.பெ.எண் 2454, மிச்சம், சறே* CR4 1WB, *1வது பதிப்பு, நவம்பர் 2003. (*Surrey CR4 3LJ: The Print, 45 C, Crusoe Road, Mitcham*).*
***256 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 9.50, அளவு: 21x15 சமீ.,*** ISBN: ***1-903679-04-4.***

*யாழ்ப்பாணத்திலிருந்து 1990களில் கருணாகரனை ஆசிரியராகவும், புதுவை இரத்தினதுரையை நிர்வாக ஆசிரியராகவும் கொண்டு வெளிவந்த* **வெளிச்சம்** *சஞ்சிகையில் வெளியாகியிருந்த அன்ரன் பாலசிங்கத்தின் அரசியல், சமூகவியல், உளவியல், மற்றும் மாடவியல் கட்டுரைகளின் தொகுப்பு. எம்.ஜி.ஆரும் புலிகளும், ராஜீவ்-பிரபா சந்திப்பு, மனிதனைத் தேடும் மனிதன், கருத்துலகமும் வாழ்வியக்கமும், மனப் புரட்சியும் மனித விடுதலையும், உலக வரலாறும் மனித விடுதலையும், பழமைக்கு எதிரான பண்பாட்டுப் புரட்சி, அதிகாரத்தின் அரூப கரங்கள், தனிமனித தத்துவம். அர்த்தமும் அபத்தமும், மனிதத்துவம் ஆகிய 11 தலைப்புகளில் இக்கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 578172).*

**மேலும் பார்க்க: *6955***

### *323 மனித உரிமை*

***6178***

**ஓரங்காட்டுகையை நீக்குவது தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அனைத்துலக அமைப்புகளின சாதனங்கள்.** *ஐக்கிய நாடுகள் சபை. கொழும்பு: மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் அவையின் ஆணையம், ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B, *புளுமெண்டால் வீதி).*
***152 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.,*** ISBN: ***955-113-5.***

*எல்லாவகையினவுமான இனஞ்சார் ஓரங்காட்டுதலை நீக்கிவிடுவதன் மீதான சர்வதேசச் சமவாயம், மதம் அல்லது நம்பிக்கை என்ற அடிப்படையிலான எல்லா வகையினவுமான சகிப்பிலாத்தன்மையையும், எல்லா வகையினவுமான ஓரங்காட்டுதலையும் நீக்குதல் பற்றிய வெளிப்படுத்துகை, இனவாதம், இனஞ்சார் ஓரங்காட்டுதல், வெளிநாட்டார் பற்றிய பயம், மற்றும் தொடர்புபட்ட சகிப்பிலாத்தன்மை ஆகிய மூன்று தலைப்புகளில் இந்நூலில் சர்வதேச அமைப்புகளின் மொழிபெயர்ப்பு ஆவணங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 569458).*

**6179**

**கருவியேடு: ஐக்கிய நாடுகளின் செயல்முறை அமைப்புகளுக்கும் நடைமுறைக்கும் தகவல் சமர்ப்பித்தல், சிறுபான்மையினரின் உரிமைகளையும் பல்வகை இயல்புகளையும் பாதுகாத்தல்.** ஐக்கிய நாடுகள் தாபனம். கொழும்பு 8: சிறுபான்மையினர் உரிமைகள் வேலைத்திட்டம், இன ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம், 2 கின்சி டெரஸ், 1வது பதிப்பு, நவம்பர் 2001. (கொழும்பு: குணரத்ன ஒப்செற் லிமிட்டெட்).

vi, 74 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ., ISBN: 955-580-062-6.

பிரதான சர்வதேச மனித உரிமை ஒப்பந்தச் சாசனங்கள், மெய்நிலை கண்டறிதல், சிறுபான்மையினர் தொடர்பான செயற்குழுவிற்கும் உடன்படிக்கை அமைப்புகளுக்கும் தகவல் சமர்ப்பித்தல், முறைப்பாடுகளைச் சமர்ப்பித்தல் ஆகிய நான்கு பிரதான தலைப்புகளில் இக்கருவியேடு பயனுள்ள தகவல்களை வழங்குகின்றது. பின்னிணைப்புகளாக சர்வதேச மனித உரிமை ஒப்பந்தச் சாதனங்கள்- பிரதான அம்சங்களும் குறிப்புகளும், சர்வதேச மனித உரிமை உடன்படிக்கைகள், சிறுபான்மையினரின் உரிமைகள் உள்ளிட்ட சர்வதேச மனித உரிமைகள் கண்காணிக்கப்படுவது எப்படி ஆகிய மூன்று தலைப்புகளில் முக்கிய விடயங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 576189).

**6180**

**சித்திரவதையற்ற சமுதாயம்: சித்திரவதை தொடர்பான சட்ட ஏற்பாடு.** ஆர்.சி.கருணாகரன், எஸ்.ரவீந்திரன் இன்னும் பிறர். கொழும்பு 8: சித்திரவதையைக் கண்காணித்தல், மற்றும் அறிவை விருத்திசெய்யும் செயற்திட்டம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இல.36, கின்சி வீதி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2003. (கொழும்பு 5: பிரின்ட் லைன், 58/3 டி.எம். கொலம்பகே மாவத்தை, கிருல்லப்பனை).

(6), 76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ., ISBN: 955-8929-01-08.

ஆர்.சி.கருணாகரன், எஸ்.ரவீந்திரன், ஜகத் பண்டார வியனாராச்சி, டீ.கங்காதரன், சேனக திசாநாயக, வாசுகி தேவதாஸ், அநுராதா குணரட்ண ஆகியோர் இணைந்து தொகுத்துள்ள நூல் இது. சித்திரவதை சம்பந்தமாக தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்கள், சர்வதேச பிரகடனம், சமவாயம், ஆகியவற்றோடு ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் பி.ஆர்.பிரியந்த பெரேரா அவர்களால் எழுதப்பட்ட நடைமுறையிலுள்ள சட்டங்களின் நிலை, நீதிமன்றத் திர்ப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய கட்டுரைகள் இந்நூலை அலங்கரிக்கின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 569472).

**6181**

**தற்கொலைப் பிரச்சினையும் தடுப்பும்.** கருணாதிஸ்ஸ அத்துகோறள (ஆங்கில மூலம்), என்.சச்சிதானந்தம், எல்.விஜயநாதன் (தமிழாக்கம்). Kandy: Integrated development Association (IDEA), No. 20, Hantana Place, இணை வெளியீட்டாளர்கள் NORAD Sri Lanka, 1வது பதிப்பு, 2001. (கண்டி: Social Integration Trust, 71/77 Hewaheta Road, Talwatte).

(8), 82 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

தற்கொலை பற்றிய அறிவுபூர்வமான ஆய்வை மேற்கொள்ளவும் அதனால் பெறப்பட்ட அறிவையும், அனுபவத்தையும் தற்கொலை தடுப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ள அரச, உள்ளூர் ஆட்சி நிறுவனங்கள், அரச சார்பற்ற தனியார்த்துறை நிறுவனங்கள் ஆகியவற்றுடன் பகிர்ந்துகொள்ளும் நோக்குடனும் டிசம்பர் 1998 இல் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட நூலின் தமிழ்ப் பதிப்பு இதுவாகும். தற்கொலை ஒரு பொது அறிமுகம், இலங்கையில் தற்கொலை, சமூக ஒருங்கிணைப்பு கிரமம் ஆகிய மூன்று பிரதான தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 544605).

**மேலும் பார்க்க:** 6196

**6182**

**அபிவிருத்தியின் சமூகவியல்.** கந்தையா சண்முகலிங்கம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, UG 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
132 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-75-2.

இந்நூல் எட்டு கட்டுரைகளைக் கொண்டுள்ளது. அபிவிருத்திக் கோட்பாடுகளைத் தமிழில் அறிமுகம்செய்யும் வகையில் இவை எழுதப்பட்டுள்ளன. வால்ட் றொஸ்ரோவ், றோல் பிரபிஷ், அந்தரே குந்தர் பிராங், போல் பறன், சமீர் அமீன், இம்மானுவேல் வலர்ஸ்ரின் எனப் பல மேற்கு நாட்டுச் சிந்தனையாளர்களின் கருத்துக்களை நூலாசிரியர் சரளமான நடையில் எடுத்துச் சொல்கிறார். இலங்கைப் பொருளியல் பற்றி எழுதியவர்களான றோனால்ட் ஸ்நொட்கிறாஸ், குமாரி ஜயவர்த்தன, நியுட்டன் குணசிங்க ஆகியோரின் நூல்களையும் கட்டுரைகளையும் மேற்கோள் காட்டி அபிவிருத்திக் கோட்பாடுகளை இலங்கையின் பின்னணியில் பரிசீலிக்கிறார். சில கட்டுரைகளில் கோட்பாடும் நடைமுறையும் ஒன்றிணைகின்றன. கோட்பாட்டை இலங்கைச் சூழலில் பிரயோகிக்கிறார். வடக்குக் கிழக்குச் சூழலுடனும் இணைத்துக் காட்டுகின்றார். க. சண்முகலிங்கம் பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலையிலும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் கல்வி கற்றவர். 1962இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து கலைமாணிப் பட்டத்தையும், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டமாணிப் பட்டத்தையும் பெற்றவர். SLIDA நிறுவனத்தில் பொதுநிர்வாகவியலில் டிப்ளோமா பட்டத்தைப் பெற்ற இவர் 1971 முதல் 2004 வரை இலங்கை நிர்வாக சேவையின் பல்வேறு உயர் பதவிகளையும் பெற்று இளைப்பாறியவர்.

**6183**

**அரசாங்கத்துறை முன்னேற்றம் 1973.** என்.எம்.பெரேரா (நிதியமைச்சர்). இலங்கை: நிதியமைச்சு, இலங்கைப் பாராளுமன்றம், 1வது பதிப்பு, நவம்பர் 1973. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).
(8), 53 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 24x14.5 சமீ.

1973, நவம்பர் மாதம் 1ஆந்தேதி நிதியமைச்சர் என்.எம்.பெரேரா, தேசிய அரசுப் பேரவையில் ஆற்றிய வரவுசெலவுத் திட்ட உரைக்குத் துணையானது. அரசியல் நிறுவனங்கள் என்ற முதற் பாகத்தில், வெளிநாட்டுறவும் உள்நாட்டுப் பாதுகாப்பும், நீதி, உள்ளூராட்சி ஆகிய உப பிரிவுகளும், பொருளாதார நிறுவனங்கள் என்ற இரண்டாம் பாகத்தில், திட்டமிடலும் பொருளாதார அலுவல்களும், கைத்தொழிலும் கனிமங்களும், கமத்தொழில், பெருந்தோட்டக் கைத்தொழில், உல்லாசப் பிரயாணம், கடற்றொழில், வியாபாரம், மூலவளங்களைப் பயன்படுத்துதல், அரசாங்கத்துறைக் கட்டுவேலையும் மின்சக்தியும், போக்குவரத்து, அஞ்சல் தொலைத்தொடர்புச் சேவைகள், ஆகியனவும், சமூக நிறுவனங்கள் என்ற மூன்றாம் பாகத்தில் சமூக ஸ்தாபன அமைப்புக்கள், தகவல் ஒலிபரப்பு, விளையாட்டு, கலாச்சார அலுவல்கள் ஆகியனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 303585).

**6184**

**இலங்கையின் பேரினப் பொருளாதாரமும் சுகாதார மேம்பாட்டு முன்முயற்சிகளும் சுகாதாரத்துக்காக முதலிடுதலும்.** அமலா டி.சில்வா, எம்.கணேசமூர்த்தி. கொழும்பு 10: The National Commission on Macroeconomics and Health, Ministry of Health Care and Nutrition, 385 Suwasiripaya, Ven. Baddegama Wimalawansa Thero Mawathe, 1வது பதிப்பு டிசம்பர் 2005. (இரத்மலானை: சர்வோதய விஷ்வலேகா அச்சகம், 41 லும்பினி அவென்யூ).
xvi, 108 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 955-9093-25-8.

இது இலங்கையின் பேரினப் பொருளியல் மற்றும் சுகாதாரம் பற்றிய ஆணைக்குழுவுக்காக மேற்கொள்ளப்பட்டதோர் மொழிபெயர்ப்பாகும். இந்நூல் உலக சுகாதார அமைப்பின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. ஆய்வின் நோக்கங்கள் பற்றிய சிறிய அறிமுகத்துடன் தொடரும் இந்நூலில் சுகாதார முறைமையின் பண்புகள் என்ற முதற் பகுதியில் சுகாதாரக்கொள்கையும் அதனைச் செயற்பாட்டுக்கு மாற்றுதலும், சுகாதார முதன்மையின் பணிகள், நோய்ச் சுமை ஆகிய விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. அண்மைய கொள்கை ஆவணங்களை மீளாய்தல் என்ற இரண்டாவது பிரிவில் ஐ.நா. மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள் தீர்மானம்,

தொலைநோக்கு 2010: பிரதான பேரினப் பொருளியல் மற்றும் சுகாதாரத்துறைப் பிரச்சினைகள், வறுமைத் தணிப்புத் தந்திரோபாயப் பத்திரம்: பிரதான பேரினப் பொருளியலும் சுகாதாரத்துறைப் பிரச்சினைகளும் ஆகிய தலைப்புகளில் விடயங்கள் ஆழமான பரிசீலனைக்குட்பட்டுள்ளன. மேலும் பேரினப் பொருளியலும் சுகாதாரமும், சுகாதாரத்தில் சமமின்மைகள்: பேரினப் பொருளியல் காரணிகளின் தாக்கம் ஆகிய விடயங்களும் தனித்தனி இயல்களில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இந்நூலில் 24 பின்னிணைப்புகள் 40 பக்கங்களில் தரப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 619032).

**6185**

**சமூக மூலதனம்: அபிவிருத்திக்கான ஓர் அடிப்படைக் காரணி.** கே.எம்.எம்.பளீல் ஹக். அக்கரைப்பற்று: தென் கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில், 1வது பதிப்பு, ஜுன் 2005. (அக்கரைப்பற்று: றிஹா பிரின்டர்ஸ்).

x, 52 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-99102-1-3.

சமூக மூலதனத்தின் முக்கியத்துவமும் எண்ணக்கரு வளர்ச்சியும், சமூக மூலதனத்தை அளவிடுதல், சமூக மூலதனமும் பொருளாதார அபிவிருத்தியும், சமூக மூலதனத்தின் சமூகவியல் தாக்கங்கள், சமூக மூலதனமும் சமூக அமைதியும், சமூக மூலதனத்தின் பல்வேறு வகைகள், சமூக மூலதனத்தைத் தீர்மானிக்கும் காரணிகள், சமூக மூலதனமும் அரசதுறைப் பங்களிப்பும், சமூக மூலதனத்தைக் கட்டி எழுப்புதல், சமூக மூலதனத்தை அதிகரிக்கச் செய்தல், சமூக மூலதனம் தொடர்பான சில விமர்சனங்கள் ஆகிய 11 இயல்களில் இவ்வாய்வு விரிகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 584781).

**6186**

**சீனா-இந்தியா பொருளாதார அபிவிருத்தி: ஓர் ஒப்பீட்டு ஆய்வு.** செ.சந்திரசேகரம். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).

xx, 306 பக்கம், விலை: ரூபா 800., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-202-3.

இந்நூல் சீனாவினதும் இந்தியாவினதும் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டை ஒப்பிட்டு ஆராய்கின்றது. இரு நாடுகளினதும் விரைவான பொருளாதார வளர்ச்சியூடாக அபிவிருத்திப்போக்கில் சீனா எவ்விதம் இந்தியாவிலிருந்து வேறுபட்டவகையில் செயற்பட முடிந்தது என்பதையும் இந்தியாவினதும் சீனாவினதும் நுகர்வு, சேமிப்பு, முதலீடு என்பவை எவ்விதப் போக்குடையது என்பதையும் அவற்றினைத் தீர்மானித்த காரணிகளுள் முதன்மையானதாக அரசியல் உறுதிப்பாடும் தேசிய விழிப்புணர்வும் இருந்துள்ளதையும் இந்நூல் விபரிக்கின்றது. அரசியல் உறுதிப்பாடும் தேசிய விழிப்புணர்வும் இரு நாடுகளிலும் வேறுபட்ட அளவு வகிபங்குடையது என்பதை வலியுறுத்தும் இவ்வாய்வில் இதனடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையிலான வளர்ச்சி வீத வேறுபாடுகள், நுகர்வு மட்டம், சேமிப்பு மட்டம், முதலீட்டு மட்டம் போன்றவற்றின் வேறுபாடுகள் சமூகநல தொழிற்பாட்டு மட்ட வேறுபாடுகள் என்பவையும் விளக்கப்பட்டுள்ளன. செல்வரத்தினம் சந்திரசேகரம் (1970) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியல்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

**6187**

**தேசிய வருமானமும் தேசிய உற்பத்தியும்: கணிதப் பிரயோகங்கள்-கெயின்ஸிய அணுகுமுறை குறித்த ஒரு நோக்கு.** ஏ.நஸீர் அஹமட், ஏ.ஏ.முஹமட் நுபைல், ஏ.எல்.முஹமட் அஸ்லம். அக்கரைப்பற்று: தென் கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில், 1வது பதிப்பு, 2003. (சாய்ந்தமருது: நெஷனல் பிரின்டர்ஸ்).

vi, 110 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 20.5x14.5 சமீ.

பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சை (A/L), பல்கலைக்கழக பரீட்சை வழிகாட்டி (GAQ) போன்றவற்றுக்கு உகந்ததாகத் தயாரிக்கப்பட்ட நூல். கோட்பாடுகளையும் அவற்றுக்குரிய பயிற்சிகளையும் இந்நூல் உள்ளடக்குகின்றது. வருமானச் சுற்றோட்டம், பேரினப் பொருளாதாரச் சமநிலை, நுகர்வுத் தொழிற்பாடு, சேமிப்பு, முதலீடு, சமநிலை வருமானக்கோடு, பெருக்கித்

தொழிற்பாடுகள், சிக்கன முரண்பாடு, தேசிய வருமான சமநிலை தொடர்பான எளிய கணித மாதிரிகள், மாதிரி வினாக்களும் விடைகளும், தேசிய வருமான கணக்கீடு, தேசிய கணக்கீடு தொடர்பான எண்ணக்கருக்கள், பொருளாதார வளர்ச்சி, தேசிய கணிப்பீட்டின் பயன்பாடுகள், தேசிய மதிப்பீட்டின் பிரதான குறைபாடுகள், எதிர்பார்க்கை வினாக்கள் ஆகிய 16 தலைப்புகளில் இந்நூல் விளக்கப்படுகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 580622).

6188
**மலையக மக்களின் சமூக-பொருளாதாரம்: ஒரு வரலாற்றுப் பார்வை.** எம்.கணேசமூர்த்தி. கொழும்பு 8: அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு, BQ 2/2, மெனிங் டவுன், மங்கள ரோட், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2010. (கொழும்பு 6: எஸ்.பி. கிராப்பிக்ஸ், 235 G, காலி வீதி).
42 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி எம். கணேசமூர்த்தி, கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் வழங்கிய அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்த பதினோராவது நினைவுப் பேருரை இதுவாகும்.

## 331.88 தொழிற் சங்கங்கள்

6189
**மேதின வரலாறு.** அலெக்ஸாண்டர் ட்ராச்டென்பர்க் (மூலம்), எம்.சிவகுமார் (தமிழாக்கம்). சென்னை 600002: சென்னை புக்ஸ், 6, தாயார் சாஹிப் 2வது சந்து, 5வது பதிப்பு, ஏப்ரல் 1990, 1வது பதிப்பு, மே 1978, 2வது பதிப்பு, மே 1981, 3வது பதிப்பு, ஏப்ரல் 1983, 4வது பதிப்பு, ஏப்ரல் 1985. (சென்னை 600002: ஜுபிட்டர் ஆப்செட் பிரஸ்).
32 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 4., அளவு: 18x12 சமீ.

மேதின வரலாறு என்ற இப்பிரசுரத்தின் ஆங்கில மூலநூல் 1929இல் எழுதி வெளியிடப்பட்டது. 1947இல் இன்டர்நெஷனல் பப்ளிஷர்ஸ், நியுயோர்க் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட திருத்திய பதிப்பின் தமிழாக்கமே இந்நூலாகும். மேதின வரலாறு, எட்டு மணி நேர இயக்கம் அமெரிக்காவில் தொடங்கியது, எட்டு மணி நேர இயக்கம் குறித்து மார்க்ஸ், அமெரிக்காவில் மேதினம் பிறந்த வரலாறு, மேதினம் உலக தினமாக மாறியது, மே தினம் குறித்து லெனின், மேதின அரசியல் முழக்கங்கள், முதல் உலகப் போரின் போது மேதினம் போன்ற விடயங்களை இந்நூல் விளக்குகின்றது.

## 336 நிதியியல், வங்கியியல்

6190
**பங்குச் சந்தை முதலீடும் செயற்பாடுகளும்.** எம்.வை.எம்.சித்தீக். களுபோவிலை: Educational Liberal and Business Publications, ELBP, 46/4 A, Asiri Mawathe, 1வது பதிப்பு, 1997. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட், 44 புகையிரத நிலைய வீதி).
vii, 224 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-9550-00-4.

Share Market Investment and Operations என்ற ஆங்கிலத் தலைப்புடன் வெளியிடப்பட்ட நூல். பங்குச் சந்தை, பங்குச் சந்தை வியாபாரத் தளத்தில் பங்கு வியாபாரம் நடைபெறும் முறை, ஏன் பங்குச்சந்தையில் திடீரென பங்கு விலைகள் தளம்பலடைகின்றன?, பங்குச் சந்தையின் பொதுவான தளம்பலுக்கான காரணிகள், சாதாரண பங்குகளைப் பகுப்பாய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும், தனிப்பட்ட கம்பனியொன்றினை மதிப்பீடு செய்தல், நிதிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்தல், இலங்கை பிணைகள், பரிவர்த்தனை ஆணைக்குழு, பங்குச்சந்தை தொடர்பான முக்கிய பதங்களின் வரைவிலக்கணங்கள், பங்குச் சந்தைச் சுட்டிகள் ஆகிய பத்து அத்தியாயங்களில் இந்நூல் விரிகின்றது. நூலாசிரியர் இலங்கை சப்பரகமுவ பல்கலைக்கழகத்தின் வர்த்தகப் பிரிவின் துறைத்தலைவராகப் பணியாற்றியவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 503261).

**6191**

**மூலதனப் பாதீட்டல்.** தி.வேல்நம்பி. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
x, 201 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-659-073-0.

இலங்கையில் முதலீட்டுத் தீர்மானங்களை உள்ளடக்கிய மூலதனப் பாதீடிடல் (Capital Budgeting) என்பது முக்கியமானதொன்றாகும். மூலதனப் பாதீடிடல் என்பது மூலதனச் செலவுகள் (Capital Expenditure) தொடர்பில் முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளும் ஒரு செயல்முறையாகும். மூலதனப் பாதீடிடல் தொடர்பான ஆழமான அறிமுகத்தினை இந்நூல் வழங்குகின்றது. முதலீட்டுப் பகுப்பாய்வு தொடர்பான சகல பகுதிகளையும் மூலதனப் பாதீடிடல், மரபுரீதியான மூலதன மதிப்பீட்டு முறைகள், நவீன மூலதன மதிப்பீட்டு முறைகள், சொத்துப் பிரதியிடுகைத் தீர்மானங்கள், பணவீக்கமும் வரியும், நிச்சயமற்ற தன்மையும் ஆபத்துப் பகுப்பாய்வும் ஆகிய ஆறு இயல்களில் உள்ளடக்கியுள்ளது. பின்னிணைப்பாக Present Value Factors அட்டவணையும் தரப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைக் கற்கைகள் வணிகபீடத்தின் வணிகத்துறையில் முதுநிலை விரிவுரையாளரான கலாநிதி திருநாவுக்கரசு வேல்நம்பி தன் கலாநிதிப்பட்டத்தை சென்னைப் பல்கலைக்கழகத்தில் பூர்த்திசெய்தவர். தன் ஆரம்பக் கல்வியை புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரியில் நிறைவுசெய்தவர்.

### 338 பொருளாதார வளங்கள், மீன்வளம்

**6192**

**ஈரநிலப் பிரதேச அறிக்கை (சாராம்சம்) முதலாம் பாகம்.** ஈரவலயப் பாதுகாப்புத்திட்டம் (ஆங்கில மூலம்), எஸ்.அருணாச்சலம் (தமிழாக்கம்), ந.சுரேஷ்குமார் (பதிப்பாசிரியர்). 1வது பதிப்பு, 1998. (அச்சக விபரம் தரப்படவில்லை).
vii, 88 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.

இந்நூல் அறிமுகம், பிரதேச அறிக்கை, முகாமைத்துவ திட்டம் மற்றும் முக்கியமான விடயங்களை உள்ளடக்கியுள்ளது. பெல்லன்வில-அத்திடிய சதுப்பு நிலம், லுனம-கலமிட்டிய வாவிகள், கொக்கலை வாவிகள், பலட்டுப்பான உப்பளம், உடவளவை நிர்த்தேக்கம், வளவுவத்தை சதுப்புநிலக் காடு, வீரவில திஸ்ஸ சரணாலயம் மற்றும் புத்தளம் வாவி ஆகிய தலைப்புக்களின்கீழ் இவ்வறிக்கை வழங்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் திருமதி அருணாச்சலம், இலங்கை சூழலியல் பத்திரிகையாளர் சங்கத்தைச் சேர்ந்தவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 501499).

**6193**

**மகாவலி புள்ளிவிபரக் கைநூல் 1995.** இலங்கை மகாவலி அதிகார சபை. இலங்கை: திட்டமிடல், கண்காணித்தல் பிரிவு, இலங்கை மகாவலி அதிகார சபை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 10: சமயவர்தன பதிப்பகம்).
(8), 47 பக்கம், வரைபடங்கள், புள்ளிவிபரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x29 சமீ.

இலங்கையின் நீளமான ஆறு மகாவலி கங்கையாகும். இலங்கையில் இதுவரை ஆரம்பிக்கப்பட்ட மாபெரும் பல்நோக்கு ஒன்றிணைந்த அபிவிருத்தித் திட்டமாக மகாவலி விளங்குகின்றது. இத்திட்டத்தின் பாரிய அம்சங்களாக நீர்மின் சக்தியின் தோற்றுவிப்பு, நீரைச் சேமித்தல், வெள்ளக்கட்டுப்பாடு, பாசனத்திற்காக நீரைத் திசைதிருப்புதல், மனித குடியேற்றத்தை நிர்மாணித்து விருத்திசெய்வதன்மூலம் காணிகள் அற்றோரையும் தொழிலற்ற குடும்பங்களையும் குடியேற்றுதல், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம் பொதுசன பொருளாதார மேலதிகச் செலவுகள், தகவல் தொடர்புகள், உள்ளக அமைப்புகள் ஆகியன திட்டத்தின் பாரிய அம்சங்களாகும். பொதுமக்களின் பாவனைக்காக ஆரம்பிக்கப்பட்ட மகாவலி திட்டம் மீதான வருடாந்த புள்ளிவிபர இதழ்களின் தொடரில் ஆறாவதாக அமையும் இவ்வெளியீடு, மகாவலி திட்டத்தின் சாதனைகள் குறித்து முறையாகச் சேகரிக்கப்பட்ட புள்ளிவிபரத் தரவின் ஒரு தொகுதியைக் கொண்டு வெளிவருகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 496887).

6194
**இலங்கைச் சட்டங்கள்: ஓர் அறிமுகம்.** செ.செல்வகுணபாலன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
xvi, 380+ 40 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-9429-00-0.

இந்நூலின் நோக்கமானது பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் சட்டம் பற்றிய அறிமுகத்தை வழங்குவதாகும். சட்டம் என்றால் என்ன என்ற விடயத்தில் ஆரம்பித்து 2006ம் ஆண்டு வரை பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் உட்பட பல்வேறு விடயங்களையும் சுருக்கமாகக் கூறுகின்றது. இந்நூல் நான்கு பகுதிகளையும் அதனுள் 32 அத்தியாயங்களையும் கொண்டுள்ளதுடன் சட்டத்தின் தன்மை, இலங்கையின் சட்ட வரலாறு, மற்றும் அரசியலமைப்புசார் விடயங்களைச் சாதாரணமாக எல்லோருக்கும் விளங்கும் வகையில் கடினமான துறைசார் பதப்பிரயோகங்களைக் குறைத்து எழுதியுள்ளார். செல்லத்துரை செல்வகுணபாலன் (1969) கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தனது சட்டமாணிப்பட்டத்தைப் பெற்றவர். அதே பல்கலைக்கழகத்தில் மொழியுரிமைகள் மீதான சான்றிதழினையும், இத்தாலியிலுள்ள சர்வதேச சட்ட அபிவிருத்தி அமைப்பில் வர்த்தகசட்டப் பயிற்சி மீதான சான்றிதழினையும் மற்றும் பல்வேறு நாடுகளிலும் சான்றிதழ்களைப்பெற்றவர். தற்போது சட்ட வரைஞர் திணைக்களத்தில் உதவிச் சட்ட வரைஞராகவும் இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட விரிவுரையாளராகவும் பணியாற்றுகிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 616733).

6195
**தேர்தல் சட்டம் குற்றங்களும் தண்டனைகளும்.** ப∴ப்ரல். கொழும்பு 6: சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு, PAFFREL, 93/10, துடுகெமுனு வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் அறியமுடியவில்லை).
39 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இந்நூல் ஜப்பானின் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவித்திட்டத்தின்கீழ் அச்சிடப்பட்டுள்ளது. 2006ம் ஆண்டிற்கு முன்னர் பதிப்பிக்கப்பட்டுள்ளது. 1981ம் ஆண்டின் முதலாம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டமூலத்தையடுத்து 1981 - 35ஆம் இலக்க தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம், 1988- 15ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் (சீர்திருத்த) சட்டமூலம், 1988-29ம் இலக்க பாராளுமன்ற தேர்தல் (சீர்திருத்த) சட்டமூலம், 1988-54ம் இலக்க பாராளுமன்ற தேர்தல் (சீர்திருத்த) சட்டமூலம் ஆகியவை திருத்தப்பட்ட சட்டமூலங்களாக உருவாக்கப்பட்டன. இவற்றில் வாக்களிப்புச் சார்ந்த குற்றங்கள், துஷ்பிரயோகக் குற்றங்கள், சட்டவிரோதச் செயல்கள் ஆகிய மூன்று வகைப்படுத்தல்களை தேர்தல் குற்றங்களாக இனம்கண்டுள்ளனர். இந்நூல் இவ்வகையான தேர்தல் கால குற்றங்களையும் அதற்குண்டான தண்டனைகளையும் விரிவாக வழங்ககின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 599947).

6196
**மனித உரிமைகள் சட்டமும் மனிதாபிமானச் சட்டமும்: ஓர் அறிமுக வழிகாட்டி.** வேர்ஜீனியா ஏ.லியறி, சூரியா விக்கிரமசிங்க (மூலம்), வி.ரி.தமிழ்மாறன் (தமிழாக்கம்). கொழும்பு 3: நடேசன் நிலையம், 31, சார்ள்ஸ் பிளேஸ், 1வது பதிப்பு, 1995. (கொழும்பு 10: வரையறுக்கப்பட்ட கருணாரத்னவும் புதல்வர்களும்).
(4), 95 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-9255-02-09.

நியுயோர்க் மாநில (ப∴வ்வலோ) பல்கலைக்கழகச் சட்டத்துறைப் பேராசிரியரான வேர்ஜீனியா ஏ.லியறி, மிடில் டெம்பிள் பரிஸ்டர், சட்டத்தரணி சூரியா விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து ஆங்கிலத்தில் எழுதிய நூலின் தமிழாக்கம் இதுவாகும். மனித உரிமைகள் சட்டத்தின் வரைவிலக்கணம், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் வளர்ச்சி, மனித உரிமைகள் சட்டத்தின் உள்ளடக்கம், மனித உரிமைகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தல், மனிதாபிமானச் சட்டம் ஆகிய

அம்சங்களை இந்நூல் விரிவாக ஆராய்கின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 604076).

**6197**

**மாகாண சபைத் தேர்தல் சட்டங்கள்.** ப.்.ப்ரல். கொழும்பு 6: சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு, PAFFREL, 93/10, துடுகெமுனு வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் அறியமுடியவில்லை).
(2), 58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

மாகாண சபைகளைத் தாபித்தலும் தேர்தல் முறையும், வேட்புமனுக் கோரல், வேட்புமனுப் பத்திரங்களைக் கையேற்றல், மாகாணசபைத் தேர்தல் சார்ந்த தவறுகள், தபால்மூல வாக்கெடுப்பு, வாக்கெடுப்பு, வாக்குகளை எண்ணுதல், முடிவை வெளிப்படுத்தல், தேர்தல் மனுக்கள் ஆகிய தலைப்புகளில் இந்நூல் மாகாணசபைத் தேர்தல் சட்டங்களை மீள்வலியுறுத்துகின்றது. இந்நூல் ஜப்பானின் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவித்திட்டத்தின்கீழ் அச்சிடப்பட்டுள்ளது. 2006ம் ஆண்டிற்கு முன்னர் பதிப்பிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 599959).

### 340.59 இஸ்லாமியச் சட்டங்கள்

**6198**

**இறைநீதியும் மனித நீதியும்.** அப்துல் காதிர் அவ்தா (மூலம்), நூறுல் ஹக் (தமிழாக்கம்). கொழும்பு 9: இலங்கை ஜமாஅதே இஸ்லாமி, 204/1 ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, 1வது பதிப்பு, 1980. (கொழும்பு 9: IPC Printing Press, 320, N.M.M. Ishak Mawathe).
176 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

பிரார்த்தனை, சட்டங்களே என்னை மன்னிப்பீர்களா? நான் ஒரு நீதிபதி- ஆனால் முஸ்லிம், சட்டத்தின் கடமை, சட்டங்களின் அடிப்படைகள், சட்டங்கள் எப்படி ஆதிக்கம் பெறுகின்றன, மனிதன் வகுத்த சட்டங்களை இஸ்லாம் மறுக்கிறது, மனிதன் இயற்றிய சட்டத்தின் தன்மை, மனிதன் வகுத்த சட்டங்கள் நம்மை என்ன செய்தன? மனிதன் வகுத்த சட்டங்கள் எம் சமூக அமைப்பையே கலக்குகின்றது, இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஏன் இந்தத் தடை? ஆகிய தலைப்புகளில் இஸ்லாமும் எமது சட்டமுறைமையும் பற்றி இந்நூல் விவாதிக்கின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 422057).

**6199**

**இஸ்லாமிய சட்டக்கலை: மூலாதாரங்கள்.** எம்.ஐ.எம்.அமீன். ஹெம்மாத்தகம: எம்.ஐ.எம்.அமீன், 1வது பதிப்பு, பெப்ரவரி 2006. (மாவனல்ல: எம்.ஜே.எம். பிரின்டர்ஸ், 119 பிரதான வீதி).
x, 182 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 20.5x14 சமீ., ISBN: 955-99588-0-1.

இந்நூலில் இஸ்லாமிய சட்டக்கலையின் மூலாதாரங்களான குர்ஆன், ஹதீஸ், இஜ்திஹாத் ஆகிய அம்சங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் முஹம்மது இப்ராஹிம் ஆலிம் சாஹிப் முஹம்மது அமீன், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அறபு இஸ்லாமிய நாகரிகத்துறையின் முன்னாள் முதுநிலை விரிவுரையாளராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 601374).

**6200**

**கனீமத்துல் இஸ்லாம் பீ நிழாமில் அஹ்காம்: இஸ்லாமிய சட்டக் களஞ்சியம்.** முஹம்மது யூசுப் ஆலிம் புலவர். கொழும்பு: உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (தெகிவளை: ஏ.ஜே.பிரிண்டர்ஸ், 44 புகையிரத வீதி).
vi, 144 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 955-8806-02-01.

துறைமுகங்கள் அபிவிருத்தி கப்பற்றுறை அமைச்சு, கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் அமைச்சு, இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் ஆதரவுடன் 2002 ஒக்டோபர் 22, 23,24ம் திகதிகளில் நடத்திய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின்போது வெளியிடப்பெற்ற மீள்பிரசுரங்களில் ஒன்று. நூலாசிரியர் அக்கரைப்பற்று கருங்கொடித்தீவைச் சேர்ந்தவர். 1923களில் வெளியிடப்பட்டதாகக் கருதப்படும் இந்நூலின் மூலப்பிரதி புலவரின் மருமகன் ஓய்வுபெற்ற அதிபர், எம்.ஐ.அபுசாலிஹூ அவர்களினால் வழங்கப்பெற்று மௌலவி எம்.எச்.எம்.புஹாரி (பலாஹி) அவர்களால் பிரதிசெய்யப்பட்டு, அச்சுப்பிழை பார்த்து மீள்பிரசுரமாக வெளியிடப்பெற்றுள்ளது.

## 342 அரசியலமைப்புச் சட்டம்

### 6201

**அரசியல் சீர்திருத்த, தேர்தல் முறை மாற்ற சிந்தனைகளும் இந்திய வம்சாவளி தமிழ் மக்களும்.** பி.பி.தேவராஜ். கொழும்பு 6: சமூக நிலை மாற்ற மன்றம், 24-1/1, ஈஸ்வரி வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
vii, 108 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

சுதந்திரத்துக்குப் பின் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரின் உரிமைப் பிரச்சினையில் ஏற்பட்ட நிலை மற்றும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் முதலான விடயங்கள் 27 அத்தியாயங்களில் விரிவாக இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன. இந்திய வம்சாவளி மக்களின் உரிமைப் பிரச்சினையையில் அவர்கள் கடந்துவந்த அரசியல் பயணத்தை விபரிக்கும் அதே சமயத்தில் இம்மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள சிந்தனை மாற்றங்களை கோடிட்டுக் காட்டி இதற்கு ஏற்ப அடிப்படை உரிமைகளையும் நியாயமான பிரதிநிதித்துவத்தையும் பெறுவதற்கு உதவும் வழிமுறைகளை எவ்வாறு அணுகுவது என்பதைப் பற்றிய சிந்தனைகளைத் தூண்டுவதற்கு இந்நூல் முனைகின்றது. நூலாசிரியர் இலங்கையின் முன்னாள் இந்துசமய கலாச்சார இராஜாங்க அமைச்சராகப் பணியாற்றியவர்.

### 6202

**அரசியலமைப்பாக்கச் சிந்தனைகள்: இலங்கையின் மூன்று அரசியலமைப்புக்களதும் முடியாமைக்கான காரணங்களின் கருத்து வடிவம்.** வி.ரி.தமிழ்மாறன். கொழும்பு 5: மதுரி மலர்வகம், 215 C/1/3 பார்க் ரோட், 2வது பதிப்பு, ஏப்ரல் 2004, 1வது பதிப்பு, நவம்பர் 1999. (கொழும்பு 5: Professional Publishers, 215 F/2/6 Park Road).
vi, 140 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14 சமீ., ISBN: 955-8222-01-1.

சுதந்திர இலங்கையின் அரசியலமைப்புக்களும் வெற்றிகரமான தோல்விகளும், அரசியலமைப்பொன்று எப்படி அமைதல் வேண்டும்? புதிய சிந்தனைகளும் போக்குகளும், பெரும்பான்மை ஆட்சியும் மனித உரிமைகளும் ஆகிய மூன்று பிரதான தலைப்புகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. புதிய அரசியலமைப்பொன்றை ஆக்கும் முயற்சிகள் விடாக்கண்டனாகத் தொடர்ந்தவண்ணமிருந்த ஒரு காலகட்டத்தில் அது பற்றிய சட்ட நுழைபுலன்களைத் தவிர்த்து அரசியல் நெறிமுறைத் தன்மைமீது மட்டும் கவனமீர்த்து இந்நூலின் மூன்று அத்தியாயங்களும் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 603842).

### 6203

**அரசியலமைப்பின் 17வது திருத்தச் சட்டம்: விமர்சன ரீதியான கட்டுரைத் தொகுப்பு.** வசந்த புஷ்பகுமார (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: இலங்கை தேசிய சமாதான பேரவை, 12/14 புராண விகாரை வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2008. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).
188 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 23x20 சமீ., ISBN: 978-955-1274-44-3.

அரசியலமைப்பிற்கான 17ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது சிவில் சமூகத்தின் ஒரு பொறுப்பாக மாறியுள்ளது (எல்மோ பெரேரா), 17வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த எந்தவொரு கட்சிக்கும் அக்கறையில்லை (சட்டத்தரணி ஜே.சி.வெலிஅமுன), 17வது திருத்தத்தை சாதகமாக மாற்றியமைப்பதால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் (கலாநிதி ஜெஹான் பெரேரா), இந்த

வேளையில்கூட அரசியலமைப்பிற்கான 17வது திருத்தம் ஏன் அமுல்படுத்தப்படாமல் உள்ளது என ஆராய்வது முக்கியமானதாகும் (ரோஹான் எதிரிசிங்க), அரசியலமைப்பின் அவமதிப்பு: இலங்கையில் சட்டவாட்சிக்கான புறக்கணிப்பின் உச்சத்தை எட்டுதல் (கிஷாலி பின்டோ ஜயவர்த்தன), அரசியலமைப்புக்கான 17வது திருத்தத்தின் மறைவும் நீதியின் அஸ்தமனமும் (சட்டத்தரணி எஸ்.ஜி.புஞ்சிஹேவா), கருத்தொருமைப்பாடு இல்லாமையால் இழுபறிப்படும் 17வது திருத்தம் (டி.யு.குணசேகர), அரசியலமைப்புப் பேரவையொன்று அவசியமானதேன்? (சட்டத்தரணி சிறிமேக விஜேரத்ன), ஏழாண்டுகள் கடந்துள்ள நிலையிலும் ஈடேறாத பிரார்த்தனை: அரசியலமைப்புப் பேரவையைப் பீடித்துள்ள அட்டமச் சனி (சந்தன சிறிமல்வத்த) ஆகிய 10 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 633768).

**6204**

**இலங்கை அரசியலமைப்பு.** நொயெல் தித்தவல்ல, செயலாளர். கொழும்பு: அரசியல் நிர்ணய சபை, 1வது பதிப்பு, மே 1972. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).
viii, 74 பக்கம், விலை: ரூபா 3.25, அளவு: 24.5x15.5 சமீ.

பௌத்த ஆண்டு ஈராயிரத்து ஐந்நூற்றுப் பதினைந்து வைகாசி வளர்பிறை பத்தாம் நாளன்று அதாவது 1972ஆம் ஆண்டு மே மாதம் 22ம் நாள் திங்கட்கிழமையன்று இலங்கை மக்களின் அரசியல் நிர்ணய சபையினால் (Ceylon Constituent Assembly) வகுத்தமைத்துச் சட்டமாக்கப்பட்ட இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பு. இது அரசியல் நிர்ணய சபையின் செயலாளரால் வெளியிடப்பட்டது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23277).

**6205**

**இலங்கையின் அரசியல் திட்டங்கள் 1833-1978 கோல்புரூக் முதல் இரண்டாம் குடியரசு வரை.** அம்பலவாணர் சிவராசா. பேராதனை: அ.சிவராசா, விரிவுரையாளர், அரசறிவியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், 2வது பதிப்பு, 1986, 1வது பதிப்பு, ஆவணி 1980. (யாழ்ப்பாணம்: ஆறுமுகம் கந்தையா, சிவா அச்சகம், கைதடி).
(6), 143 பக்கம், விலை: ரூபா 27.50, அளவு: 20.5x14 சமீ.

அரசியல் திட்டம்: இயல்பும் முக்கியத்துவமும்- ஒரு விளக்கம், இலங்கையின் தேசிய இயக்கத்தில் அரசியல் திட்டவாதிகளின் பங்கு, இலங்கையின் அரசியல்திட்ட வளர்ச்சி (1833-1948) முடிக்குரிய குடியேற்ற நாட்டந்தஸ்திலிருந்து டொமீனியன் அந்தஸ்து வரை (கோல்புரூக்-கமெரன் சீர்திருத்தங்கள் 1833, குறூ-மக்கலம் சீர்திருத்தங்கள்- 1910, மானிங் அரசியல் திட்டம், தற்காலிக மானிங் அரசியல் திட்டம் 1921, மானிங் அரசியல்திட்டம், 1924, டொனமூர் அரசியல் திட்டம், 1931, சோல்பரி அரசியல் திட்டம் 1947), இலங்கைக் குடியரசின் அரசியல் திட்டம் 1972, இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசியல் திட்டம் 1978, இலங்கையின் அரசியல் கட்சிமுறை, முடிவுரை ஆகிய விடயங்கள் 7 இயல்களில் விளக்கப்பட்டுள்ளன. இப்பதிப்பில் 5ம் இயலில் விகித சமப்பிரதிநிதித்துவம் பற்றிய பகுதியில் புதிய தரவுகளின் அடிப்படையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆறாவது இயலில் இலங்கையின் கட்சிமுறை அமைப்பு என்ற புதிய பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 560407).

**6206**

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான அரசியல் யாப்பு முன்மொழிவுகள்.** ஈ.பீ.ஆர்.எல்.எப். பத்மநாபா அணி. மட்டக்களப்பு: EPRLF, 29 A, வாவிக்கரை வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).
72 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x13.5 சமீ.

இலங்கையின் அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கான அனைத்துக்கட்சி கமிட்டியினதும் நிபுணர் குழுவினதும் பரிசீலனைக்கு முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் இவையாகும்.

**6207**

**பொதுத் துறை நிர்வாகம்: ஓர் அறிமுகம்.** வீ.அமீர்தீன். பேராதனை: தகவல் நலன்புரி அமைப்பு, Information and welfare Association, C 72, University Quarters, Meewathura, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2001. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
xii, 188 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-8641-00-6.

*இந்நூல் பொதுத்துறை நிர்வாகத்தின் தோற்றம், வளர்ச்சி, பொருள்வரையறைகள் என்ற அம்சங்களுடன் ஆரம்பித்து இத்துறையோடு தொடர்பான அடிப்படைக் கொள்கைகள், ஒழுங்கமைப்பும் கோட்பாடும், படிநிலை அமைப்பு அல்லது அதிகார வரிசை கட்டுப்பாட்டு எல்லை, ஒருங்கிணைத்தல், அதிகார ஒப்படைப்பு, பணியகவமைப்பு, ஓம்புட்ஸ்மன், இலங்கையின் உள்ளூராட்சி அமைப்புகள், இந்தியாவின் பஞ்சாயத்து இராச்சியம், ஆட்சேர்ப்பு, இலங்கையின் நிர்வாக சேவை, பிரித்தானிய சிவில் சேவை, பிரான்ஸ், அமெரிக்க நிர்வாக சேவைகள் ஆகிய ஏனைய அம்சங்களையும் ஆராய்கின்றது. இந்நூலில் கூறப்பட்ட கருத்துகளுக்கு ஆதாரங்களாகப் பல்வேறு அறிஞர்களினதும் நூல்களை ஆதார நூல்களாகவும், உசாத்துணை நூல்களாகவும் ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 545672).*

### 360 சமூக சேவை நிறுவனங்கள்

**6208**

**ஐக்கிய நாடுகள் பற்றிய அடிப்படையான விடயங்கள்.** ஐக்கிய நாடுகள் தாபனம். கொழும்பு: ஐக்கிய நாடுகளின் செய்தி ஸ்தாபனம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1995. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்).
vi, 216 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 955-9397-01-X.

*ஐக்கிய நாடுகள் அமையத்தின் தோற்றம், ஐக்கிய நாடுகளின் அமைப்பும் ஒழுங்கமைப்பும், சர்வதேச அமைதியும் பாதுகாப்பும், சமூகப் பொருளாதார விருத்தி, மனித உரிமைகளும் மனிதாபிமான உதவிகளும், குடியேற்றங்கள் சுதந்திரம் பெறல், சர்வதேசச் சட்டங்கள், ஐக்கிய நாடுகளுடன் தொடர்புடைய அரசாங்கங்களுக்கிடையிலான முகவராண்மைகள் ஆகிய எட்டு தலைப்புகளில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.*

**6209**

**சர்வதேச சமாதானமும் பாதுகாப்பும்.** ஐக்கிய நாடுகள் சபை. கொழும்பு 7: ஐக்கிய நாடுகள் தகவல் மையம், 202/204, பௌத்தலோக மாவத்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).
84 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

*இது ஐக்கிய நாடுகள் சபையின் ஆங்கிலப் பிரசுரமான ஐக்கியநாடுகள் பற்றிய அடிப்படை உண்மைகள் என்ற நூலின் இரண்டாம் அத்தியாயத்தின் தமிழாக்கமாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 569562).*

### 363 சுற்றாடல், சூழல் மாசுபடுதல்

**6210**

**ஏழாவது ஊழி: சுற்றுச் சூழல் கட்டுரைகள்.** பொ.ஐங்கரநேசன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, பீப்பிள்ஸ் பார்க், 2வது பதிப்பு, செப்டெம்பர் 2010, 1வது பதிப்பு, மார்ச் 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
432 பக்கம், விலை: ரூபா 1000., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-78-3.

*சூழலியல் வெறுமனே ஒரு கல்வி அல்ல. அது வாழ்க்கை. இரத்தமும் சதையும்போல இயற்கையில் தோய்ந்து அதன் ஒரு அங்கமாகவே அனுபவித்து வாழ்கின்ற வாழ்க்கையே சூழலியல் என்றுகூறும் ஐங்கரநேசன், இந்நூலில் புவிக்கோளை அச்சுறுத்திவரும் பல்வேறு சூழலியற் பிரச்சினைகளையும்*

விரிவாக விளக்கியிருக்கிறார். இயற்கைச் சூழல் அனுபவித்துவரும் அத்தனை துயரங்களுக்கும் ஒற்றை இனமாக மனிதனையே காரணம் காட்டும் இவர், இயற்கையின் பேரழிவிலிருந்து தப்புவதற்கு மனிதன் புவியின் மீது மேலாண்மை செய்வதை விடுத்துக் கூட்டாண்மை உறவுக்குத் திரும்பவேண்டும் என வலியுறுத்துகின்றார். பொ.ஐங்கரநேசன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதுவிஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவர். சென்னை கிறித்தவக் கல்லூரியில் இதழியல் மற்றும் பொதுசனத் தொடர்பியல் துறையில் முதுநிலைப் பட்டப்படிப்பினைப் பயின்றவர். சுற்றுச்சூழல் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்வதோடு. சூழல் இதழியலாளராகவும் பணியாற்றி வருகிறார். 41 இயல்களில் விரியும் இந்நூலின் முதலாவது பதிப்பு, சென்னையில் சாளரம் வெளியீடாக வெளிவந்திருந்தது.

**6211**

**சுற்றாடல் அடிப்படையிலான செயற்பாடுகளும் செயல்நெறியும் தரம் 3.** பொன்.சக்திவேல். கொழும்பு 11: பிரைட் புக் சென்டர், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 11: Bright Book Centre, S-27, First Floor, P.O.Box 162, Colombo Central Super Market Complex).
188 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 120., அளவு: 21x14 சமீ., ISBN: 955-9387-39-1.

சுற்றாடல் அடிப்படையிலான செயற்பாடுகள் என்னும் மகுடத்தின் கீழ் தேசிய கல்வி நிறுவனம் தொகுத்துள்ள பாடத்திட்டத்திற்கிணங்க 14 இயல்களில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.

**6212**

**சுற்றாடல் சார் செயற்பாடுகள்: செயல்நூல் தரம் 2.** கு.வி.பதிப்பாசிரியர் குழு. கொழும்பு 13: கு.வி.அச்சகம், 58. கிறீன் லேன், 1வது பதிப்பு, 2000. (கொழும்பு 13: Luxmy Printers, 195, Wolfendhal Street).
(4), 64 பக்கம், விலை: ரூபா 85., அளவு: 26x19 சமீ.

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆரம்பக் கல்வித்துறை 2000ம் ஆண்டு புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்டது. இதிலுள்ள 16 அலகுகளில் அலகு ஒவ்வொன்றிற்கும் பொருட்சுருக்கமும் பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன.

**6213**

**சுற்றாடல் சார் செயற்பாடுகள் தரம் 5.** ந.சந்திரகுமார். மட்டக்களப்பு: ராஜாஸ் புத்தக நிலையம், 111, பிரதான வீதி, 5வது பதிப்பு, செப்டெம்பர் 2007, 1வது பதிப்பு, ஜனவரி 2006. (மட்டக்களப்பு: எவர்கிரீன் அச்சகம், 93, திருக்கோணமலை வீதி).
142 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 27.5x21 சமீ., ISBN: 955-93118-17-0.

விரிவான குறிப்புகளையும், மாதிரி வினா-விடைகளையும், தெளிவான விளக்கப்படங்களையும் கொண்ட தரம் 5 புலமைப்பரிசில் வழிகாட்டி. 2003இலிருந்து தேசிய கல்வி நிறுவனத்தின் ஆரம்பப் பிரிவினால் அறிமுகப்படுத்தப்பட்ட முழுப் பாடத்திட்டத்தையும் உள்ளடக்கியிருப்பதோடு, மாணவர்கள் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளை அடையக்கூடியவாறும் அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி ஆகியவற்றை எய்தக்கூடிய வகையிலும் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் ”வித்தியாகீர்த்தி சிறி சம்மான” என்ற ஜனாதிபதி விருதினைப் பெற்றவர்.

**6214**

**சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் தரம் 5.** ஏ.யோகராஜா. கொழும்பு 12: கலாநிதி ஏ.யோகராஜா, 125 ஏ, புதிய மூர் வீதி, 4வது பதிப்பு, ஜனவரி 2010, 1வது பதிப்பு, ஜனவரி 2009, 2வது பதிப்பு, பெப்ரவரி 2009, 3வது பதிப்பு, ஓகஸ்ட் 2009. (கொழும்பு 12: லோயல் பப்ளிக்கேஷன்ஸ், 125 ஏ, புதிய மூர் வீதி).
126 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 29.5x22.5 சமீ., ISBN: 978-955-1711-14-6.

இலங்கையில் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்திற்கமைய எழுதப்பட்ட நூல். குறிப்புகள், செயற்பாடுகள், வினா-விடைகள், ஒப்படைகள், பரீட்சை வினாத்தாள்கள் என்பன இப்புத்தகத்தில் இணைக்கப்பட்டுள்ளன. தரம் 5 பாடப்பரப்பை உள்ளடக்கி வெளிவந்துள்ள நூல் இதுவாகும்.

**6215**
**சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்: புதிய பாடத்திட்டம் 2007: தரம் 2.** ஏ.எஸ்.ஜெளபர். கொழும்பு 9: S.B.H.Publications, 1வது பதிப்பு, ஜனவரி 2008. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(2),132 பக்கம், விலை: ரூபா 198., அளவு: 28x21 சமீ., ISBN: 978-955-1703-08-0.

தேசிய கல்வி நிறுவகத்தினால் 2007ம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்தினை அடிப்படையாகக்கொண்டு 16 பாட அலகுகளையும் முழுமையாகத் தழுவி இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

**6216**
**சுற்றாடல் செயல்நூல் தரம் 5.** எம்.எம்.ஜி.பிரிட்டோ. நீர்கொழும்பு: கிளின்டன் சுரேஷ்குமார், இல.38, எல்லை வீதி, கொச்சிக்கடை, 1வது பதிப்பு, 2003. (அச்சக விபரம் அறியமுடியவில்லை).
72 பக்கம், விலை: ரூபா 115., அளவு: 26x19.5 சமீ.

கல்வி அமைச்சினால் 2003ம் ஆண்டு அறிமுகமான தரம் 5 சுற்றாடற் கல்விப் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்ட நூல்.

**6217**
**சுற்றாடல் செயற்பாடு: தரம் 1.** ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை. யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, வைகாசி 1999. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
(4), 52 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 25x19 சமீ.

தரம் 1 மாணவர்களுக்கு சுற்றாடல் பற்றியும், சுற்றாடலில் காணப்படுபவை பற்றியும் இந்நூல் அறிமுகப்படுத்துகிறது. இலங்கையில் பயன்படுத்தப்படும் பாடத்திட்டத்துக்கமைய தயாரிக்கப்பட்ட நூல்.

**6218**
**சூழல்சார் சுற்றுலாத்துறை.** வைத்தியரட்ணம் பத்மானந்தகுமார். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, மே 2010. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ்).
xix, 99 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1779-41-2.

வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளம் பிரதேசத்தில் பிறந்த வை.பத்மானந்தகுமார் (07.09.1980), தனது ஆரம்பக் கல்வியை முல்லைத்தீவு, பாலிநகர் மகாவித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை மல்லாவி மத்திய கல்லூரியில் பெற்றவர். பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல்துறையில் பட்டம் பெற்று, நோர்வே நாட்டுக்கு புலமைப்பரிசில் பெற்றுச்சென்று அங்கு Norwegian University of Science and technology NTNU இல் இயற்கைவள முகாமைத்துவத் துறையில் பயின்று 2009இல் தனது MSc பட்டத்தினைப் பெற்றுக்கொண்டவர். இப்பட்டத்திற்காக இவர் மேற்கொண்ட ஆய்வின் விரிவாக்கமே இந்நூலாகும்.

**6219**
**நாமும் சுற்றாடலும் செயல்நூல் தரம் 2.** எம்.எம்.ஜி.பிரிட்டோ. நீர்கொழும்பு: கிளின்டன், இல.38, எல்லை வீதி, கொச்சிக்கடை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் அறியமுடியவில்லை).
40 பக்கம், விலை: ரூபா 55., அளவு: 26x19.5 சமீ., ISBN: 955-96547-6-4.

கல்வி அமைச்சின் புதிய பாடத்திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்ட செயல்நூல். எமது அயலில் காணப்படும் உணவுத் தாவரங்கள், வளர்ப்புப் பிராணிகள், சுற்றாடலின் கோலங்கள், புவியும் வானும், வேலைகளை இலகுவாக்கும் முறைகள், எமது உணவு, பழக்கவழக்கங்களும்

பொறுப்புகளும், நாமும் போக்குவரத்தும், எமது வளர்ச்சி, உடல் வளர்ச்சிக்குத் தடையாக அமைவன, மனித நடத்தைகள், சனசமூக அமைப்புகள் என இன்னோரன்ன 19 தலைப்புகளில் சுற்றாடல் அறிவை வளர்க்கும் பாடங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

**6220**

**மனிதனும் சூழலும்: சூழற் கல்வி பற்றிய அறிமுகம்.** த.சபாரத்தினம், ந.வாகீசமூர்த்தி (தமிழாக்கம்), பத்மாவதி சபாரத்தினம் (பதிப்பாசிரியர்). கொழும்பு: மத்திய சூழல் அதிகார சபை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: லேசர் கிரப்பிக்ஸ்).
(6), 281 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17 சமீ., ISBN: 955-9012-09-6.

இந்நூல் வருங்காலத்தில் சூழற்பாதுகாப்பு சம்பந்தமான முடிவுகளை எடுக்கப்போகும் இளம் சந்ததியினருக்குத் தேவையான பின்புல அறிவையும், திறன்களையும் வழங்கவல்லது. பொறுப்பான முடிவுகளை எடுப்பதற்குத் தேவையான தன்னம்பிக்கையையும் ஊட்டுகின்றது. இயற்கைச்சூழல், இயற்கை வளங்கள், மனிதனால் ஏற்படும் தாக்கம், சனத்தொகைப் பெருக்கம், சூழலில் அதன் தாக்கம், காணிப்பிரயோகமும் துஷ்பிரயோகமும், மண்ணரிப்பும் காப்பும், நீர்நெருக்கடி, இயற்கைநீர் மாசடைதல், வளி மாசடைதல், வறுமையும் சூழல் தரம் குன்றலும், சூழலும் மனித உடல்நலமும், உலகளாவிய சூழல் பிரச்சினைகள், நிலைத்திருக்கவல்ல அபிவிருத்தி என்ற எண்ணக்கரு, சூழல் திட்டமிடுதலும் முகாமைத்துவமும், இலங்கையிற் சூழல் பாதுகாப்பிற்கு உதவும் நிர்வாக அமைப்பு, சுற்றாடற் பாதுகாப்பில் சர்வதேச ஒத்துழைப்பு, புவிக்கோளைப் பேணுதல் ஆகிய விடயங்கள் உள்ளிட்ட 29 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இலங்கை பல்கலைக்கழக மானிய சபையின் ஒத்துழைப்புடனும், அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான நோர்வே முகவர் நிலையத்தின் (NORAD) நிதி அனுசரணையுடனும் வெளியிடப்பட்ட இந்நூல், மூன்றாம்நிலைச் சூழல்கல்வித்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கைத் திகதி 23.08.2000. சேர்க்கை இலக்கம் 508042).

### 369.4092 சாரணர் இயக்கம்

**6221**

**குருளைச் சாரணர் கையேடு.** சுப்பிரமணியம் புவன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
(10), 126 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-659-158-3.

குருளையருக்கான அங்கத்துவச் சின்னம் முதல் இணைப்பு விருது வரையிலான சகல பாடத்திட்டங்களையும் உள்ளடக்கிய இந்நூல் தெளிவான வரைபடங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இலங்கைச் சாரணர் சங்கத்தின் தலைமைக் காரியாலய ஆணையாளராகவும், கொழும்பு இந்துக் கல்லூரி, குழுச் சாரணத் தலைவராகவும் சேவையாற்றும் நூலாசிரியர் புவன், 30 ஆண்டுகளுக்கும் மேலாக சாரணர் சேவையாளராக உள்ளார். இவர் சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

### 370 கல்வியியல்

**6222**

**அதிபரின் வகிபாகம்.** திருநாவுக்கரசு கமலநாதன். கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
xii, 69 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 22x14 சமீ.

பெயர்பெற்ற அதிபர்களின் ஆளுமைகள், அவர்களின் வழிநடத்தல்கள், தனது கற்பித்தலுக்கூடாகப் பெற்ற அனுபவங்கள் எல்லாவற்றையும் ஒன்று திரட்டி, செழுமைசேர் நற்பணியை ஆற்றலின் வெளிப்பாடாக வெளிக்கொணர்ந்துள்ளார் நூலாசிரியர். ஒரு பாடசாலையின் செயற்பாட்டுக்கும் அதன் வளர்ச்சிக்கும் அதிபரின் பணி முக்கியமானது. கல்வி வளர்ச்சியில் அதிபர் கொண்டுள்ள

பொறுப்பினைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். அனுபவத்தின் மூலம் தெளிந்து கொண்டவற்றை செயற்படுத்தும் வல்லமையும் ஆளுமையும் அவரிடம் இருக்கவேண்டும் என்று குறிப்பிடும் நூலாசிரியர், அதிபர் ஒருவர் பாடசாலையின் முன்னேற்றத்தில் எதிர்கொள்ளவேண்டிய வகிபாகங்களையும் குறிப்பிடுகின்றார். அவற்றைச் சிறப்புடன் நிறைவேற்றிக் கொள்வதற்குரிய வழிகாட்டியாகவே இந்நூல் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்நூலாசிரியர் கல்வி அமைச்சின் நிபுணத்துவ ஆலோசகரும், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதற் பீடாதிபதியுமாவார்.

**6223**

**ஆசிரியரின் பங்கு.** எச்.ஜெயதுங்க ஆராச்சி (மூலம்), T.சீவரத்தினம், K.T.கனகரத்தினம், சுவர்ணா நவரத்தினம், V.A.டேவிட், V.M.L.R.பண்டார, பூர்ணா த சில்வா, M.D.J.குணத்திலக்க, F.P.C.A.T. ஜெயசேகரா (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1990. (கொழும்பு: Gunaratne Offset pvt. Ltd.)
28 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், ஆசிரியர்களுக்கான சமூகப்பொறுப்பு பற்றி விளக்கப்பட்டுள்ளது. முதலாம் பகுதியில், பங்களிப்பு என்றால் என்ன, அதிலும் ஆசிரியரின் பங்களிப்பு என்ன என்பது பற்றியும், இரண்டாம் பகுதியில் கல்விமான்கள் காட்டும் ஆசிரியரின் பல்வேறு பங்குகள் பற்றியும் குறிப்பிடப்படுகின்றது. மூன்றாம் பகுதியில் வெவ்வேறு துறைகளில் ஆசிரியரின் பங்கினை எவ்வாறு வேறுபடுத்தி அறியலாம், முழுப்பாடசாலைகளிலும் ஆசிரியர் செய்யவேண்டிய கடமைகள், பாடசாலை சமூகத்திற்கு ஆசிரியர் ஆற்றவேண்டிய கடமைகள், தொழில்சார் வளர்ச்சி, ஆளுமை வளர்ச்சி என்பவற்றில் ஆசிரியர்களின் கடமைகள் ஆகிய விடயங்கள் பற்றிப் பேசப்படுகின்றது.

**6224**

**ஆசிரியருக்குத் தொழில்சார் கல்வி அவசியம்.** கே.எஸ்.இராஜரட்ணம், K.T.கனகரத்தினம், வீ.இராசையா, கே.கிருஷ்ணபிள்ளை, ஏ.சிவராஜா, சி.புலேந்திரன், Y.L.A.வஹாப், H.G.C.A.T. ஜெயசேகரா , K.D.நளினசேன, (செயற்குழு). கொழும்பு: தொலைக் கல்விக் கிளை, இலங்கை கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1986. (கொழும்பு: குணரத்தின ஒப்செட் லிமிட்டெட்).
20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். ஆசிரியர்கள் தமது தொழிலைச் சிறப்பாக நிறைவேற்ற அத்தொழிலுக்கான விஷேட ஆற்றல்களைப் பெற்றிருக்கவேண்டும் என்ற அடிப்படையில், தொழில்சார் கல்வி என்றால் என்ன, ஆசிரியத்தொழில், ஆசிரியர்களுக்குரிய தொழில்சார் கல்வி, ஆசிரியரின் நற்பண்புகள், ஆசிரியரின் ஒழுக்கம், தொழில்சார் தொடர்புகள், தொழில்சார் சமூகத் தொடர்புகள் ஆகிய தலைப்புகளில் இந்நூல் விளக்கமளிக்கின்றது.

**6225**

**ஆய்கூடங்களும் ஆய்கூட உபகரணங்களும்.** வில்சன் திசாநாயக்க (மூலம்), M.H.M.யாகூத், R.P.A.ஜயசேகர, S.P.தோரதெனிய, M.K.பீரிஸ், A.J.குணவர்த்தன (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: The Pacific Press (Pvt) Ltd).
56 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். இதில் பாடசாலை ஆய்வுக்கூடத்தைப் பேணும்வகையில் ஒரு ஆசிரியர் அறிந்திருக்கவேண்டிய விடயங்கள் அடங்குகின்றன. பொருள் பதிவுப் புத்தகங்களைப் பேணல், உபகரணங்களையும் பொருள்களையும் களஞ்சியப்படுத்தல், அவற்றைப் பாதுகாத்தல், உபகரணங்களை நன்கு பராமரித்தல், தேவைப்படும் உபகரணங்களைத் தருவித்துக்கொள்ளல், சுற்றாடலிலிருந்து மாதிரிகளை (தற்கூறுகளை) சேகரித்தல், தேவையான பொருட்களைக் கொள்வனவு

செய்தல், ஆய்வுகூட விபத்துகளைத் தவிர்த்துக்கொள்ளல் போன்ற விடயங்களை இந்நூல் உள்ளடக்குகின்றது.

**6226**

**ஆய்வு முறையியல்: முறைகளும் நுட்பங்களும்.** வை.நந்தகுமார். பேராதனை: பேராசிரியர் வை. நந்தகுமார். தலைவர், புவியியல்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
xii, 210 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-51000-0-7.

பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கும், பட்டப்பின் படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கும் உதவும் வகையில் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆய்வின் அடிப்படைகள், ஆய்வின் படிமுறைகள், ஆய்வின் வகைகள், விஞ்ஞான ஆய்வின் படிமுறைகளும் மாதிரி உருக்களின் வளர்ச்சிகளும், குடியும் மாதிரி எடுப்புமுறைகளும், தரவுகளைச் சேகரித்தலும் அட்டவணைப்படுத்தலும், அளவீட்டுத் திட்டங்களும் வகைகளும், அளவுசார் தரவுகளினது பகுப்பாய்வுகளும், புள்ளிவிபரத் தரவுகளினைப் பயன்படுத்தி வரைபடங்களை அமைத்தல், ஆய்வு நடவடிக்கைகளில் புள்ளிவிபரவியற் பயன்பாடுகள், பண்புசார் தரவுப் பகுப்பாய்வு ஆகிய தலைப்புக்களில் இந்நூல் ஏராளமான விபரங்களைத் தருகின்றது.

**6227**

**ஆளுமை 1.** P.M.S.மகாலேகம் (மூலம்), P.D.டேவிட், H.G.C.T. ஜெயசேகரா, P.M.L.R.பண்டார, S.D.லயனல் அமரகுணசேகர (பதிப்பாசிரியர்கள்). வீ.இராசையா, K.T.கனகரத்தினம், சி.புலேந்திரன், Y.L.A.வஹாப், M.D.J.குணத்திலக்க , (மொழிபெயர்ப்பாளர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (இரத்மலானா: சர்வோதய விஸ்வலேகா அச்சகம்).
32 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். தங்களுக்கும் சமூகத்திற்கும் உச்சப்பயன் கிட்டும் வகையில் தனிப்பட்டவர்களின் ஆளுமையை விருத்திசெய்தல் கல்வியின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. குணப்பண்புகளை அறிந்துகொள்ளுதல், குணப்பண்புகளும் ஆளுமை வகைகளும் ஆகிய அம்சங்கள் முதலாம் பகுதியிலும், ஆளுமை, ஆளமை விருத்தி, ஆளுமை முதிர்ச்சி ஆகியவை 2வது பகுதியிலும் விளக்கப்பட்டுள்ளன.

**6228**

**ஆளுமை.** P.M.S.மகாலேகம் (மூலம்), P.D.டேவிட், H.G.C.T. ஜெயசேகரா, P.M.L.R.பண்டார , S.D.லயனல் அமரகுணசேகர (பதிப்பாசிரியர்கள்). வீ.இராசையா, K.T.கனகரத்தினம், சி.புலேந்திரன், Y.L.A.வஹாப், M.D.J.குணத்திலக்க , (மொழிபெயர்ப்பாளர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (இரத்மலானா: சர்வோதய விஸ்வலேகா அச்சகம்).
36 பக்கம், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

இந்நூல் முன்னர் வெளியான ஆளுமை 1 என்ற நூலின் தொடர்ச்சியாக வெளிவந்த 2வது பாகமாகும். தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந் நூல், ஆளுமை உருவாக்கத்தில் செல்வாக்குப்பெறும் காரணிகள், ஆசிரியரும் ஆளுமை வளர்ச்சியும், ஆளுமையை அளவிடுதல் ஆகிய மூன்று பிரிவுகளில் ஆளுமையில் சூழல் காரணிகளின் செல்வாக்கு பற்றிச் சொல்கின்றது.

**6229**

**இரு நூற்றாண்டுகளில் இலங்கையிற் கல்வி.** U.L.அலியார். சாய்ந்தமருது: பைத்துல் ஹிக்மாஹ், 53 கீச்சர் வீதி, சம்மாந்துறை 2, 1வது பதிப்பு, நவம்பர் 1999. (சாய்ந்தமருது: ஸ்டார் ஓப்செட் பிரின்டர்ஸ்).
vi, 122 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x14 சமீ., ISBN: 955-95831-2-3.

ஆசிரியரின் **கல்வியியல் நோக்கு** என்ற முன்னைய நூலில் இடம்பெற்ற 5 கட்டுரைகள் திருத்தப்பட்டும், மேலும் ஏழு கட்டுரைகள் புதிதாகச் சேர்க்கப்பட்டும் மொத்தம் 12 கட்டுரைகளுடன் இந்நூல் வெளிவந்துள்ளது. இரு நூற்றாண்டுகளில் இலங்கையிற் கல்வி, கல்வியில் தத்துவ நோக்கு, முன்பள்ளிக் கல்வி-நோக்கும் போக்கும், ஆரம்பக் கல்வி ஆசிரியர் உயர் பண்புகள், கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும், இளைஞர்களுக்கு வாழ்வளிக்கும் தொழில்வழிகாட்டல் சேவை. ஆசிரியர் தகுதியும் முன்மாதிரியும், கல்வி மூலம் சமாதானப் பண்பாடு, ஆசிரியரும் தகவல் தொழில்நுட்பமும், பெண்களுக்கான கல்வி வாய்ப்புக்கள், ஆசிரியர் சேவையின் அந்தஸ்தும் சமூகப் பெறுமானமும், கல்வியில் சமவாய்ப்பு ஆகிய 12 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**6230**

**இலங்கை, வடபிரதேசக் கிராமப் பள்ளிக்கூடங்களின் மேம்பாடு.** நாகமுத்து தணிகாசலம்பிள்ளை. கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ்).
xii, 256 பக்கம், வரைபடங்கள். அட்டவணைகள், விலை: ரூபா 950., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-207-8.

கிராமப்பள்ளிக்கூடங்களை மேம்படுத்துவதில் உள்ள சிக்கல்களை இந்நூல் ஆராய்கின்றது. இலங்கையின் வடபிரதேசத்து பள்ளிக்கூடங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டுள்ள இந்நூல் கிராமப் பள்ளிக்கூடங்களின் பின்னணி, அமைப்பு என்பவற்றை விரிவாக ஆராய்வதுடன் பள்ளிக்கூட விருத்திக்கு சமூகமும் சமூக விருத்திக்கு பள்ளிக்கூடமும் ஒன்றுக்கொன்று ஆதாரமாகவுள்ளதையும் எடுத்துக்காட்டுவதுடன் கிராமப் பள்ளிக்கூடங்களை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளையும் பரிந்துரைக்கின்றது. நூலாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தினையும் திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி முகாமைத்துவத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியிலில் முதுமாணிப்பட்டத்தையும் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். இலங்கைக் கல்விச்சேவையில் ஆசிரியராகவும், அதிபராகவும், கல்விப் பணிப்பாளராகவும் விளங்கியவர். கல்வி அமைச்சின் ஆலோசகராகப் பணியாற்றுகின்றார்.

**6231**

**இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்க மிஷன்.** எஸ்.ஜெபநேசன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361,1/2 டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
xxii, 282 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: ரூபா 750., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-150-7.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட உயர்கல்வி முயற்சிகள் பற்றிய ஓர் ஆய்வு இதுவாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் சமயப் பிரச்சாரத்திற்கென வந்த அமெரிக்கன் மிஷனரிமார் 1823-1855 காலப்பகுதியில் மேலைத்தேயப் பல்கலைக்கழகங்களுக்கு ஈடானதொரு கல்லூரியை (யாழ்ப்பாணக் கல்லூரி) நிறுவி நடத்தினார்கள். ஆசியாவில் நிறுவப்பெற்ற பழமைவாய்ந்ததும் நவீனபாணியில் அமைந்ததுமான உயர்கல்லூரிகளில் இதுவே மிகமுற்பட்டதாகும். இத்தகைய கல்வி நிறுவனத்தை நிறுவி நடாத்திய அமெரிக்க மிஷனரிமாரின் செயற்பாடுகள் 19ம் நூற்றாண்டு இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் ஏற்படுத்திய தாக்கத்தை இந்நூல் விரிவாக ஆராய்கின்றது. சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆதீனத்தின் ஓய்வுபெற்ற பேராயராவார்.

**6232**

**இலங்கையில் கல்வியும் இனஉறவும்.** கௌரி சண்முகலிங்கன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
xvii, 161 பக்கம், அட்டவணைகள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 450., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-188-0.

கல்வியின் சமூக பண்பாட்டுப் பரிமாணங்கள் தொடர்பாக ஆராயும் இந்நூல் இனவாத கருத்தியல் நடைமுறைகளுக்குள் அமிழ்ந்துபோயுள்ள இலங்கையின் கல்வியும் இன உறவும் தொடர்பான ஆழமான- ஆக்கபூர்வமான சிந்தனைகளை முன்வைக்கின்றது. பன்மைச் சமூகங்களில் கல்வியும் இன உறவும், இலங்கையின் இன அமைவும் கல்வி நிர்வாக அமைப்பும், இனமுரண் வரலாறு, மொழிவழிக் கல்விக் கொள்கைகள், இனவழி அசமத்துவங்கள், எதிர்காலம் ஆகிய ஆறு இயல்களில் இவ்வாய்வு முன்வைக்கப்படுகின்றது. கௌரி சண்முகலிங்கன் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியின் ஆசிரியராவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வணிகமாணிப் பட்டத்துடன் கல்வியியல் முதுகலைமாணிப் பட்டத்தினையும் பெற்றவர். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் என்.சண்முகலிங்கனின் துணைவியாருமாவார்.

***6233***

***இலங்கையில் பாடசாலைகளின் பாடவிதானம்.*** S.D.லயனல் அமரகுணசேகர (மூலம்), சுவர்ணா நவரட்ணம், த.சிவரத்தினம், K.T.கனகரத்தினம், Y.L.A.வஹாப். H.G.C.A.T. ஜெயசேகரா, M.D.J.குணத்திலக்க (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1990. (கொழும்பு: The Pacific Press (Pvt) Ltd).
44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். பாடவிதானம் என்றால் என்ன, பாடவிதானத்தைத் திட்டமிடலும் செயற்படுத்தலும், இலங்கைப் பாடசாலை பாடவிதானத்தின் வளர்ச்சி, இலங்கையில் பாடவிதான அபிவிருத்தி முறை ஆகிய நான்கு பகுதிகளில் இந்நூலின் விடயங்கள் அமைந்துள்ளன.

***6234***

***இலங்கையிலே தமிழ்க் கல்வியும் ஆய்வும்: தொடர்ச்சியும் வளர்ச்சியும்.*** சி.தில்லைநாதன். கொழும்பு: கொழும்புத் தமிழ்ச்சங்கம், 1வது பதிப்பு, 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(2), 18 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

அமரர் தமிழவேள் இ.க.கந்தசுவாமி நினைவுப் பேருரைத் தொடரில் முதலாவதாக ஆற்றப்பட்ட உரையின் நூல்வடிவம். இலங்கையின் தமிழ்க்கல்வியும் ஆய்வும் தொடர்பான ஒரு நீள்முகப் பார்வையை இவ்வுரை தருகின்றது. அமரர் இ.க.கந்தசுவாமி (01.09.1919-19.10.2008) கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் செயலாளராகப் பணியாற்றி மறைந்தவர். தன் வாழ்நாட்பணியாக கொழும்புத் தமிழ்ச்சங்கத்தை வளர்த்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

***6235***

***இலங்கையின் கல்வித்துறை: ஊழல்களும் பரிமாணங்களும்: ஆய்வு அறிக்கை மே 2009.*** TISL ஆய்வுக்குழு. கொழும்பு 7: ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா, 28/1 புல்லர்ஸ் ஒழுங்கை, 1வது பதிப்பு, மே 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(2), 84 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18 சமீ., ISBN: 978-955-1281-26-7.

இவ்வாய்வறிக்கை, பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அமரசிறி டி சில்வா தலைமையிலான குழு, 2008 மே மாதம் தொடக்கம் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையிலானது. பாடசாலை மட்ட ஊழல், கட்டணங்களும் கொடுப்பனவுகளும், நிர்வாகம் தொடர்பான ஊழல், ஊழலுக்கு எதிரான முறைப்பாடுகள் ஆகிய பிரதான அம்சங்களை இவ்வாய்வு முடிவுகள் உள்ளடக்கியுள்ளன.

***6236***

***இலங்கையின் தமிழ்க் கல்விச் சமூகம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒரு பார்வை.*** த.ஜெயபாலன். லண்டன் E11 3JX: தேசம் வெளியீடு, த.பெ.எண் 35806, வோல்த்தம்ஸ்ரோ, 1வது பதிப்பு, நவம்பர் 2010. (கண்டி: அச்சக விபரம் தரப்படவில்லை).
104 பக்கம், விலை: ரூபா 220., அளவு: 21x14.5 சமீ.

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகளை விமர்சனத்துக்குள்ளாக்குவதனூடாக இலங்கையின் தமிழ்க்கல்விச் சமூகம் பற்றிய தனது பார்வையை இதிலுள்ள ஐந்து ஆக்கங்களினூடாக ஊடகவியலாளர் த.ஜெயபாலன் முன்வைக்கின்றார். லண்டனிலிருந்து இயங்கும் தனது தேசம் இணையத்தளத்தில் வெளியாகிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பற்றிய மூன்று விரிவான கட்டுரைகளும், பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் அவர்களுடனான விரிவான நேர்காணல் ஒன்றும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தேசம் சஞ்சிகையில் இக்கட்டுரைகள் ஜூலை 2010-நவம்பர் 2010 இடைப்பட்ட காலப்பகுதிகளில் வெளியாகிய வேளையில் பலராலும் இக்கட்டுரைகள் தொடர்பாகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடர்பாகவும் வழங்கப்பட்ட தேர்ந்த பின்னூட்டங்களும் பின்னிணைப்பாக வழங்கப்பட்டுள்ளன.*

***6237***

***இலங்கையின் பாடசாலை அமைப்பு முறையின் பரம்பல்.*** S.D.லயனல் அமரகுணசேகர *(மூல ஆசிரியர்),* K.T.கனகரத்தினம், சுவர்ணா நவரத்தினம், H.G.C.A.T. ஜெயசேகரா , K.P.de மெல், P.A.டேவிட், Y.L.A.வஹாப் *(பாடப் பதிப்பாசிரியர்கள்).* கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், *1வது பதிப்பு, 1990. (*கொழும்பு: The Pacific Press pvt. Ltd.*)*
*48 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். தற்கால பாடசாலைமுறை பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள நாட்டின் பாடசாலை அமைப்புமுறையின் பரம்பலைப்பற்றி வரலாற்று அடிப்படையில் ஆராய்வது மிகவும் பயனுள்ளதாகும். இந்த நூலில் இலங்கையின் பாடசாலைகளின் அமைப்பு முறையில் பரம்பலைப் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன. புராதன இலங்கையில் பாடசாலை அமைப்பு முறைகள், வெளிநாட்டு ஆதிக்கம், போர்த்துக்கேயர்கால பாடசாலைகள், ஒல்லாந்தர்கால பாடசாலைகள், பிரித்தானியர்கால பாடசாலைகள், 1943ஆம் ஆண்டு கல்வி விஷேட குழுவின் அறிக்கை, சுதந்திரம் பெற்றபின் பாடசாலை அமைப்புமுறையின் பரம்பல், 1972ம் 1978ம் ஆண்டு கல்வி புனரமைப்பு ஆலோசனைகள், அதன் பின்னரான பாடசாலைகளின் அமைப்புமுறை ஆகிய விபரங்கள் நான்கு இயல்களில் விபரிக்கப்பட்டுள்ளன.*

***6238***

***உடற்கல்வி அறிமுகமும் ஆசிரியர் பொறுப்புக்களும்.*** M.அப்துல் வாஹிது, M.S.அஸாட், வீ.அமரசிங்க, S.M.சினேகலதா, சந்திரா ஹெம்மாத்தகம, A.G.டிங்கிரி பண்டா, S.M.P.சேனானாயக்க, பூர்ணா த சில்வா, பீ.வீ.பிரேமசந்திர *(எழுத்தாளர்கள்).* கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், *1வது பதிப்பு, 1988. (*கொழும்பு: United Merchants Limited*).*
*40 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், உடற்கல்விக்கான அறிமுகமும், உடற்கல்வியும் ஆளுமை வளர்ச்சியும், ஆசிரியரின் பொறுப்புக்கள் ஆகிய விடயங்கள் 3 பகுதிகளில் தனித்தனியாக விபரிக்கப்பட்டுள்ளன.*

***6239***

***உயர்கல்வியில் பெண்கள்: சமூக, பொருளாதார அணுகுமுறை.*** *மா.சின்னத்தம்பி. யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, சித்திரை 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*(4), 32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.*

*சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையாக 05 சித்திரை 2010 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்தப்பட்ட உரையின் நூல் வடிவம். பேராசிரியர் மா.சின்னத்தம்பி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல்துறைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.*

***6240***

**உலகக் கல்வி வரலாறு.** சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
112 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1857-79-0.

தொல்குடியினரின் கல்வி, கிரேக்கக் கல்வி மரபு, சீன நாகரீகத்துக் கல்வி, ரோமானியக் கல்வி, தொல்சீர் தமிழகக் கல்வி, வேத உபநிடதக் காலக் கல்வி, பௌத்த கல்வி வளர்ச்சி, கிறிஸ்தவக் கல்வி வளர்ச்சி, இஸ்லாமியக் கல்வி வளர்ச்சி, ஐரோப்பிய மறுமலர்ச்சியும் கல்வியும், கல்வி விரிவாக்கற் செயற்பாடுகளின் வளர்ச்சி, இருபதாம் நூற்றாண்டின் கல்வி, பல்கலைக்கழக வரலாறு, கலைத்திட்ட வரலாறு, தொலைக்கல்வி வரலாறு, இருபத்தோராம் நூற்றாண்டின் கல்வி வளர்ச்சி ஆகிய தலைப்புகளில் உலகக் கல்வி வரலாறு ஆராயப்பட்டுள்ளது. காலனித்துவத்திலிருந்து விடுதலைபெற்ற நாடுகளும் அவ்வாண்டுகளும் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

**6241**
**ஒலிச் சக்தியும் ஒலி ஊடுகடத்தலும்.** N.J.லியனகே (மூலம்), ந.வாகீசமூர்த்தி, ப.சபாரத்தினம், R.P.A.ஜயசேகர, சுனேத்திரா கருணாரத்ன, K.A.D.S.சரத்சந்திர, P.A.திலகரத்ன, A.P.N.H.பெரேரா (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press Pvt. Ltd.)
56 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். ஒலியின் இயல்பு, ஒலி ஊடுகடத்தல், ஒலியின் கதி, ஒலியின் சிறப்பியல்புகளும் இசைக் கருவிகளும், ஒலி அலைகள், ஒலியின் இயல்புகளுக்கும் ஒலி அலைவடிவத்திற்கும் இடையே உள்ள தொடர்பு, ஒலித்தெறிப்பு, ஒலி முறிவு, ஒலி உறிஞ்சல் ஆகிய விடயங்கள் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

**6242**
**கட்டுரை வரைதலும் சுருக்கமெழுதுதலும்.** சி.புலேந்திரன், சி.குமாரசாமி, வே.சுப்பிரமணியம், எம்.எம்.மன்சூர், ம.செ.அலெக்சாந்தர், கே.நடேசன் (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press Pvt. Ltd.).
24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். இதில் முதல் மூன்று பகுதிகளும் கட்டுரை என்பது என்ன? கட்டுரை வகைகள், கட்டுரை ஒன்றை எழுதுதல், கட்டுரை எழுதும் ஆற்றலை வளர்த்தல், கட்டுரை எழுதும் திறன்கள், கட்டுரை எழுதும்போது ஏற்படும் தவறுகளும் அவற்றை நீக்குவதற்கான பரிகாரங்களும் ஆகிய விடயங்களை விபரிக்கின்றன. நான்காவது பகுதியில் சுருக்கம் என்றால் என்ன? சுருக்கி எழுதும்போது கவனிக்கவேண்டியவை, பொழிப்பு என்பனவற்றை விளக்குகின்றது.

**6243**
**கணித ஆசிரியன்.** H.G.C.A.T. ஜெயசேகரா , W.M. பியதாச, M.P.M.ஷிப்லி, ஏ.சிவராஜா, G.ஹேமஜித் மஹிந்தரத்ன (செயற்குழு). கொழும்பு: இலங்கைக் கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1986. (கொழும்பு: Gunaratne Offset pvt. Ltd.)
28 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

கனிட்ட, இடைநிலை வகுப்புகளில் (ஆண்டு 7-11) கற்பிக்கும் கணித ஆசிரியர்களுக்கான விளக்கமளிக்கும்வகையில் உருவாக்கப்பட்ட நூல். கனிட்ட இடைநிலை மாணவன், கணித ஆசிரியனின் பண்புகள், கணித பாடத்திட்டம், கணித வகுப்பறை ஆகிய தலைப்புகளில் தகவல்கள் தரப்பட்டுள்ளன. தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்டது.

**6244**

**கல்வி உளவியற் கருத்துக்கள்.** *சபா.ஜெயராசா. கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 340, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஜுன் 1994. (கொழும்பு 11: லங்கா ஏசியா பிரின்ற் லிமிட்டெட், எஸ். 26, மூன்றாம் மாடி, கொழும்பு மத்திய சிறப்பங்காடி).*
*60 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 17.5x11.5 சமீ.*

*கல்வி உளவியல், நவீன கல்வி உளவியற் சிந்தனையாளர், கற்றற் காரணிகள், கற்றற் கோட்பாடுகள், உளமொழியியல், அறவொழுக்க உளவியல், கல்வியும் உயிரியல் தீர்மானிப்பும், உளப்பிணி நீக்கல்-கோட்பாடுகளும் உபாயங்களும் ஆகிய எட்டுத் தலைப்புகளில் கல்வி உளவியல் பற்றி நூலாசிரியர் விரிவாக இந்நூலில் விபரிக்கின்றார். (பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 534972)*

**6245**

**கல்வி நுட்பவியல்.** *சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, யுஜீ 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, தை 2009. (கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை).*
*128 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-1857-52-3.*

*கல்வி நுட்பவியல் பற்றிய கருத்து விளக்கம், அதன் வளர்ச்சி, சிறந்த கற்பித்தலின் பண்புகள், எல்டனின் முறைமைகள், தொடர்பாடல் நுட்பங்கள், நங்கூரநிலைக் கற்றல், இணைவரைபாக்கல் நுட்பங்கள், செயற்றிட்ட நுட்பங்கள், அரங்குவழிக் கற்பித்தல், நுண்கற்பித்தலியல், இணைக்குழுக் கற்பித்தல் நுட்பங்கள், ஒப்படை நுட்பம், வினா நுட்பங்கள், கற்பித்தலிற் கைத்தாவல்கள், கற்றலும் விளையாட்டுப் பொருட்களும், பிரச்சினை விடுவித்தல் நுட்பங்கள், கல்வியிற் கணிப்பொறிகள், கற்றலும் உறக்கமும், மாற்றுவலுவுடையோருக்கான நுட்பங்கள், கர்ப்பமஸ் அவர்களின் மாற்றுக் கற்பித்தலியல், எண்மப் புரட்சியும் கற்றல் கற்பித்தலும், ஆகிய கல்வியியல் கூறுகள் 21 இயல்களில் இந்நூலில் பதிவாகியுள்ளன. இறுதியியல் கலைச்சொற்களைக் கொண்டுள்ளது. பேராசிரியர் சபா.ஜெயராசா தமிழில் கல்வியியல் துறைசார்ந்த நூல்கள் பலவற்றை எழுதியுள்ளவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தில் நீண்டகாலம் பணியாற்றியவர்.*

**6246**

**கல்வி முகாமைத்துவத்தில் விடய ஆய்வு.** *பாலசுப்பிரமணியம் தனபாலன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*
viii, *131 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-659-190-3.*

*இந்நூலில் கல்வியியல் விடய ஆய்வுகள் தொடர்பான அடிப்படை விடயங்கள், ஆய்வு அணுகுமுறைகள், ஆய்வுத்திறன்களை வளர்த்தல் தொடர்பான வழிகாட்டல்கள் என்பன முன்மொழியப்பட்டுள்ளன. அத்துடன் மாதிரி விடய ஆய்வுக் கற்கைகளும் விடைகளுக்கான வழிகாட்டல்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பாக இலங்கை கல்வி நிர்வாக சேவை பரீட்சை வினாத்தாள்களில் காணப்பட்ட விடய ஆய்வுக் கற்கைகளும் அவற்றிற்கான விடைக் குறிப்புகளும் தொகுக்கப்பட்டுள்ளன. பா.தனபாலன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியானவர். இலங்கைத் தேசிய கல்வி நிறுவனத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முது தத்துவமாணிப் பட்டத்தினையும் அகில இந்திய முகாமைத்துவ நிறுவனத்தில் உளவியல் கல்வி தொடர்பான டிப்ளோமாவையும் பெற்றவர். தற்போது யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதியாகப் பணியாற்றிவருகிறார்.*

**6247**

**கல்வித் தொழில் நுட்பம்.** G.G.லீலானந்த *(மூலம்), எஸ்.டி.எல்.குணசேகர,* P.A.டேவிட், H.G.C.A.T. *ஜெயசேகரா , எஸ்.ஜெயதுங்க ஆராச்சி,* P.M.L.R.*பண்டார ,* Y.L.A.*வஹாப், சுவர்ணா நவரட்ணம் (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1990. (கொழும்பு:* The Pacific Press (Pvt) Ltd.*).*
*44 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். கல்வித் தொழில்நுட்பம் என்றால் என்ன, நவீனகால கல்வித் தொழில்நுட்ப முன்னேற்றம், வகுப்பறைக் கற்பித்தலுக்கு இலகுவான தொழில்நுட்பம், வகுப்பறைக் கற்பித்தலுக்கு பொறிமுறைத் தொழில்நுட்பம் ஆகிய தலைப்புகளில் நான்கு பகுதிகளாக இந்நூல் கல்வித் தொழில்நுட்பத்தை விளக்குகின்றது.*

**6248**

**கல்விப் புள்ளியியல் விளக்கம்.** பி.சமரசேகர, T.W.ரணதுங்க, *(மூல ஆசிரியர்கள்), ,* K.T.கனகரத்தினம், சுவர்ணா நவரட்ணம், Y.L.A.வஹாப், J.S.கமலசூரிய, G.ஹேமஜித் மஹிந்தரத்ன, H.G.C.A.T. ஜெயசேகரா , P.A.டேவிட், கே.அமரதுங்க, P.M.L.R.பண்டார , எச்.ஜெயதுங்க ஆராச்சி *(பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு:* The Pacific Press (Pvt) Ltd.*).*
*38 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். வகுப்பறைப் பரீட்சைப் பெறுபேறுகளை முன்வைத்து மாணவர்கள் தொடர்பான பல்வேறு தீர்மானங்களை மெற்கொள்ளும் தேவை ஆசிரியருக்குண்டு. அத்தீர்மானம் சரியாக இருக்க பெறுபேற்றுப் புள்ளிகளை சரியாகப் பொருள்கொள்ளல் முக்கியமாகும். இதற்கு புள்ளிவிபரவியல் பற்றிய அறிவு அவசியமாகும். இந்நூல் அவ்வறிவை ஆசிரிய-மாணவர்கள் பெற்றுக்கொள்ளும்வகையில் வழிகாட்டுகின்றது. புள்ளிவிபரவியலில் உபயோகிக்கப்படும் பல்வேறு அளவிடைகள், மூலப்புள்ளிகளின் இயல்பு, புள்ளிகளுக்கு விளக்கமளித்தல், புள்ளிகளை நியமப்படுத்தல் ஆகியன பற்றிய அடிப்படை விளக்கத்தினை இந்நூல் வழங்குகின்றது.*

**6249**

**கல்வியியல்: அடிப்படை எண்ணக்கருக்கள்.** *மா.செல்வராஜா. செங்கலடி: மா.செல்வராஜா, முதுநிலை விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, 1வது பதிப்பு, ஜுன் 2005. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டர்ஸ், 70/7 கனால் வீதி, ஹெந்தளை).*
*120 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5*x*14 சமீ.,* ISBN: *955-98684-0-3.*

*பல்கலைக்கழகத்தின் கல்வியியல்துறை மாணவர்களிடையே கல்வியியல் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்களை அறிமுகப்படுத்தும் நோக்குடன் இந்நூல் எழுதப்பட்டது. கல்வியின் வரைவிலக்கணம், கல்வியின் நோக்கம், கல்வியில் தத்துவ அடிப்படை, ரூசோவின் கல்வித் தத்துவம், கல்வியில் இயற்கைவாதம், கல்வியில் பயன்பாட்டுவாதம், கல்வியில் இலட்சியவாதம், கல்வியில் ஜோன் டிவியியின் சமூகச் சிந்தனைகள், கல்வியில் உளவியல் அடிப்படை, கல்வியில் முன்பிள்ளைப் பருவம் ஆகிய பத்து இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 595748)*

**6250**

**கல்வியியல் ஆய்வின் இயல்புகள்.** *ப.கா.பக்கீர் ஜ.்.பார். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம்,* B3-G3, *ரம்யா வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 10: குமரன் பதிப்பகம்,* B3-G3, *ரம்யா வீதி).*
*(8), 60 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22*x*15 சமீ.,* ISBN: *978-955-659-212-2.*

*இந்நூலில், கல்விசார் அறிவுக்கு ஆய்வுகளின் பங்களிப்புக்கள், கல்வியியல் ஆய்வில் அறிவாதார முறையியல்சார் (*Epistemological*) பிரச்சினைகள், தொகைசார் ஆய்வும் பண்புசார் ஆய்வும், விஞ்ஞான விசாரணை பற்றிய பின்நவீனத்துவ விமர்சனம் ஆகிய நான்கு தலைப்புக்களில் கல்வியியல் ஆய்வின் இயல்புகள் பற்றிப் பேசப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று தைக்காப்பள்ளியைச் சேர்ந்த பக்கீர் காதர் பக்கீர் ஜ.்.பார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமானிப் பட்டத்தைப் பெற்றவர். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தில் விசேட தேவைகள் கல்வித்துறையின் தலைவராகப் பணியாற்றிவருகிறார்.*

**6251**

**கல்வியியல் ஆய்வு வினாக்கொத்துக்கள்.** ப.கா.பக்கீர் ஜஃபார். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 10: குமரன் பதிப்பகம், B3-G3, ரம்யா வீதி).
(6), 85 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-215-3.

கல்வியியல் ஆய்வுக்காகத் தேவையான தகவல்களைத் திரட்ட முயற்சிக்கும் ஆய்வாளர் ஒருவர் பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தி அவற்றைத் திரட்டலாம். வினாக்கொத்து, நேர்காணல் பட்டியல், அவதானிப்புப் பட்டியல். சோதனைகள், நிறுவன ஆவணங்கள், அரசாங்கப் புள்ளிவிபரங்கள், நாட்குறிப்புப் பதிவுகள், குறைகாண் பரிசோதனைகள் என்றெல்லாம் தகவல் திரட்டும் ஆய்கருவிகளை விபரித்துக்கொண்டு செல்லலாம். தகவல் திரட்டப் பயன்படும் ஆய்கருவிகளில் மிகக் கூடுதலாகப் பயன்படுத்தப்படும் ஒன்றுதான் வினாக்கொத்து ஆகும். இவ்வினாக்கொத்தினைப் பற்றி இந்நூல் விரிவாக விபரிக்கின்றது. வினாக்கொத்தொன்றைத் திட்டமிடல், வினாக்கொத்தின் உருப்படிகளின் வகைகள், வகைப்படுத்தல் அளவுத்திட்டம், கூருணர்ச்சி உள்ள வினாக்களைக் கேட்டல், வினாக்கொத்தின் வெளியமைப்பு, வினாக்கொத்துக்கான முன்னோடிச் சோதனைகள், தபாலில் அனுப்பப்படும் வினாக்கொத்துக்கள், ஆய்வு வினாக்கொத்தொன்றைக் கட்டியெழுப்புதல், கட்டமைத்தல், நடைமுறைப்படுத்தலுக்கான படிகள் ஆகிய தலைப்புக்களில் இவை விபரிக்கப்பட்டுள்ளன. உதாரணத்துக்குச் சில மாதிரி உருப்படிகளும் இணைக்கப்பட்டுள்ளன. கல்வியியலாய்வு மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் சமூக அறிவியல்துறை சார்ந்த அனைத்து மாணவர்களுக்கும் இந்நூல் பயனுள்ளது.

6252
**கல்வியியல் ஆய்வொன்றைத் திட்டமிடல்.** ப.கா.பக்கீர் ஜஃபார். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 10: குமரன் பதிப்பகம், B3-G3, ரம்யா வீதி).
(8), 78 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-659-213-9.

இந்நூலில் ஆய்வுப் பிரச்சினையொன்றை இனம்காணல், ஆய்வு முன்மொழிவொன்றைத் தயாரித்தல், முன்னோடி ஆய்வொன்றை நடத்துதல், ஆய்வுக்கட்டுரையின் வடிவமைப்புரு, ஆய்வுக்கட்டுரையைப் பூரணப்படுத்திய பின்பு ஆகிய 5 பிரிவுகளில் கல்வியியல்துறை மாணவர்கள் ஒரு ஆய்வைத் திட்டமிடுவது எவ்வாறென்று நூலாசிரியர் விளக்கியுள்ளார். பின்னிணைப்பாக, ஆய்வு வடிவங்களின் வகைகள், வித்தியாசமான வகை தரவுகளுக்குக் கிடைக்கக்கூடிய புள்ளிவிபரங்கள், ஆய்வைத் திட்டமிடல், கலைச்சொற்கள் என்பனவும் தரப்பட்டுள்ளன. அக்கரைப்பற்று தைக்காப்பள்ளியைச் சேர்ந்த பக்கீர் காதர் பக்கீர் ஜஃபார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்றவர். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தில் விசேட தேவைகள் கல்வித்துறையின் தலைவராகப் பணியாற்றிவருகிறார்.

6253
**கல்வியியல் செயல்நிலை ஆய்வு.** கனகசபை பாஸ்கரன். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
xvi, 101 பக்கம், அட்டவணை, விலை: ரூபா 600., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-228-3.

ஓர் ஆசிரியன் தனது செயல்தளத்தை மையமாகக்கொண்டு, தனது செயற்பாட்டின் பெறுபேறுகளை மதிப்பிட்டு, மேம்பாட்டை நோக்கிச் செயற்பட வைப்பதற்கு செயல்நிலை ஆய்வுகள் பெரிதும் பயன்படுகின்றன. இந்நூல் இச்சிறப்புவாய்ந்த செயல்நிலை ஆய்வின் வரலாற்று வளர்ச்சி, அதன் வரைவிலக்கணங்கள், அது உள்ளடக்கும் அறிகைப்பரப்புகள், அதன் நடைமுறை நியமங்கள், தரவுகளைத் திரட்டுவதற்கான ஆய்வுக் கருவிகள், தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும் நுட்பவியல்கள் என்றவாறு விடயப்பரப்பை ஒழுங்குபடுத்திக்கூறுகின்றது. மேலும் நூலாசிரியர் ஆய்வை அறிக்கையிடும் நுட்பவியல்களையும் விபரித்துக் கூறுகின்றார். அத்துடன் பயன்படுத்தத்தக்கவகையில் ஆய்வு மாதிரிகைகளையும், உசாத்துணை நூற்பட்டியலையும், இணையத்தள முகவரிகளையும் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றி வரும் க.பாஸ்கரன், விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், கல்வியியல் டிப்ளோமா பட்டத்தினையும், முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றவர்.

**6254**

**கல்வியியலும் நவீனத்துவமும்.** திருநாவுக்கரசு கமலநாதன், பாலசுப்பிரமணியம் தனபாலன். கொழும்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை, 1வது பதிப்பு, வைகாசி 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).
viii, 129 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14 சமீ.

ஆசிரியர் கல்வியும் பாடசாலையும், வினைத்திறன் மிக்க கற்பித்தல், தேசிய கல்வியியற் கல்லூரிகளும் அனுமதிகளும், விழுமிய முகாமையும் கல்வி வழிகாட்டல் ஆலோசனைச் சேவையும், ஆசிரியர் கல்வியில் உள்ளகப் பயிற்சி, உயர்வு நோக்கிய கல்வி இலக்குக்கு வழிகாட்டும் மனிதவள முகாமைத்துவம், நவீன கல்விச் செல்நெறியில் தொடருறு கல்விச் செயற்பாடுகள், ஒழுக்க மீறல்களும் பாடசாலைச் சீல மேம்பாடும், பின்நவீனத்துவக் கல்விக் கருத்தியலில் ஆசிரியர் தொடக்கக் கல்வி, உலகமயமாதல்-உயர்கல்வித் தளத்தில் ஏற்படுத்தும் மாற்றங்கள், பாடசாலைக் குடும்பக் கட்டமைப்பில் ஆரம்பக் கல்வி, புதிய கற்றல் கற்பித்தல் முறைகளை வினைத்திறனாக்கும் குழுச் செயற்பாடு, பாடசாலை வகுப்பறையின் கற்றல் சார்பான ஊக்கலும் பயிற்சியும், உளவியலில் ஞாபகமும் கற்றல் இடமாற்றமும் ஆகிய கல்வியியல்துறைசார் 14 கட்டுரைகள் இத்தொகுபபில் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர்கள் முறையே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியும் உப பீடாதிபதியுமாவர். (பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 567375).

**6255**

**கல்வியின் நவீன செல்நெறிகள்.** சோ.சந்திரசேகரன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
x, 126 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-659-065-x.

ஆசிரியர்களின் நோக்கில் வகுப்பறை நிர்வாகம், மாணவர்களின் கற்றற் பாணிகள். இழப்பீட்டுக் கல்வி, பிள்ளைகளின் நடத்தைப் பிறழ்வு, புதிய கல்விச் சிந்தனைகளும் உலக நாடுகளின் இன்றைய கல்வியும், எதிர்காலவியலும் மேலை நாடுகளின் கல்விச் செயற்பாடும், எதிர்காலவியல் நோக்கில் மேலை நாடுகளின் கல்விமுறைகள், கல்விச் செயற்பாடும் எதிர்காலவியல் நோக்கும், கற்பதற்குக் கற்றல் - புதிய கல்விக் குறிக்கோள், கல்வியும் நவீனமயமாக்கமும், பாடசாலைக் கல்வியில் முதலாளித்துவச் சிந்தனை, தகவல் தொழில்நுட்பமும் கல்வியும்-சில அனைத்துலகச் செல்நெறிகளும், புதிய தகவல் மைய நூற்றாண்டுக்கான மாணவர் திறன்கள், கல்விச் செயற்பாட்டில் தகவல் திறன்கள், நவீன யுகத்துக்கான விஞ்ஞானக் கல்வியும் தொழில்நுட்பக் கல்வியும், மறைநிலைப்பாட ஏற்பாட்டுச் சிந்தனை, கல்வி நிர்வாகத்தில் புதிய அணுகுமுறைகள், UNESCOவின் நிதானமான கல்விச் சிந்தனை, சமூக அபிவிருத்தி பற்றிய பேராசிரியர் அமாருத்திய சென்னின் புதிய சிந்தனைகள், கல்வியியல் ஆய்வுகளின் பயன்பாடுகள், அபிவிருத்தியும் முறைசாராக் கல்வியும், மொழிக்கல்வி பற்றிய சிந்தனைகள் ஆகிய 22 இயல்களில் கல்வியின் நவீன செல்நெறிகள் உற்று நோக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 616766).

**6256**

**கல்வியின் நோக்கங்களும் குறிக்கோள்களும்.** K.S.இராஜரட்ணம், சி.புலேந்திரன், Y.L.A.வஹாப், H.G.C.A.T. ஜெயசேகரா , மு.கிருஷ்ணபிள்ளை, K.T.கனகரத்தினம், வீ.இராசையா, A.சிவராஜா, ஜீ.எச்.மகிந்தரத்தினா (செயற்குழு). கொழும்பு: தொலைக் கல்விக் கிளை, இலங்கை கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1986. (கொழும்பு: குணரத்தின ஓப்செட் லிமிட்டெட்).
28 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்த நூல், கல்வியின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் ஆராய்கின்றது. நோக்கங்களும் குறிக்கோள்களும் என்றால் என்ன, கல்வியின் நோக்கங்களை எவ்வாறு தீர்மானிக்கலாம், அவை தொடர்பான தத்துவக் கருத்துக்கள் என்பன முதலாம் பகுதியிலும், இலங்கையில் கல்வியின் நோக்கங்கள் இரண்டாவது பகுதியிலும், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், சோவியத் ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகளில் கல்வியின் நோக்கங்கள் பற்றி மூன்றாவது பகுதியிலும் விளக்கப்படுகின்றது.

**6257**

**கல்வியும் மனிதவள விருத்தியும்.** சோ.சந்திரசேகரன், மா.சின்னத்தம்பி. கொழும்பு: ஆசிரியர்கள், 2வது பதிப்பு, ஜனவரி 2006, 1வது பதிப்பு, மார்ச் 2002. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை). 130 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14 சமீ., ISBN: 955-1013-72-7.

கொழும்புப் பல்கலைக்கழக கல்விப்பீடத்தின் இணைப்பேராசிரியர் சோ.சந்திரசேகரனும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வித்துறையின் முதுநிலை விரிவுரையாளரான மா.சின்னத்தம்பியும் இணைந்து எழுதியுள்ள நூல். கல்வி-மனிதவள இடைத் தொடர்புகள், பொருளாதார மாற்றங்களும் மனிதவளக் கல்வியும், வளர்முக நாடுகளின் கல்விமுறையும் மனிதவள நெருக்கடியும், கல்விப் பொருளாதார விருத்தி-மனிதவள விருத்தி பற்றிய மாற்றுக் கருத்துக்கள், முயற்சியாண்மையாளர் விருத்தியும் கல்வியும், இலங்கையின் மனிதவள அபிவிருத்தியும் கல்வியும், பெண் மனிதவளமும் கல்வியும், உலகமயமாக்கமும் வளர்முக நாடுகளில் மனிதவளவிருத்தியும் ஆகிய எட்டுக் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 603911).

**6258**

**கலைத் திட்ட மாதிரிகைகள்.** கிருஷ்ணபிள்ளை புண்ணியமூர்த்தி. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்). 134 பக்கம், விலை: ரூபா 340., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-74-5.

கி.புண்ணியமூர்த்தி மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரியில் விரிவுரையாளராக-ஆசிரிய கல்வியியலாளராகப் பணிபுரிகின்றார். ஆசிரியரின் முதலாவது பிரசுரமான இந்நூலில் கலைத்திட்டம், கோட்பாடுகளும் கட்டமைப்புகளும், கலைத்திட்ட மாதிரிகள், வீலரின் மாதிரிகை, கேரின் மாதிரிகை, ஸ்கில்பேர்க்கின் மாதிரிகை, ஹில்டா டபாவின் மாதிரிகை, டெனிஸ் லோட்டனின் மாதிரிகை, கலைத்திட்ட மாற்றங்களும் பிரச்சினைகளும், 5E மாதிரிகை ஆகிய தலைப்புக்களின்கீழ் கல்வியியலின் கலைத்திட்ட மாதிரிகைகள் விபரிக்கப்பட்டுள்ளன.

**6259**

**கற்பிக்கும் கலை புதிய பிரவேசங்கள்: வினைத்திறனான ஆசிரியத்திற்கு வழிகாட்டும் நூல்.** பாலசுப்பிரமணியம் தனபாலன். யாழ்ப்பாணம்: திருமதி கர்ணி தனபாலன், துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (யாழ்ப்பாணம்: கற்பக விநாயகர் அச்சகம், 295/7, காங்கேசன்துறை வீதி).
(6), 120 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x15 சமீ.

நூலாசிரியர் யாழ்ப்பாணம், தொல்புரம் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டவர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்வியும் தரமேம்பாடும் என்ற துறைக்குப் பொறுப்பான உப பீடாதிபதியாகப் பணியாற்றுகின்றார். ஆறு அத்தியாயங்கள் கொண்ட இந்நூலில் கற்பிக்கும் கலை-புதிய பிரவேசங்கள், ஆசிரிய வாண்மை விருத்தி, ஆசிரியர் முகாமைத்துவப் பாத்திரங்கள், போதனா முகாமையும் ஆக்கத்திறனும், வகுப்பறை முகாமை, ஆசிரியர் ஆளுமை, ஆசிரியர் ஆளுமையை விருத்திசெய்தல், ஆசிரியரும் விசேட கல்வியும், ஆகிய பல தலைப்புகளில் இன்றைய நவீன ஆசிரியருக்கு வேண்டிய தேர்ச்சிகள் பல்வேறு அணுகுமுறைககளில் புதிய பிரவேசங்களினூடாக வழங்கப்பட்டுள்ளன.

**6260**

**கற்றல் எவ்வாறு நிகழ்கின்றது?** வி.ஏ.டேவிட் (மூலம்), சி.புலேந்திரன், வீ.இராசையா, தி.கனகரத்தினம், சுவர்ணா நவரத்தினம், எஸ்.கிருஷ்ணபிள்ளை, H.G.C.A.D.ஜயசேகர, H.D.L.குணசேகர, கே.அமரதுங்க, சு.சு.அபயவர்த்தன, V.M.L.R.பண்டார , M.D.J.குணத்திலக்க , K.D.நளினசேன , Y.L.A.வஹாப் (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: The Pacific Press Pvt. Ltd.)
60 பக்கம், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். தமிழ் மொழிபெயர்ப்பாளர் விபரம் தரப்படவில்லை. பிள்ளைகள் எவ்வாறு கற்றலுக்கு ஆயத்தமாகிறார்கள், அவர்களுக்குத் தெரியாத புதிய கருத்துகள் எவ்வாறு கற்பார்கள் என்பது பற்றி இந்நூல் விபரிக்கின்றது. கற்றல் என்றால் என்ன, கற்றல் கொள்கைகள், கற்றல் சந்தர்ப்பங்கள் ஆகிய தலைப்புகளில் 5 பகுதிகளில் இந்நூல் விரிகின்றது.

***6261***

**குழந்தைகளின் உடல் வளர்ச்சி.** T.கனகரத்தினம், வீ.இராசையா, ஏ.சிவராஜா, சி.புலேந்திரன், H.G.C.A.T. ஜெயசேகரா , K.D.நளினசேன, Y.L.A.வஹாப். (செயற்குழு). கொழும்பு: தொலைக்கல்விக் கிளை, இலங்கைக் கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1986. (கொழும்பு: Gunaratne Offset pvt. Ltd.)
28 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூல், குழந்தைகளின் உடல் வளர்ச்சியில் பல்வேறுபட்ட தன்மைகளை அறிவதில் துணைபுரிகின்றது. உடல் வளர்ச்சியின் பலவித வேறுபாடுகள் குழந்தைகளின் கற்றல் செயல்களில் பெரும்பாலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவ்வித வேறுபாடுகளைப் பற்றி சிறந்த விளக்கங்களை இந்நூல் வழங்குகின்றது.

***6262***

**குழந்தைகளின் நுண்ணறிவு வளர்ச்சி.** V.A.டேவிட், T.கனகரத்தினம், சி.புலேந்திரன், வீ.இராசையா, ஏ.சிவராஜா, எஸ்.கிருஷ்ணபிள்ளை, P.D.M.ராஜபக்ஷ, Y.L.A.வஹாப், S.D.லயனல் அமரகுணசேகர, (செயற்குழு). கொழும்பு: தொலைக்கல்விக் கிளை, இலங்கைக் கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1986. (இரத்மலானா: சர்வோதய விஸ்வலேகா அச்சகம்).
36 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

ஆசிரிய சமூகம் வருங்கால சந்ததியினரின் நுண்ணறிவு மட்டத்தை உயர்த்தும் மிக முக்கிய பொறுப்பினைக் கொண்டுள்ளது. இப்பணியை நிறைவேற்றும் பொருட்டு, தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்த நூல் ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் குழந்தைகளுக்கான நுண்ணறிவு பற்றிய விபரங்களை ஆசிரிய மாணவர்களுக்கு வழங்குகின்றது. நுண்ணறிவு ஆற்றல்கள், நுண்ணறிவின் தொகுப்பு, நுண்ணறிவின் அளவீடு, நுண்ணறிவின் செயற்பாடுகள், நுண்ணறிவு வளர்ச்சியோடு தொடர்பான வேறு பிரச்சினைகள் ஆகிய தலைப்புகளில் இவ்விபரங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

***6263***

**குழந்தையின் கல்விக்கான தொழில்நுட்ப முறைகள்.** T.கனகரத்தினம், ஏ.சிவராஜா, வீ.இராசையா, கே.எஸ்.இராஜரத்தினம், சி.புலேந்திரன், Y.L.A.வஹாப், ஜீ.எச்.மகிந்தரத்தினா, K.D.நளினசேன, H.G.C.A.T. ஜெயசேகரா, (செயற்குழு). கொழும்பு: தொலைக்கல்விக் கிளை, இலங்கைக் கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1986. (கொழும்பு: Gunaratne Offset pvt. Ltd.)
28 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

விஞ்ஞானமுறையில் குழந்தையின் கல்விக்கான தொழில்நுட்ப முறைகளை ஒழுங்காகக் கற்று அதனை உரியமுறையில் செயற்படுத்துவதன்மூலம் குழந்தைகளின் நடத்தைகள் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும். அவ்வாறு செயற்படுத்தக்கூடிய குழந்தையின் கல்விக்கான தொழில்நுட்ப முறைகள் பலவற்றை இந்நூல் விளக்குகின்றது. தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல் இது.

***6264***

**குழந்தையின் மனவெழுச்சி வளர்ச்சி.** கே.எஸ்.இராஜரத்தினம் (மூலம்), K.T.கனகரத்தினம், P.D.டேவிட், Y.L.A.வஹாப், S.D.லயனல் அமரகுணசேகர, H.G.C.T. ஜெயசேகரா, M.D.S.குணத்திலக்க, W.அபயசிங்க, P.M.L.R.பண்டார, R.R.அபயவர்த்தன (பாடப்

*பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (நுகேகொடை:* Deepanee Printers and Publishers, 464 High Level Road, Gangodawila*).*
*28 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். குழந்தைகளின் மனவெழுச்சி நடத்தைகளை அவதானிப்பதற்கான அறிவுறுத்தல்களை அறிமுகப்படுத்துவதுடன் தொடங்கும் இந்நூலின் முதலாவது பகுதியில் மனவெழுச்சி வளர்ச்சி, குழந்தையின் மனவெழுச்சி வேறுபாடுகள், முன்பள்ளிப் பருவத்தில் குழந்தைகளின் மனவெழுச்சி நடத்தைகள், ஆரம்பப் பாடசாலைப் பருவத்தில் குழந்தைகளின் மனவெழுச்சி வளர்ச்சி என்பனவும் விளக்கப்பட்டுள்ளன. 2வது பகுதியில் மனவெழுச்சி நடத்தைகள், மனவெழுச்சி நடத்தைகளின் முதிர்ச்சி என்பன பற்றி விளக்கப்படுகின்றது. 3வது பகுதியில் சூழற் காரணிகளும் மனவெழுச்சி நடத்தைகளும் பற்றி விளக்கப்படுகின்றது.*

***6265***

***சமூக அசைவியமும் சமூகக் கல்வியும்.*** *திருநாவுக்கரசு கமலநாதன். யாழ்ப்பாணம்: தேசிய கல்வியியல் கல்லூரி, கோப்பாய், 1வது பதிப்பு, ஜனவரி 2003. (தெகிவளை: ஏ.ஜே.அச்சகம்).*
ix, *116 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5*x*14.5 சமீ.*

*சமூகக் கட்டமைப்பாக்கம், சமூக அசைவியம், சமூக இயங்கியல், சமூக முரண்பாடுகள் முதலியவற்றை விளக்குவதற்கும், விளங்குவதற்கும் எதிர்மறையான இருப்பை மாற்றியமைப்பதற்கும் உரிய புலக்காட்சியை மாணவர்களிடத்தே வளர்ப்பதற்குரிய ஆற்றல்களையும் திறன்களையும் உருவாக்கும் வகையில் இந்நூல் வெளிவருகின்றது.. கலைத்திட்ட ஆக்கம் செய்வதற்குரிய வளமான எழுத்தாக்கத்தை நூலாசிரியர் நான்கு இயல்களில் வரைந்துள்ளார். சமூகக் கல்வியின் வரைவிலக்கணமும் வளர்ச்சியும், கலைத்திட்டம் - வரையறை, சிறப்பியல்பு, வளர்ச்சிவகைகள், சமூகக் கல்வித் தமிழ்மொழிப் பாடநூல்களும் பொருத்தப்பாடும், சமூகக் கல்விப்பாட அபிவிருத்தித் திறன்முறை ஆகிய நான்கு இயல்களில் இந்நூல் விரிகின்றது. நல்லூரர் நாயன்மார்கட்டைச் சேர்ந்த கலாநிதி தி.கமலநாதன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதியாவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 600407).*

***6266***

***சிறந்த கற்றலுக்கான பாடசாலை.*** *ப.கா.பக்கீர் ஜ்.பார். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம்,* B3-G3, *ரம்யா வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 10: குமரன் பதிப்பகம்,* B3-G3, *ரம்யா வீதி).*
*(2),* viii, *79 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN*: 978-955-659-217-7.*

*இந்நூலிலுள்ள ஆய்வுக் கட்டுரைகள் சிறந்த கற்றலுக்கான பாடசாலைகள் உருவாவதற்கு வழிகாட்டும் வகையில் அண்மைக்கால கற்றல்-கற்பித்தல் சார்பான செல்நெறிகள் சிலவற்றை விபரிக்கின்றது. வகுப்பறைக் கற்பித்தலும் மாணவர் ஒழுங்கும், மாணவர்களின் கற்றல் இடர்பாடுகள்: வாசிப்பில் பிள்ளைகளின் இயலாமை, ஆரம்ப வகுப்புகளில் கணிதம் கற்பித்தல்: இரு வேறு அணுகுமுறைகள், பியாஜேயும் ஆரம்ப விஞ்ஞானம் கற்பித்தலும், சிந்தனைமிக்க ஒரு செயலாகக் கல்வித் தலைமைத்துவம், கற்பித்தல் தலைமைத்துவம் ஆகிய ஆறு கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.*

***6267***

***சிறு விளையாட்டுக்கள், உப விளையாட்டுக்கள், பிரதான விளையாட்டுக்கள்.*** *செனேஹலத்தா பீ. சேனானாயக்கா (மூலம்),* M.H.M.*யாக்கூத், பூர்ணா த சில்வா, சந்திரா ஹெம்மாத்தகம, பீ.வீ.பிரேமசந்திர, எச்.எம்.ஜயதிலக்க, சுமனா குமாரி அபயக்கோன் (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு:* The Pacific Press Pvt. Ltd.*)*
*56 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21 சமீ.*

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். சமூகத்துக்கு உகப்பான நடத்தைக் கோலங்களை இலகுவாக விருத்திசெய்வதற்கு ஏற்ற ஓரிடம் பாடசாலை விளையாட்டுத் திடலாகும். அதுவே நற்பிரஜைகளை உருவாக்கும் ஆய்வுகூடம் என்பர். சிறு விளையாட்டுக்கள், உப விளையாட்டுக்கள், பிரதான விளையாட்டுக்கள் ஆகியவற்றிக் கற்பிக்கும் முறைகள் முதலாம் பகுதியில் விபரிக்கப்படுகின்றது. வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், ஆகியவை கற்பிக்கும் முறைகள் இரண்டாம் பகுதியில் விபரிக்கப்படுகின்றது.

***6268***

***சின்னச் சின்னப் பிள்ளைகள்: பாடசாலை சார் உள சமூக செயற்பாடுகளுக்கான பயிற்சிக் கைந்நூல்.*** *தயா சோமசுந்தரம், கோகிலா மகேந்திரன், கடம்பநாதன். கொழும்பு: இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).*
*xxxix, 299 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x16 சமீ., ISBN: 955-1264-01-2.*

*சிறுவர்களின் இயல்பான இயைபாக்கத்தையும் தாங்கும் சக்தியையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் இக்கைந்நூல் ஆசிரியர்களுக்கும் தொண்டர்களுக்குமெனத் தயாரிக்கப்பட்டுள்ளது. பிள்ளைகளுக்கு சாதாரண வாழ்க்கை அனுபவங்களைக் கொடுத்து, ஆரோக்கிய விருத்தி இயக்கப்பாடுகளைத் தூண்ட, ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகள் தற்பொழுது சிறுவர் நிபுணர்களால் உலகளாவியரீதியில் உபயோகிக்கப்படுகின்றன. இந்த முறையில், எமது கலாச்சாரத்துக்கு ஒத்தவகையில் பாவிக்கப்பட்ட சிறுவர் செயற்பாடுகள் ஒரு ஒழுங்கமைப்புக்குள் முக்கிய கருப்பொருள்களுக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளன. சிறுவர் விளையாட்டுக்கள், ஆக்கச் செயற்பாடுகள், பாடுதல், ஆடுதல், வரைதல், கதை சொல்லுதல், பாரம்பரிய சாந்த பயிற்சிகள் என்ற பலதரப்பட்ட கலைச் செயற்பாடுகள் விளக்கத்துடன் இங்கே சேர்க்கப்பட்டுள்ளன. எல்லாப் பிள்ளைகளின் உள நலத்தையும் விருத்தியையும் மேம்படுத்துவதுடன் அண்மைக்காலமாக ஏற்பட்ட மனித, இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைத் திரும்பவும் இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டுவரும் என்ற எதிர்பார்ப்புடன் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.*

***6269***

***சுகாதாரக் கல்வி அறிமுகம்.*** S.M.S.P.சேனாநாயக்க *(மூல ஆசிரியர்),* கே. நடராஜா, M.S.ஆஸாத், A.G.டிங்கிரி பண்டா, பூர்ணா த சில்வா, P.V.பிரேமசந்திர, வீ.அமரசிங்க, *(பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (இரத்மலானா: சர்வோதய விஸ்வலேகா அச்சகம்).*
*28 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். சுகாதாரக் கல்வி தொடர்பான அடிப்படை விடயங்களை உள்ளடக்கியது. முதலாவது பகுதியில் சுகாதாரம் என்றால் என்ன என்பதையும் அதன் முக்கியத்துவத்தையும் விளக்கும் இந்நூல், அதன் இரண்டாவது பகுதியில் சுகாதாரக் கல்வி பற்றி விளக்குகின்றது. இதில் பாடசாலைகளில் சுகாதாரக் கல்வியை எவ்வாறு நிறைவேற்றுவது, அதற்கான ஆசிரிய மாணவரின் செயல்முறை எவ்வாறு அமையவேண்டும் என்ற தெளிவான விளக்கத்தைப் பெறமுடிகின்றது.

***6270***

***தனிமுறைப் போதனை: கல்விசார் செயற்பாடுகள் பற்றிய கைந்நூற்றொடர் 5.*** *கீத் டொப்பிங் (மூலம்), சோ.சந்திரசேகரம் (பதிப்பாசிரியர்), புஷ்பா சிவகுமாரன் (மொழிபெயர்ப்பாளர்). கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம்,* B3-G3 *ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம்,* B3-G3 *ரம்யா பிளேஸ்).*
*80 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19x12.5 சமீ.,* ISBN*: 978-955-659-186-6.*

*தனிமுறைப்போதனை (*Tutoring*) பற்றியது இந்நூல். தொழில்வாண்மை அடிப்படையில் ஆசிரியரல்லாதோர், இடைத்தாக்கத்துடனும், நோக்கத்துடனும் முறையாகவும் மற்றவர்கள் கற்பதற்கு உதவுவதையும் ஆதரவு வழங்குவதையும் தனிமுறைப் போதனை என்று வரையறைப்படுத்தலாம்.*

பயனுறுதிவாய்ந்த தனிமுறைப் போதனை (Effective Tutoring) தொடர்பான தத்துவங்கள் இக்கைநூலில் தரப்பட்டுள்ளன.

***6271***

**தேச அபிவிருத்தியில் தமிழர் கல்வி.** ப.இராஜேஸ்வரன், பா.தனபாலன் (இதழாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: கல்வியியல் வெளியீட்டு நிலையம், 257, பலாலி வீதி, கந்தர்மடம், 1வது பதிப்பு, மார்ச் 2005. (யாழ்ப்பாணம்: சிமார்ட் பிரிண்டேர்ஸ், 717 கே.கே.எஸ்.வீதி).
viii, (3), 169 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14 சமீ.

இலங்கையின் கல்வியியல்துறையில் தீவிர ஈடுபாடுகொண்ட தமிழ்க் கல்வியியலாளர்களான சோ.சந்திரசேகரம், சபா.ஜெயராசா, கா.சிவத்தம்பி, சி.சிவசேகரம், வி.நித்தியானந்தன், மா.சின்னத்தம்பி, பா.தனபாலன், இராசேந்திரம் ஸ்ராலின், ப.இராஜேஸ்வரன் ஆகியோரினால் எழுதப்பட்டு பல்வேறு ஊடகங்களிலும் வெளிவந்த 19 கட்டுரைகளும், 4 நேர்காணல்களும் இத்தொகுப்பில் உள்ளன. இலங்கையில் தமிழர் கல்வி வரலாறு, கல்வியும் பின்னவீனத்துவமும், தாய்மொழி மூலக்கல்வி, யாழ்மாவட்டம் கல்வியில் நலிவுற்ற காரணிகள், போர், சுனாமி போன்றவற்றினால் கல்விக்குப் பாதிப்பு, செயல்நிலை ஆய்வு, கண்ணிவெடி அபாயக் கல்வியின் முக்கியத்துவம், கல்வியில் இடை விலகல் பிரச்சினை, மாணவர் ஆளுமை விருத்தி, முன்பள்ளிக் கல்விசார் பிரச்சினைகள், ஆரம்ப ஆசிரியர் ஆளணி, தீவகக் கல்விப்பிரச்சினைகள், ஆசிரிய சமூகத்தின் பிரச்சினைகள் என்பன போன்ற பல விடயங்களை இக்கட்டுரைகள் ஆராய்கின்றன. (பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 583115).

***6272***

**தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை.** L.U.C.குருப்பு (ஆணைக்குழுவின் செயலாளர்). கொழும்பு 7: அரசாங்க வெளியீட்டலுவலகம், 1வது பதிப்பு, மே 1992. (கொழும்பு: அரசாங்க அச்சுத் திணைக்களம்).
xii, 159 பக்கம், விலை: ரூபா 96.60, அளவு: 25x15.5 சமீ., (பருவப் பத்திர இலக்கம் A1992).

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் 22 ஜுலை 1991இல் ஆரம்பமாகிய தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை இது. இவ்வாணைக்குழுவின் உறுப்பினராக எஸ்.பத்மநாதன், பி.சங்கையா, R.K.H.M.பர்ணாந்து, D.S.ஜயசுந்தர, S.ஜயவீர, M.N.ஜூனைத், A.Z.ஓமர்தீன், ஜீ.எல்.பீரிஸ், M.D.D.பீரிஸ், O.S.M.செனவிரத்ன, D.S.விஜயசேகர ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 447403).

***6273***

**தொடக்கக் கல்வி பற்றிய சிந்தனைகளும் பாடத்திட்டமும்.** மா.செல்வராஜா. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
viii, 260 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 17x11.5 சமீ.

பிள்ளைகளின் வளர்ச்சியின் முக்கிய காலகட்டமான 2இலிருந்து 5வயது வரையான காலப்பகுதியை தொடக்கப்பள்ளிகள் கொண்டுள்ளன. தொடக்கப்பள்ளிக் கல்விச்சேவை தொடர்பான பல முக்கிய சிந்தனைகளைத் தாங்கி இந்நூல் வெளிவருகின்றது. முன்பள்ளிக் குழந்தைகள் கல்வியில் ஆரம்பகாலக் கல்வியியிலாளர்கள், குழந்தைகளின் கற்றலும் பெற்றோரும், குழந்தைகள் கற்கும் சூழலும் விளையாட்டும், படைப்பாற்றல், அழகியல் திறன்கள், பகுத்தாயும், பிரச்சினை தீர்க்கும் திறன்கள், தனியாள், சமூகத் தேர்ச்சிகள், தொடர்பாடல் திறன்கள், உடல் தேர்ச்சி, கணிப்பீடும் பதிவுகள் பேணலும் ஆகிய ஒன்பது இயல்களில் இந்நூல் விரிகின்றது. நூலாசிரியர் செங்கலடி, வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 599089)

***6274***

**தொலைக் கற்பித்தல்.** ஆ.கந்தையா. நுகேகொடை: ஆ.கந்தையா, சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், நாவலை, 1வது பதிப்பு, மார்ச் 1988. (சென்னை 2: காந்தளகம், 834 அண்ணாசாலை).
(8), 100 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 18.5x13 சமீ., ISBN: 955-95173-0-9.

தொலைக்கல்வி (Distance Education), தொலைக்கற்பித்தல் (Distance Teaching) ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற நூலாசிரியர் ஏற்கெனவே தொலைக்கல்வி பற்றிய நூலொன்றை வெளியிட்டுள்ளார். அதன் தொடர்ச்சியாக இந்நூல் வெளிவந்துள்ளது. தொலைக்கற்பித்தற் பாடநூல்கள், நேர்முகக் கற்பித்தல், வானொலிப் பாடங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், செவிப்புல நாடாக்கள், கட்புல நாடாக்கள், ஒப்படைகளும் தொடர் மதிப்பீடுகளும், கோடைக்காலப் பாடசாலை, தொலைக் கற்பித்தலிற் கம்பியூட்டர், தொலைபேசிக் கற்பித்தல், பன்முனைப்படுத்திய நிறுவன அமைப்பு, ஆகிய விடயங்களை உள்ளிட்ட தொலைக்கற்பித்தல் பற்றிய பல்வேறு அம்சங்களை இந்நூல் வழங்குகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 414323).

**6275**
**நிரற்போட்டி ஒழுங்கமைப்பு.** ஏ.ஜீ.டிங்கிரி பண்டா (மூலம்), M.H.M.யாகூத், சினேகலதா சேனநாயக்க, பீ.வீ.பேமச்சந்திரா, H.M.ஜயத்திலக்க, சுமனா அபேகோன், பூர்ணா த சில்வா (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: The Pacific Press (Pvt) Ltd).
44 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

பாடசாலை மாணவரின் விளையாட்டுத் திறன்களை பாடசாலையிலும், பாடசாலைக்கு வெளியேயும் காட்டுவதற்கான சிறந்ததொரு வாய்ப்பாக நிரற்போட்டிகள் அமைகின்றன. கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், எல்லே போன்ற குழு விளையாட்டுகளும், மல்யுத்தம், குத்துச்சண்டை, சதுரங்கம் போன்ற ஒற்றையர் விளையாட்டுகளும் நிரற்போட்டிகளுக்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றன. இலங்கையில் லேற்றன் கிண்ணம் குத்துச் சண்டைக்காகவும், சரவணமுத்து கிண்ணம் கிரிக்கற் விளையாட்டுக்காகவும், கிளிபர்ட் கிண்ணம் ரகர் விளையாட்டுக்காகவும் வழங்கப்படுகின்றன. நிரற் போட்டிகளின் முக்கியத்துவம், அவற்றை ஒழுங்குபடுத்தும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள், ஒழுங்குபடுத்தும் முறைகள், இம்முறைகளின் நன்மை தீமைகள் என்பன பற்றி இந்நூலில் குறிப்பிடப்படுகின்றது. தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல் இதுவாகும்.

**6276**
**பங்கேற்பு பயிற்சிக் கையேடு.** ஓ.ஆறுமுகம், சந்திரா குமாரசுவாமி, ஆர்.ஸ்ரீகாந்தன். கொழும்பு 7: இலங்கை மன்றக் கல்லூரி, 100, சுதந்திரச் சதுக்கம், இணை வெளியீட்டாளர், கொழும்பு: Fricdrich Ebert Stiftung, 1வது பதிப்பு, ஜனவரி 1994. (கொழும்பு: மெக்லீன் அச்சகம்).
(10), 266 பக்கம், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x15.5 சமீ., ISBN: 955-592-808-7.

இலங்கை மன்றக் கல்லூரியின் 20வது ஆண்டு நினைவாக (1974-1994) வெளியிடப்பட்டது. இக்கல்லூரி சமூகத்தில் பல்வேறு பிரிவினரையும் இலக்காகக் கொண்டு, வினைத்திறன் மிக்கதும் பயன்தரு விளைவுகளைத் தரக்கூடியதுமான சமூகக் கல்விப் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. அதன் பயிற்றுநர்களினதும் பயனீட்டாளர்களினதும் தேவை கருதி இக்கைநூல் வெளியிடப்பட்டுள்ளது. பங்கேற்புப் பயிற்சி ரீயசவவைஉனியவழசல வுசயனைைெப) கோட்பாடுகளும் அடிப்படைகளும், பயிற்றுநரின் பங்கும் பொறுப்புகளும், பயிற்றுநரின் ஆளுமை அபிவிருத்தி, பயிற்சிநெறி வடிவமைப்பின் அடிப்படை அம்சங்கள், பங்கேற்பு பயிற்சியில் சிறுகுழு, பயிலுகை பயிற்சிமுறைகள், மீளாய்வும் தொடர் நடவடிக்கையும் ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 513597).

***6277***

***பயன்பாடுள்ள எழுத்துப் பயிற்சிகள்.*** ம.செ.அலெக்சாந்தர் (மூலம்), எஸ்.குமாரசுவாமி, கே.நடேசன். *(பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு:* The Pacific Press Pvt. Ltd.*)*
*28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். பயன்பாடுடைய எழுத்துப் பயிற்சிகளாக கடிதம் எழுதுதலை 1வது பகுதியிலும், அழைப்பிதழ்கள், தந்திகள், பிரசுரங்கள் எழுதுதலை 2வது பகுதியிலும், படிவங்களைப் பூர்த்திசெய்தலை 3வது பகுதியிலும் இந்நூல் விளக்குகின்றது.*

***6278***

***பல்கலைக்கழகங்களை பலிபீடமாக்கும் பகிடிவதை.*** A.H.M.*யஹ்யா ஷரீப். வேஉட: அத்தக் பீர் சென்ரர், 320-2, வெளிகேபொல, பறகஹதெனிய, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2000. (பொரல்ல: ஷபாப் பிரின்ட்ஸ்).*
*(10), 46 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x13.5 சமீ.*

*இஸ்லாமியரின் பார்வையில் ராக்கிங் என்ற பெயரில் பல்கலைக்கழகங்களில் மாணவர்களால் மேற்கொள்ளப்படும் பகிடிவதைக் கலாச்சாரம் பற்றி இந்நூல் பேசுகின்றது. உடலியல், உளவியல், பாலியல்ரீதியாக மேற்கொள்ளப்படும் பகிடி வதைகள் பற்றியும், நிர்வாக மட்டத்தில் பல கண்டிப்பான தடையுத்தரவுகள் இருந்தாலும் அவை தொடர்ந்து நிகழ்வதற்குரிய காரணங்கள் பற்றியும், அதன் பாதகமான விளைவுகள் பற்றியும் குறிப்பிடும் நூலாசிரியர், இஸ்லாமிய நோக்கில் பகிடிவதை எவ்வாறு பார்க்கப்படுகின்றது என்றும், விரிவாகக் குறிப்பிடுகின்றார். யஹ்யா ஷரீப் பேராதனைப் பல்கலைக்கழக மாணவராக இருந்தவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 543792).*

***6279***

***பாடசாலை அபிவிருத்தி: கட்டுரைத் தொகுப்பு.*** *செ.சிவநடேஸ். செங்கலடி: கல்விச் சங்கம், கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2006. (மட்டக்களப்பு: எவர்கிரீன் அச்சகம், 93, திருமலை வீதி).*
*84 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ.,* ISBN: *955-99779-0-3.*

*கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வித்துறை போதனாசிரியரான நூலாசிரியர் எழுதிய இந்நூல் 5 பிரிவுகளில் அவரது 14 கட்டுரைகளை வகுத்துத் தருகின்றது. பாடசாலை அபிவிருத்தி பற்றிய அறிமுகம் முதலாவது அத்தியாயமாகவும், பாடசாலை அபிவிருத்தியும் மாணவர்களும் இரண்டாவது அத்தியாயமாகவும், பாடசாலை அபிவிருத்தியும் ஆசிரியர்களும் மூன்றாவது அத்தியாயமாகவும், பாடசாலை அபிவிருத்தியில் அதிபர் நான்காவது அத்தியாயமாகவும், பாடசாலையும் சமூகமும் ஐந்தாவது அத்தியாயமாகவும் இடம்பெறுகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 617991).*

***6280***

***பாடசாலை சுகாதார வேலைத்திட்டம்.*** *சந்திரா ஹெம்மாத்தகம (மூலம்), எஸ்.சிவப்பிரகாசம், பீ.ராஜரத்தினம்,* M.H.M.*யாகூத், பூர்ணா த சில்வா, சினேகலதா சேனநாயக்க, சுமணா அபயக்கோன்,* H.M.*ஜயத்திலக்க,* T.W.*முனசிங்க, யூ.எல்.கருணாரத்ன (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு:* The United Merchants pvt. Ltd.*)*
*32 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூல் பாடசாலை சுகாதாரக் கல்வி பற்றியதாகும். பாடசாலை சுகாதார சேவை,*

பாடசாலைச் சுகாதாரக் கல்வி, சுகாதாரத்துக்குப் பொருத்தமான பாடசாலைச்சூழல், பாடசாலைச் சமூகக் கூட்டுறவு ஆகிய விடயங்கள் இந்நூலில் நான்கு பகுதிகளாகப் பிரித்து விளக்கப்பட்டுள்ளன.

***6281***

***பாடசாலைகளில் விஞ்ஞானம் கற்பித்தல்.*** N.J.லியனகே (மூலம்), ந.வாகீசமூர்த்தி, ப.சபாரத்தினம், R.P.A.ஜயசேகர, S.P.தோரதெனிய, வில்சன் திசாநாயக்க, M.D.S.குணரத்ன, ஏ.டீ.குணதாச (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press Pvt. Ltd.)
40 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். இலங்கையில் விஞ்ஞானம் கற்பித்தலில் ஏற்பட்ட மாற்றங்கள், விஞ்ஞான பாடத்திட்டத்தை மாற்றி அமைத்தமைக்கான காரணங்கள், பாட அலகுகளைத் திட்டமிடல் ஆகிய விடயங்கள் மூன்று பகுதிகளாக தனித்தனியாக விளக்கப்பட்டுள்ளன.

***6282***

***பாடத் திட்டமும் ஆசிரியர் கைந்நூலும்: இஸ்லாம் தரம் 5.*** M.H.M.நாளிர், M.H.M.புஹாரி, M.N.மிஹ்ராஜ், S.M.R.சூதின், M.H.M.யாக்கூத் (இணை ஆசிரியர்கள்), S.M.R.சூதின் (பதிப்பாசிரியர்). கொழும்பு: தேசிய கல்வி நிறுவகம், 2வது பதிப்பு, 2002, 1வது பதிப்பு, 2001. (கொழும்பு: Gunaratne Offset Ltd.)
xii, 40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x21 சமீ.

புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு அமைய 5ம் தர இஸ்லாம் பாடத்திற்குரிய பாடத்திட்டம் இந்த ஆசிரியர் கைந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்நூல் ஈமான் (அல்லாஹ், மலக்குகள், அல்குர்ஆன், அல்ஹதீஸ், அல்லாஹ்வின் தூதர்), அல் இபாதத் (கலிமதுரத்தில்குப்ர், தொழுகை, அத்தஹிய்யாத், ஸகாத், நோன்பு, அல்ஹஜ், ஸூறதுல் அஸ்ர், ஸூறதுல் கவ்சர்), ஒழுக்கப் பண்புகள் (ஹலால், ஹறாம் பேணல், பெற்றோரை நேசித்தல், குடும்ப உறவு, அயலாரை மதித்தல். மனித நேயம், உயிர்களிடத்தில் அன்பு காட்டல், பொதுச் சொத்து), தாரீக் (கலீபா அபூபக்ர் (றழி), கலீபா உமர் (றழி), கலீபா உஸ்மான் (றழி), கலீபா அலி (றழி), இமாம் அபூஹனீபா (றஹ்) ) ஆகிய நான்கு இயல்களில் அடைப்புக்குறிக்குள் உள்ள 27 உப தலைப்புக்களில் எழுதப்பட்டுள்ளது.

***6283***

***பாடந் திட்டமிடல்.*** எஸ்.டி.லயனல் அமரகுணசேகர (மூலம்), M.H.M.யாக்கூத், K.T.கனகரத்தினம், H.G.C.A.T. ஜெயசேகரா , P.A.டேவிட், எஸ்.ஜாதுங் ஆராச்சி, P.M.L.R.பண்டார (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press Pvt. Ltd.)
32 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். பாடங்களை நன்றாகத் திட்டமிடுவதற்குத் துணைபுரியும் நோக்குடன் இது உருவாக்கப்பட்டுள்ளது. பாடத்தைத் திட்டமிடல், செயற்திட்டங்களைத் திட்டமிடல், ஆசிரியர்-மாணவர் தொடர்புகள் ஆகிய விடயங்கள் இந்நூலில் நான்கு பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளன.

***6284***

***பாடநூலாசிரியர்களுக்கான பொதுக் கைந்நூல்.*** கரிடாட் ஏ.மிராண்டா (மூலம்), ந.வாகீசமூர்த்தி (மொழிபெயர்ப்பாளர்). பத்தரமுல்ல: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுருபாய, 1வது பதிப்பு, 2002. (மஹரகம: தரஞ்ஜி பிரின்ட்ஸ், 506, ஹைலெவல் வீதி, நாவின்ன).
(4), xii, 52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x13.5 சமீ.

கையெழுத்துப் பிரதியைத் தயாரித்தல் தொடக்கம், வெளியிடுதல் வரைக்குமான பாடநூல் உற்பத்தியில் பின்பற்ற வேண்டிய அடிப்படைகளை எடுத்துரைக்கும் வகையில் சர்வதேச ஆலோசகர்

திருமதி கரிடாட் ஏ.மிராண்டா அவர்களால் இவ்வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. நான்கு இயல்களைக் கொண்ட இந்நூலின் முதலாவது இயல் பாடநூல் பொருளடக்கத்திற்கும் கலைத்திட்டத் தேவைகளுக்கும் இடையே உள்ள இணைப்புப்பற்றிய வினாக்களுக்கான விடைகளையும், 2வது இயல் பாடநூற் கையெழுத்துப்பிரதிகளை எழுதுவதற்கான சர்வதேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில வழிகாட்டற் குறிப்புகளையும், 3வது இயல் இறுதிப்பாடநூற் கையெழுத்துப்பிரதிகளை மதிப்பிடுவதற்கான வழிகாட்டற் குறிப்புகளையும், நான்காமியல் பாடநூல் விருத்தியின் பல்வேறு கட்டங்களிலும் பயன்படுத்தப்படும் செய்முறைப் பயிற்சிகளாக அமையுமாறு அமைந்த கட்டளைக் கற்கள் பற்றியும் விளக்குகின்றது.

**6285**

**பாடவிதான கையேடு.** எஸ்.சிவப்பிரகாசம், ஏ.சிவராஜா, H.G.C.A.T. ஜெயசேகரா , A.J.குணவர்த்தன (செயற்குழு). கொழும்பு: தொலைக்கல்விக் கிளை, இலங்கைக் கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1986. (கொழும்பு: Gunaratne Offset pvt. Ltd.)
36 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். இடைநிலை கணித பாடத்திட்டம், தவணைக்குரிய வேலைத்திட்டம் தயாரித்தல், பாடப்புத்தகங்களின் உபயோகம், மற்றைய பாடவிதானப் பொருட்கள், பாடக் குறிப்பைத் தயாரித்தல் ஆகிய தலைப்புக்களில் விடயங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

**6286**

**மதிப்பீடு.** முக்தலதா த சொய்சா (மூலம்), S.M.R.சூதின், M.H.M.யாகூத், ராணி ராஜபக்ச, கே.அமரதுங்க, எச்.ஜெயதுங்க ஆராச்சி, பி.பி.உபசேன, H.G.C.A.T. ஜெயசேகரா , P.A.டேவிட், P.M.L.R.பண்டார , (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1990. (கொழும்பு: The Pacific Press (Pvt) Ltd).
36 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். மதிப்பீட்டு எண்ணக்கரு, மதிப்பீட்டு முறைகள், சோதனை வகைகள், நற்சோதனையின் இலட்சணங்கள், பாடசாலை மட்டத்தில் மதிப்பீட்டின் உபயோகம் ஆகிய விடயங்களை இந்நூல் விளக்குகின்றது.

**6287**

**மனித விருத்திக்கான கல்வி பற்றிய தொலைநோக்கு: இலங்கையின் பொதுக் கல்வி பற்றிய தேசிய கொள்கைச் சட்டகமொன்றுக்கான ஆலோசனைகள்.** தேசிய கல்வி ஆணைக்குழு. கொழும்பு: ஆர்.பி.குணவர்த்தனா, தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு, 1வது பதிப்பு, மார்கழி 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).
xL, 217 + 18 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ., ISBN: 955-9448-26-9.

தேசிய கல்வி ஆணைக்குழுவானது 2002, 2003ம் ஆண்டுகளில் பொதுக்கல்வி தொடர்பாக உருவாக்கிய கொள்கை ஆலோசனைகளை இவ்வெளியீடு உள்ளடக்குகின்றது. 9 அத்தியாயங்களைக் கொண்ட இவ்வெளியீட்டின் முதலிரு அத்தியாயங்களும் மீளாய்வு பற்றிக் குறிப்பிடுகின்றன. பொதுக்கல்வி ஒரு பின்னோக்கு என்ற முதலாம் இயலில் பெறுவழியும் நியாயத்தன்மையும், பொருத்தப்பாடு, தராதரம் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. இரண்டாம் இயல் 1997-2003 கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிய மீளாய்வாக அமைகின்றது. முன்றாம் அத்தியாயத்திலிருந்து ஒன்பதாவது (இறுதி) அத்தியாயம் வரை பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய கல்வி முறைமைக்கான இலக்குகள், கல்வி வாய்ப்பு: நியாயத்தன்மையும் உன்னதமும், கலைத்திட்டத்தைப் புதுப்பித்தல், தராதரம் மற்றும் பொருத்தப்பாடு, ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் உயர் தொழில்சார் விருத்தி, கல்வி ஆளுகை-முகாமைத்துவம், கல்வி வளங்களின் ஒதுக்கீடு, கல்விச் சட்டவாக்கம் ஆகிய தலைப்புக்களில் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 574737).

**6288**

***மாணவர் அடைவுகளை மதிப்பிடல்.*** S.P.தோரதெனிய (மூலம்). ந.வாகீசமூர்த்தி, ப.சபாரத்தினம், W.திசாநாயக்க, N.J.லியனகே, P.M.S.மகாலேகம், G.G.லீலானந்த, (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1989. (கொழும்பு: The Pacific Press (Pvt) Ltd).

56 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். மதிப்பீடும் அதன் அவசியமும், நோக்கங்களைக் கருத்திற்கொண்டு மதிப்பிடல், கற்றல் அனுபவங்களுக்கேற்ப மதிப்பிடல், பல்வேறு வகை வினாக்களும் அவற்றின் சிறப்பியல்புகளும், செய்முறை வேலைகளையும் செயற்றிட்டங்களையும் மதிப்பிடல், தொடர் மதிப்பீடு ஆகிய விடயங்களை இந்நூல் விபரிக்கின்றது.

**6289**

***மாணவரின் வகுப்பறை நடத்தை.*** ப.கா.பக்கீர் ஜ.்பார். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).

viii, 160 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-184-2.

பாரம்பரியமாக மாணவர்களின் நடத்தையைக் கட்டுப்படுத்த வெகுமதி, தண்டனைகளைப் பயன்படுத்திப் பழக்கப்பட்ட ஆசிரியர்களால் அம்முறையிலிருந்து விலகி, மாணவரை நெறிப்படுத்துவதற்கு வேறு வழிகளைக் கையாள்வது பெரும் சவாலாக அமைந்துள்ளது. மாணவரின் நடத்தையை மட்டும் அவதானித்து அதற்கான நெறிப்படுத்தல் நுட்பங்களைக் கையாள பல ஆசிரியர்கள் முயற்சிக்கின்றனர். மாணவரைத் தண்டித்தும், கண்டித்தும் ஆலோசனை வழங்கியும், புத்திசொல்லியும் இன்னும் இதுபோன்ற பல்வேறு உத்திகளைக் கையாண்டும் மாணவர்களை நெறிப்படுத்த அவர்கள் கடந்த காலங்களில் எடுத்த பல நடவடிக்கைகள் தோல்வியில் முடிந்துள்ளன. ஆசிரியர் கல்வி நிறுவனங்களில் வழங்கப்படும் தொழில்வாண்மைப் பயிற்சிகளும் இப்பிரச்சினைகளை வெற்றிகரமாகச் சமாளிக்க ஆசிரியர்களுக்குப் போதியதாக அமையவில்லை. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு மாணவரின் வகுப்பறை நடத்தையை துல்லியமாக இனம்கண்டு, அவர்களை நெறிப்படுத்தும் பல்வேறு நுட்பங்களைக் கொண்டதாக இந்நூல் வெளிவருகின்றது. நூலாசிரியர் இலங்கை-திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தில் விசேட தேவைகள் கல்வித்துறையின் தலைவராகப் பணியாற்றுகிறார். இவர் அக்கரைப்பற்று தைக்காப் பள்ளியைச் சேர்ந்தவர்.

**6290**

***மாணவரை விளங்கிக் கொள்ளல்: நுண்ணறிவும் ஊக்கலும்.*** ஏ.எஸ்.யோகராஜா. மட்டக்களப்பு: ஏ.எஸ்.யோகராஜா, 60/2, அதிகார் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (மட்டக்களப்பு: சியா அச்சகம், புதிய கல்முனை வீதி).

vi, 103 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-50551-0-9.

இரண்டு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலில் முதலாம் அத்தியாயம் நுண்ணறிவுக்கும், இரண்டாம் அத்தியாயம் ஊக்கலுக்கும் வழங்கப்பட்டுள்ளது. நுண்ணறிவின் அறிமுகம், வரலாற்று நோக்கு, வரைவிலக்கணங்கள், நுண்ணறிவு பற்றிய கொள்கைகள், அணுகுமுறைகள், பரம்பரையும் சூழலும், அளவிடலும் ஈவும், நுண்ணறிவுப் பரம்பல், சோதனை வகைகள், சோதனையின் பயன்பாடுகள் நுண்ணறிவில் ஊனமுற்ற நிலை ஆகியன விபரிக்கப்பட்டுள்ளன. ஊக்கல் என்ற இயலில் ஊக்கல்- அறிமுகமும் வரைவிலக்கணமும், ஊக்கிகளின் வகைகள், அடைவு ஊக்கத்தில் தனியாள் வேறுபாடுகள், உடலியற் தண்டனைகளும் அடைவு ஊக்கமும், மாணவரது அக ஊக்கிகளை விருத்தி செய்தல், ஊக்கல் பற்றிய கொள்கைகள் ஆகிய அம்சங்கள் விளக்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் உப பீடாதிபதியாவார்.

**6291**

**முறைமைசாராக் கல்வி முறையில் நாட்டுக்கூத்துக்கள்.** நாகமுத்து தணிகாசலம்பிள்ளை. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
x, 144 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-183-5.

வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, அச்சுவேலி போன்ற யாழ்ப்பாணக் கிராமங்களில் வழங்கிய நாட்டுக்கூத்துக்கள் சிலவற்றின் முறைசாராக் கல்விப் பெறுமானம் பற்றிய ஓர் ஆய்வு இதுவாகும். முறைமைக் கல்வியும் முறைமைசாராக் கல்வியும், நமது சமூகத்தில் முறைமைசாராக் கல்வியின் முக்கியத்துவம், முறைமைசாரா முறைகளில் சமூக விழுமியங்கள் கையளிக்கப்படும் தன்மை, சமூக விழுமியக் கையளிப்பில் பாரம்பரிய நாடகம் பெறும் இடம், நாடகங்கள் பாரம்பரிய சமூக விழுமியங்களைக் கையளிக்கும் முறைமை, பழமொழிகள், மரபுத் தொடர்களின் முறைமைசாராக் கல்விப் பயன்பாடு ஆகிய இயல்களின் வழியாக நாட்டுக்கூத்துக்களின் முறைமைசாராக் கல்விப் பெறுமானம் பற்றி இந்நூலில் பேசப்படுகின்றது. நூலாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தினையும் திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி முகாமைத்துவத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் முதுமாணிப்பட்டத்தையும் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். இலங்கைக் கல்விச்சேவையில் ஆசிரியராகவும், அதிபராகவும், கல்விப் பணிப்பாளராகவும் விளங்கியவர். கல்வி அமைச்சின் ஆலோசகராகப் பணியாற்றுகின்றார்.

**6292**
**மேலதிக மொழிகளைக் கற்பித்தல்: கல்விசார் செயற்பாடுகள் பற்றிய கைந்நூற்றொடர் 6.** எலியட் எல் ஜுட், லிஹுவா டான், ஹேர்பர்ட் ஜே.வோல்பேர்க். (மூலம்), சோ.சந்திரசேகரம் (பதிப்பாசிரியர்), புஷ்பா சிவகுமாரன் (மொழிபெயர்ப்பாளர்). கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
52 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19x12.5 சமீ., ISBN: 978-955-659-252-8.

தொடர்பாடல் சார்ந்த மொழியொன்றைக் கற்பிப்பது சம்பந்தமான பொதுவான சில மையத் தத்துவங்களை முன்வைப்பதுடன் அதைத் தொடர்ந்து, பிரத்தியேகமான கற்பித்தல் வகைகள் சம்பந்தப்பட்ட தத்துவங்களையும் இந்நூல் முன்வைக்கின்றது. மேலும் இந்நூல் ஒவ்வொன்றும் தொடர்பாக ஆராய்ச்சிகளைச் சுருக்கிக்கூறி, அதன் பின்னர் அவற்றிலிருந்து ஊற்றெடுக்கும் வகுப்பறை நடைமுறைகளைப் பற்றியும் கலந்துரையாடுகின்றது. சர்வதேச கல்வி மன்றம், சர்வதேசக் கல்விப் பணியகம், யுனெஸ்கோ ஆகியவற்றின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட இந்நூலின் 1வது பதிப்பு 2011 என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2010 முற்பகுதிகளில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

**6293**
**மொழியும் பிள்ளையின் அபிவிருத்தியும்.** ம.செ.அலெக்சாந்தர், வே.சுப்பிரமணியம் (முல்லைமணி), க.சொக்கலிங்கம் (சொக்கன்), கே.நடேசன், எஸ்.சோதிப்பெருமாள், முருகு இரத்தினம், ஏ.சிவராஜா, Y.A.D. நிமல் சந்திரசிறி, H.G.C.A.T. ஜெயசேகரா , A.M.S.அபயக்கோன், (செயற்குழு). கொழும்பு: தொலைக் கல்விக் கிளை, இலங்கை கல்வி அமைச்சு, 1வது பதிப்பு, 1986. (கொழும்பு: குணரத்தின ஒப்செட் லிமிட்டெட்).
20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்த நூலில், பிள்ளையின் உடல் வளர்ச்சி, உளவளர்ச்சி, மனஎழுச்சி வளர்ச்சி, சமூக வளர்ச்சி ஆகியவவை பற்றி விளக்கப்பட்டுள்ளன. மொழி அபிவிருத்திக்கு இடைத்தாக்கம் செய்யும் காரணிகளில் உடற் காரணிகள் பற்றி 1வது பகுதியிலும், உளக்காரணிகள், மன எழுச்சிக்கான காரணிகள் என்பன இரண்டாம் பகுதியிலும், சுற்றாடற் காரணிகள், குடும்பம், சமவயதுக் குழுக்கள், பாடசாலை என்பன 3வது பகுதியிலும், தொடர்புறுத்தும் ஊடகம், சமயச் செயல்கள், வேறு காரணிகள் என்பன நான்காம் பகுதியிலும் விளக்கப்பட்டுள்ளன.

**6294**

**யாழ்ப்பாணத்து மரபுவழிக் கல்வி.** சபா.ஜெயராசா. யாழ்ப்பாணம்: சபா.ஜெயராசா, 1வது பதிப்பு, 2000. (யாழ்ப்பாணம்: பொஸ்கோ பதிப்பகம், நல்லூர்).
(6), 106 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

யாழ்ப்பாணச் சமூகக் கட்டமைப்பும் மரபுவழிக் கல்வியும், யாழ்ப்பாணத்து மரபுவழிப் பெண்கல்வி, யாழ்ப்பாணத்து மரபுவழி அறிகைச் செயல்முறையில் சட்டமும் ஒழுங்கும், கருவிக் கையாட்சியும், யாழ்ப்பாணத்து மரபுவழி இசை நடனக் கல்வி, உளவியல் மரபும், உள நெருக்கீட்டு முகாமைத்துவமும், நாட்டார் மரபு வாயிலான அறிவுக் கையளிப்பு: எருதும் நரியும் நெருப்புச் சட்டிக் கதைகளும் ஆகிய ஆறு கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

**6295**
**விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகள்.** R.R.அபயவர்த்தன, H.G.C.A.T. ஜெயசேகரா (மூலம்). K.T.கனகரத்தினம், வீ.இராசையா, எஸ்.கிருஷ்ணபிள்ளை, சி.புலேந்திரன், P.A.டேவிட், Y.L.A.வஹாப், S.D.லயனல் அமரகுணசேகர, P.M.S.R.பண்டார, M.D.J.குணத்திலக்க , கே.அமரதுங்க, (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: United Merchants pvt. Ltd).
48 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x21 சமீ.

கல்வித்துறையில் அதிக திறமையுள்ள பிள்ளைகளும், அதிக குறைபாடுடைய பிள்ளைகளும் விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகள் எனக் கருதப்படுவார்கள். தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூலில், விசேட உதவிகள் தேவைப்படும் பிள்ளைகள் யாவர் என்பதை 1வது பகுதியிலும், மீத்திறன் பிள்ளைகள் பற்றி 2வது பகுதியிலும், கல்வியில் பிற்போக்குடைய மாணவர்கள் அல்லது மெல்லக் கற்கும் மாணவர்கள் பற்றி 3வது பகுதியிலும் விளக்கப்பட்டுள்ளது.

**6296**
**விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகள்.** R.R.அபயவர்த்தன (மூலம்). K.T.கனகரத்தினம், H.G.C.A.T. ஜெயசேகரா , வீ.இராசையா, சி.புலேந்திரன், P.A.டேவிட், Y.L.A.வஹாப், S.D.லயனல் அமரகுணசேகர, P.M.S.R.பண்டார, சுவர்ணா நவரட்ணம் (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: The Pacific Press (Pvt) Ltd).
44 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட இந்நூல், முன்னைய நூலின் தொடர்ச்சியாகும். விசேட உதவிகள் தேவைப்படும் பிள்ளைகள் யாவர் என்பதையும் மீத்திறன் பிள்ளைகள் பற்றியும் கல்வியில் பிற்போக்குடைய மாணவர்கள் அல்லது மெல்லக் கற்கும் மாணவர்கள் பற்றியும் முன்னைய நூலில் விளக்கப்பட்டது. இவ்விரண்டாம் பாகத்தில், உடற்குறைபாடுள்ள பிள்ளைகள், மந்த புத்தியுள்ள பிள்ளைகள், பிழையான சீராக்கம்பெற்ற பிள்ளைகள், நெறிபிறழ்ந்த பிள்ளைகள் ஆகியோர் பற்றி விளக்கப்படுகின்றது.

**6297**
விஞ்ஞானம் கற்பிக்கும் முறைகள். வில்சன் திசாநாயக்கா (மூலம்), ஆர்.பி.ஏ.ஜயசேகரா, எஸ்.பி.தோரதெனிய, பி.ஜீ.லீலானந்த. எம்.டீ.எஸ்.குணரத்ன, K.W.S.பீரிஸ், எம்.எச்.எம்.யாகூத் (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: The Pacific Press Pvt. Ltd.)
56 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். தமிழ் மொழிபெயர்ப்பாளர் விபரம் தரப்படவில்லை. தற்காலத்தில் விஞ்ஞானம் கற்பிப்பதற்காகக் கையாளப்படக் கூடிய பல்வேறு கற்பித்தல் முறைகள் தொடர்பாக

இந்நூல் தகவல்களை வழங்குகின்றது. 4 பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள இந்நூலில் 1வது பகுதி பொருத்தமான கற்பித்தல் முறைகளின் அவசியம் பற்றியும், 2வது பகுதி ஆய்வுகூடம் சார்ந்த கற்றல் கற்பித்தல் சந்தர்ப்பங்கள் பற்றியும், 3வது பகுதி சுற்றாடல் சார்ந்த கற்றல் கற்பித்தல் சந்தர்ப்பங்கள் பற்றியும், 4வது பகுதி விஞ்ஞான பாடமொன்றைத் திட்டமிடல் பற்றியும் விளக்கிக் கூறுகின்றது.

**6298**

**விளையாட்டு விழாக்களை ஒழுங்கு செய்தல்.** சுமனா குமாரி அபயக்கோன் (மூலம்). பீ.இராஜரத்தினம், M.H.M.யாகூத், சினேகலதா சேனநாயக்க, சந்திரா ஹெம்மாத்தகம, H.M.ஜயத்திலக்க , பீ.வீ.பிரேமசந்திர, (பாடப் பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: தொலைக்கல்வி நிறுவகம், தேசியக் கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1988. (கொழும்பு: United Merchants Limited).
40 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.

தொலைக்கல்வி ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி மொடியூல்களில் ஒன்றாக வெளியிடப்பட்ட நூல். முன் ஒழுங்கமைப்பு (ஆரம்ப ஆண்டுக்கானது), விழா நாள் ஒழுங்கமைப்பு (ஆரம்ப ஆண்டுக்கானது), முன்னாய்வு (கனிட்ட இடைநிலை ஆண்டுக்கானது), விழா நாள் ஒழுங்கமைப்பு (கனிட்ட இடைநிலை ஆண்டுக்கானது) ஆகிய நான்கு பிரிவுகளில் இது விளக்கப்படுகின்றது.

**மேலும் பார்க்க:** 6383

### 370.1 கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள்

**6299**

**அல்-இன்ஷிராஹ் 2007.** எஸ்.சி.எம். ஜௌசி (இதழாசிரியர்). பேராதனை: முஸ்லிம் மஜ்லிஸ், பேராதனைப் பல்கலைக் கழகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2007. (மாவனல்ல: எம்.ஜே.எம். ஓப்செட் பிரின்டர்ஸ், 119, பிரதான வீதி).
(12), 142 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x19 சமீ.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முஸ்லிம் மஜ்லிஸ் வெளியிட்ட ஆண்டு மலர். இவ்வாண்டின் ஆசிரியர் குழுவில் M.F.M. இம்தியாஸ், A.M. இர்ஸனா, M.N.அஸ்மா பேகம், M.H. ரஸ்மிலா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இலங்கையின் முஸ்லிம் பெண்களின் உயர்கல்வி, முஸ்லிம் பெண் கல்வியும் சமூக நிலையும், இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் டி.பி.ஜாயா, இஸ்லாமும் நேர முகாமைத்துவமும், இஸ்லாமிய அடிப்படைவாதம் ஒரு நோக்கு, பல்கலைக்கழகங்களும் எதிர்கால முஸ்லிம் சமூகமும், இஸ்லாமிய இசைப்பண்பாட்டில் மெய்யியல் பின்னணி, மருதமுனையில் நெசவுத் தொழிலும் தற்போதைய அதன் புத்தாக்கமும் போன்ற இன்னோரன்ன தலைப்புகளிலான பல ஆய்வுக் கட்டுரைகள் உள்ளிட்ட 27 படைப்புக்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் கவிதை, சிறுகதை, விதி வரையும் தீர்ப்புக்கள் என்ற குறுநாடகம் என்பனவும் அடங்குகின்றன. Islamic Banking, Polygamy in Islam ஆகிய இரு ஆங்கிலக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

**6300**

**நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி: பொன்விழா மலர் 1954-2004.** மலர் வெளியீட்டுக் குழு. நீர்கொழும்பு: விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி, 1வது பதிப்பு, 2004. (நீர்கொழும்பு: சாந்தி அச்சகம்).
227 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x22 சமீ.

1932இல் நீர்கொழும்பில் இந்து வாலிபர் சங்கம் உருவாகியது. இச்சங்கத்தினால் 7.10.1954 இல் 32 மாணவர்களுடனும், 2 ஆசிரியர்களுடனும் விவேகானந்த வித்தியாலயம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டதே இன்று கம்பஹா மாவட்டத்திலுள்ள ஒரேயொரு இந்துப் பாடசாலையான விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி. இப்பாடசாலையை 1963இல் அரசாங்கம் பொறுப்பேற்றது. தனது பொன்விழாவை 2004இல் கொண்டாடும்வகையில் அக்கல்லூரி வெளியிட்ட மலர் இதுவாகும். ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், பாடசாலையின் விரிவான வரலாறு உட்பட பல்வேறு முக்கிய தகவல்களைத் தாங்கிய கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் உள்ளிட்ட

படைப்பிலக்கியங்கள், என இம்மலரில் பல்வேறு அம்சங்கள் உள்ளடங்குகின்றன. நீர்கொழும்பு பற்றிய சமூகவியல் ஆய்வுகளை மேற்கொள்வோருக்கு இம்மலர் பயனுள்ளது.

**6301**

**வட இலண்டன் தமிழ்ப் பாடசாலை 21ஆவது ஆண்டுவிழா.** மலர் வெளியீட்டக் குழு. இலண்டன்: இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச் சங்கம், இணை வெளியீடு, வட லண்டன் தமிழ்ப் பாடசாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (லண்டன்: ஜே.ஆர்.பிரின்ட்).
36 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ.

எட்மண்டன் இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச் சங்கமும் வடக்கு லண்டன் தமிழ்ப்பாடசாலையும் தமது கல்விச்சேவையை 21 ஆண்டுகளாக நடத்திவருவதை நினைவுகூரும் வகையில் 25.9.2010 அன்று என்பீல்டில் இடம்பெற்ற நிகழ்வில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர். பிரமுகர்களின் வாழ்த்துரைகளுடன், பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சிகள், புகைப்படங்கள் என்பனவும் இடம்பெற்றுள்ளன.

**6302**

**விழுதுகள்.** ம.அல்வினா, ச.எட்வின். யாழ்ப்பாணம்: யாழ்.பல்கலைக்கழக முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வெலி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2001. (யாழ்ப்பாணம்: மைக்ரோ வின்).
(26) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x14 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்விபயின்று வெளியேறும் முல்லை மாவட்ட பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு பிரியாவிடை வழங்கும் வகையில் அவர்களது முகவரிகளைத் தாங்கி கல்லச்சுப் பிரதியாக வெளிவந்திருக்கும் சிறுநூல். மாணவர்களின் பிரியாவிடைக் கவிதைகளும், விரிவுரையாளர்களின் வாழ்த்துரைகளும் யாழ். பல்கலைக்கழக முல்லைத்தீவு மாவட்ட மாணவர் ஒன்றியம் கடந்த ஆண்டு மேற்கொண்ட உதவித்திட்டங்கள் கலை நிகழ்வுகள் பற்றிய அறிக்கையும் இடம்பெற்றுள்ளன.

## 380 வர்த்தகம், தொடர்புகள், போக்குவரத்து

## 381 வர்த்தகம்

**6303**

**இலங்கை: சமாதானத்தின் முகவராக வர்த்தகம்.** இன்டர்நெஷனல் அலர்ட். கொழும்பு: International Alert, இணை வெளியீடு, சமாதான கூட்டணிக்கான வர்த்தகம் (Business for Peace Alliance), Sri Lanka First, 1வது பதிப்பு, 2006. (கொழும்பு: Fast Print Service).
203 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

இது International Alert அமைப்பின் இலங்கைக்கான வேலைத்திட்டம் பற்றிய முதலாவது கொள்கை விளக்கமாகும். International Alert, Business for Peace Alliance, Sri Lanka First ஆகிய மூன்று அமைப்புகளும் இணைந்து இவ்வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருந்தன. அந்த அமைப்புகளின் முன்னுரைகளுடன் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் கொள்கை விளக்கம் வழங்குவதாக இந்நூல் அமைக்கின்றது. சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் வர்த்தகத்தின் பங்கு, சமாதானத்திற்கான முகவராக வர்த்தகம் ஆகியவை பிரதான விடயத் தலைப்புகளாக அமைந்துள்ளன.

## 390 நாட்டாரியலும் பழக்க வழக்கங்களும்

**6304**

**ஈழத்து நாட்டார் பாடல்கள்: மட்டக்களப்பு மாவட்டம்: ஆய்வும் மதிப்பீடும்.** இ.பாலசுந்தரம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 2வது பதிப்பு 2005, 1வது பதிப்பு, 1993. (சென்னை 600014: பி.வி.ஆர்.ஆப்செட்).

x, *470 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 22*x*14.5 சமீ.*

*மட்டக்களப்பு நாட்டார் பாடல்களை ஆய்வுசெய்து வெளியிடப்பட்டுள்ள நூல் இதுவாகும். மட்டக்களப்பு மாவட்டத்தின் புவியியல், வரலாறு, சமூக அமைப்பு என்பன முதலாம் இயலிலும், நாட்டார் பாடல் பொதுவாக வகுக்கப்படும் முறைகளையும் அவற்றின் பல்வகைச் சிறப்புகளையும் இரண்டாம் இயலிலும் விளக்கியுள்ளார். தொடர்ந்து தாலாட்டுப்பாடல்கள், தொழிற்பாடல்கள், காதற் பாடல்கள் ஆகியவை தனித்தனி இயல்களில் விபரிக்கப்பட்டுள்ளன. பாடற்பொருளை அணிகள் அலங்கரிக்கும் முறை, பாடல்களின் தலைமைக்கருத்துகள், இசையமைப்பு வாய்ப்பாடு, எதுகை-மோனையமைப்பு என்பன பற்றியும் விரிவாக இவ்வியல்களில் ஆராயப்பட்டுள்ளது. ஆய்வுக்குத் தேர்ந்தெடுத்த பாடல்களின் பயன்பாடு, அப்பாடல்களின் முக்கியத்துவம் என்பன ஆறாம் இயலிலும், பாடல்கள் குறிப்பிடும் சமுதாய மரபுகள், நம்பிக்கைகள் என்பன பற்றிய கிராமியப் பண்பாட்டியல் கூறுகள் ஏழாம் இயலிலும் விபரிக்கப்பட்டுள்ளன. இறுதியான எட்டாம் இயல் இவ்வாய்வில் நிறுவப்பட்டுள்ள கருத்துகளின் தொகுப்புரை, இன்னும் இத்துறையில் மேற்கொள்ளப்படவேண்டிய ஆய்வுகள் என்பன பற்றிய முடிவுரையாக அமைகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் பேராசிரியரான நூலாசிரியர் தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்கிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 604032).*

## *392 வாழ்வியல் வழக்குகள், வாழ்க்கை முறைமைகள்*

***6305***

**இஸ்லாமியக் குடும்ப வாழ்வு.** எம்.ஐ.எம்.அமீன். ஹெம்மாத்தகம: *அல்ஹஸனாத் பதிப்பகம்,* F *67, ஹிஜ்ராகம, 1வது பதிப்பு, ஜுன் 2008. (மாவனல்ல: எம்.ஜே.எம். பிரின்டர்ஸ், 119 பிரதான வீதி). (14), 154 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-99588-2-6.*

*மூன்று பகுதிகளை உள்ளடக்கிய இந்நூல் விவாக வாழ்வு அறிமுகம் என்னும் விடயத்தில் தொடங்கி காழி நிதிபதிகளின் தகைமைகளும் அவர்கள் பின்பற்றவேண்டிய நியதிகளும் என்ற விடயத்துடன் நிறைவு பெறுகின்றது. இவ்விரு விடயப் பரப்புகளுக்குமிடையே 26 அம்சங்களை எளிய நடையில் முடிவு வரையில் தர்க்கரீதியாக குர்ஆன், சுன்னாவின் ஆதாரங்களோடு நிறுவி, குடும்ப வாழ்வு பற்றிய ஒரு முழுமையான அறிவை இஸ்லாமிய சமூகத்திற்கு வழங்க ஆசிரியர் முயன்றிருக்கிறார். நூலாசிரியர் முஹம்மது இப்ராஹிம் ஆலிம் சாஹிப் முஹம்மது அமீன், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அறபு இஸ்லாமிய நாகரிகத்துறையின் முன்னாள் முதுநிலை விரிவுரையாளராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 625462).*

***6306***

**கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்கள்.** *க.தங்கேஸ்வரி. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).*
*192 பக்கம், விலை: இந்திய ரூபா 55., அளவு: 17.5*x*12 சமீ.*

*விநாயகர் வணக்கம், திருப்படைக் கோயில்கள், மண்டூர் முருகன் கோயில், சித்திர வேலாயுதர் சுவாமி ஆலயம், உகந்தை முருகன் ஆலயம், விநாயக வணக்கம், முருக தத்துவமும் முருக வழிபாடும், மட்டக்களப்பில் முருக வணக்கம், புராதன ஈழத்தில் இந்து மதம், சித்தர்கள் வாழ்வும் வழிகாட்டுதலும், சுவாமி விவேகானந்தரின் சமய சமத்துவம், சுவாமி விவேகானந்தரின் உலகப் பொதுமறைக் கருத்துக்கள், அன்னை சாரதாதேவியார், ஈழத்தில் பத்தினி வழிபாட்டுப் பாரம்பரியங்கள் ஆகிய 14 தலைப்புக்களில் கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்கள் தனித்தனிக் கட்டுரைகளாக வடிவமைக்கப்பட்டுள்ளன. களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல்துறைப் பட்டதாரியான க.தங்கேஸ்வரி இலங்கை அரசியலிலும் ஈடுபாடு கொண்டு பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர்.*

***6307***

***சீதனம்.*** *செய்னுதீன் எஸ்.பரீத் (தொகுப்பாசிரியர்), கம்பம் பீர்முஹம்மத் (உரையாக்கம்). ஹெம்மாத்தகம: அல்புர்கான் வெளியீட்டுப் பணியகம், 58 மடுள்போவ, 1வது பதிப்பு, 1998. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*(4), 40 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 17.5x12.5 சமீ.*

*தமிழ்நாடு கம்பம் பீர்முஹம்மது அவர்கள்* **கைக்கூலி** *என்ற தலைப்பில் ஆற்றிய உரையை ஒலிவடிவிலிருந்து எழுத்துவடிவாக்கி செய்னுதீன் எஸ்.பரீத் (புனைபெயர்: அகத்திமுறிப்பான்) தொகுத்துள்ளார். தமிழக இஸ்லாமிய சமூகங்களில் கைக்கூலி என்ற பதத்திற்கு இலங்கையில் இணையான பதமாக சீதனம் கொள்ளப்படுகின்றது. முஸ்லிம் சமூகங்களிடையே சீதனக்கொடுமை பற்றியும், அதனைக் களைவதற்கு இஸ்லாமிய வழிமுறைகள் பற்றியும் இந்நூல் பேசுகின்றது.*

**மேலும் பார்க்க:** *6100*

### *392.5 திருமணங்கள், மரணச்சடங்கு முறைமைகள்*

***6308***
***ஆத்ம விமோசனம்: அபரக்கிரியை.*** *இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம். கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இல.248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, ஐப்பசி 2007. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).*
viii, *80 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 18.5x12.5 சமீ.*

*இந்நூல் அபரக்கிரியைகள் சார்ந்த அமங்கலச் சடங்குகள் பலவற்றையும் விரிவாக விளக்குகின்றது. கிரியைகள் ஆற்றப்படுவதன் நோக்கமும் தாற்பரியமும் விளக்கப்பட்டுள்ளன. மூத்தோர் மட்டுமன்றி இளைய சமுதாயத்தினரும் அபரக்கிரியைகள் தொடர்பாக விரிவான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள இந்நூல் உதவுகின்றது. இந்நூலை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆய்வுப்பிரிவினர் தொகுப்பதற்கு உதவும்வகையில் அபரக்கிரியைகள் தொடர்பான வினா-விடைகளை சைவப்புலவர் கலாபூஷணம் சு.செல்லத்துரை தொகுத்து வழங்கியுள்ளார்.*

***6309***
***திருமண வாழ்வும் குடும்பமும்.*** *எஸ்.ஜே.யோகராசா. கொழும்பு 15: எஸ்.ஜே.யோகராசா, 65/322, காக்கை தீவு, மட்டக்குளி, 1வது பதிப்பு, சித்திரை 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B, *புளூமெண்டால் வீதி).*
viii, *62 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ.,* ISBN: *978-955-97763-4-5.*

*கிறிஸ்தவ பெறுமதிகளோடு, குடும்ப வாழ்வைச் சக்தியாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு எழுதப்பட்ட நூல். இதில் குடும்பம் என்றால் என்ன, குடும்பங்களின் வகைகள், திருமணத் தெரிவு, மன முதிர்ச்சி, நல்ல உறவை ஏற்படுத்துவது எப்படி, கிறிஸ்தவ திருமணம், திருமணத்தை வளமாக்குதல். கட்டிடம் பலப்பாக இருக்க உறுதியான அத்திவாரம் தேவை, பெற்றோர் பிள்ளை உறவு, திருமணத்துக்குத் துணையைத் தெரிவுசெய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டியது, பாலுணர்வு ஆகிய பதினொரு இயல்களில் இந்நூல் திருமணமும் குடும்ப வாழ்வும்பற்றிய சமூக விழிப்புணர்வை வழங்குகின்றது.*

### *398 கிராமிய இலக்கியங்கள்*

***6310***
***அயோத்தி மன்னன்: நாட்டுக்கூத்து.*** *ஓ.கணபதிப்பிள்ளை. மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64 கதிர்காமர் வீதி, 1வது பதிப்பு, வைகாசி 2005. (கொழும்பு: ஏ.ஜே.பதிப்பகம்).*
*90 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 18.5x12 சமீ.,* ISBN: *955-8715-25-5.*

*நூலாசிரியர் கணபதிப்பிள்ளை, சிறந்த எழுத்தாளராகவும், நடிகராகவும், பாடகராகவும் அறியப்பட்டவர். அவர் ஆடிய நாட்டுக்கூத்துகளில் தசரதன், சோழ மகாராஜன் பாத்திரங்கள் இன்றும் விதந்து பேசப்படுபவை. இவர் ஒரு ஒப்பனையாளராகவும் உடை, முடி தயாரிப்பாளராகவும்*

இத்துறையில் அறியப்பெற்றவர். எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 27வது வெளியீடான இந்நூல் 2005ம் ஆண்டுக்கான வடக்கு கிழக்கு மாகாண அரசின் சாகித்தியப் பரிசினை நாடக நூலுக்காகப் பெற்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 615247).

**6311**

**கண்ணகை அம்மன் பத்ததியும் பாடல்களும்.** கண.ஆறுமுகம் (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: விபுலம் வெளியீடு, இல.7, ஞானசூரியம் சதுக்கம், 1வது பதிப்பு, வைகாசி 2008. (மட்டக்களப்பு: சண் அச்சகம், இருதயபுரம்).

xxxii, 132 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 20x14.5 சமீ.

கண்ணகை அம்மனை வழிபட எழுத்தில் அமைந்த இரு ஆவணங்கள் மட்டக்களப்பில் உள்ளன. ஒன்று பத்ததி (பத்தாசி எனவும் வழக்கிலுண்டு), மற்றது பாடல்கள். கோயில் கிரியை செய்யும் முறைகளை ஒழுங்காக எடுத்துரைக்கும் ஆவணம் பத்ததியாகும். வாய்மொழியில் ஆரம்பத்தில் போதிக்கப்பட்டு காலக்கிரமத்தில் எழுத்தில் ஆவணமாகியவை இவை. இந்நூலில் குளுர்த்திப்பாடல், கலியாணக்கால் சுற்றுக் காவியம், வழக்குரை காவியம், அம்மன் பிரார்த்தனை, அம்மன் அகவல், பொற்புறா வந்த காவியம், காவியம் (அங்கணாமைக்கடவை), தோத்திரம் (வற்றாப்பளை), காவியம் (வற்றாப்பளை), காவியம் (பட்டிநகர்), காவியம் (தாண்டவன்வெளி), காவியம் (தம்பிலுவில்), மழைக் காவியம் (பட்டிநகர்), மழைக் காவியம் (கன்னன்குடா), மழைக்காவியம், கள்வர் பிடிபட்ட காவியம் (கன்னன்குடா ஆலயம்), காவியம் (கன்னன்குடா), பத்ததிகள் ஆகிய 18 பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**6312**

**கண்ணான மச்சி.** எம்.சி.எம்.ஸுபைர். சென்னை 1: திரீயெம் பப்ளிஷர்ஸ், 36, அரண்மனைக்காரத் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 1969. (சென்னை 1: திரீயெம் பிரிண்டர்ஸ், 36, அரண்மனைக்காரத் தெரு).

xiv, 110 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12.5 சமீ.

கிழக்கிலங்கைக் கிராமிய இலக்கியத்தில் வாய்மொழியாக வந்த காதற்பாடல்கள் சிலவற்றைத் தேர்ந்து அவற்றுக்கேற்ப சில இலக்கியச் சித்திரங்களைத்தீட்டி இந்நூலில் வழங்கியுள்ளார். காதல் என்ற பிரிவுக்குள் ஆத்திரம் வேணாம் மச்சான், இரு உள்ளங்கள், பொறாமைப் புகைச்சல், உலகம் பொறுக்குதில்லை, வாப்பா அறிந்தால், கனவு தந்த கலக்கம், சொன்ன சொல் மாறாது, கலங்காதே கண்ணே, நீதானா என் ஜோடி, பிரிந்தவர் கூடினர், நஞ்சு கலந்துவிட்டாள் ஆகிய 11 உரைச்சித்திரங்களும், காதல் மணம் என்ற பிரிவினுள் அரவாத வாள்போல, குளத்தோரம் வாங்க மச்சான், அடுத்த நிலவில், பெருநாள் பரிசு, இன்பத்திருமணம், சோலைக்கிளி, ஆராய்ந்துபார் கிளியே, கதீஜாவின் கலக்கம், தலை நோன்பு, கதவைத்திறந்திடுகா, கண்ணான மச்சி ஆகிய 11 உரைச்சித்திரங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275773).

**6313**

**காமன் கூத்தும் மலையகப் பாரம்பரியமும்.** சோதிமலர் ரவீந்திரன். பேராதனை: திருமதி சோதிமலர் ரவீந்திரன், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2004. (கண்டி: சன் பிரின்ட்ஸ்).

xvi, 142 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

காமன் கூத்து, அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் ஆகிய 3 கலைவடிவங்களும் மலையகத்துக்கு உரியவை. பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் சோதிமலர் ரவீந்திரன் எழுதிய இந்நூல் இலங்கையில் காமன் கூத்து பற்றி ஆய்வு நெறிமுறைக்கமைய எழுதப்பட்டுள்ளது. காமன், காமன் பண்டிகை முதலிய செய்திகளை, இலக்கிய ஆதாரங்கள், கர்ணபரம்பரைக் கதைகள் ஆகியவற்றின் மூலம் 5 இயல்களில் இந்நூல் விளக்குகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 577545).

**6314**

**கிழக்கிலங்கை முஸ்லீம்களின் கிராமியக் கவியமுதம்.** S.முத்துமீரான். நிந்தாவூர் 1: மீராஉம்மா நூல்வெளியீட்டகம், பேர்ள், 1வது பதிப்பு, மே 1991. (சென்னை 600001: மில்லத் பிரின்டர்ஸ், 16 அப்பு மேஸ்திரி தெரு).
168 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x13 சமீ.

கிழக்கிலங்கையில் நிந்தாவூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் முத்துமீரான். சட்டத்தரணியாகவும், நாட்டார் வழக்கியல் ஆய்வாளராகவும் விளங்கிய முத்துமீரான் கிழக்கிலங்கை மக்களின் கிராமிய வழக்குகளை இலக்கிய ஆய்வாக இந்நூலில் வழங்கியுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 443134).

**6315**
**கூத்தின் முதல் மீளுருவம், கீசகன் வதை: வடமோடி நாடகம்.** த.துரைராசா. மட்டக்களப்பு: தேசிய கல்விக் கல்லூரி, தாழங்குடா, மட்டக்களப்பு, 1வது பதிப்பு, புரட்டாதி 2008. (மட்டக்களப்பு: எவர்கிரீன் அச்சகம், 93 திருமலை வீதி).
vi, 42+ 14 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் கூத்து மீள்வடிவம் 1960க்குப் பின்னர் ஏற்பட்டதாக பொதுவானதொரு கருத்து நிலவுகின்றது. மட்டக்களப்பு, குருக்கள்மடக் கிராமப் பின்னணியில் முன்னதாக ஆடப்பட்டுவந்த கீசகன்வதையே கூத்தின் முதல் மீளுருவாக்கம் என்பதை இவ்வாய்வு புலப்படுத்துகின்றது. இவ்வாய்வினை மேற்கொண்ட த.துரைராசா, மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் அரங்கியல்துறை விரிவுரையாளராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 629150).

**6316**
**கொல் ஈனுங் கொற்றம்: கூத்துருவ நாடகம்.** யோ.யோன்சன் ராஜ்குமார். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238 பிரதான வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2006. (யாழ்ப்பாணம்: ஏ.சி.எம்.அச்சகம், 464 ஆஸ்பத்திரி வீதி).
xvi, 100 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ.

கம்பராமாயணத்திலுள்ள கும்பகர்ணன் வதை படலத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய வியாக்கியானத்துடன் இக்கூத்துருவ நாடகம் எழுதப்பட்டுள்ளது. ஈழத்தில் காணப்படும் பல்வேறு பிரதேசக் கூத்து மரபுகளையும் ஒன்றிணைத்து புதியதொரு கலைவடிவமாகத் தயாரிக்கப்பட்டது. அளிக்கை, அளிக்கைப் பதிவுகள், விளைவுகள் ஆகிய தலைப்புகளில் வெளிவந்துள்ள இந்நூல் வடமாகாணத் தமிழ் இலக்கிய விழா 2006ம் ஆண்டுக்கான நாடக இலக்கியப்பரிசை வென்றது.

**6317**
**தென்மோடி நாட்டுக்கூத்து: பண்டாரவன்னியன்.** ஞா.ம.செல்வராசா (மூலம்), ம.பிலோமின் (பதிப்பாசிரியர்). கொழும்பு: காவலூர் புனித அந்தோனியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம், தென் இலங்கைக் கிளை, 1வது பதிப்பு, சித்திரை 2002. (கொழும்பு 13: Luxmy Printer, 195, Wolfendhal Street).
xviii, 122 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14 சமீ.

1975இல் மேடையேறிய பண்டாரவன்னியன் நாட்டுக்கூத்து நூலுருவில் வெளிவந்துள்ளது. வெள்ளையர் காக்கை வன்னியனைத் தம் கைப்பொம்மையாக்கி, திறை கொடுக்க மறுத்த குற்றத்திற்காக பண்டாரவன்னியனைச் சிறைப்பிடிக்க முயல்கின்றனர். மானமே பெரிதென நினைத்துப் போராடிய மன்னனின் வாழ்க்கை நாட்டாரிலக்கியமாக வழங்கிவந்தது. அதனை தென்மோடி நாட்டுக்கூத்தாக அமரர் ஞா.ம.செல்வராசா அவர்கள் எழுதி வழங்கியிருக்கிறார்.

**6318**
**வாழ்விழந்தார் புலம்பல் ஒப்பாரி.** கச்சதீவுக் கவிராயர். கொழும்பு: சிங்கத் தமிழன் சிவகுமாரன் அழுத்தகம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் இல்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).
8 பக்கம், விலை: 10 சதம், அளவு: 19x12.5 சமீ.

*யாழ்ப்பாண மாநகர மேயர் அல்பிரட் துரையப்பா தமிழீழ விடுதலைப் போராளிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து அவரது துணைவியார் திருமதி துரையப்பா பேரில் பாடப்பெற்ற ஒப்பாரி. அமரர் துரையப்பாவுக்கு எதிராக அவரதும் அவரது சகாக்களினதும் இனவிரோத செயற்பாடுகளை இங்கு ஒப்பாரியாகப் பாடியுள்ளார் இக்கவிஞர்.*

***6319***

**வித்துக்கள்: ஈழ மண்ணில் வேத சாட்சிகள்.** தேவதாசன். *யாழ்ப்பாணம்: கவிஞர் தேவதாசன், 1வது பதிப்பு, 1990. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
xvi*, 34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5*x*13.5 சமீ.*

*கத்தோலிக்கரின் இரட்சணிய சரித்திரத்தில் இறைவனின் வார்த்தைகள் மிசனரிமாரால் இலங்கையில் போதிக்கப்பட்டதும், அதனை ஏற்க சுதேசிகள் நடாத்திய பலிகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை. புனித பிரான்சீஸ் சவேரியாரும், மன்னார் வேத சாட்சிகளும் இவ்வகையில் முக்கியத்துவம் பெறுகின்றனர். வித்துக்கள் என்ற தலைப்பில் புனித சவேரியார் மன்னார் வேதசாட்சிகள் தொடர்பான சரித்திரம் தென்மோடி நாட்டுக்கூத்து வடிவத்தில் வெளியிடப்பட்டுள்ளது. நூலாசிரியர் கவிஞர் தேவதாசன் முன்னர் காத்தவன் காவியம் என்ற தலைப்பில் யோசவ்வாஸ் முனிவரின் வரலாற்றைக் காவியமாக்கித் தந்தவர். இந்நாட்டுக்கூத்தின் கதாபாத்திரங்களாக புனித பிரான்சீஸ் சவேரியார், பிரெஞ்சுப் பல்கலைக்கழக மாணவி டயானா, பிரெஞ்சுப் பல்கலைக்கழக மாணவன் சாமுவேல், புனித இன்னாசியார், சங்கிலியன் (செகராசசேகரன்), சங்கிலியனின் படைத்தளபதி வீரமாணிக்கத் தேவர், சங்கிலியன் ஆட்சிக்குள் அடங்கும் கதிரமலை அல்லது கந்தரோடையின் அதிபதி அப்பா முதலி, சங்கிலியனின் மூத்த மகனும் வேதசாட்சிகளுள் ஒருவனுமாகிய இளம்சிங்கன் ஆகியோர் இடம்பெறுகின்றனர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 571329).*

***மேலும் பார்க்க: 6291, 6464***

### *398.1 பழமொழிகளும் விடுகதைகளும்*

***6320***

**களவுக் காதலர் கையாண்ட விடுகதைகள்.** மு.இராமலிங்கம். *சென்னை: ராதா பிரசுரம், 1வது பதிப்பு, ஜனவரி 1962. (சென்னை 5:* Jeya and Co., Paramount Press, Triplicane*).*
viii*, (4), 60 பக்கம், விலை: இந்திய ரூபா 1.50, அளவு: 21.5*x*14 சமீ.*

*நாட்டார் இலக்கியத்தில் வழங்கிய விடுகதைகளைத் தொகுத்து பொருத்தமான உரை விளக்கத்துடன் சுவையாக இந்நூலில் வட்டுக்கோட்டை மு.இராமலிங்கம் அவர்கள் பதிவுசெய்துள்ளார். காலம் பார்த்தல் (பெண் பார்த்தல், பதம் பார்த்தல், கண்ணொடு கண்ணினை நோக்கு ஒக்கின், அடி அடித்தல்), முற்றத்து முத்தம் (கடுக்கண் இழந்த காது, துகிலொடு தொடர்ந்த தோடு, மர்மத்தை மறைத்தல், பண்ணையிலே பாலமுதம்), விடுகதை ஆதித்தன் (பூபாலகனும் துவார பாலகனும், மாவல்லானும் மதிவல்லாளும், மதியால் வென்ற மகிஷி, கிளிமொழி கேட்ட மன்னன்), கண்டதே காட்சி (கூரையுள் கீரை, மிதியடிக்கு மயங்கிய மந்திரி, திருமணமோ திரிமனமோ, வாணமில் வனப்பு), மலரும் மணமும் (மலர் வேட்டை, ஆனை அணுகா அழகி, பெண்ணொடு போன பொன், டமுக்கடி சவுக்கடி), இன்பமும் துன்பமும் (இரவுக்குறி, மன்மத பாணம், உடன்கட்டை ஏறல், மணல் முற்றத்தில்), காணாத கண் (காயாத மாவின் கனி, உடையவர் வந்துவிட்டார், வியபிசாரியா இவள்) ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் விரிகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 280590).*

## *400 மொழியியல்*

### *494.9 தமிழ் மொழி*

**6321**

**சொற்கோவை.** பொ.கனகசபாபதி (சொல்லாக்கக் குழு சார்பாக). கனடா: விளம்பரம் வெளியீடு, GTA Square, 5215 Finch Avenue East, Suite 201, Toronto, Ontario M1S0C2, 1வது பதிப்பு, சித்திரை 2010. (கனடா: அமுதீசன், Artlink, Toronto, Ontario).
(14), 74 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

ஆண்டுதோறும் புதிது புதிதாக, நூற்றுக்கணக்கான ஆங்கிலச் சொற்கள் வழக்கிற்கு வருகின்றன. இவற்றில் பல இலங்கையிலும் இந்தியாவிலும் அதிகம் பயன்படுத்தப்படாதவை. புகலிடத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் இச்சொற்களுக்கான தமிழ்ப் பதங்களைக் கண்டறிவதில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்நிலையைத் தவிர்க்கும் வகையில் இளைப்பாறிய அதிபர் பொ.கனகசபாபதியின் தலைமையில் செ.இலங்கையன், இ.இலம்போதரன், க.கந்தசாமி, வி.கந்தவனம், பொ.கனகசபாபதி, கௌசல்யா சுப்பிரமணியன், த.சிவபாலு, சி.சிவநேசன், நா.சுப்பிரமணியன், க.நவம், பார்வதி கந்தசாமி, இ.பாலசுந்தரம், பொன் பாலராஜன், ராஜா மகேந்திரன், மணி வேலுப்பிள்ளை, மனுவல் ஜேசுதாசன் ஆகியோரை குழாம் உறுப்பினராகவும், கு.குணசிங்கம், குயின்ரஸ் துரைசிங்கம், உ.சேரன், சீ.பத்மநாதன் ஆகியோரை இடைவரவு உறுப்பினராகவும் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு குழுவினரால் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. இதில் அரங்கவியல், ஆட்சியியல், ஆதனவியல், இயல்கள் (Ologoes), இலக்கியம், ஊடகம், கல்வி, காப்புறுதி, குடிவரவு, சட்டவியல், மருத்துவ இயல், வங்கியியல், வணிகவியல், வாதங்கள் (isms), ஆகிய 14 பிரிவுகளில் ஆங்கிலச் சொற்களும் அவற்றுக்கு இணையான தமிழ்ப் பதங்களும் வழங்கப்பட்டுள்ளன.

**6322**

**சொற்பொருள் விளக்கம் என்னும் தமிழகராதி.** ச.சுப்பிரமணிய சாஸ்திரி. 2வது பதிப்பு, மாசி 1960, 1வது பதிப்பு, 1925. பருத்தித்துறை: ச.சோமசுந்தர ஐயர், வித்தியாவிருத்தித் தருமாலய வெளியீடு, 2வது பதிப்பு, 1960, 1வது பதிப்பு, 1925. (பருத்தித்துறை: கலாநிதியந்திர சாலை).
(8), 288 பக்கம், விலை: ரூபா 5.00, அளவு: 21x13.5 சமீ.

இது யாழ்ப்பாணம் பருத்தித்துறை வித்தியாவிருத்தித் தருமாலயகர்த்தரும் பிரபல சோதிடகணித சித்தாந்தியும் ஆகிய பிரமஸ்ரீ ச.சுப்பிரமணிய சாஸ்திரிகளால் புதிதாய் எழுதி அச்சிடப்பட்ட பிரதிக்கிணங்க, இக்காலத்துக்கியைந்தனவாகக் கூட்டியும் மாற்றியும் அவர்கள் எழுதிவைத்த சில சொற்களையுஞ் சேர்த்து, அவர் சகோதரர் பிரமஸ்ரீ ச.சோமசுந்தர ஐயரால் பதிப்பிக்கப்பெற்றது. மூலநூல்பற்றி ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "இதுகாறும் தமிழில் வெளிவந்திருக்கின்ற அகராதிகளொன்றையும் பின்பற்றாது, சூடாமணி பிங்கலம் முதலிய நிகண்டுகளையும் சங்கப் புலவர்களாற் செய்யப்பட்ட நூல்களையும் உரைகளையும் பல காப்பியங்களையும் வடநூலகராதியையும் ஆதாரமாகக் கொண்டு சுருக்கமாகவும் விளக்கமாகவும் என்னால் எழுதப்பெற்றுள்ளது. சொற்களையும் பொருள்களையும் இனிது விளக்குதலாற் சொற்பொருள் விளக்கமெனும் பெயர்த்தாயிற்று."(இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275630).

**6323**

**தமிழ் மொழியியற் சிந்தனைகள்.** சு.சுசீந்திரராசா. சென்னை 600078: ரிஷபம் பதிப்பகம், 31/45 இராணி அண்ணா நகர், 1வது பதிப்பு, ஜுலை 1999. (சென்னை 600001: மாணவர் மறுதோன்றி அச்சகம், பாரிமுனை).
(8), 167 பக்கம், விலை: ரூபா 150., இந்திய ரூபா 50., அளவு: 21.5x14 சமீ.

இந்நூலில் மொத்தம் 15 மொழியியல் ஆய்வுக்கட்டுரைகள் உள்ளன. யாழ்ப்பாணத் தமிழின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்துவன என்றாலும் மொழியியல் சிந்தனை நோக்கில் இவற்றை பொது மொழியியல், யாழ்ப்பாணத் தமிழ், மொழி கற்றலும் கற்பித்தலும், நாட்டார் பாடல்கள் என்ற நான்கு பிரிவிற்குள் அடக்கலாம். ஒலித்துணை உகரம், யாழ்ப்பாணத்துப் பேச்சுத்தமிழில் ஆக்கப் பெயர்கள், மொழி இயலும் மொழி பயிற்றலும், மரபுத் தொடர்கள், இலங்கையில் தமிழை இரண்டாவது மொழியாகக் கற்றலும் கற்பித்தலும், மொழித் தொடர்பு, தமிழ் மொழிப் பாடநூல்களில் பேச்சுத்தமிழும் எழுத்துத் தமிழும், ஒலி ஒப்புமையால் எழுந்த நம்பிக்கைகளா? உறவுப்

*பெயரமைப்பில் ஓர் உறவு, விபுலாநந்த அடிகளாரின் மொழிச் சிந்தனை, பண்டிதமணியின் மொழிநடை, தமிழ் மொழி கற்றல் கற்பித்தலில் ஒத்த கருத்துள்ள சொற்களும் எதிர்கருத்துள்ள சொற்களும், இலங்கைத் தமிழ்மொழி ஒரு குறிப்பு, மொழியில் சமுதாயப் படிநிலைகள், நாட்டார் பாடல் மொழி ஆகிய தலைப்புகளில் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 524701).*

***6324***

***தமிழில் வழங்கும் எழுத்துப் பெயர்ப்பு முறைகள்.*** *இ.முருகையன். யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, மே 1993. (ஏழாலை: மஹாத்மா அச்சகம்).*
*(4), 30 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22 x14 சமீ.*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் நினைவாக மேற்கொள்ளப்பட்ட முதலாவது நினைவுப் பேருரையின் நூல்வடிவம். வேற்றுமொழிச் சொற்களைத் தமிழில் எழுதிக்காட்ட முற்படும்போது, எழும் சில சிக்கல்கள் இந்த உரையில் பரிசீலிக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரியைச் சார்ந்த கல்வயலில் 23.04.1935இல் பிறந்த முருகையன், சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் தன் இடைநிலைக் கல்வியைப்பெற்று, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப்பட்டத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முது துணைப் பதிவாளராகப் பணியாற்றியவர்.*

*494.8(1) தமிழ் இலக்கணம்*

***6325***

***இலக்கண சந்திரிகை.*** *அ.குமாரசுவாமிப் புலவர். சுன்னாகம்: மல்லாகம் பண்டித மாணவர் கழக வெளியீடு, மல்லாகம், 2வது பதிப்பு, பிலவங்க ஆண்டு மாசி 1968, 1வது பதிப்பு, ஏவிளம்பி ஆண்டு ஆனி 1897. (சுன்னாகம்: திருமகள் அச்சகம்).*
*(6), 64 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12 சமீ.*

*பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் ஊக்குதலினால், பண்டித மாணவர் கழகத்திற்காக, இளவாலை மயிலங்கூடல் சி.அப்புத்துரை அவர்கள் இந்நூலை புலவரவர்களின் பிள்ளைகளின் அனுமதியுடன் இரண்டாவது பதிப்பாக வெளியிட்டிருக்கிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275029).*

***6326***

***இலக்கணக் கொத்து: மூலமுமுரையும்.*** *ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் (மூலம்), ஆறுமுக நாவலர் (பரிசோதித்தவர்). சென்னை: பொன்னம்பலபிள்ளை, தருமபரிபாலகர், சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை, 3வது பதிப்பு, விரோதிகிருது ஆவணி 1911. (சென்னபட்டணம்: வித்தியாநுபாலன யந்திரசாலை).*
*(8), 88 பக்கம், விலை: இந்திய ரூபா 1.00, அளவு: 21x12.5 சமீ.*

*திருக்கைலாச பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் அருளிச்செய்த இந்நூல், மேற்படி ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களால் பல பிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்து சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகர் பொன்னம்பலபிள்ளையால் சென்னபட்டணம் வித்தியாநுபாலனயந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டன. முதற் பதிப்பு விபரமில்லை. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 6330).*

***6327***

***சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரின் இலக்கண சந்திரிகை, வினைப்பகுபத விளக்கம்.*** *சுபதினி ரமேஷ் (பதிப்பாசிரியர்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*

*(4), 131 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-145-3.*

*ஈழத்து வரலாற்றிலே 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிஞர்களுள் யாழ்ப்பாணம் சுன்னாகத்தைச் சேர்ந்த அ.குமாரசுவாமிப் புலவர் முக்கியமானவர். இவரின் இலக்கண சந்திரிகை, வினைப் பகுபத விளக்கம் ஆகிய நூல்கள் மிக முக்கியமானவை. இலக்கண சந்திரிகை, வடமொழியின் சுவரூபங்களையும், அவற்றின் மூலங்களையும், மூலங்கள் விகுதி முதலிய உறுப்புக்களோடு சேரும் வழிவகைகளையும், செய்கை வேறுபாடுகளையும் எடுத்துணர்த்துவதாகும். நட, வா, மடி என்ற சூத்திரத்தை எடுத்துக்கொண்டு, நட முதலிய ஒவ்வொன்றையும் அவ்வவ்வீற்று வாய்ப்பாடாகக் கொண்டு, 350க்கும் மேற்பட்ட வினையடிகளை எடுத்துக்காட்டி அவற்றிலிருந்து பிறக்கும் பெயர்கள் வினைகளின் இயல்புகளை ஆராய்ந்து சிலவற்றுக்குப் பொருள் விளக்கமும் சொல்வது வினைப்பகுபத விளக்கம் என்ற நூலாகும். தமிழ் இலக்கண வரலாற்றில் இவை இரண்டும் முக்கிய நூல்களாகும். சுபதினி ரமேஷ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் சிறப்புப்பட்டதாரியாவார்.*

***6328***

***வினைப் பகுபத விளக்கம்.** அ.குமாரசுவாமிப் புலவர். சுன்னாகம், பண்டித மாணவர் கழக வெளியீடு, மல்லாகம், 2வது பதிப்பு, 1967, 1வது பதிப்பு, 1913. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*
*xvi, 44 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12 சமீ.*

*இலக்கண சந்திரிகை நூலாசிரியர் குமாரசுவாமிப்புலவரின் மற்றுமொரு இலக்கண நூல் இது. வினைப்பகுபதமுடிப்பு விளக்கும் நூல். சொல்லாராய்ச்சியில் ஒப்புயர்வில்லாத தனிச்சிறப்பு வாய்ந்த புலவரவர்கள் சமகாலத் தமிழகப் புலவர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கியவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275033).*

### *494.8(2) தமிழ்ப் பாடநூல்கள்*

***6329***

***தமிழ் செயல்நூல்: தரம் 1.** த.துரைசிங்கம். கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).*
*(4), 100 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 30x21 சமீ., ISBN: 955-1472-21-7.*

*இந்நூல் தேசிய கல்வி நிறுவகத்தினால் 2007ம் ஆண்டுமுதல் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்டது. மொழியின் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் போன்ற திறன்களை விருத்திசெய்துகொள்வதற்கான பல்வேறு பயிற்சிகள் இந்நூலில் உள்ளன. நூலாசிரியர் கவிஞர் த.துரைசிங்கம், ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளராவார்.*

***6330***

***தமிழ் செயல்நூல்: தரம் 4.** இ.க.சிவஞானசுந்தரம். கொழும்பு 6: தென்றல் பப்ளிக்கேஷன்ஸ், 135 கனல்பாங்க் வீதி, 2வது பதிப்பு, ஜனவரி 2004, 1வது பதிப்பு, ஜனவரி 2002. (சென்னை 600001: மாணவர் மறுதோன்றி அச்சகம்).*
*(4), 116 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 24x18.5 சமீ., ISBN: 955-8621-18-8.*

*கல்வி என்பது அர்த்தமுள்ளதாகவும், வாழ்க்கையோடு இணைந்ததாகவும், மாணவர் உளம்கொள்ளத் தக்கதாகவும் அமையவேண்டும் என்ற வகையில் பல்வேறு செயற்பாடுகள் மூலம் மாணவரை உற்சாகத்துடன் இயங்கவைக்க, வகுப்பறை, வீட்டுச் செயற்பாடுகளுக்கு உதவுமுகமாக இச்செயல்நூல் 25 இயல்களில் வடிவமைக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் இலங்கையின் கல்வித்திணைக்களத்தின் மேல்மாகாண கல்விவள ஆலோசகராகப் பணியாற்றியவர்.*

***6331***

***தமிழ் செயல்நூல்: தரம் 4.** ஏ.யோகராஜா. கொழும்பு 12: லோயல் பதிப்பகம், 125 A, New Moor Street, 9வது பதிப்பு, ஜனவரி 2010, 1வது பதிப்பு, ஜனவரி 2008. (அச்சக விபரம் தரப்படவில்லை)*

94 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 30x23 சமீ., ISBN: 978-955-1711-08-5.

25 அலகுகளைக் கொண்டுள்ள இந்நூல், மாணவர்கள் இலகுவாக விளங்கிக்கொள்ளும் முறையில் குறிப்புகளையும் பயிற்சிகளையும் அதற்கான விடைகளையும் உள்ளடக்கியது.

**6332**

**தமிழ் செயல்நூல்: தரம் 5.** ஏ.யோகராஜா. கொழும்பு 12: லோயல் பதிப்பகம், 125 A, New Moor Street, 4வது பதிப்பு, ஜனவரி 2010, 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை)
108 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 30x22.5 சமீ., ISBN: 978-955-1711-09-2.

2009 புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்டுள்ள தமிழ் தரம்-5இற்கான செயல்நூல். 24 அலகுகளைக் கொண்டுள்ள இந்நூலில், மாணவர்கள் இலகுவாக விளங்கிக்கொள்ளும் முறையில் குறிப்புகளும் பயிற்சிகளும் அதற்கான விடைகளும் விரிவாகத் தரப்பட்டுள்ளன. புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களின் பயன்பாடு கருதி ஒவ்வொரு அலகிலும் புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஏற்ற வினாக்களும் விடைகளும் தரப்பட்டுள்ளன.

**6333**

**தமிழ் தரம் 1: செயல்நூல்.** இ.இராசதுரை. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2007. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
(4),140 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 30x22 சமீ., ISBN: 955-1472-20-9.

2007ம் ஆண்டுமுதல் நடைமுறைப்படுத்தப்படும் தேசியக் கல்வி நிறுவனத்தின் புதிய பாடத்திட்டத்தைப் பூரணமாகப் பின்பற்றி உருவாக்கப்பெற்ற செயல்நூல். நூலாசிரியர் யாழ்ப்பாணம், அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் மகாவித்தியாலய ஆசிரியராவார்.

**6334**

**தமிழ் தரம் 3: செயல்நூல்.** இ.இராசதுரை. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 3வது பதிப்பு, ஆகஸ்ட் 2006, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
112 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 28x21 சமீ.

தேசிய கல்வி நிறுவகத்தின் 2000ஆம் ஆண்டின் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய சகல அலகுகளையும் உள்ளடக்கியது. மாணவர்களின் அறிவுத்திறன், மனப்பாங்கு, அழகியற் கலை ஆகியவற்றை விருத்திசெய்யும் வகையில் அமைந்த பயிற்சிநூல். நூலாசிரியர் யாழ்ப்பாணம், அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் மகாவித்தியாலய ஆசிரியராவார்.

**6335**

**தமிழ் தரம் 4: செயல்நூல்.** த.துரைசிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2001. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
116 பக்கம், விலை: ரூபா 135., அளவு: 25x19 சமீ.

தேசிய கல்வி நிறுவனத்தின் நான்காந் தரத்திற்குரிய புதிய பாடத்திட்டத்தைப் பூரணமாகப் பின்பற்றியும் தமிழ் (4) பாடநூலில் உள்ள 25 பாடங்களைத் தழுவியும் உருவாக்கப்பெற்ற செயல்நூல். மாணவர்களின் மொழித்திறன் விருத்திக்கும் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கும் துணைபுரியும் நூல்.

**6336**

**தமிழ் தரம் 4: செயல்நூல்.** S.F.L.மொஹிடீன் ரஜா. யாழ்ப்பாணம்: ஆதவன் பதிப்பகம், 322 மானிப்பாய் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*84 பக்கம், வண்ணப்படங்கள், விலை: ரூபா 140., அளவு: 22x18 சமீ.*

*தேசிய கல்வி நிறுவகம் 2002 முதல் அறிமுகப்படுத்தியிருக்கும் பாடத்திட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்ட நூல். மேலதிக இணைப்பாக கட்டுரைப் பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. ஆரம்பப் பிரிவு மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் பிரித்து நோக்கும் ஆற்றல், தொகுத்து நோக்கும் ஆற்றல், கிரகிக்கும் ஆற்றல், கற்பனை ஆற்றல், எழுத்தாற்றல் ஆகியவற்றை வளர்க்கும் பயிற்சிகளை உள்ளடக்கியது.*

***6337***

***தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 10: செயல்நூல்.*** *த.துரைசிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2000. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).*

*90 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 25.5x18.5 சமீ.*

*தேசிய கல்வி நிறுவகத்தின் 10ஆம் தரத்துக்குரிய பாடத்திட்டத்தைப் பூரணமாகப் பின்பற்றியும், தமிழ் (தரம் 10) பாடநூலில் உள்ள 12 பாடங்களையும், தமிழ் இலக்கியத் தொகுப்பு நூலில் உள்ள (தரம் 10) பாடங்களையும் உள்ளடக்கியதாக உருவாக்கப்பெற்ற செயல்நூல். பகுதி 1- பல்தேர்வு வினாக்களையும், பகுதி 2- கட்டுரை, கடிதம், சுருக்கம் முதலியவற்றையும், பகுதி 3-இலக்கிய வினாக்கள்-விடைகளையும் உள்ளடக்கியது.*

***6338***

***பாலர் மலர்.*** *க.இ.க.கந்தசுவாமி. கொழும்பு 10: இலக்கியன் வெளியீட்டகம், B3-G3 ரம்யா பிளேஸ், 3வது பதிப்பு 2010, 2வது பதிப்பு 2000, 1வது பதிப்பு, 1982. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).*

*48 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 125., அளவு: 25x17.5 சமீ., ISBN: 978-955-1997-08-3.*

*தமிழவேள் க.இ.க.கந்தசுவாமி அவர்கள் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் செயலாளராக இருந்தவர். சொல்லறிதல், பொருளறிதல், எழுத்தறிதல், எண்ணக்கருவாக்கம் செய்தல் என்பவற்றிற்கும், அதன் வழியாக அடிப்படையான மொழித்திறன்களை வளர்த்தலுக்குமான இந்நூல் இவரால் முதலில் 1982இல் தமிழ்ச்சங்க வெளியீடாக வெளியிடப்பட்டிருந்தது. பாலர் கல்வி உளவியலுக்கும் கற்பித்தல் விதிகளுக்கும் இயைய இந்நூல் எழுதப்பெற்றுள்ளது.*

***6339***

***முதன்மொழி தமிழ் இலக்கியம்(ஆ-பாடத்திட்டம்) சீறாப்புறாணம்- ஹிஜ்றத்துக் காண்டம் தாத்துற்றஹாக்குப் படலம்.*** *எம்.எம்.உவைஸ், த.கனகரத்தினம், சு.வேலுப்பிள்ளை (பதிப்பாசிரியர்கள்) செ.பசுலு முகியிதீன் (உரையாசிரியர்). கொழும்பு 10: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், புதிய செயலகம், தபால் பெட்டி எண் 520, மாளிகாவத்தை, 2வது பதிப்பு, 1980, 1வது பதிப்பு, 1979. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(8), 80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*9ம் 10ம் தரத்துக்குரிய இந்நூல் 1980ஆம் ஆண்டு டிசெம்பரிலும் அதன் பின்னரும் நடைபெறும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தர முதன்மொழித் தேர்வுக்குரிய பாடத்திட்டத்துக்கமைவாக வெளியிடப்பட்டுள்ளது. புதிய பாடத்திட்டத்தில் முதன்மொழிக்குரிய பாடவிதானப் பகுதியில் பாவிலும் உரையிலும் அமைந்த இலக்கியப் பகுதிகள் சில இடம்பெற்றுள்ளன. அவை தமிழ் மாணவர்களுக்குரியவை, முஸ்லிம் மாணவர்களுக்குரியவை என்று இருவகைப்படும். முஸ்லிம் மாணவர்களுக்குரிய சீறாப்புராணம் ஹிஜ்றத்துக் காண்டம் தாத்துற்றஹாக்குப் படலம் இந்நூலில் இஸ்லாமிய மாணவர்களுக்கேற்றவகையில் இலகுநடையில் விளக்கப்பட்டுள்ளன.*

## *500 தூய விஞ்ஞானங்கள்*

*500 தூய விஞ்ஞானம்*

**6340**

**கலைச்சோலை: அறிவியல் கட்டுரைகள்.** எஸ்.பேராசிரியன். கொழும்பு 5: மீரா பதிப்பகம், C/3/5,அன்டர்சன் தொடர்மாடி, பார்க் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 2004. (கொழும்பு 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315 ஜம்பட்டா தெரு).
viii, 104 பக்கம், சித்திரம், புகைப்படம், விலை: ரூபா 185., அளவு: 17.5x12.5 சமீ.

எஸ்.பேராசிரியன், விஞ்ஞான அறிவியல் கட்டுரைகளை ஆங்கில நூல்களிலும், சஞ்சிகைகளிலும், தொழில்சார் பருவ இதழ்களிலுமிருந்து தமிழ் வாசகர்களுக்கெனத் தேர்ந்தெடுத்து, வீரகேசரி வாரமலரில் அவ்வப்போது பிரசுரித்து வந்துள்ளார். அக்கட்டுரைகளின் மறுசீரமைக்கப்பெற்ற வடிவங்களின் தேர்ந்த தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. உங்கள் பேச்சில் உயிர்மூச்சுண்டா?, சிங்காரச் சிரிப்பு, மனித உணர்வுகளோடு பிறந்தது சங்கீதம், உடைந்த இதயத்தை ஒட்டுவது எவ்வாறு?, பகற் கனவுகள் பலவீனங்களின் பாதுகாப்பரண்கள், அஞ்சலக வரலாறு, கொடிய விலங்குகளை அடிபணிய வைப்பது எவ்வாறு?, மரணமும் மனமுடைந்த தற்கொலையும், பெண்களின் சிறுவயதுத் திருமணம் என்பன போன்ற தலைப்புகளில் பலவின அறிவியல் கட்டுரைகள் 22 இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 510 கணிதம்

**6341**

**கணிதச் செயல்நூல் தரம் 3.** கு.வி.பதிப்பாசிரியர் குழு. யாழ்ப்பாணம்: கு.வி.அச்சகம், 386, மணிக்கூட்டு வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: K.V. Printers, 58, Green Lane).
(4), 112 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 27.5x20.5 சமீ.

தரம் -3 புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக 54 அலகுகளில் தயாரிக்கப்பட்டது. வெளியிடப்பட்ட ஆண்டு தரப்படாதமையால் எவ்வாண்டுக்குரிய பாடத்திட்டம் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

**6342**

**கணிதப் பயிற்சி செயல்நூல் தரம் 2.** கு.வி.பதிப்பாசிரியர் குழு. யாழ்ப்பாணம்: கு.வி.அச்சகம், 386, மணிக்கூட்டு வீதி, 1வது பதிப்பு, 1999. (கொழும்பு 13: K.V. Printers, 58, Green Lane).
(6), 62 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 26x18.5 சமீ.

இலங்கைத் தேசிய கல்வி நிறுவகத்தின் ஆரம்பக் கல்வித்துறை வெளியிட்ட புதிய பாடத்திட்டத்திற்கு அமையப் பாட அலகுகள் உள்ளடக்கப்பட்டு, பயிற்சி வினாக்களும் அடங்கியுள்ளன.

**6343**

**கணிதப் பயிற்சி செயல்நூல் தரம் 2.** எம்.எம்.ஜி.பிரிட்டோ. நீர்கொழும்பு: கிளின்டன் சுரேஷ்குமார், இல.38, எல்லை வீதி, கொச்சிக்கடை, 1வது பதிப்பு, 1998. (அச்சக விபரம் அறியமுடியவில்லை).
(2), 54 பக்கம், விலை: ரூபா 65., அளவு: 26x19.5 சமீ., ISBN: 955-96519-5-1.

1998ம் ஆண்டு கல்வி அமைச்சினால் அறிமுகமான புதிய பாடத்திட்டத்திற்கமைய வெளியிடப்பட்டுள்ள நூல். விடய விளக்கம், கற்பித்தல் முறைகள், செயன்முறைப் பயிற்சிகள், கணிதச் செய்கைகள், வினாக்களைத் தெரிவுசெய்தல் ஆகிய விடயங்களை விளக்கமாகவும் தெளிவாகவும் வழங்குகின்றது.

**6344**

**கணிதம்: தரம் 5.** கௌரி மரியதாஸ். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, மே 2002. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
(2), 94 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 26x19 சமீ.

தேசிய கல்வி நிறுவனத்தின் ஐந்தாம் தரத்திற்குரிய பாடத்திட்டத்தைப் பூரணமாகப் பின்பற்றியும் கணிதம் (5), பாடநூலில் உள்ள அனைத்துப் பாடங்களைத் தழுவியும் உருவாக்கப்பெற்ற செயல்நூல்.

**6345**

**கணிதம் செயல்நூல்: தரம் 2.** இ.இராசதுரை. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2000. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).
(2), 90 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 25x19 சமீ.

தேசிய கல்வி நிறுவனத்தின் தரம் 2க்குரிய (2000ம் ஆண்டு) புதிய பாடத்திட்டத்தைப் பூரணமாகப் பின்பற்றியும் புதிய பாடநூலில் உள்ளடக்கிய பாடங்களை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டதுமான செயல்நூல்.

**6346**

**கணிதம் செயல்நூல்: தரம் 4.** ஏ.யோகராஜா. கொழும்பு 12: லோயல் பதிப்பகம், 125 A, New Moor Street, 6வது பதிப்பு, ஜனவரி 2010, 1வது பதிப்பு, நவம்பர் 2008. (அச்சக விபரம் தரப்படவில்லை)
116 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 30x22.5 சமீ., ISBN: 978-955-1711-03-0.

புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்டுள்ள கணிதம் தரம்-4இற்கான செயல்நூல். 32 அலகுகளைக் கொண்டது.

**6347**

**கணிதம் செயல்நூல்: தரம் 5.** ஏ.யோகராஜா. கொழும்பு 12: லோயல் பதிப்பகம், 125 A, New Moor Street, 4வது பதிப்பு, ஜனவரி 2010, 1வது பதிப்பு, ஜனவரி 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை)
118 பக்கம், விலை: ரூபா 210., அளவு: 30x23 சமீ., ISBN: 978-955-1711-04-7.

30 அலகுகளைக் கொண்டுள்ள இந்நூலின் ஒவ்வொரு அலகிலும் மாணவர் இலகுவில் விளங்கிக்கொள்ளக்கூடிய முறையில் தெளிவானதும் விரிவானதுமான பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. செய்முறைகளும் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளதால் மாணவர்கள் இச் செய்முறைகளை அவதானித்து, மேற்கொண்டு சுயமாகப் பயிற்சிகளை இலகுவாகச் செய்யக்கூடியதாயிருக்கும். புலமைப்பரிசில் பரீட்சைக்கான வினா-விடைகளும் இறுதியில் அடக்கப்பட்டுள்ளன.

**6348**

**கணிதம் பயிற்சிநூல் புதிய பாடத்திட்டம் தரம் 9.** எஸ்.திலீபன். கொழும்பு 12: லோயல் பப்ளிக்கேஷன்ஸ், 5வது பதிப்பு, ஆகஸ்ட் 2004, 1வது பதிப்பு, ஜூலை 2002. (கொழும்பு 12: லோயல் பிரின்டர்ஸ், 125ஏ, நியூ மூர் வீதி).
192 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x15 சமீ.

நடைமுறையிலுள்ள புதிய பாடத்திட்டத்திற்கமைய நாற்பது அலகுகளில் உருவாக்கப்பட்ட தரம் 9இற்கான பயிற்சிநூல்.

**6349**

**தொடக்கப் பகுப்புக் கேத்திரகணிதம்.** பி.சி.மொலோனி. கொழும்பு 5: வெளியீட்டுப் பிரிவு, அரசகரும மொழித் திணைக்களம், 5, த பொன்சேக்கா வீதி, 1வது பதிப்பு, 1965. (இலங்கை: அரசாங்க அச்சகம்).
xii, (6), 234 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

பல்கலைக்கழகங்களில் முதலாண்டு இறுதியில் நிகழும் இடைத்தரப் பரீட்சைக்கு அல்லது பொதுத் தகுதிப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுள், தூயகணிதத்தை ஒரு பாடமாக எடுப்போருக்கு ஏற்றவாறு இயற்றப்பட்டுள்ள இந்நூல் இரு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியில் பகுப்புக்

கேத்திரகணிதம் பற்றிய இலகுவான அடிப்படைத் தத்துவங்கள் அடங்கியுள்ளன. இரண்டாம் பகுதியில் மேலும் கடினமான விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. லண்டன் G.Bell and Sons நிறுவனத்தால் வெளியிடப்பெற்ற Rev. B.C.Molony அவர்கள் எழுதிய An Elementary course in Analytical Geometry என்ற மூலநூலின் தமிழாக்கம் இதுவாகும். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் கணித உப பேராசிரியர் சி.நடராசர் இதனை தமிழாக்கம் செய்துள்ளார்.

**மேலும் பார்க்க:** *6243*

*530 பௌதிகம்*

**மேலும் பார்க்க:** *6241*

*550 புவியியல் விஞ்ஞானம்*

***6350***

***புவியியலில் கணினியின் பயன்பாடுகள்.*** சூசைப்பிள்ளை அன்ரனி நோர்பேட், தங்கவேலு வசந்தகுமாரன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
viii, 125 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-076-5.

புவியியலில் அளவறியும்முறைப் புரட்சியின் பயனாக ஏற்பட்ட கணினித்தொழில்நுட்ப வளர்ச்சி, மற்றும் மாற்றங்களினால் புவியியலின் உள்ளடக்கமும் அணுகுமுறைகளும் மாற்றியமைக்கப்பட்டது. புவியியலில் மட்டுமன்றி கணினியின் பயன்பாடு இன்று உலகின் பல்வேறு துறைகளிலும் மிக ஆழமாக ஊடுருவியுள்ளது. ஆய்வுகளில் மட்டுமின்றி கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளிலும் கணினிகள் உதவி வருகின்றன. எனவே கணினியின் தோற்றம், வளர்ச்சி, அதன் கல்விப் பயன்பாடுகள், குறிப்பாக கணினியின் புவியியல்துறைக் கல்விப் பயன்பாடுகள் பற்றி மாணவர்களும் ஆசிரியர்களும் இலகுவாக விளங்கிக்கொள்ளும் வகையில் இந்நூலில் விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. கணினியின் தோற்றம் வளர்ச்சி, ஒழுங்கமைப்பு, பல்வகை மொழிகள், கணினி மூலம் கற்றல், கற்பித்தல், பாவனை மாதிரிகள் மற்றும் பல்வேறு பிரயோகங்கள் பற்றி இந்நூல் விளக்குகின்றது. அன்ரனி நோர்பேட் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் புவியியல் பேராசிரியராகவும், பேராசிரியர் வசந்தகுமாரன் சென்னைப் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறைத் தலைவராகவும் பணியாற்றுகின்றனர்.

**மேலும் பார்க்க:** *6907*

*551.47 சுனாமி*

***6351***

***ஊழியில் ஆழி: சுனாமி காரைதீவு-பதிவுகள் HDO சேவைகள்.*** வி.ரி.சகாதேவராஜா. கண்டி: மனித அபிவிருத்தித் தாபனம் HDO, 37, முல்கம்பளை வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2005. (சாய்ந்தமருது 14: ஸ்டார் ஒப்செட் பிரின்டர்ஸ்).
(6), 118 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ., ISBN: 955-99325-0-0.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள காரைதீவுப் பகுதியில் கடல்கோள் ஏற்படுத்திய தடயங்கள் மற்றும் காரைதீவின் வரலாறு (காரைதீவு மான்மியம்) பற்றிய தகவல்களையும் திரட்டி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. சுனாமி இயற்கைச் சீற்றத்தால் அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட அழிவுகள் குறித்த முழுமையான புள்ளிவிபரங்கள் இந்நூலில் காணப்படுகின்றன. அழிவின் பின்னரான காரைதீவின் நிலைமைகள், சுனாமிக்குப் பின்னரான மானிட வாழ்வியல் என்பன விளக்கமாகக் கட்டுரை உருவில் தரப்பட்டுள்ளன. மாவட்ட அடிப்படையில் உயிரிழந்தோர் பற்றிய விபரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. சுனாமிக்குப் பின்னர் வழங்கப்பட்ட கண்டி மனித அபிவிருத்தி தாபனத்தின்

*பணிகள் விதந்து கூறப்பட்டுள்ளது. நூலாசிரியர் பேரழிவிற்குப்பின்னர் பத்திரிகைகளில் எழுதிய காரைநகர்ப்பதிவுகள் என்ற தொடர் இந்நூலுக்கு அடிப்படையாக உள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 594021).*

**மேலும் பார்க்க:** *6146, 6151*

*570 உயிரியல்*

***6352***

***உயர்தர உயிரியல் பல்தேர்வு வினாக்கள் 1000.*** *செ.ரூபசிங்கம். வவுனியா: செ.ரூபசிங்கம், இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், 1வது பதிப்பு, 2003 (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).*

*(4), 174 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 140., அளவு: 22x15 சமீ.*

*தாவரவியல், விலங்கியல், உயிரியல் ஆகிய பாடங்களின் பாடத்திட்ட ஆக்கம், ஆசிரியர் கைநூல்களின் ஆக்கம், அவற்றின் மதிப்பீடு, மாதிரி வினாத்தாள்களின் தயாரிப்பு, மொழிபெயர்ப்பு, போன்றவற்றில் பங்குகொண்டுள்ள இந்நூலின் நூலாசிரியர் செ.ரூபசிங்கம் அவர்கள் இப்பாடங்களுக்கென 11 நூல்களைத் தமிழ்மொழிமூலம் எழுதியுள்ளதுடன் 3 நூல்களை மொழிபெயர்த்தும் வெளியிட்டுள்ளார். உயிரியல் மாணவர் தாம் கற்ற விடயங்களைப் பயிற்சிசெய்து கொள்ளும்போது பயன்படுத்துமுகமாக இந்நூல் வெளிவந்துள்ளது. இதில் தாவரவியல் விலங்கியல் ஆகிய பாடங்களில் இடம்பெற்ற பொதுப்பரீட்சை பல்தேர்வு வினாக்களில் உயிரியலில் பயன்படுத்தப்படக்கூடியவை மட்டும் தெரிவுசெய்யப்பட்டு இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.*

***6353***

**தொழிற்படும் விலங்கு.** *செ.ரூபசிங்கம். வவுனியா: செ.ரூபசிங்கம், இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், 3வது பதிப்பு, 2004, 1வது பதிப்பு, 2001, 2வது பதிப்பு, 2003. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).*

*(6), 186 பக்கம், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ.,* ISBN: *955-98587-4-2.*

*க.பொ.தராதர உயர்தர வகுப்புக்கான உயிரியல் பாடப்புத்தகம். இந்நூலில் கவசங்களும் மனிதத் தோலும், அசைவும் ஆதாரமும், சமிபாடும் போசணையும், விலங்குகளில் கடத்தல், சுவாசத் தொகுதி, கழிவகற்றல் தொகுதி, ஒருசீர்த் திடநிலை, இயைபாக்கம், வாங்கிகளும் புலனங்கங்களும், அகஞ்சுரக்கும் தொகுதி, இனப்பெருக்கத்தொகுதி ஆகிய பதினொரு அலகுகளில் உயிரியல் பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. வவனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய ஆசிரியரான இந்நூலாசிரியர் க.பொ.தராதர உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக மொத்தம் 11 நூல்களை இதுவரை எழுதியுள்ளார்.*

***6354***

**நுண்ணங்கியியல்.** *செ.ரூபசிங்கம். வவுனியா: செ.ரூபசிங்கம், இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், 1வது பதிப்பு, 2006 (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).*

*76 பக்கம், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 125., அளவு: 22x15 சமீ.,* ISBN: *955-98587-6-9.*

*க.பொ.தராதர உயர்தர வகுப்புக்கான உயிரியல் மாணவர்களுக்கான நுண்ணங்கிகள் தொடர்பான அடிப்படை அறிவு நுண்ணங்கியியல் என்ற இந்நூலின் மூலம் வழங்கப்படுகின்றது. க.பொ.த. உயர்தர பாடத்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவுசெய்யும் வகையில் இந்நூலில் உள்ள குறிப்புகள் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலினை நூலாசிரியர் முன்னைநாள் ஹாட்லி கல்லூரி தாவரவியல் ஆசிரியை திருமதி வை. பாலசுப்பிரமணியம் அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார்.*

## 600 தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்

## 601 தொழில்நுட்பம்

### 6355

**இனம் தெரியாத பறக்கும் தட்டுகள்.** *கனி விமலநாதன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).*

*192 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 210., அளவு: 19x13 சமீ.*

*நான்கு பகுதிகளில் விரியும் பறக்கும் தட்டுகளின் மர்மம் பற்றிய அறிவியல் பூர்வமான தகவல்களை இந்நூல் கொண்டுள்ளது. பூமியில் மனித இனம், எதிர்கால வாரிசுகளின் விமானங்கள், பிரபஞ்சப் பரிமாணங்கள், என்பன முதலாவது பகுதியிலும், எதிர்ப்பாளர்களின் கருத்துக்கள், மக்களின் அறியாமை, மாயத் தோற்றங்கள், இனம்தெரியாத பறக்கும் பொருட்களின் ஆய்வாளர்களின் வகைகள் என்பன இரண்டாவது பகுதியிலும், இனம்தெரியாத பறக்கும் பொருட்களும் அப்போலோ பயணங்களும், இனம்தெரியாத பறக்கும் பொருட்கள் உண்மையே, ஜிம்மி கார்ட்டரின் இனம்தெரியாத பறக்கும் பொருள் அனுபவம், கனடாவில் றொஸ்வெல், ஜெரி ஏர்வின் எங்கே, இனம்தெரியாத பறக்கும் பொருட்கள் பற்றிய சில பதிவுகள் ஆகியவை மூன்றாம் பகுதியிலும், நம்மவர் சிலரின் கருத்துக்கள், என் கருத்தாக, முடிவாக ஆகியவை இறுதிப்பகுதியிலும் இடம்பெற்றுள்ளன.*

### 6356

**குளோனிங் மற்றும் நானோ தொழில்நுட்ப அதிசயங்கள்.** *எஸ்.பேராசிரியன். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600015: எம்.கே.என்டர்ப்ரைஸஸ்).*

xiv, *114 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 17.5x12 சமீ.*

*குளோனிங் தொழில்நுட்பம் (*Cloning Technology*), நானோ தொழில்நுட்பம் (*Nano Technology*), மரபணுத் தொழில்நுட்பம் (*Gene Technology*), மனித மூளை (*Human Brain*), செயற்கை உயிர் தொழில்நுட்பம் (*Synthetic Life*), தொலைத்தொடர்பு (*Telecommunication*), விண்வெளித் தொழில்நுட்பம் (*Space Technology*) ஆகிய ஏழு விஞ்ஞானபூர்வமான விடயங்களை தனித்தனி இயலில் இந்நூல் விரிவாகப் பேசுகின்றது.*

## 610 மருத்துவம்

### 6357

**அயன மண்டல மருத்துவம்.** *அ.சின்னத்தம்பி. யாழ்ப்பாணம்: கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம், 411-1 காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, 1979, 1வது பதிப்பு, 1949. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).*

*(6), 296 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 19x13 சமீ.*

*அயனமண்டல மருத்துவம் (*Tropical Medicine*) தொடர்பாக வெளிவந்த ஈழத்தின் முதலாவது நூலாகவும், ஈழத்தின் மருத்துவத்துறைசார்ந்த முக்கியமான நூலாகவும் கருதப்படும் இந்நூல் யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகத்தின் 28ஆவது வெளியீடாகும். பேராசிரியர் அ.சின்னத்தம்பி இந்நூலில் காட்டுக்காய்ச்சல் (மலேரியா), கரும்நீர்க் காய்ச்சலும் ஏனைய ஈமகுளோபீன் ஊறுநீர் நிலைமைகளும், இலீசுமன் நோய்கள், மறுகலிப்புக் காய்ச்சல்கள், எலிக்கடிக் காய்ச்சல்கள், இலப்றோபைரோசிசு (மென்சுருளிவாதை), வைரசுத் தொற்றுதல், ஒட்டுண்ணிக் காய்ச்சல்கள், சமொனெலாத் தொற்றுகள், சீகெல்லாத் தொற்றுகள், அமீபா வாதை, பசுற்றெறெல்லாத் தொற்றுக்கள், கோதாரி நோய் (கொலரா), பீற்று நோய் (புறூ), நிர்ப்பீதியுயா (இறேபிசு)-விசர்நாய்க்கடியுயா, ஈர்ப்பு வலி (தற்றெனசு), குட்டை நோய் (தொழுநோய்), யோசு (பறங்கிநோய், பிறாம்பீசியா) ஆகிய நோய்கள் பற்றியும் அவற்றிற்கான சிகிச்சைகள் பற்றியும் 18 இயல்களில் விளக்கியுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 336039).*

## 612 உடற்கூற்றுத் தொழிலியல்

**6358**

**உங்களுக்கு அறிவும் கண்களுக்கு ஒளியும்.** ரெஜி சீமன், எஸ்.நாகேந்திரன், சன்ன ஜயசூரிய, இந்திரா ஜயசூரிய. கண்டி: இலங்கைக் கண் நிறுவனம், கண் வைத்தியப் பிரிவு, அரசாங்க வைத்தியசாலை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (களனி: இந்திரா லனரோல், சுப்ரீம் அச்சகம்).
20 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

நோராட் தாபனத்தின் அனுசரணையுடன் இலங்கை கண் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இந்நூலில் கண் வைத்தியம் பற்றிய சாதாரண மக்களிடம் எழும் கேள்விகளுக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது. கண் அறுவை சிகிச்சை வைத்தியர் ரெஜி சீமன், கண் வைத்தியர் எஸ்.நாகேந்திரன், மற்றும் சன்ன ஜயசூரிய, இந்திரா ஜயசூரிய ஆகியோரின் முயற்சியில் உருவாகிய இந்நூலுக்கான கார்ட்டுன் சித்திரங்களை அஜித் லால் இராஜபக்ச வழங்கியுள்ளார்.

## 613 பொது உடல்நலவியல்

**6359**

**உங்கள் இருதயத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள்.** ஜெ.இந்திரகுமார். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
ix, 165 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-659-200-9.

2002இல் சியாம் பெர்ணாண்டோ எழுதிய Mind your Heart என்ற ஆங்கில நூலைத் தழுவி எழுதப்பட்டது. 10 அத்தியாயங்களில் இருதய ஆரோக்கியம் பற்றியதும் அதனுடன் தொடர்பான மருத்துவ அறிவியல் பற்றியதுமான தகவல்களை எளிமையான வாசிப்புக்கு உகந்ததாக உள்ளடக்கிய நூல் இதுவாகும். நூலாசிரியர் 1963இல் பிறந்தவர். 1991இல் MBBS மருத்துவப் பட்டப்படிப்பை வட கொழும்பு மருத்துவக் கல்லூரியில் முடித்து இலங்கை மருத்துவ மேற்பட்டப்படிப்பு நிறுவனத்திடமிருந்து (PGIM) 1997 இல் MD பட்டத்தையும் பெற்றுக்கொண்டவர். இருதயம் மற்றும் குருதிக் கலன்களின் தொழிற்பாடுகள் பற்றிய சிறப்பு மருத்துவ அறிஞராகவும் விளங்குகின்றார். 1998முதல் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

## 614 பொதுச் சுகாதாரம்

**6360**

**எயிட்ஸ் இல்லாத உலகம்.** ச.முருகானந்தன். கொழும்பு: மீரா பதிப்பகம், 191/23 ஹைலெவல் வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 6: பரணன் அசோஷியேற்ஸ், 403 1/1, காலி வீதி, வெள்ளவத்தை).
(8), 63 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-50232-3-8.

எயிட்ஸ் என்றால் என்ன? அதன் வரலாறு, அது உலகை அழித்திடுமா? அந்நோயின் அறிகுறிகள், எய்ட்ஸ் நோயின் தொற்றை எவ்வாறு அறிந்துகொள்ளலாம்? HIV கிருமி தொற்றியபின் எய்ட்ஸ் நோய் வருவது எவ்வாறு? எய்ட்ஸ் நோய்க்கான மருந்து கண்டுபிடித்தல் சாத்தியமா? சித்த ஆயுர்வேத வைத்தியத்தில் எய்ட்ஸ் நோய்க்கு மருந்து உண்டா? HIV தொற்றும் பெண்களும் குழந்தைகளும், HIV தொற்றுடையவர்களுக்கான உளவளத்துணை, எயிட்ஸ் பரவுதலைத் தடுப்பதெப்படி? அதிலிருந்து எம்மையும் எமது பிரதேசத்தையும் காப்பதெப்படி? எய்ட்ஸ் நோயாளியை ஒதுக்கி வைக்கவேண்டுமா? என்பன போன்ற கேள்விகளுக்கான பதில்களாக இந்நூலிலுள்ள 14 கட்டுரைகளும் அமைகின்றன. ஆசிரியர் போராட்டக் காலத்தில் வன்னிப்பிரதேசத்தில் கால்நூற்றாண்டுகள் வைத்தியராகக் கடமையாற்றியவர். அவரது அனுபவ வெளிப்பாடுகளாக 5 சிறுகதைத் தொகுப்புகளையும், 2 கவிதை நூல்களையும், இரண்டு கட்டுரை நூல்களையும், அது ஒரு அழகிய நிலாக்காலம், நெருப்பாறு ஆகிய இரண்டு குறுநாவல் நூல்களையும் வெளியிட்டவர். மருத்துவத்துறையில் இது இவரது முதலாவது நூல்.

**6361**

**போதையின் பிடியில் பேதைகள்.** ஆ.பேரின்பநாதன். கொழும்பு 6: உமா பதிப்பகம், 521/1B, காலி வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2008. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

x, 130 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21 x15 சமீ., ISBN: 978-955-1162-23-8.

போதைப்பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தவும், அவற்றை இதுவரை பாவிக்காதவர்களை அறிவூட்டிப் பாதுகாக்கவும் இந்நூல் உதவுகின்றது. போதைப் பாவனையின் இன்றைய நிலை, உலக போதைமருந்துப் பாவனை பற்றியதும் இலங்கையில் அதன் பாவனை பற்றியதுமான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள், சாதாரண மருந்துகளுடன், போதை தரும் மருந்துகள், போதை மருந்துப் பாவனையும் உயிர்கொல்லி எயிட்சும், பாலியல் நோய்களும் போதை மருந்துப் பாவனையால் ஏற்படும் சமூகப் பிரச்சினைகளும் போன்ற விடயங்களை 7 இயல்களில் இந்நூல் ஆராய்கின்றது.

**மேலும் பார்க்க:** 6269

616 நோய்கள்

**6362**

**நீரிழிவுக்கு ஒரு சவால்.** N.S.ஞானகுமாரன், P.கலாவேந்தன், S.ரஜீவ்ராஜா, S.மேகன். யாழ்ப்பாணம்: நீரிழிவு நிலையம், போதனா வைத்தியசாலை, இணை வெளியீட்டாளர், யாழ்ப்பாணம்: Health Education Material Production Unit, Department of Community Medicine, Faculty of Medicine, University of Jaffna, 1வது பதிப்பு, பெப்ரவரி 2010. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் அச்சகம், 424, காங்கேசன்துறை வீதி).

vi, 119 பக்கம், வண்ணப் புகைப்படங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 22x15 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் நான்காம் ஆண்டு மாணவர்கள் நால்வரின் கூட்டு முயற்சியால் இந்நூல் உருவாகியுள்ளது. இவர்கள் நால்வரும் நீரிழிவு தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும், அறிதலையையும் ஏற்படுத்தும்வகையில் எழுதிய 10 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. நீரிழிவு தொடர்பாக ஒருவர் அறிந்திருக்கவேண்டிய அடிப்படை விடயங்கள் அனைத்தும் இக்கட்டுரைகளில் உள்ளடங்கியுள்ளன.

618 பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம்

**6363**

**உயிர்ப்பு: இனப்பெருக்க சுகாதாரம் ஓர் அறிமுகம்.** சா.சிவயோகன், சி.நவநீதன், ந.சிவராஜா. யாழ்ப்பாணம்: சாந்திகம், 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரி-நல்லூர் வீதி, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 6: ஈசி வேய்ஸ், 4, ஐ.பீ.சீ. ரோட்).

xx, 232 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.. ISBN: 978-955-52579-0-9.

இனப்பெருக்க சுகாதாரத்தின் விசாலமான பரிமாணத்தை உளவியல், உடலமைப்பியல், சமுதாய மருத்துவம், பெண் நோயியல், மகப்பேற்றியல், உடற்றொழிலியல், மற்றும் சட்டம் போன்ற பல்வகைத் துறைகளுடன் தொடர்புபடுத்தி மனித உயிரியல் உருவாக்கத்திற்கு மட்டுமல்லாது மகிழ்ச்சி, திருப்தி, பரஸ்பர புரிந்துணர்வு என்பவற்றின் ஊடாக உயிரோட்டமான உறவுக்கு வழிசமைக்கின்ற விடயங்களையும் உள்ளடக்குவதால் உயிர்ப்பு என்னும் இந்நூல் தனித்துவமான இடத்தைப் பெறுகின்றது. வைத்திய கலாநிதி சா.சிவயோகன் யாழ்ப்பாண மாவட்டத்தின் உளநல மருத்துவராகப் பணியாற்றுகின்றார். வைத்திய கலாநிதி சி.நவநீதன் பெண்நோயியில் மற்றும் மகப்பேற்று நிபுணராகக் கடமையாற்றி, பின்னாளில் அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்துள்ளார். வைத்திய கலாநிதி ந.சிவராஜா பொதுச் சுகாதாரத்துறையிலும், சமூக மருத்துவத் துறையிலும்

அனுபவம் வாய்ந்தவர். உலக சுகாதார நிறுவனத்தின் பிராந்திய அலவலகத்தின் இணைப்பாளராகவும் துறைசார் நிபுணராகவும் பணியாற்றுகின்றார்.

**6364**

**பெண்கள் நலன்: சுகாதாரக் கையேடு 1,2,3.** உ.வி.நாயுடு, ஞா.நல்லையா, சி.சிவயோகன். மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், இலக்கம் 20, டயஸ் வீதி, 2வது பதிப்பு, டிசம்பர் 2004, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்).
vi, 69 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 80., அளவு: 27x20 சமீ.

கோட்டே சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமூக மருத்துவத்துறையில் பணியாற்றும் வைத்தியர்கள் மூவரின் கூட்டு முயற்சியில் இந்நூல் உருவாகியுள்ளது. இப்படைப்பின் முக்கிய நோக்கம் பெண்களின் உருவவியல், உடற்றொழிலியல் பற்றிய அவர்களின் அறிவை மேம்படுத்துவதுடன் அவர்களுக்கு ஏற்படக்கூடிய பொதுவான நோய்கள், பிரச்சினைகள் என்பவற்றுக்கு முகம்கொடுத்து சமாளிக்கும் முறைகளை விளக்குவதாகும். இந்நூல் குறிப்பாக கிராமப் பகுதியிலுள்ள தமிழ்பேசும் பெண்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. வாசகர்களின் பாவனையை இலகுவாக்கும் வகையில் இப்படைப்பு 3 பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பாகம் 1 - 12 தொடக்கம் 19 வரையான வயதெல்லையுள் இருக்கும் பெண்களுக்காகவும், பாகம் 2 - 19-49 வயதெல்லையில் உள்ள பெண்களுக்காகவும், பாகம் 3 - 49 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்காகவும் எழுதப்பட்டுள்ளது.

### 619 கீழைத்தேய மருத்துவம்

**6365**

**வளமான வாழ்விற்கு உணவே மருந்து: இயற்கை மருத்துவ நூல்.** றொசாரியோ ஜோர்ஜ். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆ∴ப்செட்).
x, 218 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 18x12.5 சமீ.

ஒருவர் இயற்கையாகக் கிடைக்கும் உணவுப்பொருட்களின் உதவியுடன் நோயற்ற சுகதேகியாக எவ்வாறு வாழலாம் என்பதையும், நோயுற்ற ஒருவர் நோய் நிவாரணியாக எத்தகைய இயற்கை வழங்கும் உணவுகளை உட்கொள்ளலாம் என்பதையும் இந்நூல் விளக்குகின்றது. 40 அத்தியாயங்களில் விரியும் இந்நூலின் முதல் அத்தியாயம் உணவை மருந்தாகக் கொண்டு நோய்களுக்குச் சிகிச்சையளிப்பது பற்றிப் பேசுகின்றது. தொடர்ந்து கண்நோய், முதுமை, ஆஸ்த்மா, நீரிழிவு நோய்களுக்கான இயற்கை நிவாரணம் பற்றிப் பேசுகின்றன. இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து கனடாவில் குடியேறியவர் டாக்டர் றொசாரியோ ஜோர்ஜ். 2006 மே மாதம் 12-13ம் திகதிகளில் அமெரிக்காவில் நியுயோர்க் நகரில் நடைபெற்ற உலக இயற்கை மருத்துவர்களுக்கான மாநாட்டில் இவருக்கு தனித்திறன் சாதனையாளர் (Distinguished award of excellency 2006) என்ற விருது வழங்கப்பட்டது.

### 640 இல்லப்பொருளியல், குடும்பக்கலை

### 649 குழந்தைப் பராமரிப்பு

**6366**

**இலங்கையில் குழந்தைகளினதும் கட்டிளம் பருவத்தினருக்குமான தேவைகள்.** மார்க்க நிறுவனம். கொழும்பு 5: மார்க்க நிறுவனம், 61, இசிப்பத்தான மாவத்தை, 1வது பதிப்பு, 1977. (கொழும்பு 12: சுவாஸ்திக்கா அச்சகம், 209 டாம் வீதி).
xvi, 182 + 116 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

இலங்கையில் பிள்ளைகளுக்கும் கட்டிளம்பருவத்தினருக்குமான தேவைகளையொட்டிய இவ்வாய்வு ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியத்தின் (UNICEF) வேண்டுகோளின்பேரில் கொழும்பு, மார்க்க மன்றத்தால் (Marga Institute) தயாரிக்கப்பட்டது. 1975இல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட Needs of

Children and Adolescents in Sri Lanka என்ற நூலின் தமிழாக்கம். சனத்தொகை ஆய்வுப்படிவம், மரபுமுறைக் கல்வி அமைப்பு, மரபொற்றாக் கல்வி அமைப்பு, குழந்தைகளுக்கும் கட்டிளம் பருவத்தினருக்குமான சுகாதாரமும் ஊட்டமும், விளையாட்டும் பொழுதுபோக்கும், சுருக்கமும் முடிபுகளும் ஆகிய ஆறு இயல்களில் மார்க்க நிறுவன ஆய்வாளர்களால் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 505680).

**6367**

**பெற்றோரும் பிள்ளைகளும்.** மவ்லவி எச்.சலாகுத்தீன் (புனைபெயர்: அபூசிபா). கல்ஹின்ன: சிபா பதிப்பகம், 4வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கண்டி: யூனியன் பிரின்டிங் வேர்க்ஸ், 210 கொழும்பு வீதி).

24 பக்கம், விலை: சதம் 30, அளவு: 18x12.5 சமீ.

இன்று மனிதரின் சமுதாய வாழ்க்கையில் பெற்றோரைப் பேணத் தெரியாத பிள்ளைகளையும், பிள்ளைகளை வளர்க்கத் தெரியாத பெற்றோர்களையும் காணமுடிகின்றது. இத்துர்ப்பாக்கிய நிலையை விளக்கி இருசாராரினதும் பரஸ்பரக் கடமைகளையும் உரிமைகளையும் விளக்கும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் நான்காம் பதிப்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், வெளியிட்ட காலம் குறிப்பிடப்படவில்லை. 1970ம் ஆண்டில் இந்நூல் வெளிவந்திருக்கக்கூடிய சாத்தியமுள்ளது.

## 650 முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம்

**6368**

**அனர்த்த முகாமைத்துவத்தில் பால்நிலையின் பரிமாணங்கள்: தெற்காசியாவுக்கான ஒரு வழிகாட்டி.** மாதவி மலல்கொட, ஆரியபந்து மைத்ரீ விக்ரமசிங்க (மூல ஆசிரியர்கள்). த.தவராஜா (மொழிபெயர்ப்பாளர்). கொழும்பு 5: Practical Action தெற்காசியத் திட்டம், 5 லயனல் எதிரிசிங்க மாவத்தை, கிருலப்பனை, 2வது பதிப்பு, ஜனவரி 2005, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (நுகேகொடை: Deelaka Associates, 132 Old Kottawa Road, Mirihana).

xii, 192 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-9417-27-4.

அனர்த்தங்களில் பால்நிலை விடயங்கள் குறிப்பாக, தெற்காசிய நாடுகளில் அருகிக் காணப்படுகின்றன. இந்நூலின் நோக்கம், அபிவிருத்தியின்போது, பால்நிலை தொடர்பான விடயங்களை முன்வைப்பதோடு அனர்த்தம் என்ற விடயத்தின்கீழ் பால்நிலையில் அபிவிருத்தியின் மூலதத்துவங்கள் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதையும் விபரிக்கின்றது. அறிமுகம், அனர்த்தத்திற்கான ஒரு மாற்று அணுகுமுறை, அனர்த்தமும் பெண்கள் மற்றும் ஆண்கள் மீதான அதன் தாக்கமும்- தெற்காசியாவிலுள்ள உண்மை நிலை, சமூக ஆற்றல்களை அடையாளம்காணல், நடைமுறையிலுள்ள பழக்கவழக்கங்கள் அனர்த்த முகாமைத்துவத்தில் பால்நிலைசார் உணர்வுகள் காணப்படாமை, கொள்கையையும் பழக்கவழக்கத்தையும் மாற்றுவதற்கான நிகழ்ச்சிநிரல், கொள்கைவகுப்பாளர்களுக்கான நிகழ்ச்சிநிரல், அனர்த்த முகாமைத்துவ பயிற்சியாளர்களுக்கான வழிகாட்டிகள், சொல்லகராதி ஆகிய பிரிவுகளினூடாக இந்நூலின் மூலவிடயம் உரையாடல்களினாலும், விவாதங்களினாலும் விபரிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 611560).

**6369**

**திருக்குறளும் முகாமைத்துவமும்: ஓர் ஒப்பீட்டு ஆய்வு.** தி.வேல்நம்பி. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, யுஜீ 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, ஐப்பசி 2009. (கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை).

120 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-51-6.

மனிதருக்குத் தேவையான முகாமைத்துவக் கருத்துக்களைத் திருக்குறளோடு இணைத்து அந்த வாழ்வியல் இலக்கியம் அதை எவ்வாறு வெளிப்படுத்தியிருக்கிறது என்ற தேடலின் வெளிப்பாடாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அறிமுகம், முகாமைத்துவத் தத்துவங்களும் திருக்குறளும், திருக்குறளில் திட்டமிடலும் ஒழுங்கமைத்தலும், திருக்குறளில் ஊழியரிடல், திருக்குறளில் வழிநடத்தலும் கட்டுப்படுத்தலும், தொகுப்புரை ஆகிய ஆறு இயல்களில் இந்நூல்

ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. கலாநிதி திருநாவுக்கரசு வேல்நம்பி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வணிகவியல் முகாமைத்துவத்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

**6370**

**மனிதவள முகாமைத்துவம்: பாகம் 1.** வடிவேல்முருகன் தர்மதாசன். கண்டி: செல்வி வெளியீட்டகம், 58/32 சுற்று வீதி, அனிவத்தை, 1வது பதிப்பு, ஆவணி 2008. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207 சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).
xviii, 210 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-1974-00-8.

இத்தொகுதியில் மனிதவள முகாமைத்துவம் அறிமுகம், நிறுவனங்களில் மனிதவள முகாமைப்பிரிவின் நிலை, வேலை வடிவமைப்பு, வேலைப் பகுப்பாய்வு நடவடிக்கைகளை முகாமைசெய்தல், மனிதவளத் திட்டமிடல், ஆட்சேர்ப்பு, தெரிவுசெய்தல், பதவியிலமர்த்தல் நடவடிக்கைகளை முகாமைசெய்தல், செயல்திறன் மதிப்பீட்டு நடவடிக்கைகளை முகாமைசெய்தல் ஆகிய ஆறு பிரிவுகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. வடிவேல்முருகன் தர்மதாசன் வட இலங்கை, காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மாணவராயிருந்து, 1978இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வணிகத்துறையில் பயின்றவர். 1990இல் பேராதனைப்பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் துறையில் விரிவுரையாளராக இணைந்தவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 627937).

**6371**

**மனிதவள முகாமைத்துவம்: பாகம் 2.** வடிவேல்முருகன் தர்மதாசன். கண்டி: செல்வி வெளியீட்டகம், 58/32 சுற்று வீதி, அனிவத்தை, 1வது பதிப்பு, மார்கழி 2008. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207 சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).
xxii, 202 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-1974-01-5.

இவ்விரண்டாம் பாகத்தில் கொடுப்பனவு நடவடிக்கைகளை முகாமைசெய்தல், பயிற்சி-அபிவிருத்தி நடவடிக்கைகளை முகாமைசெய்தல், ஊழியர் நகர்வுகளையும், ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் முகாமைசெய்தல், ஊழியர் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நலன்கள் தொடர்பான நடவடிக்கைகளை முகாமை செய்தல், ஊழியர் மனத்தாங்கல்களை முகாமைசெய்தல், கைத்தொழில் உறவுகள் ஆகிய ஆறு பிரிவுகளின்கீழ் மனிதவள முகாமைத்துவம் விளக்கப்பட்டுள்ளது. வடிவேல்முருகன் தர்மதாசன் வட இலங்கை, காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவராயிருந்து, 1978இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வணிகத்துறையில் பயின்றவர். 1990இல் பேராதனைப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் துறையில் விரிவுரையாளராக இணைந்தவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 629189).

### 657 கணக்கியல்

**6372**

**அடிப்படைக் கிரயக் கணக்கீடும் முகாமைக் கணக்கீடும்.** D. சாம். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ்).
288 பக்கம், விலை: ரூபா 900., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-659-239-9.

Fundamentals of Cost and Management Accounting என்ற ஆங்கில உபதலைப்புடன் வெளிவந்துள்ள இந்நூல், க.பொ.த. உயர்தர கணக்கீட்டுத் தேர்வுகளுக்கும், பல்கலைக்கழக உள்வாரி-வெளிவாரி கணக்கீட்டுத் தேர்வுகளுக்கும், உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவன கணக்கீட்டுத் தேர்வுகளுக்கும், இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனம், இலங்கை வங்கியாளர் நிறுவனம், இலங்கைக் கணக்காளர் சேவை, ஆகியவற்றின் கணக்கீட்டுத் தேர்வுகளுக்கும் உரிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 700 கலைகள், நுண்கலைகள்

*701 பொதுக்கலைகள்*

***6373***

***மட்டக்களப்புக் கலைவளம்.*** *க.தங்கேஸ்வரி. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆ∴ப்செட்).*

*176 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 50., அளவு: 18x12 சமீ.*

*சிறப்பு மலர்களிலும், பத்திரிகைகளிலும் அவ்வப்போது எழுதப்பெற்ற 12 கட்டுரைகளின் தொகுப்பு. இவை கூத்துக்கலை, சிற்பக்கலை, பிற கலைகள் என மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இருமோடிக்கூத்துக்கள், கூத்துக்கலை ஆவணப்படுத்தல், கன்னங்குடாவில் கூத்துக்கலை, கூத்துக்கலையை நவீனப்படுத்தல், அபிவிருத்தியில் கலையின் பங்களிப்பு, இந்துக்கோயில்களின் கட்டிட, சிற்பப் பாரம்பரியம், தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் சிற்பச் சிறப்பு, தாதுகோபுரங்கள் எவ்வாறு உருவாகின, கொம்புமுறி அல்லது கொம்பு விளையாட்டு, பறைமேளக் கலை, பழந்தமிழர் இசையில் தோற்கருவிகள், மதங்கசூளாமணியும் விபுலானந்தரும் ஆகிய கட்டுரைகளே இவை. பின்னிணைப்பில் மட்டுநகர் வயற்களத்தில் வழங்கும் செந்தமிழ்ச்சொற்கள், தமிழ்மணியான அன்புமணி ஆகிய இரு கட்டுரைகள் இடம்பெறுகின்றன.*

*751 ஓவியக்கலை*

***6374***

***அழகியலில் ஓவியக் கலை பாகம் 1.*** S.L.M.*மஹ்ரூப். ஹெந்தஸ்ஸ: எல்.எல்.எம்.மஹ்ரூப், 132 ஏ, தவுகல, தும்பல்லங்க, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2009. (கெலிஓய: நிஷின் ஓப்செட் பிரின்டர்ஸ்).*

*64 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 210., அளவு: 30x22 சமீ.*

*ஓவியக் கலை கல்வி முறையிலுள்ள சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்முகமாக நடைமுறைப்படுத்தப்படும் புதிய செயல்முறைக் கலைத்திட்டத்தின் வழிகாட்டி நூலாக தரம்1 முதல் 9 வரையுள்ள மாணவர்களுக்கு அமைவானதாகவும் அவர்களின் இலகு கற்றல் பரீட்சைகளுக்கு பயன்தருவதாகவும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. ஓரளவு அக்கலையில் பொது ஆர்வமுள்ளோரும் பயன்பெறும்வகையிலும் அமைந்துள்ளது. தேசிய-சிங்கள-பௌத்த-பிற சமய ஓவிய மரபின் வளர்ச்சி பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. 2008ஆம் ஆண்டு முதல் பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்ட அழகியல் பாடங்களில் ஓவியம் பிரதானமான இடத்தைப் பெறுகின்றது. நூலாசிரியர் மலையகத்தில் ஹெந்தெஸ்ஸ என்னுமிடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவருக்கு 2009ம் ஆண்டின் அரச விருதான கலாபூஷணம் விருது கிடைத்தது.*

***6375***

***வண்ணமாதல்.*** *சுசிமன் நிர்மலவாசன். மட்டக்களப்பு: மூன்றாவது கண் பதிப்பு, உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு, சீலாமுனை, 1வது பதிப்பு, ஜுலை 2008. (மட்டக்களப்பு: வணசிங்கா அச்சகம், 126/1, திருமலை வீதி).*

*42 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x21 சமீ.*

*மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழுவின் ஓவியச் செயல்வாதமாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. சிறுவர்களின் ஓவியச் செயற்பாடுகள் இவை. வண்ணங்கள் கொண்டும், சூழலுக்கு நட்பான கையகப்பட்ட பொருட்கள் கொண்டும் ஓவியச் செயற்பாட்டினை சிறுவர்களுடனும் ஏனையோருடனும் இணைந்து ஓவியர் சுசிமன் நிர்மலவாசன் மேற்கொண்டு வந்துள்ளார். அவற்றின் காட்சிப்படுத்தலாக இந்நூல் அமைகின்றது.*

*750.(1) ஒப்பனைக் கலை*

***6376***

**அழகும் ஆரோக்கியமும்.** அனுசுயாதேவி சுந்தரேசன். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2001. (கொழும்பு 13: பேஜ் செட்டர்ஸ், 113, 1/1, ஜிந்துப்பிட்டி வீதி).
viii, 76 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 22.5x14.5 சமீ.

சருமப் பாதுகாப்பு, முக ஒப்பனை, இளமைப் பொலிவு, சிகையலங்காரம், அழகும் ஆரோக்கியமும் தரும் சத்துணவுகள், உடற்பயிற்சி போன்ற பல்வேறு விடயங்களை இந்நூல் ஆராய்கின்றது. இந்நூலாசிரியர், அழகியல்துறையில் டிப்ளோமா பட்டம் பெற்றவரும், அனுஷா ஹேர்பல் பியூட்டிகெயார் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமாவார்.

780 இசைக்கலை

6377
**ஸப்தஸ்வரப் புன்னகை.** அன்ரனி ஜெனிபர் அருள்மொழி லெம்பேட். மன்னார்: இலக்கிய மன்றம், புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம், வங்காலை, 1வது பதிப்பு, ஜனவரி 2008. (வவுனியா: மல்டிவிஷன் பதிப்பகம், 73 D, 2ம் குறுக்குத் தெரு).
xxvi, 76 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.

புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்தின் இசை ஆசிரியையான நூலாசிரியரின் இசைத்துறை தொடர்பான ஆய்வுநூல் இது. கர்நாடக இசை ராகங்களை ஐரோப்பிய இசைக்கூடாக வெளிப்படுத்துகின்ற ஒரு ஆய்வு முயற்சி இது. ஸ்வர இராக விளக்கம், 72 மேளகர்த்தாவின் அமைப்பு, ஜன்னிய இராகத்தின் உட்பிரிவுகள், கன நய தேசிய இராகங்கள், நவரசத்திற்கான இராகங்கள், கான காலத்திற்குரிய இராகங்கள் ஆகிய பிரிவுகளில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 617996).

790 நிகழ்கலைகளும் பொழுதுபோக்குக் கலைகளும்

791 நாட்டியக் கலை

6378
**பரத நாட்டியம் செய்முறை தாள விளக்கம்.** சிறிதேவி கண்ணதாசன். சுழிபுரம்: பொன்னாலை சந்திர பரத கலாலயம், பறாளாய் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2007. (யாழ்ப்பாணம்: கரிகணன் அச்சகம், 424 காங்கேசன்தறை வீதி).
xii, 64 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 28.5x20.5 சமீ., ISBN: 978-955-50660-0-6.

பரத நாட்டிய உருப்படிகளின் தாள அங்க குறியீடு சம்பந்தமான விளக்கங்களுக்கு மாணவர் விடையளிக்கக்கூடியவாறு இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் கடந்தகால வினாப்பத்திரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் சுன்னாகம் இராமநாதன் நுண்கலைக்கழகப் பட்டதாரியும் வட இலங்கை சங்கீத சபையின் பரதகலா வித்தகருமாவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 618136).

791.1 நாட்டிய நாடகங்கள்

6379
**பத்தினித் தெய்வம்: நாட்டிய நாடகங்கள்.** அகளங்கன். (இயற்பெயர்: நா.தர்மராஜா). வவுனியா: வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், 1வது பதிப்பு, ஜுன் 2008. (வவுனியா: ஜெய்னிகா அச்சகம்).
78 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 16.5x11.5 சமீ., ISBN: 978-955-8715-50-5.

சிலப்பதிகாரக் கதையை கருவாகக் கொண்ட **பத்தினித் தெய்வம்** என்ற நாட்டிய நாடகமும், கம்பராமாயணக் கதையைக் கருவாகக் கொண்ட **கற்பின் கனலி** நாட்டிய நாடகமும் இணைந்த நூல். இந்த நாட்டிய நாடகங்கள் தமிழ்மொழித் திறன் போட்டிகளில் வலய மட்டம், மாவட்ட மட்டம்,

மாகாண மட்டம் ஆகியவற்றில் பரிசில்களை பெற்றவையாகும். நாடக சூழ்நிலை, களம் என்பவற்றிற்கு ஏற்ப பொருத்தமான பாடல்களை அகளங்கன் சுவைபட எழுதியுள்ளார்.

## 792 அரங்கியல், நாடகக்கலை

### 6380

**உலக அரங்க வரலாறு.** பால.சுகுமார். மட்டக்களப்பு: அனாமிகா வெளியீடு, 48 பெய்லி முதலாவது குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 1996. (சென்னை 600014: பார்க்கர் கொம்பியுட்டர்ஸ், 293 அகமது வணிக வளாகம், இராயப்பேட்டை நெடுஞ்சாலை).
viii, 245 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21x13.5 சமீ.

நான்காவது அனாமிகா வெளியீடாக உருவாகியுள்ள நூல். மேலைத்தேய அரங்க வரலாறு தொடக்கம் சிங்கள அரங்க வரலாறு வரை அரங்கின் (theatre) எல்லா வரலாற்று மூலங்களையும் இங்கு தெளிவாக விளக்கியுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 535146).

### 6381

**கூத்தர் வெண்பா: தமிழ் நாடகநூல் இலக்கணமும் விபுலானந்த அடிகளாரின் மதங்க சூளாமணி ஆய்வும்.** ஈழத்துப் பூராடனார் (இயற்பெயர்: க.தா.செல்வராசகோபால்). (ஆசிரியர்), இரா.நாகலிங்கம் (பதிப்பாசிரியர்). கனடா: ஜீவா பதிப்பகம், 1வது பதிப்பு, மாசி 1989. (கனடா: கனடா: ஜீவா பதிப்பகம், றிப்ளக்ஸ் அச்சகம். 1108 வே வீதி, டொரண்டோ, M5S 2W9).
xxviii, 343+75+316 பக்கம், விலை: கனேடிய டொலர் 10., அளவு: 20.5x14 சமீ.

தமிழ் நாடகநூல் இலக்கணமும் விபுலானந்த அடிகளாரின் மதங்க சூளாமணி ஆய்வும் இந்நூலில் அடங்குகின்றன. கூத்தர் வெண்பா முன்னுரையியல், நூலியல்பியல், நாடக நன்மையியல், நாடகவியல், நாடகாசிரியரியல், அண்ணாவியரியல், நடிகரியல், நடிப்பியல், நாடக இசையியல், பாத்திரவியல், உருமாற்றியல், ஆடையியல், மேடையியல், ஒலியியல், ஒளியியல், சுவையியல், சுவையூட்டியல், அவையோரியல், முடிவியல் ஆகிய 19 தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளன. மதங்கசூளாமணி -முன்னுரை, முகவுரை, உறுப்பியல், எடுத்துக்காட்டியல் ஆகிய நான்கு பிரிவுகளின்கீழ் வழங்கப்பட்டுள்ளது. மூன்றாவது பாகமாக மதங்க சூளாமணி மதிப்பாய்வு 316 பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 417660).

### 6382

**கூத்து மீளுருவாக்கம்: கோட்பாடும் செயற்பாடும்.** து.கௌரீஸ்வரன். மட்டக்களப்பு: மூன்றாவது கண் பதிப்பு, உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு, சீலாமுனை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2007. (மட்டக்களப்பு: வணசிங்கா அச்சகம், 126/1, திருமலை வீதி).
(4), 48 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5x15 சமீ.

மட்டக்களப்பின் பெயர்பெற்ற அண்ணாவிமார்களுள் ஒருவராக விளங்கிய அமரர் வே.கந்தையா (அருச்சுனன் கந்தையா) அவர்களின் பூட்டனான கௌரீஸ்வரன் மட்டக்களப்பு, சீலாமுனையைச் சேர்ந்தவர். 2000ம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நாடக அரங்கியலை சிறப்புக் கற்கைநெறியாகக் கொண்டவர். 2002இல் சீலாமுனையில் ஆரம்பித்த கூத்து மீளுருவாக்க ஆய்வுச் செயற்பாட்டில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர். அதனால் மக்கள்மைய சமுதாய அரங்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு நிறைந்த அனுபவம் பெற்றவர். சீலாமுனைக் கூத்து மீளுருவாக்கத்தில் ஆய்வாளரின் உதவி இணைப்பாளர்களுள் ஒருவராகப் பங்குகொண்ட இவர் இச்செயற்பாட்டினூடாகப் பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் கற்றுக்கொண்ட அறிவினையும் அடிப்படையாகக் கொண்டு இந்நூலை எழுதியுள்ளார்.

### 6383

**சண்ணரது கல்வியியல் அரங்கு.** சி.ஜெயசங்கர். மட்டக்களப்பு: மூன்றாவது கண் பதிப்பு, உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு, சீலாமுனை, 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (மட்டக்களப்பு: வணசிங்கா அச்சகம், 126/1, திருமலை வீதி).
(4), 68 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 75., அளவு: 20.5x15 சமீ.

ஈழத்தமிழர்களின் கல்வியியல் அரங்கு பற்றியும் சண்ணர் என்றழைக்கப்படுகின்ற குழந்தை ம.சண்முகலிங்கம் பற்றியதுமான அறிமுகக் குறிப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நூல் ஈழத்தமிழர்களின் கல்வியியல் அரங்கு பற்றி, அரங்கியல் நோக்கில் பேசுகின்றது. சண்ணர் என்னும் அரங்க ஆளுமை, சண்ணருடனான நேர்முகம், தயவுசெய்து சத்தம் போடாதீர் அல்லது இது என்ன சந்தையா? (நாடகம்), கல்வியியல் அரங்கு: ஒரு அனுபவப் பகிர்வு, சமூகங்களின் விடுதலைக்கான கல்வியியல் அரங்கு, சத்திய சோதனை (நாடகம்), சிறுவர்களுக்கான நாடகம் எழுதுதல் ஆகிய சண்முபலிங்கத்தின் படைப்புகளினூடாக அவரது அரங்கியல்சார் கருத்துகளும், இயக்கமும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

*6384*
**சீலாமுனை கூத்து மீளுருவாக்கம்: அனுபவப் பகிர்வு 1.** ஏட்டண்ணாவியார் செ.சிவநாயகம். மட்டக்களப்பு: மூன்றாவது கண் பதிப்பு, உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு, சீலாமுனை, 1வது பதிப்பு, ஜுன் 2007. (மட்டக்களப்பு: வணசிங்கா அச்சகம், 126/1, திருமலை வீதி).
(3), v, 40 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

திரு.செல்லையா சிவநாயகம் மட்டக்களப்பு சீலாமுனைக் கிராமத்தின் வடமோடிக் கூத்துப் பாரம்பரியத்தில் சிறுவயதிலிருந்தே மிகுந்த ஈடுபாட்டுடன் பங்குகொண்டு வருகின்ற மூத்த கூத்துக் கலைஞர். கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் சி.ஜெயசங்கர், சீலாமுனைக் கூத்துக் கலைஞர்களுடன் இணைந்து மேற்கொண்ட கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வுச் செயற்பாட்டில் முழுமையாகப் பங்குகொண்ட கலைஞர். சீலாமுனைக் கூத்துப் பாரம்பரியத்தின் கூத்து ஏடுகளையும், எழுத்துருக்களையும் பாதுகாத்துப் பராமரித்து அவற்றை அடுத்த தலைமுறையினருக்கு கற்பித்துவரும் ஏட்டண்ணாவியாராக வாழ்பவர். இவருடைய இந்நூல் பொதுவாகக் கூத்துப் பற்றியும் சிறப்பாக சீலாமுனைக் கூத்து மீளுருவாக்கம் பற்றியும் விளங்கிக்கொள்ள உதவும் ஆதாரங்களுள் ஒன்றாக அமைகின்றது.

*6385*
**நவீன நாடகம்.** அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை, 30, கடைச்சாமி வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, ஜனவரி 2010. (யாழ்ப்பாணம்: கங்கை பிறின்டேர்ஸ், 781 சிவலிங்கப்புளியடி, காங்கேசன்துறை வீதி).
xii, 51 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

நாடகம், இலங்கைத் தமிழ் நாடகம், தமிழ் நாடகத்தின் ஒரு சுருக்கமான வரலாறு, படைப்பாற்றல், நாடகத்தில் பாத்திரப்படைப்பு, இலங்கைத் தமிழ் நாடகத்தின் தந்தை பேராசிரியர் கணபதிப்பிள்ளையே ஆகிய ஆறு கட்டுரைகளுடன் உருவாகியுள்ள இந்நூலில், ஏழு கதா பாத்திரங்களுடன் ஒரு நவீன நாடகமாக உருவாக்கப்பட்ட **வாத்தியார் கவனம்** என்ற நாடகமும் இடம்பெற்றுள்ளன. இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் முன்னர் வீரகேசரி, உதயன், தினக்குரல், விஜய் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தன.

**மேலும் பார்க்க:** 6586, 6603, 6604, 6830

## 793 திரைப்படக்கலை

*6386*
**குத்துவிளக்கு: இலங்கைத் தமிழ்த் திரைப்படம்: மீள்வாசிப்பு.** தம்பிஐயா தேவதாஸ். கொழும்பு 13: வித்தியாதீபம் பதிப்பகம், 90/9 புதுச்செட்டித் தெரு, 1வது பதிப்பு, 2010. (சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்).
131 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x23 சமீ., ISBN: 955-1722-00-5.

*1956இல் ஆரம்பிக்கப்பட்ட ஈழத்து தமிழ்த் திரைப்பட முயற்சிகளின் தொடர்ச்சியாக, 1971ம் ஆண்டு இலங்கையின் பிரபல கட்டிடக்கலைஞர் வி.எஸ்.துரைராஜா குத்துவிளக்கு திரைப்படத்தைத் தயாரித்தார். அது பலத்த தென்னிந்திய திரைப்படங்களுடன் போட்டியிட்டு, 1972இல் திரைக்கு வந்தது. வானம்பார்த்த பூமியை நம்பிவாழும் யாழ்ப்பாணத்து விவசாயியின் பொருளாதாரப் பிரச்சினை, சீதனம், சாதிப்பிரச்சினைகள், கிராமத்துப் பெண்களின் மனதில் உருவாகும் உண்மைக்காதல், பணக்கார இளைஞர்களின் பொழுதுபோக்குக் காதல் எனப் பல்வேறு விடயங்கள் இதில் பேசப்பட்டன. லீலா நாராயணன், ஜெயகாந்த் (நமசிவாயம்) ஆகியோர் பிரதான பாத்திரங்களில் நடித்தனர். தயாரிப்பாளர் வழங்கிய பல்வேறு ஆவணங்களை அடிப்படையாக வைத்து இந்நூல் வழியாக ஈழத்துத் தமிழ்த்திரைப்பட வரலாற்றின் ஒரு பகுதியை தம்பிஐயா தேவதாஸ் ஆவணப்படுத்தியுள்ளார்.*

## 796 உடற்பயிற்சி, விளையாட்டுகள்

### 6387

**சதுரங்கத்தில் இறுதியாட்டம்.** *சி.வித்தியாதரன். யாழ்ப்பாணம்:* Garry Kasparov Chess Academy, No.5, *வைமன் வீதி, நல்லூர், 1வது பதிப்பு, ஜனவரி 2005. (யாழ்ப்பாணம்: பிள்ளையார் பதிப்பகம், 626, பருத்தித்துறை வீதி, நல்லூர்).*
x, *116 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20*x*14.5 சமீ.*

*இந்நூலாசிரியர் கடந்த ஒரு தசாப்தமாக யாழ்ப்பாண மண்ணில் பல சதுரங்கப் போட்டிகளில் பங்கேற்றும், பல போட்டிகளை நடத்தியும், பயிற்சிக் கருத்தரங்குகளை நடாத்தியும் அனுபவம் பெற்றவர். இந்நூல் சதுரங்கம் பற்றிய பல்வேறு நிபுணத்துவத் தகவல்களைத் தருகின்றது. ஈழத்தமிழரின் முதலாவது சதுரங்கம் பற்றிய நூல் இதுவாகும். 143 இறுதியாட்ட நிலைகளை* (Positions) *படங்களுடன் வெகு விரிவாகத் தந்துள்ளார். இது பத்து அத்தியாயங்களைக் கொண்ட நூல். ஒவ்வொரு அத்தியாயத்திலும் முறையே அடிப்படையான* Checkmate *முறைகள், இறுதியாட்டத்தில் ராஜாவும் சிப்பாயும் உள்ளபோது, இறுதியாட்டத்தில் மந்திரி, சிப்பாய் உள்ளபோது, இறுதியாட்டத்தில் மந்திரி, குதிரைச் சிப்பாய் உள்ளபோது, இறுதியாட்டத்தில் மந்திரி எதிர்க் குதிரை உள்ளபோது என்று இதுபோன்ற பல நிலைமைகளில் வெற்றியைத் தனதாக்கிக் கொள்வது எப்படி என்ற பயிற்சியை இந்நூல் வழங்குகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 615237).*

### 6388

**சுகாதாரமும் உடற்கல்வியும் தரம் 7.** *ஆ.யோகராஜா. கொழும்பு 12: ஆ.யோகராஜா, 125 ஏ, புதிய மூர் வீதி, திருத்திய மூன்றாம் பதிப்பு, செப்டெம்பர் 2006, 1வது பதிப்பு விபரம் இல்லை. (கொழும்பு 12: லோயல் பப்ளிக்கேஷன்ஸ், 125 ஏ, புதிய மூர் வீதி).*
iv, *74 பக்கம், விலை: ரூபா 85., அளவு: 21.5*x*15 சமீ.*

*குறிப்புகள், விரிவான வினா-விடைகள் ஒப்படைகள் என்பவற்றைக்கொண்டு இந்நூல் தரம் 7 மாணவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. நல்வாழ்வு, இடைத் தொடர்புகள், விந்தை மிக்க உடல், உடலில் ஏற்படும் மாற்றங்கள், மனிதனின் ஊட்டத் தேவைகள், அறைகூவல்களும் பாதுகாப்பும், சந்தம், அப்பியாசம் செய்வோம், மெய்வல்லுநர் விளையாட்டுகளும் விளையாட்டுகளும் ஆகிய ஒன்பது தலைப்புகளின்கீழ் சுகாதாரமும் உடற்கல்வியும் என்ற பாடப்பிரிவுக்குரிய விளக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.*

### 6389

**சுகாதாரமும் உடற்கல்வியும் தரம் 8.** *ஆ.யோகராஜா. கொழும்பு 12: ஆ.யோகராஜா, 125 ஏ, புதிய மூர் வீதி, ஏழாவது பதிப்பு, ஜுலை 2006, 1வது பதிப்பு விபரம் இல்லை. (கொழும்பு 12: லோயல் பப்ளிக்கேஷன்ஸ், 125 ஏ, புதிய மூர் வீதி).*
iv, *84 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5*x*15 சமீ.*

குறிப்புகள், விரிவான வினா-விடைகள் ஒப்படைகள் என்பவற்றைக்கொண்டு இந்நூல் தரம் 8 மாணவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. சுகாதாரமும் வாழ்க்கைக் கோலமும், எம்முடன் வாழ்வோர், உடற் தொழிற்பாடுகள், வளர்ச்சியினால் எம்மில் ஏற்படும் மாற்றங்கள், மனிதனின் ஊட்டத் தேவைகள், சவால்களும் பாதுகாப்பும், சந்தம், நாங்கள் அழகாக நடப்போம், மெய்வல்லுநர் விளையாட்டுகளும் விளையாட்டுகளும் ஆகிய ஒன்பது தலைப்புகளின்கீழ் சுகாதாரமும் உடற்கல்வியும் என்ற பாடப்பிரிவுக்குரிய விளக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

**6390**

**சுகாதாரமும் உடற்கல்வியும்: தரம் 11.** ஆ.யோகராஜா. கொழும்பு 12: லோயல் பப்ளிக்கேஷன்ஸ், 125 ஏ, புதிய சோனகத் தெரு, 3வது பதிப்பு, செப்டெம்பர் 2005, 1வது பதிப்பு, மார்ச் 2004, 2வது பதிப்பு, ஜனவரி 2005. (கொழும்பு 12: லோயல் அச்சகம், 125 ஏ, புதிய சோனகத் தெரு).
(4), 156 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 170., அளவு: 21ஒ15 சமீ.

புதிய பாடத்திட்டத்திற்கமைய எழுதப்பட்டுள்ள இந்நூல் தரம் 11க்குரியதாக இருப்பினும் தரம் 10 மாணவர்களுக்கும் ஏற்ற வகையில் அமைந்துள்ளது. தரம் 11க்கான பாடநூலில் குறிப்புகள், பரிசோதனைகள், விரிவான வினா விடைகள், ஒப்படைகள் அடங்கலாக, தெளிவாகவும், விரிவாகவும் ஆராயப்பட்டுள்ளது. இந்நூலில் பாடப்பரப்பைத் தழுவிய 12 பாட அலகுகள் இடம்பெற்றுள்ளன. அவை நல்வாழ்வும் வாழ்க்கையின் பண்பும், உணவும் போசணையும், வாழ்க்கைப் பருவங்கள், எமது உடல், வன்கூட்டுத் தொகுதியும் தசைத் தொகுதியும், விபத்துக்களும் முதலுதவிகளும், முகாமைத்துவம், விளையாட்டு அசைவுகளின் விஞ்ஞான அடிப்படை, சந்தம். உடற் தகைமைகள், மெய்வல்லுநர் விளையாட்டுகள், விளையாட்டுகள் ஆகிய தலைப்புகளில் இப் பிரிவுகள் அமைந்துள்ளன.

**மேலும் பார்க்க:** 6238, 6267, 6275, 6298

## 800 இலக்கியம்

### 801 சிறுவர் இலக்கியங்கள்

### 801.(1) சிறுவர் பாடல்கள், கவிதைகள்

**6391**

**அம்பிப் பாடல்கள்.** இ.அம்பிகைபாகன். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, 1969. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
vi, 41 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 24.5x18.5 சமீ.

அம்பியின் 26 சிறுவர் பாடல்கள் கொண்ட தொகுப்பு. அழைப்பு, எங்கள் பசு, பந்து, நிலா, பூனைக்குட்டி, ஈ, ஊஞ்சல், தம்பி, கிளியே வா, சுண்டற்காரன், தவழும் தம்பி, அணில், ஆட்டுக்குட்டி, பட்டம், பறக்கும் சிறுமி, கடற்கரையிலே, பாமாவின் ஆசை, வனவிருந்து, தேர், தங்கை, மாட்டுவண்டி, பலூன்காரன், ஆறு, பாமா, இன்பப் பொங்கல், வானவில் ஆகிய தலைப்புகளில் இவை அமைந்துள்ளன. பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கழகத்தில் கணிதத் துறையில் விசேட பயிற்சிபெற்ற ஆசிரியரான அம்பி, அரசின் தமிழ்ப் பாடநூலாக்கக் குழுவின் எழுத்தாளராகவும் பணியாற்றியவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275005).

**6392**

**உண்டு மகிழ்வோம்.** கவிஞர் துரையர் (இயற்பெயர்: சு.துரைசிங்கம்). கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
20 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 160., அளவு: 24x18.5 சமீ., ISBN: 955-0367-04-7.

சிறார் இலக்கியம் தொடர் இலக்கம் 05. ஓய்வுபெற்ற அதிபர் கலாபூஷணம் சு.துரைசிங்கம் கவிஞர் துரையர் என்ற பெயரில் எழுதியுள்ள குழந்தைப் பாடல்களைக்கொண்ட நூல். கடலை, உண்டு

*மகிழ்ந்தன, விடுங்கள், முத்திரை, நடப்பாய், கொழும்பு நகரம், பூனையும் பெண்ணும், மலைநாடு, சைக்கிள், கண்ணாடி ஆகிய 10 தலைப்புகளில் இப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன.*

***6393***

***உறவுகள்.*** *செ.து.தெட்சணாமூர்த்தி. கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).*
*24 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 24x18 சமீ., ISBN: 955-0367-14-6.*

*சிறார் இலக்கியம் தொடர் இலக்கம் 15. உறவு, தாய்மாமன், பெரியக்கா, பெரியண்ணா, அப்பப்பா, அம்மம்மா, எங்கள் அத்தான், மைத்துணி மைத்துணர் உறவு, எங்கள் வீட்டுச் சாமிஅறை, வெற்றிலைப்பாட்டி, அப்பப்பாட்டி, தோசை ஆச்சி, சுருட்டுத் தாத்தா, பிச்சைக்காரன், தபால்காரன், குறும்புப் பையன், மரக்கறிச் சந்தை, எங்கள் வீட்டு முத்தம், வீட்டுக்கிணற்றடி வைரவர், தேத்தண்ணிக் கடை, பேப்பர்கடை ஆகிய தலைப்புகளில் அமைந்த 21 சிறுவர் பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

***6394***

***கலைகள் செய்வோம்.*** *மு.பொன்னம்பலம். கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).*
*60 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 260., அளவு: 24x18.5 சமீ., ISBN: 955-0367-11-5.*

*சிறார் இலக்கியம் தொடர் இலக்கம் 12. களித்தல், கற்றல், வியத்தல் என்னும் பிரிவுகளின்கீழ், சிறுவரின் உளவிருத்தி, சிந்தனை மட்டம், படைப்பாக்க உந்துதல் போன்ற பல்வகைத் தன்மை கொண்ட சிறுவர் பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஈழத்தின் நவீன கலை இலக்கியப் பரப்பில் முக்கிய ஆளுமையான மு.பொன்னம்பலம் 1950களின் இறுதியிலிருந்து இன்றுவரை தீவிர இயக்கம் கொண்டவர்.*

***6395***

***குயிலோசை.*** *செ.து.தெட்சணாமூர்த்தி. கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).*
*24 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 24x18 சமீ., ISBN: 955-0367-13-9.*

*சிறார் இலக்கியம் தொடர் இலக்கம் 14. இந்நூலில், குயிலோசை, காவடி, கறுத்தக்கொழும்பு மாம்பழம், மல்லிகையும் முல்லையும், தென்றல், காலைப் பொழுது, மாலைப்பொழுது, எங்கள் வீட்டுப் பூந்தோட்டம், விண்மீன்கள், முகில், நெல்லிக்காய், நாவல்பழம், இலந்தைப்பழம். கிளி, சிட்டுக்குருவி, கடலைக்கடை, கொய்யாப்பழம், வாய்க்கால், பப்பாப்பழம், புறா, காகம், அம்புலி, மேகம் ஆகிய 23 சிறுவர் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் புலவர் செ.து.தெட்சணாமூர்த்தி. 1955 முதல் நாடகத்துறையில் முழுமையாக உழைத்தவர்.*

***6396***

***சிரிக்க விடுங்கள்.*** *அகளங்கள் (இயற்பெயர்: நா.தர்மராஜா). கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).*
*20 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 160., அளவு: 24.5x18 சமீ., ISBN: 955-0367-08-5.*

*சிறார் இலக்கியம் தொடர் இலக்கம் 09. சின்னக் குயிலே, மனிதப் பண்பு, ஏமாற்று, சிரிக்கவிடுங்கள், ஒற்றுமைப் பாட்டு, புள்ளிமான், பாரதி, அணிற் பிள்ளையாரே, சுத்தம் சுகம், நட்சத்திரம் ஆகிய 10 சிறுவர் பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

***6397***

***சிரிக்கும் பூக்கள்.*** *த.துரைசிங்கம். கொழும்பு 6: உமா பதிப்பகம், 521/1B, காலி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டர்ஸ், 70/7 கனல் வீதி, ஹெந்தளை).*
*(2), 50 பக்கம், வண்ணப்படங்கள், விலை: ரூபா 120., அளவு: 21x15 சமீ., ISBN: 955-1162-10-2.*

முழுப்பக்க வண்ணப் படங்களுடன் கூடிய மழலைகளுக்கான பாடல்கள். நூலாசிரியர் த.துரைசிங்கம், ஏற்கெனவே பல சிறுவர் இலக்கியங்களைப் படைத்தவர். பல்வேறு அமைப்புகளினால் பாராட்டும் விருதும் பெற்றவர்.

**6398**

**சிறுவர் செந்தமிழ்.** க.சோமசுந்தரப் புலவர். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2004. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
xxii, 142 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18x12.5 சமீ.

தாடியறுந்த வேடன், பவளக்கொடி, ஆடிப்பிறப்பு, கத்தரி வெருளி, விறகுவெட்டி, இலவு காத்த கிளி, கொழுக்கட்டைப் பொன்னன் போன்ற மனதைவிட்டு அழியாத சிறுவர் கதைப்பாடல்கள் உள்ளிட்ட 32 பொருள் தலைப்புகளில் பாடப்பெற்ற நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் சிறுவர்களுக்குரிய பாடல்களின் தொகுப்பு. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 598876).

**6399**

**சிறுவர் பாடல்.** இ.நாகராஜன். யாழ்ப்பாணம்: சண்முகநாதன் புத்தகசாலை, 1வது பதிப்பு, கீலக வருஷம், ஆவணி 1968. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
xvi, 80 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18x12.5 சமீ.

இறைவன், அன்பு, ஒற்றுமை, எண்ணம், உண்மை, ஒழுக்கம், ஊக்கம், உறுதி, கல்வி, நன்றி, சூரியன், சந்திரன், நட்சத்திரம், மலை, ஆறு, கடல், காற்று, மாரி, தோட்டம், காடு, அம்மா, அப்பா, பந்து, பட்டம், சட்டை, விளக்கு, வாழை, புகைவண்டி, விசிறி, மணிக்கூடு, காக்கை, குயில், கிளி, தாமரை, ரோஜா, மெழுகுதிரி போன்ற 61 தலைப்புகளில் அமைந்த சிறுவர் பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275677).

**6400**

**சிறுவர் பாடல்.** த.கனகரத்தினம். கொழும்பு 10: இலக்கியன் வெளியீட்டகம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
16 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 29.5x21.5 சமீ., ISBN: 978-955-1997-15-1.

பன்மொழிப் புலவர் த.கனகரத்தினம் எழுதிய பதினைந்து சிறுவர் பாடல்களைக்கொண்ட நூல் இது. எங்கள் தெய்வம், தட்டு தட்டு, மரம் நாட்டுவோம், சுத்தம் சுகம் தரும், சூழல் மாசுபடுமோ, எங்கள் நல்ல வீடு, கடற்கரையில், ஆனை வந்தது, முயலும் வந்தது, வீடு காக்கும் வீரன், ஓடி வாரீர் தோழரே, சல் சல் வண்டி, வீதி ஒழுங்கு, நீச்சல் பழகு, எண் பாட்டு ஆகிய தலைப்புகளில் இவை உருவாக்கப்பட்டுள்ளன. த.கனகரத்தினம், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் தமிழ்ப் பாடநூற் பகுதி எழுத்தாளராகவும் பிரதான பதிப்பாசிரியராகவும், தலைவராகவும் நீண்ட காலம் கடமையாற்றியவர். ஜாதகக் கதைகள், தாய்லாந்து சிறுவர்களின் நாட்டார் கதைகள் என்பன இவரது முக்கியமான சிறுவர் நூல்களாகும்.

**6401**

**சிறுவர் பாடல்கள்.** த.துரைசிங்கம். கொழும்பு 6: உமா பதிப்பகம், 521/1B, காலி வீதி, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 12: நிசான் பிரிண்டர்ஸ், 64N, பீர் சாயிபு வீதி).
(4), 41 பக்கம், வண்ணப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 21x15 சமீ., ISBN: 955-98551-5-8.

பல்வேறு வயதுப் பிரிவினருக்குமான சிறுவர் பாடல்கள் இத்தொகுப்பில் கலந்து காணப்படுகின்றன. அழகான வண்ணச் சித்திரங்களுடன் பாடல்கள் கவர்ச்சிகரமாக தொகுக்கப்பட்டுள்ளன. இலங்கைத் தேசிய நூல் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் அச்சிடப்பட்டது.

**6402**
**சின்னச் சிட்டுக்கள்.** அகளங்கள் (இயற்பெயர்: நா.தர்மராஜா). கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
20 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 160., அளவு: 24x18.5 சமீ., ISBN: 955-0367-09-2.

சிறார் இலக்கியம் தொடர் இலக்கம் 10. அம்மா, சிட்டுக்குருவி, ஊஞ்சல், நாய்க்குட்டி, கன்றுக்குட்டி, கிளிக்குஞ்சு, வெண்ணிலவே, பாடுவோம் ஆடுவோம், தோகை மயில், தேனியாரே ஆகிய 10 பாடல்களைக் கொண்டது. இதே தலைப்பில் இவர் எழுதிய முன்னைய தொகுதி 36 பக்கங்களுடன் 30 பாடல்களுடன் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 28ஆவது வெளியீடாக வெளிவந்துள்ளது. அகளங்கன் பண்டைய தமிழ் மணத்தையும், இன்றைய தமிழ் உணர்வையும் தனது எழுத்துக்களாலும், பேச்சுக்களாலும் வாழ்வியலாலும் மக்கள் மத்தியில் பரப்பி வருபவர். ஆளுநர் விருதுகள் மற்றும் அரச, அரச சார்பற்ற, சமூக, சமய நிறுவனங்களின் தேசிய விருதுகளையும் தன் படைப்புகளுக்காகப் பெற்றவர். (முன்னைய சின்னச்சிட்டுக்கள் நூலுக்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3356)

**6403**
**சுட்டிக் குருவிகள்.** அகளங்கள் (இயற்பெயர்: நா.தர்மராஜா). கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
20 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 160., அளவு: 24.5x18 சமீ., ISBN: 955-0367-10-8.

சிறார் இலக்கியம் தொடர் இலக்கம் 11. அம்மா, அப்பா, பாட்டி, குட்டி முயல், குட்டிக் குரங்கு, மான், கிளிக்குஞ்சு, பூனைக்குட்டி, பசுக்கன்று, ஆட்டுக்குட்டி, கோழிக்குஞ்சு, நாய்க்குட்டி, படிப்பு, அணில், நிலா, ஓடுவோம், ரோஜா, மல்லிகை ஆகிய 18 சிறுவர் பாடல்களைக் கொண்டது.

**6404**
**செவ்வாய் மனிதன்.** மு.பொன்னம்பலம். கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
56 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 260., அளவு: 24x18.5 சமீ., ISBN: 955-0367-06-1.

சிறார் இலக்கியம் தொடர் இலக்கம் 07. இன்னொரு பூ, கட்டுமரம், கடவுளின் பிள்ளைகள், பட்டம் பறக்க விடுவோம், வேட்டை, அம்மா சுட்ட தோசை, மழை, காகமும் நண்டும், மீனைப்போல நீந்திடுவோம், காடு, சிறுவரெல்லாம் கூடிக்கூடி, புது வேலைக்காரன், ஒரே ஒரு ஊரிலே ஆகிய சிறுவர்க்கான பாடல்களுடன் செவ்வாய் மனிதன் என்ற ஆறு அங்க சிறுவர் கவிதை நாடகமும் இடம்பெற்றுள்ளன. ஈழத்தின் நவீன கலை இலக்கியப் பரப்பில் முக்கிய ஆளுமையான மு.பொன்னம்பலம் 1950களின் இறுதியிலிருந்து இன்றுவரை தீவிர இயக்கம் கொண்டவர்.

**6405**
**சோலைக் குயில்: சிறுவர் பாடல்கள்.** சரசாலையூரான் (இயற்பெயர்: ந.புகன்ஸ்ரீந்திரன்). சரசாலை: இந்து இளைஞர் மன்றம், 1வது பதிப்பு, தை 1993. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ காந்தா அச்சகம், 330, காங்கேசன்துறை வீதி).
28 பக்கம், விலை: ரூபா 23.00, அளவு: 20.5 x14.5 சமீ.

யாழ்ப்பாண மாவட்டம், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரியும் கவிஞர் சரசாலையூரான் எழுதிய 24 சிறுவர் பாடல்கள் கொண்ட தொகுப்பு. குழந்தைகளின் அறிவுக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற நீதி போதனைகள் சில கவிதைகளின் கருவாக உள்ளன.

**6406**
**தேன்சிட்டு: சிறுவர் பாடல்கள்.** ராணி சீதரன். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2000. (கொழும்பு 13: பேஜ் செட்டர்ஸ், 113, 1/1, ஜிந்துப்பிட்டி வீதி).
32 பக்கம், விலை: ரூபா 55.00, அளவு: 22x14 சமீ., ISBN: 955-97102-0-6.

*வன்முறை, மூடநம்பிக்கை, மாயாஜாலங்கள் போன்ற சிறுவர்களைப் பாதிக்கக்கூடிய இன்னோரன்ன அம்சங்களைத் தவிர்த்து, தன் பாடல்களை ராணி சீதரன் யாத்திருப்பது இந்நூலில் விதந்துரைக்கக்கூடிய சிறப்பியல்பாகும். 24 இனிய பாடல்கள் கொண்ட தொகுப்பு. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 546349).*

***6407***

***நட்பே உயர்வு.*** *கவிஞர் துரையர் (இயற்பெயர்: சு.துரைசிங்கம்). கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).*
*20 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 160., அளவு: 24x18.5 சமீ., ISBN: 955-0367-03-0.*

*சிறார் இலக்கியம் தொடர் இலக்கம் 04. ஓய்வுபெற்ற அதிபர் கலாபூஷணம் சு.துரைசிங்கம் கவிஞர் துரையர் என்ற பெயரில் எழுதியுள்ள குழந்தைப் பாடல்களைக்கொண்ட நூல். தோசை, நட்பே உயர்வு, வந்து பாருங்கள், மயிலே, பட்டங்கள், தவளை, தாத்தா, மடிமேல் கணனி, மலரும் வண்டும், குளம் ஆகிய பத்து தலைப்புகளில் எழுதப்பட்ட சிறுவர் பாடல்களை இந்நூல் உள்ளடக்குகின்றது.*

***6408***

***நான் அரசன்: சிறுவர் பாடல்கள்.*** *மஹாகவி, மு.பொன்னம்பலம். கொழும்பு 10: இலக்கியன் வெளியீட்டகம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).*
*(24) பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 175., அளவு: 25x19.5 சமீ., ISBN: 978-955-1997-13-7.*

*ஓவியர் எஸ்.டி.சாமியின் சிறுவர்களுக்கான சித்திரங்களுடன் மகாகவியின் ஐந்து பாடல்களையும், மு.பொன்னம்பலத்தின் ஏழு பாடல்களையும் உள்ளடக்கிய பன்னிரு சிறுவர் பாடல்களை இந்நூல் கொண்டுள்ளது.*

***6409***

***பந்தடிப்போம்.*** *அகளங்கள் (இயற்பெயர்: நா.தர்மராஜா). கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).*
*20 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 160., அளவு: 24.5x18 சமீ., ISBN: 955-0367-07-8.*

*சிறார் இலக்கியம் தொடர் இலக்கம் 08. பச்சைக்கிளி, ஆமை, பந்தடிப்போம், தாயுள்ளம், அன்னம், காகம், நல்ல வார்த்தை, சின்னப்பறவைகள், மானுடம் நிலைக்கும், நிலா ஆகிய தலைப்புகளில் 10 சிறுவர் கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

***6410***

***பாட்டு.*** *பாவலவன் (இயற்பெயர்: பா.சத்தியசீலன்), யாழ்ப்பாணம்: பா.சிலுவைராஜா, அல்லைப்பிட்டி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: ஆனந்தா அச்சகம், 82/3 & 82/5, வூல்பெண்டால் வீதி).*
*42 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.*

*34 சிறுவர் பாடல்கள். அழகான உலகு, அழகான நிலவு, அழகான பொழுது, அழகான நிகழ்வு, விலங்குத் தோழன், விலங்குக் காட்சியகம், பச்சைத் தமிழ், வண்டிகள், தொழில், வானியல், மாணவர் நாங்கள், கல்வியகங்கள், கற்பூரமும் கடலையும், பூங்காற்று, இயற்கை எழில், பூங்காவின் பாங்கர், ஆறு, தமிழ்செய்தோர், பிறந்த நாள், தமிழ்ச்சங்கக் கலைவிழா, கொடை, அப்பலோ, அருளாளர், விழாத்தமிழ், ஒளிவிழா, அருள்பாலா, பொங்கல், வாணிவிழா, செங்குட்டுவன் சீர், வாழ்க, ஈழம் எங்கள் நாடடா, மொழி, மொழி வாழ்த்து, வாணிவரம் ஆகிய தலைப்புகளில் இப்பாடல்கள் அமைந்துள்ளன. (இந்நூலின் வெளியீட்டு ஆண்டு அறியமுடியவில்லை. ஆயினும் இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தின் சேர்க்கையில் 1991இல் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. சேர்க்கை இலக்கம் 275604).*

***6411***

**பாட்டும் படமும்: சிறுவர் பாடல்கள்.** வி.என்.எஸ்.உதயசந்திரன். கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (கொழும்பு 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315 ஜம்பட்டா தெரு).
*80 பக்கம், படங்கள், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-96393-6-5.*

*1985முதல் ஆரம்பக் கல்வி ஆசிரியராகப் பணியாற்றும் நூலாசிரியரின் மூன்றாவது பிரசுரம். உயிர் எழுத்துக்கள், பட்டம், பறவைகள், கடற்கரை, அம்மா, சென்றிடுவோம், குடைகள், புத்தாண்டு, மரங்கள், வீதி விதிகள், போற்றிடுவோம், கணனி, படிக்கவேண்டும், வாழ்ந்திடுவோம், மலையகம் ஆகிய 15 தலைப்புகளில் 40 படங்களுடன் கூடிய இந்நூலிலுள்ள பாடல்கள் நவீன இசையுடன்கூடிய ஒலி நாடாவாகவும் இறுவட்டாகவும் வெளிவந்துள்ளன.*

**6412**
**பாடி மகிழ்வோம்: சிறுவர் இலக்கியம்.** செ.ஞானராசா. கொழும்பு 6: தென்றல் பப்ளிக்கேஷன், 135, கனல்பாங் வீதி, 1வது பதிப்பு, ஆவணி 2005. (கொழும்பு 6: தென்றல் பப்ளிக்கேஷன்).
*iv, 62 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.*

*மன்னார், மடுக்கோவில் முள்ளிக்குளம் அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை அதிபரான செ.ஞானராசா, இலங்கையின் புதிய கல்விச் சீர்திருத்தக் கருத்துகளுக்கு அமைவாக எழுதிய சிறுவர் பாடல்கள். ஆடிப்பாடி மகிழவும், விளையாட்டு மூலமாக பாட்டுத்திறனை அதிகரிக்கவும், இப்பாடல்கள் உதவுகின்றன.*

**6413**
**பால்நிலா.** செ.து.தெட்சணாமூர்த்தி. கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
*24 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 24x18 சமீ., ISBN: 955-0367-12-2.*

*சிறார் இலக்கியம் தொடர் இலக்கம் 13. தமிழ் வாழ்த்து, தமிழ், அப்பா, அம்மா, பாடியாடு பாப்பா, பேச்சுப்பேசு, தேனீ, வண்ணாத்திப் பூச்சி, பாட்டி, சின்னமாமா, நாய்க்குட்டி, மழை பொழியுது, பாட்டுப்பாடு, படிக்கும் அறை, மண்விளையாடும் பிள்ளை, பல்லி சொல்லுது, கோழி முட்டை, படிக்கவா, நித்திரை கொள், பால்சோறு உண்ணவா, கைகாட்டுவான், அடுப்படி ஆகிய 22 சிறுவர் பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் புலவர் செ.து.தெட்சணாமூர்த்தி. 1955 முதல் நாடகத்துறையில் முழுமையாக ஈடுபாட்டுடன் உழைத்தவர். 80 நாடகங்கள் வரை மேடையேற்றியவர். பூதத்தம்பி என்னும் வரலாற்றுக் காவியத்தை எழுதியவர். இவரது பிட்டுக்கு மண்சுமந்த பெருமான் என்ற நெடுங்காவியம் 1962இல் ஈழநாடு வாரமலரில் வெளிவந்து பாராட்டுப்பெற்றது.*

**6414**
**பாலர் கல்விப் பாடல்.** சபா ஜெயராஜா. கொழும்பு 10: இலக்கியன் வெளியீட்டகம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
*(2),26 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 175., அளவு: 25x19.5 சமீ., ISBN: 978-955-1997-14-4.*

*கல்வியியலாளர் பேராசிரியர் சபா.ஜெயராஜாவின் 26 குழந்தைப் பாடல்களைக் கொண்ட தொகுப்பு இதுவாகும். அசைவுகளுடன் பாடுதல், நடிப்புடன் பாடுதல், செயற்பாடுகளுடன் பாடுதல், சேர்ந்து பாடுதல், பொருள்களுடனான குழுப்பாடல், ஒருவர் பாட மற்றவர் குரல் எழுப்புதல் ஆகிய செயற்பாடுகளுடன் பாடக்கூடியதாக இவை உருவாக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் வெளியீடாக முன்னதாக 1998இல் வெளிவந்த இப்பாடல் தொகுப்பு, தற்போது இலக்கியன் வெளியீடாக மீள்பதிப்பாகியுள்ளது.*

**6415**
**பாவிருந்து: சிறுவர் பாடல்கள்.** H.L.M.நிசார். (புனைபெயர்: உ.நிசார்). மாவனல்ல: பானு பதிப்பகம், 70/3, புதிய கண்டி வீதி, 1வது பதிப்பு, அக்டோபர் 2009. (மாவனல்லை: எம்.ஜே.எம். பதிப்பகம், 119 பிரதான வீதி).

*40 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ.*

*சப்ரகமுவ மாகாணசபை சாஹித்திய விழா- 2009இல் முதலாவது பரிசை வென்ற சிறுவர் பாடல் தொகுதி. பாவிருந்து, அன்னை மடி சொர்க்கம், வானவில், குயிலக்கா, கிளி மூக்கு மாம்பழம், தாய்மை, தாமரை பூத்தது, எங்கள் இலங்கை நாடு, பொம்மை, ஆகாய விமானம், பூனைக்குட்டி, கூண்டுக் கிளி, அறிவுரைகள் கேளு, பசுமை காக்கும் தண்ணீர், நான் விரும்பும் வாத்து, கருணை கொள்வோம், சுனாமி வந்தது, இயற்கையில் இருந்து கற்றுக்கொள், மழை பொழியுதடா, நத்தையார், எனது முயல், எனது ஆட்டுக்குட்டி, சிவப்புத் தும்பியார், கப்பல் விடுவோம், பள்ளி சென்றிட வேண்டும் ஆகிய பல்வேறு தலைப்புகளில் அமைந்த சிறுவர் பாடல்கள் சித்திரங்களுடன் இடம்பெற்றுள்ளன.*

***6416***

***பிள்ளைத் தமிழ்.*** *ச.அமிர்தநாதர். நுவரஎலிய: கலைமன்ற வெளியீடு, 1வது பதிப்பு, 1970. (இறாகலை: அசோகா அச்சகம்).*
*108 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 19x13 சமீ.*

*இந்தப் பிள்ளைத்தமிழ் பிரபந்தவகையைச் சார்ந்த பிள்ளைத்தமிழ் அன்று. சிறு பிள்ளைகளுக்கு இயற்கை, இறைவன், ஒழுக்கம் முதலாம் விடயங்களைப்பற்றி அழகு தமிழில் சிறுவர்க்குப் புலப்படும்வகையில் இயற்றப்பட்ட கவிதைகள். இயற்கை என்ற தலைப்பில் 10 கவிதைகளும், வாழ்வு என்ற தலைப்பின்கீழ் 20 கவிதைகளும், வாழ்த்து என்ற தலைப்பின்கீழ் 10 கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275528).*

***6417***

***பூச்சிகள், மீன்கள், பறவைகள், விலங்குகளுடன் நாங்களும் வாழ்வோம்.*** *கமலா வாசுகி. மட்டக்களப்பு: கமலா வாசுகி, 30 பழைய வாடிவீட்டு வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2006. (கொழும்பு: மூன்றாவது மனிதன் வெளியீட்டகம்).*
*20 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.*

*மீன்கள், குட்டி எறும்புகள், நீலக்குருவி, ஆகியவற்றுடன் பாடல்வழியாகச் சிறுவன் மேற்கொள்ளும் உரையாடல்கள் இயற்கையை மதிக்கவேண்டும், அதனுடன் இணங்கி வாழவேண்டும் என்பவற்றை வலியுறுத்துவதாக அமைகின்றன. ஆசிரியரின் முழுப்பக்க கருத்தோவியங்கள் உரையாடல்களின் மூலக்கருவையொட்டி அமைகின்றன. பாடல்களை கிருபாகரன், ஜெயசங்கர் ஆகியோர் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளனர். அவ்வகையில் இது சிறுவர்க்கான இருமொழி பாடல் நூலாக அமைகின்றது.*

***6418***

***மலரும் மொட்டுக்கள்.*** *யசோதா பாஸ்கரன். கொழும்பு 6: உமா பதிப்பகம், 521/1B, காலி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டர்ஸ், 70/7 கனல் வீதி, ஹெந்தளை).*
*(2), 50 பக்கம், வண்ணப்படங்கள், விலை: ரூபா 120., அளவு: 21x15 சமீ., ISBN: 955-1162-11-0.*

*சிறுவர் இலக்கியத்தில் ஈடுபாடு காட்டிவரும் திருமதி யசோதாவின் மற்றுமொரு பாடல் நூல் படைப்பு இது. நிலா, பூக்கள், பட்டாம்பூச்சி, வானவில், பூனைக்குட்டி போன்ற சிறுவர்களுக்கு ஆர்வமூட்டும் தலைப்புகளில் வண்ணப்படங்களுடன் எழுதப்பட்ட 26 பாடல்கள் கொண்ட தொகுப்பு.*

***6419***

***மழலைக்கோர் பாட்டு.*** *க.யோகானந்தன். திருக்கோணமலை: நர்த்தனா வெளியீட்டகம், 101/8, கந்தசுவாமி கோவில் வீதி, 1வது பதிப்பு, மார்கழி 2006. (கொழும்பு 13: யுனி லங்காஸ், 32 அந்தோனியார் வீதி).*
*vi, 35 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22.5x15 சமீ.*

திருக்கோணமலை, சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபரான நூலாசிரியரது முன்னைய கவிதைத் தொகுதியான **உண்மை என்றும் உயிர்பெறும்**, 2006க்கான சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது. இச்சிறுவர் இலக்கிய நூல் கவிஞரின் 2வது நூலாகும். ஓவியர் ம.சச்சிதானந்தனின் சித்திரங்கள் இதிலுள்ள 35 சிறுவர் பாடல்களுக்கும் மெருகூட்டுகின்றன.

**6420**

**வயல் செய்வோம்.** கவிஞர் துரையர் (இயற்பெயர்: சு.துரைசிங்கம்). கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
20 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 160., அளவு: 24x18.5 சமீ., ISBN: 955-0367-05-4.

சிறார் இலக்கியம் தொடர் இலக்கம் 06. ஓய்வுபெற்ற அதிபர் கலாபூஷணம் சு.துரைசிங்கம் கவிஞர் துரையர் என்ற பெயரில் எழுதியுள்ள குழந்தைப் பாடல்களைக்கொண்ட நூல். நல்ல சிறுமிகள், பாட்டி தேடுவார், காகித வள்ளம், புறாக்கள், பால், கடலும் மீன்களும், பூச்செடிகள், மணி அடித்தால், வயல், பூனை ஆகிய தலைப்புகளில் அமைந்த 10 பாடல்கள் இதில் அடங்கியுள்ளன.

### 801.(4) சிறுவர் சிறுகதைகள்

**6421**

**உண்மை தந்த உயர்வு.** த.துரைசிங்கம். கொழும்பு 6: உமா பதிப்பகம், 521/1B, காலி வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2006. (கொழும்பு 12: அச்சக விபரம் தரப்படவில்லை).
(2), 54 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 60., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-1162-16-1.

சிறுவர்களின் சிந்தனையைத் தூண்டவல்ல பதினொரு சிறுகதைகளைக் கொண்டது. உயிர் நண்பர்கள் மூவர், அருணனின் உள்ளம் திருந்தியது எப்படி? உண்மை தந்த உயர்வு, போலி வேடம் ஆபத்தில் முடியும், வானம் பொது, அற்ப பிராணியும் ஆபத்துக்கு உதவும், ஆற்றங்கரையும் அரச மரமும், மயிலும் வான்கோழியும், கடமை தவறுதல் ஆகாது, ஈயாதவன் செல்வம் இரப்பவன் செல்வமாகும், அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்பட்டால் ஆகிய பதினொரு கதைகளின் இறுதியிலும் அக்கதைகள் சொல்லவரும் கருத்தும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

**6422**

**கிராமத்துக் கதைகள்.** சபா.ஜெயராசா. கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
104 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 360., அளவு: 24.5x18 சமீ., ISBN: 955-0367-00-9.

சிறார் இலக்கியம் தொடர் இலக்கம் 01. Room to Read நிறுவனத்தின் அனுசரணையுடன் சேமமடு பொத்தகசாலை நிறுவனம் வெளியிட்டுள்ள சிறுவர் நூல் தொகுதியில் முதலாவது நூல் இதுவாகும். கதை தொடங்கிவிட்டது, நாய்க்கு வாய்கட்டிய கதை, சாமியார் வந்தார், பாட்டி சொன்ன கதை, கூத்துக் கதை, இரவுப் பாடகர். ஐயரின் கதை, அழகுக்கோட்டம், நாகசுரக் கதை, காவடிக்கதை, மருதனார்மடம், மஞ்சக்கதை, திண்ணைப்பள்ளிக்கூடம், நிலாப்பள்ளிக்கூடம், பொன்னளந்தார் கதை, ஒட்டுமாந்தோட்டம், மருத்துவரின் கதை, மடத்தின் கதை, சுப்பையா அப்பு கூறிய கதைகள், மந்திரச் செல்லையரின் கதை, விஞ்ஞானியின் கதை, வீரச்சிறுவன், அப்பக்கார ஆச்சியின் கதை, மீண்டும் கிராமத்தைத் தேடி ஆகிய தலைப்புகளில் அமைந்த 24 சிறுவர் கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**6423**

**குறும்புக்கார இளவரசியும் கனிவான தேவதையும்.** உஷா ஜவஹர். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 34: மலர் பிரிண்டர்ஸ்).
64 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21x14.5 சமீ.

குறும்புக்கார இளவரசியும் கனிவான தேவதையும், அதிக அழகு ஆபத்து, போதிமரம் ஆகிய மூன்று சிறுவர்கதைகள், வண்ணப்படங்களுடன் கூடியதாக இந்நூலில் இடம்பெற்றுள்ளன. கொழும்பு,

வெள்ளவத்தையில் பிறந்த இந்நூலாசிரியை கொழும்பு செய்ன்ட் லோரன்ஸ் பாடசாலையிலும், திருக்குடும்பக் கன்னியர் மடத்திலும் கல்வி பயின்றவர். கணக்கியல்துறையில் உயர்கல்வி பயின்று கொழும்பிலும், சாம்பியாவிலும் பணியாற்றியவர். தற்போது அவுஸ்திரேலியாவில் குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகின்றார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 630618).

**6424**
**சிறுவர்களுக்கான சிந்தனைக் கதைகள் 1.** கார்த்திகாயினி சுபேஸ். கொழும்பு 12: லோயல் பப்ளிக்கேஷன், 125 ஏ, நியூ மூர் வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் இல்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).
32 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 55., அளவு: 22x15 சமீ.

தலைப்புப் பக்கமின்றி வடிவமைக்கப்பட்டுள்ள இந்நூலில் தர்மபுரி இளவரசன், தீயார் நட்பு, சின்னாவும் மின்னியும், காகம் சொன்ன புத்திமதி, உயிர் காத்த தோழன், நம்பிக்கைத் துரோகம். பாலாவின் பழிவாங்கல், மூன்று கொய்யாக் கனிகள், உதவிக்கரம், அடிவாங்கிய புலி, சாபம் நீங்கிய இளவரசன் ஆகிய 11 சிறுவர் கதைகள் இடம்பெற்றுள்ளன.

**6425**
**தோட்டத்தில் ஆடு.** சு.துரைசிங்கம். கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
24 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 160., அளவு: 24x18.5 சமீ., ISBN: 955-0367-02-3.

சிறார் இலக்கியம் தொடர் இலக்கம் 03. சிறிய வசனங்களாலும் இலகு சொற்களாலும் ஆக்கப்பெற்ற சிறுவர்களுக்கான கதைநூல். இசையில் மயங்கிய சிறுவர்கள், உயிர்தப்பிய கம்பளி ஆடுகள், வெள்ளைப் பன்றிக்குட்டி, சேர்ந்து உண்போம், திருந்தியவன், புத்திசாலிப் பறவை, தாயும் பிள்ளையும், வெள்ளத்திற்குத் தப்பிய வெள்ளாடு, ஒட்டகம் வென்றது, தோட்டத்தில் ஆடு ஆகிய பத்து கதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

**6426**
**பாலர்களுக்கான சிந்தனைக் கதைகள் 3.** கார்த்திகாயினி சுபேஸ். கொழும்பு 12: லோயல் பப்ளிக்கேஷன், 125 ஏ, நியூ மூர் வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் இல்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).
8 பக்கம், வண்ணப்படங்கள், விலை: ரூபா 60., அளவு: 29.5x22 சமீ.

புத்திசாலிப் பூனை, கணினி தந்த நன்மை, நீலாவும் சீமாவும் ஆகிய மூன்று சிறுவர் கதைகளை இந்நூல் கொண்டிருக்கின்றது.

**6427**
**பாலர்களுக்கான சிந்தனைக் கதைகள் 4.** கார்த்திகாயினி சுபேஸ். கொழும்பு 12: லோயல் பப்ளிக்கேஷன், 125 ஏ, நியூ மூர் வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் இல்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).
8 பக்கம், வண்ணப்படங்கள், விலை: ரூபா 60., அளவு: 29.5x22 சமீ.

குரங்கும் கிளிகளும், சாமியார் சொன்ன அறிவுரை, உயிர் தப்பிய ஒட்டகச் சிவிங்கி ஆகிய மூன்று சிறுவர் கதைகளை இந்நூல் கொண்டிருக்கின்றது.

**6428**
**பாலர்களுக்கான சிந்தனைக் கதைகள் 5.** கார்த்திகாயினி சுபேஸ். கொழும்பு 12: லோயல் பப்ளிக்கேஷன், 125 ஏ, நியூ மூர் வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் இல்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).
8 பக்கம், வண்ணப்படங்கள், விலை: ரூபா 60., அளவு: 29.5x22 சமீ.

சிங்கத்தின் பேராசை, கெட்டவரின் உறுதிமொழியை நம்பாதே, நிலவுக்குச் சென்ற நிமாலினி ஆகிய மூன்று சிறுவர் கதைகளை இந்நூல் கொண்டிருக்கின்றது.

**6429**

**பாலன் வருகிறான்.** சு.துரைசிங்கம். கொழும்பு 11: பத்மம் பதிப்பகம், 180, 1/48 பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
44 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 240., அளவு: 24.5x18.5 சமீ., ISBN: 955-0367-01-6.

சிறார் இலக்கியம் தொடர் இலக்கம் 02. பாலன் வருகிறான், தெய்வங்கள், கூட்டம் குறைந்தது, டாக்டர் குணா, புகழாரம், நீதி நிலைத்தது, எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும், கச்சேரி செய்யலாம், பொறுப்புணர்வு, கௌரவம், சந்திரனின் துணிவு ஆகிய பதினொரு கதைகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. இக்கதைகள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் ஆசிரிய மாணவர்களது உறவுகள், செயற்பாடுகள், சாதனைகள், இரக்க சிந்தனை, கருணை போன்ற நற்பண்புகளை வெளிக்கொண்டுவரும் வகையில் படைக்கப்பட்டுள்ளன.

### 801.(5) சிறுவர் நாவல்கள்

**6430**

**அழகிய ஆட்டம்.** வசந்தி தயாபரன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
12 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 130., அளவு: 21x29.5 சமீ., ISBN: 978-955-1857-67-7.

வீ.சுப்பிரமணியத்தின் ஓவியங்களுடன் வெளியாகியுள்ள இந்தப் பாலர் கதை நூல், Room to Read நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. மயிலின் ஆட்டத்தை காட்டு விலங்குகள் ரசித்துப் புகழ்கின்றன. வான்கோழி தானும் நடனமாடி மயிலை ஓரங்கட்ட முனைகின்றது. மயிலின் தோகை முறிகின்றது. வான்கோழி உவகை கொள்கின்றது. மயில் தன் தோகையை சீர்செய்துகொண்டு மீண்டும் ஆடத்தொடங்குகின்றது.

**6431**

**இருண்ட குகைக்குள் என்ன விசேஷம்.** இ.ஆருத்ரா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
12 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 130., அளவு: 29.5x21 சமீ., ISBN: 978-955-1857-69-1.

ஆர். சுரேந்திரனின் ஓவியங்களுடன் வெளியாகியுள்ள இந்தப் பாலர் கதை நூல், Room to Read நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. சிங்கத்தின் இருண்ட குகைக்குள் ஏதோ நடக்கின்றது என்ற சந்தேகம் காட்டு மிருகங்களுக்கு எழுகின்றது. காரணம் குகை வாசலில் ஏராளமான பழ வகைகள், தின்பண்டங்கள் கூடைகளில் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இறுதியில் அன்று சிங்கத்தாரின் பிறந்தநாள் என்று தெயவருகின்றது.

**6432**

**எனக்குப் பசிக்குதே.** மு.பொன்னம்பலம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
12 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 130., அளவு: 29.5x21 சமீ., ISBN: 978-955-1857-62-2.

ஆர். சுரேந்திரனின் ஓவியங்களுடன் வெளியாகியுள்ள இந்தப் பாலர் கதை நூல், Room to Read நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. பசியால் வாடும் காகம் ஒன்று கடற்கரையில் ஓடும் சிறு நண்டைப்பிடிக்கின்றது. நண்டு பாவம் அதைக்கொல்லாதே என்று சிறுவன் காகத்திடம் வேண்டுகின்றான். நண்டைக் கொத்தாவிட்டால் தன்பசி தீருமா என்று காகம் சிறுவனைக் கேட்டு அவனைச் சிந்திக்கவைக்கிறது.

**6433**

**கடத்தல்காரர்கள்.** மு.பொன்னம்பலம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
12 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 130., அளவு: 29.5x21 சமீ., ISBN: 978-955-1857-64-6.

ஆர்.சி.பிரதீப்குமாரின் ஓவியங்களுடன் வெளியாகியுள்ள இந்தப் பாலர் கதை நூல், Room to Read நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. காரோட்டப் பழக்கிச்செல்லும் ஒரு வாகனத்தைக் கடத்தல்காரராக தவறுதலாக இனம்காணும் பொலிஸ்கார நரியார் பற்றிய கதை.

**6434**
**குகைக்குள் யார்.** மு.பொன்னம்பலம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
12 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 130., அளவு: 21x29.5 சமீ., ISBN: 978-955-1857-63-9.

வீ.சுப்பிரமணியத்தின் ஓவியங்களுடன் வெளியாகியுள்ள இந்தப் பாலர் கதை நூல், சுழமஅ வழ சுநயன நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. வேட்டைக்காக வெளியே வந்திருந்த சிங்கத்தின் குகைக்குள் யாரோ ஒளித்திருப்பதாக காட்டு விலங்குகள் சிங்கத்தை எச்சரிக்கின்றன. சிங்கமும் சற்று யோசனையுடன் குகையை அணுகுகின்றது. கூடைகள் நிறைந்த பழங்களே குகைவாசலில் இருக்கின்றன. குழப்பமடைந்த சிங்கத்தாரை குடும்பத்தினர் குகைக்குள்ளிருந்து வரவேற்கின்றனர். அன்று அவரது பிறந்தநாள்.

**6435**
**குட்டி முயலுக்குப் பரிசு.** சிபில் வெத்தசிங்ஹ (சிங்கள மூலம்), சரோஜினிதேவி அருணாசலம் (தமிழாக்கம்). கொழும்பு 10: இலக்கியன் வெளியீட்டகம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
(12) பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 20x20 சமீ., ISBN: 978-955-1997-07-6.

தாய் தந்தையருக்கு உதவிசெய்யும் குட்டி முயலாரின் கதை.

**6436**
**குட்டிக் கரடியும் சுட்டிப் பூனையும்.** ஜே.ரூபராஜ் தேவதாசன். நீர்கொழும்பு: தாசன் வெளியீட்டகம், இல.16, கொவிஜனசேவா மாவத்தை, ஹல்தண்டுவான, தங்கொட்டுவை, 1வது பதிப்பு, ஜுலை 2006. (கென்கல்ல: ஆர்.சரவணகீர்த்தி, டிலு என்டர்பிரைசஸ், 90, கண்டி வீதி).
32 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x14.5 சமீ.

மலையகத்தின் முன்னணி சிறுவர் இலக்கியப் படைப்பாளியும் ஆசிரியருமான நூலாசிரியரின் படைப்பான இந்நூல் கு.பிரசன்னனின் ஓவியங்களுடன் பெரிய எழுத்தில் வெளிவந்துள்ளது. கரடிக்குடும்பத்தில் நடக்கும் அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளை சுவையாக இக்கதை விபரிக்கிறது.

**6437**
**குடைத் திருடன்.** சிபில் வெத்தசிங்ஹ (சிங்கள மூலம்), சரோஜினிதேவி அருணாசலம் (தமிழாக்கம்). கொழும்பு 10: இலக்கியன் வெளியீட்டகம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
24 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 250., அளவு: 30x21.5 சமீ., ISBN: 978-955-1997-11-3.

குடையையே அறிந்திராத தோப்பூர் கிராமத்துக்கு அதனைக்கொண்டுவர முயலும் அவ்வூரவரான கிரிமாமாவினால் குடையை கிராமத்திலுள்ள தேனீர்க் கடைக்கு அப்பால் அதைக் கொண்டபோக முடியவில்லை. தொடர்ந்தும் பல குடைகளை அவர் வாங்கிவந்தபோதிலும், தேனீர்க் கடையில் அவை திருட்டுப்போயின இறுதியில் சமயோசிதமாக குடைத்திருடனை அவர் பிடிக்கிறார். குடைத்திருடன் வேறு யாருமல்ல- குரங்கார் தான். இக்கதை **குட ஹொரா** என்ற தலைப்பில் 1952இல் ஜனதா பத்திரிகையில் முதலில் வெளிவந்தது. இதுவரை ஜப்பான், சீனா, கொரியா, பிலிப்பைன்ஸ், நோர்வே,

*சுவீடன், டென்மார்க், தாய்வான், சிங்கப்பூர், ஹொங்கொங், குவாமி, பிரித்தானியா உள்ளிட்ட 12 நாடுகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.*

***6438***

***சண்டை.*** *சிபில் வெத்தசிங்ஹ (சிங்கள மூலம்), சரோஜினிதேவி அருணாசலம் (தமிழாக்கம்). கொழும்பு 10: இலக்கியன் வெளியீட்டகம்,* B3-G3 *ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம்,* B3-G3 *ரம்யா பிளேஸ்).*
*(16) பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 175., அளவு: 24.5*x*18.5 சமீ.,* ISBN: *978-955-1997-04-5.*

*பபிலினுவுடன் அவன் மனைவி பபிலினா சண்டைபிடித்துக்கொண்ட வீட்டைவிட்டுச் செல்வதாகவும், தனியனாக வாழமுடியாமல் பபிலினு கலங்குவதாகவும் பின்னர் மாலை பபிலினா மனம்மாறித் திரும்பிவருவதாகவும் இக்கதை சுவையாக உருவமைக்கப்பட்டுள்ளது.*

***6439***

***டக்கென்று வருவேன்.*** *சு.தேவகௌரி. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை,* U G 50, *பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).*
*12 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 130., அளவு: 29.5*x*21 சமீ.,* ISBN: *978-955-1857-70-7.*

*ஆர். சுரேந்திரனின் ஓவியங்களுடன் வெளியாகியுள்ள இந்தப் பாலர் கதை நூல், சுழுழஅ வழ சுநயன நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. வீட்டில் தன் குடும்பத்துடன் இருக்கும் யோயு என்ற எலிக்குஞ்சு தாய் எலிக்குத் தெரியாமல்- அந்த வீட்டுப் பையனின் புத்தகப் பையுள் நுழைந்து அவனுடன் பள்ளிக்கூடம் போய் திரும்பி வருவதாக கதை அமைகின்றது.*

***6440***

***தம்பயா.*** *சிபில் வெத்தசிங்ஹ (சிங்கள மூலம்), சரோஜினிதேவி அருணாசலம் (தமிழாக்கம்). கொழும்பு 10: இலக்கியன் வெளியீட்டகம்,* B3-G3 *ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம்,* B3-G3 *ரம்யா பிளேஸ்).*
*(16) பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 29.5*x*21.5 சமீ.,* ISBN: *978-955-1997-06-9.*

*பிந்துஅப்புவின் மாட்டு வண்டிலில் கட்டப்படும் மாடான தம்பயா பற்றிய சிறுவர்களுக்கேற்ற கதை. பரணபால என்பவரின் பழைய காரில் தம்பயா சவாரிசெய்யும் சுவாரஸ்யமான கதை இது.*

***6441***

***நண்டுகள் சத்தமிடுமா?*** *இ.அனந்தன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை,* U G 50, *பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).*
*12 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 130., அளவு: 29.5*x*21 சமீ.,* ISBN: *978-955-1857-66-0.*

*வீ.சுப்பிரமணியத்தின் ஓவியங்களுடன் வெளியாகியுள்ள இந்தப் பாலர் கதை நூல், சுழுழஅ வழ சுநயன நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. மிஞ்சி என்ற நண்டு தன் நண்பனான ஹிரா என்ற மீனை கடற்கரையிலுள்ள சிறுவர் பூங்காவுக்கு அழைத்துச்செல்வது கதையாகச் சொல்லப்படுகின்றது.*

***6442***

***பணியாரப் பயில்வான்.*** *சிபில் வெத்தசிங்ஹ (சிங்கள மூலம்), சரோஜினிதேவி அருணாசலம் (தமிழாக்கம்). கொழும்பு 10: இலக்கியன் வெளியீட்டகம்,* B3-G3 *ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம்,* B3-G3 *ரம்யா பிளேஸ்).*
*(16) பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 25*x*19.5 சமீ.,* ISBN: *978-955-1997-10-6.*

*புதுவருடப் பிறப்புக்காக வீட்டில் செய்யப்பட்ட கலகாரங்களில் ஒன்றான கொண்டைப் பணியாரம் (சிங்களத்தில் கொண்ட கவுங் எனப்படும்) உயிர்பெற்று வானில் சுதந்திரமாகப் பறந்து திரிவதான கற்பனை இது.*

***6443***

***புல்லுக்கு அலைந்த மில்லா.*** *அஷ்ரப் சிஹாப்தீன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை,* U G 50, *பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).*
*12 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 130., அளவு: 21*x*29.5 சமீ.,* ISBN: *978-955-1857-65-3.*

*ஆர்.சி.பிரதீப்குமாரின் ஓவியங்களுடன் வெளியாகியுள்ள இந்தப் பாலர் கதை நூல்,* Room to Read *நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. வீட்டுக்காரனின் வழமையான புண்ணாக்கை மறுத்து மில்லா என்ற கறுத்த பசுமாடு, புல்லைத்தேடி ஊரெங்கும் அலைவதாக கதை வளர்த்துச்செல்லப்படுகின்றது. பலராலும் கலைக்கப்பட்டு இறுதியில் நீரோடை ஒன்றின் அருகில் பசும்புல்லை மேயத்தொடங்குகின்றது.*

***6444***

***மண்புழு மாமா வேலை செய்கிறார்.*** *வசந்தி தயாபரன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை,* U G 50, *பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).*
*12 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 130., அளவு: 29.5*x*21 சமீ.,* ISBN: *978-955-1857-68-4.*

*ஆர்.சி.பிரதீப்குமாரின் ஓவியங்களுடன் வெளியாகியுள்ள இந்தப் பாலர் கதை நூல், சுழழஅ வழ சுநயன நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. தோட்டத்தில் சிறுவர்கள் கையில் அகப்படும் மண்புழு தோட்டத்து மண்ணை பராமரிப்பதில் உதவுவதை அறிந்து விடுவிக்கப்படுகின்றது.*

***6445***

***மோதக மாமா.*** *சிபில் வெத்தசிங்ஹ (சிங்கள மூலம்), சரோஜினிதேவி அருணாசலம் (தமிழாக்கம்). கொழும்பு 10: இலக்கியன் வெளியீட்டகம்,* B3-G3 *ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம்,* B3-G3 *ரம்யா பிளேஸ்).*
*20 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 22*x*29 சமீ.,* ISBN: *978-955-1997-05-2.*

*கடையில் மோதகம் வாங்கிச் சாப்பிடும் மோதக மாமா கழுத்தில் கட்டியிருக்கும் கைக்குட்டையை எடுத்து, மற்றவர் பார்க்காதிருக்க அதனால் மறைத்துக்கொண்டே சாப்பிடுவார். ஒரு நாள் தனது கைக்குட்டையை அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதை யாரோ கடையில் திருடிவிட்டார்கள் என்று ஊரெல்லாம் தேடி அலைகிறார். இறுதியில் அவர் அதனை தன் தலையில் கட்டியிருப்பதை குழந்தைகளின் வாயால் அறிந்து வெட்கமும் மகிழ்ச்சியும் கொள்கிறார்.*

***6446***

***வெசக் தீபம்.*** *சிபில் வெத்தசிங்ஹ (சிங்கள மூலம்), சரோஜினிதேவி அருணாசலம் (தமிழாக்கம்). கொழும்பு 12: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*
*28 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 125., அளவு: 17.5*x*25 சமீ.,* ISBN: *978-955-1997-03-8.*

*மூலநூலாசிரியரின் ஓவியங்களுடன் வெளியாகியுள்ள சிறுவர் கதை நூல். பாட்டியம்மாவும் குட்டிப்பேரனும் சேர்ந்து பெரிய வெசக்கூட்டைச் செய்கிறார்கள். ஊரே வியந்துபோற்றும் அந்தக் கூட்டினுள்ளேயே பாட்டியம்மா இருந்து ஒளியேற்றுகிறாள். அவளது சில் அனுஷ்டிக்கும் விம்பம் நிழலாக வெசாக் கூட்டின் வழியே தெரிகின்றது. ஊரே திரண்டு வந்து இதைக்கண்டு அதிசயித்து மகிழ்வதாகக் கதை முடிகின்றது. முதலில் ஏநளயம டுயவெநசெ என்ற தலைப்பில் ஆங்கில மொழியில் வெளிவந்து 1965இல் பிரித்தானியாவின் இசொபெல் ஹட்டின் பரிசு வழங்கப்பெற்றது. 1979இல் ஜப்பானில் யுனெஸ்கோ ஆசிய கலாச்சார மத்திய நிலையம்* ***தற்காலத்து ஆசிய கதைகள்*** *என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டது. வெசக் லன்டர்ன் என்ற இந்தக் கதையும் அந்த நூலில் இடம்பெற்றது. 1996ஆம் ஆண்டில் சிறந்த ஆங்கில சிறுவர் கதைக்கான இலங்கை அரசின் சன்மானத்தை வெசக் லன்டர்ன் பெற்றுக்கொண்டது. இலங்கையின் பௌத்த தேசிய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் படைப்பாக, ஸ்பெயின் நாட்டில் சலீ நகரத்தில் பொன்டிகிஷியா கெடோலிகா*

பல்கலைக்கழகத்தினால் 1998ம் ஆண்டில் வெளியிடப்பட்ட பல்தேசக் கதைத்தொகுதியில் இக்கதையும் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

*801.(6) சிறுவர்க்கான கட்டுரைகள்*

***6447***

***சிறார்க்கான அறிவியற் கதைகள்.*** *சபா ஜெயராஜா. கொழும்பு 10: இலக்கியன் வெளியீட்டகம்,* B3-G3 *ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம்,* B3-G3 *ரம்யா பிளேஸ்).*
*63 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 125., அளவு: 22*x*18.5 சமீ.,* ISBN: *978-955-1997-16-8.*

*புத்தகத்தின் கதை, சொல்லியத்தின் (அகராதி)கதை, நீரின் கதை, காடுகளின் கதை, முகிலின் கதை, பூச்சிகளின் கதை, பறவைகளின் கதை, பாலத்தின் கதை, விளக்கின் கதை, இசைக்கருவிகளின் கதை, விசிறியின் கதை, உராய்வின் கதை, ஒளிப்படக் கருவியின் கதை, கடிகாரத்தின் கதை, கணிப்பொறியின் கதை ஆகிய 15 தலைப்புக்களில் பல்வேறு அறிவியல் விடயங்களை சிறுவர்களுக்கேற்ற வகையில் உரையாடல் யுத்தியைப் பயன்படுத்தி இந்நூலை எழுதியுள்ளார்.*

*801.(7) சிறுவர்க்கான பலவின நூல்கள்*

**மேலும் பார்க்க:** *6110, 6119*

*894.8 தமிழ் இலக்கியம்*

*894.8(1) தமிழ்க் கவிதைகள்*

***6448***

***அக்கரைப்பற்று அசனார் லெப்பை புலவரின் சறு சறு படைப்போர்.*** *அசனார் லெப்பை புலவர் (மூலம்), எம்.ஐ.அகமது லெப்பை (பிரதியாக்கம்). கொழும்பு: உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு- 2002, முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (கொழும்பு: மிலேனியம் அட்வர்டைசிங் அன்ட் பிரின்டர்ஸ்).*
viii, *76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*14 சமீ.,* ISBN: *955-8806-01-3.*

*அக்கரைப்பற்று கருங்கொடித்தீவில் வாழ்ந்த அசனார் லெப்பைப் புலவரால் 1263இல் பாடப்பட்ட "படைப்போர்" என்ற இலக்கிய வடிவவில் அமைந்த பாடல்கள் இவை. சறுசறு என்பது ஒரு நாட்டின் பெயராகும். இந்நாட்டின் அரசனான மகாத்தீல் என்பவனுடன் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் போரிட்டு அந்நாட்டை வெற்றிகொண்ட வரலாறு இதில் கூறப்படுகின்றது. அலி(ரலி) அவர்களது படைப்பலம், வீரதீரம், படைநடத்திய முறைமையெல்லாம் இலக்கியநயம்சொட்ட இனிய தமிழ்க் கவிதைகளில் புலவரவர்கள் படைத்துள்ளார். அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் எம்.ஐ.அகமது லெப்பை ஏட்டுப்பிரதியையும் கையெழுத்துப்பிரதியையும் பெற்று பிரதியெடுத்துள்ளார். இப்பதிப்பு முயற்சியின் பின்னணியில் அல் அஸூமத், மு.பஷீர், சாந்தி முஹியித்தீன், எம்.எச்.எம்.புகாரி ஆகிய ஈழத்து இஸ்லாமியக் கவிஞர்கள் இருந்துள்ளனர். இது துறைமுகங்கள் அபிவிருத்தி கப்பற்றுறை அமைச்சு, கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் அமைச்சு. இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் ஆதரவுடன் 2002 ஒக்டோபர் 22, 23,24ம் திகதிகளில் நடத்திய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின்போது வெளியிடப்பெற்ற மீள்பிரசுரங்களில் ஒன்று.*

***6449***

***அட்டாளைச்சேனை அப்துர் ரஹ்மான் புலவரின் மணமங்கல மாலை.*** *அப்துர் ரஹ்மான் ஆலிம் (மூலம்), எம்.ஐ.அகமது லெப்பை (பிரதியாக்கம்). 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. கொழும்பு: உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு- 2002, முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (கொழும்பு: மிலேனியம் அட்வர்டைசிங் அன்ட் பிரின்டர்ஸ்).*
vi, *106 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*13.5 சமீ.,* ISBN: *955-8806-04-8.*

இது துறைமுகங்கள் அபிவிருத்தி கப்பற்றுறை அமைச்சு, கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் அமைச்சு. இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் ஆதரவுடன் 2002 ஒக்டோபர் 22, 23,24ம் திகதிகளில் நடத்திய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின்போது வெளியிடப்பெற்ற மீள்பிரசுரங்களில் ஒன்று. மார்க்க அறிஞரும் ஈழத்து முஸ்லிம் புலவருமான அட்டாளைச்சேனை அப்துர்றகுமான் ஆலிம் அவர்கள் 1315இல் பாடிய இப்பாடல்கள் கலீபா அலி என அழைக்கப்பட்ட செய்யிதுனா அலி (றலி) அவர்களுக்கும் பாத்திமா நாயகி (றலி) அவர்களுக்கும் சிறப்புடன் நடந்த திருமண வைபவ நிகழ்வுகளைப்பற்றிக் கூறுகின்றன. ஏட்டுப்பிரதிகளில் இருந்த இந்நூலை கையெழுத்துப் பிரதியாக்கிப் பத்திரப்படுத்தியவர் ஓய்வுபெற்ற அதிபர் அல்ஹாஜ் எம்.ஐ. அகமது லெப்பை அவர்களாவார். இப்பதிப்பு முயற்சியின் பின்னணியில் அல் அஸூமத், சாந்தி முஹியித்தீன், எம்.எச்.எம்.புகாரி ஆகிய ஈழத்து இஸ்லாமியக் கவிஞர்கள் இருந்துள்ளனர்.

*6450*

**அண்ணல் கவிதைகள்.** கவிஞர் அண்ணல். (இயற்பெயர்: எம்.எஸ்.எம். சாலிஹ்). கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1964. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ்).
(2), 116 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 18x12.5 சமீ.

ஒரு பொருளை ஒரு செய்யுளில் வைத்துப்பாடும் சங்ககால மரபிலிருந்து ஒரு பொருளைப் பல செய்யுள்களில் ஏற்றிப்பாடும் மரபு தொடர்ந்தது. இவை தனிப்பாடல்கள் எனப் பின்னாளில் வழங்கப்பட்டன. அண்ணல் கவிதைகள் அவ்வகைத் தனிப்பாடல்களின் தொகுப்பாகும். இதில் இறைவணக்கம், விளைவு, தவிப்பு, அவள், அவருக்கென்ன, இனிமைக்கனவுகள் போன்ற 43 குறுந்தலைப்புகளில் அமைந்த தனிப்பாடல்கள் அடங்குகின்றன. கிழக்கிலங்கையின் அறியப்பட்ட முஸ்லிம் கவிஞராக விளங்கியவர் எம்.எஸ்.எம். சாலிஹ் (அண்ணல்) அவர்களாவார். கிண்ணியா முற்போக்கு வாலிபர் மன்றத்தின் ஆதரவில் தமது முதலாவது இஸ்லாமியப் பெருவிழாவின் போது இந்நூல் அரசு வெளியீடாக வெளியிடப்பெற்றுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275516).

*6451*

**அது.** மு.பொன்னம்பலம். சென்னை 600005: தமிழ்ப் புத்தகாலயம், பைகிராப்ட்ஸ் ரோடு, 1வது பதிப்பு, ஜூலை 1968. (சென்னை 14: நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்).
112 பக்கம், விலை: இந்திய ரூபா 3.00, அளவு: 18.5x12.5 சமீ.

1950களின் இறுதியிலிருந்து கவிதை எழுதிவரும் மு.பொ. சிறுகதைகளும் நாவல்களும் எழுதியுள்ளார். விமர்சனத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டவர். இயற்கை, சமூகம். நான், அது, புதியவை ஆகிய ஐந்து பிரிவுகளுக்குள் மு.பொ. எழுதிய 46 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந்நூலுக்கான முகவுரையை இவரது தமையனாரும், பிரபல எழுத்தாளருமான மு.தளையசிங்கம் வழங்கியுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275698).

*6452*

**அந்தரத்து உலவுகிற சேதி.** ஸ்ரீ பிரசாந்தன். சென்னை: விளிம்பு வெளியீடு, The Papyrus, 1205 Karuppur Salai, Puthanatham 621310, 1வது பதிப்பு, 2007. (சென்னை 600005: மணி ஓப்செட்).
78 பக்கம், விலை: ரூபா 150., இந்திய ரூபா 35., அளவு: 18x11 சமீ.

ஸ்ரீ ஜெயவர்த்தன பல்கலைக்கழக விரிவுரையாளரான நூலாசிரியர் கோப்பாயை பிறப்பிடமாகக் கொண்டவர். தமிழ்ப்புலமை மிகுந்தவர். 33 கவிதைகளை இங்கு தொகுத்திருக்கிறார். மரபு இலக்கியச் செல்வங்களுள் திளைத்து நவீன இலக்கியப் பாதையை நோக்கி இவரது கவிதைகள் நகர்கின்றன. பெரும்பாலும் வசனக் கவிதைகளாக உள்ள இவை கருத்துச்செறிவானவை. வ.ஐ.ச.ஜெயபாலனின் நீண்ட முன்னுரையுடன் கூடியது. கவிதைகள் போர்க்காலச் சூழல், இயற்கை, காதல், சமகால மனிதர் வாழ்வு, மக்கள் எழுச்சி என்பனவற்றை அடக்கியுள்ளது. அநேகமான கவிதைகள் போரின் கோர விளைவுகள் பற்றியும் மக்களிடம் தோன்றும் பய உணர்வு பற்றியும், உணவுக்கான போராட்டம் பற்றியும் விளிக்கின்றன. உலகமயமாதல் என்னும் வலியும் அந்த வலியில் கடந்து செல்லும்

காலங்களையும் பற்றிய குரல்களும் இக்கவிதைகளில் ஒலிக்கத்தவறவில்லை. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 618131).

### 6453

**அப்துஸ்ஸமது ஆலிம் புலவரின் மரணரெத்தின மாலையும் மற்றும் சில படைப்புகளும்.** அப்துஸ்ஸமது ஆலிம் புலவர் (மூலம்). 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. கொழும்பு: உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு- 2002, முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (கொழும்பு: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44 புகையிரதநிலைய வீதி, தெகிவளை).
x, 150 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 955-8806-11-0.

திருக்கோணமலை மாவட்டத்து நாச்சிக்குடாவில் பிறந்தவர் அப்துஸ்ஸமது ஆலிம் புலவர். சிலோன் தர்வேஸ் என்ற புனைபெயரும் இவருக்குண்டு. இவர் படைத்தளித்த தமிழ் இலக்கியங்களான, மரணரெத்தின மாலை (மட்டக்களப்பு ராஜன் அச்சகம், 1966), அருமை நபியவதார அமிர்த ரஞ்சிதம் (மட்டக்களப்பு அர்ச் செபஸ்தியான் அச்சகம், 1953), நபி பெருமானார் (ஸல்) அவர்களின் இறுதிவேளை, ஈமான் விளக்கம் இஸ்லாம் முழக்கம், றமளான் மாசமே, றமளான் ஸலவாத், ஜர்மன் வெள்ளிப் பாட்டு (இது சாய்ந்தமருதூர் உ.இ.ப.கி. காஸிம்பாவா புலவர் பாடிய பாடல். ஆலிம் புலவரவர்கள் பதிப்பித்தது), ஞான ஒப்பாரி (இது அட்டாளைச்சேனை மு.மு.அப்துர் ரஹ்மான் புலவர் அந்தாதி வடிவில் பாடியது. புலவரவர்கள் பதிப்பித்தது) ஆகிய எட்டு பாடல்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

### 6454

**அருவி: கவிதைத் தொகுப்பு.** பொன். குலேந்திரன். கனடா: குவியம் வெளியீடு, டொரன்ரோ, 1வது பதிப்பு, பெப்ரவரி 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).
v, 104 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x13 சமீ.

இக்கவிஞர் கனடாவிலிருந்து வெளியாகும் குவியம் இணையத்தள மாதாந்த சஞ்சிகையின் ஆசிரியராவார். இதிலுள்ள 35 கவிதைகளும் இயற்கை, சமூகம், அரசியல் ஆகிய மூன்று பிரிவுகளின்கீழ் தொகுக்கப்பட்டுள்ளன. எளிய தமிழில், நகைச்சுவையுடன் இவை படைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 615048).

### 6455

**அழகான இருட்டு: கவிதைத் தொகுப்பு.** எம்.ஐ.எம்.சுபைர். மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2005. (கொழும்பு: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44 புகையிரதநிலைய வீதி, தெகிவளை).
79 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18x12.5 சமீ., ISBN: 955-8715-29-8.

1980களிலிருந்து மரபுக்கவிதை மற்றும் புதுக்கவிதைப் பாணிகளில் கவிதைகளையும், சிறுகதைகளையும், நகைச்சுவை சித்திரங்களையும் எழுதிவரும் காத்தான்குடியைச் சேர்ந்த எம்.ஐ.எம்.சுபைரின் புதுக்கவிதைகளின் தொகுப்பு. மரபுக்கவிதைகளில் தன் ஆளுமையைப் பொறித்த இவரது திறன் இந்த வசன கவிதைகளிலும் வெளிக்காட்டப்பட்டுள்ளது. எஸ்.டி.சிவநாயகத்தின் தினபதி-சிந்தாமணி இலக்கியப்பண்ணையில் வளர்ந்தவர் சுபைர். இந்நூல் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 30ஆவது வெளியீடு. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 615249).

### 6456

**அறியப்படாத மூங்கில்சோலை.** சாருமதி (இயற்பெயர்: கந்தசாமி யோகநாதன்). ஹற்றன்: நந்தலாலா, 133, 1/1 திம்புல்ல வீதி, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம், U G 50, பீப்பிள்ஸ் பார்க்).
xxiv, 241 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22.5 x15 சமீ., ISBN: 978-955-9252-01-6.

யாழ்ப்பாணம், கைதடியைப் பிறப்பிடமாகக்கொண்ட அமரர் கந்தசாமி யோகநாதன் (சாருமதி) எழுதிய கவிதைகளின் தொகுப்பு இது. 26.10.1947இல் பிறந்து 28.09.1998இல் மரணித்த இக்கவிஞர், கம்யூனிஸ்ட் கார்த்திகேயனால் அடையாளம் காணப்பட்டவர். தன் 15ஆவது வயதில் மட்டக்களப்புக்கு பெற்றோருடன் இடம்பெயர்ந்த இவரது அரசியல் செயற்பாடுகள் நா.சண்முகதாசனின் கம்யுனிச இயக்க அணியினரோடு இணைந்திருந்தது. அக்காலங்கள் முதலாக இவர் எழுதிய கவிதைகளில் தேர்ந்த 100 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**6457**

**அன்பழைப்பு.** தாமரைத்தீவான். (இயற்பெயர்: சோ.இராசேந்திரம்). திருக்கோணமலை: சுருதி வெளியீடு, 25/4 இலிங்க நகர், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2009. (திருக்கோணமலை: அஸ்ட்ரா பதிப்பகம்).
42 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 19.5x14.5 சமீ.

கிண்ணியா, ஈச்சந்தீவை வாழ்விடமாகக் கொண்ட தாமரைத்தீவான் எழுதிய 14ஆவது நூலாக இக்கவிதை இலக்கியம் வெளிவந்துள்ளது. நடைமுறையிலுள்ள அ்.றிணைக்குரிய "கள்"விகுதி உயர்திணையில் வராதபடி எழுதப்பட்ட மரபுக்கவிதை நூல் இதுவென்ற குறிப்பும் காணப்படுகின்றது. இந்நூலில் அவ்வாறான 32 மரபுக்கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

**6458**

**அன்னய் திரேசா: கவிதய்கள்.** எம்.ராமச்சந்ரன். கண்டி: M.Ramachandran, 2/1 Riverdale Junction, Anniewatte, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).
viii, 72 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x12.5 சமீ.

நூலாசிரியர் ஆர்.முத்துக்கருப்பன் என்றும் அறியப்பட்டவர். தமிழ்ச் சொற்களை மாற்றுவழிகளில் பயன்படுத்தி இலக்கியம் படைக்கும் இவர் ஐ என்ற எழுத்தை **அய்** என்று எழுதுவதை தலைப்பிலும் அவதானிக்கலாம். ஏற்கெனவே 32 சிறு நூல்களை வெளியிட்டுள்ள இவரது 33ஆவது பிரசுரம் இது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 616343).

**6459**

**ஆக்கிரமிப்பின் கால்தடம்.** எல்.வஸீம் அக்ரம். அனுராதபுரம்: படிகள் பதிப்பகம், 519/G 16, ஜயந்தி மாவத்தை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2009. (அச்சிட்ட ஊர் விபரம் தரப்படவில்லை: ஈசி பிரின்ட்).
40 பக்கம், விலை: ரூபா 110., அளவு:17.5x13.5 சமீ., ISBN: 978-955-50697-1-7.

வஸீம் அக்ரம் அனுராதபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். இவரது கவிதைகள் பலராலும் சிலாகித்துப் பேசப்படுகின்றன. சமூகக் கொடுமைகளை எதிர்த்துப் போராடும் போர்க்குணம் கொண்ட கவிஞராக இலக்கிய உலகில் இவர் சித்திரிக்கப்படுபவர். இவரது கவிதைகள் கொடுமைக்கும் எதேச்சதிகாரத்திற்கும் எதிராகக் குரல் கொடுக்கின்றன. அச்சம், வெறுப்பு, பச்சாதாபம், அழுகை, காதல் என்பன கவிதைகளில் வெளிப்படுகின்றன. சில கவிதைகள் சமூக ஏற்றத்தாழ்வையும் அநீதிகளையும் பேசுகின்றன.

**6460**

**ஆனந்தத் தேன்.** க.சச்சிதானந்தன். பருத்தித்துறை: க.சச்சிதானந்தன், 1வது பதிப்பு, ஜனவரி 1954. (Madras: Kabeer Printing Works).
viii, 72 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 1.00, அளவு: 18x12 சமீ.

தமிழ்ப் பற்றுக் கவிதைகள் நிறைந்த கவிதைத் தொகுப்பு. பண்டிதர் க.சச்சிதானந்தன் 1921இல் காங்கேசன்துறையில் பிறந்தவர். லண்டன் பல்கலைக்கழகத்தின் முதுகலைமாணிப்பட்டம் பெற்றவர். பலாலி ஆசிரியர் கலாசாலையில் உளவியல் விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் ஒரு மதுரைப் பண்டிதருமாவார். மகாவித்துவான் க.சு.நவநீதகிருஷ்ண பாரதியாரிடம் முறையாகத் தமிழ்கற்றவர். இவரது முதலாவது கவிதைத் தொகுதி இதுவாகும். 24 கவிதைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. இந்நூலுக்கான அணிந்துரையையும் க.சு.நவநீதகிருஷ்ண பாரதியார் வழங்கியுள்ளார். பின்னாளில்

*யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் இவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக்கௌரவித்துள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 98059).*

**6461**

**இடி விழுந்த வம்மி: கவிதைத் தொகுதி.** *அபார். கல்முனை 05:* Affar, *143, சாஹிப் வீதி, 1வது பதிப்பு, வைகாசி 2009. (கல்முனை: அந்-நூர் ஓ.ஃப்செட் பிரின்டர்ஸ், 51, அலியார் வீதி).*
*(2),*xii, *48 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20*x*14.5 சமீ.,* ISBN: *978-955-50921-0-4.*

*அங்கதச் சுவையுடன்கூடிய 28 கவிதைகள் இத்தொகுப்பில் உண்டு. நையாண்டி உணர்வும், அகல்கின்ற பகலுக்குள் சேமிக்கப்படுகின்ற அனுபவங்கள், சுகங்கள் என்பதை புரியும் மொழியில் தான் சார்ந்த கிராமிய மணத்துடன் சொல்லும் உத்தியினால், அபாரின் கவிதைகள் தனித்துவம் பெறுகின்றன.*

**6462**

**இதயப் பூக்கள்: கவிதைத்தொகுதி.** *செ.குணரத்தினம். (புனைபெயர்: அமிர்தகழியான்). திருக்கோணமலை: கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, 1வது பதிப்பு, டிசம்பர் 1995. (திருக்கோணமலை: வடக்கு-கிழக்கு மாகாண பதிப்பகத் திணைக்களம், அன்பு ஒழுங்கை, உப்புவெளி).*
vii, *88 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 17.5*x*14 சமீ.*

*ஆசிரியரின் 55 கவிதைகளை உள்ளடக்கிய கவிதைத் தொகுப்பு. நெஞ்சில் ஒரு மலர் என்ற தலைப்பில்  முதல் கவிதை நூலை வெளியிட்ட இவரது கவிதைப் படைப்புக்கள் பின்னர் தியாக தீபம், ஏழை நிலா ஆகிய தலைப்புகளிலும் வெளிவந்தன. இது இவரது நான்காவது கவிதைத் தொகுப்பாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 517800).*

**6463**

**இரணிய சம்ஹார அம்மானை.** *மாறன் விதானை (மூலம்) க.தா.செல்வராஜகோபால் (பதிப்பாசிரியர்). களுவாஞ்சிக்குடி: ஜீவா பதிப்பகம், பிரதான வீதி, தோற்றாதீவு, 1வது பதிப்பு, டிசம்பர் 1966. (களுவாஞ்சிக்குடி: மனோகரா அச்சகம், பிரதான வீதி, தோற்றாத்தீவு).*
xvii, *52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18*x*14.5 சமீ.*

*100 ஆண்டுகளுக்கு முன்னதாக, கிழக்கிலங்கை, செட்டிபாளையம் என்ற இடத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படும் வரகவி மாறன் விதானையார் இயற்றிய அம்மானைப்பாடல் இதுவாகும். கலியுக சகாப்தம் 5027 துந்துபி (1922) வருடம் தைப்பூசத்தன்று எழுதி முடித்தது என ஏட்டில் காணப்படுகின்றது. ஏட்டுப் பிரதிகளிலிருந்து கடும்பிரயத்தனத்தின் மத்தியில் அழிவுநிலையிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட 19ம் நூற்றாண்டின் கிழக்கின் அரிய கிராமிய இலக்கியம் இதுவாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275536).*

**6464**

**இரு குருவிகள்.** *எம்.எம்.காசிம் ஜீ. கல்முனை: கரவாகு வெளியீட்டுப் பணியகம், 120 ஹனிபா வீதி, அஜ்மீர் பிளேஸ், 1வது பதிப்பு, 2003. (கல்முனை: அந்நூர் கிராபிக்ஸ் ஓப்செட்).*
*(4), 116 பக்கம், விலை: ரூபா 150, அளவு: 21.5*x*18 சமீ.*

*ஆசிரியரின் பல்சுவைக் கிராமிய இலக்கியப் பாடல் படைப்புகளின் தொகுப்பு. இரு குருவிகள், நானாவிதக் கவிகள், முந்திரியம்பழம், கிட்டி விளையாட்டு, பிரிக்கப்பட்ட காதலர்க்கு இயற்கை ஏதுக்களே தூது, மடகொழும்ப, கலியாணப்பேச்சு, பொன்னாச்சிகுடியும் தொழும்பர் வந்த கதையும் ஆகிய எட்டு தலைப்புகளில் இவை வகைப்படுத்தித் தரப்பட்டுள்ளன. இருகுருவிகள்- கவிதைகளுடன் இணைந்த சுவையான காதல் கதை. நானாவிதக் கவிகள்- இதில் ஆசிரியரால் சேகரிக்கப்பட்ட நானாவித அகச்சுவைக் கவிதைகள் 200க்கும் அதிகமாகத் தரப்பட்டுள்ளன. முந்திரியம்பழம்- என்ற பகுதியில் மருதமுனைக் கிராம மக்களின் பேச்சுமொழியில் பாடப்பட்ட கிராமியக் கவிதைகள் உள்ளன. கிட்டி விளையாட்டு- இப்பாடல் கிட்டி விளையாட்டில் வெற்றியடைந்தவர்கள் பாட்டம்*

அடித்தோட, தோற்றவர்கள் பாடிக்கொண்டோடும் பாட்டுகளில் ஒன்றாகும். பிரிக்கப்பட்ட காதலர்க்கு இயற்கை ஏதுக்களே தூது- என்ற தலைப்பிலான கவிதை பிரிக்கப்பட்ட தலைவன்-தலைவி இருவரும் ஏங்கிப்பாடும் பாடல்களைக் கொண்டதாக உள்ளது. மடகொழும்ப - சாய்ந்த மருதைச் சேர்ந்த இளம் விவசாயி, மட்டக்களப்பு தரவையைச் சேர்ந்த பெண்ணுடன் மேற்கொள்ளும் அகச்சுவை உரையாடல். கலியாணப்பேச்சு- சம்மாந்துறையைச் சேர்ந்த வேளாண்மைக்காரனுக்கும் கரவாகுவைச் சேர்ந்த துவையல்காரி ஒருத்திக்கும் இடையே மேற்கொள்ளப்படும் திருமணப்பேச்சு சம்பந்தமான உரையாடலாக அமையும் பாடல்கள் அமைகின்றன. பொன்னாச்சிகுடியும் தொழும்பர் வந்த கதையும்- கரவாகு பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைத் தரும் 24 பாடல்களைக் கொண்ட தொகுப்பு.

***6465***

***இரு வேறு எ∴குப் பூக்கள்.*** *எம்.பாலகிருஷ்ணன். கண்டி: மக்கள் கலை இலக்கியப் பேரவை,* D.S.Senanayake Road, *1வது பதிப்பு, ஜுலை 1989. (கொழும்பு 12: குமரன் பிரஸ்).*
*(8), 33 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 18x12.5 சமீ.*

மக்கள் கலை இலக்கியப் பேரவையின் முதலாவது வெளியீடாக இக்கவிதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. மக்களின் மரணச் சோகங்களையும், நீதிக்கெதிரான யுத்த தாக்குதல்களையும், பாலகிருஷ்ணனின் பேனா அடையாளம்கண்டு தருகின்றது. காதல், வறுமை, சமூகச் சிக்கல்கள் என்று பல்வேறு தளங்களில் இவரது கவிதைகள் பயணிக்கின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 447517).

***6466***

***இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் வேதனையும் சோதனையும் சாதனையும்: 1948-2005.*** *நல்லையா சண்முகப்பிரபு (தொகுப்பாசிரியர்). இணுவில்: திருவூர் ஒன்றியம், இணை வெளியீட்டாளர், நோர்வே: சர்வதேசத் தமிழர்,* Lyngveien-3B, 3041, Drammen, *1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கனடா:* Graphic Land, 285 Progress Avenue, Unit 8, Scarborough, Ontario M1P 2Z3*).*
*60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x19 சமீ.*

நோர்வேயிலிருந்து வெளிவந்த சர்வதேச தமிழர் என்ற பத்திரிகையின் சார்பில் அறிமுகப்படுத்தப்பட்ட சர்வதேச தமிழர் கவிதைப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட கவிதைகளின் தொகுப்பு இதுவாகும். இலங்கையிலிருந்து 18 கவிஞர்களும், இந்தியாவிலிருந்து இரு கவிஞரும் நோர்வேயிலிருந்து தொகுப்பாசிரியரும் இத்தொகுதியிலுள்ள 21 கவிதைகளையும் எழுதியுள்ளனர். நோர்வேயில் புலம்பெயர்ந்து வாழும் என்.எஸ்.பிரபு, நோர்வே பிரபு என்று அறியப்படும் நல்லையா சண்முகப்பிரபு இணுவிலைச் சேர்ந்தவர். சர்வதேச தமிழர் இதழின் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

***6467***

***இலந்தைப் பழத்துப் புழுக்கள்.*** *நீலாபாலன் (இயற்பெயர்: என்.பூபாலரத்தினம்). கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, இல.25, அவ்வல் சாவியா வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2010. (*Colombo 13: Design Lab, 190, George R.D.Silva Mawathe*).*
x, *78 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 22 x14.5 சமீ.,* ISBN: *978-955-0195-04-6.*

மானிடத்தின் அசைவையும், மனிதத்தின் இயல்பையும் ஒரு படப்பிடிப்பாளனது நிதானத்தோடும், மொழியியல் வித்துவத்தோடும் இந்நூலில் கவிதைகளாக்கியுள்ளார். கல்முனைப் பூபால் என்ற புனைபெயரில் எழுதத் தொடங்கிய இக்கவிஞர் மலையகப் பெருந்தோட்டத் தொடர்புகளால் நீலாபாலனாகப் பெயர்மாற்றிக்கொண்டவர். வெலிமட Hadawula தோட்டத்தில் பிரதம எழுதுவினைஞராகப் பணியாற்றுகின்றார்.

***6468***

***ஈழத்துப் பாரதியார் கவிதைகள்: முதற் பாகம்.*** *மு.வ.புவனேந்திரராசா. வவுனியா: விபுலாநந்தர் வெளியீடு, கல்லுமலைச் சந்தி, சூசைப்பிள்ளையார் குளம், 1வது பதிப்பு, மே 1970. (யாழ்ப்பாணம்: விவேகானந்தா அச்சகம்).*

xiv, *88 பக்கம், விலை: ரூபா 1.90., அளவு: 18.5x12.5 சமீ.*

*சுப்பிரமணிய பாரதியாரைத் தன் மானசீக குருவாக ஏற்றுக்கொண்டு சிறுவயதிலேயே கவிதை வடித்தவர் இந்நூலாசிரியர். ஈழத்துப் பாரதியார் என்ற அடைமொழியும் இவருக்குண்டு. இக்கவிதைத் தொகுப்பில் சுயசரிதை, இறைவன், சுதந்திரம், உணர்ச்சி, தமிழ், அன்பு, காதல், சோகம், பெண்மை, தொழில், வாழ்வு, குடும்பம் ஆகிய 12 தலைப்புகளின்கீழ் பிரிக்கப்பட்டு இவர் எழுதிய கவிதைகள் தொகுக்கப்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275695).*

***6469***

***உடைந்த நினைவுகள்.*** *சமரபாகு சீனா உதயகுமார். பருத்தித்துறை: மதுரா வெளியீடு, அல்வாய் வட-மேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, சித்திரை 2009. (பருத்தித்துறை: மதுரன் கிராப்பிக்ஸ் ஓப்செட் பிரின்டர்ஸ், அல்வாய்).*
vi, *160 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x10 சமீ.*

*பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பணியாற்றும் சீனா உதயகுமாரின் கவிதைத் தொகுப்பு. இந்நூலில் கடித அமைப்பிலான புதிய உத்தியைப் பயன்படுத்தி எழுதப்பட்ட நெஞ்சுக்குள் நீ என்ற நெடுங்கவிதையும், காதலின் கனதி பற்றிப்பாடும் அழகிய தீ என்ற நீண்ட காதல் கவிதையும் இடம்பெற்றுள்ளன. இரு கவிதைகளும் வெற்றிபெறாத காதலைப்பாடுகின்றன. காதலுடன் மட்டும் நின்றுவிடாது, சமூக மாற்றம், மனிதப் பண்பு, மண் பற்று, வீரம் எனப் பல்பொருள் தாங்கிய விருந்தாக இத்தொகுதி அமைந்துள்ளது.*

***6470***

***உணர்வுக் கோலம்: கவிதைத் தொகுதி.*** *க.கணேசலிங்கம். சென்னை 600090: யோகேஸ்வரி கணேசலிங்கம், 9/2, பீச் ஹோம் அவென்யூ, பெசன்ட் நகர், 1வது பதிப்பு, ஏப்ரல் 1997. (சென்னை 600005: மாசறு* D.T.P., *75 திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, திருவல்லிக்கேணி).*
*160 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18x12 சமீ.*

*அழகின் அலைகள், வாழ்வுப்பாதை, தமிழ்-தமிழர், சிந்தனையும் வந்தனையும், பல்வகை ஆகிய ஐந்து பிரிவுகளுக்குள் அடங்கும் 79 கவிதைகளை இத்தொகுப்பு கொண்டுள்ளது. ஈழப் போராட்டத்தின் விளைவாக ஏற்பட்ட துன்பங்களின் பாதிப்பில் எழுந்த பல கவிதைகளை இவற்றில் இனம்காணலாம். இவரது கவிதைகள் சிறந்த சொல்லாட்சியாலும் புதிய கற்பனைகளாலும், காலத்திற்கேற்ற கருத்தோட்டங்களாலும் உயிரோட்டம்பெற்று இலக்கியப் பொலிவோடு விளங்குகின்றன. யாழ்ப்பாணம் குப்பிழானைச் சேர்ந்த கவிஞர் சித்தாந்தரத்தினம் க.கணேசலிங்கம், ஒரு பொறியியலாளராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 520123).*

***6471***

***உய்யும் வழி.*** வி.கந்தவனம். *யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, பங்குனி 1972. (கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு).*
*68 பக்கம், விலை: 2.00, அளவு: 18x12 சமீ.*

*கவிஞர் விநாயகர் கந்தவனத்தின் அரங்கக் கவிதைகளின் தொகுப்பு. எல்லாக் கவிதைகளிலும் எழிலுற மிளிருவது "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்" என்ற தமிழ் நெறியேயாகும். பாரதியைப் போல "பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலிக்க" கவிஞர் எண்ணுகின்றார் என்று இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய இர.சிவலிங்கம் குறிப்பிடுகின்றார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 300832).*

***6472***

***உள்மை: கவிதைகள்.*** எழில். *கொழும்பு 4: அருட்பணி செ.மரிய அந்தோணி, இயேசுசபை மாநில முதல்வர், 31, கிளிபட் பிளேஸ், 1வது பதிப்பு, ஜனவரி 2006. (சென்னை: அச்சக விபரம் தரப்படவில்லை).*

xiv, *113 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5*x*14 சமீ.*

*நூலாசிரியர் ஒரு இயேசு சபை இளந்துறவி, இலங்கை இயேசு சபை மறை மாநிலத்தைச் சேர்ந்தவர். பொருளியல் துறையில் இளங்கலைப் பட்டப்படிப்பை சென்னை இலயோலாக் கல்லூரியில் பயின்று வருபவர். இலக்கியம், கவிதை எழுதுவதில் திறமையும் படைத்தவர். தான் தாயகத்தில் அனுபவித்த பல கொடுமைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டவர். அவரது உள்ளத்தின் ஆழத்தில் ஆறாத காயங்களை ஏற்படுத்திய நிகழ்வுகள் மற்றும் அனுபவங்களின் வெளிப்பாடாக இப்பதிவேடு பிறந்திருக்கிறது.*

***6473***

***உள்ளக் கிடக்கைகள்.*** *புவிலக்ஷி. மட்டக்களப்பு: புவிலக்ஷி, 1வது பதிப்பு, 2009. (மட்டக்களப்பு: வணசிங்கா அச்சகம், 126/1 திருமலை வீதி).*
*32 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21*x*15 சமீ.*

*திருக்கோணமலையிலிருந்து வெளிவரும் நீங்களும் எழுதலாம் கவிதையிதழினூடாக இலக்கியத்துறைக்குள் நுழைந்தவர் புவிலக்ஷி. அவர் எழுதிய 23 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

***6474***

***உன் நினைவுதிரா வசந்தம்.*** *எம்.பாலகிருஷ்ணன். கண்டி: மக்கள் கலை இலக்கியப் பேரவை,* 72/1, Mapanawatura Circular Road, Pooranawathe, *1வது பதிப்பு, ஓகஸ்ட் 1990. (கொழும்பு 12: சீ.வீ.ஆர். பிரின்டர்ஸ், குணசிங்கபுர தொடர்மாடி).*
*36 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 21.5*x*14 சமீ.*

*ஏற்கெனவே இரு கவிதை நூல்களை வெளியிட்டுள்ள பாலகிருஷ்ணனின் மூன்றாவது கவிதைத் தொகுப்பு இது. 19 கவிதைகளை உள்ளடக்கியுள்ளன. சமூக நீதிக்கும் சமத்துவ சமுதாயத்துக்குமான இவரது கவிதைகள் தேசியத்தைக் கடந்து சர்வதேசியத்தைத் தொடுகின்றன. சோசலிசம் என்ற போர்வையிலும் முற்போக்கு என்ற முத்திரையிலும் சுயலாபமடைய முயல்வோரை இவரது கவிதைகள் சாடுகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 447518).*

***6475***

***ஊமைக் காயங்கள்.*** *மூதூர் இ.நளீம். மூதூர் 5: மூதூர் கலை இலக்கிய ஒன்றியம், நொக்ஸ் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2007. (மூதூர் 5:* SASNAS (Rifan), *அரபிக் கல்லூரி வீதி).*
*(2), 40 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 21*x*14 சமீ.*

*மண்ணின் காயங்களைப் படம்பிடித்துக் காட்டும் கவிதைகள் கொண்ட தொகுப்பு. இனத்தீயில் பொசுங்கிப்போயுள்ள இலங்கையிலே சமாதான தீபங்கள் ஏற்றப்படவேண்டும் என்ற நூலாசிரியரின் கருத்து இரு தசாப்த யுத்தம் என்ற தலைப்பிலான கவிதையில் இடம்பெற்றுள்ளது. வாசனையற்ற மலர்கள் என்ற கவிதையில் சமூகம் சார்ந்த சீர்திருத்த உணர்வை வெளிப்படுத்தி நிற்கின்றார். மேலும் பல கவிதைகள் மனிதநேயம் பற்றிப் பேசுகின்றன. கவிஞர் நளீம், மூதூர் நடுத்தீவைச் சேர்ந்தவர். இவரது முதலாவது கவிதைத் தொகுதி இதுவாகும். மூதூர் கலை இலக்கிய ஒன்றியம், 1975இல் தாபிக்கப்பட்டது. இதுவரை முத்து (1976), பிட்டும் தேங்காய்ப் பூவும் (1998), கொட்டியாரக் கதைகள் (1999), கொட்டியாபுரப் பற்று வரலாறு (2002), இழந்துவிட்ட இன்பங்கள் (2003), ஆசிரியர் பணியை அழகுறச் செய்வோம் (2006) ஆகிய நூல்களையும். ஓசை- கவிதைச் சிற்றிதழையும் வெளியிட்டுள்ளது.*

***6476***

***எண்ணக் கோலம் (கவிதைத் தொகுதி).*** *க.கணேசலிங்கம். யாழ்ப்பாணம்: க.கணேசலிங்கம், 3, சிறாம்பியடி ஒழுங்கை, 1வது பதிப்பு, ஐப்பசி 1974. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63, பீ.ஏ.தம்பி ஒழுங்கை).*
xix, *72 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18*x*12.5சமீ.*

*மின் பொறியியலாளரான குப்பிளான் க.கணேசலிங்கத்தின் இத்தொகுதியிலுள்ள 36 கவிதைகளும் பிரார்த்தனை (1-5), சமூகம் (6-11), இயற்கை (12-18), காதல் (19-25), பல்வகை (26-36) ஆகிய ஐந்து பிரிவுகளுக்குள் வகுத்துத் தரப்பட்டுள்ளன. கவிஞரது ஊர்ப்பற்றும், தமிழ்க் காதலும், சமூகக் கொடுமைகளைக் கண்டு துடிக்கும் உளப்பாங்கும், பெரியோரிடத்துக்கொண்ட பெருமதிப்பும், இயற்கை எழிலின் நுகர்ச்சியும், காதல் உணர்வின் மாட்சியும், ஆங்கில மொழிக் கவிதைகளிலுள்ள ஈடுபாடும் இப்பாடல்களின் நிலைக்களன்களாக விளங்குகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 308568).*

***6477***

***எழுதுகோலும் என் வெள்ளைத் தாளும்.*** *ஷல்மானுல் ஹரீஸ். வாழைச்சேனை: புதிய தொனி, இளங்கலை இலக்கியப்பேரவை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2001. (மட்டக்களப்பு: ஈஸ்டர்ன் கிராப்பிக்ஸ்).*

xvi, *76 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 19x13சமீ.*

*கிழக்கிலங்கையின் வாழைச்சேனையைப் பிறப்பிடமாகக்கொண்ட இக்கவிஞர் வாழைச்சேனை அந்நூர் தேசிய கல்லூரியின் பழைய மாணவர். வாசகர்களோடு சிநேகபூர்வமான உரையாடல்களாக இவரது கவிதைகள் அமைகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 576138).*

***6478***

***என் தமிழ்த் தாய்க்கு முதல்முத்தம்.*** *தேன்மொழியான் (இயற்பெயர்: சு.சுரேஷ்குமார்). சென்னை 600078: அருவி வெளியீடு, 5D, பொன்னம்மாள் சாலை, கே.கே.நகர், 1வது பதிப்பு, மார்ச் 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*79 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

*தாய்நாட்டின் ஏக்கப் பெருமூச்சாய் சுடும் கவிதைகள் இவை. இக்கவிஞனின் கவிதைகளும் அவன் வாழும் சமூகத்தினதும் அவனைச் சூழ உள்ள சமூகத்தினதும் பிரதிபலிப்பாக அமைகின்றன.*

***6479***

***என் மன வானில் (கவிதைகள்).*** *க.யோகானந்தன். திருக்கோணமலை: நர்த்தனா வெளியீட்டகம், 101/8, கந்தசுவாமி கோவில் வீதி, 1வது பதிப்பு, மார்கழி 2009. (திருக்கோணமலை: அஸ்ட்ரா பிரிண்டர்ஸ்).*

*71 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.,* ISBN: *978-955-0328-00-0.*

*சம்பூர் மண்ணில் பிறந்து, திருக்கோணமலை, சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபராகப் பணியாற்றும் கனகசூரியம் யோகானந்தனின் இக்கவிதைத் தொகுப்பு இவரது மூன்றாவது நூலாகும். இதில் 36 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.*

***6480***

***என்னுடைய ஏக்கங்கள்.*** *தெருத்தூசியோன் (இயற்பெயர்: ராஜசிங்கம் சார்ள்ஸ் ராஜ்குமார்). கொழும்பு 6: ராஜசிங்கம் சார்ள்ஸ் ராஜ்குமார், 29,* Fedrica Road, *1வது பதிப்பு, 2000. (கொழும்பு 12: லீலா அச்சகம், 182, மெசெஞ்சர் வீதி).*

*63 பக்கம், விலை: ரூபா 130., அளவு: 22x14 சமீ.*

*கண்பார்வையற்றவரான இந்நூலாசிரியர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலைத்துறைப் பட்டதாரியாவார். ஆளுநர் செயலகத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரிகின்றார். இக்கவிதைகளிலும் சமூகம் நோக்கிய அவரது வித்தியாசமான பார்வைப் பதிவுகள் உள்ளத்தை நெருடுவதாயும், சிந்திக்கத் தூண்டுவதாயும் அமைகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 534961).*

***6481***

**என்னுள் உறைந்தாய்.** தேவி. ஜேர்மனி: தேவி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (காரைக்குடி: அண்ணா அச்சகம்).
(14), 44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 12.5x18.5 சமீ.

ஜேர்மனியில் புலம்பெயர்ந்து வாழும் கவிஞர் தேவியின் கவிதைத் தொகுப்பு. லண்டன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வாயிலாக வானலையில் வெளிவந்த கவிதைகள் இவை. இந்நூலுக்கான அணிந்துரையினை கவிஞர் வைரமுத்துவும், வாழ்த்துரைகளை கவிஞர் பா.விஜய், மதன் ஆகியோரும் வழங்கியுள்ளனர்.

**6482**
**ஏ.இக்பால் கவிதைகள் 100.** ஏ.இக்பால். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, யுஜீ 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை).
xvi, 124 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1857-55-4.

இந்நூல் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. கவிஞர் ஜனாப் ஏ.இக்பாலின் கவிதைகளில் உணர்வைவிட சிந்தனைக் கனதி முனைப்பாக உள்ளதை அவதானிக்கமுடிகின்றது. இத்தொகுதியில் கவிஞர் இக்பால் எழுதி ஈழத்து ஊடகங்களில் 1963 முதல் 2005 வரை வெளியான கவிதைகளில் தேர்ந்த 100 கவிதைகள் மட்டும் இடம்பெற்றுள்ளன. இக்காலகட்டத்தின் ஈழத்து இலக்கியப்போக்கையும், கவிதை வளர்ச்சியையும் இந்நூலின் வாயிலாகக் காணமுடிகின்றது.

**6483**
**ஏன் இந்த மௌனம் (கவிதைத் தொகுதி).** கலாநெஞ்சன் ஷாஜஹான். நீர்கொழும்பு: ஆசிரியர், 48, 1/1, பள்ளன்சேனை வீதி, தளுப்பொத்த, 1வது பதிப்பு, நவம்பர் 1999. (நீர்கொழும்பு: Print-N, தளுப்பொத்த).
80 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 18.5x13 சமீ.

கொடுமைகளையும் அநீதிகளையும் கண்டு வெகுண்டெழுந்து தர்மாவேசம் கொள்ளும் இக்கவிஞனின் கவிதாவரிகளில் ஆயுதக்கலாசாரம் அமைதிக்கு வேட்டுவைத்து மானுடத்தை அழித்துக்கொண்டிருக்கும் வேளையில் ஒரு சமூகத்தின்மீது அவருக்கிருக்கும் தார்மீகக் கோபம் புலப்படுகின்றது. அடிப்படை மனித உரிமை, அமைதி வாழ்வு-சமாதானம், மனித நேயம், பாஸிசத்திற்கு எதிரான குரல், நிகழ்ந்த தவறுகள், தேர்தல் கேளிக்கை, சுரண்டல், பொருளாதாரம், நாகரீகம், காதல், கிரிக்கெட் என்று பல துறைகளையும் தன் கவிதைகளுக்குள் கொண்டுவருகின்றார்.

**6484**
**ஒரு கூட்டில் இரு பறவைகள்.** அட்டாளை நஷி (இயற்பெயர்: தஸ்லிம் ஷியாத்), பொத்துவில் தாஜஹான் (இயற்பெயர்: எம்.ஏ.தாஜஹான்). ஒலுவில்: தமிழ்ச் சங்கம், பல்கலைக்கழக வளாகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2006. (பொத்துவில்: அபூ ஒப்செற்).
viii, 56 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

பல்கலைக்கழக மாணவர்களான பொத்துவில் தாஜஹான் 1998இலும், அட்டாளைச்சேனை நஷி 2000இலும் இலக்கியத்துறையில் காலடிவைத்தவர்கள். இவர்களின் கவிதைகள் பெரும்பாலும் காதல் உணர்வினையும், ஆங்காங்கே முஸ்லிம் மக்களின் துயரங்களையும், சுனாமி அழிவுகளையும் பற்றிப் பேசுவதாக அமைந்துள்ளன.

**6485**
**ஒரு தோட்டத்து மலர்கள்: ஒன்பது கவிஞர்களின் உன்னதப் பாடல்கள்.** முஹம்மது சாலிஹு ஆலிம் புலவர் (இன்னும் பலர்). சென்னை 600002: ஆலிம் முஹம்மது சாலிஹ் அறக்கட்டளை, 813 அண்ணாசாலை, 1வது பதிப்பு, 1990. (சென்னை 600014: ஸ்ரீ மாருதி லேசர் பிரிண்டர்ஸ், 174 பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை).
iv, 171 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12 சமீ.

இலங்கையில் கிந்தொட்டையில் வாழ்ந்த முஹம்மது ஹுசைன் ஒலியுல்லாஹ் அவர்களின் தம்பி செய்யது முஹம்மது லெப்பை ஆலிம் அவர்களின் பேரனார் மர்ஹூம் செய்கு நூர்தீன் ஆலிம் புலவர் ஆவார். அவர்கள் எழுதிய அரும்பாடல்கள் இங்கு பதிப்புக்குள்ளாகியுள்ளன. அன்னாரின் மகளார் மர்ஹூமா முகம்மது பாத்திமா அவர்கள் எழுதிய பாக்களும், அன்னாரின் இளைய மகனார் மர்ஹூம் முஹம்மது சாலிஹு ஆலிம் புலவர் எழுதிய அரபுப் பாடல்களும், அருந்தமிழ் வேண்டற்பாக்களும் இங்கு காணப்படுகின்றன. மொத்தத்தில் ஆலிம் புலவர் பரம்பரையின் வழிவந்த ஒன்பதின்மரின் பாடல்கள் இத்தொகுப்பில் உள்ளன.

***6486***

***ஓ பாலஸ்தீனமே: நஜி அல் அலியும் ஹன்சல்லாவும்.*** *கலைவாதி கலீல். மன்னார்:* Mannar Study Circle, 3, Moor Street, Mannar, *1வது பதிப்பு, நவம்பர் 1999. (பாணந்துறை: நியு சிட்டி பிரின்டர்ஸ், சரிக்காமுல்ல).*
*68 பக்கம், கோட்டுச் சித்திரங்கள், விலை: ரூபா 75., அளவு: 18x13 சமீ.*

*நஜீ அல் அலி என்ற பாலஸ்தீன அரசியல் கருத்தோவியரின் (*cartoonist*) அங்கதக் கருத்தோவியங்களுக்கு உரியமுறையில் கவிதையுருவில் கருத்துக்களை சர்தார் என்ற புனைபெயரில் கலைவாதி கலீல் இயற்றி, பாமிஸ் மாசிகையில் (*Famys Monthly*) தொடராகப் பிரசுரித்து வந்தார். அச்சஞ்சிகை இடைநடுவில் தடைப்பட்டதால், அக்கருத்தோவியங்களும் கவிதைகளும் நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளன. அரபுலகில் அறியப்பட்ட கூடார்த்த சித்திரக்காரரான (*Carricaturist*) நஜி-அல்-அலி இஸ்ரேலுக்கும் பலஸ்தீன விரோதப் போக்கைக் கடைப்பிடிக்கும் அரபு ஆட்சியாளர்களுக்கும் எதிரான காரணத்தால் இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டவர் இவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 534851).*

***6487***

***கட்டாந்தரை.*** *கனிவுமதி. (இயற்பெயர்: சி.எஸ்.புஷ்பராஜா). கொழும்பு 15: கனிதா, 15, சாவியா ஒழுங்கை, மட்டக்குளிய, 1வது பதிப்பு, ஜனவரி 2006. (கொழும்பு 2: அரசன் அச்சகம், 30 ஹைட்பார்க் கோனர்).*
*160 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 22x15 சமீ.*

*மலையகக் கவிதைத் தொகுதி. கவிஞர், ஓவியர் என்ற பெயர்வழி கலைத்துவங்களுக்கு உரியவரான கனிவுமதி மலையக மண்ணின் புதிய தலைமுறைப் படைப்பாளிகளுள் ஒருவர். குறிஞ்சி இளந்தென்றல் என்ற புனைபெயரிலும் இவர் அறிமுகமாகியுள்ளார். அப்பெயரில்* ***அப்புறமென்ன*** *என்ற கவிதைத் தொகுப்பையும் இவர் மல்லிகைப்பந்தல் வழியாக வெளியிட்டுள்ளார். மதிபுஷ்பா என்ற புனைபெயரில் ஓவியராகவும் தன்னை இனம்காட்டியவர். நடைமுறை உலகின் நிலைமைகளைக் கவிதைகளாகப் பாடியுள்ளார். மலையக மக்களின் வாழ்நிலையை சொற்சித்திரமாக்கி மானிட உணர்வுகளின் அபத்தங்களைக் களைந்து எள்ளி நகையாடி மானிட நேயத்தை நம்பிக்கை ஒளியாகப் பரவவிட்டுக் காத்திருக்கிறார். இந்நூல் மத்திய மாகாண சாகித்திய விழாவில் 2007ம் ஆண்டுக்குரிய விருதினைப் பெற்றது.*

***6488***

***கடைசி வரிகள்: கவிதைகள்.*** *ஏறாவூர் தாஹிர். (இயற்பெயர்: அஹமட் லெப்பை). ஏறாவூர்: ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம், 1வது பதிப்பு, மே 2008. (கொழும்பு 12:* Comprint System, H.L.1/2 Dias Place*).*
xiv*, 173 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x14 சமீ.,* ISBN*: 978-955-1501-01-3.*

*ஏறாவூர் வரலாறு, விதி வரைந்த கோலங்கள் ஆகிய நூல்வரிசையில், ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையத்தினரால் வெளியிடப்பெற்ற மூன்றாவது நூல் இதுவாகும். ஏறாவூர் மண் வளர்த்த கவிஞர் அஹமட் லெப்பையின் கவிதைகளின் தேர்ந்த தொகுப்பாக இது அமைகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 623737).*

***6489***

**கண்ணகி வெண்பா.** கு.முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை. சுன்னாகம்: புலவரகம், மயிலணி, 1வது பதிப்பு, 1971. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).
(2), 14 பக்கம், விலை: சதம் 40., அளவு: 18x12.5 சமீ.

கண்ணகி வரலாறு பண்டைக்காலச் சங்க நூல்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரம், என்னும் சிறந்த நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வரலாற்றின் முக்கிய அம்சங்களை மாத்திரம் உள்ளடக்கியதாக இந்நூலில் 60 செய்யுட்களில் (நேரிசை வெண்பா) கண்ணகியின் வரலாறு வெண்பா யாப்பினிற் கூறப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 300860).

6490
**கரவை வேலன் கோவை.** சின்னத்தம்பிப் புலவர் (மூலம்), தி.சதாசிவ ஐயர் (அரும்பத உரை). யாழ்ப்பாணம்: தி.சதாசிவ ஐயர், காரியதரிசி, ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1935. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).
xii, 98 பக்கம், விலை: சதம் 75, அளவு: 21.5x13.5 சமீ.

கரவெட்டி- யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் வழியில் 17ஆவது மைல்கல்லில் உள்ள ஒரு கிராமமாகும். இக்கிராமத்திலுள்ள வேலாயுதபிள்ளை (சேதுநிலையிட்ட மாப்பாண முதலியார் வேலாயுதபிள்ளை) என்பவரைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு பாடப்பெற்ற கோவையே கரவை வேலன் கோவையாகும். இவருக்கு வேலாயுதர், வேலாயுத உடையார், வேலாத்தை உடையார் எனப் பல பெயர்களும் உள்ளன. இக்கோவையின் மூலநூலில் 425 கட்டளைக் கலித்துறைப் பாக்கள் இருந்துள்ளன. அவற்றில் 172 பாக்கள் அழிந்த நிலையில் எஞ்சியவற்றையெனும் காக்கும் நோக்கில் 1932இல் கரவைவேலன் வழித்தோன்றலாகிய கந்தப்புச் சட்டம்பியார் சங்கரப்பிள்ளை என்பவரிடமிருந்து பழுதுற்றிருந்த ஒரேயொரு மூல நூற்பிரதியைவைத்து ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினர் இந்நூலைத் தொகுத்திருந்தனர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27442).

6491
**கவிக் கற்பரசி.** நாவற்குழியூர் நடராசன். யாழ்ப்பாணம்: காந்தளகம், மறவன்புலவு, சாவகச்சேரி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1991. (சென்னை 600002: காந்தளகம், இல.4, முதல் மாடி, ரகிசா கட்டடம், 834 அண்ணா சாலை).
xiv, 144 பக்கம், விலை: இந்திய ரூபா 15., அளவு: 17.5x12.5 சமீ.

நாவற்குழியூர் நடராசன் 1943இல் கவிதை உலகில் பிரவேசித்தவர். முன்னதாக தன் ஆரம்பகாலக்கவிதைகளை சிலம்பொலி என்ற தலைப்பில் நூலுருவாக்கியவர். அக்கவிதைகளுடன் பின்னர் அவர் எழுதி மேடைக்கவியரங்குகளிலும், இலங்கை வானொலியிலும் பல்வேறு சஞ்சிகைகளிலும் களம்கண்ட கவிதைகளும் இத்தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ளன. சந்த இனிமையிலும், மரபு பிறழாத பாட்டமைப்பிலும் ஆங்காங்கே குமிழியிட்ட கருத்து வீச்சுகளாலும் அக்கவிதைகளின் தரம் உயர்ந்ததாகவுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 470364).

6492
**கவிக் குழந்தை: கவிதைத் தொகுதி.** கிச்சிலான் அமதுர் ரஹீம். நீர்கொழும்பு: கிச்சிலான் அமதுர் ரஹீம், 116/10 ஏக்கமுத்து மாவத்தை, சிறைச்சாலை வீதி, தளுப்பொத்த, 1வது பதிப்பு, 2007. (நீர்கொழும்பு: BMIS Communications, இல. 92, ஜும்மா மஸ்ஜித் மாவத்தை, பெரியமுல்லை)
(8), 72 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

நீர்கொழும்பைச் சேர்ந்த பெண் கவிஞர் கிச்சிலான் அமதுர் ரஹீம், ஆசிரியப்பணியில் நீண்டகாலம் ஈடுபட்டவர். தமிழ் மொழி ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றிய வேளையில் வானொலி, தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணியாற்றியவர். பின்னாளில் பாரிசவாதத்தால் பாதிப்புற்றவர். இவரது படைப்பாக்கங்களின் முதலாவது தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.

***6493***

***கவிதை.*** *எம்.ராமச்சந்ரன். கண்டி: எம்.ராமச்சந்ரன்,* 8, Cemetery Road, Mahaiyawa , *1வது பதிப்பு, பெப்ரவரி 1987.(கண்டி: பிராவி அச்சகம், 274, டீ.எஸ்.சேனநாயக்க வீதி).*
*50 பக்கம், விலை: ரூபா 16., அளவு: 18.5x10.5 சமீ.*

*புதுக்கவிதை வளர்ச்சிக்கு ஆதரவுக்குரல் கொடுக்கும் ராமச்சந்ரனின் கவிதைத் தொகுப்பு இது. ஆர்.முத்துக்கருப்பன் என்றும் அறியப்பட்ட இவர், தமிழ்ச் சொற்களை மாற்றுவழிகளில் பயன்படுத்தி இலக்கியம் படைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுவருகின்றார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 411516).*

***6494***

***கவிதை நெஞ்சம்.*** *மூனாக்கானா. (இயற்பெயர்: மு.கணபதிப்பிள்ளை). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆ..ப்செட்).*
*96 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 18x12 சமீ.*

*மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதியில் 22.01.1924இல் பிறந்தவர் மு.கணபதிப்பிள்ளை. இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின் கலாபூஷணம் விருதினை 1995இலும், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தலைக்கோல் விருதினை 2001இலும் பெற்றவர். கூத்துக்கலையில் ஈடுபாடு கொண்டவர். 1947 முதல் இவர் எழுதிய கவிதைகளின் சேகரிப்பை 1978இன் புயலின்போது இழந்தவர். 1990களுக்குப் பின்னர் எழுதிய கவிதைகளைத் தொகுத்து இந்நூலை வெளியிட்டிருக்கிறார். இறைவன், சமூகம், பிரமுகர், புலவர்மணி, சிறுவர் உலகம், நகைச்சுவை, ஆகிய தலைப்புகளில் இவரது 34 கவிதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இவரைப்பற்றிய சுயவிபரக்கோவையும், இவரை வீரகேசரி 10.3.2007 அன்று பேட்டி கண்டு பிரசுரித்த நேர்காணலும் அனுபந்தங்களாகியுள்ளன.*

***6495***

***கவிதை மடல்.*** *அ.சிதம்பரநாத பாவலர் (மூலம்), கே.ஆர்.செல்வநாதன், எஸ்.சங்கரலிங்கம் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு: கஸ்தூரிபா ஸ்டோர்ஸ், 43 மாளிகாகந்தை வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1949. (கொழும்பு: கலைமகள் பிரஸ்).*
*88 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 18.5x12.5 சமீ.*

*இந்நூலில் 48 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சுதந்திரப்போராட்ட மணமும் சமூக மாற்றத்தைக் கோரும் கருத்துகளும் செறிந்த இப்பாடல்கள் இந்திய விடுதலைப்போராட்ட காலத்தில் எழுதப்பட்டவை. மற்றும் சில பாடல்கள் இளைஞர்களிடம் விழிப்புணர்வினைத் தூண்டும் வகையில் எழுதப்பட்டுள்ளன. சோம்பலை நீக்கடா தம்பி, எத்தனை ஜாதியடா, என்ன வழக்கம், வெட்கமுண்டாகுதடா, கொட்டுமுரசே, இளைஞன் என்று சொல்லடா என்பன மாதிரிக்குச் சில. மூலநூலாசிரியர் தமிழகத்தைச் சேர்ந்த சுத்தமல்லியைச் சேர்ந்தவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 76866).*

***6496***

***கவிதைகள் பேசட்டும்: பெண்கள் கவிதைத் தொகுதி.*** *சித்ரலேகா மௌனகுரு (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், இலக்கம் 20, டயஸ் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2010. (கொழும்பு 10: குளோப் பிரிண்டிங் வேர்க்ஸ், 5, ஸ்ரோக் பிளேஸ்).*
xvi, *17-148 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 19.5x13.5 சமீ.,* ISBN: *978-955-8695-06-7.*

*கவிதைகள் பேசட்டும் என்ற தலைப்பில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினர் 13.12.2008 அன்று நடாத்திய கவிதை வாசிப்பில் இடம்பெற்ற கவிதைகளும், அவற்றுக்கான அறிமுகமும் இத்தொகுதியில் அடங்குகின்றன. தாம் எழுதிய கவிதைகளையும் தமக்குப் பிடித்த சில கவிதைகளையும் கவிதாயினிகள் அன்றைய அரங்கில் வாசித்தனர். இத் தமிழ்க் கவிதைகளின் சிங்கள, ஆங்கில மொழிபெயர்ப்புகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்த மும்மொழிக் கவிதை*

நூலிற்கான ஆங்கில மொழிபெயர்ப்பை சுமதி சிவமோகன், தவசஜிதரன், சிறீகணேசன் ஆகியோரும், சிங்கள மொழிபெயர்ப்பை சிவகுருநாதனும் குமாரி குமாரகமகேயும் மேற்கொண்டிருந்தனர்.

**6497**

**கவிதையில் துடிக்கும் காலம்.** மு.பொன்னம்பலம். தெகிவளை: மு.பொன்னம்பலம், 40E Temple Road, களுபோவில, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (கொழும்பு 13: A.T.Publishers, No. 195, Wolfendhal Street).
(4), ix, 92 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x15 சமீ.

மாற்றமுறும் இயற்கை, சமூகம், மனிதம், புதியவை, உள்ளிட்ட பிரபஞ்சத்தின் இயக்கம் அனைத்தையும் விளங்கிக்கொள்ளுதலும், அதன் முற்போக்குப் பாய்ச்சலுக்கு எம்மை ஆற்றுப்படுத்திக்கொள்ளுதலும் இக்கவிதைகளின் நோக்கமாகின்றது. இந்நிலையில் தனிமனிதனை, சமூகத்தை, இனத்தை, நாட்டை, ஆக்கிரமித்து நிற்கும் எல்லாத் தனிநல ஆக்கிரமிப்புக்கும் எதிராகப் போராடுவதாக மு.பொவின் இக்கவிதைகள் அமைகின்றன. காலம், இருப்பு, உயிர்ப்பு, பேச்சு, மௌனம், இசை, நினைவூட்டல் ஆகிய ஏழு தலைப்புக்களில் கவிஞர் மு.பொவின் 53 கவிதைகள் வகுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன.

**6498**

**கவியரங்கில் கந்தவனம்.** வி.கந்தவனம். கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, அக்டோபர் 1972. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ்).
176 பக்கம், விலை: ரூபா 8.00, அளவு: 17.5x12.5 சமீ.

ஏனிந்தப் பெருமூச்சு, பாரதி, கனவுலகம், வள்ளல் நல்லதம்பி, அருள்வாக்கி, பகிடிவதை, எழுந்து திசை திசை விளங்கவே, உய்யும் வழியிவர்க் கோது, என்னாங்க உங்களைத்தாங்க, நாவலர் பெருமான், நவராத்திரி, வாருங்கள் போவோம், பண்புடையார்ப் பட்டுண்டுலகம், ஆசுகவி வேலுப்பிள்ளை, எழுதுகோல் தெய்வம், எது மாண்பு? ஆகிய 16 அரங்கக் கவிதைகளைக் கொண்ட நூல். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 297504).

**6499**

**கற்றறிந்த காக்கைகள்.** பேனா மனோகரன். சென்னை 600 098: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-B, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2009. (சென்னை 49: ஜெமினி ஓப்செட் பிரிண்டர்ஸ், வில்லிவாக்கம்).
xx, 52 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 21x13.5 சமீ.

இலங்கையில் பிறந்து வளர்ந்த மனோகரன் 1976இல் புலம்பெயர்ந்து தமிழகத்திற்குச் சென்றவர். அங்கு 30 ஆண்டுக்காலம் காவல்துறையில் பணியாற்றியவர். தற்போது மதுரையில் வாழ்பவர். 1969இல் தனது முதலாவது கவிதை இலங்கையில் பிரசுரமாகக் கண்டவர். இவரது தமிழகப் புலப்பெயர்வின் பின்னர் இவரது முதலாவது கவிதைத் தொகுதி இலங்கையில் 1976இல் திக்குவல்லை கமால், அ.யேசுராசா ஆகியோரின் அணிந்துரைகளுடன் அன்பு ஜவகர்ஷாவினால் அச்சிடப்பட்டு பிரசுரமாகியது. இது இவரது இரண்டாவது தொகுதியாகும். புலம்பெயர்ந்த தமிழகச் சூழலில் எழுதப்பட்ட இத்தொகுப்பில் பேனா மனோகரனின் 35 கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

**6500**

**கனவுக்கன்னி.** தில்லைச்சிவன். (இயற்பெயர்: தி.சிவசாமி). வேலணை: பாரதி இளைஞர் கழகம், 1வது பதிப்பு, 1961. (யாழ்ப்பாணம்: மகேஸ்வரன் அச்சகம்).
55 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12.5 சமீ.

கற்பனைகள் இனிக்கும், காதல் துள்ளும், உணர்ச்சி கிளுகிளுக்கும் உயிரோட்டமான கவிதைகளை வழங்கும் ஈழத்துக் கவிஞர் தில்லைச்சிவனின் கவிதைத் தொகுதி இது. மறுமலர்ச்சி இதழில் பழக்கம் என்ற ஓரங்க நாடகத்துடன் தொடங்கிய இவரது இலக்கியப் பயணம் மிக நீண்டது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275663).

6501

**கனவுகளின் பிரசவம்.** கோவை அன்சார். கொழும்பு 12: கோவை பப்ளிக்கேஷன்ஸ், F/4/6 சாஞ்சி ஆராச்சித் தோட்டம், 1வது பதிப்பு, ஜுன் 2010. (கொழும்பு 13: யுனி லங்காஸ், இல.32, சென்ற் அந்தனீஸ் மாவத்தை)
xii, 40 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-095-08-6.

கோவை பதிப்பகத்தின் முதலாவது நூலாக வெளிவந்துள்ள இந்நூல் ஒரு பல்சுவைக் கவிதைத் தொகுதியாகும். தன் பாணியில் சில ஹைக்கூ கவிதைகளை முதலில் வழங்கும் கோவை அன்சார், தொடர்ந்து 34 கவிதைகளில் தன்னைச் சூழ நடக்கும் சம்பவங்களுடன் கலந்து தனது உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறார். இவர் கவிஞரா என வைரமுத்துவைச் சாடும் இவர், ரேலங்கி செல்வராஜா, ஷம்ஸ், ஏ.நெய்னார், நடிகமணி கே.ஏ.ஜவாஹர், காயல் ஷேக், எஸ்.என்.தனரட்ணம், முஸவ்வீர் மும்தாஸ் போன்றோருக்கான நினைவஞ்சலிக் கவிதைகளுடன் தொகுப்பை நிறைவுசெய்கிறார்.

6502

**காணிக்கை: கவிதைகள்.** தா.இராமலிங்கம். கொழும்பு 13: ஏடு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித்தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 1965. (சுவடி 1, கூதிர் 1965). (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231 ஆதிருப்பள்ளித் தெரு).
70 பக்கம், விலை: ரூபா 1.40, அளவு: 18.5x12.5 சமீ.

பரிசோதனைப் படைப்பிலக்கியங்களை வெளியிடும் நோக்கோடு தாபிக்கப்பட்டதே ஏடு வெளியீட்டு அமைப்பாகும். காலாண்டுக்கொருமுறை ஒரு பரிசோதனை இலக்கியம் என்ற ஒழுங்கில் பிரசுரிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டு வெளியிடப்பட்ட முதலாவது வெளியீடாக தா.இராமலிங்கத்தின் கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. இதில் கவிதைக் கருத்திற்கான தொனிப்பொருள் குறித்துப் பரிசோதனை நிகழ்ந்துள்ளது. இந்நூலுக்கான முன்னீட்டை ஏடு நிறுவன அமைப்பாளர் எஸ்.பொன்னுத்துரையும், ஆய்வுரையை மு.தளையசிங்கமும் எழுதியுள்ளனர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275545).

6503

**காதலி ஆற்றுப்படை.** க.கணபதிப்பிள்ளை. யாழ்ப்பாணம்: க.கணபதிப்பிள்ளை, 1வது பதிப்பு, 1940. (சுன்னாகம்: திருமகள் அச்சகம்).
32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

பழைய தமிழ்ச்செய்யுளாலே புதுமையான பொருளைப்பாடுவதில் கைதேர்ந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை, ஆற்றுப்படை என்னும் பழைய இலக்கியவடிவத்தைக் கையாண்டு யாழ்ப்பாண மண்மணம் கமழும் இலக்கியமாக இதைப் படைத்துள்ளார். யாழ்ப்பாணத்து ஊர்களின் புவியியலமைப்பு, மக்களின் வாழ்வியல், குறிப்பாக வடமராட்சிப் பிரதேச சமூக பண்பாட்டுக்கூறுகள் மிகத் தெளிவாக இச்செய்யுள் நூலில் கலைநுணுக்கத்தோடு வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளன. பருத்தித்துறையிலிருக்கும் காதலனுடைய ஊருக்கு யாழ்ப்பாணத்துக் காதலியை ஆற்றுப்படுத்துவதாகக் காதலியாற்றுப்படை அமைகின்றது. இவ்விரு ஊர்களுக்கிடையே உள்ள சிற்றூர்கள் சிறப்பித்துப் பாடப்படுவதுடன், இவ்வூர்களினூடாகச் செல்லும் காதலி பல நிகழ்ச்சிகளையும் காட்சிகளையும் கண்டு செல்வதாகக் கற்பனைசெய்து, அந்நிகழ்வுகளும் காட்சிகளும் இக்கவிதைநூலில் விரித்துரைக்கப்படுகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28663).

6504

**காந்தி பாமாலை.** கவிஞர் அண்ணல். (இயற்பெயர்: எம்.எஸ்.எம். சாலிஹ்). கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, 1969. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231 Wolfandhal Street).
120 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18x12.5 சமீ.

கிழக்கிலங்கையின் அறியப்பட்ட முஸ்லிம் கவிஞராக விளங்கியவர் எம்.எஸ்.எம். சாலிஹ் (அண்ணல்) அவர்களாவார். இளம்பிறை திங்களிதழின் நிர்வாக ஆசிரியராகவும் பணியாற்றியவர். காந்தி நூற்றாண்டு நினைவாஞ்சலியாக (1969) இவரால் தொகுக்கப்பெற்ற காந்திஜி பற்றி பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்தியக் கவிஞர்களின் 20 பாக்களும், இலங்கைக் கவிஞர்களின் 67 பாக்களும், சிங்கப்பூர்க் கவிஞர்களின் 2 பாக்களும், மலேசியக் கவிஞர்களின் 11 பாக்களுமாக மொத்தம் 100 பாக்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 269486).

**6505**

**காலத்தின் காலடியில்.** M.H.A.கரீம். மருதமுனை: புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் கலை இலக்கிய மன்றம், 1வது பதிப்பு, ஜனவரி 1998. (மருதமுனை: அப்னா பிரின்டிங், 165 பிரதான வீதி).
69 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 18x12.5 சமீ.

மருதமுனையைச் சேர்ந்த கரீம், தனது மனதை, வாழ்க்கையை, அதனுள் இணையும் இனிமையினை, அவலங்களை மிக நுட்பமாக உள்வாங்கி, இதிலுள்ள கவிதைகளை இயற்றியுள்ளார். இலங்கை வானொலியின் ஒலி மஞ்சரி நிகழ்ச்சியில் தனது கவிதா புலமைக்கு மேடை அமைத்துக்கொண்டவர் இக்கவிஞர்.

**6506**

**கீறல்கள்: மரபுக் கவிதைகள்.** தாமரைத்தீவான் (இயற்பெயர்: சோ.இராசேந்திரம்). திருக்கோணமலை: தாகம் கலை இலக்கிய வட்ட வெளியீடு, 156, கிறீன் வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1992. (திருக்கோணமலை: விஸ்டம் அச்சகம்).
vii, 50 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 20x13.5 சமீ.

கடந்தகால வாழ்க்கையிலே அதன் சூழலிலே ஏற்பட்ட நெஞ்சக் கீறல்கள் இங்கு பதிவாக்கப்பட்டுள்ளன. 1992இல் வடக்கு கிழக்க மாகாண சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்ற நூல் இது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 470338).

**6507**

**குயில் வாழ்ந்த கூடு.** இ.நாகராஜன். யாழ்ப்பாணம்: இ.நாகராஜன், 2, முதலாம் ஒழுங்கை, பலாலி வீதி, 1வது பதிப்பு, மே 1972. (யாழ்ப்பாணம்: டொலர் பிரிண்டர்ஸ்).
(18), 50 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18x12.5 சமீ.

கவிதை உருவில் எழுதப்பட்ட வித்தியாசமான நூல் இதுவாகும். யாழ்ப்பாணத்தில் சமகாலத்தில் இயங்கிவந்த வர்த்தக நிறுவனங்களான சீ.எஸ்.கே, சீமா பட்டுத் தொழிற்சாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, கோல் ஸ்டோர்ஸ், ரெக்ஸ் டியுட்டரி, எப்பக் ரோலக்ஸ், த.குமாரசாமி வர்த்தகநிலையம், சண்முகநாதன் அச்சகம், சாமி அன் சன்ஸ், ஸ்ரீ மீனாட்சி கல்வி நிலையம் உள்ளிட்ட பல வர்த்தக நிறுவனங்களை விளம்பரப்படுத்தும் வகையில் இக்கவிதைகள் அமைந்துள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 300824).

**6508**

**சந்தனப் பொய்கை.** பாலமுனை பாறூக். அக்கரைப்பற்று 1: அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவை, அம்பாறை மாவட்ட அவை, வை.எம்.எம்.ஏ. வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (அக்கரைப்பற்று: நியு றீச் ஓப்செட் அச்சகம்).
(12), 96 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-99311-0-5.

1987இல் பதம் என்ற தனது முதலாவது கவிதைத் தொகுதியைத் தொடர்ந்து அனுபவச் செழுமைமிக்கதான தனது கவிதைகளைத் தொகுத்து சந்தனப் பொய்கையாக்கித் தந்துள்ளார் பாலமுனை பாறூக். கருத்தியல் ரீதியான பார்வை, சமூக ஊடாடல், மக்கள் இயல்போடு ஒன்றிப் போகின்ற பக்குவம் ஆகியன இவரது கவிதைகளினூடாக வெளிப்படுகின்றன. ஓசையை

*முதன்மைப்படுத்தி கவிதையின் கட்டிறுக்கத்தைத் தளர்த்தி உணர்வின் வீச்சுக்கேற்றவாறு மொழியின் ஓட்டத்தை வரிசைப்படுத்தி இவர் தமது கவிதைகளைப் படைத்திருக்கிறார்.*

***6509***

***சமாதான வழி நோக்கி: கவிதைத் தொகுப்பு.*** *சிகண்டிதாசன் (இயற்பெயர்: சத்தியதீசன்). திருக்கோணமலை: ஓம் சக்திசோதிட ஆராய்ச்சி நிலையம், 168/1, நீதிமன்ற வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2002. (திருக்கோணமலை: சக்தி அச்சகம், 7B, கடற்காட்சி வீதி).*
*(9), 131 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.*

*தெய்வங்களை நோக்கி, என்னுயிர் தமிழுக்கு, தீர்வுகளை நோக்கி ஆகிய மூன்று பிரிவுகளுக்குள் தான் எழுதிய 71 கவிதைகளை அடக்கி இந்நூலை வழங்கியிருக்கிறார். முதற்பிரிவுக்குள் 11 கவிதைகளும், இரண்டாம் பிரிவுக்குள் 7 கவிதைகளும் எஞ்சிய 53 கவிதைகளும் தீர்வுகளை நோக்கி என்ற மூன்றாவது பிரிவுக்குள்ளும் அடங்குகின்றன. சிகண்டிதாசன் திருக்கோணமலை சிவயோக சமாஜத்துடன் நெருங்கிய தொடர்புள்ளவர். சமயம், சமூகம், அரசியல் மற்றும் பல துறைகளில் இவரது பாடல்கள் விரிகின்றன. சிகண்டி- அகத்தியருடைய மாணாக்கர் பன்னிருவரில் ஒருவர். இசை நுணுக்கம் என்ற இசைத்தமிழ் நூலை எழுதியவர். மற்றொரு சிகண்டி- மகாபாரதத்தில் துருபத மன்னனின் மகளாகப் பிறந்து மாயத்தால் ஆணாகி, பாரதப் போரில் பீஷ்மரைக் கொன்றவன். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 576213).*

***6510***

***சாடிகள் கேட்கும் விருட்சங்கள்.*** *நெடுந்தீவு முகிலன். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, யுஜீ 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை).*
*124 பக்கம், விலை: ரூபா 290., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1857-72-1.*

*உணர்வுகளின் வலிகளையும் வசந்தங்களையும் கவிதைகளாக மலரவைக்கும் முகிலனின் தேர்ந்த கவிதைத் தொகுப்பு இது. ஈழத்தமிழரின் வரலாற்றில் சொந்தச் சுமைகளின் வலிகள் அல்லாது, சமூகத்தின் இருப்பில் முனைப்புற்று நின்ற வாழ்வின் வலிகளைச் சுமந்தவர்களில் இளைஞர்களே அதிகம். அத்தகைய இளைஞர்களில் ஒருவராக இக்கவிஞன் வாசகரின் மனதில் நிலைகொள்கின்றான். முகிலன் இலங்கை இதழியல் கல்லூரி மாணவராக இருந்த வேளையில் எழுதிப் பிரசுரித்த கவிதைகள் இவை.*

***6511***

***சிதைகிறதே செந்தமிழ்: கவிதைகள்.*** *உஷா ஜவஹர். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆ.்.ப்செட்).*
*80 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 30., அளவு: 18x12 சமீ.*

*கொழும்பு, வெள்ளவத்தையில் பிறந்த இந்நூலாசிரியை கொழும்பு செய்ன்ட் லோரன்ஸ் பாடசாலையிலும், திருக்குடும்பக் கன்னியர் மடத்திலும் கல்வி பயின்றவர். கணக்கியல்துறையில் உயர்கல்வி பயின்று கொழும்பிலும், சாம்பியாவிலும் பணியாற்றியவர். தற்போது அவுஸ்திரேலியாவில் குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகின்றார். உள்ளத்தை மிகவும் பாதித்த சம்பவங்கள் நிகழ்ந்த வேளையில் தன் இதயத்திலிருந்து வடிந்த இரத்தத் துளிகளைத் தனது பேனாவில் மையாக்கி வார்த்தைகளைக் கோர்த்து கவிதைகளாகப் புனைந்து வாசகர் முன் வைத்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.*

***6512***

***சிரட்டையும் மண்ணும்: கவிதைத் தொகுதி.*** *நாச்சியாதீவு பர்வின். அனுராதபுரம்: ப்ரிசிம் சமூக அபிவிருத்தி அமைப்பு, (PRISM), 87/24 தர்மபால மாவத்தை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*x, 11-73 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 18.5x10.5 சமீ.*

38 கவிதைகளைக் கொண்ட தொகுப்பு. இடி, படிகள், யாத்திரா, நவமணி, வீரகேசரி, மித்திரன், தினகரன், மல்லிகை, அநுராகம். நாச்சிய தீபம், எங்கள் தேசம் ஆகிய ஊடகங்களில் இப்படைப்புக்கள் ஏற்கெனவே பிரசுரமானவை. பர்வினின் கவிதைகள் கலையம்சம் கொண்ட படைப்புக்களாகவும், வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டுவனவாகவும் அமைந்துள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 591473).

**6513**

**சிலம்பொலி.** நாவற்குழியூர் நடராஜன். (இயற்பெயர்: க.செ.நடராசன்). யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1960. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226 காங்கேசன்துறை வீதி).
viii, 85 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12.5 சமீ.

சிலம்பொலி, கவிக்கற்பரசி, இதயராணி, தாமரை மங்கை, பூங்கொடியாள், இந்த மனிதர்கள், போர்த்தொழில் புறக்கணிப்போம், சீரழிந்து வாழ்வதா?, பொங்கல், எங்கள் பெருநிதியம், லண்டனிலே போன்ற இன்னோரன்ன 43 தலைப்புகளில் எழுதிய கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் க.செ.நடராசன் இலங்கை வானொலியில் தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாகக் கடமையாற்றியவர். 1943இல் கவிதை உலகில் பிரவேசித்தவர். அன்று முதல் 1960 வரையிலான காலப்பகுதியில் இவர் எழுதிய கவிதைகளே இத்தொகுப்பில் உள்ளடங்குகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 153095).

**6514**

**சிலோன் விஜயேந்திரன் கவிதைகள்: 3ம் தொகுப்பு.** சிலோன் விஜயேந்திரன். சென்னை 600101: லோகிதன் பதிப்பகம், 199 இமயம் காலனி, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1994. (சென்னை 60005: தாய்க்குலம் பிரிண்டிங் யுனிட், திருவல்லிக்கேணி).
72 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 18x12.5 சமீ.

சிறந்த நடிகராக, நவரசக் கலைஞராக இலங்கையிலும் பின்னர் தமிழகத்துக்குப் புலம்பெயர்ந்து சென்றபின்னர் அங்கும் விளங்கியவர் இந்நூலாசிரியர் விஜயேந்திரன். அவரது கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இக் கவிதைகளில் காதல் இருக்கின்றது, கண்ணீர் இருக்கின்றது, சோகம் இருக்கின்றது சுவைதெரிகின்றது. கண்ணீரிலும் இரத்தத்திலும் நனைந்துகொண்டிருக்கும் இலங்கைத் தீவின் சோகமும் சில கவிதைகளில் தூக்கலாகத் தெரிகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 468886).

**6515**

**சிறையில் பூத்த உணர்வின் ஒளி.** கல்லடி றொபேட். மட்டக்களப்பு: லில்லி வெளியீடு, திருச்செந்தூர் வீதி, ஏழாவது குறுக்கு, கல்லடி, 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (யாழ்ப்பாணம்: பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம், நல்லூர்).
xv, 284 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20x14 சமீ.

களுத்துறைச் சிறையில் அடைக்கப்பட்ட காலத்தில் தனது தாயகத்தையும், தலைமையையும், உறவுகளையும் எண்ணி ஏங்கிய வேளைகளில் ஒரு தமிழ்த் தேசியப் பற்றாளனின் மனதில் எழுந்த எண்ண வெளிப்பாடுகளே இக்கவிவரிகள். வரலாற்றில் அழியா வடுக்களைச் சுமந்துவாழும் ஈழத்தமிழரின் அவல வாழ்வு நீங்க வேண்டும் என்ற ஆதங்கமும், சுனாமிப் பேரலையால் அழிந்த உறவுகளின் மேலெழும் அனுதாபமும், நிவாரணம் வழங்குவதில் காணப்படும் அரசின் இழுபறிநிலையும் இக்கவிதைகளில் ஊடுபரவி நிற்கின்றன.

**6516**

**செழுங்கமலச் சிலம்பொலி.** க.வீரகத்தி. கரவெட்டி: வாணி கலைக்கழகம், 1வது பதிப்பு, மே 1970. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்).
(8), 58 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 18x12.5 சமீ.

*இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் 1965-66ம் ஆண்டு காலங்களில் பத்திரிகைகளிலும் பிற மலர்களிலும் வெளிவந்தவை. எமது சமுதாயம் சமதர்மப் பூங்காவாக மாறவேண்டும் என்ற புனித இலட்சியத்தை நிறைவேற்ற செந்தமிழ்த் தெய்வம் முருகனின் திருவருளை வேண்டி எழுதப்பெற்ற கவிதைகள் இவை. ஈழத்தின் அறுபடை வீடுகளாக இக்கவிஞர் மதிக்கும் கதிர்காமம், சந்நிதி, நல்லூர், மாவிட்டபுரம், கந்தவனம், சித்தாண்டி அகிய திருத்தலங்களிலும் கரவைத்தாளங்குழி, மயிலிட்டி காசநோய் மருத்துவமனை, பேராதனைப் பல்கலைகழகம் ஆகிய இடங்களில் அமைந்த முருகன் கோயில்களில் குடிகொண்ட முருகனையும் நெஞ்சு நெகிழ்ந்து தான் கலந்து பாடுகின்றார். சோஷலிச சமுதாய அமைப்பை தமிழாற் கொஞ்சி, முருகனைக் கெஞ்சிக் கேட்கின்றார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275763).*

***6517***
**தடங்கள்.** *மருதூர் ஏ.முஹம்மது தமீம். மருதமுனை: புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் கலை இலக்கிய மன்றம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1993. (கல்முனை: மணமகள் அச்சகம்).*
*82 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*34 கவிதைகளை உள்ளடக்கிய தொகுப்பு. மானிட வாழ்வின் ஏக்கம், தாக்கம், விருப்பு, வெறுப்பு, ஆறதல், மாறுதல், கனவு, கற்பனை, எல்லாவற்றிலும் ஒன்றும் சிலவுமாக கவிஞனைப் பாதித்தவைகளைக் கவிதைகளாக்கியுள்ளார்.*

***6518***
**தடை செய்யப்பட்ட கவிதை.** *யு.எல்.மப்றூக். கொழும்பு: யாத்ரா, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2003. (கொழும்பு: சிஸ்டம்ஸ், 334,* A.K.Cyril C. Perera Mawathe*).*
xv, *100 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 17.5x12 சமீ.,* ISBN: *955-98318-0-1.*

*1999இல் அகில இலங்கை ரீதியாக கவிதைப்போட்டியில் முதலாமிடத்துக்கான இளைஞர் விருதினைப் பெற்றவர் யு.எல்.மப்றூக். கொழும்புப் பல்கலைக்கழக ஊடகத்துறை டிப்ளோமா பட்டம் பெற்ற இவர், சூரியன் எப்.எம். வானொலியின் அறிவிப்பாளராகக் கடமையாற்றுகின்றார். மப்றுக்கின் கவிதைத் தொகுப்பு இதுவாகும். யாத்ராவின் ஏழாவது பிரசுரமாக இது வெளிவருகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 615260).*

***6519***
**தத்துவச் சாறு: கவிதைகள்.** *மறையும் நிழல் (இயற்பெயர்: யூ.எல்.எம்.குவைலீத்). உக்குவளை: யூ.எல்.எம்.குவைலீத், உதுமான் மன்சில், மார்க்கொனை, 1வது பதிப்பு, 1968. (கொழும்பு 10: அல்பியன் அச்சகம், 157 ஜயந்த வீரசேகர மாவத்தை, மருதானை).*
*121 பக்கம், விலை: ரூபா 3., அளவு: 18x12.5 சமீ.*

*மாத்தளை சாஹிரா கல்லூரியின் ஆசிரியரான குவைலீத்தின் கவிதை வரிகளில் இந்நூல் பற்றிக் கறிப்பிடுவதானால் "நிலையற்ற வாழ்வினது உண்மையினை நிரந்தரமாய் ஆய்வதுவே என் கவியாம்" என்று குறிப்பிடலாம். கவிதை யாவும் வசனத்தின் எளிமையோடும், கவிதையின் அழகோடும் அமைக்கப்பட்டுள்ளன. நவீன சமூகத்திற்குரிய சிந்தனைத் தத்துவங்களே கவிதைகளாக்கப்பட்டிருப்பதால் கவிதை நடையும் நவீன பாணியிலேயே அமைந்திருக்கிறது. இந்நூலில் இரு பக்கங்களிலும் அல்லாது ஒரு பக்கம் மாத்திரம் கவிதைகள் அச்சிடப்பட்டுள்ளன என்பதுவும் குறிப்பிடற்பாலது. மெய்யா இல்லை, தேசிய ஒற்றுமை, சிந்தனையுடன் செயற்படு, ஒளிப்பாதை, இளமை கரைதல், திசை திருப்பல், போதனையும் சாதனையும், மறைசக்தி, எல்லாமுனக்கே எழுந்தியங்கு இன்றே, இளமையின் துடிப்பில், இதயக் குரல், என் தாய், இலட்சிய மனைவி, களங்கமில் உள்ளம், மறையும் நிழல்கள் நாம் ஆகிய 15 தலைப்புகளில் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 286437).*

***6520***
**தமிழன் கனவு.** *காசி ஆனந்தன். கொழும்பு 3: ரகுநாதன் பதிப்பகம், 303 காலி வீதி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1968. (கொழும்பு 13: இரஞ்சனா அச்சகம், 98 விவேகானந்தா மேடு).*

*(14), 70 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18.5x12.5 சமீ.*

*ரகுநாதன் பதிப்பகத்தின் முதல் வெளியீடு இதுவாகும். உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் ஆரம்பகாலக் கவிதைகளின் தொகுப்பாக இது வெளிவருகின்றது. தமிழரின் உரிமைப் போராட்டமும் அவர்தம் அங்கலாய்ப்புகளும் தமிழன் கனவுக்குப் பொருளாய் அமைந்துள்ளன. படைநடத்தியாவது தனக்கென ஒரு தனிநாடு காணும் உரிமை வேட்கை கொழுந்துவிட்டெரியும்வண்ணம் மிகப் பக்குவமாக அறுபதுகளிலேயே மூட்டப்பட்ட கனற்பிழம்பாகக் காட்சி தருகின்றன இக்கவிதைகள். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 269491).*

***6521***

***தமிழன் நினைவு.*** *சி.தர்மகுலசிங்கம். மட்டக்களப்பு: சி.தர்மகுலசிங்கம். 15* Baily Road, *1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (மட்டக்களப்பு: வணசிங்கா அச்சகம், 126/1 திருமலை வீதி).*
vi, *128 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.*

*இத்தொகுதியில் உள்ள கவிதைகளில் சில அன்றாடம் போர்க்காலச் சூழலில் தமிழ் மண்ணில் ஏற்படும் மிகச்சாதாரணமான அனுபவங்கள் பற்றியன. சமகால அரசியல் நிலைமைகளும் இங்கு கவிப்பொருளாகியுள்ளன. மரபார்ந்த விடயங்களும் புதுமையான முறையில் அணுகப்படுகின்றன. திக்கவயல், பாணபத்திரன், அம்பலம், இந்திரசித்து, ஆணிமுத்தன் ஆகிய புனைபெயர்களில் எழுதிவரும் சிதம்பரப்பிள்ளை தர்மகுலசிங்கம் மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் சுவைத்திரள், கவிதேசம் சஞ்சிகைகளின் ஆசிரியராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 563904).*

***6522***

***தரிசனம்.*** *முஹம்மத் ஜவாத். மூதூர்: சமூக அபிவிருத்திக்கான ஒருங்கிணைப்பு நிலையம்,* Co-ordinating Centre for Community Development (3CD), *1வது பதிப்பு, மே 2002. (மூதூர் 2: இப்ராஸ் பிரின்டர்ஸ், அன்னைச்சேனை).*
*52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12.5 சமீ.*

*பொய் முகங்கள் என்ற கவிதை நூல் மூலம் அறிமுகமான ஜவாத்தின் 10 புதுக் கவிதைகளை உள்ளடக்கிய தொகுப்பு இதுவாகும். தரிசனம், பாதை போட்ட பாதங்கள், அக்கினிப் பூ, நாளை என்றொரு நாள், பிரகடனம், வாழக் கல், தூரத்துப் பச்சை, கேட்டவரம், பிழைப்பு, சமாதி ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. இவை நமது சமூகச் சூழலின் நடைமுறை யதார்த்தத்தை நம்முன் நிறுத்தி அதன் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி எம் சிந்தனையைக் கிளறிவிடும் சொல்லாயுதங்கள். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 553760).*

***6523***

***தனித்துத் திரிதல்.*** *த.மலர்ச்செல்வன். மட்டக்களப்பு: மறுகா, ஆரையம்பதி 3, 2வது பதிப்பு, மே 2008, 1வது பதிப்பு, ஜுலை 2004. (சென்னை 05: மணி ஆ∴ப்செட்).*
*86 பக்கம், ஓவியங்கள், விலை: ரூபா 150., அளவு: 21.5x14 சமீ.*

*மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் கலாச்சார உத்தியோகத்தராகவும், ஆண்டுக்கொருமுறை பிரதேச சபையின் சாஹித்திய விழாவிற்கும் தேனகம் என்ற அதன் காத்திரமான இதழுக்குமாக முன்னின்று உழைக்கும் மலர்ச்செல்வன் ஒரு கலைத்துறைப் பட்டதாரி. மறுகா என்ற கலை இலக்கிய அமைப்பை உருவாக்கி, அதனூடாக இலக்கிய நிகழ்வுகளை சாத்தியப்படுத்தி வருவதோடு மறுகா என்ற சிற்றிதழையும் நடத்தி வருகின்றார். இவரது கவிதைகள் கிழக்கு மண்ணில் ஏற்பட்ட போரின் வடுக்களையும் கிழக்கு மண்ணின் வாழ்வியல் கோலங்களையும் கலைத்துவமாகச் சித்திரிக்கின்றன. தனித்துத் திரிதல் கவிதைத் தொகுப்பின் கவிதைகள் மூன்று காலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. கிக்கோவின் ஓவியங்கள் சில கவிதைகளுக்கு உணர்வுருவம் தருகின்றன. 2005ம் ஆண்டுக்கான வடக்கு கிழக்கு மாகாண அரசின் சாகித்திப் பரிசினை கவிதை நூலுக்காகப் பெற்றது.*

***6524***

**தாய் மண்மேல் ஆணை.** பிரேமலதா பஞ்சாட்சரம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
vi, 98 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 17.5x12 சமீ.

தான் எழுதிய 68 மரபுக் கவிதைகளையும், 22 ஹைக்கூ கவிதைகளையும் இந்நூலில் தொகுத்து வழங்கியுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 598866).

**6525**
**தாயும் தாய்நாடும்: கவிதைகள்.** சரோஜா செல்லத்துரை. சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆ∴ப்செட்).
92 பக்கம், விலை: இந்திய ரூபா 140., அளவு: 18x12.5 சமீ.

திருக்கோணமலையில் பிறந்த சரோஜா செல்லத்துரை, ஏசியாநெற் வானொலிமூலம் கவிதை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கியவர். சங்கமம் தொலைக்காட்சியிலும் இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இத்தொகுப்பில் இவர் எழுதிய 52 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

**6526**
**தால விலாசம்.** க.சோமசுந்தரப் புலவர். யாழ்ப்பாணம்: தொல்புரம் கனைத் தொழில் விருத்தி ஐக்கிய சங்கத்தவர்கள், தொல்புரம், 1வது பதிப்பு, 1940. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் தரப்படவில்லை).
(20) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x12.5 சமீ.

தாலம் என்பது பனையையும், விலாசம் என்பது அழகு, வினோதம், விளையாட்டு ஆகியவற்றையும் குறித்து நிற்கின்றது. அவ்வகையில் தால விலாசம் என்ற இந்நூல் பனை பற்றியும், அதன் பல்வேறு பயன்கள் பற்றியும் அரிய தகவல்களை கலிவெண்பாவடிவில் தருகின்றது. நவாலியூர் க. சோமசுந்தரப்புலவரின் முகவுரையில், தாலவிலாசம் என்ற பெயரில் முன்னர் ஒரு நூல் ஏட்டுப்பிரதியாக இருந்ததாகவும், அது செந்தமிழ்ப் புலமைமிக்க ஒருவரால் கலிவெண்பாவினால் பாடப்பட்டிருந்ததெனவும் அதனை வாய்ப்பாடமாகத் தனது தந்தை அறிந்திருந்தாரென்றும் குறிப்பிடுகிறார். அதில் சில வெண்பா அடிகளைத் தனக்குத்தன் தந்தை சிறுவயதில் கூறியிருந்தாரென்றும்- அந்நூல் பனை பூமியில் உண்டான வகையையும், அதன் பயன்களையும், அவைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் முறைகளையும் அத்தமிழ் நூல் தொகுத்துக்கூறியதாகவும் மேலும் குறிப்பிடுகின்றார். பின்னாளில் அந்த மூல ஏட்டுப்பிரதியைப் பெற்றிருந்த James Ferguson என்ற ஆங்கிலேயர், அதனை ஆங்கிலமொழியில் மொழிபெயர்த்து நூலுருவில் வெளியிட்டிருந்ததாகவும். கொழும்பு நூதனசாலையிலிருந்த அந்த ஆங்கில மொழிபெயர்ப்பையும், தன் தந்தையார் கூறிய வெண்பா அடிகளையும் கொண்டு தால விலாசத்தை மீண்டும் புலவரவர்கள் தமிழுக்குக் கொண்டுவந்து அதனை நூலுருவாக்கியுள்ளதாகவும் முகவுரையில் அறியமுடிகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37495).

**6527**
**திராட்சை ரசம்.** எச்.எல்.எம்.நிசார் (புனைபெயர்: உ.நிசார்). மாவனல்லை: பானு பதிப்பகம், 70/3, புதிய கண்டி வீதி, 1வது பதிப்பு, 2009. (மாவனல்லை: எம்.ஜே.எம். பதிப்பகம், 119 பிரதான வீதி).
viii, 52 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 17.5x14 சமீ., ISBN: 978-955-99075-2-7.

ஹைக்கூ சாயலிலான 140 கவிதைகளின் தொகுப்பு இதுவாகும். இக்கவிதைகளில் இயற்கையில் நடக்கும் ஒரு விடயத்தை எடுத்து அதனூடாக வாசகரின் சிந்தையைத் தூண்ட முயற்சித்துள்ளார். அதன்மூலம் இயற்கையில் ஒழிந்துகொண்டுள்ள ஒரு உண்மையை, ஒரு யதார்த்தத்தை, ஒரு வாழ்க்கையின் நியதியை புரிந்தகொள்ள முயன்றுள்ளார்.

**6528**
**திறந்தே கிடக்கும் வீடு.** சி.பன்னீர்செல்வம். மதுரை 625002: மக்கள் கண்காணிப்பகம், 6 வல்லபாய் சாலை, சொக்கிகுளம், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2010. (சிவகாசி: ஆண்டோ ஆர்ட் கிராப்ட்).

*84 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21.5x14 சமீ.*

*சரிந்துவரும் மானிட மதிப்பீடுகள், கேள்விக்குறியாகும் மானுட மாண்பு, உலகமயக் கோட்பாட்டில் தரிசாகும் ஊர்கள், புத்தனின் பெயரால் கொன்றொழிக்கப்பட்ட தமிழினம், இவையெல்லாம் பன்னீர்செல்வத்தின் கவிதைகளில் உணர்வுபூர்வமாக வெளிப்படுகின்றன. மனிதம் சிதைக்கப்படும்போது இயல்பாக ஏற்படும் சினம் இவரது கவிதைகளில் வீச்சாக எழுகின்றது. இலங்கையில் மலையகத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட பன்னீர்செல்வம், புலம்பெயர்ந்து தமிழகத்தில் வாழ்கின்றார்.*

***6529***

***தீட்சண்யம்: கவிதைகள்.*** *எஸ்.ரி.பிறேமராஜன் (மூலம்), சந்திரவதனா செல்வகுமாரன் (தொகுப்பாசிரியர்). ஜேர்மனி: மனஓசை,* Manaosai verlag, 74523 Schwaebisch Hall, *1வது பதிப்பு, மே 2009. (சென்னை 600029: சென்னை மைக்ரோ பிரின்ட்).*
*174 பக்கம், விலை: இந்திய ரூபா 180., அளவு: 22x14.5 சமீ.,* ISBN: *978-3-9813002-1-5.*

*பிரேமராஜன் (1958-2000) பருத்தித்துறை, ஆத்தியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வற்றாப்பளை, முள்ளியவளையில் வாழ்வை அமைத்துக்கொண்டவர். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் புலமை கொண்ட இவர், தனது ஆரம்பக் கல்வியை வட இந்து மகளிர் கல்லூரியிலும், உயர் கல்வியைப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும், பட்டப்படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டு வற்றாப்பளை மகா வித்தியாலயத்தின் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர். 1990இலிருந்து தீட்சண்யன் என்ற புனைபெயருடன் உலகெலாம் பரந்திருந்த விடுதலைப் போராட்டம் தொடர்பான ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் பங்களித்தார். இயல்பாகவே கவிதையில் ஆற்றல் மிக்க இவர் புலிகளின் குரல் வானொலியில் 1990இலிருந்து கவிதைகளை அரங்கேற்றியிருந்தார். இத்தொகுப்பில் இவரது போராட்டம் சார்ந்த 92 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.*

***6530***

***துயரக் கொழுந்துகள்.*** *மடவளை கலீல். மடவளை பஸார்: மடவளை கலீல், 15, சிரிமல்வத்தை ரோட், 1வது பதிப்பு, ஜனவரி 1992. (கொழும்பு 12: ரோயல் பிரின்ட்ஸ், 42, பெய்ரா வீதி).*
*42 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 17.5x13 சமீ.*

*26 கவிதைகள் கொண்ட தொகுப்பு. மத்திய மலையகத்தின் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த இருமொழிக் கவிஞரான இவர் ஒரு பொலிஸ் உத்தியோகத்தராகப் பணியாற்றியவர். இவரது இலக்கியப்பணிக்கு மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு மாத்தளையில் நடத்திய மாகாண சாகித்திய விழாவில் விருது வழங்கிக் கௌரவித்தது. சமாதானத்தை வேண்டி அவிய பிம தபமு (ஆயுதங்களைக் கீழே வைப்போம்) என்ற சிங்கள நூலை வெளியிட்டமையை கௌரவித்து அகில இலங்கை இன நல்லுறவு ஒன்றியத்தின் அதிஉயர் விருதான சாமஸ்ரீ தேசமான்ய கீர்த்தி விருதும் இவருக்கு 2006இல் வழங்கப்பட்டது.*

***6531***

***துளிர்த்தெழும் புதுச்செடிகள்.*** *ச.முருகானந்தன். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆ.்.ப்செட்).*
viii, *148 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 18x12.5 சமீ.*

*போரின் கொடுமைகள், இராணுவக் கெடுபிடிகள் என்பவற்றை நிதர்சனமாக்கும் கவிதைகள். போரின் மத்தியில் மக்களோடு மக்களாக வாழ்ந்து அனுபவித்த அனுபவ வலிகள் கொண்ட ஒரு வைத்தியனின் உள்ளப்பதிவுகளாக இக்கவிதைகள் ஊற்றெடுத்துள்ளன. ஒவ்வொரு கணமும் சாவை எதிர்பார்த்திருக்கும் அந்த மக்களின் அவசங்களையும், சூழ்நிலை காரணமாக பெண்கள் படும் அவஸ்தை, ஆணாதிக்கக் கொடுமை, மலையக மக்கள் படும் வேதனை, யுத்தம் ஏற்படுத்தும் பொருள், உயிர்ச் சேதங்கள், ஆயுததாரிகளின் அட்டகாசங்கள் என்று பல விடயங்கள் கவிதைகளின் கருப்பொருளாகின்றன.* ***நீ நடந்த பாதையிலே*** *என்ற நூலைத் தொடர்ந்து வெளிவரும் ஆசிரியரின் 2வது கவிதைத் தொகுதி இது.*

**6532**

**தெரு விளக்கு: கவிதை நூல்.** துரையர் சு.துரைசிங்கம். சுன்னாகம்: கந்தரோடை சனசமூக நிலையம், 1வது பதிப்பு, நவம்பர் 1972. (யாழ்ப்பாணம்: திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்).
70 பக்கம், விலை: ரூபா 1.60, அளவு: 17.5x12.5 சமீ.

இந்நூலில் முகிலே, கலைந்த கனவு, உண்டு வழி, ஏனோ? தொழில் தருக, இதுதான் உலகம், நீங்கள் யார்?, பாரதியின் குருவே, இலஞ்சமும் வஞ்சமும், யாழ் நகர வாலிபன், கண்டேன், இணையிலா ஈழநாடு, நிர்வாணம், புயலே செல்வாய், பின் கதவு, தீருமா? மூச்சு, சந்தி சிரிக்கிறது, மறந்தேன், மாட்டின் லூதர் கிங், துணை, போட்டி ஏன், எறிந்த கல், நாடு நலம்பெற, சிறுமை கண்டு பொங்குவாய், மனிதர்கள், வந்தது பதிலும், எழுவாய், வடு, பற்று விடேன், மலர்ந்திடுமா, செத்ததையே, பற்றிவிட்டால், பணம் பறிப்போர், ஏக்கம், பண்புடன் கலைத்தோம், புன்னகை வீசியே, உண்டு இல்லை, அழகும் அவஸ்தையும், அப்பாவி, இப்படியும் ஆகிய 41 வளர்ந்தோர் கவிதைகளும், வருவேனே, ரோசாவும் நேருவும், நல்ல சிறுமிகள், காகித வள்ளம், தெய்வமாக வேண்டும், இலாபமா நட்டமா, நொண்டித் தாத்தா ஆகிய 7 சிறியோருக்கான கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த சு.துரைசிங்கம், துரையர் என்ற பெயரிலும் இலக்கிய உலகில் வலம்வந்தவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 299809).

**6533**

**தேயிலைத் தோட்ட மக்கள் பாடல்கள்.** எம்.ராமச்சந்ரன். மாத்தளை: எம்.ராமச்சந்ரன், 11/10, சிவர்சைட் ரோட், களுதாவளை, 1வது பதிப்பு, ஜுலை 1996. (கண்டி: சிட்னி பிரிண்டர்ஸ், 258/1, டீ.எஸ். சேனநாயக்க வீதி).
x, 54 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 22x14.5 சமீ.

இந்நூலில் ஆண் குழந்தை தாலாட்டு, பெண் குழந்தை தாலாட்டு, 1987? மனப்படம், ஊருசனம் தூங்கிறிச்சி, மறவேன், பந்தபாசம், தோணியோட்டம், கழிவிரக்கம், எந்நன்றி கொன்றார்க்கும், பிச்சை நன்றே, பாதை தெரியுது பார், வேண்டி நிற்போம், புதுப் பயணம், முன்வாரீர், மெய்வருத்தம், பொங்கல், எதிர்பார்ப்பு, கடன்பளு, வசை ஆகிய தலைப்புகளில் 20 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அனைத்தும் மலையகக் கிராம மக்களின் அன்றாட வாழ்வியல்கோலங்களை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 492968).

**6534**

**தேர்தல்?: கவிதைகள்.** எம்.ராமச்சந்ரன். கண்டி: எம்.ராமச்சந்ரன், 2/1 Riverdale Junction, Anniewatte, 1வது பதிப்பு, மே 2004. (கண்டி: ஆசிரி பிரிண்டர்ஸ், 14 கட்டுக்கலை லேக் ரோட்).
x, 58 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 18x12.5 சமீ., ISBN: 955-98438-3-4.

இந்நூலில் இலங்கை தேர்தல் சம்பந்தமானதும் பிற சமூகவியல்சார்ந்ததுமான 22 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் ஆர்.முத்துக்கருப்பன் என்றும் அறியப்பட்டவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 574153).

**6535**

**தேனாறு.** காரை.செ.சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1968. (சுன்னாகம்: திருமகள் அச்சகம்).
xx, 112 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12.5 சமீ.

யாழ். இலக்கிய வட்டத்தின் ஒன்பதாவது வெளியீடாக வெளிவந்த கவிதைத் தொகுதியான இந்நூல், இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசினையும் பெற்றது. இயற்கை, தமிழ், சமூகம், காதல், பல்சுவை, ஆகிய பிரிவுகளின்கீழ் 44 மரபுக்கவிதைகளும், காவியம் என்ற இறுதிப்பிரிவில் சிற்பியின் காதல் என்ற காவியமும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 259318).

**6536**

**நட்சத்திரத் துகள்கள்: கவிதைத் தொகுப்பு.** என்.எம்.ரினோஷா. அக்குறணை: இலக்கிய மன்றம், க/அக்குறணை முஸ்லிம் பாலிகா மகாவித்தியாலயம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (அக்குறணை: ரீஜன்ட் பிரின்ட் ஷொப்).
X, (73) பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x14 சமீ.

அக்குறணை முஸ்லிம் பாலிகா மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவியான என்.எம்.ரினோஷா எழுதியுள்ள கவிதைகளின் தொகுப்பு. அப்பாடசாலையின் தமிழ் இலக்கிய மன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

**6537**

**நதிகளைத் தேடும் சூரிய சவுக்காரம்.** கிண்ணியா ஏ.நஸ்புள்ளாஹ். கிண்ணியா: பொன்னகை இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, மே 2009. (கிண்ணியா: அஸ்ட்ரா பிரின்டர்ஸ்).
124 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17.5x12.5 சமீ.

நதிகளைத்தேடும் சூரிய சவுக்காரம் என்ற இக்கவிதைத் தொகுதி வெளிப்படையான அரசியல் சார்புடையவை. கடந்த கால்நூற்றாண்டுக்கு மேலாகத் தொடரும் இனப்பிரச்சினையில் மக்கள் அனுபவித்த போர்க்கால பயங்கரம், அவலம், துயரம், நெருக்கீடு எல்லாவற்றையும் கழுவ முனைந்துள்ளது. பன்முகத்தன்மை கொண்ட இலங்கையின் அரசியலையும், சர்வதேச அரசியலையும் இக்கவிதைகள் சர்ரியலிசக் கவிவரிகளால் தொட்டுக்காட்டுகின்றன. இக்கவிஞர் கிண்ணியா பைசல் நகரைச் சேர்ந்தவர்.

**6538**

**நபிகள் வாழ்வில் நடந்த கதைகள்.** அன்பு முகையதீன். கல்முனை: ஸாஹிராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், 1வது பதிப்பு, நவம்பர் 1976. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம், 18 மத்திய வீதி).
81 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 18.5x12.5 சமீ.

அன்பு முகையதீனின் 25 கவிதைகளைக் கொண்ட இத்தொகுப்பு, மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் முதலாவது வெளியீடாகும். முகம்மது நபியின் வாழ்வில் நடந்ததாகக் கருதப்படும் சில சுவைமிகு நிகழ்வுகளை இக்கவிதைகளில் காணலாம். இலக்கியச்சுவையுடன் கூடிய இனிய தமிழ்வரிகளில் கவிஞரின் ஆளுமை நன்கு புலப்படுகின்றது.

**6539**

**நிமிர் நடை.** ஸ்ரீ பிரசாந்தன். சென்னை 600017: கலைஞன் பதிப்பகம், 19 கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை: கிரியேட்டிவ் பிரின்டர்ஸ்).
80 பக்கம், விலை: இந்திய ரூபா 25., அளவு: 18x12 சமீ.

அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் ஸ்ரீ பிரசாந்தனின் கவிதைத் தொகுதி. இளைஞன் ஒருவனின் உணர்வுகள், தர்ம ஆவேசம், இலட்சிய வேட்கை என்பன எப்படி இருக்குமென்பதைப் பிரசாந்தனின் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. கவித்துவமான உவமைகளைக் கையாளும் கவிஞர் உருவகங்களையும் படிமங்களையும் பக்குவமாகப் பயன்படுத்துகின்றார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 594858).

**6540**

**நிலா முற்றம்: கவிதைத் தொகுப்பு.** எம்.என்.ஆர்.ஷிப்னா. அக்குறணை: ஸாஹிரா தேசிய பாடசாலை, Bulugohatenna , 1வது பதிப்பு, ஜுலை 2004. (கண்டி: விங்ஸ் கிராப்பிக்ஸ்).
80 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 18.5x12.5 சமீ.

அக்குறணை: ஸாஹிரா தேசிய பாடசாலையில் தரம் 11இல் கல்வி பயிலும் மாணவியின் கவிதைத் தொகுப்பு. சமூகத்தில் புரையோடிப் போயுள்ளபல யதார்த்த உண்மைகளை தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளது. சமூகத்தைச் சாடவேண்டிய இடத்தில் சாடியும், போற்ற வேண்டிய இடத்திலே போற்றியும், எச்சரிக்கவேண்டிய இடத்தில் எச்சரித்தும் தனது கவிதைகளைப் பதிவுசெய்துள்ளார்.

**6541**

**நினைவுள் மீள்தல்: தானா விஷ்ணுவின் கவிதைகள்.** தானா விஷ்ணு. உடுப்பிட்டி: மீளுகை 2 வெளியீட்டகம், இமையாணன் கிழக்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (முல்லைத் தீவு: அந்திவானம் பதிப்பகம், புதுக்குடியிருப்பு).
60 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 19x12 சமீ.

தாணா விஷ்ணு போரின் மூலமாக போருக்குள் இருந்து முகிழ்ந்த கவிஞன். போரே வாழ்வாகவும், வாழ்வே போராகவும் இருந்த காலத்திலும் ஈழத்தில் தனது கவிதையை போர்க்கால மனச்சாட்சியுடனும் கவிஞனின் கட்டுப்பாட்டுடனும் எழுதிய கவிஞன். யுத்தத்தை வெறும் அழிவாகவோ சிதிலங்களாகவோ காணாது அதனைப் பற்றிய ஆழமான தீர்க்கம் நோக்கிய பார்வை இவரது கவிதைகளில் உண்டு. இதிலுள்ள கவிதைகள் 2001-2003 காலப்பகுதியில் எழுதப்பெற்றவை. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 576036).

**6542**

**நீ நடந்த பாதையிலே: கவிதைகள்.** ச.முருகானந்தன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
xii, 88 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18x12 சமீ.

வன்னி மண்ணில் மருத்துவராகவும் படைப்பாளியாகவும் இரு துறைகளில் தன் ஆளுமையை வெளிக்காட்டியிருப்பவர். மானுடநேயத்துடன் தான் சார்ந்த சமூகத்தைப் பீடித்திருக்கும் பிணிகளுக்கு வைத்தியம் செய்வது மட்டுமல்லாமல் அச்சமூக வளர்ச்சியின் ஊட்டச் சக்தியாகத் திகழும் கருத்துக்களையும் வழங்கும் ஒரு வலிமைமிக்க பேனா இவருடையது. சிறுகதைப் படைப்பாளியாகத் தன்னை இனம்காட்டி 5 தொகுதிகளை வழங்கிய இவரது முதலாவது கவிதைத் தொகுதி இதுவாகும். இதில் 37 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இவரது கவிதைகள் பிரசவிக்க முக்கியமாக கொடிய நாசயுத்தமும், அதனால் ஏற்பட்ட அழிவுகளும், இழப்புகளும், எழுச்சியும் இவரது பேனாவுக்கு மையூற்றியுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 599072).

**6543**

**நெஞ்சம் தொடாத உறவு.** மு.வரதராசா. திருக்கோவில் 04: மு.வரதராசா, 1வது பதிப்பு, மாசி 2007. (அக்கரைப்பற்று: நியு செலெக்ஷன் அச்சகம்).
xxii, 82 பக்கம், விலை: ரூபா 130., அளவு: 20.5x14.5 சமீ.

துறைநீலாவணையை பிறப்பிடமாகக் கொண்ட மு.வரதராசா, கிழக்கு பல்கலைக்கழகத்தில் மெய்யியல்துறை பட்டதாரியாவார். தற்போது அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ணா தேசிய பாடசாலையின் முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றுகின்றார். இவரது 25 கவிதைகளைக் கொண்ட முற்று முழுதான காதல் கவிதைத் தொகுப்பு. இக்கவிதைகள், அகமன உணர்வுப் போராட்டங்களின் வெளிப்பாடுகளாகவே காணப்படுகின்றன. ஆரம்பக் கவிதைகளில் சில பெண்ணழகை வர்ணிக்க, பின்னையவை காதல் தோல்வியினை வெளிப்படுத்துகின்றன. தன் அன்புக்குரியவர்களின் அகமன உணர்வுகளைத் தன் வலியாக்கி இந்த மனிதநேயம்மிக்க கவிதைகளை உருவாக்கியுள்ளார். நூலாசிரியர் அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண தேசிய பாடசாலையில் முகாமைத்துவ உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

**6544**

**நெஞ்சம் மலராதோ?** திமிலைத் துமிலன் (இயற்பெயர்: சின்னையா கிருஷ்ணபிள்ளை). மட்டக்களப்பு: இராஜம் பிரசுரம், திமிலைத்தீவு, 1வது பதிப்பு, வைகாசி 1968. (கண்டி: நெஷனல் பிரிண்டர்ஸ், 241 கொழும்பு வீதி).
(8), 32 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 20x14 சமீ.

பேராதனைப் பல்கலைக்கழகத்து மாணவராக இருந்தவேளையில் நூலாசிரியர் முருகப்பெருமான்மீது பாடிய கவிதைகளைக்கொண்ட தொகுதி இதுவாகும். பேராதனை முருகன் மீது விண்ணப்பப்பத்து முதலிய இசைப்பாடல்களை இது உள்ளடக்கியது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275660).

**6545**

**நெஞ்சில் பூத்த நெருஞ்சி.** பாத்திமா மைந்தன் (இயற்பெயர்: மு.ராசீக்). சென்னை 600002: மாங்குயில் பதிப்பகம், 41/11, நாகப்ப முதலி தெரு, புதுப்பேட்டை, 2வது பதிப்பு, ஜனவரி 1991, 1வது பதிப்பு, டிசம்பர் 1987. (தமிழ்நாடு: சரவணா கலர் பிரின்டர்ஸ், 19, பார்த்தசாரதி நாயுடு தெரு, திருவல்லிக்கேணி).
80 பக்கம், விலை: இந்திய ரூபா 6.00, அளவு: 18x12.5 சமீ.

மனித மனத்தின் மெல்லிய உணர்வுகளைத் தன் கவிதைகளில் பதிவுசெய்திருக்கிறார். சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் இலக்கியத்தில் முதுகலைமாணிப்பட்டம் பெற்ற இந்நூலாசிரியர், மலையகப் பெண் எழுத்தாளரான கெக்கிராவ சஹானாவின் சிறியதந்தையாராவார்.

**6546**

**நெடும் பகல்.** இ.முருகையன், சாவகச்சேரி: அறிவழகுப் பதிப்பகம், பெரிய அரசடி, 2வது பதிப்பு, 1981, 1வது பதிப்பு, 1967. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில்).
x, 52 பக்கம், விலை: ரூபா 6.70, அளவு: 18x12.5 சமீ.

இந்நூலின் விரிவான முதற்பதிப்பு சென்னை அமுத நிலையத்தினரால் தமிழகத்தில் வெளியிடப்பட்டது. இவ்விரண்டாவது பதிப்பு, முன்னைய பதிப்பின் தலைமைப் பாட்டாகிய நெடும்பகல் என்னும் தொடர்நிலைச் செய்யுளைத் தனியொரு நூலாக வெளியிட்டுள்ளனர். 2007இல் சாஹித்திய இரத்தினம் விருது பெற்ற கவிஞர் இராமுப்பிள்ளை முருகையன் சாவகச்சேரி, கல்வயல் கிராமத்தில் 23.4.1935இல் பிறந்தவர். தன் 12ஆவது வயதில் கவிதை புனையத் தொடங்கியவர். 1950 முதல் கவிதை எழுதிவரும் இவர் பல பிறமொழிக்கவிதைகளையும் தமிழுக்குத் தந்துள்ளார். நோக்கு என்ற காலாண்டுக் கவிதை இதழின் (1964-1965) இணை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கௌரவ கலாநிதிப் பட்டமும் இவருக்குக் கிடைத்திருந்தது.

**6547**

**நெடும் பகல்: முருகையன் கவிதைகள்.** இ.முருகையன், சென்னை 14: அமுத நிலையம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1967. (சென்னை 18: நண்பர்கள் அச்சகம்).
xvi, 155 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 17.5x12 சமீ.

நெடும்பகல் என்னும் தொடர்நிலைச் செய்யுள் உள்ளிட்ட 40 கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 263388).

**6548**

**பாட்டாளிக்குப் பரிசு: கவிதை நூல்.** முத்து சம்பந்தர். கண்டி: மக்கள் கலை இலக்கியப் பேரவை, 72/1, Mapanawatura Circular Road, Pooranawathe, 1வது பதிப்பு, மார்ச் 1990. (கொழும்பு 12: சீ.வீ.ஆர். பிரின்டர்ஸ், குணசிங்கபுர தொடர்மாடி).
(3), 35 பக்கம், விலை: ரூபா 12.00, அளவு: 18x12.5 சமீ.

இதிலுள்ள மலையகக் கவிதைகளில் தன்னைச் சூழவுள்ள சமூகத்தின்மீது அவருக்கிருக்கும் அக்கறை பதிவுசெய்யப்படுகின்றது. அவர் கவிதையில் சமூக முரண்பாட்டையும் மிக அழகாக எடுத்துச்சொல்கிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 570239).

**6549**

**பாடு மனமே.** வி.கந்தவனம். சாவகச்சேரி: நுணாவிலூர்த் தமிழ் மன்றம், 1வது பதிப்பு, ஜனவரி 1972. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்).
104 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 18x12.5 சமீ.

கவிஞர் வி.கந்தவனம் அவர்கள் கவிதை பற்றியும், கவிஞர் பற்றியும் பாடிய இருபது பாடல்களைக் கொண்டது இந்நூல். கவிதை என்றால் என்ன? அது எவ்விதம் பிறக்கிறது? கவிஞர் எனப்படுவோர் யாவர்? என்பன போன்ற பல வினாக்களுக்குக் கவிஞரின் அனுபவ விடைகளைக் கொண்டது. முதற் பதினைந்து கவிதைகளும் பல்வேறு ஊடகங்களிலும் பிரசுரமானவை. கூறிக் களித்தவை என்ற பகுதியில் இடம்பெற்றுள்ள கடைசி ஐந்து கவிதைகளும் கவியரங்கங்களில் படிக்கப்பெற்றவை. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 299784).

**6550**
**பாம்பு நரம்பு மனிதன்.** சோலைக்கிளி. கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சென்னை: சவுத் ஏஷியன் புக்ஸ், 6/1, தாயார் சாஹிப் 2ஆவது சந்து, 1வது பதிப்பு, ஜுன் 1995. (சென்னை 600041: சூர்யா அச்சகம்).
128 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 18x12 சமீ.

சமகாலத் தமிழ்க்கவிதை பற்றி அக்கறையுடையோர் மிகவும் அறியவேண்டிய ஒரு கவிஞரின் ஆக்கங்கள் இவை. சோலைக்கிளியின் கவிதைகள் மிகவும் தன்னுணர்வு சார்ந்தவை. ஒருபுறம் அவரது தனிப்பட்ட அனுபவங்களினதும் அந்தரங்க உணர்வுகளினதும் வெளிப்பாடாகவும் மறுபுறம் தன்னைச் சூழவுள்ள சமுதாயத்தின் அதிவேகமான சீரழிவின் மீதான கோபத்தின் வெளிப்பாடாகவும் அவரது கவிதைகள் அமைகின்றன. ஜப்பான் இலங்கை நட்புறவு கலாசார நிலையத்தின் 2005ம் ஆண்டுக்கான புங்கா விருதினை கிழக்கிலங்கைக் கவிஞரான சோலைக்கிளிக்கு கிடைத்தது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 470399).

**6551**
**பிட்டும் தேங்காய்ப் பூவும்: கவிதைகள்.** மூதூர் முகைதீன். திருக்கோணமலை: மூதூர் கலை இலக்கிய ஒன்றியம், மூதூர், 1வது பதிப்பு, நவம்பர் 1998. (திருக்கோணமலை: உதயன் பதிப்பகம்).
(4), 46 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 20.5x14.5 சமீ.

இலங்கையின் கிழக்கில் தமிழரும் முஸ்லிம்களும் இணைந்து வாழும் பிரதேசச்சூழலை பிட்டும் தேங்காய்ப்பூவும் என்ற உவமானப்பதத்தின் வாயிலாக விளக்குவது வழமை. இப்புதுக்கவிதைத் தொகுதியின் உள்ளடக்கமும் இன நல்லுறவைப் பேணுவதாக ஆங்காங்கே அமைந்துள்ளன. ஏற்கெனவெ கங்கை காவியம் என்ற நூலை வழங்கிய மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின் இரண்டாவது பிரசுரம் இதுவாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 570243).

**6552**
**புதிதாய் ஒன்றுமில்லை: கவிதைத் தொகுப்பு.** முழுமதி எம்.முர்தளா. அக்கரைப்பற்று: FORED-Sri Lanka, 1வது பதிப்பு, மார்ச் 2003. (அக்கரைப்பற்று: செலெக்ஷன் ஒப்செட்).
107 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 18x12.5 சமீ.

நல்ல கவித்துவமும், கற்பனைவளமும் ஆழ்ந்த பார்வையும் நிறையப்பெற்ற ஒரு இளம் கவிஞனின் கவிதைத் தொகுப்பு இது. பரம்பொருள் ஆத்மா, நாணயமொன்று, சம்மதம், ஒரு புல்லும், என் ஆத்மாவுக்கு, கலைஞனின், இனி உங்கள் மண் எதுவென்பீர், முரண்பாட்டுச் சமன், பொம்மை விளையாட்டு, எனதருமை நண்பர்களே, ஒரு தொப்புளறுத்த, என் மௌன வாத்தியமே, ஒரு பாய் நதி, சிறகிழந்த தும்பியும், முதல் மனிதனின், காகத்தின் மொழி, நஞ்சூட்டப்பட்ட எம் மண்ணின் கதை, தாமரைக்கள்ளி, ரசமுகங்கள், வாழ்வின் வெறும்புள்ளியில், பாதை தெளியுமோர் நாள், என்னை உலாத்தும் கச்சான் காற்று, யுத்தத்தை பயிர்செய்த விவசாயி யார், அந்தரிப்புக்கள், தாஜ்மகாலின் தவறான, தொலைந்துபோன எம் தரிசனங்கள், சிறுமைப்படுத்துதல், பித்தனின் கேள்வி, போர்முகம், நான் மற்றும் இன்னும் சில, புதிதாய் ஒன்றுமில்லை ஆகிய தலைப்புக்களில் இவரது கவிதைகள்

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 567463).

**6553**

**புதுமெய்க் கவிதைகள்.** தா.இராமலிங்கம். இரத்தினபுரி: தா.இராமலிங்கம், ஆசிரியர், பரி.லூக்கா கல்லூரி, 1வது பதிப்பு, 1964. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம், 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை).
v, 26 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 20.5x13.5 சமீ.

ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு யன்னலாக இருக்கின்றது. ஒவ்வொரு யன்னலூடும் ஒவ்வோர் உலகு தெரிகின்றது. ஒரே உலகின் பல்வேறு கூறுகளே வெவ்வேறு கோணங்களில் தெரிகின்றன. கவிஞர் காட்டும் காட்சிகளும், நோக்கப்படும் கோணங்களும் அசாதாரணமானவை. கவிதைக்கான கருத்தும் நோக்கமும் தெளிவாகவே புலப்படுகின்றன. உள்ளுறை உவமம், இறைச்சி என்னும் உபாயங்களைக்கொண்டு சொல்லாமற் சொல்லும் சங்கத்தமிழர்களின் குரல் முற்றிலும் புத்தம்புதிய ஒரு நவீனமான சூழலிலே இக்கவிதைகளில் ஒலிக்கின்றது. இந்நூலுக்கு கவிஞர் இ.முருகையன் விரிவானதொரு முன்னுரை வழங்கியுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 316856).

**6554**

**பூரணன் கதை.** சோ.இளமுருகனார். யாழ்ப்பாணம்: தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1963. (யாழ்ப்பாணம்: மு.வி.ஆசீர்வாதம், ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).
xvi, 162 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 20.5x13.5 சமீ.

தமிழறிஞரும் புலவருமாக விளங்கிய வீரமாமுனிவர் முன்னர் உரைச் செய்யுளில் ஆக்கிய அவிவேக பூரணகுருவும் சீடரும் என்ற நகைச்சுவை நிரம்பிய கதையைத் தமிழ்ப்பாவில் அதர்ப்பட யாத்த நூலே பூரணன் கதையாகும். வஞ்சப் புகழ்ச்சியாக - பூரணன் என்ற கருத்தை இக்கவிதைகளில் பயன்படுத்தி பூரணகுருவின் சீடர்களின் விவேகமற்ற செயல்களை நகைச்சுவை உணர்வுடன் விருத்தப் பாக்களாகவும் சிந்துப்பாவகையிலும் பொதிந்து வழங்கியுள்ளார் பண்டிதர் இளமுருகனார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275555).

**6555**

**மதுக் கலசம்.** அபூபக்கர். கல்முனை: கவிஞர் அபூபக்கர், சாய்ந்தமருது 3, 1வது பதிப்பு, ஜுன் 1969. (கல்முனை: நூர் பிரிண்டிங் கம்பெனி, சாய்ந்தமருது).
(12), 53 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 15.5x11 சமீ.

ஆன்மீகம் பற்றிய உண்மைக்கூறுகளை எடுத்துரைப்பதாக கவிஞர் அபூபக்கரின் இக்கவிதைத் தொகுதி அமைந்துள்ளது. இறைவன் திருவருளே காதல் நங்கையாகவும், இறைவனிடத்தில் செலுத்தும் அன்பே மதுவாகவும் உருவகப்படுத்தப்படுகின்றன. உமர் கய்யாமின் செய்யுள்நடையைப் பின்பற்றிபோதும், சில இடங்களில் கருத்துக்களைப் புதிய போக்கில் நின்று உணர்த்தியுள்ளார். உலோகாயதத்தைக் கடந்து தெளிவாக்கியுள்ளார். நூலுக்கான முன்னுரையை டாக்டர் மு.வரதராசனார் வழங்கியுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275520).

**6556**

**மலரும் மொட்டுகள் (கவிதை).** மருதூர் அன்ஸார். (இயற்பெயர்: ஏ.எல்.அன்ஸார்). சாய்ந்தமருது 2: கலை இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஜனவரி 2006. (சாய்ந்தமருது 9: ரோயல் ஓப்செட் பிரிண்டர்ஸ், பிரதான சாலை).
iv, (4), 56 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ.

1994இல் எழுத்துலகில் பிரவேசித்த மருதூர் அன்ஸாரின் தேர்ந்த 50 கவிதைகள் கொண்ட தொகுப்பு. கவிஞரின் புதிய பார்வை, பொதுநல விருப்பு, மனிதநேயம் ஆகியன இக்கவிதைகளின் அடிநாதமாக உள்ளன.

**6557**

***மஹாகவியின் குறும்பா.*** *மஹாகவி (இயற்பெயர்: துரைசாமி உருத்திரமூர்த்தி). கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, பெப்ரவரி 1966. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ்).*
*100 பக்கம், விலை: ரூபா 2.35, அளவு: 18x12.5 சமீ.*

*சூலிமரிக் என்ற ஆங்கிலக் கவிதைவடிவத்தையொட்டித் தமிழில் செய்யப்பட்ட ஒரு முன்னோடி முயற்சியாக குறும்பா மலர்ந்துள்ளது. ஐந்து வரிகளிலே ஒரு குறிப்பிட்ட யாப்புமுறையிலே அமையும் கவிதை. ஈழத்துக் கவிஞர் மஹாகவி (9.1.1927-20.6.1971) அறிமுகப்படுத்தும் புதுக்கவிதையாகிய குறும்பா மூலம் தமிழ்க் கவிதையின் பார்வையும், பரப்பும், பாணியும் அகலிக்கின்றன. மாதிரிக்கு ஒன்று:*
*"முத்தெடுக்க மூழ்குகிறான் சீலன்*
*முன்னாலே வந்துநின்றான் காலன்*
*சத்தமின்றி, வந்தவனின்*
*கைத்தலத்திற் பத்து முத்தைப்*
*பொத்திவைத்தான் போனான் முச்சூலன்."*
*இத்தகைய சிரிப்புக்கும் சிந்தனைக்கும் கருத்துக்கும் கற்பனைக்கும் பெருவிருந்தாகும் 100 குறும்பாக்கள் இந்நூலில் உள்ளடங்குகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275719).*

***6558***
***மாமனிதம்: கவியரங்கக் கவிதைகள்.*** *உதயகரன் துரைராஜா. சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆ..ப்செட்).*
xx, *140 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 18x12 சமீ.,* ISBN: *0-9730547-9-4.*

*கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் கவிஞர் உதயகரன் மின்பொறியியல்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றவர். கனடாவில் உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்க விழாவில் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமனால் இளநாவலர் என்ற பட்டத்தைப் பெற்றவர். இவரது கவிதைகளில் தனது தாயகப் பற்றையும், தமிழர் பண்பாட்டையும் அடிநாதமாகக் கொள்பவர். இத்தொகுதியில் 20 கவிதைகள் இரு பிரிவுகளில் தரப்பட்டுள்ளன. முகப்புக்கவிதைகள் என்ற முதற்பிரிவில் பொது விடயங்களைப் பாடும் எட்டுக் கவிதைகளும், கவியரங்கக் கவிதைகள் என்ற இரண்டாவது பிரதான பிரிவில் மாமனிதர்களைப் போற்றும் 12 கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. பிரதானமான பிரிவான இக் கவியரங்கக் கவிதைகளில் சுவாமி சச்சிதானந்தஜி மகாராஜ், தாய், சாரதா அம்மா, சி.வை.தாமோதரம்பிள்ளை, ஆறுமுக நாவலர், மாமனிதர் குமார் பொன்னம்பலம், கவியரசு வைரமுத்து, இராமகிருஷ்ண பரமஹம்சர், மாமனிதர் சிவராம், சுவாமி விபுலாநந்தர், செல்வா இலங்கையன், சாமி அப்பாத்துரை ஆகியோர் பற்றிய 12 அரங்கக் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.*

***6559***
***மாலைக்கு மாலை: யாழ்ப்பாணன் கவிதைகள் முதலாந் தொகுதி.*** *யாழ்ப்பாணன் (இயற்பெயர்: வே.சிவக்கொழுந்து). பருத்தித்துறை: வட லங்கா புத்தகசாலை, இணை வெளியீட்டாளர்: சென்னை 14: சக்தி காரியாலயம், இராயப்பேட்டை, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1948. (சென்னை 14: சக்தி பிரஸ் லிமிட்டெட், ராயப்பேட்டை).*
xv, *126 பக்கம், விலை: இந்திய ரூபா 2.80, அளவு: 18.5x12 சமீ.*

*மொழி, வாழ்த்து, காட்சிகள், நீதி, பாலர்கீதம், கண்ணன், இதயத்துடிப்பு என்னும் பிரிவுகளில் 55 கவிதைகள் கொண்ட இக்கவிதைத் தொகுப்பிற்கான முன்னுரையை நாமக்கல் கவிஞர் வெ.ராமலிங்கம்பிள்ளை வழங்கியுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 55064).*

***6560***
***மிலேனியம் கனவுகள்.*** *இளநெஞ்சன் முர்ஷிதீன். கொழும்பு 10: அல்லாமா இக்பால் வெளியீட்டகம், 239, சதர்ம மாவத்தை, மாளிகாவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (தெகிவளை: கிரசன்ட் பப்ளிக்கேஷன்ஸ், 156, ஆஸ்பத்திரி வீதி, களுபோவிலை).*

xvi, *90 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17.5*x*12 சமீ.* ISBN*: 955-97116-0-1.*

*முஸ்லிம் சமூக உணர்வுகளில் காலூன்றிக்கொண்டே, சமகால வாழ்வின் பிரச்சினைகளை இக்கவிஞர் இத்தொகுப்பிலுள்ள 18 கவிதைகளினூடாகவும் கையாள முயன்றிருக்கிறார். யார் குற்றவாளி, எங்கள் யாத்திரை, ஒரு புதிய தந்தையின் மிலேனியம் கனவுகள், அடிப்படை உரிமைகள், ரமழான் எனும் ரஹ்மத், பூவிலங்கு, அரசியல் அதிகாரங்கள் அநாதைகள், சுதந்திரம், ஐரோப்பிய இளவரசிக்கு ஆசியாவின் அஞ்சலிகள், புதிய மழலைகளின் மிலேனியம் கனவுகள், எங்கள் ரமழானுக்கு வழிவிடுங்கள், என் கண்ணில் நீர்வழிந்தால், புதிய சதிகளும் எங்கள் சேதிகளும், சிறைக்கைதி, செத்துப்பிழைத்த ஒரு பெருநாள் பிறைக்காக, மாளிகை மண்ணின் வாழ்த்து மலர்கள், கிரிக்கெட் கால தரிசனங்கள், வேண்டுகோள் ஆகிய தலைப்புகள் இவரது கவிதைகளை அலங்கரிக்கின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 534105).*

***6561***

***மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள்.*** *அஷ்ர.்.ப் சிஹாப்தீன், ஏ.ஜி.எம்.ஸதக்கா, எஸ்.நளீம் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு: உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு-2002, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (கொழும்பு 13: கொம் பிரின்ட் சிஸ்டம்ஸ், 334*A*, கே.சிறில் சி.பெரேரா மாவத்தை).* xii, *215 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5*x*14 சமீ.,* ISBN*: 955-8806-00-5.*

*இலங்கையில் பாதிப்புக்குள்ளான முஸ்லீம் சமூகத்தைச் சார்ந்த இளம் படைப்பாளிகளினதும், பாதிக்கப்பட்ட முஸ்லீம்கள் தொடர்பாக எழுதிய தமிழ்ப் படைப்பாளிகளினதும் புதுக்கவிதைகளை பல்வேறு ஊடகங்களிலும் இருந்து தொகுத்து இவ்வரிய நூல் வெளிவந்துள்ளது. மொத்தம் 50 படைப்பாளிகளின் 100 கருத்தாழம் மிக்க கவிதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளது. துறைமுகங்கள் அபிவிருத்தி கப்பற்றுறை அமைச்சு, கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் அமைச்சு. இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் ஆதரவுடன் 2002 ஒக்டோபர் 22, 23,24ம் திகதிகளில் நடத்திய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின்போது வெளியிடப்பெற்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 621975).*

***6562***

***முகவரியைத் தொலைத்தவர்கள்.*** இரா.நித்தியானந்தன். *கண்டி: உயர் கல்வி நிறுவனம், 239 திருக்கோணமலை வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1993. (கண்டி:* Zenith Line, 192, Kotugodella Veediya*). 43 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 19*x*12.5 சமீ.*

*இலங்கையில் தம் முகவரியைத் தொலைத்துவிட்டு வாழும் மக்களான பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வுடன் இணைந்த மலையகக் கவிதைத் தொகுப்பு இது. கவிஞர் நித்தியானந்தனின் கவிதைகள், அவரிடம் காணப்படுகின்ற சமுதாய அக்கறை, மனிதாபிமானம், கொடுமைகளைக் கண்டு குமுறும் நிலை, மனித உணர்வுகளை இயன்றவரை சமுதாய பகைப்புலத்தில் பொருத்திநோக்கும் முயற்சி முதலானவற்றை புலப்படுத்துகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 445426).*

***6563***

***முகிலன் கவிதைகள்.*** முகிலன் *(மூலம்) (இயற்பெயர்: மு.வ.மாணிக்கவாசகர்), மணிமொழி (தொகுப்பாசிரியர்). கொழும்பு 12: யாழ். கலை அரங்கம், 21, தட்டார ஒழுங்கை, 1வது பதிப்பு, புரட்டாதி 1964. (கொழும்பு 10: விசாகா அச்சகம், 60 ஸ்ரீசங்கராஜ வீதி). 32 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 20.5*x*14 சமீ.*

*தன் இளம் வயதிலேயே மரணத்தைத் தழுவிக்கொண்ட கவிஞர் முகிலன் வேலணை மத்திய மகாவித்தியாலய மாணவன். அவரது மறைவின் பின்னர் அவரது கவிதைகள் தொகுக்கப்பெற்று நூலுருவாகியுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275722).*

**6564**
**முடிவில்லாப் பேச்சுக்கள்.** கி.கலைமகள். மட்டக்களப்பு: மூன்றாவது கண் பதிப்பு, உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு, சீலாமுனை, 1வது பதிப்பு, 2007. (மட்டக்களப்பு: வணசிங்கா அச்சகம், 126/1, திருமலை வீதி).
(5), 39 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 15.5x16 சமீ.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் நாவற்குடாவைச் சேர்ந்த கலைமகள் எழுதியுள்ள முதலாவது கவிதைத் தொகுதி இது. பெண், வெளி, தேனகம் ஆகிய சிறுசஞ்சிகைகளில் வெளிவந்த கவிதைகள் இவை. கேள்விகளுக்குள்ளாக்கப்படும் வாழ்வும் இருப்புமே கவிதைகளில் ஏறியமர்கின்றன. மலரைப்போல் மென்மையாகவும் வண்ணாத்திபோல் சுதந்திரமாகவும் இரவுகள் போல் பயங்கரமாகவும் வெள்ளைத்தாள்களில் அவை கொட்டப்படுகின்றன.

**6565**
**முத்துமீரான் கவிதைகள்.** எஸ்.முத்துமீரான். நிந்தாவூர் 1: மீரா உம்மா நூல்வெளியீட்டகம், 1வது பதிப்பு, டிசம்பர் 1993. (சென்னை 1: மில்லத் பிரின்டர்ஸ், 16 அப்பு மேஸ்திரி தெரு).
xx, 94 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

ஆழ்ந்த புலமையும், சிறப்பான கவித்துவமும், அழுத்தமும் கொண்ட கவிஞர் முத்துமீரானின் 40 கவிதைகள் கொண்ட தொகுப்பு இதுவாகும். தினகரன், வீரகேசரி, மல்லிகை போன்ற இதழ்களில் வெளிவந்த அவரது கவிதைகளின் தேர்ந்த தொகுப்பாக இவை அமைந்துள்ளன. சட்டத்துறைப் பட்டதாரியான முத்துமீரான் உயர்நீதிமன்ற சட்டத்தரணியாகவும், பிரசித்த நொத்தாரிசாகவும், அகில இலங்கை சமாதான நீதவானாகவும் பணியாற்றியவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 464524).

**6566**
**முற்றத்து மல்லிகை.** அ.ஸ.அப்துஸ் ஸமது. (தொகுப்பாசிரியர்). அக்கரைப்பற்று: பிறைப் பண்ணை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1964. (கொழும்பு 12: சபீனா அச்சகம், 20 பிரைஸ் பிளேஸ்).
xxxiv, 142 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12.5 சமீ.

ஈழத்து முஸ்லீம் புலவர் ஐம்பத்தெழுவரின் கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. பழமை வழி என்ற முதலாவது பகுதியில் 1810-1964 இடைப்பட்ட காலத்தைய கவிஞர்களின் 35 கவிதைகளும், புதுமை ஒளி என்ற இரண்டாவது பகுதியில், 1964ம் ஆண்டுக்குப் பிற்பட்ட சமகாலக் கவிஞர்களின் 22 கவிதைகளுமாக மொத்தம் 57 கவிதைகள் இந்நூலில் தேர்ந்து தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 247051).

**6567**
**முறுகல் சொற்பதம் இரு படி.** கல்வயல் வே.குமாரசாமி. சாவகச்சேரி: திருக்கணித பதிப்பகம், 114, டச் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2010. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
x, 36 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 20.5x14 சமீ.

பக்குவப்பட்ட பதமான சொற்சேர்க்கையே முறுகற் சொற்பதம் என்று விளக்கும் ஆசிரியரின் 9வது நூல் இதுவாகும். சமூக அநீதிகளையும் ஏமாற்றுகளையும் தன் இருவரிக் கவிதைகளினூடு சாடுகின்றார்.

**6568**
**மோட்ச முழக்கம்.** லுணகல ஸ்ரீ (இயற்பெயர்: ராதிகா பெருமாள்). பதுளை: தினு பதிப்பகம், 31/1, லுனுகல கம, லுனுகல, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2007. (கொழும்பு 13: ஸ்ரீ கணேசா அச்சகம், 72, கே.சிறில் சி.பெரேரா மாவத்தை).
xxvi, 88 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14 சமீ.

*பேராசிரியர் கா.சிவத்தம்பியின் விரிவான முன்னுரையுடன்கூடிய மலையகப் படைப்பாளியான ராதிகா பெருமாளின் முதலாவது கவிதைகளின் தொகுப்பு இது. கவிதை எழுதப்புகும் இளம் படைப்பாளிகளுக்கு ஆலோசனை வழங்குவதாகப் பேராசிரியரின் முன்னுரை அமைகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 566860).*

***6569***

***மௌன தேசம்: மரபுக் கவிதைத் தொகுதி.*** *ரீ.எல்.ஜவ்பர்கான். காத்தான்குடி: தாமரை கலை இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, நவம்பர் 2001. (மட்டக்களப்பு: மைக்கல் மொபைல் பிரின்டர்ஸ்).*
*97 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 20.5x14.5 சமீ.*

*கிழக்கிலங்கையின் காத்தான்குடியைச் சேர்ந்த கவிஞர் ரீ.எல்.ஜவ்பர்கான், சிந்தாமணிப் பண்ணைக் கவிஞராக முகிழ்த்தெழுந்து ஆழுமைமிக்க மரபுக்கவிதைகளை வழங்கியவர். இலங்கையில், மரபுக்கவிதையாளர்களுக்குக் களமமைத்து வளர்த்தெடுத்ததில் எஸ்.டி.சிவநாயகத்தை ஆசிரியராகக் கொண்ட தினபதி-சிந்தாமணி பத்திரிகை குறிப்பிடத்தகுந்த இடத்தை வகித்தது. பேராசிரியர் சி.மௌனகுரு, கலைவாதி கலீல் ஆகியோரின் திறனாய்வுகலந்த முன்னுரைகளுடன் கூடிய இக்கவிதைத் தொகுதியில் 18 கவிதைகள் உள்ளன.*

***6570***

***யாழமுதன் கவிதைகள்.*** *யாழமுதன் (இயற்பெயர்: குமாரசுவாமி கயிலாயபதி). யாழ்ப்பாணம்: யாழ். நாயன்மார்கட்டு சைவ அபிவிருத்திக்கழகம், 19 சிவரஞ்சனி வீதி, நாயன்மார்கட்டு, 1வது பதிப்பு, மார்ச் 1995.(யாழ்ப்பாணம்: அபிநயா பதிப்பகம், 65/1, நாயன்மார் வீதி, நல்லூர்).*
*69 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18x12.5 சமீ.*

*தனது உள்ளத்தை உறுத்திய உணர்வுகளை அந்த உணர்வுகளின் உந்துதலால் அவ்வப்போது கவிதையாக வடித்துள்ளார். பழமையும் புதுமையும் தாய்மையும் காதலும் கலந்த 30 கவிதைகள் இவை. கடலைப்பாடினாலும், தமிழர் விழாவைப் பாடினாலும் பெண்களின் எழுச்சிக்குரலை எழுப்பினாலும், தனித்தமிழ்நாடு என்ற குறிக்கோளை வெளிப்படுத்தினாலும் அவையெல்லாம் இக்கவிஞனின் உள்ளத்து உணர்வின் ஆழத்திலிருந்தே வெளிக்கிளம்புகின்றன. யாழ்ப்பாணம், சரசாலையில் 1932இல் பிறந்த யாழமுதன் தனது 21ஆவது வயதில் இலங்கை அரச சேவையில் இணைந்து, அதில் 37 வருடங்கள் பணியாற்றி, இறுதியாக யாழ். மேலதிக காணிப்பதிவாளராக இருந்தபோது ஓய்வுபெற்றவர். சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றில் தன் ஆரம்ப இடைநிலைக் கல்வியைக் கற்றுத்தேர்ந்தவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 487893).*

***6571***

***யுக ராகங்கள்: புதுக்கவிதைகள்.*** *மேமன் கவி. (இயற்பெயர்: அப்துல் கரீம் அப்துல் ரசாக்) கொழும்பு 3: எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம், 59/1 ஹட்சன் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1976. (நீர்கொழும்பு: சு.நவரத்தினராசா, சாந்தி அச்சகம்).*
*64 பக்கம், விலை: ரூபா 3., அளவு: 18.5x12 சமீ.*

*எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகத்தின் ஏழாவது வெளியீடு. சிறந்த கருத்துக்களும் படிமங்களும் கொண்டமைந்த நீண்ட கவிதைகள் இவை. ஈழத்துக் கவிஞராக அடையாளம்காணப்பட்டுள்ள மேமன்கவி இந்தியாவின் குஜராத் மாநிலத்தைச் சார்ந்த மேமன் சமூகத்தில் பிறந்தவர். தமிழில் தான் கொண்ட பற்றுறுதியால் ஈழத்துப் படைப்பிலக்கியத்தில் ஆழக்கால் பதித்தவர். 1974இல் சுதந்திரன் வார இதழில் தமிழே என் மூச்சு என்ற கவிதைவாயிலாக அறிமுகமானவர். 1990இல் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 321799).*

***6572***

***ராத்ரி... (புதுக் கவிதைகள்).*** *இப்னு அஸூமத். திருக்கோணமலை: தாகம் வெளியீட்டகம், 156 கிறீன் வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1991. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).*

viii, *24 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 18x12 சமீ.*

*தாகம் கலை இலக்கியக் குழுவினால் வெளியிடப்பட்ட புதுக்கவிதைத் தொகுப்பு இதுவாகும். நிஜங்களின் தரிசனங்களில் இருந்து விலகாமல் கவிதை சொல்லும் இத் தென்னிலங்கைக் கவிஞனின் ஆற்றல் இக்கவிதைகளில் பளிச்சிடுகின்றது. தமிழ்-சிங்கள இலக்கியங்களில் பரிச்சயமுள்ள இவர் இரு மொழிகளுக்கும் ஓர் இலக்கியப்பாலமாக நின்று செயற்பட்டுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 460799).*

***6573***

**வந்திடுமா வசந்தகாலம்: இரா-நல்லையா கவிதைகள்.** இரா.நல்லையா. களுவாஞ்சிக்குடி: *இரா-நல்லையா, பிரதான வீதி, கழுதாவளை 4, 1வது பதிப்பு, ஆடி 2008. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).*
x, *54 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x14.5 சமீ.*

*இலங்கை வங்கி பிரதம முகாமையாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியரது கவிதைகள் இத்தொகுதியை அலங்கரிக்கின்றன. அனைத்தும் மட்டக்களப்புப் பிரதேச மண்வாசனைச்சொற்களுடன் ஆசிரியரின் பல்வேறு அனுபவங்கள், உள்மனக் கிடக்கைகள், ஆத்மவிகாரங்கள், ஏக்கங்கள், சமூகப்பார்வைகள், என்பனவற்றைப் பதிவுசெய்கின்றன. தனது பிள்ளைகளுக்கும் உறவினர்க்கும் போதனை செய்வதான பாடல்களும், தான் பணியாற்றிய இலங்கை வங்கி பற்றிய பாடல்களும், நினைவஞ்சலிப் பாடல்களும் இவற்றில் உள்ளடங்குகின்றன.*

***6574***

**வலிகளைத் தாங்கி.** கு.றஜீபன். மட்டக்களப்பு: *எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, கார்த்திகை 2004. (கொழும்பு: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44 புகையிரதநிலைய வீதி, தெகிவளை).*
*168 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 18.5x12.5 சமீ.,* ISBN: *955-8715-07-7.*

*நசுக்கப்படும் ஒரு இனம் சந்திக்கும் கொடுமைகளை ஆவணப்படுத்தும் கவிதைகள் இவை. இத்தொகுப்பின் முன்னட்டையும் இக்கருத்தை நவீன ஓவியமாகச் சித்திரிக்கின்றது. எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 18ஆவது நூல். 32 கவிதைகளைக் கொண்ட இத்தொகுப்பின் கவிதைகள் அனைத்தும் கிராமத்தில் சிதறிக்கிடக்கும் சிந்தனை முத்துக்களை கவிஞரின் உணர்வலைகளால் கோர்த்து மாலையாக்கி தான் சார்ந்த சமூகத்திற்கே அர்ப்பணிப்பதாகவுள்ளது. ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட குலசிங்கம் றஜீபன் என்ற இக்கவிஞரின் புனைபெயர்களில் ஒன்று கிராமத்துக் குயில் என்பதும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். இது இவரது 2வது நூலாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 615356).*

***6575***

**வானம் சிவக்கிறது.** புதுவை இரத்தினதுரை. யாழ்ப்பாணம்: சுதாஜினி வெளியீடு, திருநெல்வேலி *கிழக்கு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1970. (சாவகச்சேரி: ஸ்ரீ ஜெயா அச்சகம்).*
*59 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 17.5x13 சமீ.*

*யாழ்ப்பாண மாவட்டம் புத்தூரைச் சேர்ந்த கவிஞர் புதுவை இரத்தினதுரையின் ஆரம்பகாலக் கவிதைகளின் தொகுப்பு. இதில் 23 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. என்னை வாழ்த்து, நான், உண்மைக் கவிதைகள், மாற்றப்பாடு, புரட்சியோங்கும், ஆளும் உரிமைகள் யாரிடம், வாழ்க்கை நடத்திடப் போரே, மக்களாட்சி காணவே, விடிவை நோக்கி, தொடங்கவேண்டும், சுடலையிற் காண்பீர், யன்னலைப் பூட்டு, மாவலியே வடக்கே போனால், இன்பம் அளிப்பதற்கே, காதலிக்கு ஓர் கடிதம், தலைச்செருக்கும் தலை குனிவும், குரல்மாற்றிக் கூவு, நெடுவழியே நடக்கின்றோம், வீரம் விளைநிலம் வியட்னாம், குருவாய் எமக்குதவினான், ஆலயவேலி அகற்றிடுவோம், நெஞ்சத்தே நிறைந்த அண்ணா, மானுடம் வென்றதம்மா ஆகிய தலைப்புகளில் இவ்வுணர்ச்சிக் கவிதைகள் அமைகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 280588).*

**6576**

**விடியலின் ராகங்கள்: கவிதைத் தொகுப்பு.** யூ.எல்.எம்.அஸ்மின். பொத்துவில் 7: ஸம்ஸம் இளைஞர் கழகம், மத்திய வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2003. (அக்கரைப்பற்று: செலக்ஷன் அச்சகம்).
112 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17x13 சமீ.

28 கவிதைகளின் தொகுப்பு. பொத்துவிலைச் சேர்ந்த யூ.எல்.எம்.அஸ்மின் தனது 14ஆவது வயதிலேயே கவிதைத்துறையில் ஈடுபட்டவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 570128).

**6577**

**விடிவெள்ளி கவிதைகள்.** விடிவெள்ளி (இயற்பெயர்: க.பே.முத்தையா). யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1964. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).
80 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18.5x12.5 சமீ.

விடிவெள்ளி க.பே.முத்தையா (31.8.1914-26.5.1964) அவர்களின் கவிதைத்தொகுதி இதுவாகும். 1936 முதல் 1964இல் மரணிக்கும்வரை ஆசிரியராகப் பணியாற்றியவர். தமிழ் அறிவு, கட்டுரைக்கதிர், தமிழ்-சூழல் பயிற்சிகள், சிலுவையும் செந்தமிழும் ஆகிய நூல்களின் ஆசிரியர். சமூகத்தொண்டன் இதழின் பத்திரிகை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். விடிவெள்ளியின் கவிதைகள் தொண்டுணர்வின் தூண்டுதலால் எழுந்தவை. மென்மையாக இழையோடிக்கொண்டிருக்கும் நகைச்சுவையும், சொல்லாட்சித்திறனும், அவற்றால் ஏற்படும் ஒரு குழைவும் இவரை நல்லதொரு கவிஞராக இனம்காட்டியுள்ளது. விடிவெள்ளியின் கவியுள்ளம், தனியுணர்வு நிலை அவரது சமய கீதங்களிலேயே அதிகமாகத் தென்படுகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 300822).

**6578**

**விபுலாநந்தர் வாழ்கின்றார்.** ஆரையூர் இளவல். (இயற்பெயர்: க.செல்லத்தம்பி). ஆரையம்பதி: ஸ்ரீ முருகன் இந்து மன்றம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1991. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம், 65, லேடி மனிங் டிறைவ்).
24 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 21x14 சமீ.

சுவாமி விபுலாநந்தரின் நூற்றாண்டு விழாக் காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் கவிஞர் ஆரையூர் இளவல் இயற்றிப் பாடிய பாடல்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இப்பாடல்களில் விபுலாநந்தர் பற்றி பல செய்திகளும், அவரது பணிகளும் பொதிந்துள்ளன. நூலாசிரியர் ஈழத்தின் பிரபல நாடகக் கலைஞரும், பேச்சாளரும், எழுத்தாளருமாவார்.

**6579**

**விபுலானந்தர் அம்மானையும் அவரது இரு மாணவர்களினதும் வாழ்க்கை வெண்பாவும்.** ஈழத்துப் பூராடனார் (இயற்பெயர்: க.தா.செல்வராசகோபால்). எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா: ஜீவா பதிப்பகம், 1வது பதிப்பு, ஐப்பசி 1992. (கனடா: நிப்ளக்ஸ் அச்சகம், 1108 Bay Street, Toronto, Ontario M5S 2WM).
xxviii, (4), 83 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

சுவாமி விபுலானந்தரின் வாழ்வும் பணிகளும் பற்றிய செய்திகளை எளியநடையில் அம்மானைவடிவில் வழங்கியுள்ளார். கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்தபோது அமரத்துவமடைந்த ஈழத்துப் பூராடனார் (1928-2011) மட்டக்களப்புப் பிரதேசத்தில் செட்டிபாளையம் என்ற ஊரில் பிறந்தவர். ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். 250 நூல்களுக்குமேல் எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார். இது இவரது 121ஆவது நூலாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 444868).

**6580**

**விற்பனைக்கு ஒரு கற்பனை.** ஆரையூர் தாமரை. (இயற்பெயர்: தாமரைச்செல்வி செல்லத்தம்பி). கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, 25, அவ்வல் சாவியா வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (கொழும்பு 13: டிசைன் லாப், 173-P2,ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை).
viii, 70 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-095-06-8.

மட்டக்களப்பு, ஆரையம்பதியைச் சேர்ந்த ஆரையூர் தாமரை மட்டக்களப்பு புனித வின்சன்ட் மகளிர் உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவி. உளவியல்துறையில் பட்டம்பெற்றவர். மண்முனைப்பற்று பிரதேச செயலக கலாசாரப் போட்டி, வடகிழக்கு மாகாண தமிழ்த் தினப் போட்டி போன்றவற்றில் பரிசுகளைப்பெற்ற கவிதைகளையும் உள்ளடக்கிய இத்தொகுப்பு இவரது முதலாவது நூலாகும். இக்கவிதைத் தொகுதி புரவலர் புத்தகப் பூங்காவின் சர்வதேச மகளிர்தினச் சிறப்பு வெளியீடாகவும் புரவலர் புத்தகப் பூங்காவின் 23ஆவது வெளியீடாகவும் பிரசுரமாகியுள்ளது.

**6581**
**வெற்றி (கவிதைகள்).** கண்டி எம்.ராமச்சந்ரன் (இயற்பெயர்: ஆர்.முத்துக்கருப்பன்). கண்டி: எம்.ராமச்சந்ரன், 2/1 ரிவடேல் ரோட், அனிவத்தை, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2005. (கண்டி: வெனுஷா. இல.30, பேராதெனிய வீதி).
x, 90 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x12.5 சமீ.

இந்நூலில் அதிசயம், பதுமை, புதிர், வோல்ட்டேர், தாயுள்ளம், முதலாய தலைப்புகளில் அமைந்த 50 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 607628).

**6582**
**வெற்றிலை நினைவுகள்: கவிதைகள்.** ஜோர்ஜ் ஜெஸ்ரின். கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, 25, அவ்வல் சாவியா வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2009. (கொழும்பு 13: டிசைன் லாப், 173-P2,ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை).
x, 70 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-095-01-5.

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த நூலாசிரியர் ஒரு நாடகக் கலைஞனாகவும், கவிஞனாகவும், ஊடகவியலாளனாகவும் பல்பரிமாணங்களில் தன்னை இனம்காட்டி வருபவர். அவரது செயல் வீச்சக்களுடன் இணைந்த ஆளுமையின் வெளிப்பாடாக அவரது கவிதைகள் அமைந்துள்ளன. சிறுமை கண்டு சீறும் ஆவேசம் இவரது கவிதைகளில் ஊடுபரவியுள்ளன.

**6583**
**வேர்கள் அற்ற மனிதர்கள்.** மருதநிலா நியாஸ் (இயற்பெயர்: அபூபக்கர் முகம்மட் நியாஸ்). கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, 25, அவ்வல் சாவியா வீதி, 1வது பதிப்பு, மே 2009. (கொழும்பு 13: டிசைன் லாப், 173-P2,ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை).
x, 56 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-095-00-8.

சாய்ந்தமருதைப் பிறப்பிடமாகக் கொண்ட அபூபக்கர் முகம்மட் நியாஸ் பேராதனைப் பல்கலைக்கழகக் கலைமாணிப்பட்டதாரி. மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியில் விரிவுரையாளர். 1997இல் இந்தநாள் நல்லநாள் எனும் கவிதைமூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகமானவர். நிரந்தரமில்லாத மனிதனின் எண்ணங்களும் செயற்பாடுகளும் அரசியல், போர், காதல், இயற்கை, தொழிலியல், வாழ்வியல், அன்பு போன்றவற்றின் ஊடாகப் பயணிக்கும்போது ஏற்படுத்தும் தாக்கங்களையும் பிரதிபலிப்புகளையும் மனித நேயத்துடன் தொடர்புபடுத்தி நோக்குபவையாக அமைந்ததிருப்பதே இக்கவிதைத் தொகுப்பின் வெளிப்பாடாகும். புரவலர் புத்தகப் பூங்காவின் 17ஆவது வெளியீடு இதுவாகும்.

**6584**
**வைகறையில் ஒரு வானம்பாடி.** இரா.சம்பந்தன். கொழும்பு 6: உமா பதிப்பகம், 521/1B, காலி வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).
xii, 204 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 19x13 சமீ., ISBN: 978-955-1162-32-0

*ஜெர்மனியில் வாழும் ஈழத்துக் கவிஞர் கவிவாணன் இரா. சம்பந்தனின் புதுக்கவிதைத் தொகுதி. உணர்ச்சிகளுக்கும் படிமங்களுக்கும் குறியீடுகளுக்கும் இடமளித்து, கவிஞன் விரும்பியவாறான உத்தி நிலைகளை வகுத்து தனக்கு வாலாயமான சொல்லாட்சியினூடு கவிதாமொழியைப் பிறப்பித்து தன்னை எவ்வாறெல்லாம் பாதித்த உணர்ச்சியூட்டிய பாடுபொருள்களை நிலைக்களனாகக் கொண்டு சம்பந்தனின் படைப்புலகம் காணப்படுகின்றது. தாயகத்து நினைவுகளும் நிலவரங்களும் ஒரு புறமாகவும், புலம்பெயர்ந்த நாட்டு அனுபவங்கள் மறுபுறமாகவும் கவிஞரை ஆட்கொண்டுள்ளன. இத்தொகுதியில் வியப்புகள், விதிப்புகள், கொதிப்புகள், தெறிப்புகள், தெளிவுகள், வாழ்த்துக்கள், வருத்தங்கள் ஆகிய ஏழு பிரிவுகளின் கீழ் 66 கவிதைகள் உள்ளடங்குகின்றன. ஐந்து வரிக் கவிதைகளிலிருந்து ஆறு பக்கக் கவிதைகள் வரை இங்கே இடம்பிடித்துள்ளன.*

**மேலும் பார்க்க:** *6113, 6618, 6687, 6893*

### *894.8(2) தமிழ் நாடகங்கள்*

***6585***

***அரங்க அலைகள்.*** *சுதாகரி மணிவண்ணன். பொல்கொல்லை: சிந்தனை வட்டம், த.பெ.இல. 01, பொல்கொல்லை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2010. (உடத்தலவின்ன: சீ.வீ.பப்ளிஷர்ஸ், 14 உடத்தலவின்ன மடிகே).*
*64 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 160., அளவு: 21x15 சமீ.,* ISBN: *978-955-1779-40-5.*

*பாடசாலையில் மேடையேற்றிப் பரிசுபெற்ற நாடகங்களின் பிரதியாக்கங்களின் தொகுப்பு. ஒற்றுமையே பலம், யுத்தமுதிர்க்கும் சருகுகளாய், பலம், சூழலைப் பாதுகாப்போம், சரிநிகராய், விழுதுகள் ஆகிய ஆறு நாடகங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சுதாகரி மணிவண்ணன் கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் பட்டம் பெற்றவர். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தன் முதுமாணிப் பட்டப்படிப்பைக் கல்வியியல்துறையில் மேற்கொண்டவர். செங்கலடி மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார்.*

***6586***

***அரங்க ஆற்றுகைகளும் ஆய்வு வழிகாட்டியும்.*** *கதிர்காமத்தம்பி அருளானந்தன். பருத்தித்துறை: சிவசாயிகலா மன்றம், கார்த்திகேசர் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2003. (யரழ்ப்பாணம்: ஸ்ரீராம் ஓ.ஃ.ப்செற் பிரின்ரேர்ஸ், 250, பலாலி வீதி, கந்தர்மடம்).*
*(24), 152 பக்கம், விலை: ரூபா 210., அளவு: 20.5x15 சமீ.,* ISBN: *955 98507 0 9.*

*இந்நூலின் முதற் பிரிவில் மநுநீதிச் சோழன் (இலக்கிய நாடகம்), மகிடாசுரன் வதம் (புராண ஆட்டக்கூத்து), சத்தியவேள்வி (இலக்கிய இசை நாடகம்) ஆகிய மூன்று மாணவர் அரங்க ஆற்றுகைகள் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் பிரிவில் 1900 முதல் 1990வரை இலங்கையில் வெளிவந்துள்ள தமிழ் நாடக நூல்கள் பற்றிய தேர்ந்த நூல்விபரப்பட்டியல் ஒன்று இடம்பெற்றுள்ளது. மூன்றாம் இறுதிப் பிரிவில் மூத்த கலைஞர்கள், வெள்ளிவிழாக் கலைஞர்கள், மூத்த நாடக ஆர்வலர்கள் ஆகியோரின் நேர்காணல்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 574162).*

***6587***

***அன்றில் பறவைகள்: நாடகம்.*** *அகளங்கன். வவுனியா: முத்தமிழ்க் கலாமன்றம், 1வது பதிப்பு, பங்குனி 1992. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம், 65, லேடி மனிங் டிரைவ்).*
xii, *85 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 21.5x14 சமீ.*

*1987-91 காலப்பகுதியில் எழுதப்பெற்றவையான அம்மா நான் வெளிநாடு போகிறேன், அன்றில்ப் பறவைகள், அவர்கள் படித்தவர்கள், இயந்திர இல்லறம், உருகி எரியும் கற்பூரங்கள் ஆகிய 5 வானொலி நாடகங்களின் தொகுப்பு. இதில் இடம்பெறும் உருகி எரியும் கற்பூரங்கள் என்ற நாடகம் சர்வதேச ஆசிரிய தினத்தையொட்டி, அகில இலங்கை ரீதியில் ஆசிரியர்களுக்கிடையே நடாத்தப்பட்ட*

நாடகப் பிரதியாக்கப் போட்டியில் முதற்பரிசைப் பெற்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 479645).

### 6588

**ஆறு நாடகங்கள்.** நூல் வெளியீட்டுக் குழு. யாழ்ப்பாணம்: தமிழ் இலக்கிய மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஆவணி 1979. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம், 310 மணிக்கூட்டு வீதி).
(8), 212 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 20.5x13.5 சமீ.

மஹாகவியின் "புதியதொரு வீடு", நா.சுந்தரலிங்கத்தின் "விழிப்பு", பௌசுல் அமீரின் "ஏணிப் படிகள்", மாவை தி.நித்தியானந்தனின் "ஐயா லெக்சன் கேக்கிறார்", ஜே.எம்.சிங்கின் "கடலின் அக்கறை போவோர்", குழந்தை சண்முகலிங்கத்தின் "கூடி விளையாடு பாப்பா" என்ற சிறுவர் நாடகம் ஆகிய ஆறு பிரபல தமிழ் நாடகங்களின் தொகுப்பு. இந்நூல் வெளியீட்டுக்குழுவில் மல்லிகா கனகரத்தினம், சுமத்திரி சிவசுப்பிரமணியம், பத்மினி சுப்பையா, க.சிதம்பரநாதன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 334905).

### 6589

**இதோ ஒரு நாடகம்: நகைச்சுவை நாடகம்.** பொ.சண்முகநாதன். அச்சுவேலி: தமயந்தி பதிப்பகம், 1வது பதிப்பு, நவம்பர் 1973. (யாழ்ப்பாணம்: திருச்செல்வி அச்சகம், தட்டாதெரு).
42 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12.5 சமீ.

இரண்டு கதைக்களங்களுடன் ஒரேயொரு பெண்பாத்திரதையும் சில ஆண் பாத்திரங்களையும் கொண்டு உருவாக்கப்பெற்ற நகைச்சுவை மேடை நாடகம். நகைச்சுவை எழுத்தாளரான பொ.சண்முகநாதன் மானிப்பாய், சங்குவேலியைச் சேர்ந்தவர். ஏற்கெனவே கொழும்புப் பெண், வெள்ளரி வண்டி, பெண்ணே நீ பெரியவள் தான் ஆகிய மூன்று நூல்களை வெளியிட்டவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 485822).

### 6590

**இராமாயணம் அயோத்தியா காண்டம்: பாதுகா பட்டாபிஷேகம்.** ம.வே.திருஞான சம்பந்தப்பிள்ளை. யாழ்ப்பாணம்: ம.வே.திருஞானசம்பந்தன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, 2வது பதிப்பு, குரோதன ஆண்டு, மாசி 1926, 1வது பதிப்பு, 1919. (யாழ்ப்பாணம்: கிளவ் யந்திரசாலை).
(8), 110 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 20x14 சமீ.

இது நாடகரூபமாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியரும் இந்து சாதன பத்திரிகாசிரியரும் சரஸ்வதி விலாசசபை நாடகாசிரியருமாகிய ம.வே.திருஞானசம்பந்தப் பிள்ளையால் எழுதப்பெற்று, சரஸ்வதி விலாசசபை சங்கீதாசிரியராகிய வை.இராமநாதனவர்கள் இயற்றிய பாக்களுடன் வெளியிடப்பட்டுள்ளது. அயோத்தியாபுரி, சித்திரகூடத்திற்குச் செல்லும் மார்க்கம், சித்திரகூடம், நந்திக் கிராமம் ஆகிய நான்கு இடங்களில் கதை நிகழ்கின்றது. கதாபாத்திரங்களாக அயோத்தி நாட்டுச் சக்கரவர்த்தி தசரதர், கோசலையின் மகன் ஸ்ரீராமர் (கதாநாயகன்), கைகேசியின் மகன் பரதன், சுமித்திரையின் புதல்வர்கள் இலட்சுமணன், சத்துருக்கன், தசரதரது முதன்மந்திரி சுமந்திரன், குலகுரு வசிட்டர், பரத்துவாசர் முனிவர், சிரிங்கிபேரம் என்ற நாட்டு வேட்டுவ அரசன் குகன் ஆகியோரும், தசரதரின் மனைவிமார் கோசலை, கைகேசி, சுமித்திரை, ஸ்ரீராமரின் தேவி சீதை எனும் ஜானகி, கைகேசியின் தோழி மந்தரை எனும் கூனி ஆகியோரும் பிரதான பாத்திரங்களாக வலம்வருகின்றனர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37486).

### 6591

**இலக்கிய நாடகங்கள்.** அகளங்கன். (இயற்பெயர்: நா.தர்மராஜா). வவுனியா: வவுனியா முத்தமிழ் கலாமன்றம், பம்பைமடு, 1வது பதிப்பு, ஆவணி 1994. (வவுனியா: சுதன் அச்சகம்).
xiv, 120 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21.5x14 சமீ.

கணித ஆசிரியராகப் பணியாற்றும் அகளங்கன் வன்னிமண்ணின் முக்கிய படைப்பாளிகளுள் ஒருவர். கதை, கவிதை, கட்டுரை, நாடகம் எனப் பல்வேறு வடிவங்களில் 12 நூல்களை வெளியிட்ட இவரது 13வது நூலாக இந்நாடக நூல் வெளிவந்துள்ளது. இதில் பப்புரவாகனன், பாரி வள்ளல், புத்திரசோகம், செஞ்சோற்றுக் கடன், சிலம்பு பிறந்தது, ஆனை கட்டிய அரியாத்தை ஆகிய ஆறு நாடகங்கள் இடம்பெறுகின்றன. அகளங்கனுக்கு வவுனியா இந்து மாமன்றம் காவிய மாமணி என்ற பட்டத்தையும், இந்து கலாசார இராஜாங்க அமைச்சு தமிழ்மணி என்ற பட்டத்தையும் ஏற்கெனவே வழங்கியுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 462585).

**6592**

**கந்தன் கருணை.** N.K.ரகுநாதன், அம்பலத்தாடிகள், நடிகர் ஒன்றியம். கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, 44, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கூட்டுத் தொகுதி, 1வது பதிப்பு, ஜனவரி 2003. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207 சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).
vi, 186 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x13.5 சமீ., ISBN: 955-8567-03-5.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 100ஆவது நூல். என்.கே.ரகுநாதன் எழுதிய கந்தன் கருணை ஓரங்க நாடகத்தையும், அம்பலத்தாடிகள் எழுதிய கந்தன் கருணை காத்தான்கூத்துப் பாணி இசைநாடகத்தையும், நடிகர் ஒன்றியம் வழங்கிய கந்தன் கருணை நாடகத்தையும் இந்நூல் உள்ளடக்குகின்றது. இப்பதிப்பில் பின்னிணைப்பாக, இளைய பத்மநாதன், இ.சிவானந்தன், சி.மௌனகுரு, க.சொக்கலிங்கம், இ.முருகையன், சி.கா.செந்திவேல், எச் .எம்.பி.முஹிதீன், ஏ.சீ.தாசீசியஸ் ஆகியோரின் கருத்துக்களும் இடம்பெறுகின்றன. இதே தலைப்பில் இந்நாடகம் முன்னர் 16 பக்கங்கள் கொண்ட பிரசுரமாக டிசம்பர் 1999இல் வெளியிடப்பட்டது. பார்க்க நூல்தேட்டம் பதிவிலக்கம் 4527. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 566540).

**6593**

**கல்பொளி கொண்ட கவி.** S.I.M.A.ஜப்பார். புத்தளம்: இளம் முஸ்லிம் பட்டதாரிகள் சங்கம், இணை வெளியீட்டாளர்: கல்பிட்டி: அந்நூர் இளைஞர் கழகம், 1வது பதிப்பு, நவம்பர் 1997. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
(10), 22 பக்கம், விலை: ரூபா 45., அளவு: 22x14 சமீ.

வரகவி ஷேகு அலாவுதீன் புலவர் அவர்களின் வாழ்க்கைச் சரிதையை ஆதாரமாகக்கொண்ட முஸ்லிம் இலக்கிய நாடகம். இது முன்னர் 1992ஆம் ஆண்டு மார்ச் 2ம் திகதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பப்பட்டது. இந்நாடகத்தின் களமும் பின்னணியும் புத்தளப் பிரதேசத்திற்குரியன. நூலாசிரியர் லியாவுல்பன்னான் அல்ஹாஜ் S.I.M.A.ஜப்பார், கல்பிட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

**6594**

**காமாட்சியும் ஒரு கண்ணகி தான்: நாடகங்கள்.** ஜெகநாதன் சுகுமாரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்ரீமுருகன் ஆப்செட்).
xiv, 142 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18x12.5 சமீ.

25 ஆண்டுகளுக்கு மேலாக மலையக நாடகத்துறையில் ஈடுபட்டுவரும் நுவரெலியா கே.சுகுமாரனின் 5 மேடை நாடகங்களினதும் ஒரு தொலைக்காட்சி நாடகத்தினதும் தொகுப்பு. மலையக மக்களின் தாழ்ந்த நிலைக்கு அவர்கள் கல்வியில் பின்தங்கியிருப்பதும், தமது ஊதியத்தை விரயமாக்குவதும், மதுப்பழக்கத்துக்கு எளிதில் அடிமையாவதும் முக்கிய காரணங்கள் என்று தன் நாடகங்களில் வலியுறுத்துகின்றார். பல்வேறு சமூகச்சீர்கேடுகளையும் தன் நாடகங்களில் காட்டி அதுபற்றிய விழிப்புணர்வினை ஊட்டமுயன்றுள்ளார். இந்நூலில் மறுமலர்ச்சி, அவள் வெளிநாடு போகிறாள், நீதி தவறாத சோழன், காமாட்சியும் ஒரு கண்ணகிதான், யார் காரணம் ஆகிய மேடை நாடகங்களும், காயத்திரி என்ற தொலைக்காட்சி நாடகமும் இடம்பெற்றுள்ளன. நுவரெலியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஜெகன் ஜெய்குமார் என்ற புனைபெயரிலும் அறிமுகமாகியுள்ளார்.

**6595**

**சக்காராம் பைண்டர்.** விஜய் டெண்டுல்கார் (மராத்திய மூலம்), கலைச்செல்வன் (தழுவலாக்கம்). கொழும்பு 6: இலக்கிய முற்றம், இல. 46, பிரட்றிகா றோட், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (கொழும்பு 13: டிசைன் லாப், 173-P2,ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை).
xvi, (2), 78 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-518-03-1.

புரவலர் ஹாசிம் உமர் பற்றிய முதலாவது நூலை "புரவலர் சில பதிவுகள்" என்ற தலைப்பில் வெளியிட்ட இலக்கிய முற்றத்தின் இரண்டாவது வெளியீடு இது. மராத்திய நாடகமான சக்காராம் பைண்டர் ஆங்கில வழியில் தமிழுக்கு அறிமுகமாகின்றது. மானிட உள்ளங்களில் நீறுபூத்த நெருப்பாய் மறைந்திருக்கும் இருள்சூழ்ந்த பகுதிகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் ஓர் உளவியல் நாடகம் இது. நடுத்தர வயதும் மிடுக்கான தோற்றமும் கொண்ட சக்காராம் பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவன். கதாநாயகனான இவனது தொழில் புத்தகம் கட்டுவது. கணவனால் கைவிடப்பட்டும் அவனையே நேசிக்கும் அபலைப்பெண் லக்ஷ்மி இதன் கதாநாயகி. இவர்களைச் சுற்றிப் பின்னப்படும் இக்கதையில் சக்காராமின் நம்பிக்கைக்குரிய நண்பன் தாவூத், வசீகரத் தோற்றமும் துணிச்சலும் மிக்கவளான சம்பா, காவல் துறையில் பணியாற்றும் சம்பாவின் கணவனும் மதுவுக்குத் தன்னை அடிமையாக்கிக் கொண்டவனுமான ராஜேஷ் ஆகியோர் பிறபாத்திரங்கள். 1985இல் கொழும்பு, மருதானை டவர் மண்டபத்தில் இந்நாடகம் முன்னர் மேடையேறியது.

**6596**

**சலங்கை ஒலி: வானொலி நாடகங்கள்.** பாலாம்பிகை நடராஜா. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆ∴ப்செட்).
280 பக்கம், விலை: இந்திய ரூபா 65., அளவு: 18x12 சமீ.

சலங்கை ஒலி, விட்டில்பூச்சி, சிவப்பு பங்களா, வெள்ளோட்டம், கற்பூரம், இரு சகோதரிகள், சுயம்வரம், வைத்தியரின் விருந்தினன், 10ஆம் நம்பர் அறை நண்பன், பிரேத மனிதன், மகிமையானவர், முடிந்த முடிவு ஆகிய 12 நாடகங்கள் கொண்ட தொகுப்பு. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 598885).

**6597**

**சிலப்பதிகாரத்தில் சிலை எடுத்த சேரன்.** நவாலியூர் நா.செல்லத்துரை (புனைப்பெயர்: நவாலியூரான்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 15: எம்.கே. என்டர்பிரைசஸ்).
xx, 116 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 17.5x12 சமீ.

கற்பனை கலந்த இந்த இலக்கிய நாடகத்தில் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் என்ற கதைக்கு நாடக உருவம் கொடுக்கப்பட்டுள்ளது. கண்ணகி தன் கணவனான கோவலனுக்கு அநீதியாக மரண தண்டனை விதித்த பாண்டிய வேந்தன் நெடுஞ்செழியனோடு வாதாடி வழக்குரைத்து கோவலன் நிரபராதி என்று நிறுவியதோடு கோல்கோடிய வேந்தனையும் அவன் பட்டத்தரசி கோப்பெருந் தேவியையும் இறக்கவைத்தமை, மதுரை மாநகரையே தீக்கிரையாக்கியமை, பின்னாளில் அவளுக்குச் சேரன் செங்குட்டுவன் வடநாட்டிலிருந்து கல்லெடுத்து வந்து, வடநாட்டு அரசராகிய கனகவிசயரை வென்று அவர்களின் தலைமீது கல்சுமத்தி கோயில் சமைத்து விழா எடுத்தமை ஆகிய கதைப் பகுதிகளைக் கருவாகக் கொண்ட இந்நாடகம் சற்றே கற்பனை கலந்து உருவாக்கப்பட்டுள்ளது.

**6598**

**நரி மாப்பிள்ளை: குறுநாடகம்.** சின்னையா சிவநேசன். கொழும்பு 3: மயிற் (Mite) தாபனம், 9-15ஆம் ஒழுங்கை, 1வது பதிப்பு, மார்ச் 1971.(கொழும்பு: ராஜாமணி பிரஸ், 50, மலே வீதி).
25 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 22x14 சமீ.

ஒரு சிங்கள நாடோடிக் கதையை மூலமாகக் கொண்ட தமிழ் நாடகம். நரிபானா என்ற பெயரில் தயானந்த குணவர்த்தனா இதனை முதலில் சிங்களத்தில் மேடையேற்றினார். நூலாசிரியர் சின்னையா சிவநேசன் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்தவர். தமிழகத்தில் கிறிஸ்தவக் கல்லூரியில் உயர்கல்வியைப்பெற்றவர். இலங்கை அரசாங்கத்தின் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 286419).

**6599**

**நாவலர் நாடகம்.** கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார். நாவலப்பிட்டி: ஆத்மஜோதி பதிப்பகம், 1வது பதிப்பு, 1971. (நாவலப்பிட்டி: ஆத்மஜோதி அச்சகம்).
(12), 123 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18x12.5 சமீ.

ஆறுமுக நாவலரின் வாழ்க்கை வரலாற்றில் இடம்பெற்ற சுவையான சம்பவங்கள் சிலவற்றைத் தேர்ந்து இந்நாடகம் உருவாக்கப்பட்டுள்ளது. சுத்தானந்த பாரதியாரின் இலங்கை விஜயத்தின்போது, நாவலப்பிட்டி, ஆத்மஜோதி நா.முத்தையா அவர்களின் வேண்டுகோளின்பேரில் இது உருவாக்கப்பட்டுள்ளது. ஞானப்பிரகாசர், குருக்கள், ஆறுமுகநாவலர், சிவகாமியம்மையார், தில்லைநாயகம், அண்ணல் தியாகு, மிஸ்டர் நவீனம், விசுவநாதபிள்ளை, பீட்டர் பார்சிவல் துரை, தெய்வசிகாமணிப்புலவர், கந்தர்மடப்பிரபு, அம்பலவாண தேசிகர், சுப்பிரமணிய தேசிகர், தாண்டவராய சுவாமிகள், மீனாட்சி சுந்தரம்பிள்ளை, பொன்னுசாமித் தேவர், முத்துராமலிங்க சேதுபதி, பொன் இராமநாதன், குன்றக்குடி ஆதீனம், தவசிப்பிள்ளை சாமிநாதன், துவைனன் துரை, திருவண்ணாமலை ஆதீனம், ஆகியோர் இந்நாடகத்தில் பாத்திரங்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 279108).

**6600**

**நானாடகம்.** க.கணபதிப்பிள்ளை. கொழும்பு: க.கணபதிப்பிள்ளை, 1வது பதிப்பு, விக்கிரம வருடம் வைகாசி 1940. (அச்சக விபரம் தரப்படவில்லை).
xiii, 193 பக்கம், படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x11.5 சமீ.

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை (1903-1968) அவர்கள் எழுதிய ஈழத்துத் தமிழர் சமுதாய நிலையைச் சித்திரிக்கும் நான்கு சமூகநாடகங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவை யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் அப்பிரதேசப் பின்புலத்தில் அமைந்தவை. உடையார் மிடுக்கு, முருகன் திருகுதாளம், கண்ணன் கூத்து, நாட்டவன் நகரவாழ்க்கை ஆகிய நான்கு நாடகங்களில் முதல் மூன்றும் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரித் தமிழ்ச்சங்கத்து ஆண்டுவிழாக்களில் சங்கத்து மாணவ-மாணவியர் நடித்து அரங்கேறிப் பாராட்டுகளைப் பெற்றிருந்தன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 386550).

**6601**

**நிவாரணம்: மேடை நாடகத் தொகுப்பு.** தேவ-அலோய்சியஸ் (புனைபெயர்: கலை அலோய்). மட்டக்களப்பு: பைன் ஆர்ட்ஸ் கலைக்கழகம், 72 கதிர்காமர் வீதி, மட்டிக்களி, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (மட்டக்களப்பு: மைக்கல்ஸ் மொபைல் பிரிண்டர்ஸ், 355 திருமலை வீதி).
102 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 21.5x14.5 சமீ.

மட்டக்களப்பு மண்ணிலிருந்து வெளிவரும் இந் நாடகநூலில் அறுவடை, பிளவுகள், நிவாரணம், உறுதிமனம், நியதிகள், கிழக்கு வானம் ஆகிய ஆறு மேடை நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 560751).

**6602**

**நீறுபூத்த நெருப்பு: நாடகங்கள்.** ஆரையூர் இளவல். (இயற்பெயர்: க.செல்லத்தம்பி). ஆரையம்பதி: அன்பு வெளியீடு, 1வது பதிப்பு, மார்ச் 1996. (மட்டக்களப்பு: புனிதவளனார் கத்தோலிக்க அச்சகம், இல.10, வழக்கறிஞர் தெரு).
xii, 111 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: ரூபா 75., அளவு: 21.5x14 சமீ.

புராணக்கதையைத் தழுவி எழுதப்பட்ட வினை தீர்க்கும் விநாயகன், இதிகாசக்கதையைத் தழுவி எழுதப்பட்ட நீறுபூத்த நெருப்பு, சமூகக்கதையான ஆனந்தக் கூத்து ஆகிய மூன்று நாடகங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அனைத்தும் கிழக்கிலங்கையில் பல தடவைகள் மேடையேற்றம் கண்டவை.

**6603**

**படிப்பும் நடிப்பும்.** அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: ந.சுந்தரம்பிள்ளை, கடைச்சாமி வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, 2007. (யாழ்ப்பாணம்: கங்கை பிரிண்டர்ஸ், 781, காங்கேசன்துறை வீதி, சிவலிங்கப்புளியடி).
xii, 122 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14.5 சமீ.

மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான 8 நவீன நாடகங்கள் இத்தொகுப்பில் இடம்கொண்டுள்ளன. பிறந்தநாள் கொண்டாட்டம், உடுப்பும் படிப்பும், படிப்பும் நடிப்பும், நல்ல அதிபர், ஒரு கொட்டில் பாடசாலை, புனிதப்பணி, தவிப்பு, அவலம் ஆகிய நாடகங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் இரண்டு நாடகங்கள் ஏற்கெனவே வானொலியில் ஒலிபரப்பானவை. எஞ்சிய ஆறும் இந்நூலுக்கென எழுதப்பட்ட இலங்கை மண் வாசனை நாடகங்கள். ஒவ்வொரு நாடகத்தைப்பற்றிய குறிப்பும், இலங்கைத் தமிழ் நாடகம் என்ற ஆசிரியரின் கட்டுரையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 618334)

**6604**

**பெண்களும் மனிதர்கள் என்றுணர: நாடக எழுத்துரு.** து.கௌரீஸ்வரன், த.விவேகானந்தராசா. மட்டக்களப்பு: மூன்றாவது கண் பதிப்பு, உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு, சீலாமுனை, 1வது பதிப்பு, ஐப்பசி 2007. (மட்டக்களப்பு: வணசிங்கா அச்சகம், 126/1, திருமலை வீதி).
viii, 28 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 50., அளவு: 20.5x15 சமீ.

மட்டக்களப்பு கல்லடி விவேகானந்தா மகளிர் மகாவித்தியாலயத்தில் 2006ஆம் ஆண்டின் தமிழ்மொழித்தின நாடகப் போட்டிக்காக தரம் 8 முதல் 12 வரையான மாணவர்களுடன், மூன்றாவது கண் உள்ளூர் அறிவுதிறன் செயற்பாட்டுக் குழுவைச்சேர்ந்த இந்நூலாசிரியர்கள் இணைந்து மேற்கொண்ட நாடக உருவாக்கத்திற்கான களப்பயிற்சிகளினூடாக ஆக்கப்பட்ட நாடகத்தின் எழுத்துரு இந்நூலில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. பொறுப்பாளர்கள் இக்களப்பயிற்சி பற்றிய தமது அனுபவங்களையும் கட்டுரை உருவில் பகிர்ந்துகொண்டுள்ளனர். தமது களச்செயற்பாட்டு அனுபவங்களை பிற செயற்பாட்டாளர்களுடன் பகிர்ந்துகொள்ளும் வகையில் இந்நூல் வெளியிடப்படுகின்றது.

**6605**

**மச்சானைப் பாத்தீங்களா: நகைச்சுவை நாடகம்.** இரா.பாலச்சந்திரன். யாழ்ப்பாணம்: என்.செல்லையா, ஷர்மிளா ஆர்ட்ஸ், 1வது பதிப்பு, ஜுலை 1977. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம்).
(6), 74 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 18x12 சமீ.

இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான நூலாசிரியர், இலங்கை மக்கள் வங்கியில் அலுவலராகப் பணியாற்றியவேளையில் எழுதிய நாடக நூல் இதுவாகும். கிராமியத் தமிழில் எழுதப்பட்ட இந் நகைச்சுவை நாடகம் இலங்கையில் மேடையேற்றமும் கண்டது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 485814).

**6606**

**மலராத மொட்டுக்கள்.** எஸ்.கே.தங்கவடிவேல். மொரட்டுவை: எஸ்.கே.தங்கவடிவேல், B-9, 3/7 சொய்சாபுர தொடர்மாடி, 1வது பதிப்பு, ஜுன் 2009. (கொஹுவல: கார்ல்டன் அச்சகம், இல.66, துட்டுகைமுனு வீதி).
(2), 76 பக்கம், விலை: ரூபா 140., அளவு: 21x15 சமீ,, ISBN: 978-955-51686-0-1.

கலைஞானகேசரி பட்டத்தினை இந்து சமய கலாசார அமைச்சிடமிருந்து பெற்றுக்கொண்ட எஸ்.கே.தங்கவடிவேலின் **மலராத மொட்டுக்கள், ஐ லைக் யாழ்ப்பாணம் பட்...** ஆகிய இரண்டு மேடை நாடகங்களையும், **மங்களிக்கா** என்ற சிறுகதையையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது. மலராத மொட்டுக்கள் யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தில் காணப்படும் சீதனப் பிரச்சினையை மையமாகக்கொண்டு 1994இல் மேடையேறிய நாடகம். ஐ **லைக் யாழ்ப்பாணம் பட்...** என்ற நாடகம் நமது பெருமைகளை அந்நியரின் மூலம் கேட்டு அறியும் சூழலை விளக்குகின்றது. **மங்களிக்கா** என்ற சிறுகதை இனங்களிடையே புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டது. நூலாசிரியர் யாழ்ப்பாணம், கோப்பாய், பழையவீதியைச் சேர்ந்தவர்.

**6607**

**மலையாண்டி: மண்வாசனை நாடகங்கள்.** கண்டி எம்.ராமச்சந்ரன். கண்டி: எம்.ராமச்சந்ரன், ரிவடேல் ரோட், அனிவத்தை, 1வது பதிப்பு, எப்ரல் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).
x, 58 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-97213-4-8.

முகமும் முகவரியும், சு/அ பசகுணமா, சிக்சர்ஸ், மயிலும் சேவலும் மம்மட்டியும், நீல எழில் மயில், ஆராயி ஆராய்வு, தேர்தல் முடிவு, ரிப்போர்ட்டர்ஸ் - சாதி -சப்போர்ட்டர்ஸ், கேள்வி... கிண்டல் ஆகிய ஒன்பது நாடகங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மலையகத்தவரான ராமச்சந்திரன் ஈ.வே.ரா.பெரியாரின் சிந்தனைகளை உள்வாங்கிக்கொண்டவர். தனது எழுத்துக்களில் வித்தியாசத்தைப் புகுத்தி எழுதிவருபவர். கை என்ற சொல்லை கய் என்று எழுதும் இவரது படைப்புக்கள் பலராலும் விமர்சனத்துக்குள்ளாகி வந்துள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 583773).

**6608**

**மனிதர்கள்: மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான 12 நவீன நாடகங்கள்.** அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: கடைச்சாமி வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, 2006. (யாழ்ப்பாணம்: கங்கை பிரின்டர்ஸ், 781 காங்கேசன்துறை வீதி, சிவலிங்கப்புளியடி).
viii, 168 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

பன்னிரு ஈழத்துத் தமிழ் நாடகங்களையும், ஆறு கட்டுரைகளையும் கொண்ட தொகுப்பு. அவசரம், மனிதர்கள், பெண் பார்க்கும் படலம், அவன் வெளிநாடு போகிறான், அப்பன் அருமை, ஒரு ஆசிரியர் ஓய்வுபெறுகிறார், பூந்தோட்டம், நாடகப் போட்டி, இடம்பெயர்வு, மோட்டார் சைக்கிள், மட்டை அடி, சாதிகள் இல்லையடி பாப்பா ஆகிய பன்னிரு நாடகங்களையும், இந்த நாடகங்களுக்கான விளக்கங்கள், படைப்பாற்றல், நாடகத்தில் பாத்திரப்படைப்பு, சிறுகதை எழுதுவது எப்படி நூல் விமர்சனம், ஞானம் சஞ்சிகைக்குக் கடிதம், ஆசிரியர் எழுதிய நூல்கள் ஆகிய ஆறு கட்டுரைகளையும் இந்நூல் உள்ளடக்குகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 601377).

**6609**

**மனிதன் இருக்கிறான் மனுசி எங்கே?** சி.ஜெயசங்கர் (மூலம்), லாலினி திசைவீரசிங்கம் (ஆங்கில மொழிபெயர்ப்பு). மட்டக்களப்பு: மூன்றாவது கண் பதிப்பு, உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு, சீலாமுனை, 1வது பதிப்பு, வைகாசி 2009. (மட்டக்களப்பு: வணசிங்கா அச்சகம், 126/1, திருமலை வீதி).
40 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ.

பெண்களும் மனிதர்களே என்ற கருத்தை வலியுறுத்தியும் மனிதன் என்ற சொல் ஆணை மாத்திரம் குறிப்பதாகக் கொள்ளப்படும் ஒரு சமூக மரபில் **மனிதர்கள்** என்ற பதத்தை ஆண் பெண் இருசாராருக்கும் பொருந்துவதாகக் கருதி வழங்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதாகவும், பெண்- தாயின் குடும்பத்துக்கான உழைப்பை கணக்கில் எடுக்கவேண்டும் என்ற கருத்தை அழுத்திக் கூறுவதாகவும் அமைந்த இரு நாடகங்களான அம்மா சும்மா இருக்கிறா, மனிதன் இருக்கிறான் மனுசி எங்கே ஆகிய இரண்டையும், அதன் ஆங்கில மொழிபெயர்ப்புகளான Amma is just at home, Man is here where is the women ஆகிய இரண்டு நாடகங்களையும் இந்நூல் உள்ளடக்குகின்றது. ஓவியர் சுசிமன் நிர்மலவாசனின் ஓவியங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன.

**6610**

**மனோன்மணி.** சொக்கன் (இயற்பெயர்: க.சொக்கலிங்கம்). யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1958. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234 காங்கேசன்துறை வீதி).
(10), 104 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 18.5x12 சமீ.

மனோன்மணீயம், தமிழில் நாடகங்கள் இல்லாத வெற்றிடத்தை நிரப்ப எழுந்தது. ஆங்கிலக் கதை நூலாகிய மறைவழி (Secret Way) என்றதன் தழுவல் இதுவாகும். தமிழகத்தின் இராவ்பகதூர் பெ.சுந்தரம்பிள்ளை இதனைத் தமிழுக்குத் தந்திருந்தார். மனோன்மணீயத்தின் அருமையை உணர்ந்த பிரான்சிஸ் கிங்ஸ்பரி அவர்கள் மனோன்மணீயத்தை நாடகவடிவில் இலங்கையில் இயற்றியிருந்தார். அந்நூல் மாணவர் உலகில் பிரசித்திபெற்றிராத நிலையில் சொக்கன் அவர்கள் தான் அட்டன் அர்ச்.யோன் பொஸ்கோ கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றும் காலத்தில் உரைநடைநூலாக மனோன்மணீயத்தை எழுதியிருந்தார். அதுவே இந்நூலாகும். 17 அத்தியாயங்களில் இது எழுதப்பெற்றுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 286423).

**6611**

**மானிடம் சாகவில்லை: நாடகத் தொகுதி.** எஸ்.முத்துமீரான். நிந்தவூர்: மீரா உம்மா நூல் வெளியீட்டகம், 1வது பதிப்பு, மே 2001. (கல்முனை: கோல்டன் ஓப்செட் பிரின்டர்ஸ், 105 மட்டக்களப்பு வீதி).
xii, 207 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 955-8281-01-8.

இந்நூலில் இலங்கையின் பிரபல வானொலி நாடகாசிரியர் முத்துமீரானின் காதலும் கருணையும், வடிகால், மானிடம் சாகவில்லை, மைசூர் மாமன்னன் திப்பு சுல்தான், மாமன்னன் ஒளரங்கசிப், மானிடம் ஒளிவீசுகிறது ஆகிய ஆறு வானொலி, மேடை நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. இவை 1957 முதல் 1999 வரை எழுதப்பட்டவை. காதலும் கருணையும் என்ற வானொலி நாடகம் இவரது 16ஆவது வயதில் (2.12.1957) வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. இதுவரை 200க்கும் அதிகமான வானொலி நாடகங்களை இவர் எழுதியுள்ளார். நாடகங்களின் கருப்பொருள் அன்பு, மனிதாபிமானம், அதிகாரத்திற்கு எதிரான குரல் என்பனவாக அமைந்துள்ளன. இது சிறந்த நாடகநூலுக்கான இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசினைப் பெற்ற நூலாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 542895).

**6612**

**மூன்று முழு நிலவுகள் (நாடகம்).** செம்பியன் செல்வன். யாழ்ப்பாணம்: ஆசீர் வெளியீடு, 32 கண்டி வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1967. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).
(8), 92 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 21.5x14 சமீ.

புத்தரின் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டெழுந்த வரலாற்று நாடகம். சாக்கியருக்கும் கோலியருக்குமிடையே ஏற்பட்ட போர்களே சித்தார்த்தனைத் துறவுபூணச் செய்தது என்ற கோஸம்பியின் ஆராய்ச்சி முடிவு இந்நாடகத்திற்கு பக்கபலமாயுள்ளது. சாக்கிய மன்னன் சுத்தோதனன், அவனது மகன் சித்தார்த்தன், சித்தார்த்தனின் தாய் மாயாதேவி, சித்தார்த்தனின் மனைவி யசோதை, அவர்களின் மகன் இராகுலன், யசோதையின் தமையன் தேவதத்தன், மகத நாட்டு மன்னன் அஜாதசத்துரு, அங்குலிமாலன் என்ற கொள்ளையன் ஆகியோர் உள்ளிட்ட 20 பேர்வரை நாடக பாத்திரங்களாக இடம்பெறுகின்றனர். தேவதத்தனை சில ஆய்வாளர்கள் சுத்தோதனனின் புதல்வன் என்று கருதினாலும், இந்நாடகத்தில் அவன் யசோதையின் சகோதரனாகக் காட்டப்படுகின்றான். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 303570).

**6613**

**ரவீந்திரநாத் தாகூரின் மூன்று நாடகங்கள்: 2.வேந்தனும் அரசியும்.** ரவீந்திரநாத் தாகூர் (மூலம்), வை.முத்துக்குமாரசுவாமி (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: உமா சிவா பதிப்பகம், 134, காங்கேசன்துறை

*வீதி, வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1972. (யாழ்ப்பாணம்: சுதந்திரநாத அச்சகம், 86 பரமேஸ்வரக் கல்லூரி வீதி, திருநெல்வேலி).*
viii, *54 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 17.5*x*12 சமீ.*

*வங்காள நாட்டுப் பெரும் புலவரான ரவீந்திரநாத் தாகூரின் (1861-1941) ஈரங்க நாடகமான "வேந்தனும் அரசியும்" என்ற நாடகம் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. தமிழறிஞர் ஆ.முத்துக்குமாரசுவாமியின் பேரனான நூலாசிரியர் இலண்டனில் புலம்பெயர்ந்து வாழ்ந்தபோது ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்தவர்.*

***6614***
***ரவீந்திரநாத் தாகூரின் மூன்று நாடகங்கள்: 3. பலி.*** *ரவீந்திரநாத் தாகூர் (மூலம்), வை.முத்துக்குமாரசுவாமி (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: உமா சிவா பதிப்பகம், 134, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு, மே 1972. (யாழ்ப்பாணம்: சுதந்திரநாத அச்சகம், 86 பரமேஸ்வரக் கல்லூரி வீதி, திருநெல்வேலி).*
viii, *45 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18*x*12.5 சமீ.*

*வங்காள நாட்டுப் பெரும் புலவரான ரவீந்திரநாத் தாகூரின் (1861-1941) ஓரங்க இசை நாடகமான "பலி" என்ற நாடகம் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. தமிழறிஞர் ஆ.முத்துக்குமாரசுவாமியின் பேரனான நூலாசிரியர் இலண்டனில் புலம்பெயர்ந்து வாழ்ந்தபோது ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்தவர். செவ்வலரிகள், வேந்தனும் அரசியும், பலி ஆகிய மூன்று நாடகங்களையும் தனித்தனியாகவும், தொகுப்பாகவும் இவர் ஒரே காலகட்டத்தில் வெளியிட்டுள்ளார்.*

***6615***
**விடிய இன்னும் நேரமிருக்கு: ஓரங்க நாடகங்கள் தொகுதி 1.** *செம்பியன் செல்வன், யாழினி, உடுவை தில்லை நடராசா, மு.கனகராசன். யாழ்ப்பாணம்: ஈழநாடு வெளியீடு, 1வது பதிப்பு, ஜனவரி 1971. (யாழ்ப்பாணம்: ஈழநாடு அச்சகம்).*
*(10), 100 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18*x*13 சமீ.*

*யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஈழநாடு பத்திரிகையின் 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்திய ஓரங்க நாடகப் போட்டியில் பரிசுபெற்ற நாடகங்கள். இதில் யாழ்ப்பாணத்துச் சமூகம் ஒன்றினை சித்திரிக்கும் செம்பியன் செல்வனின் விடிய இன்னும் நேரமிருக்கு, மொகலாய சாம்ராஜியத்தின் பகைப்புலத்தில் எழுதப்பட்ட யாழினியின் தாஜ்மஹால், கொழும்பு வாழ்க்கையில் இடம்பெறும் போலித்தனங்களைச் சித்திரிக்கும் உடுவை தில்லை நடராசாவின் பூமலர், ஜெருசலத்தின் பகைப்புலத்தில் உருவாகிய மு.கனகராசனின் சிலுவையும் குத்துவாளும் ஆகிய நான்கு ஓரங்க நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275758).*

***6616***
***விஜயன்-விஜையை திருமணம்: ஒரு நாடகம்.*** *சி.ந.தேவராஜன். ஆனைக்கோட்டை: சி.ந.தேவராஜன், சிவாஞ்சலி, மானிப்பாய் வீதி, 1வது பதிப்பு, 1965. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம், காங்கேசன்துறை வீதி).*
xviii, 64+40 *பக்கம், பின்னிணைப்பு சொற்றொகுதி, விலை: ரூபா 2., அளவு: 21*x*13.5 சமீ.*

*மகாவம்ச இதிகாசத்தின்படி விஜய என்ற ஓர் இளவரசன் இந்தியாவிலிருந்து தந்தையால் தனது துன்மார்க்க நடத்தை காரணமாக நாடுகடத்தப்பட்டு இலங்கைக்கு வந்து தாம்பபன்னியில் தன் ஆட்சியை நிறுவியதுடன் பாண்டிய மன்னன் மகளை மணந்தானென்று விரிந்துரைக்கின்றது. இதனை மாற்றி சி.வை.தாமோதரம்பிள்ளையின் சகோதரர் சின்னப்பாபிள்ளை விஜயசீலம் என்ற கதையை எழுதினார். அதில் விஜயனை ஒரு சன்மார்க்கனாக்கி அவன் இலங்கையிலிருந்து மாறுவேடத்தில் பாண்டியநாடு சென்று அங்கு தன் வீரப்பிரதாபங்களால் பாண்டிய மன்னன் புதல்வியை மணந்தான் என்று முடிக்கிறார். இந்தக் கதையைத் தழுவியே இந்நாடகமும் இயற்றப்பட்டுள்ளது. இராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை வழித்தோன்றலும், பிரபல வைத்தியர் சி.வை.நல்லதம்பியின்* (M.B.C.M.)

*புத்திரருமாகிய சி.ந.தேவராஜன் இந்நாடகத்தை உருவாக்கியவராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275667).*

***6617***

***வீரவில்லாளி.*** *எஸ்.முத்துக்குமாரன். மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இல. 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, மார்ச் 2008. (தெகிவளை: ஏ.ஜே.பிரிண்ட்ஸ், 44 புகையிரத நிலைய வீதி).*
*202 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 18x12.5 சமீ., ISBN: 978-955-8715-46-8.*

*மட்டக்களப்பு துறைநீலாவணையில் 1939.03.14இல் பிறந்து கல்லடியை வதிவிடமாகக் கொண்டவர் முத்துக்குமாரன். பதிவாளர்நாயகம் திணைக்களத்தில் உதவிப் பதிவாளர் நாயகமாக பதவிவகித்து 1998இல் ஓய்வுபெற்றவர். மகாபாரதம், நளவெண்பா, பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம், கம்சரம்மானை, குறுந்தொகை போன்ற இலக்கியக் காட்சிகளிலிருந்து கருவெடுத்துப் பல வானொலி நாடகங்களை உருவாக்கித்தந்தவர். அந்த நாடகங்களில் வீரவில்லாளி, தோழி நீ வாழ்க, பரி ஏறிய பரமன், வண்ண மகள், தூது சென்ற காவலன், கலியின் வினை, சிவக் குழந்தை, பூதகி, உருத்திராஷப் பூனை, நான் பிரத்தரிஷி ஆகிய தேர்ந்த 10 நாடகங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினால் வெளியிடப்படும் 43ஆவது பிரியா பிரசுரமாக இந்நூல் அமைந்துள்ளது.*

**மேலும் பார்க்க:** *6385*

*894.8(3) தமிழ்க்கவிதை நாடகங்கள்-காவியங்கள்*

***6618***

***அப்துஸ்ஸமது ஆலிம் புலவரின் அழகு தமிழ்க் காவியங்களும் சிந்தைக்கினிய சிந்துகளும்.***
*அப்துஸ்ஸமது ஆலிம் புலவர் (மூலம்). 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. கொழும்பு: உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு- 2002, முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (கொழும்பு: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44 புகையிரதநிலைய வீதி, தெகிவளை).*
vi, *100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-8806-10-2.*

*திருக்கோணமலை மாவட்டத்து நாச்சிக்குடாவில் பிறந்தவர் அப்துஸ்ஸமது ஆலிம் புலவர். சிலோன் தர்வேஸ் என்ற புனைபெயரும் இவருக்குண்டு. திருக்கோணமலைப்பகுதியில் ஜாகுவாப்பள்ளி அறபு மத்ரசாவில் மார்க்கக் கல்வி பயின்றவர். புலவரின் இலக்கியப்படைப்புகளில் ஏழு குறுங்காவியங்கள் முதற்பாகத்திலும், சிந்துக்கள் யாவும் இரண்டாம் பாகத்திலும் இடம்பெறுகின்றன. 22.12.1964இல் வடக்கு கிழக்கு இலங்கையில் வந்தடித்த சூறாவளி ஞாபகக் காவியம், பொலன்னருவையில் பேதிநோய் நடந்த காவியம், 15.12.1964இல் மழைதேடிப் பாடிய மன்றாட்டக் காவியம், கஞ்சாவெறிக் கடுங்கோப்பிக் காவியம் (இது போதைப்பொருள்களின் விபரீதங்கள் பற்றி எடுத்துக்கூறுகின்றது), 26.12.1957ல் இலங்கைத்தீவை மூழ்கடித்த ஏகப்பெரும் வெள்ளக்காவியம், 22.8.1947இல் நிகழ்ந்த வெள்ளப் பிரளய விபரீதக் காவியம், மழைக்காவியம் ஆகிய ஏழு காவியங்கள் முதற்பாகத்தில் அடங்குகின்றன. இரண்டாம் பாகத்தில் எண்ணெய்ச்சிந்து, ஹிழ்ர் (அலை) வழிநடைச் சிந்து, கதிர்காம வழிநடைச்சிந்து, மக்கா வண்ணச் சிந்து, சிங்காரக் கும்மி, ஹிழ்ர் (அலை) புகழ்பாடல், கலியுகச் சிந்து, ஒலுவில் கந்தூரி சந்தைப் பாட்டு ஆகிய ஏழு பாடல்கள் அடங்குகின்றன.*

***6619***

***ஆதி பகவன்.*** *இ.முருகையன். சாவகச்சேரி: அறிவழகுப் பதிப்பகம், பெரிய அரசடி, 1வது பதிப்பு, 1978. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில்).*
*(6), 36 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 20.5x13.5 சமீ.*

*முருகையன் நூல் வரிசையில் ஏழாவதாக வெளிவந்துள்ள இந்நூல் ஆங்கிலேயரான ஆர்னால்ட் வெஸ்கரின் ஆதாம் ஏவாள் பற்றிய ஒரு உருவகக்கதையைத் தழுவி எழுதப்பட்டது. திருவள்ளுவர் கூறும் ஆதி பகவனையோ, அவரது தாய் தந்தையரையோ இந்நெடுங்கவிதை சுட்டவில்லை. கவிஞரால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு தாயையும் தந்தையையுமே ஆதி பகவனாக இங்கே*

*உலவவிட்டிருக்கின்றார். ஆதி பகவனின் கதை உலகின் கதை. உலக மனிதனின் கதை, ஆதி பகவனின் குடும்பமே மனித சமுதாயம். எனவே தான் ஆதிபகவன் தனி மனித குடும்பச் சித்திரமாகத் தோன்றினாலும். இங்கு அது எமது சமுதாயத்தின் விரிந்து பரந்த கதையாகின்றது. 2007இல் சாஹித்திய இரத்தினம் விருது பெற்ற கவிஞர் இராமுப்பிள்ளை முருகையன் சாவகச்சேரி, கல்வயல் கிராமத்தில் 23.4.1935இல் பிறந்தவர். தன் 12ஆவது வயதில் கவிதை புனையத் தொடங்கியவர். 1950 முதல் கவிதை எழுதிவரும் இவர் பல பிறமொழிக்கவிதைகளையும் தமிழுக்குத் தந்துள்ளார். நோக்கு என்ற காலாண்டுக் கவிதை இதழின் (1964-1965) இணை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கௌரவ கலாநிதிப் பட்டமும் இவருக்குக் கிடைத்திருந்தது.*

***6620***

***சங்கிலியம்.*** *காரை.செ.சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: ஈழநாடு வெளியீடு, 1வது பதிப்பு, ஏப்ரல் 1970. (யாழ்ப்பாணம்: ஈழநாடு அச்சகம்).*
xxiv, *98 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x13 சமீ.*

*யாழ்ப்பாணத்தை இரண்டு சங்கிலி மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர் என்றும், முதலாவது சங்கிலியன் 1519 தொடக்கம் 1561 வரை ஆட்சிசெய்ததாகவும் அவனே இக்காவியத்தின் நாயகன் என்றும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இரண்டாவது சங்கிலி மன்னன் 1615 தொடக்கம் 1619வரை யாழ்ப்பாணத்தை ஆண்டுவந்தவன். இவனே யாழ்ப்பாணத்துக் கடைசித் தமிழ் மன்னன் சங்கிலி குமாரனாவான் என்றும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இது இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற காவியநூல். ஈழநாடு தினசரி 1970இல் நடத்திய அகில இலங்கை காவியப் போட்டியில் முதற்பரிசு பெற்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275039).*

***6621***

***திருநபி காவியம்.*** *ஜின்னாஹ் ஷரிபுத்தீன். மருதமுனை: அன்னை வெளியீட்டகம், 1வது பதிப்பு, 2006. (மருதமுனை: அன்னை வெளியீட்டகம்).*
*(20), 256 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *955-97349-7-0.*

*மஹ்ஜபீன் காவியம், புனித பூமியிலே காவியம், பிரளயம் கண்ட பிதா, தாய்க்கென வாழ்ந்த தனயன், பண்டார வன்னியன் காவியம் ஆகிய காவியங்களைத் தொடர்ந்து திருநபி காவியத்தை ஆசிரியர் வழங்கியுள்ளார். பெருமானார் முஹம்மது நபியவர்களின் வாழ்க்கை வரலாற்றை இக்காவியம் அழகு தமிழில் விபரிக்கின்றது. இந்நூல் இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம் 2006ம் ஆண்டு இராமநாதபுரம் பரமக்குடியில் நடத்திய இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பெருவிழாவில் வெளியிடப்பெற்றது.*

***6622***

***நீதிக் கரங்கள்: ஐவர் எழுதிய சிறு காவியம்.*** *இ.நாகராஜன், செ.கதிரேசர்பிள்ளை, அம்பி, நா.ஆறுமுகம், சி.ஆறுமுகம் (மூல ஆசிரியர்கள்), கனக.செந்திநாதன் (இணைப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1966. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).*
*50 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 20x14 சமீ.*

*ஐந்து கவிஞர்கள் சேர்ந்து பாடிய காவியம் இதுவாகும். அண்ணனும் தம்பியுமாக இருவர் அறம் வளர்ப்போராய்க் காட்டில் வாழ்கின்றனர். தம்பி அண்ணனறியாது அவ்வனத்திலே ஒரு கனியைக் கவர்ந்துவிடுகிறார். அக்கனியைப் பறித்தது குற்றம் என்று அண்ணன் கூறுகின்றார். தம்பி அது குற்றமன்று என்று வாதிடுகிறார். பின்னர் அரசன் முன்னிலையிலே நீதி கேட்க, ஏற்ற தண்டனை பெறச் செல்கின்றார். அரசனுக்கும் தம்பிக்கும் இடையில் நீதிவாதம் நடைபெறுகிறது. தண்டனையைப்பெற்றுக் கரங்கள் துண்டிக்கப்படுகிறார். மீண்டும் அண்ணனிடம் வருகின்றார். அண்ணன் முகமலர்ந்து ஆற்றிலே நீராடித் தருப்பணம் செய்யென்று கூறுகின்றார். கரமற்றவர் முன்பின் யோசியாமல் ஆற்றிலே மூழ்கித் தருப்பணம் செய்யச் செல்கிறார். மூழ்கியெழுகையில் கரங்களை மீண்டும் பெறுகிறார். இதுவே காவியத்தின் கருப்பொருள். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 279115).*

***6623***

***நீரர மகளிர்.*** *திமிலைத் துமிலன் (இயற்பெயர்: சின்னையா கிருஷ்ணபிள்ளை). மட்டக்களப்பு: இராஜம் பிரசுரம், திமிலதீவு, 1வது பதிப்பு, ஜுலை 1963. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம்).*
viii, *15 பக்கம், விலை: சதம் 50., அளவு: 20.5x13.5 சமீ.*

*ஐம்பத்தொரு விருத்தப்பாக்களால் அந்தாதித் தொடையாயமைந்துள்ள காவியம் இதுவாகும். விபுலாநந்தர் கண்ட நீரர மகளிருக்கு காவிய உருக்கொடுத்து மட்டுநகர் வாவியின் ஊரி இசையான பாடும்மீனையும் இணைத்து இக்கற்பனைக் காவியத்தைப் புனைந்துள்ளார். இராவணேசனுக்கு இருந்த இசைப்புலமை, அவனது பேரழிவிற்கு முறைபிறழ்ந்த காதல் காரணமாவதற்கு ஏற்பட்ட சாபம் முதலியவற்றையும் இக்கவிதைகளுள் சேர்த்துச் சுவையூட்டுகின்றார். இறுதியில் தான் கனவுகண்டெழும்புவதாகக்கூறி கற்பனைக்குக் கடிவாளமிடுகின்றார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 169315).*

***6624***

***நீரர மங்கையர்.*** க.கணபதிப்பிள்ளை. பேராதனை: க.கணபதிப்பிள்ளை, தமிழ்ப் பேராசிரியர், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, விசய வருடம் ஐப்பசி 1953. (தெல்லிப்பழை: அமெரிக்க மிஷன் அச்சியந்திரசாலை).
*(4), 55 பக்கம், விலை: சதம் 90., அளவு: 18.5x12.5 சமீ.*

*பேராசிரியரின் இந்நூலின் கதைக்கரு பிறமொழிக்கதையொன்றிலிருந்து தழுவப்பட்டபோதும், ஈழத்துமண்ணின் கதாமாந்தரைக்கொண்ட கதையாகவே அது புனையப்பட்டுள்ளது. மட்டக்களப்பு வாவியிலுள்ள பாடும் மீன் பற்றி விபுலாநந்த அடிகளார் குறிப்பிட்டுள்ளார். இப்பாடும் மீன்களை நீரரமங்கையராகக் கற்பனைசெய்து இக்கதையை ஆசிரியர் உருவாக்கியுள்ளார். டென்மார்க் நாட்டின் தேசிய சின்னமான மீன்வாலுடன் கூடிய மனிதப் பெண் பற்றிய பிரபல்யமான நாட்டாரியல் கதையொன்றையே ஆசிரியர் தழுவி நீரர மங்கையரை எழுதியுள்ளார். மேற்படி காவியத்துக்கான டேனிஷ் கதையின் மூலம், புகழ்பெற்ற டென்மார்க் எழுத்தாளர் எச்.சி.அனசன் அவர்களது* **ஒரு சின்னக் கடற்பெண்** *என்பதாகும். கடல் அரசனின் மகளான அவள் ஆழ்கடல் நகரத்திலிருந்து மனிதகுலத்தின் மீது தேடல் நடத்தியவள். அந்தத் தேடலே அவள் மனதில் ஏக்கமாக எழுந்தது. ஒரு மானிடனை விரும்பி, மனிதருள் இருக்கும் உயர் சிறப்புகளைத் தானும் அடைய எத்தனித்துத் தோற்றுப்போய் பின்னர் உயிர்த்தியாகம் செய்து அமரத்துவம் அடைகின்றாள். அக்கதையின் தழுவலே நீரர மங்கையர்.* **மேலும் பார்க்க:** *கடற்கன்னி காவியம் -நூல்தேட்டம் பதிவு 1834. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 95813).*

***6625***

***நீலாவணனின் கவிதை நாடகங்கள்.*** *நீலாவணன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).*
xx, *108 பக்கம், விலை: ரூபா 100., இந்திய ரூபா 32., அளவு: 17.5x12 சமீ.*

*நீலாவணன் மறைந்த 29 ஆண்டுகளுக்குப் பின் அவரது குடும்பத்தவர்களினால் இக்கவிதை நாடக நூல் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளது. மனித உறவுகளை அவர்களின் பண்புகளை நேசித்த கவிஞர் தனது படைப்பக்கள் மூலம் மானிடத்தின் அபிலாஷைகளை வெளியிட்டுள்ளார். அவரது கவிதைகளில் சிறப்பான மொழிநடை, நல்ல தமிழ், உவமைச் சிறப்புடன் எடுத்துக்காட்டுவது, மண்வாசனை, மனிதநேய உறவுகள் என்பனவற்றைக் காண முடிகின்றது. இலங்கை அரசின் 2006க்கான சாகித்திய மண்டலப் பரிசு, சிறந்த நாடக நூலுக்காக வழங்கப்பட்டது. மனக்கண், மழைக்கை, துணை, சிலம்பு ஆகிய நான்கு கவிதை நாடகங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 604087).*

**மேலும் பார்க்க:** *6448, 6535*

### *894.8(4) தமிழ்ச் சிறுகதைகள்*

**6626**

**அக்கா.** அ.முத்துலிங்கம். கொழும்பு 6: அ.முத்துலிங்கம், 15, சென்.லோரன்ஸ் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1964. சென்னை 2: மெட்ரோபொலிட்டன் பிரின்டர்ஸ்).
154 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12.5 சமீ.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துப் படைப்பாளி அ.முத்துலிங்கத்தின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு இதுவாகும். 1958இல் தினகரன் வார இதழில் ஊர்வலம் என்ற சிறுகதையுடன் இவரது இலக்கியப்பயணம் தொடங்கியது. இச்சிறுகதைத் தொகுப்பில் ஊர்வலம் கதையுடன் கோடைமழை, அழைப்பு, ஒரு சிறுவனின் கதை, அனுலா, சங்கல்ப நிராகரணம், உன்மத்தராயிருந்தோம், இருப்பிடம், கடைசிக் கைங்கரியம், பக்குவம், அக்கா ஆகிய 11 கதைகள் இடம்பெற்றுள்ளன. இவை 1958-1961 காலப்பகுதியில் எழுதப்பட்டவை. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275729).

**6627**

**அந்திப் பொழுதும் ஐந்தாறு கதைகளும்.** செ.யோகநாதன். சென்னை 600017: தமிழோசைப் பதிப்பகம், 84, அபிபுல்லா சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 1985. (சென்னை: தமிழோசை அச்சகம்).
224 பக்கம், விலை: இந்திய ரூபா 16., அளவு: 18x12.5 சமீ.

அவளும் அவனும், வளைவு, அவர்களின் மகன், இருப்பிடம், மூன்றாவது மனிதன், அந்திப் பொழுது, மாயை ஆகிய ஏழு சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 447573).

**6628**

**அம்மாவுக்குத் தாலி: சிறுகதைகள்.** நீ.பி.அருளானந்தம். சென்னை: மணிமேகலைப் பிரசுரம், சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
(10), 230 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 17.5x12 சமீ.

14 சிறுகதைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ள இந்நூல் ஆசிரியரின் ஏழாவது சிறுகதைத் தொகுப்பாகும். சூசைப்பிள்ளையார் குளம், வவுனியாவைச் சேர்ந்த நீ.பி.அருளானந்தம், 100க்கும் அதிகமான சிறுகதைகளை எழுதியிருக்கிறார். இவரது கதைகள் மத்தியதர வகுப்பினரின் சமகால வாழ்க்கைமுறைகளை அதிகம் பிரதிபலிக்கின்றன. தலைப்புக்கதையான அம்மாவுக்குத் தாலியில் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் பெற்றோரின் துன்பங்களும், வெளிநாடு செல்லும் பிள்ளைகளின் சமூக பொருளாதார நிலைமைகளும் அழகாகச் சித்திரிக்கப்படுகின்றன. அம்மாவுக்குத்தாலி, ஆமைக்குணம், அலைச்சல், பருவக்காற்று, சக்கரம் சுழலும், கண்ணுக்குள் நூறுவிதம், கொந்தல், அம்மாவின் இரக்கம், இருளே நீ இனிமேல் விலகாயோ, கற்பித்தல், ஒரு காலைநேரச் சம்பவம், தேடல், முதுசம், உலகின் முதல் எதிரி ஆகிய கதைகள் இத்தொகுப்பில் உள்ளன. மண்வாசனை, உறவுமுறைகளின் இறுக்கம், நுண்ணியமான அக உணர்வுகள், இடப்பெயர்வு என்பன கதைக்களங்களாக அமைகின்றன.

**6629**

**அமரத்துவம்.** யாழ்வாணன் (இயற்பெயர்: என்.சண்முகநாதன்). யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், மாநகர அலுவலகம், 1வது பதிப்பு, டிசம்பர் 1969. (யாழ்ப்பாணம்: தனலட்சுமி புத்தகசாலை, சுன்னாகம்).
xii, 112 பக்கம், விலை: 2.50, அளவு: 18x12 சமீ.

அமரத்துவம், சங்கமம், மொட்டை, புடம், கோடை, முள், ஆதாரம், கன்னிமை, கொழுகொம்பு, மலர்ந்த வாழ்வு, அறுவடை, பிரவாகம் ஆகிய 12 கதைகளைக்கொண்ட சிறுகதைத் தொகுப்பு இதுவாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275069).

**6630**

**அமைதியின் இறகுகள்.** செம்பியன் செல்வன். யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், மாநகர சபை, 1வது பதிப்பு, டிசம்பர் 1966. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).
143 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12 சமீ.

இத்தொகுப்பில் இதயக் குமுறல், உணர்ச்சிக்கு அப்பால், பெண், குங்குமப்பூ, பழைய வானத்தின் கீழ், அமைதியின் இறகுகள், நெல், ஜகனி, நீரும் நிலமும், நிலம் யாருக்காகக் காலடியில் கிடக்கிறது, உப்பங்கழி ஆகிய 11 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 279105).

**6631**

**அலைகள் அழைத்த பூக்கள்: சிறுகதைத் தொகுதி.** றகுமான் ஏ.ஜபார். மருதமுனை: சரம் இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஜனவரி 2008. (கல்முனை: கோல்டன் அச்சகம்).
xii, 48 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-50843-0-7.

இச்சிறுகதைத் தொகுதியில் மௌனங்கள் பேசுகின்றன, அடுத்த பகலில், சத்தியம், அந்தக்காலத்து ஆனந்தங்கள், அந்தச் சில பொழுதுகளில், சூரியப் பொழுதினில், அலைகள் அழைத்த பூக்கள், நிறைவேறாத சொர்க்கங்கள், ஒரு அமாவாசை இரவு, ஒரு மார்கழியும் ஒரு மாணவியும் ஆகிய 10 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. நாளாந்த வாழ்வின் அனுபவங்கள், நெளிவு சுளிவுகள், எண்ணங்கள், உணர்வுநிலைகள் போன்றவற்றை சோகம் இழையோட வடித்திருக்கிறார். மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் ஆசிரியராகப் பணியாற்றுபவர். அறிவிப்பாளர், நடிகர், கவிஞர், கதாசிரியர் எனப் பல்வேறு கலை இலக்கிய முகங்களைக் கொண்ட இவர் கிழக்குக்குயில், மருதூரன் போன்ற புனைபெயர்களிலும் எழுதியிருக்கிறார். நிலா, சரம், கலங்கரை, முனைப்பு, இது ஆகிய சிறுசஞ்சிகைகளிலும் ஆசிரியராக இவர் இருந்துள்ளார்.

**6632**

**அவர்கள் துணிந்துவிட்டார்கள்.** ச.முருகானந்தன். கொழும்பு 13: மல்லிகைப் பந்தல் வெளியீடு, 201/4 ஸ்ரீகதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2010. (கொழும்பு 13: லக்ஷ்மி பிரின்டர்ஸ், 103 ஏ, விவேகானந்தா மேடு).
xiv, 116 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-8250-47-1.

தேயிலைப் பெண் (சுடர் ஒளி 2007), புரியாத புதிர்கள் (மல்லிகை 2006), முன்வைத்த காலை (மல்லிகை 2010), கபடத்தனம் (ஈழநாதம் 2004), அவர்கள் துணிந்து விட்டார்கள் (தாயகம் 1979), தேரில் வந்த ராஜகுமாரர் (வெள்ளிநாதம் 2003), கள்ளத்தோணி (சுடர் ஒளி 2006), தரை இறங்கும் விமானங்கள் (சுடர் ஒளி 2007), வேலியே பயிரை மேய்ந்தால் ((சுடர் ஒளி 2005), மாறியது நெஞ்சம் (சுடர் ஒளி 2006), அழகு நிலா (சுடர் ஒளி 2005), விழிப்பு (சுடர் ஒளி 2008), ஆறிலிருந்து அறுபது வரை, எல்லோரும் மனிதர்களே ஆகிய 14 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மலையகத்து வாழ்வின் எண்ணரிய எடுத்தியம்பல்களைத் தனது சிறுகதைத் தடத்திலே செறிவுடன் உலாவச் செய்துள்ளார்.

**6633**

**ஆப்பிள் பழவாசமும் நெருஞ்சி முட்களின் உறுத்தல்களும்.** நீ.பி.அருளானந்தம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை: அச்சக விபரம் தரப்படவில்லை).
xxiv, 200 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 18x12.5 சமீ.

நூலாசிரியரின் 19 சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஆப்பிள் பழவாசமும் நெருஞ்சி முட்களின் உறுத்தல்களும், விட்டில், சடங்கு, பறை ஒலி, சிலந்தி, பாவ மன்னிப்பு. பெட்டைகுட்டி, துன்பக் கேணியில், மாபெரும் புறப்பாடு, கருணைக்கொலை, விரதம், நுளம்பு, வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறைகள், திருநாள் வந்தது, அலை அடங்கவில்லை, துணைவி அழைக்கிறாள், வடு, கோரம், காத்தல் ஆகிய தலைப்புக்களில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.

***6634***

***இதயமே அமைதிகொள்: சிறுகதைத் தொகுதி.*** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: சிரித்திரன் பிரசுரம், 67, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1972. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).*

*(4), 93 பக்கம், விலை: ரூபா 1.80., அளவு: 19x13.5 சமீ.*

*இந்நூலில் செங்கை ஆழியானின் சிறுகதைகளில் 11 இடம்பெறுகின்றன. அவை முதலில் வெளியிடப்பட்ட சஞ்சிகையும் ஆண்டும் அடைப்புக் குறிக்குள் உள்ளன. இதயமே அமைதிகொள் (விவேகி 1966), திக் விஜயம் (மல்லிகை 1970), கேவலம் நாய்கள் (வீரகேசரி 1962), சிப்பியும் முத்தும் (இலக்கியம் 1966), உச்சிப் பொழுது (கலைச்செல்வி 1962), யாககுண்டம் (மலர் 1970), நினைவின் ஓரம் (வீரகேசரி 1964), விளைபூமி (கலைச்செல்வி 1965), இயற்கையின் கர்ப்பம் (தினகரன் 1964), ராசாத்தி (கலைச்செல்வி 1964), வேள்வித்தீ (கலைச்செல்வி 1964) ஆகியவை இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 297514).*

***6635***

***இமிடேஷன் தோடு: சிறுகதைகள்.*** *ஆர்.பிலோமினா. கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, இல.25, அவ்வல் சாவியா வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2010. (*Colombo 13: Design Lab, 190, George R.D.Silva Mawathe*).*

viii*, 72 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 22.5x14.5 சமீ.,* ISBN: *978-955-0195-05-3.*

*கம்பஹா மாவட்டத்தில் வத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்ட பிலோமினாவின் முதலாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். புரவலர் புத்தகப் பூங்காவின் 26ஆவது வெளியீடாக வெளிவந்துள்ளது. இதில் வாழப்பிறந்தவள், இமிடேஷன் தோடு, பிஞ்சு உள்ளம், முதுமை, இவர்கள் திக்கற்றவர்களா? வடக்கும் தெற்கும், அநாதை, கருகிய மொட்டு, பிள்ளை மனம் கல்லு, என் செல்லமே ஆகிய 10 கதைகள் இடம்பெற்றுள்ளன.*

***6636***

***இளம் முல்லை: சிறுகதைப் பூங்கொத்து.*** *பொ.இரகுபதி (தலைவர்). தெல்லிப்பழை: உயர்தர மாணவர் தமிழ் மன்ற வெளியீடு, மகாஜனாக் கல்லூரி, 1வது பதிப்பு, ஜுலை 1973. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்).*

*(10), 50 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18x12.5 சமீ.*

*பொ.இரகுபதியைத் தலைவராகவும், ச.பாலச்சந்திரனை செயலாளராகவும், க.ஜெயசீலனை பொருளாளராகவும் கொண்டியங்கிய மாணவர் தமிழ் மன்றத்தின் வெளியீடாக உருவாகிய இச்சிறுகதைத் தொகுப்பில் உயர்தர வகுப்பு மாணவர்கள் எழுதிய பெரிய மனிதர்கள் (இரா.நாகராஜன்), வாழ்வின் மாயைகள் (ம.தியாகராம்), சகடக்கால் (அ.புவனேஸ்வரி), இரத்தத் தொடர்பு (ந.திருமகள்), பரிசு (சு.கணேசலிங்கம்), தியாகச்சுடர் (சி.சுதந்திரச் செல்வி) ஆகிய ஆறு கதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 303573).*

***6637***

***ஈழத்து முற்போக்குச் சிறுகதைகள் தொகுதி 1.*** *நீர்வை பொன்னையன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: இலங்கை முற்போக்குக் கலை இலக்கியப் பேரவை, 11 இராஜசிங்க வீதி, இணை வெளியீட்டாளர்: கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (கொழும்பு 6: டெக்னோ பிரின்டர்ஸ், 55* Dr. E.A.Cooray Mawathe*).*

*252 பக்கம், விலை: ரூபா 375., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-1810-01-6.*

*இத்தொகுப்பில் 1975க்கு முற்பட்ட காலத்தில் எழுதப்பட்ட 25 தேர்ந்த முற்போக்குச் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. கே.கணேஷ் (சத்திய போதிமரம்), அ.ந.கந்தசாமி (இரத்த உறவு), என்.கே.ரகுநாதன் (போர்வை), சி.வி.வேலுப்பிள்ளை (ஒரு புதிய ஆயுதம்), எச்.எம்.பி.மொஹிதீன்*

(தண்ணீர்), நீர்வை பொன்னையன் (சங்கமம்), செ.கணேசலிங்கன் (சாயம்), கே.டானியல் (தண்ணீர்), டொமினிக் ஜீவா (வாய்க்கரிசி), அ.சமீம் (ஒளி), அகஸ்தியர் (பிரசாதம்), பெனடிக்ற் பாலன் (இங்கெவர் வாழவோ), மருதூர்க்கனி (மண் பூனைகளும் எலி பிடிக்கும்), கே.விஜயன் (47 வருஷங்கள்), காவலூர் ராசதுரை (தேவ கிருபையை முன்னிட்டு வாழும்), நந்தி (ஊர் நம்புமா?), செ.கதிர்காமநாதன் (ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்கிறான்), ஏ.இக்பால் (பெருமூச்சு), தெணியான் (எப்படியும் பெரியவன் தான்), திக்குவல்லை கமால் (மாறுசாதி), என்.சோமகாந்தன் (நிலவோ நெருப்போ), செ.யோகநாதன் (நேற்றைய அடிமைகள்), சாந்தன் (என் நண்பன் பெயர் நாணயக்கார), அ.ஸ.அப்துஸ் ஸமது (அந்தக் கிழவன்), மு.கனகராசன் (பகவானின் பாதங்களில்) ஆகிய ஈழத்துப் படைப்பாளிகளின் சிறுகதைகள் மாதிரிக்கு ஒன்றாக இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 616350).

### 6638

**உறவுகள்.** இராமக்குட்டி கிருஷ்ணபிள்ளை (இராகி). காரைதீவு 02: சனச சங்கம், 1வது பதிப்பு, 2008. (சாய்ந்தமருது: ரோயல் ஓப்செட் அச்சகம்).
xiv, 114 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

காரைதீவை வாழ்விடமாகவும், பாண்டிருப்பைப் பிறப்பிடமாகவும் கொண்ட கவிஞரும் எழுத்தாளருமான இராகி ஒரு கலைப்பட்டதாரி ஆசிரியராவார். இது இராகியின் முதல் நூல். 50 ஆண்டுகால இலக்கியப் பரிச்சயம் மிக்க இவரது முதல் சிறுகதை பாண்டியூர் இராகி என்ற புனைபெயரில் சரியா தப்பா என்ற தலைப்பில் 1964இல் சுதந்திரனில் வெளிவந்தது. இத்தொகுப்பிலுள்ள 14 சிறுகதைகளும் மக்கள் மத்தியில் இடம்பெறும் வாழ்வியல் சம்பவங்களைப் பிரதிபலிப்பதாயுள்ளது.

### 6639

**உன் மனம் நானறிவேன்: சிறுகதைகள்.** ராஜி வல்லிபுரநாதன். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆ.்.ப்செட் பிரிண்டர்ஸ்).
304 பக்கம், விலை: ரூபா 320., அளவு: 17.5x12 சமீ.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் ராஜி வல்லிபுரநாதன். அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்த வாழ்பவர். இவரது முதலாவது சிறுகதையான **வாழவைத்த தெய்வம்** கலைச்செல்வி மாத இதழில் வதனி என்ற புனைபெயரில் வெளிவந்தது. ஜேர்மனியிலிருந்து வெளிவந்த இந்து மகேஷின் பூவரசு சஞ்சிகையிலும் நியுசிலாந்தின் ஒக்லாந்தின் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தமிழ் மஞ்சரி செய்திப் பத்திரிகையிலும் இவரது சில கதைகள் பிரசுரமாகியுள்ளன. பன்னாட்டு தமிழ் ஊடகங்களிலும் இவர் எழுதிய கதைகளின் தொகுப்பாக இச்சிறுகதை நூல் வெளிவந்துள்ளது. கட்டுக்கோப்பான, இறுக்கமான சமூகக் கட்டமைப்புக்குள் பெண்கள் மீது சாதியம், குடும்பக் கட்டுப்பாடுகள் போன்றவை ஏற்படுத்தும் தாக்கங்களை இக்கதைகள் நளினமாகச் சித்திரிக்கின்றன. இந்நூலில் இவரது 28 கதைகள் இடம்பெற்றுள்ளன.

### 6640

**ஊதிய விளக்கு.** வி.லோகநாதன். கொழும்பு: நந்தி வெளியீடு, 109, 2/5, டாம் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1954. (கொழும்பு 2: விவேகா அச்சகம், 79ஆவது பள்ளிவாசல் தெரு).
(2), 137 பக்கம், விலை: ரூபா 1-8-0, அளவு: 18x12 சமீ.

வீரகேசரி வாரப்பதிப்பு ஆசிரியரான வி.லோகநாதனின் சிறுகதைத் தொகுப்பு. இதில் சப்பிய மாங்கொட்டை, நழுவி விழுவானேன், ஊதிய விளக்கு, கலா-நிஷ்டை, மனோலீலை, காதல் மலர் ஆகிய ஆறு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 115996).

### 6641

***ஏணியும் தோணியும்: உருவகக் கதைகள்.*** ரூபராணி ஜோசப். கண்டி: மக்கள் கலை இலக்கிய ஒன்றியம், 18/13 பூரணாவத்தை, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1996. (கண்டி: கிரபிக் லாண்ட், 464 பேராதனை வீதி).
(10), 60 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 90., அளவு: 21x14 சமீ.

1996ம் ஆண்டின் தேசிய சாஹித்திய மண்டலப் பரிசுபெற்ற சிறுவர் இலக்கியம். இது சிறுவர்களுக்கு மாத்திரமன்றி வளர்ந்தோருக்கும் சுவைபயக்கும் உருவகக் கதைகளின் தொகுப்பு. இவ்வுருவகக் கதைகளில் காணப்படும் சிறப்பம்சம், சாதாரணமாக நமது வாழ்க்கையோடு தொடர்பான சிறு விடயங்கள், எத்தனை அருமையான படிப்பினைகளைத் தருகின்றன என்பதாகும். நூலாசிரியர் கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரியின் முன்னாள் ஆசிரியராவார். நூலாசிரியரின் எண்ணக்கருவிற்கு உயிர்தரும் வகையில் சித்திரங்களை ஓவியர் ஹமீட் வரைந்துள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 491036).

***6642***
***ஒரு மழைக்கால இரவு: சிறுகதைத் தொகுதி.*** தாமரைச்செல்வி. கொழும்பு 6: தேசிய கலை இலக்கியப் பேரவை, 14, 57ஆவது வீதி, இணை வெளியீட்டாளர்கள்: வவுனியா: சுப்ரம் பிரசுராலயம், 110 யாழ்ப்பாண வீதி, 1வது பதிப்பு, 1998. (சென்னை 600005: மணி ஓப்செட் பிரின்டர்ஸ்).
(8), 136 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 21x13.5 சமீ.

ஈழத்தின் போர்க்காலச் சூழலுக்கு முகம்கொடுத்து வாழும் மக்களின் பல்வேறு உணர்வுகளையும் அவலங்களையும் சித்திரிக்கும் 15 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஒரு யுத்தத்தின் ஆரம்பம், இங்கேயும் சில இழப்புகள், அவன்-அவள் ஒரு சம்பவம், எங்கேயும் எப்போதும், விடை இதுதான், பாலம், சாம்பல்மேடு, வாழ்க்கை, பசி, ஊனம், ரூனா, ஒரு மழைக்கால இரவு, நியாயங்களும் மாறும், பகிர்வு, இடைவெளி ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 515271).

***6643***
***கங்கு மட்டை: ஈழநாடு பரிசுக்கதைகள்.*** ஈழநாடு. யாழ்ப்பாணம்: ஈழநாடு வெளியீடு, 1வது பதிப்பு, ஜனவரி 1971. (யாழ்ப்பாணம்: ஈழநாடு அச்சகம்).
76 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18ஓ13.5 சமீ.

ஈழநாடு தனது பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி ஏற்பாடு செய்திருந்த சிறுகதைப்போட்டியில் பரிசுபெற்ற ஐந்து கதைகளை இத்தொகுதி உள்ளடக்கியுள்ளது. கங்கு மட்டை (செங்கை ஆழியான்), பூவும் கனியும் (செம்பியன் செல்வன்), ஆறுதற் பரிசு (அப்பச்சி மகாலிங்கம்), சிறுகை நீட்டி (எம்.ஏ.ரஹ்மான்), சுண்டுவிரல் மெட்டி (மு.கனகராசன்) ஆகிய 5 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இதில் செங்கை ஆழியானின் கதை முதற்பரிசினைப் பெற்றிருந்தது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275556).

***6644***
***கடல்: சிறுகதைகள்.*** சொக்கன். (இயற்பெயர்: க.சொக்கலிங்கம்). யாழ்ப்பாணம்: நண்பர் வெளியீடு, நாயன்மார்கட்டு, 1வது பதிப்பு, ஜுன் 1972. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம், காங்கேசன்துறை வீதி).
v, 141 பக்கம், விலை: ரூபா 3.75, அளவு: 18x12 சமீ.

எழுத்தாளர் சொக்கனின் முதலாவது சிறுகதைத் தொகுதி. 20 ஆண்டுக்கால இலக்கிய அறுவடைகள் இவை. சிறுகதைப் போட்டிகளில் பரிசுபெற்ற அவரது கதைகளை உள்ளடக்கியது. 1972க்கான இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசில் பெற்ற நூல். இதில் தபாற்காரச் சாமியார், தரிசனாமிர்தம், கடல், அபஸ்வரம், ஆசிரியர், பிரியாவிடை, ஒழுங்கை, குரு, இழப்பு, வறுத்தவித்து, சேந்தாங்குளம், இருவரும் அழுதனர், உறவுமுறை, குட்டைநாய், கடன் தீர்ந்தது ஆகிய 15 கதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 289402).

**6645**

**கடவுள் சிரித்தார்: சிறுகதைகள்.** ராஜதிலகம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
vi, 86 பக்கம், விலை: இந்திய ரூபா 30., இலங்கையில் ரூபா 100.,அளவு: 17.5x12 சமீ.

மலேசியாவில் பிறந்த ராஜதிலகம், தன் பெற்றோருடன் 14வது வயதில் இலங்கைக்குத் திரும்பியவர். தொழில்ரீதியாக கணக்காளரான இவர் இலங்கையிலும் மலேசியாவிலும் பணியாற்றியுள்ளார். தனது சொந்த நிறுவனமான Print Plus என்ற நிறுவனத்தை நடத்தி வருகின்றார். கணிதத்துறையில் மிகுந்த ஆர்வம்கொண்ட இவர் புதிர் கணக்கு பற்றி Maya New Puzzle.com என்ற இணையத்தையும் நடத்திவருகின்றார். தினக்குரல் பத்திரிகையில் மாணவர்களுக்கான அறிவு ஆரம் பகுதியில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் எழுதிய 10 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. பிள்ளையாரிடம் இருந்து ஒரு செய்தி, மதுரை, புலி வந்துகொண்டிருக்கிறது, முனிவரின் தியாகம், முனிவரும் பூசாரியும், சொர்க்கத்திலிருந்து வருகிறேன், வாருங்கள் வைகுண்டம் போகலாம், மோட்ச அர்ச்சனை, புரட்டாசிச் சனியின் மகிமை, ஆசிரியர் கைதானார் ஆகிய தலைப்புகளில் இவை வெளியாகியுள்ளன.

**6646**

**கண்ணுக்குள் சுவர்க்கம் சிறுகதைகள்.** காத்தான்குடி நசீலா. கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, 25, அவ்வல் சாவியா வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (கொழும்பு 13: யுனி லங்காஸ், இல.32, சென் அந்தனிஸ் மாவத்தை).
viii, 72 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-095-08-2.

1967இல் கவிதைகளினூடாக இலக்கிய உலகில் தடம் பதித்தவர் நசீலா. இவரது முதலாவது சிறுகதை சிந்தாமணியில் **அவளுக்கும் வாழ்வு வரும்** என்ற தலைப்பில் பிரசுரமாயிற்று. இவரது பெரும்பாலான கதைகள் பெண்ணியம் பற்றிப் பேசுவதாகவே அமைந்துள்ளன. இத்தொகுப்பில் நெஞ்சம் மறப்பதில்லை, ஞாபகம் வருதே, பெருநாள் பரிசு, பாவ மன்னிப்பு, முஹர்ரம் தந்த விடுதலை, நடை, தலைநோம்பும் புதிய பயணமும், கண்ணுக்குள் சுவர்க்கம், சுனாமியும் ஒரு சோடி காலுறையும், இரசனைகள் ஆகிய 10 கதைகள் இடம்பெற்றுள்ளன. புரவலர் புத்தகப் பூங்காவின் 24அவது வெளியீடு இது.

**6647**

**காணிக்கை: சிறுகதைகள்.** U.L.ஆதம்பாவா. கல்முனை: இஸ்லாமிய நூல்வெளியீட்டுப் பணியகம், சாய்ந்தமருது, 1வது பதிப்பு, ஜனவரி 1997. (கல்முனை: ஸ்டார் அச்சகம், சாய்ந்தமருது).
(16), 112 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 18x12.5 சமீ.

இச்சிறுகதைத் தொகுப்பில் 1966 முதல் 1995 வரையில் ஆசிரியர் எழுதிய கதைகளுள் தேர்ந்த 12 கதைகள் இடம்பெற்றுள்ளன. வீடு, நஸீருக்கு இன்று நோன்புப் பெருநாள், ஒரு விடிவெள்ளி உதயமாகின்றது, காணிக்கை, மீண்டும் அவன் சவூதிக்குப் போகிறான், திருந்திய உள்ளங்கள், இணையும் ஒரு குடும்பம், தியாகம், தண்டனை, ஆசை, தந்தையை விஞ்சிய தனயன், நினைவுகளும் நிகழ்வுகளும் ஆகிய 12 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் ஆதம்பாவா 1961இல் கவிதைத்துறையினூடாக இலக்கியப்பிரவேசம் செய்தவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 616911).

**6648**

**காந்தீயக் கதைகள்.** எஸ்.பொன்னுத்துரை (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, 1969. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231 Wolfandhal Street).
xii, 112 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18x12.5 சமீ.

24ஆவது அரசு வெளியீடாக வெளிவந்துள்ள இச் சிறுகதைத் தொகுப்பு, காந்தி நூற்றாண்டை முன்னிட்டு இளம்பிறை சஞ்சிகையின் ஆதரவுடன் வெளியிடப்பட்டுள்ளது. ஆர் பாலகிருஷ்ணன்

(தர்மத்தூது), தேவன்-யாழ்ப்பாணம் (சத்திய சாதனை), இராஜநாயகன் (ஓநாய்கள் கவனம்), என்.எஸ்.எம்.ராமையா (ரகுபதி ராகவ), வ.அ.இராசரத்தினம் (மீண்டும் காந்தி பிறப்பார்), ராஜ்-மித்ரா (சில நேரங்களில் சில தோழர்கள்), தெளிவத்தை ஜோசப் (கத்தியின்றி இரத்தமின்றி), கனக-செந்திநாதன் (அன்பின் ஒலி), கே.வி.நடராஜன் (கதவே திற), எம்.ஏ.ரஹ்மான் (உண்மையின் உறுதி) ஆகிய படைப்பாளிகளின் காந்தியக் கருத்துக்களைத் தாங்கிய கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275700).

**6649**

**கால தரிசனம்: சிறுகதைகள்.** தி.ஞானசேகரன். புன்னாலைக்கட்டுவன்: கணேச சனசமூக நிலையம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1973. (சுன்னாகம் திருமகள் அழுத்தகம்).
xii, 116 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 18x12 சமீ.

இந்நூலில் ஆசிரியரின் 12 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. ஒளியைத் தேடி, சங்கு சுட்டாலும், ஒரு சின்னப்பையன் அப்பாவாகிறான், பலி, சுமங்கலி, பிழைப்பு, இதுதான் தீபாவளி, கட்டறுத்த பசுவும் ஒரு கன்றுக்குட்டியும், இப்படியும் ஒரு உறவு, பிறந்த மண், உயிர்த்துணை, கால தரிசனம் ஆகிய தலைப்புக்களில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 300846).

**6650**

**கால வெள்ளம்.** நீர்வை பொன்னையன். கொழும்பு 6: இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம். 18, 6/1 கொலிங்வுட் பிளேஸ், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (கொழும்பு 6: R.S.T. என்டர்பிறைஸஸ், 114 W.A. சில்வா மாவத்தை).
xii, 146 பக்கம், விலை: ரூபா 275., அளவு: 21.5x14.5 சமீ.

ஆசிரியரின் எட்டாவது சிறுகதைத் தொகுப்பு இது. பத்து சிறுகதைகளும் **நீர்வையின் படைப்பகளும் சமூக இயங்குதளமும்** என்ற தலைப்பிலான எம்.கே.முருகானந்தனின் திறனாய்வுக் கட்டுரையும் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. சிறுகதைகளில்- தரிசனம், முனைப்பு ஆகியவை 1950 முதல் 1957வரை கல்கத்தாவில் நீர்வை பொன்னையன் கல்விகற்றுக்கொண்டிருந்த வேளையில் அவர் நேரடியாகப் பங்குபற்றிய போராட்டங்களின்போது பெற்ற அனுபவங்களின் வெளிப்பாடுகள் தரிசனமாகின்றன. 57-60களில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் தற்காலிக ஆசிரியராகப் பணியாற்றிய வேளையில் ஏற்பட்ட அனுபவம் போலிகள் என்ற சிறுகதைக்கு கருவாகியது. கனடா மாப்பிள்ளையால் வஞ்சிக்கப்படும் ஒரு பெண் தன் சுயமுயற்சியால் பெற்ற அரச உத்தியோகத்தையும் உதறிவிட்டு, துணிச்சலுடன் தன் ஒரே குழந்தையுடன் தாயகம் திரும்பும் சம்பவத்தைத் தகர்வு என்ற கதை விபரிக்கிறது. கால வெள்ளம், தெளிவு ஆகிய ஆக்கங்களில் தான் மாணவனாயிருந்த காலகட்டத்தில் பெற்ற இரண்டு அனுபவங்களை பதிவுசெய்திருக்கிறார். மூடுதிரை, வீடு, காவியமானான், பேய்களும் பிசாசுகளும் ஆகிய ஆக்கங்களில் போர்க்காலச் சம்பவங்கள் பதிவுபெற்றுள்ளன.

**6651**

**காலத்தின் குரல்கள்.** கலா பரமேஸ்வரன் (தொகுப்பாசிரியர்). பேராதனை: பல்கலை வெளியீடு, பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, மார்ச் 1964. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்).
88 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 18x12.5 சமீ.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களின் சிறுகதைத்தொகுப்பு. செங்கை ஆழியான் (சாதி), செம்பியன் செல்வன் (பாரம்பரியம்), க.பரராஜசிங்கம் (விளாம்பழம்), சபா ஜெயராசா (அணைப்பு), கலா பரமேஸ்வரன் (உதிரி), க.நவசோதி (அன்பின் அணைப்பில்), குந்தவை (மனிதத்துவம்), எம்.ஏ.எம்.சுக்ரி (கழுவாய்), செல்வ.பத்மநாதன் (அசைவு) ஆகியோரின் 9 சிறுகதைகள் இத்தொகுப்பை அலங்கரிக்கின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275683).

**6652**

**கிண்ணஞ்சொட்டு: சிறுகதைத் தொகுதி**. சொல்லன்பன் நசிறுதீன் (இயற்பெயர்: எஸ்.எம்.எம்.நசிறுதீன்). ஒலுவில் 2: மின்னல் வெளியீட்டகம், நெசவுநிலைய வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2006. (அக்கரைப்பற்று: நியு செலக்ஷன்).
(12), 220 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-99617-0-5.

மின்னல் வெளியீட்டகத்தின் மூன்றாவது வெளியீடு. ஏற்கெனவே உயிர்ச்சிறகுகள் (ஹைக்கு கவிதைகள்), மண்ணில் வேரானாய் (புதுக்கவிதை) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளது. எஸ்.எம்.எம்.நசிறுதீன் எழுதிய 47 சிறுகதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. கிராமத்தின் ஒவ்வொரு முகத்தையும் அளந்து பக்குவமாகத் தன் பாத்திர வார்ப்புகளில் தொகுத்திருக்கிறார். இக்கதைகளில் முழுமைபெற்றதொரு கிராமியச் சூழலைக் காணமுடிகின்றது.

6653
**குறிஞ்சி மலர்கள்: மலையக பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள்.** அந்தனி ஜீவா. கண்டி: மலையக வெளியீட்டகம், தபால் பெட்டி எண் 32, 1வது பதிப்பு, மார்ச் 2000. பிலிமத்தலாவ: Green Leaf Print House, 416 Colombo Road).
108 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ., ISBN: 955-9084-08-9.

பேராதனை ஷர்புன்னிஷா (மனத்தின் சுமை), பூரணி (முடியாத கதை பல), புசல்லாவ ஸ்மாலிஹா (காயாம்பூவும் வாழைமரமும்), அட்டன் சாந்தாராஜ் (தோட்டத்து மண்), ஷாந்தி மோகன் (நெருப்புக்குள் வீடுகட்டி), அக்னஸ் சவரிமுத்து (செந்தாமரை), பாலரஞ்சனி சர்மா (நெத்திக்காசு), ரோஹினி முத்தையா (சட்டி சுட்டுவிடும்), சுகந்தி வெள்ளையகவுண்டர் (விடியல் எப்போது?), செ.கோகிலவர்த்தனி (பென்சன்), இரா.சர்மிளாதேவி (விதி வரைந்த பாதை வழியே), சிவாஜினி சதாசிவம் (லயக்காம்பரா) ஆகிய 12 படைப்பாளிகளின் கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 534882).

6654
**கூட்டத்தில் கூடிநின்று: சிறுகதைகளின் சேகரம்.** கண்டி எம்.ராமச்சந்ரன். கண்டி: எம்.ராமச்சந்ரன், 2/1 ரிவடேல் ரோட், அனிவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).
x, 90 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-96076-5-6.

கூட்டத்தில் கூடிநின்று, கேள்வி, முரண்தொடை, கல்யாண சமயல் சாதம், அதிபர், வியாதிகள், எட்டடிக் குச்சுக்குள்ளே, சோ/மோசலிசமா, மாற்றம், புதிர் ஆகிய தலைப்புகளில் அமைந்த 10 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மலையகத்தவரான ராமச்சந்திரன் ஈ.வே.ரா.பெரியாரின் சிந்தனைகளை உள்வாங்கிக்கொண்டவர். தனது எழுத்துக்களில் வித்தியாசத்தைப் புகுத்தி எழுதிவருபவர். கை என்ற சொல்லை கய் என்று எழுதும் இவரது படைப்புக்கள் பலராலும் விமர்சனத்துக்குள்ளாகி வந்துள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 581015).

6655
**கூன் நிமிர்கிறது.** U.L.M.இஸ்மாயில். சம்மாந்துறை: தேசிய கலை இலக்கியத் தேனகம், 1வது பதிப்பு, 2008. (சம்மாந்துறை: ஷம்றா பிரிண்டர்ஸ்).
96 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 21x15 சமீ.

1969இல் தனது முதலாவது படைப்பை சுதந்திரன் பத்திரிகையின் வாயிலாக பிரசுரித்தவர், சம்மாந்துறை மலையடிக் கிராமத்தைச் சேர்ந்த ஈழத்தொண்டன் இஸ்மாயில். இவரது 18 கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. அடக்கி ஒடுக்கப்பட்ட தொழிலாளிகளினதும் விவசாயிகளினதும் முதுகில் ஏற்றப்பட்டுள்ள சுமைகள் இறக்கப்பட்டு அவர்களின் வாழ்வு வளம்பெறவேண்டும் என்ற இலக்கு நோக்கியதாய் இக்கவிதைத் தொகுப்பு அமைந்துள்ளது. வர்க்க உணர்வை மழுங்கடித்து இனத்துவ உணர்வை கூர்தீட்டி சமூகங்களிடையே கோபத்தையும் குரோதத்தையும் கொலைவெறியையும் கட்டவிழ்த்துவிட்ட முதலாளித்துவ ஏகாதிபத்திய சதியை மீறி கூன் நிமிர்ந்து தன் இளமைக்கால நினைவுகளை மீட்டெடுத்து மனித விடுதலைக்காகவும்

*சுரண்டலுக்கு எதிராகவும் இனவெறிக்கு எதிராகவும் சாதி ஒடுக்குமுறை, சீதனக் கொடுமைகளுக்கு எதிராகவும் எல்லோரும் ஒருங்கிணைந்து போராடவேண்டும் என்ற குரல் கவிதைகளின் அடிநாதமாக ஒலிக்கின்றன.*

***6656***

***கொன்றைப் பூக்கள்.*** *மண்டூர் அசோகா. கொழும்பு 13: தாய்நாடு பதிப்பகம், 8, 1/1, கல்லூரி வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1976. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம்).*
*176 பக்கம், விலை: ரூபா 4.75, அளவு: 18x12.5 சமீ.*

*கனவுகளும் கண்ணீர் மலர்களும், போலிச் சுமைகளும் பொசுங்கும் இதயங்களும், கோபுரம் சரிகின்றது, சுமை ஒன்று இறங்கியது, உள்ளம் ஒன்று ஒய்கின்றது, உன் கண்ணில் நீர்வழிந்தால், ஒரு கிழவியின் சபதம், இலட்சியம், தோணி ஒன்றைத் தேடி, கொன்றைப் பூக்கள் ஆகிய 10 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. 1976இல் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற சிறுகதைத் தொகுதி இதுவாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 317932).*

***6657***

***சாலையின் திருப்பம்.*** *டொமினிக் ஜீவா. கொழும்பு 1: எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம், 94, 2/7 யோர்க் பில்டிங், யோர்க் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1965. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், கண்டி வீதி).*
*148 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12 சமீ.*

*டொமினிக் ஜீவாவின் 10 சிறுகதைகளைக்கொண்ட தொகுப்பு இது. சிருஷ்டி கர்த்தா, கிடுகுவேலி, தெரு விளக்கு, தேசம் என்பது மண்ணல்ல, நடுப்பகலில் கோடைமழை, யுகபுருஷன், படு முடிச்சு, நாளையின் நினைவுச் சின்னம், இரகசிய கீதம், சாலையின் திருப்பம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 279118).*

***6658***

***சின்னஞ்சிறு கதைகள்: முதலாம் தொகுதி.*** *ச.வே.பஞ்சாட்சரம். சுன்னாகம்: தமிழருவிப் பதிப்பகம், கலாதேவி அச்சகம், 1வது பதிப்பு, நவம்பர் 1969. (கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு).*
*72 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 18x13 சமீ.*

*45 குட்டிக்கதைகளைக் கொண்ட தொகுப்பு. இத்தொகுதியில் சமூகத்தின் சீர்கேட்டு அவலங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன. குடிவெறியின் விளைவு, காதலின் தோல்வி, கழிவிரக்கம், சாதிச் சீர்கேடு. எழுத்தாளன் நிலை, வறுமையின் கொடுமை, ஒழுக்கக் கேடு முதலிய பல்வேறு உணர்வுகளும் இத்தொகுதியின் பாத்திரங்களாக நடமாடுகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 279109).*

***6659***

***சுநாதங்கள்: கதைத் தொகுப்பு.*** *சாயிசசி (இயற்பெயர்: இராஜி சிவஞானப்பிரகாசம்). கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 202 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, மார்ச் 2006. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).*
*188 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ.*

*அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் சாயி சசியின் இலக்கிய அறிமுகம், சிட்னி தமிழ் பட்டதாரிகள் சங்கத்தின் வெளியீடான கலப்பை சஞ்சிகையின் வாயிலாக அரங்கேறியது.*
*இச் சிறுகதைத் தொகுதியில் இவர் எழுதிய இராட்டினப் பறவைகள், திரிசங்கு சொர்க்கம், சுகந்த விருட்சம், சுகமான ரணங்கள், சுநாதங்கள், உள்ளத்து நிலவு நீ, பிரிந்தவர் கூடினால், தொடர்ந்து வரும் நினைவு அலைகள், ஐந்தில் வளையாதது, முரண்பாடுகள், அந்த அன்பு, தீபமங்கள ஜோதி ஆகிய 12*

கதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 608208).

**6660**

**சுமைகள்: பரிசுபெற்ற சிறுகதைகள்.** முஸ்லிம் மாதர் ஆராய்ச்சி செயல் முன்னணி. கொழும்பு 5: முஸ்லிம் மாதர் ஆராய்ச்சி செயல் முன்னணி, 17 ஏ, பார்க் அவென்யூ, 1வது பதிப்பு, பெப்ரவரி 1993. (சென்னை 600001: தாஜ் பிரஸ், 53, நயினியப்பன் சாலை).
75 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18x12 சமீ.

1990இல் முஸ்லிம் மாதர் ஆராய்ச்சி செயல் முன்னணி ஒழுங்குசெய்திருந்த சிறுகதைப்போட்டியில் பரிசுபெற்ற முதல் மூன்று சிறுகதைகளுடன் இன்னும் இரு கதைகளையும் இணைத்து இத்தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது. முதற் பரிசுபெற்ற ஹஸீனா வஹாப் எழுதிய சுமைகள் என்ற கதையும், இரண்டாம் பரிசுபெற்ற எம்.ஏ.ரஹீமாவின் இதற்காகத் தானா என்ற கதையும், மூன்றாம் பரிசு பெற்ற /பாத்திமா ரஜாப் எழுதிய தப்புத் தாளங்கள் என்ற கதையும் இடம்பெற்றுள்ள இத்தொகுப்பில் பெண் மனம் (இர்.்.பானா ஜப்பார்), தீர்க்கப்படாத நியாயங்கள் (்.பௌஸியா யாஸீன்) ஆகிய இரு கதைகளும் இடம்பெற்றுள்ளன. இவை மொத்தம் 28 போட்டிக்கதைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 462180).

**6661**

**சுமைதாங்கி.** ந.பாலேஸ்வரி. திருக்கோணமலை: நரெசி வெளியீடு, 1வது பதிப்பு, ஆடி 1973. (யாழ்ப்பாணம்: கூட்டுறவு அச்சகம்).
71 பக்கம், விலை: ரூபா 1.90, அளவு: 18x12.5 சமீ.

இச்சிறுகதைத் தொகுப்பில் சுமைதாங்கி, இதுதான் உலகம், மகா தியாகி, எல்லைக்கோடு, டெரலின் ஷேட், ஜெயந்தியின் தந்தி ஆகிய ஆறு சிறுகதைகள் அடங்கியுள்ளன. திருக்கோணமலை மாவட்டம், திருகோணமலையைச் சேர்ந்த திருமதி பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கன் அவர்கள் "பெண்மையின் தனித்துவத்தன்மை பிரதிபலிக்கும் ஆக்கங்களை எழுதிவரும்" ஈழத்து முதலாவது பெண் நாவலாசிரியை மட்டுமல்லாது அதிக நாவல்களை எழுதிய ஈழத்துப் பெண் எழுத்தாளருமாவார். மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியில் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியையான இவர் ஆசிரிய சேவையில் நீண்ட காலம் சேவையாற்றி ஒய்வுபெற்றார். இவரின் கன்னிக்கதை **"வாழ்வளித்ததெய்வம்"** எனும் தலைப்பில் தினகரன் பத்திரிகையில் 1957ம் ஆண்டு பிரசுரமானது. அன்றிலிருந்து இன்றுவரை இருநூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், பன்னிரண்டுக்கு மேற்பட்ட நாவல்களையும் எழுதியுள்ளார்.

**6662**

**செழிப்பைத் தேடும் பறவைகள்.** புயல் (இயற்பெயர்: பெ.சிறிகந்தநேசன்). யாழ்ப்பாணம்: லலிதா கிராப்பிக்ஸ், அங்களப்பாய், இணுவில் கிழக்கு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (யாழ்ப்பாணம்: ஷாம்பவி பதிப்பகம்).
xi, 100 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை மாணவனின் சிறுகதைத் தொகுப்பு. இடப்பெயர்வினால் பாதிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் அகதி முகாமில் வாழ நேர்ந்த புயலின் பார்வையில் தான் சார்ந்த சமூகத்தின் பல்வகைப்பட்ட துன்பங்களும் இன்னல்களும் கதைகளினூடாக விரிகின்றன. எங்கோவொரு மூலையில் நடந்த உண்மைச் சம்பவங்கள் - மனதைத் தாக்கிய நிகழ்வுகள் இங்கு மீள்தரிசனமாகின்றன. இன்றைய இளைய சமுதாயத்தின் இலக்கற்ற பாதையின் போக்கு கதைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. சமுதாயச் சீரழிவுகள், வறுமை, இடப்பெயர்வு, அடக்குமுறைகள் என்பன இவரது கதைகளின் பாத்திரங்களைப் பொங்கியெழ வைக்கின்றன. பழஞ்சோறு, செழிப்பைத் தேடும் பறவைகள், அந்தஸ்து, தொலைந்துபோன உறவுகள், காதல் விடுதலை, கனவு வாழ்வு, நனவாகாத காதல், வசந்தம் தொலைத்த காதலி, ஏமாற்றம், பனிக்கால மேகங்கள் ஆகிய 10 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 597001)

**6663**

**டானியல் கதைகள்.** கே.டானியல். கொழும்பு 13: எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம், 162, வாசல வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1962. (கொழும்பு 8: லங்கா பிரஸ்).
152 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12.5 சமீ.

டானியலின் சிறுகதைகளின் தேர்ந்த கதைகளான திருநாள், தண்ணீர், கொடும்பாவி, தெய்வபரம்பரை, மானம், தாளுண்ட நீர், அசை, வள்ளி, உறவும் நிழலும், மரண நிழல் ஆகிய பத்துச் சிறுகதைகளை உள்ளடக்கிய தொகுப்பு இது. தண்ணீர், மரணநிழல் என்பன பின்னர் நாவலாகவும், குறுநாவலாகவும் விரிவுபடுத்தப்பட்டும் வெளியிடப்பட்டுள்ளன. கே.டானியலின் முதலாவது சிறுகதைத் தொகுப்பான இந்த நூலுக்குப் பின்னரே உலகங்கள் வெல்லப்படுகின்றன 1974இல் வீரகேசரி வெளியீடாகவும், டானியல் சிறுகதைகள் தமிழகத்தில் கோவை விளிம்பு ட்ரஸ்ட் வெளியீடாகவும் வெளிவந்தன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 280618).

**6664**

**தந்தப் பேழை: கதைத் தொகுப்பு.** சாயிசசி (இயற்பெயர்: இராஜி சிவஞானப்பிரகாசம்). கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 202 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, மார்ச் 2006. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).
198 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x14.5 சமீ.

அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் சாயி சசியின் இலக்கிய அறிமுகம், சிட்னி தமிழ் பட்டதாரிகள் சங்கத்தின் வெளியீடான கலப்பை சஞ்சிகையின் வாயிலாக அரங்கேறியது. இச் சிறுகதைத் தொகுதியில் இவர் எழுதிய அணைக்கும் கரங்கள், அமுத சுரபி, அன்பெனும் அங்குசம், இக்கரைப் பச்சை, காக்கைச் சிறகினிலே நந்தலாலா, நீயெனதின்னுயிர் கண்ணம்மா, தேவரிஷி நாரதர் தரிசித்த கலைக்கோயில், நேசம் மறக்கவில்லை நெஞ்சம், பனிப்படலம், தந்தப்பேழை ஆகிய 10 கதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 608218).

**6665**

**தரிசனங்கள்: பல்கலைக்கழக எழுத்தாளர்தம் சிறுகதைகள்.** பொன்.இரத்தினபாலன் (புனைபெயர்: கலையமிர்தன்). கொழும்பு: ரதி பதிப்பகம், 1வது பதிப்பு, மே 1973. (கொழும்பு 13: நேரு அச்சகம்).
146 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18.5x12.5 சமீ.

பேராசிரியர் கைலாசபதியின் விரிவான முன்னுரையுடன் கூடிய சிறுகதைத் தொகுப்பு. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்திலிருந்து உருவாகியுள்ள இத்தொகுப்பிற்கு பல்வேறு துறைகளில் பயின்ற பல்கலைக்கழக மாணவர்களினதும் சிறுகதை ஆக்கத்திறனின் பன்முக தரிசனங்களும் அடிப்படையாகின்றன. இதில் மூலஸ்தானம், இதயங்கள் மோதுகின்றன, யந்திர பூமி, நான் சந்தியில் நிற்கிறேன், வீட்டிலும் வெளியிலும், சுயதரிசனம், ஒரு மாலைநேரத்துப் பாதசாரி, இருளைக்கடந்து, நினைவொன்று ஆதிக்கம் நிகழ்த்துகின்றது, பரிதாபத்திற்குரிய, உறவுக்கு அப்பால் ஆகிய பதினொரு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 300514).

**6666**

**தாலி சிரித்தது: சிறுகதைத் தொகுதி.** மலையமான். கொழும்பு 6: தேனருவி பிரசுராலயா, 20 றோகினி ஒழுங்கை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 1965. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ பார்வதி அச்சகம், 288 ஆஸ்பத்திரி வீதி).
viii, 115 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18x12.5 சமீ.

வேலணை மலையமான் எழுதிய 12 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. தாலி சிரித்தது, பசுமரத்தாணி, தவறு, பாசம், பெருமை, தானம், கடற்பஞ்சு, பசியும் பாசமும், மின்னல், கலக்கம், மனமாற்றம், மானம் ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275715).

**6667**

**திசைகள் தேடும் பறவைகள்: சிறுகதைகள்.** அல்லையூர் சி.விஜயன் (இயற்பெயர்: சின்னத்துரை விஜயகுமார்). இத்தாலி: சின்னத்துரை விஜயகுமார், via Ausonia 7B/10, 16136 Genova, இணை வெளியீட்டாளர்: சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2004. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆ.்.ப்செட்).
xiv, 102 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 17.5x12 சமீ.

திசைகள் தேடும் பறவைகள், இந்தச் சுவடுகளின் பின்னால், வேடந்தாங்கல், இன்றைய தீர்ப்புகள், முயற்சி, நிலவை மூடிய முகில்கள், கைமாறிய கவிதைகள், விடியாத இரவுகள் ஆகிய எட்டு சிறுகதைகளின் தொகுப்பு. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 598991).

**6668**

**திருக்குறள் கதைகள்: பொருட்பால் 381-480.** கே.வி.குணசேகரம். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600005: எம்.கே.என்டர்பிரைஸஸ்).
432 பக்கம், விலை: இந்திய ரூபா 110., அளவு: 17.5x12.5 சமீ.

இத்தொகுப்பில் திருக்குறள் கருத்துக்களை விளக்கும் 100 குறுங்கதைகள் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளராகப் பணியாற்றியவர். நல்லதொரு சமூகத்தில் அமையவேண்டிய அறநெறி ஒழுக்கங்களை நவீன சமூகத்திற்கு ஏற்புடையதாக இக்கதைகள் வழங்குகின்றன.

**6669**

**திருக்குறள் கதைகள்: பொருட்பால் 481-580.** கே.வி.குணசேகரம். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆ.்.ப்செட்).
372 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 18x12.5 சமீ.

இத்தொகுப்பில் திருக்குறள் கருத்துக்களை விளக்கும் 100 குறுங்கதைகள் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளராகப் பணியாற்றியவர். நல்லதொரு சமூகத்தில் அமையவேண்டிய அறநெறி ஒழுக்கங்களை நவீன சமூகத்திற்கு ஏற்புடையதாக இக்கதைகள் வழங்குகின்றன.

**6670**

**திரைப்படத் துறைக்கு ஏற்ற அருமையான கதைகள்.** கீர்த்தி (இயற்பெயர்: குமரேஸ்வரன் கீர்த்திசிங்கம்). சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆ.்.ப்செட்).
156 பக்கம், விலை: இந்திய ரூபா 180., அளவு: 18x12.5 சமீ.

இளவாலை புனித ஹென்றி அரசர் பாடசாலை பழைய மாணவரான கீர்த்தி, திரைப்படத்துறையில்- ஆழமான பற்றுதல் கொண்டவர். லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் இவரது முயற்சியில் உயிரே என்னை அழைத்தேன் (குறுந்திரைப்படம் 1993), வசந்தகாலப் பூக்கள் (1996), இரகசிய சினேகம் (2003) என்பன வெளிவந்துள்ளன. திரைப்படமாக விரிவாக்கத்தக்கதான 15 கதைகளை இத்தொகுப்பில் இவர் வழங்கியுள்ளார். புதிர், சைலூயா நீ சம்மதமா, கதிர்மலர், எனக்குள் ஒரு ஆசை, சாயிமீரா, வம்பனின் காதலி, வெற்றிவீரன், இரகசிய சினேகிதியே, காதலித்துப் பார், மனநோய், செம்பாட்டாள், தொலைந்து போனவர்கள், அறுபதும் இருபதும், ஆகாயக்கோட்டை, சிப்பி ஆகிய தலைப்புகளில் இக்கதைகள் இடம்பெற்றுள்ளன.

**6671**

**துருவ சஞ்சாரம்.** ஆனந்தி (இயற்பெயர்: மாதினியார் ஆனந்தநடராஜா). கொழும்பு 13: மல்லிகைப் பந்தல் வெளியீடு, 201/4 ஸ்ரீகதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 2009. (கொழும்பு 13: லக்ஷ்மி பிரின்டர்ஸ், 103 ஏ, விவேகானந்தா மேடு).
xii, 106 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-8250-45-7.

கடந்த நான்கு தசாப்தங்களாக எழுதிவரும் ஆனந்தி ஏழாலையைச் சேர்ந்தவர். கடந்த நான்கு ஆண்டுகளாகத் தான் எழுதிய சிறுகதைகளிலிருந்து தேர்ந்த 18 சிறுகதைகளைத் தொகுத்து இந்நூலை உருவாக்கியுள்ளார். செருப்பு, (தினமுரசு 2004), இது ஒரு தலைவனின் கதை (தினமுரசு 2005), ஒரு மேதையும் ஒரு பேதையும் (மல்லிகை 2005), துருவ சஞ்சாரம் (மல்லிகை 2005), சிறகொடிந்த தீயினிலே (மல்லிகை 2007), பெரியவன் (மல்லிகை 2007), சாத்தானின் முகம் (மல்லிகை 2007), பட்ட மரமும் பகற்குருடனும் (மல்லிகை ஆண்டுமலர் 2008), வானம் வசப்படும் (வீரகேசரி 2008), நிழல் சரியும் ஒற்றைப் பிழம்புகள் (மல்லிகை 2008), உயிர் நேசம் (மல்லிகை 2008), தொடுவானம் (மல்லிகை 2008), வழிபாடு (வீரகேசரி 2008), முட்கிரீடம் (மல்லிகை 2008), ஏகலைவன் (மல்லிகை 2009), சிலை, முதற்கோணல், (மல்லிகை 2009), கண்ணில் தெரியுது ஒரு வானம் (மல்லிகை 2009) ஆகிய கதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. ஆசிரியரின் முதலாவது நூல் இதுவாகும்.

**6672**
**தெய்வ மகன்.** நாவேந்தன். (இயற்பெயர்: V.T.திருநாவுக்கரசு). சுன்னாகம்: தமிழ்க்குரல் பதிப்பகம், ஏழாலை வடக்கு, 1வது பதிப்பு, மே 1965. (அச்சுவேலி: சிவகுமாரன் அச்சகம்).
(8), 118 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 16x11.5 சமீ.

ஆறாவது தமிழ்க்குரல் வெளியீடாக பிரசுரமாகியுள்ள இச்சிறுகதைத் தொகுப்பு, நாவேந்தனின் இரண்டாவது சிறுகதைத் தொகுதியாகும். திரை, உணர்ச்சி, பிரசவம், இடைவெளி, ? (கேள்விக்குறி), கடவுள் சாட்சி, அழியாதது, காதல் ஒரு பொய், ஆண்மை, தெய்வ மகன், உலகப்பன் ஆகிய தலைப்புக்களில் வெளியாகிய 11 கதைகளும் பெரும்பாலும் மனித வாழ்வில் உருப்பெறும் பாலுணர்வை அடித்தளமாகக் கொண்டு புனையப்பெற்றவை. இதற்கு முன்னர் வாழ்வு என்ற தலைப்பில் வெளியான சிறுகதைத் தொகுதி இலங்கை சாகித்திய மண்டலத்தின் பரிசிலை 1964இல் பெற்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275680).

**6673**
**தேசத்தின் பாடல்கள்.** வளவை வளவன். (இயற்பெயர்: தா.மா.செல்லத்தம்பி). அச்சுவேலி: நீதிவளவன் வெளியீடு, வளலாய், 1வது பதிப்பு, கார்த்திகை 2002. (மானிப்பாய்: திருச்செல்வி அச்சகம்).
iv, 183 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.

புயலின் சுவடுகள் மாறாத ஒரு தேசத்தின் பாடல்களாக ஒலிக்கும் 21 சிறுகதைகளின் தொகுப்பு. உலக அரங்கில் விடுதலை வேண்டிப் போராடும் அனைத்து அமைப்புகளினதும் பொதுக் குரலாக இவை ஒலிக்கின்றன. இவை இனம், மொழி. மதம், சாதி, சிறுவர் பிரச்சினை, சீதனம், சுதந்திரம், சுயநிர்ணயம், விதவாவிவாகம், மானுடம், கலை, காதல். உளப்பிறள்வு, உணர்வுகள். பசி, பாலியல் வக்கிரங்கள். உறுதி, வறுமை போன்ற மனித இடர்ப்பாடுகளை உள்ளீடாகக் கொண்டுள்ளன. ஒரு அரசின் சரிவு, அரங்கேற்றம், உணர்வுகள், மானுடம் சாகவில்லை, தேசத்தின் பாடல் இது, வாக்குமூலங்கள், இமயங்கள், ஈகையின் மறுபக்கம், தேசத்தின் கொடி, சவுக்காரம், பசி, மரணித்த மானுடம், போராளிகள், நான் வரமாட்டன், இந்த மண்ணில்தான் இதுகளும், அவள் ஏன் ஓடுகிறாள்?, நிழல் தேடும் நெஞ்சங்கள், சங்கமம், ஒரு விதவை மலர்சூடுகிறாள், பன்னீர்த் துளிகள், வேதனைப் புயல் ஆகிய 21 கதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 577303).

**6674**
**தேன் நிலவுப் பயணம்: சிறுகதைகள்.** இரா.பாலச்சந்திரன். மானிப்பாய்: மக்கள் கலாசார முன்னேற்றக் கழகம், 1வது பதிப்பு, நவம்பர் 1973. (யாழ்ப்பாணம்: திருச்செல்வி அச்சகம், தட்டாதெரு).
52 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 17.5x12 சமீ.

கடுவன்கள் திரிகின்றன, தியாகியின் மனைவி, பேய்கள் எரிகின்றன, தேன் நிலவுப் பயணம், சமூகம் தேய்கின்றது, இறைவனாக நினைத்தேன், வள்ளியின் வழியில், டைக்கரின் கண்ணீர், அவள் எங்கு சென்றாளோ? ஆகிய ஒன்பது கதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. பிரச்சினைக் கதைகளாகவும், பாலுணர்ச்சிக் கதைகளாகவும் இவை உள்ளன. பொறுப்பற்ற பெற்றோரின் நடத்தைகளைப் பார்த்து விபரீதமாக மாறும் பத்து வயது மகளின் வாழ்க்கைக் கதையே சமூகம் தேய்கிறது. ஒருவனை மனதார விரும்பிவாழும் ஒருத்தியை ஒருதலைக்காதல் வசப்பட்ட சுந்தர் நண்பர்களுடன் சேர்ந்து கெடுப்பது பேய்கள் எரிகின்றன என்ற கதை. பாலியல் பிரச்சினை மனிதர்களுக்கு மட்டுமல்ல நாய்களுக்கும்தான் என்பதை டைக்கரின் கண்ணீர் புலப்படுத்துகின்றது. மற்றைய படைப்பாளிகள் தீண்ட அஞ்சும் கருக்களைத் தனது கதைகளில் துணிச்சலுடன் எடுத்தாள்வதற்கு தேன் நிலவுப் பயணம், கடுவன்கள் திரிகின்றன, வள்ளியின் வழியில் ஆகிய மூன்று கதைகளும் உதாரணங்களாகின்றன. தியாகியின் மனைவி என்ற கதை சாதியத்தை பகைப்புலமாகக் கொண்டமைந்தது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 314520).

**6675**

**நவீன விக்கிரமாதித்தன் கதைகள்.** ராஜதிலகம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
vi, 146 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18x12 சமீ.

26 சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு. விக்கிரமாதித்தன் கதைகளில் வரும் வேதாளம் கதைசொல்லி, அக்கதையின் மையப்பிரச்சினைக்குத் தீர்வை கேள்வியாகக் கேட்டு விக்கிரமாதித்தனிடமிருந்து சரியான பதிலைப்பெறுவது வழமை. அந்த யுக்தியை இக்கதைகளிலும் பயன்படுத்தியிருக்கும் ஆசிரியர், கதைக்கருவை சமகாலப் பிரச்சினைகளாக்கியிருக்கிறார். தன் அறிவுத்திறத்தாலும், அனுபவ ஞானத்தாலும் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை வழங்க ஆசிரியர் முனைந்துள்ளார். மலேசியாவில் பிறந்த ராஜதிலகம், தன் பெற்றோருடன் 14வது வயதில் இலங்கைக்குத் திரும்பியவர். தொழில்ரீதியாக கணக்காளரான இவர் இலங்கையிலும் மலேசியாவிலும் பணியாற்றியுள்ளார். தனது சொந்த நிறுவனமான Print Plus என்ற நிறுவனத்தை நடத்தி வருகின்றார். கணிதத்துறையில் மிகுந்த ஆர்வம்கொண்ட இவர் புதிர் கணக்கு பற்றி Maya New Puzzle.com என்ற இணையத்தையும் நடத்திவருகின்றார். தினக்குரல் பத்திரிகையில் மாணவர்களுக்கான அறிவு ஆரம் பகுதியில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

**6676**

**நாம் பிறந்த மண்: சிறுகதைகள்.** ச.முருகானந்தன். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆ..ப்செட்).
208 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 18x12 சமீ.

1976இல் தினகரன் பத்திரிகையில் எழுதிய சிறுகதைகளின் வாயிலாக ஈழத்து சிறுகதைத் துறையில் கால் பதித்த முருகானந்தன், பிரச்சினைகளும் துன்பங்களும் நிறைந்த ஈழத்தமிழர்களின் நடைமுறைவாழ்வைத் தன் கதைகளுக்குள் பதிவுசெய்வதில் வெற்றிகண்டவர் இவர். இத்தொகுப்பில் இவரது 16 சிறுகதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நாம் பிறந்த மண், இனி எல்லாம் சுகமே, நீலம் என்பது நிறமல்ல, சின்ன சின்ன தூறல், இதோ எந்தன் காதலி, அஸ்தமனத்தில் ஓர் உதயம், ஏழையின் சிரிப்பில், மரண ஓசை, பூவைக்குள் பூகம்பம், சிதைவுகள், இன்னொரு தேவதாஸ், நான் சாகமாட்டேன், உறவுகள், இவள், வீடு, அன்னை ஆகிய 16 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**6677**

**நான் அவள்: குறுங்கதைகள் 64.** திருமலை சுந்தா. (இயற்பெயர்: இ.சி.சுந்தரலிங்கம்). திருக்கோணமலை: அம்மா பதிப்பகம், 172 பிரதான வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2009. (திருக்கோணமலை: அஸ்ட்ரா பிரிண்டர்ஸ்).
121 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 20x15 சமீ.

*1970இல் எழுதத் தொடங்கிய திருமலை சுந்தாவின் 64 குறுங்கதைகள் கொண்ட தொகுதி இது. நாளிதழ்களிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்த இக்குறுங்கதைகளின் வாயிலாகத் தன் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இவரது முதற் சிறுகதைத் தொகுதியான* **வேள்வி** *- சிரித்திரன் வெளியீடாக வெளிவந்தது. ஈழத்தில், குறிப்பாகத் திருக்கோணமலை மண்ணில் குறிப்பிடத்தக்கதொரு சிறுகதை எழுத்தாளராக விளங்குபவர் திருமலை சுந்தா.*

**6678**

**நிலவிலே பேசுவோம்.** N.K.ரகுநாதன். *சென்னை 1: பாரி நிலையம், 59 பிராட்வே, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1962. (சென்னை 14: மாருதி பிரஸ், 83 பீட்டர்ஸ் ரோடு).*
*136 பக்கம், விலை: ரூபா 2., அளவு: 18x12.5 சமீ.*

*நிலவிலே பேசுவோம், காரியதரிசி, சொத்து, சாம்ராட், கனவு, கண்கள், கொள்ளி, நானும் நாங்களும், இலட்சிய நெருப்பு, காவியத்தின் மது அருந்தி, கதவுகள் ஆகிய 11 சிறுகதைகளைக்கொண்ட தொகுப்பு. இதுவே ஆசிரியரின் முதலாவது சிறுகதைத் தொகுதியாகும். இலங்கையில் சாதியம் சம்பந்தமாகப் படைக்கப்பட்ட இரு முக்கிய இலக்கிய உருக்களாக நிலவிலே பேசுவோம் என்ற சிறுகதைத் தொகுப்பும், கந்தன் கருணை என்ற ஓரங்கநாடகமும் கருதப்படுகின்றன. இவ்விரண்டினதும் படைப்பாளி இந்நூலாசிரியரே. சிறுபான்மைத் தமிழர் மகாசபையைக் கட்டியெழுப்புவதில் எம்.சி.சுப்பிரமணியம் அவர்களுடன் இணைந்து பணியாற்றியவர் இவர்.*

**6679**

**நிறங்கள்: சிறுகதைத் தொகுப்பு.** *வ.சிவராஜா, க.அருந்தவராஜா, பொ.சிறிஜீவகன், அ.புவனேந்திரன். ஜேர்மன்: தமிழ் எழுத்தாளர் சங்கம், இணை வெளியீட்டாளர், உடத்தலவின்ன: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, ஐப்பசி 2008. (உடத்தலவின்ன: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்ன மடிகே).*
*172 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.,* ISBN: *978-955-1779-18-4.*

*உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 294ஆவது வெளியீடாக வெளியிட்டுள்ள இந்நூலில் 14 படைப்பாளிகளின் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. வ.சிவராஜா, மேழிக்குமரன் (க.அருந்தவராசா), ஸ்ரீஜீவகன், அ.புவனேந்திரன், சுந்தராம்பாள் பாலச்சந்திரன், பசுபதிராஜா, வேணி கிருபாகரன், கலைவாணி ஏகானந்தராஜா, இராஜேஸ்வரி சிவராஜா, வரதன், புத்திசிகாமணி, மீனா சிவலிங்கம், ஜெயா நடேசன், புனிதமலர் இராஜேஸ்வரன் ஆகிய ஜேர்மன் எழுத்தாளர்கள் இத்தொகுப்பில் தமது சிறுகதைகளைப் பதிவுசெய்துள்ளனர். இத்தொகுப்பிலுள்ள கதைகள் புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்களின் மன உணர்வுகளை, விரக்திகளை, வேதனைகளை இலக்கியநயத்தோடு பதிவுசெய்கின்றன.*

**6680**

**நின்னையே நிழல் என்று: சிறுகதைகள்.** *குரு.அரவிந்தன். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2006. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆ.்.ப்செட்).*
xii, *124 பக்கம், விலை: ரூபா 140., அளவு: 18x12.5 சமீ.*

*நின்னையே நிழல் என்று, மறந்தாலும் நெஞ்சம் மறக்காதம்மா, போதிமரம், ஒருபிடி மண், விடியலை நோக்கி, தொலைந்து போனவன், பாட்டியம்மா, தாய் மண்ணே வணக்கம், காந்தள் மலர், அழியாத காவியம் ஆகிய பத்துச் சிறுகதைகளைக் கொண்ட தொகுதி.*

**6681**

**நிஜங்கள்: சிறுகதைத் தொகுப்பு.** *முத்து சம்பந்தர். கண்டி: மக்கள் கலை இலக்கியப் பேரவை,* 72/1, Mapanawatura Circular Road, Pooranawathe, *1வது பதிப்பு, ஜுலை 1994. (கண்டி: சிட்னி என்டர்பிரைசஸ், 258,* D.S.*சேனநாயக்க வீதி).*
*57 பக்கம், விலை: ரூபா 40.00, அளவு: 18.5x12 சமீ.*

நிஜங்கள், தியாகத் திருநாள், கருவறை தற்கொலை, தொப்பித்தோட்டம், மௌன ஊர்வலம் ஆகிய ஐந்து சிறுகதைகளை இத்தொகுதி உள்ளடக்குகின்றது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காகத் தமது வாழ்வையே அர்ப்பணித்துவிட்டு இருட்டில் வாழவிடப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களின் உள்ளத்து உணர்வுகளை இக்கதைகள் வெளிப்படுத்துகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 457901).

**6682**

**நெருப்பு: சிறுகதைகள்.** தேவகாந்தன். சென்னை: குமரன் பப்ளிஷர்ஸ், குமரன் காலனி, 1வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, டிசம்பர் 1995. (சென்னை: சூரியா ஆர்ட் பிரின்டர்ஸ், 36, அம்பேத்கார் பிரதான சாலை).
iv, 172 பக்கம், விலை: இந்திய ரூபா 30.00, அளவு: 17.5x12 சமீ.

தமிழகத்திலும், இலங்கையிலும் படைப்பிலக்கிய உலகில் அறியப்பட்டவர் தேவகாந்தன். இலக்க என்ற சஞ்சிகையித் தமிழகத்தில் நடத்தியவர். எங்கும் இரண்டாய் (கணையாழி), உடைந்த கண்ணாடி (தாய்), வீட்டுத் தாய் (தினமணிகதிர்), தீர்ப்பு (சூர்யோதயா), போராட்டம் (தினமணிகதிர்), ஞானத்தீ (கல்கி), ரங்கநாதன் சாரும் ஆறு குருடர்களும் (அரும்பு), சொன்னால் சொன்னதுதான் (நிலாவரை), நெருப்பு (தினமணிசுடர்), வெள்ளியம்மா (சூர்யோதயா), சத்திய வேட்கை (தினமணிகதிர்), நியாயங்கள் (தாய்), அப்பா பாவம் (தினமணிகதிர்), பார்வைகள் வேறுவேறு (தாமரை), என்ன ஆசை இது (தினமணிகதிர்), உள்ளும் வெளியும் (தினமணிகதிர்) ஆகிய 16 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 615277).

**6683**

**பசி.** மாதகல் செல்வா. யாழ்ப்பாணம்: சு.மகாலிங்கம், தலைவர், இளம் எழுத்தாளர் சங்கம், 127 ஸ்டான்லி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1962. (யாழ்ப்பாணம்: தமிழ்நாடு அச்சகம், நாவலர் வீதி).
(2), 82 பக்கம், விலை: ரூபா 1.75, அளவு: 18x12.5 சமீ.

யாழ்ப்பாணம் இளம் எழுத்தாளர் சங்கத்தின் முதலாவது வெளியீடாக இச்சிறுகதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. மாதகல் செல்வாவின் பசி, அவனும் மனிதன், வெறியும் உணர்வும், மனிதப் பிறவி, பரம்பரைக் குரல், பட்டினி ஆகிய ஆறு சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 316226).

**6684**

**பஞ்சம்: சிறுகதைத் தொகுப்பு.** சோ.ராமேஸ்வரன். கொழும்பு 5: திருமதி செ.ராமேஸ்வரன், 4 ½ சித்ரா ஒழுங்கை, பம்பலப்பிட்டி, 1வது பதிப்பு, டிசம்பர் 1995. (பம்பலப்பிட்டி: கிரியேட்டிவ் ஹான்ட்ஸ்).
76 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x14 சமீ.

பஞ்சம், ஒரு கப்டனும் ஒரு பிராமணச் சிறுவனும், சிறிபாலபுர மாத்தையா, அவளும் அவளும், ஊரில் ஓர் அம்மா, தீபாவளி போனஸ், ஊர் திருந்தாது, ஒரு திரை விலகுகிறது, மேடை முழக்கம் ஆகிய கதைகளைக்கொண்ட சிறுகதைத் தொகுப்பு. ஆசிரியரின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு. தண்ணீர்ப் பஞ்சம், சீவகாருண்யம், சனப்பெருக்கம், தாய்ப்பாசம், சமூக விழுமியம் என்று பரந்துபட்ட கருத்துக்களை மையமாக வைத்து இவை ஆக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 479800).

**6685**

**பலாத்காரம்: சிறுகதைத் தொகுப்பு.** சுதாராஜ். (இயற்பெயர்: சி.இராஜசிங்கம்). யாழ்ப்பாணம்: தமிழ்ப் பணிமனை, 28, 4வது ஒழுங்கை, அரசடி வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1977.(யாழ்ப்பாணம்: கலாநிலையப் பதிப்பகம், 303 காங்கேசன்துறை வீதி).
(12), 110 பக்கம், விலை: ரூபா 4.15, அளவு: 18.5x14 சமீ.

ஆசிரியரின் பத்துச் சிறுகதைகளின் தொகுப்பு. இவற்றில் ஆறு கதைகள் சமூகக் குறைபாடு பற்றியவை. இரண்டு கதைகள் பாலியல் தொடர்பானவை. வீண் சந்தேகத்தினால் ஒரு குடும்பம்

குலைவது ஒருகதையில் சொல்லப்படுகின்றது. சமூகக் குறைபாடுகளை நையாண்டி செய்யும் ஆசிரியர் தன்னைச் சுற்றி இருப்பவர்களையும், நிகழும் சம்பவங்களையும் கூர்ந்து நோக்கித் தன் கதைகளில் புகுத்தியிருக்கிறார். தேவைகள், பலாத்காரம், அந்த நிலவை நான் பார்த்தால், புதுச்சட்டை, சோதனை, உள்ளங்களும் உணர்ச்சிகளும், வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும், நாணயக் கயிறு, மாற்றான் தோட்டத்து மலர், பயணம் ஆகிய தலைப்புக்களில் இக்கதைகள் எழுதப்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 337255).

*6686*

**பாக்குப் பட்டை.** பிரமிளா பிரதீபன். கொழும்பு 13: மல்லிகைப் பந்தல் வெளியீடு, 201/4 ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, மே 2010. (கொழும்பு 13: லக்ஷ்மி பிரின்டர்ஸ், 103 ஏ, விவேகானந்தா மேடு).

xvi, 84 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-8250-46-4.

பதுளையைச் சேர்ந்த மலையகப் படைப்பாளியான பிரமிளா பிரதீபனின் இரண்டாவது சிறுகதை நூலாக இது வெளிவந்துள்ளது. (முதற் படைப்பு- பீலிக்கரை). 2006 முதல் பத்திரிகைகளில் எழுத ஆரம்பித்த இச்சிறுகதை எழுத்தாளரின் படைப்புகளில் மலையகத்தின் உயிர்மூச்சாகத் திகழும் மொழியும், பெண்களுக்கே உரித்தான தனித்துவமான மொழிநடையையும் லாவகமாகக் கையாளப்பட்டுள்ளன. மலையக மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், குறிப்பாகப் பெண்களுக்கு எதிராக நிகழும் வன்முறைகள், அநீதிகள் பிரமீளாவின் கதைகளின் உள்ளடக்கங்களாக விரிகின்றன.

*6687*

**பிரகாசம்: அரச ஊழியர்களது இலக்கிய ஆக்கங்கள்.** சுபாசினி கேசவன் (பதிப்பாசிரியர்). கொழும்பு: கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமை அமைச்சு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (பன்னிப்பிட்டிய: விஸ்வ கிராப்பிக்ஸ், 439/3/3, ஹோகந்துர பாதை, பன்னிப்பிட்டிய).

x, 153 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x16 சமீ., ISBN: 955-9117-08-4.

கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர், சுபாசினி கேசவன் அவர்களை பதிப்பாசிரியராகவும், சுபாசினி கிருபாகரன், ஜெனித்ரா இராசநாயகம் (கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்கள்) ஆகியோரை உதவிப் பதிப்பாசிரியர்களாகவும் கொண்டு இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் வெளிப்பாட்டை வளர்த்தெடுக்கும் வகையில் ஆண்டுதோறும் நடைமுறைப்படுத்திவரும் போட்டித் தொடரில் 2008ம் ஆண்டுக்கான போட்டியில் பரிசுபெற்ற கவிதைகள், சிறுகதைகள், பாடல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது. இதே திட்டத்தின்கீழ் சிங்கள மொழியிலும் **பிரபாஸ்வர** என்ற பெயரிலும் கடந்த இரு ஆண்டுகளாக நூல்தொடர் ஒன்று வெளியாகியுள்ளது. மூன்றாவது ஆண்டில் தமிழிலும் இது வெளிவருகின்றது. 9 பாடல்களும், 8 சிறுகதைகளும், 8 கவிதைகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

*6688*

**பிரம்படி: சிறுகதைகள்.** க.தணிகாசலம். கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சென்னை 2: சவுத் ஏஷியன் புக்ஸ், 6, தாயார் சாஹிப் 2ஆவது சந்து, 1வது பதிப்பு, ஜுலை 1988. (சென்னை: விசாலம் பிரிண்டிங் ஹவுஸ்).

195 பக்கம், விலை: இந்திய ரூபா 17.00, அளவு: 18x12.5 சமீ.

பிரம்படி என்பது, இராணுவ அழிப்புக்குட்பட்ட யாழ்ப்பாணத்துச் சிற்றூர் ஒன்றின் பெயர். இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் அண்மைக்கால வரலாற்றுச் சூழலிலேயே தோய்ந்துநின்று எழுதப்பட்ட கதைகளில் பொருளுருவமும் மொழியுருவமும் இந்நூலாசிரியரை நல்லதொரு சிறுகதை எழுத்தாளராக நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறது. வறுமையும் பிணியும் வருத்தமும் வாய்ப்பின்மையும் பீடித்த மக்கட்பிரிவின் மீட்சிக்காகவும் விடுதலைக்காகவும் விமோசனத்திற்காகவும் உழைக்கவேண்டும் என்னும் வேட்கையினால் உந்தப்பட்டு அந்த வேட்கையின் சுவாலையாகச் சொரூபங்கொண்டுள்ள கதைகள் இவை. உறவுகள் தெரிகின்றன, மண்ணின் மைந்தர்கள், கூலிக்குழப்பம், ஒரு பாதை திறக்கப்படுகின்றது, மழை, சிவந்த பாதையில், கல், தெற்கு நோக்கி, வேலிகள், அகதி, நாய்களோ, பிரம்படி, நல்லநாள் அகிய தலைப்புகளில் அமைந்த 13 சிறுகதைகள்

*இதில் உள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 425463).*

**6689**

**புது வாழ்வு.** *தாழையடி சபாரத்தினம். உடுப்பிட்டி: திருமதி மீனா சபாரத்தினம், வீரபத்திரர் கோவிலடி, 1வது பதிப்பு, மே, 1969. (யாழ்ப்பாணம்: விவேகானந்த அச்சகம்).*
*(8), 221 பக்கம், விலை: ரூபா 4.00, அளவு: 18x12.5 சமீ.*

*இச்சிறுகதைத் தொகுப்பு ஈழத்தின் சிறந்த படைப்பாளிகளுள் ஒருவரான தாழையடி சபாரத்தினம் மறைந்து இரண்டாவது ஆண்டில் அவரது துணைவியாரால் வெளியிடப்பட்டது. புதுவாழ்வு என்ற தலைப்புச் சிறுகதை கல்கியில் முன்னர் வெளியாகிப் பரிசுபெற்றது. ஊமை நாடகம், ஓடமும் வண்டியும், வண்டிக்காரன், தந்தையும் மகனும், நினைவு முகம், புதுவருஷப் பரிசு, உதவியும் பிரதியும், ஜப்பானியன் படம், பந்தயம், கிழவரின் கதை, ஏழு ரூபாய், முதுமையின் முதிர்ச்சி, பெண்ணின் பெருமை, வற்றாத நீரூற்று, சுனந்தாவதி, கடமையும் கருணையும், ஷேட், சைக்கிள் சக்கரம், மனக்குகை, யார் அந்த அவன் ஆகிய 20 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275609).*

**6690**

**பெண்ணே போற்றி: சிறுகதைத் தொகுதி.** S.நஸிறுதீன். *அக்கரைப்பற்று: மறுமலர்ச்சி சமூக மேம்பாட்டமைப்பு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1999. (அக்கரைப்பற்று: டெக்னோ பிரஸ்).*
*104 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 20x14 சமீ.*

*போதுமடி நீ எனக்கு, இனியெல்லாம் மனமே, பாம்பின் கால், சந்தோசத் தோல்வி, உங்கட ஆட்கள், சரிகாணல், சும்மா இருத்தலே சுகம், அன்பின் வழியது ஆகிய 8 சிறுகதைகளின் தொகுப்பு. தன்னிலையிலிருந்து சம்பவங்களைக் கூறி எப்போதும் தன்னையே கதாசிரியர் ஒவ்வொரு சம்பவத்துடனும் இணைத்துக் கொள்கிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 531693).*

**6691**

**போர்க்களம்.** *இளையவன் (இயற்பெயர்: க.பாலநடராசன்). சுன்னாகம்: விவேக அமுது வெளியீட்டகம், ஊரெழு மேற்கு, 1வது பதிப்பு, மே 2003. (யாழ்ப்பாணம்: கோல்டன் ஆர்ட் நிறுவனம்).*
*(4), 64 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 21.5x14 சமீ.*

*இந்நூலில் இளையவனின் 13 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. போர்க்களம், தடுமாற்றம், ஆறாத காயம், நியாயங்கள், முரண், தடயங்கள், நெருக்கடி நிலை, மறுபிறப்பு, வேப்பம்பூ, புத்திசீவியம், எக்ஸ்போர்ட் பார்சல், விபத்து, ஒரு தமிழனின் கதை ஆகிய தலைப்புகளில் அவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 576145).*

**6692**

**போரும் வேரும்: சிறுகதைத் தொகுப்பு.** *புரட்சிபாலன் (இயற்பெயர்: கந்தசாமி சண்முகபாலன்). திருக்கோணமலை: திருக்கோணமலை இலக்கிய ஒன்றியம், 21 ஏ, மெக்கேசர் வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, 2002. (திருக்கோணமலை: ரெயின்போ மினிலாப், 361, நீதிமன்ற வீதி).*
*200 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 17.5x12 சமீ.*

*தினபதி பத்திரிகையின் தினம் ஒரு சிறுகதைத் திட்டத்தின்கீழ் அறிமுகமாகிய திருக்கோணமலை தந்த எழுத்தாளர் புரட்சிபாலனின் பத்து சிறுகதைகள் கொண்ட தொகுப்பு. ஒரு போராளி இயக்கத்திற்குப் போகிறான், ஏணிகள் ஏறுவதில்லை, போரும் வேரும், உள்ளே இருப்பது ஈரம், எங்கட ஆட்கள், படிக்கல், ஒரு மனிதன் ஒரு மிருகம், பிள்ளை மனம், ஆறுதல், மீண்டும் ஒரு சீதை ஆகிய கதைகள் இத்தொகுதியில் இடம்பிடித்துள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 566698).*

**6693**

**மண் பூனைகளும் எலி பிடிக்கும்: சிறுகதைகள்.** மருதூர்க் கனி. தெகிவளை: விடுதலை விருட்சம் வெளியீட்டகம், இல.11, 4வது ஒழுங்கை கவ்தான பெருந்தெரு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (கொழும்பு 3: MBL Print, 465/1, Galle Road).
214 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 19.5x13 சமீ.

பசி, கோடரிகள் நச்சு மரங்களுக்காக, நிழலைத்தேடி, சந்தன மரம், நெருப்புத் துளி, இரங்கியபோது, காலத்தின் குரல்கள், மண்பூனைகளும் எலி பிடிக்கும், கடுகதி பறக்கிது, நவயுகப் பிசாசுகள், வெறும் கைகளும் முழமிடும், கருகாத அரும்புகள், சப்பாத்து, ஒரு மல்லிகை, சீரழிவு தொடர்கின்றது ஆகிய தலைப்புகளிலான மருதூர்க் கனியின் 15 சிறுகதைகளின் தொகுப்பு இதுவாகும். சிறுகதைத்தொகுப்பின் முன்னீடாக "என் கதைகளின் அடிச்சுடர்" (மருதூர்க் கனி), "முற்போக்கு பாரம்பரியத்தின் இலக்கியச் செழுமை" (பேராசிரியர் கா.சிவத்தம்பி), "மக்களுக்கான இலக்கியம் என்றும் தோற்பதில்லை" (பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு), "தனித்துவம் பெற்ற எழுத்துக்கள்" (செ.யொகநாதன்), "A Humanist with a fine craft" (K.S.Sivakumaran), "மேலும் ஒரு குறிப்பு" (மருதூர்க் கனி) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 588138).

**6694**

**மரணத்தின் வாசனை: போர் தின்ற சனங்களின் கதை.** த.அகிலன். சென்னை 600078: வடலி வெளியீடு, எண் 6/13, சுந்தர் தெரு, எம்.ஜி.ஆர். நகர், 2வது பதிப்பு, மே 2009, 1வது பதிப்பு, ஜனவரி 2009. (சென்னை: அச்சக விபரம் தரப்படவில்லை).
180 பக்கம், விலை: இந்திய ரூபா 125., அளவு: 21x14 சமீ., ISBN: 978-81-908405-3-8.

மரணத்துள் வாழத்தொடங்கிய ஈழத்தமிழ்ச் சமூகத்தில் 1983இல் பிறக்கும் த.அகிலன் எதிர்கொள்ளும் மரணங்களே அம்மரணங்களின் வழியாக அவனுள் கிளறும் உணர்வுகளே இங்கு சிறுகதைகளாகின்றன. ஒரு சின்னப் பையனின் அப்பா செத்துப்போனார், ஓர் ஊரில் ஒரு கிழவி, மந்திரக் காரன்டி அம்மான்டி, குமார் அண்ணாவும் மிளகாய்க் கண்டுகளும், ஒருத்தீ, நீ போய்விட்ட பிறகு, சலனங்கள் அற்றவனின் கடைசி நாள், தோற்ற மயக்கங்களோ, கரைகளுக்கிடையே, செய்தியாக துயரமாக அரசியலாக, நனைத்த கண்ணீர் ஆகிய 12 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இக்கதைகள் பாரிசிலிருந்து இயங்கும் அப்பால் தமிழ் இணையத்தளத்தில் ஏற்கெனவே தொடராக வெளிவந்தவை.

**6695**

**மரபு.** இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான். சென்னை 600024: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 375-10 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, மே 1996. (சென்னை 600024: மித்ர புக் மேக்கர்ஸ், 375-10 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்).
120 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 17.5x12 சமீ.

மரபு என்ற தலைப்பிலான உருவகக் கதைத் தொகுதி கொழும்பு, அரசு வெளியீடாக 1964இல் வெளிவந்தது. இலங்கையில், தமிழில் மூலநூலாக வெளிவந்த- முதலாவது உருவகக் கதைத் தொகுதி இதுவாகும் என்று இலக்கிய வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றது. பின்னர் இதே வகையில் அமைந்த தீபன் என்ற இரண்டாவது தொகுதியும் தயாரிப்பில் இருந்தபோதிலும் அது அச்சுவாகனமேறவில்லை. இன்று மரபு, தீபன் ஆகிய இரு தொகுப்புகளுக்குமுரிய 30 உருவகக் கதைகளையும் கொண்டதாக இத்தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 534803).

**6696**

**மல்லிகைச் சிறுகதைகள்.** செங்கை ஆழியான் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: மல்லிகைப் பந்தல், 201-1/1 ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, ஜூன் 2002. (கொழும்பு 13: யு.கே. பிரிண்டர்ஸ், 98A விவேகானந்த மேடு).
xxiv, 263 பக்கம், விலை: ரூபா 275., அளவு: 21x14 சமீ. (ISBN: 955-8250-18-x).

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களின் பவளவிழா ஞாபகார்த்தமாக 27.6.2002இல் வெளியிடப்பட்டது. சீதனம்(வரதர்), கணம் (டொமினிக் ஜீவா), பெற்ற தாயும் பிறந்த நாடும் (அகஸ்தியர்), பதுங்குகுழி (நந்தி), ஆகுதி (ஈழத்துச் சோமு), சமுதாயக் கருணை (குறமகள்), ஷெல்லும் ஏழு இஞ்சிச் சன்னங்களும் (செங்கை ஆழியான்), சர்ப்பவியூகம் (செம்பியன் செல்வன்), சின்னமீன் பெரியமீன் (செ.யோகநாதன்), பொட்டு (தெளிவத்தை ஜோசப்), வள்ளம் (துரை சுப்பிரமணியன்), வெளிச்சத்துக்கு வருவோம் (சிவா சுப்பிரமணியம்), நான் ஆளப்படவேண்டும் (தெணியான்), தண்ணீர்த்தொட்டி (மா.பாலசிங்கம்), உலா (க.சட்டநாதன்), தமிழன் (சாந்தன்), தெரியாத பக்கங்கள் (சுதாராஜ்), மனதையே கழுவி (கோகிலா மகேந்திரன்), சிறு தீப்பொறி மூண்டு பெரு நெருப்பாக எரியும் (எம்.எல்.எம்.மன்சூர்), சமாந்தரங்கள் (முருகபூபதி), இலந்தைப் பழத்துப் பூக்கள் (நீர்கொழும்பூர் முத்துலிங்கம்), வெறும் மனிதன் ஒருவனின் மரணம் (டானியல் அன்ரனி), தரைமீன்கள் (ச.முருகானந்தன்), புழுதிகள் போர்த்திய புனிதங்கள் (திக்குவல்லை கமால்), ஊறிய உணர்வுகள் வழிந்து ஓடுகின்றன (பா.ரத்னஸபாபதி ஐயர்), நீறு பூத்த... (காவலூர் ஜெகந்நாதன்), வட்டத்திற்கு வெளியே (ப.அப்டீன்), பாம்பாட்டி (நாகேசு தர்மலிங்கம்), அந்த அஸ்தமனங்கள் இந்த அருணோதயங்கள் (தாமரைச்செல்வி), கடவுள் ஒருவனல்ல (கே.ஆர்.டேவிட்) ஆகிய 30 தேர்ந்த மல்லிகைக் கதைகள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 554964).

### 6697

**மலர்ந்த வாழ்வு: சிறுகதைகள்.** யாழ்வாணன் (இயற்பெயர்: நா.சண்முகநாதன்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600014: பி.வி.ஆர். பிரின்டர்ஸ்).
xx, 156 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 18.5x12.5 சமீ.

யாழ்வாணனின் 11 கதைகளைக் கொண்ட தொகுதி இது. அமரத்துவம், சங்கமம், மொட்டை, புடம், கோடை, முள், ஆதாரம், கன்னிமை, கொழுகொம்பு, மலர்ந்த வாழ்வு, பிரவாகம் ஆகிய தலைப்புகளில் இவை வெளியாகியிருந்தன. நா.சண்முகநாதன், யாழ் இலக்கிய வட்டத்தின் தாபகர்களுள் ஒருவர். நகரமண்டபக் காப்பாளராக (Caretaker) யாழ். மாநகரசபையில் பணியாற்றியவர். நகரசபையின் சுகாதாரப் பகுதியினரால் வெளியிடப்பட்ட சுகாதார ஒலி சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 598907).

### 6698

**மனங்களிலே நிறங்கள்.** ஒலுவில் அமுதன் (இயற்பெயர்: M.அலாவுதீன்). அக்கரைப்பற்று 5: ரக்ஷானா வெளியீட்டகம், 67, புதுப்பள்ளி வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2001. (அக்கரைப்பற்று: மெற்றோ ஓப்செற், பிரதான வீதி).
110 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17.5x12.5 சமீ.

இது 1976இல் இலக்கியப்பணியை ஆரம்பித்த ஒலுவில் அமுதனின் ஐந்தாவது நூலாகும். ஏற்கனவே மனக்கோலம், மரணம் வரும் வரைக்கும் ஆகிய கவிதைத் தொகுப்புகளையும், கலையாத மேகங்கள் என்ற சிறுகதைத் தொகுப்பையும், நாம் ஒன்ற நினைக்க என்ற நாவலையும் எழுதி வெளியிட்டவர். இச்சிறுகதைத் தொகுப்பில் இதுதான் சேவையா, நெருஞ்சிமுள், தெருவோர தேவதை, துடுப்பில்லாத தோணிகள், வைராக்கியம், எலியும் பொறிகளும், இப்படியும் வாழ்கிறார்கள், ஒன்றாகப் பிறந்த பொறாமை, இதயத்தில் ஒரு நிறம் ஆகிய ஒன்பது கதைகள் இடம்பெற்றுள்ளன.

### 6699

**மனச் சுமைகள்.** சுலைமா ஏ.சமி. கண்டி: தமிழ்மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, மே 1988. (சென்னை 600001: எம்.கே.பிரின்ட்ஸ், 2 முதலாவது சந்து, அங்கப்ப நாயக்கன் சாலை).
112 பக்கம், விலை: இந்திய ரூபா 10., அளவு: 18x12.5 சமீ.

தென்னிலங்கை, களுத்துறை மாவட்டத்திலுள்ள தர்கா நகர், மீரிப்பென்னையைச் சேர்ந்த முஸ்லிம் பெண் எழுத்தாளரான சுலைமா ஏ சமி 1977ம் ஆண்டின் பின்னர் எழுத்துலகில் அறிமுகமானவர்.

சமுதாய விழிதிறக்க இலக்கிய ஒளியேற்றவேண்டும் என்ற நம்பிக்கையுடன் இவர் எழுதும் சிறுகதைகளில் நீதி, நேர்மை, தர்மம், போன்ற பண்பாட்டுச் சிறப்புகள் துலக்கமாகக் காணப்படுகின்றன. ஏற்கெனவே வைகறைப் பூக்கள் என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்டவர். இது இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பாகும்.

*6700*

***மனிதர்கள்?*** *காவலூர் எஸ்.ஜெகநாதன். தமிழ்நாடு: அன்னம், சிவகங்கை, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1983.(தமிழ்நாடு: அகரம், சிவகங்கை).*

*116 பக்கம், விலை: இந்திய ரூபா 7.50, அளவு: 18x12 சமீ.*

*ஈழத்து எழுத்தாளர் எஸ்.ஜெகந்நாதனும் அவரது கதாபாத்திரங்களும் ஈழத்தின் யாழ்ப்பாணத்துத் தெருக்களில் நடமாடும் தமிழ்ச்சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான். எனினும் இக்கதைகள் மனிதர்கள் பற்றியது. அவர்களது வேஷம் கலைத்த நிலையில் அவர்களை எமக்குக் காட்டுகின்றார். ஈழத்திலும், தமிழகத்திலும் பல சஞ்சிகைகளில் பிரசுரமான கதைகள் இவை. நெருப்புக்கண்ணீர் (வீரகேசரி, 19.12.1982), மங்கையராகப் பிறப்பதற்கே (கணையாழி, பங்குனி 1982), நீறு பூத்த (மல்லிகை ஆண்டு மலர், ஆவணி 1981), உழைப்பவர்கள் உயிர்த்து விட்டார்கள் (தாமரை, 1982), பாய்ச்சல்கள் (சிரித்திரன் தை 1982), உள்ளும் வெளிகளும் (சதங்கை, மாசி 1982), மூட்டத்திலே தான் மின்னல்களும் (மல்லிகை, மார்கழி 1982), கலையும் வயிறும் (தீபம், மார்கழி 1982), தடைக்கற்கள் (அமுத சுரபி, புரட்டாதி 1982), எலும்புகளைத்தான் நாய்கள் (மன ஓசை, பங்குனி 1983), மனிதர்கள்? (நூதன விடியல், சித்திரை 1983) ஆகிய 11 சிறுகதைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 461453).*

*6701*

***மாங்கல்யம் தந்து நீயே: சிறுகதைத் தொகுப்பு.*** *ராணி சீதரன் (இயற்பெயர்: நாகராணி சீதரன்). திருக்கோணமலை: ராணி சீதரன், 136, மத்திய வீதி, 2வது பதிப்பு, நவம்பர் 2000, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1999. (கொழும்பு 13: சாம்பவி கிராப்பிக்ஸ்).*

*(6), 78 பக்கம், விலை: ரூபா 80.00, அளவு: 20.5x14.5 சமீ.*

*10 சிறுகதைகளைக் கொண்ட சிறுநூல். ஆசிரியர் நாகராணி தன் பணியாற்றலின்போது பெற்ற அனுபவங்களின் வெளிப்பாடாக இவை விளங்குகின்றன. நல்லாசிரியையுமாய், இனியார் எமக்கு, மாங்கல்யம் தந்து நீயே, சீருடை, பிரிவு தந்த துயரிலே, மரணித்து வாழும் மனிதம், மூக்குத்தி, புகலிடம், அர்த்தங்கள் மாறியபோது, யாத்திரை ஆகிய கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 546346).*

*6702*

***முடிந்துபோன தசையாடல் பற்றிய கதை.*** *மு.பொன்னம்பலம். தமிழ்நாடு: காலச்சுவடு பதிப்பகம், 669 கே.பி.சாலை, நாகர்கோவில் 629001, இணை வெளியீடு, லண்டன்: தமிழியல், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2009. (சென்னை 600 029: சென்னை மைக்ரோ பிரிண்ட்).*

*177 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 22x15 சமீ.,* ISBN: *978-81-89945-68-8.*

*மு.பொ. ஈழத்து இலக்கியப் படைப்பாளிகளுள் முக்கியமானவர். யாழ்ப்பாணம், புங்குடுதீவில் 1939இல் பிறந்த இவர் 1950முதல் இன்றுவரை இலக்கிய உலகில் காத்திரமாக இயங்கிவருகின்றார். மு.பொ. எழுதிய வீடும் பல்லக்கும், வெட்டு, சீதை, ஆந்தை, அண்டமும் அற்பமும், அவனுக்கு என்ன நேர்ந்தது, துச்சாதனர்கள், முடிந்துபோன தசையாடல் பற்றிய கதை, மரணம், அன்பு, விடுதலை மூலம், மஹாநாம தேரர் மான்மியம், அகாலிகள், கைதுசெய்யப்பட்ட கிராமம், துவக்குப் பிடியால் வாங்கிய அடி, ஆய்வு, பீதி ஆகிய 17 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவர் ஈழத்து இலக்கியவாதி மு.தளையசிங்கத்தின் இளைய சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*6703*

***முதலிரவு: சிறுகதைத் தொகுதி.*** *மருதூர்வாணன். கல்முனை: தேன்மதி வெளியீடு, மகளிர் வித்தியாலய வீதி, மருதமுனை 2, 1வது பதிப்பு, ஜனவரி 1970. (கல்முனை: மொடேர்ன் அச்சகம், 139 கல்முனை வீதி).*

*(4), 32 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 21.5x14 சமீ.*

*இந்நூலில் விழிப்பு, காதற் பரீட்சை, அழாத கண்கள், குப்பைக்குள், பழிக்குப்பழி, முதலிரவு ஆகிய ஆறு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றக்கான எழுத்தாளர் அ.ஸ.அப்துஸ்ஸமது அவர்களின் விரிவான அணிந்துரையும் இடம்பெற்றுள்ளது. மருதூர்வாணன் தனது (கல்முனைப்) பிராந்தியப் பேச்சு வழக்குகள், சம்பவங்கள் என்பனவற்றை உணர்வுச் சித்திரங்களாக்கி இக்கதைகள் மூலம் காட்டுகின்றார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275714).*

**6704**

**முற்போக்குக் காலகட்டத்துச் சிறுகதைகள்.** செங்கை ஆழியான் (தொகுப்பாசிரியர்), பூ.ஸ்ரீதரசிங் (பதிப்பாசிரியர்). கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 202 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, மாசி 2010. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ்).
xxxi, *337 பக்கம், விலை: ரூபா 800., அளவு: 22x15 சமீ.,* ISBN: *978-955-9396-40-6.*

*ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் 1950 தொடக்கம் 1960 வரையிலான காலகட்டத்தை முற்போக்குக் காலம் என வகுத்திருக்கிறார்கள். ஈழத்தமிழ்ச் சமூகத்தின் விடிவை நோக்கி, அதாவது சமூகப் பிரச்சினைகளான வறுமை, சாதிய அடக்குமுறை, சமூக ஏற்றத்தாழ்வு, இனவொடுக்கல்கள் என்பவற்றுக்கு எதிராக மக்களைச் சமூகப் புரட்சிக்கு ஒன்றிணைக்கின்ற பணியை இக்காலகட்டத்துப் படைப்பாளிகள் முன்னெடுத்துள்ளார்கள். இந்நூல் அத்தகைய 38 முற்போக்குக் காலகட்டத்துப் படைப்பாளிகளின் சிறுகதைகளின் தொகுப்பாகும். முன்னுரையில் ஈழத்து முற்போக்குப் படைப்பாளிகள் 40 பேரின் புகைப்படங்களும் அவர்களது இலக்கிய வாழ்க்கைக் குறிப்பும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.*

**6705**

**மேட்டு நிலம்: சிறுகதைகள்.** மு.சடாட்சரன். கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, 25, அவ்வல் சாவியா வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
xii, *80 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ.,* ISBN: *978-955-095-03-9.*

*முருகேசு சடாட்சரன் (1940), கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றி பின்னர் உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றியவர். நீலாவணன் தலைமையில் 1961இல் உருவாக்கப்பட்ட கல்முனை எழுத்தாளர் சங்கத்தில் முக்கிய உறுப்பினரான இவரது முதற் சிறுகதை "பிடிப்பு" கல்முனை தமிழ் இலக்கியக் கழகத்தின் வெளியீடான பாடும் மீன் இதழில் பிரசுரமாயிற்று. இந்நூலில் அழியாத ஓவியம், பிடிப்பு, கடல் பொய்க்கிறது, பச்சமண், மேட்டுநிலம், அழைப்பு, மாற்றம், சுமை, ஒற்றைப்பனை, விழிப்பு, வெளிச்சம் ஆகிய 11 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. புரவலர் புத்தகப் பூங்காவின் 20ஆவது வெளியீடு இதுவாகும்.*

**6706**

**யாழ்ப்பாணக் கதைகள்.** K.V.நடராஜன். யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, டிசம்பர் 1965. (யாழ்ப்பாணம்: ஸ்ரீசண்முகநாத அச்சகம்).
xii, *120 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12 சமீ.*

*யாழ் இலக்கிய வட்டத்தின் முதலாவது வெளியீடு. பிரம்மஞானி, கனவான், சாம்பல், நரபலி, கறை, சுவீப், அன்றில் அன்றேல், இழவு, ஊருக்காக, வேலி, விடிவு ஆகிய 11 சிறுகதைகளின் தொகுப்பு. பிரம்மஞானி, பருவத்தைத் தவறவிட்டு, சம்பிரதாயத்திற்காக மணந்துகொண்ட தமிழாசிரியருடைய வாழ்க்கையைப் படம்பிடிக்கின்றது. சாதியைத் தாண்டி எழும் காதல் உணர்ச்சியின் அவசங்களைச் சாம்பல் சித்திரிக்கிறது. யாழ்ப்பாணத்து நம்பிக்கை, மரங்களிலே குடியேற்றி வைக்கும் முனிகளைப்பற்றி நரபலி நயம்படச் சொல்கின்றது. கறையில் வரும் பாத்திரங்களை நாம் அடிக்கடி யாழ்ப்பாண நீதிமன்றவளவுகளில் சந்திக்கலாம். நினைத்தும் பார்க்கமுடியாத எதார்த்தம் வேலி என்ற கதையின் வேலிமறைப்பில் கொழுக்கின்றது. இழவு யாழ்ப்பாணத்துப் போலி ஆசாரத்தின் பின்னணியில், யாழ்ப்பாணத்தின் அறியாமையையும் சுட்டிக்காட்டுகின்றது. விடிவு- ஆசிரியரின்*

யாழ்ப்பாணத்து வாழ்க்கை முறையிலும் அங்கு பயிலப்படும் சொற்களிலுமுள்ள தேர்ச்சியைக் காட்டுகின்றது. ஆசிரியரின் நகைச்சுவை உணர்ச்சியை கனவான் என்ற கதையினூடாக அறியமுடிகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275670).

**6707**

**யுகப் பிரவேசம்: சிறுகதைகள்.** புலோலியூர் க.சதாசிவம். நாவலப்பிட்டி: இளம் எழுத்தாளர் சங்கம், தமிழகம், 1வது பதிப்பு, நவம்பர் 1973. (நாவலப்பிட்டி: ஆத்மஜோதி அச்சகம்).
xvii, 152 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 17.5x12.5 சமீ.

புது வாழ்வு, அக்கா ஏன் அழுகிறாய், மண், அலை, அஞ்சல், நெடுஞ்சாலை, மூட்டத்தினுள்ளே, இது இவர்களுக்குத் துணை, இனி ஒரு விதி, யுகப்பிரவேசம், ஒரு நாட்போர் ஆகிய 11 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஆசிரியரின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு இது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 303406).

**6708**

**யுகம்.** இமையவன் (தொகுப்பாசிரியர், இயற்பெயர்: இ.ஜீவகாருணியம்). யாழ்ப்பாணம்: பல்கலை வெளியீடு, 1வது பதிப்பு, பெப்ரவரி 1968. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).
(8), 67 பக்கம், விலை: ரூபா 1., அளவு: 16x10.5 சமீ.

கதைப்பூங்கா, விண்ணும் மண்ணும், காலத்தின் குரல்கள் ஆகிய நூல் வரிசையில் பல்கலை வெளியீட்டகத்தின் நான்காவது வெளியீடு இச்சிறுகதைத் தொகுப்பாக மலர்ந்துள்ளது. இதில் மு.பொன்னம்பலம் (தவம்), சபா.ஜெயராசா (உருளைக்கிழங்கு), சரநாதன் (கதவடைப்பு), பீ.மரியதாஸ் (முரண்பாடு), இரா.சிவச்சந்திரன் (புதுமை விளம்பரம்), இமையவன் (கௌரவப் பிரஜை), பி.வஜிரஞான (எசல பெரஹரா மர்மம்), செ.வே.காசிநாதன் (மாலை) ஆகியோரின் எட்டுச் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275534).

**6709**

**ரசிகர் குழு போட்டிக் கதைகள்.** இளம்பிறை M.A.ரஹ்மான் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, மே 1966. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ்).
(6), 76 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 21.5x14 சமீ.

1961ம் ஆண்டின் முற்பகுதியில் ஆர்.கனகரத்தினம், இளம்பிறை M.A.ரஹ்மான் ஆகியோரை அமைப்பாளர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டது இலக்கிய ரசிகர்குழு என்ற அமைப்பாகும். இவ்வமைப்பு 1961இல் மரகதம் சஞ்சிகை வழியாக (இச்சஞ்சிகை நான்கு இதழ்களையே வெளியிட்டது) ஏற்பாடுசெய்த சிறுகதைப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒன்பது சிறுகதகள் இத்தொகுதியில் இடம்பெறுகின்றன. அவ்வகையில் சிரத்தை (சத்தியன்), போரும் முடிவும் (யோ.பெனடிக்ற் பாலன்), அதர் (மருதூர்க்கொத்தன்), மோகம் (ஜோர்ஜ் சந்திரசேகரன்), புதுவாழ்வு (புலோலியூர் க.சதாசிவம்), பொறி (எம்.ஏ.நு.ஃமான்), ஒரு பிடிச் சோறு (அ.ஸ.அப்துஸ் ஸமது), விரல்கள் (செம்பியன்செல்வன்), கரத்தைக்காரன் (யு.எல்.ஏ.மஜீத்) ஆகிய 9 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275710).

**6710**

**விடிவுகள் அடிவானில்.** செ.குணரத்தினம். கொழும்பு 2: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ, பாதுக்க, 1வது பதிப்பு, 1992. (கொழும்பு 2: அரசாங்க அச்சகம்).
73 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 955-610-096-2.

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட புத்தக வெளியீட்டுத் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுப்பு. மட்டக்களப்பைச் சேர்ந்த செ.குணரத்தினம் ஈழத்து தமிழ்ப்

படைப்புலகில் நன்கு அறியப்பெற்றவர். இவரது 10 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கருவொன்று உருவாகப் போகின்றது, அனாதைகள், கண்ணீர்த்திரை, ஏழைகளும் ஆசைகளும், நீலநிற நைலக்ஸ், நம்பிக்கைதரும் நாள், நீறு பூத்த நெருப்பு, வற்றாத அலைகடல், தெய்வ நீதி, ஞான ஒளி ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 479807).

*6711*

**விடுமுறைக்கு விடுமுறை: சிறுகதைத் தொகுப்பு.** பவானி தேவதாஸ். கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, 25, அவ்வல் சாவியா வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

x, 66 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-095-02-2.

இந்நூலில் நினைவில் நீங்காதவள், என் இனிய தோழனே, உருப்பெறா உணர்வுகள், சமவெளி-சிகரம், விடுமுறைக்கு விடுமுறை, ஒரு விதவையின் கதை, பிறந்தகத்தில் - பிறந்தநாள், நேசம் கொடியது -வலிது, மனதின் மனம், ஏன், தேவ ஊழியம் ஆகிய 11 கதைகள் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியருக்கு நேர்த்தியான பார்வையும், சூழலை ஆழ்ந்து கவனிக்கும் ஆற்றலும், அனுபவங்களைச் சுவையாகச் சொல்லும் பாங்கும், மொழிநடையும், கற்பனை வளமும் நிறையவே உண்டு என்பதை அவரது கதைகள் அனைத்தும் புலப்படுத்துகின்றன. 1988இல் வார வெளியீடான சிந்தாமணியில் தனது முதல் ஆக்கம் பிரசுரமாகக் கண்ட பவானியின் பின்னைய படைப்புக்கள் பல வீரகேசரி வாரமலரில் இடம்பெற்றுள்ளன. தலாத்து ஓயா தமிழ் மகா வித்தியாலயத்தின் ஆசிரியையாகப் பணியாற்றுகின்றார். இது அவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு.

*6712*

**விண்ணும் மண்ணும்.** செம்பியன் செல்வன் (தொகுப்பாசிரியர்). பேராதனை: பல்கலை வெளியீடு, 1வது பதிப்பு, ஜனவரி 1963. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).

89 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 18.5x12 சமீ.

இச்சிறுகதைத் தொகுப்பில் அந்த ஒரு நாள் (செங்கை ஆழியான்), வாழ்க்கை ஒரு காணிவல் (முருகு), குருடு (துருவன்), பேதம் (யோகேஸ் ஐயாத்துரை), துணை (எம். சிவபாலபிள்ளை), ஒடிவு (முத்து சிவஞானம்), ஓட்டம் (சி.மௌனகுரு), பகற்பொழுது (இ.சிவானந்தன்), வர்க்கங்கள் (செம்பியன்செல்வன்) ஆகிய ஒன்பது கதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

*6713*

**வெள்ளிப் பாதசரம்.** இலங்கையர்கோன். (இயற்பெயர் ந.சிவஞானசுந்தரம்). சுன்னாகம்: ஸ்ரீமதி சிவஞானசுந்தரம், மங்களகிரி, ஏழாலை மேற்கு, 1வது பதிப்பு, நவம்பர் 1962. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).

(12), 152 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை மூலவர்களான சம்பந்தன், வைத்தியலிங்கம் ஆகியோருடன் இலங்கையர்கோனும் போற்றப்படுகின்றார். இவரது ஆங்கிலப் புலமை காரணமாக சிறுகதைகளின் மேலைத்தேயப் பண்புகளையும் உள்வாங்கித் தமிழ் வாசகர்களுக்கு வழங்கமுடிந்துள்ளது. 1930இல் நவீன உருவப் பிரக்ஞைகொண்ட மரியமதலேனா என்ற சிறுகதை இவரது முதலாவது கதையாக எழுதப்பட்டு கலைமகளில் வெளிவந்தது. பின்னாளில் இவரது கல்விப்பின்னணியும், காரியாதிகாரியாகப் பணியாற்றிய அனுபவங்களும் இவரது கதைகளின் பகைப்புலங்களாகின. வெள்ளிப்பாதசரம், அநுலா, அனாதை, மனிதக் குரங்கு, தாழை நிழலிலே, மரியா மதலேனா, சக்கரவாகம், மேனகை, நாடோடி, தாய், மச்சாள், துறவியின் துறவு, முதற் சம்பளம், யாழ்ப்பாடி, சிகிரியா ஆகிய தலைப்புகளில் பிரசுரமான இவரது 15 சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275550).

*6714*

**வெளிச்சம்: சிறுகதைகள்.** *நீ.பி.அருளானந்தம். கல்கிசை: திருமகள் பதிப்பகம், இல. 7, லில்லியன் அவென்யு, 1வது பதிப்பு, ஜுன் 2010. (தெகிவளை: ஏ.ஜே.பிரிண்ட்ஸ், 44 புகையிரத நிலைய வீதி).*
*xiv, 146 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1055-07-3.*

*இதிலுள்ள சிறுகதைகள், அண்மைக்காலத்தில் வடபகுதி மக்கள் உள்ளூர் போர் காரணமாகப் பட்ட துன்ப துயரங்களைச் சொல்வதாகும். இராணுவக் கெடுபிடிகள், பங்கர் வாழ்க்கை, ஒட்டுமொத்தமாக எல்லோரும் சந்தேகிக்கப்படுதலென்னும் பல்வேறு இன்னல்கள் அக்காலத்தில் எம்மைச் சூழ்ந்திருந்தன. இத்தகைய இன்னல்களை இக்கதைகளில் இலக்கியச் சுவையுடன் கதாசிரியர் எடுத்துக்கூறுகின்றார். தவளை, திருத்தம், எப்போது சம்பவிக்கும், கிழவர் பழுத்து விட்டார், பிரிவின் கண்கள், சபிக்கப்பட்ட நாட்கள், அழித்திருத்தல், திறப்பு, வெளிச்சம், எலிவேட்டை, கடவுளே உனக்குக் கேட்கிறதா? மிகச்சிறிய மிருகங்கள் ஆகிய 12 கதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.*

***6715***

**வைகறைப் பூக்கள்.** *சுலைமா ஏ.சமி. கண்டி: தமிழ்மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1987. (கொழும்பு 12: ரோயல் பிரின்ட்ஸ், 42 பெய்ரா வீதி).*
*110 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 18x12.5 சமீ.*

*தென்னிலங்கை, களுத்துறை மாவட்டத்திலுள்ள தர்கா நகர், மீரிப்பென்னையைச் சேர்ந்த முஸ்லிம் பெண் எழுத்தாளரான சுலைமா ஏ சமி 1977ம் ஆண்டின் பின்னர் எழுத்துலகில் அறிமுகமானவர். சமுதாய விழிதிறக்க இலக்கிய ஒளியேற்றவேண்டும் என்ற நம்பிக்கையுடன் இவர் எழுதும் சிறுகதைகளில் நீதி, நேர்மை, தர்மம், போன்ற பண்பாட்டுச் சிறப்புகள் துலக்கமாகக் காணப்படுகின்றன.இது இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பாகும்.*

***6716***

**ஜலசமாதி: சிறுகதைத் தொகுப்பு.** *ஏ.எஸ்.உபைத்துல்லா. மூதூர் 04: வானவில் வெளியீட்டகம், 672, நொக்ஸ் வீதி, 1வது பதிப்பு, 2008. (திருக்கோணமலை: அஸ்ரா பிரிண்டர்ஸ், 43 திருஞானசம்பந்தர் வீதி).*
*108 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-1098-13-1.*

*பதினொரு சிறுகதைகளை உள்ளடக்கிய இத்தொகுதிக்கான முன்னுரையை திக்குவல்லை கமாலும், நூலாசிரியர் பற்றிய அறிமுகத்தை கேணிப்பித்தனும் வழங்கியுள்ளனர். மூதூரையும், மூதூரைச் சூழவுள்ள கடல்சார்ந்த, நிலம் சார்ந்த பகுதிகளையும் இவற்றின் புவியியல், வரலாறு போன்ற விளக்கப் பதிவுகளையும் இவரது சிறுகதைகளில் இயல்பாகக் காணமுடிகின்றது. கடலை நம்பிவாழும் மக்களின் எதிர்பார்ப்புக்கள், ஏமாற்றங்கள், அவலங்கள் பற்றியும் கடற்றொழில் பற்றிய நுணக்கங்களையும் அத்தொழில்சார்ந்த மொழி நுணுக்கங்களையும், கடல்வாழ் உயிரினங்களின் நடமாட்டங்களையும் மிக அற்புதமாகப் பதிவுசெய்கின்றார். கடலின் குழந்தைகள், மண்ணின் மகன், வாழத் துடிப்பவர்கள், சம்பிரதாயங்கள், ஜலசமாதி, மரணத்தீவு, வாயில்லாப் பூச்சிகள், எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும், மீண்டும் வந்தாள், இன்னுமொரு சுனாமி வந்தால், நிழலைத்தேடி ஆகிய தலைப்பக்களில் இச்சிறுகதைகள் அமைந்துள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 628307).*

***6717***

**ஹாஜியார் வீட்டு நோன்புக் கஞ்சி.** *மொஹிடீன் ரஜா. சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆர்ட்ஸ்).*
*viii, 124 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 18x12.5 சமீ.*

*தென்னை நடுவினிலே, புதையல், கொத்திப் பேய், நூலைப்போல, உயிர், ஒரு கடிதம் ஒட்டப்படாமலே, ஹாஜியார் வீட்டு நோன்புக்கஞ்சி, கெட்டிக்காரர்கள், கரீமா விவகாரம், அவருக்காக வரவில்லை, தம்பி வந்தான், அப்பாவின் கடிதம், அன்னதானம், அத்திமரம் சாட்சி சொல்லும் ஆகிய 14 கதைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 599002).*

**மேலும் பார்க்க:** *6606, 6799, 6824, 6893*

*894.8(5) தமிழ் நாவல்கள், குறுநாவல்கள்*

***6718***

***அக்கரைக்கு இக்கரை பச்சை.*** *சோ.ராமேஸ்வரன். கொழும்பு 5: திருமதி செ.ராமேஸ்வரன், 4 ½ சித்ரா ஒழுங்கை, பம்பலப்பிட்டி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1995. (கொழும்பு 4: கிரியேட்டிவ் ஹான்ட்ஸ், பம்பலப்பிட்டி).*

*(2), 90 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x14 சமீ.*

*1991இல் நகைச்சுவைத் தொடராக எழுதப்பட்ட "வாடா மச்சான் ஊருக்கு", ஈழத்தின் யுத்தமேகம் சூழ்ந்த தமிழ்ப்பிரதேசத்தின் அவலத்தை நகைச்சுவையாக? பதிவுசெய்திருந்தது. முக்கிய கதாமாந்தர்களாக சுப்பிரமணியம் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் தளம்கொண்டும், அவரது துணைவியார் அவர்களது 11 பிள்ளைகள் மற்றும் மருமகன் என யாழ்ப்பாணத்தில் தளம்கொண்டும் உருவாக்கப்பட்டிருந்தனர். பின்னர் இதே குடும்பம் கொழும்புக்கு இடம்பெயர்ந்து வந்து அனுபவிக்கும் கஷ்டநஷ்டங்களையும் நகைச்சவையாக்கி "கொழும்பில் ஒரு ததிங்கிணத்தோம்" என்ற தலைப்பில் மற்றுமொரு தொடரையும் 1993-1994 காலப்பகுதியில் வெளியிட்டார். இவ்விரு தொடரிலிருந்தும் தேர்ந்த 20 அத்தியாயங்களை இந்நூலில் ஒரு நகைச்சுவை நவீனமாக உருமாற்றி வெளியிட்டிருக்கிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 470330).*

***6719***

***அசன்பே சரித்திரம் (அசன்பேயுடைய கதை).*** *முஹம்மது காசிம் சித்தி லெவ்வை மரைக்கார். கொழும்பு 2:* Ministry of State for Muslim Religions and Cultural Affairs, 34 Malay Street, *4வது பதிப்பு,1990, 1வது பதிப்பு, 1885, 2வது பதிப்பு, 1890, 3வது (இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகப்) பதிப்பு, 1974. (கொழும்பு 9: டெவலோ பிரின்ட், 33 அல்பியன் ஒழுங்கை).*

xii, *171 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.*

***அசன்பே சரித்திரம் (அசன்பேயுடைய கதை).*** *முஹம்மது காசிம் சித்தி லெவ்வை மரைக்கார் (மூலம்), செ.யோகராசா (பதிப்பாசிரியர்). கொழும்பு 10: புனைவகம்,* B3-G3, *ரம்யா பிளேஸ், 5வது (புனைவகம்) பதிப்பு, 2010, 1வது பதிப்பு, 1885, 2வது பதிப்பு, 1890, 3வது பதிப்பு, 1974, 4வது பதிப்பு, 1990. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம்,* B3-G3, *ரம்யா பிளேஸ்).*

xii, *172 பக்கம், விலை: ரூபா 375., அளவு: 18x12 சமீ.,* ISBN: *978-955-0350-00-1.*

*இலங்கை சுப்பிறீம் கோர்ட் புரொக்டரும், முஸ்லிம் நேசன் பத்திராதிபருமான சித்தி லெவ்வை மரைக்கார் முகம்மது காசிம் மரைக்கார் அவர்கள் இயற்றியது. ஈழத்தவரால் எழுதப்பட்ட முதல் தமிழ் நாவல் என்று கருதப்படும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க நாவல். எகிப்து தேச அரசவம்சத்தைச் சேர்ந்த அசன் என்னும் இளைஞனின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் விறுவிறுப்பான கதை. சிறுவயதில் பெற்றோரிடமிருந்து கடத்தப்படும் அசன், இந்தியாவில் வளர்ந்து ஆங்கிலப் பெண்ணின் காதலைப் பெறுகின்றான். நீண்ட போராட்டத்தின் பின் தன் தாய்நாட்டுக்கு மீண்டு பெற்றோருடன் இணைவதாகக் கதை முடிகின்றது. அசன் மாட்சிமை தங்கிய சுல்தானால், தான் செய்த சாமர்த்தியங்களுக்காக பே* (BE) *என்ற சாதனையாளருக்குரிய பட்டத்தைப் பெற்றதால் அவன் பெயர் அசன்பே ஆயிற்று. (4வது பதிப்பின் பிரதி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 457895)*

***6720***

***அஞ்சாதே என் அஞ்சுகமே.*** *ரஜனி (இயற்பெயர்:* K.V.S.*வாஸ்). கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1974. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).*

*(6),110 பக்கம், விலை: ரூபா 3.40, அளவு: 17.5x12.5 சமீ.*

மனமொத்த காதலர்களான ராஜ், பாரு ஆகிய இருவரிடையேயும் சாதிவேறுபாட்டினையும் மீறி எற்பட்ட காதல் பல சமூகப்போராட்டங்களுக்குக் களமாகின்றது. பெற்றோரது ஆதரவைப் பெற்று இறுதியில் அது வெற்றியடைகின்றது. ரஜனி என்ற புனைபெயரில் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை வாசகர்களிடையே பிரபல்யம் பெற்றவர் வீரகேசரி நாளிதழின் பிரதம ஆசிரியர் மு.ஏ.ளு.வாஸ். குந்தளப்பிரேமா என்ற சமூக நாவல் இவரை ஈழத்தின் முன்னணி எழுத்தாளராக்கியது. மலைக்கன்னி, உதயகன்னி, தாரிணி, பத்மினி, கணையாழி ஆகிய நாவல்கள் இவருக்கு மேலும் புகழைத்தேடித்தந்தன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 308571).

**6721**

**அந்தரத் தீவு.** K.S.மகேசன். கொடிகாமம்: க.ச.மகேசன். சேதுபதி, அல்லாலை, 1வது பதிப்பு, 1963. (கொழும்பு 6: ராஜா அச்சகம், 92 பாமன்கடை வீதி, வெள்ளவத்தை).
(5), 147 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

தினகரனில் தொடராக வெளியான அறிவியல் கற்பனை நாவல். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவரின் மகனான இளைஞர் ஆறுமுகம் அமெரிக்கா சென்று அங்கிருந்து அண்ணா, ஆபிரகாம் போதகர் ஆகியோருடன் சந்திரமண்டலம் சென்று மீள்கிறார். அந்தரத் தீவு என்பது விண்வெளி யாத்திரிகர்கள் வழியில் தங்கிச்செல்லக் கட்டிவிடப்பட்ட தங்குதளம் (Space Station) என்பது கதையினை வாசிக்கப் புலனாகும். தமிழில் எழுந்த விரல்விட்டெண்ணக்கூடிய விஞ்ஞானப்புனைகதைகளுள் இதுவும் ஒன்று. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 190405).

**6722**

**அருணோதயம் அல்லது சிம்மக்கொடி: ஓர் இனிய நவீன வீர நாவல்.** வரணியூர் E.S.இராசையா (இயற்பெயர்: எ.சி.இராசையா). சுன்னாகம்: தனலக்குமி புத்தகசாலை, 1வது பதிப்பு, மே 1936. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
(4), 332 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 21x13.5 சமீ.

ஈழகேசரியில் தொடராக வெளிவந்த சமூக சீர்திருத்த நாவல். Rising Sun or the Lion's Flag என்ற ஆங்கிலத் தலைப்புடன் வெளியாகியுள்ளது. மக்கள் செய்யும் நல்வினை-தீவினைப் பயன்கள் அவர்களைத் தொடர்ந்து சென்று, இறுதியில் அதன் பலாபலனை அனுபவிக்கச்செய்கின்றனவென்ற உண்மையை இச்சரிதை தெளிவாக்குகின்றது. துயரப் பெருங்கடல், கிராதகர் மத்தியில் வரோதய வீரன், கார்மேகம் கிழிக்கப் பார்வீரன் தோன்றல், நன்மையுந் தீமையும் நரர்வினைப் பயன், அந்தகன் ஆட்சியில் அதிசயக் காட்சிகள், விரகவேடன் வலைவாய்ப்பட்ட வேடதாரி, பரம்பொருளின் திருவருளேற்பாடு, பேரிடர் துடைத்த வீரியச் செம்மல், காட்டரசனின் வேட்டை, துன்பமும் இன்பமும் தோழமை ஆழமும், விவாககாலமும் விவாத கோலமும். விதிப்பயனின் விளையாடல்கள், அதிசய சாகரம், பழிதொடர் பிழவு, அக்கிரமஸ்தர் அழிவு, பரவசப் பெருவெளி ஆகிய 16 தலைப்புகளில் இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29760).

**6723**

**அன்பே என் ஆருயிரே.** ஷர்மிளா (இயற்பெயர்: ஜி.நேசமணி). கொழும்பு: ஜனமித்திரன் வெளியீடு, வீரகேசரி பதிப்பகம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, 1974. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).
(2), 218 பக்கம், விலை: ரூபா 3.40, அளவு: 17.5x12 சமீ.

தன் தங்கை சசியைச் சித்திரவதை செய்து கொன்றவர்களைப் பழிவாங்கப் புறப்பட்ட மகேஸ், சர்வதேச கடத்தல் தாபனமொன்றின் நடவடிக்கைகளை முறியடிக்கும் முயற்சியிலும் சிக்கி வெற்றிபெற்றுத் தன் பழியையும் தீர்த்துக்கொள்கின்றான். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 308569).

**6724**

**ஆஷா.** ரஜனி (இயற்பெயர்: K.V.S.வாஸ்). கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, டிசம்பர் 1972. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).
(10), 312 பக்கம், விலை: ரூபா 3.90, அளவு: 17.5x12.5 சமீ.

மகதப் பேரரசின் தோற்றக் காலத்தில் அப்பேரரசு விரிவடைவதற்கு மன்னன் அஜாதசத்ரு மேற்கொண்ட முயற்சிகளைத் தீவிரமாக எதிர்த்துப் போராடினாள் மங்களகிரி ராணியான ஆஷா. அவளது வீரசாகசங்களைச் சித்திரிக்கும் கதை. கி.மு.5ம் நூற்றாண்டு வட இந்திய அரசியல் பின்னணியில் கதை நகர்கிறது. மகதப் பேரரசனும், கௌதம புத்தர் காலத்தில் ராஜகிருகத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவனுமான பிம்பிசாரன், அவனதும் பட்டமகிஷி கோசலாதேவியினதும் புதல்வன் ஆஜத்சத்ரு, மன்னனின் இரண்டாம் மனைவி வசுமதிதேவியின் புதல்வன் ஜனகன், மகதத்தின் பிரதம தளபதி உக்கிரசேனர், அவரது மகன் பிரம்மதத்தன், உக்கிரசேனரின் மகள் மஞ்சு, அங்கதத்தின் சேனாதிபதி அனுருத்தன், மங்களகிரியின் சிற்றரசன் மலயத்வஜன், மலயத்வஜனின் ராணி ஆஷா, மலயத்வஜனின் மந்திரி சர்வார்த்தர், மங்களகிரியிலுள்ள மகத ராஜப்பிரதிநிதி விஜயகேசரி, கோசல மன்னன் பிரசன்னஜித், கோசலநாட்டின் பட்டத்து இளவரசன் விதூர்த்தன், எல்லைக்காவற்படைத் தலைவன் துன்முகி ஆகியோர் இந்நாவலின் பிரதான பாத்திரங்களாவர். ஒன்பதாவது வீரகேசரி பிரசுரமாக இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 297499).

**6725**

**இதய ஊனம்.** சித்தி.சண்முகநாதன். பலாங்கொடை: ஏ.ஆர்.பதிப்பகம், இல. 200 ஏ, அப்புத்தளை வீதி, தும்பகொட, 1வது பதிப்பு, ஜனவரி 2003. (பலாங்கொடை: Punsanda Printers).
xii, (6), 9-136 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 17.5x12 சமீ.

34 அத்தியாயங்களில் விரியும் மலையக நாவல் இது. யாழ்ப்பாணத்து மனோநிலையை விமர்சிக்கும் போக்குடன் எழுதப்பட்ட நாவலாகக் கருதப்படுகின்றது. கதைக்கருவின் மூலவிசை காதல் உந்துதலாகும். நிறைவேறாத ஒரு காதலின் பின்னணிக்களம் எளிய நடையில் கட்டியெழுப்பப்படுகின்றது. பாடசாலை, கோயில், பல்கலைக்கழகம், தெருவீதி, என்னும் இடங்களைக் களமாகக்கொண்டு எழுதப்பட்டுள்ள இந்நாவலில் மலையகத்து இயற்கை அழகாக் வர்ணிக்கப்படுகின்றது. ஆசிரியரின் முதலாவது படைப்பு. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 567269).

**6726**

**இதயங்கள்.** ஈழத்துச் சிவானந்தன். சிதம்பரம்: மணிவாசகர் நூலகம், 1வது பதிப்பு, 1967. (புதுச்சேரி 1: இளங்கோ அச்சகம், 87, வைசியர் தெரு).
54 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12 சமீ.

ஈழநாடு இதழில் "சிங்கப்பூர் தம்பதிகள்" என்ற பெயரில் எழுதப்பட்ட குறுநாவல். சிங்கப்பூர், மலேசியா, இலங்கை என விரிந்த களத்தில் இடம்பெறும் தென் கிழக்காசியக் கதை. சிங்கப்பூர் செல்லையாவின் குடும்ப வாழ்வை ஆதார மையமாகக் கொண்டு கதையை நகர்த்திச் செல்கிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275624).

**6727**

**இது தான் ஆரம்பம்.** மாயவன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2004. (சென்னை 600005: எம்.கே.என்டர்பிரைஸஸ்).
viii, 208 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 17.5x12.5 சமீ.

யாழ்ப்பாணத்தில் வலம்புரி நாளிதழின் வாரப்பதிப்பான சங்குநாதம் பத்திரிகையில் மரண விளையாட்டு என்ற தலைப்பில் தொடராக வெளிவந்த துப்பறியும் நாவல் இது. அரவிந்தும் அர்ஜுனும் இரண்டு துப்பறிவாளர்களாக அறிமுகமாகியுள்ளனர். நூலாசிரியர் யாழ்ப்பாணம், நல்லூரில்

செம்மண் வீதியைச் சேர்ந்தவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 598989).

**6728**

**இனி வரும் வசந்தங்கள்: மூன்று குறுநாவல்கள்.** செ.யோகநாதன். சென்னை 600017: தமிழோசைப் பதிப்பகம், 84 அபிபுல்லா சாலை, தியாகராயநகர், 1வது பதிப்பு, டிசம்பர் 1985. (சென்னை 600017: தமிழோசை அச்சகம், 84 அபிபுல்லா சாலை, தியாகராயநகர்).
256 பக்கம், விலை: இந்திய ரூபா 18., அளவு: 18x12.5 சமீ.

இனிவரும் வசந்தங்கள் (பக்கம் 9-100), வெள்ளப்பெருக்கு (பக்கம் 101-203), சகோதரிகள் (பக்கம் 204-256) ஆகிய மூன்று குறுநாவல்களின் தொகுப்பு. யோகநாதனின் கதைகள் வாழ்வின் யதார்த்தத்தைச் சித்திரிக்கின்றன. கதைகளின் கலையழகு வெகு இயல்பாகவே உள்ளடக்கத்தோடு ஒட்டிநிற்கின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 447570).

**6729**

**உமையாள்புரத்து உமா.** புரட்சிபாலன். (இயற்பெயர்: மு.சண்முகபாலன்). கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஜுலை 1976. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).
(6), 210 பக்கம், விலை: ரூபா 4.40, அளவு: 18x12 சமீ.

பெற்ற அன்னையின் ஆத்மசாந்திக்காக பிரிந்துபோன இரு குடும்பங்களை இணைத்துவைக்க முனையும் இளம்பெண்ணின் கதை இது. 44ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளியிடப்பட்டது. திருக்கொணமலையைப் பிறப்பிடமாகக்கொண்ட இந்நாவலாசிரியர் 1946ம் அண்டு பிறந்தவர். இவரது முதலாவது சிறுகதை 1961இல் பிரசுரமாகியது. முதல் நாவல் பூங்குழலி, ஜோதி வார இதழில் வெளிவந்தது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 318881).

**6730**

**உயிர் வாழ ஓர் இடம், திருந்திய உள்ளங்கள்.** ரதிவதனா சரவணபவன். லண்டன்: திருமதி ரதிவதனா சரவணபவன். 1வது பதிப்பு, 1996. (லண்டன் SW17 9JQ: Orient Creations, 247 Mitcham Road, Tooting).
32 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 1.00, அளவு: 22x14 சமீ.

உயிர்வாழ ஓர் இடம், திருந்திய உள்ளங்கள் ஆகிய இரண்டு குறுநாவல்களை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. இரண்டு கதைகளும் பெண்களின் சமூகப்பொறுப்புகளை விளக்குவதாயுள்ளன. நூலுக்கு முக்கியமான நூல்விபரங்கள் இன்றியும் தலைப்புப் பக்கம் இன்றியும் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**6731**

**உயிர்க் கூடு: சமூக நாவல்.** க.ம.செல்வரத்தினம். யாழ்ப்பாணம்: கே.எம்.செல்வரத்தினம், வட்டு கிழக்கு, சித்தன்கேணி, 1வது பதிப்பு, மார்ச் 1964.(யாழ்ப்பாணம்: வனிதா அச்சகம், 43, 3ம் குறுக்குத்தெரு).
209 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18.5x12.5 சமீ.

பாலுதேவன் பெற்றோருக்கும் சகோதரர்களுக்கும் மற்றும் உறவினர்களுக்கும் பல நன்மைகளைச் செய்தும் ஏமாற்றமே பிரதிபலனாகக் கிடைக்கின்றது. தீயவர்களுடன் சேர்ந்த சகோதரன் இறுதியில் திருந்துகின்றான். பாலுதேவனை விரும்பி வாழ்ந்த வேணி மரணிக்கிறாள். சமூக சீர்திருத்தத்தை மையமாக வைத்துப் பின்னப்பட்ட கதை. உறுதிமிக்க உள்ளம் கொண்டபோதிலும், எடுத்தவுடன் உணர்ச்சிவசப்படும் பாலுதேவன் தனது உணர்வுகளாலும், கொண்ட கொள்கைகளாலும், தன் குடும்பத்தாலும் பாதிக்கப்பட்டு அடையும் இன்னல்கள் கதையை வளர்த்துச்செல்கின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275647).

**6732**

**உள்ளத்தின் கதவுகள்.** அன்னலட்சுமி இராசதுரை (புனைபெயர்: யாழ் நங்கை). கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, மே 1975. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).
162 பக்கம், விலை: ரூபா 3.40, அளவு: 17.5x12 சமீ.

இலங்கையில் மித்திரன் வாரமலரில் தொடராக வெளிவந்த நாவல். ஆனந்தவல்லி சுதந்திரனைக் காதலிக்கிறாள். சுதந்திரன் உயர்கல்விக்காக இங்கிலாந்து செல்கிறான். காதலுக்கு சுதந்திரனின் பெற்றோர் தடையாக இருந்து பின்னர் மனம்மாறிக் காதலரை இணைக்கின்றனர். வவுனியா, திருக்கோணமலைப் பிரதேச நடுத்தர வர்க்கக் குடும்பப் பின்னணியில் நகரும் கதையம்சம். இது 29ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 316215).

**6733**

**உன்னையே உறவென்று: நாவல்.** பாலா சங்குப்பிள்ளை. சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2008. (சென்னை 600014: பி.வி.ஆர். ஆ.்.ப்செட் பிரிண்டர்ஸ்).
xii, 136 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 17.5x12 சமீ.

பார்த்திபன் கனவு என்ற தலைப்பில் தொடர்கதையாக மித்திரன் வாரமலரில் பிரசுரமான நாவல் இது. ஹட்டனைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர் கணக்காய்வாளராகப் பணியாற்றுகின்றார். பார்த்திபன் என்ற இளம் இலட்சியவாதியை தலைமைப் பாத்திரமாகக் கொண்டு, மலையகச் சமூகம் மேன்மையுற வேண்டுமானால் அதன் கல்விநிலை கட்டாயம் உயரவேண்டும் என்றும் அதற்கு ஆசிரிய சமூகமானது தியாக உணர்வுடனும் சமூகச் சிந்தையுடனும் பணிசெய்ய வேண்டும் என்றும் இந்நாவல் வலியுறுத்துகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 629149).

**6734**

**ஊமை உள்ளங்கள்.** ஞானரதன் (இயற்பெயர்: வை.சச்சிதானந்தசிவம்). கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, மார்ச் 1976. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).
(6), 140 பக்கம், விலை: ரூபா 3.60, அளவு: 17x12 சமீ.

சந்திரசேகரனும் அகிலாவும் காதலர்கள். சமூகக் காரணிகளால் பிரிகின்றனர். பின்னர் ஜெயராணியை மணந்த சந்திரசேகரன் அந்தஸ்து வேறுபாட்டால் குடும்பச் சிக்கல்களுக்கு முகம்கொடுக்கிறான். இறுதியில் ஜெயராணி மனம் திரும்பி, பெற்றொரைத் துறந்து கணவனுடன் ஐக்கியமாகின்றாள். அகிலா தொழில்புரிந்து தன் குடும்பத்தைக் காப்பாற்றுகின்றாள். இது 40ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளியிடப்பெற்றது.

**6735**

**ஊமை நெஞ்சின் சொந்தம்.** ஓ.கே.குணநாதன். மட்டக்களப்பு: பிரியா பிரசுரம், எம்.64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1992. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(10), 119 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 19x14சமீ.

ஓர் ஏழைத்தாய், தனது ஒரே மகன் ராஜன் படித்துப் பட்டம் பெற்று, உயர் பதவி வகித்துத்தன் குடும்பநிலையை உயர்த்தவேண்டும், அவன் வாழ்விலும் ஒளிபெற வேண்டும் என்பதற்காக கற்பூரம் போன்று தன்னை உருக்கி நாளெல்லாம் மாடாய் உழைத்துப் பட்ட பாடுகள், தாங்கிய துன்பச் சுமைகள், அடித்த எதிர்நீச்சல்கள், இறுதியில் ஏற்பட்ட எதிர்பாராத நிகழ்வுகள் ஆகியவற்றை வாசிப்போர் மனம் உருகச் செய்யும் விதத்தில் சித்திரித்துக் காட்டுவதாக இந்நாவல் அமைந்துள்ளது. எளிய நடையில் கரடு முரடான வசனங்களின்றி நேராகக் கதை சொல்லப்பட்டிருக்கிறது. நூலாசிரியர் மட்டக்களப்பு அமிர்தகழியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மட்டக்களப்பு இந்துக்கல்லூரி,

சிவானந்த வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 474379).

**6736**

**ஒரு பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி.** என்.கே.ரகுநாதன். சென்னை 600 026: குமரன் பப்பிளிஷர்ஸ், 3, மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7வது தெரு, வட பழநி, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (சென்னை 600 026: குமரன் பப்பிளிஷர்ஸ், 3, மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7வது தெரு, வட பழநி).
208 பக்கம், விலை: இந்திய ரூபாய் 75., அளவு: 21x14 சமீ.

இந்நூலாசிரியர் இந்நூலை ஒரு வரலாற்றுச் சித்திரம் எனக் குறிப்பிட்டபோதும் இது ஒரு சமகால வரலாற்று நாவலாகும். ஆசிரியர் தன் சிறுபராய வாழ்வு தொடக்கம் சமூக வாழ்வில் எழுச்சிபெற்ற காலம்வரை கதை வளர்கின்றது. கிராமத்தில் வாழ்ந்த தலித் மக்களின் உழைப்பு, சமயம், கல்வி, வாழ்க்கைமுறை, காலப்போக்கில் அரசியலுடன் ஏற்படும் வளர்ச்சிப்போக்கையும் இந்நாவல் சிறப்பாகச் சித்திரிக்கின்றது. நாவலாசிரியர் என்.கே.ரகுநாதனின் நிலவிலே பேசுவோம், தசமங்கலம் ஆகிய சிறுகதைத் தொகுதிகள் ஏற்கெனவே வெளிவந்தவை. கந்தன் கருணை இவர் எழுதிய நாடகநூலாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 616423).

**6737**

**ஒரு விலைமகளைக் காதலித்தேன்.** இந்து மகேஷ் (இயற்பெயர்: சின்னையா மகேஸ்வரன்). கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஜூலை 1974. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).
131 பக்கம், விலை: ரூபா 3.40, அளவு: 17.5x12.5 சமீ.

மித்திரனில் தொடராக வெளிவந்த கதை. விலைமகளான பிரீதாவை மகாதேவன் விரும்புகின்றான். நண்பர்களின் எதிர்ப்பை பொருட்படுத்தாது அவளை மணந்து கொள்கிறான். சிலகால மணவாழ்வின் பின்னர் அவள் இறந்துவிடுகின்றாள். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கதை நகர்த்தப்படுகிறது. தவறான பாதைக்குச் சென்றாலும் நல்வழியில் திருத்தமுடியும் என்ற போதனையைத் தரும் கதைக்கரு. 23ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளியிடப்பட்டது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 308579).

**6738**

**கருகிய ரோஜா: குறுநாவல்.** புதுமைலோலன். (இயற்பெயர்: வி.கே.கந்தசாமி). யாழ்ப்பாணம்: அன்பு வெளியீடு, 27D, பெரியகடை, 2வது பதிப்பு, மே 1970, 1வது பதிப்பு, ஏப்ரல் 1967. (யாழ்ப்பாணம்: கூட்டுறவு அச்சகம்).
44 பக்கம், விலை: சதம் 0.50, அளவு: 16x11 சமீ.

ஈழகேசரியில் ஏமாற்றம் என்ற தலைப்பில் முன்னர் வெளிவந்த குறுநாவல் இதுவாகும். பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் பயிற்சிபெற்ற நூலாசிரியர், தான் கிற்கிராங்கொட, வெலிக்கந்த பிரதேசங்களில் ஆசிரியராகப் பணியாற்றிய வேளையில் சந்தித்த அபலைப்பெண்களின் கண்ணீர்க் கதையாக இது அமைந்துள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275691).

**6739**

**கரையைத் தேடும் கட்டுமரங்கள்: நாவல்.** கே.எஸ்.பாலச்சந்திரன். சென்னை 600078: வடலி, இல. 6/13, சுந்தரர் தெரு, எம்.ஜி.ஆர். நகர், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).
305 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-908405-0-7.

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட கே.எஸ்.பாலச்சந்திரன் ஈழத்துக் கலை இலக்கிய உலகிற்கு மிகவும் நெருக்கமானவர். தணியாத தாகம் வானொலி நாடகம், தனி நடிப்பு நகைச்சுவைச் சித்திரம், கிராமத்துக் கனவுகள், அண்ணை றைற், வாத்தியார் வீட்டில் நாடகங்கள் இலங்கை வானொலியில்

கலைக்கோலம், விவேகச் சக்கரம், சினிமாத்துறையில் நாடுபோற்ற வாழ்க, நான் உங்கள் தோழன், அவள் ஒரு ஜீவநதி, வாடைக்காற்று என்று இவர் முத்திரை பதித்த நிகழ்வுகளைப் பட்டியலிடலாம். இவரது முதல் நாவல் இதுவாகும். 1979-80 ஆண்டுக்காலப்பகுதியை பாத்திரப்படைப்புகளாலும், காட்சிப்படிமங்களாலும் மீளக்கட்டமைக்கும் இந்நாவலில் மீனவ சமூகத்தின் வாழ்வியல் கோலத்தினை இவர் பதிவுசெய்கின்றார். அவர்களின் துன்பம் கலந்த இன்ப வாழ்வை யதார்த்தமாக மான்பாஞ்ச வெளி, புங்குடுதீவு ஆகிய களங்களில் வைத்து சித்திரித்துள்ளார். அட்டைப்படம் ஈழத்து ஓவியர் ரமணியின் கைவண்ணத்தில் மிளிர்கின்றது. தஞ்சாவூரில் அமுதன் அடிகள் அறக்கட்டளையினர் இந்நூலுக்கு 2009ம் ஆண்டுக்கான அமுதன் அடிகள் வெள்ளிவிழா அறக்கட்டளை இலக்கியப் பரிசினை வழங்கியுள்ளது.

**6740**

**கவ்வாத்து: குறுநாவல்.** தி.ஞானசேகரன். கொழும்பு: மலையக வெளியீட்டகம், 57 மகிந்த பிளேஸ், 1வது பதிப்பு, ஜுலை 1996. (புசல்லாவ: மித்துறு செவன பிரின்டர்ஸ், 288/சீ, இபன்வெவ).
(12), 60 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x14 சமீ., ISBN: 955-9084-04-6.

தமிழக சுபமங்களா நடத்திய குறுநாவல் போட்டியில் பரிசுபெற்ற குறுநாவல். மலையக கலை இலக்கியப் பேரவை தனது 15வது ஆண்டு விழாவையொட்டி வெளியிட்ட நூல் இதுவாகும். தொழிற்சங்கங்களுக்கிடையே ஏற்படும் போட்டி-பொறாமை, எவ்வாறெல்லாம் மலையக மக்களின் வாழ்வைச் சீரழிக்கின்றன என்பதை இக்குறுநாவலில் காட்ட முயன்றுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 520117).

**6741**

**கழுகுகள்.** தெணியான். சென்னை 17: நர்மதா பதிப்பகம், 1 வியாசராவ் தெரு, தி.நகர், 1வது பதிப்பு, நவம்பர் 1981.(சென்னை 600005: ஸ்ரீ கோமதி அச்சகம், லாயிட்ஸ் சாலை).
176 பக்கம், விலை: இந்திய ரூபா 9.00, அளவு: 18x12.5 சமீ.

யாழ்ப்பாணச் சமூக அமைப்பில் சமூகங்களின் கட்டுக்கோப்பு மாத்திரம் சிதைவுற்றுக் கொண்டிருக்கவில்லை. குடும்பங்களுக்கிடையே ஏற்படும் சிதைவு என்பதும் ஒரு கொடுமையாக நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்தச் சமூக அமைப்பினால் குடும்பங்களில் சிதைவுகளைத் தவிர்க்கவும் முடிவதில்லை. யாழ்ப்பாணச் சமூகத்தின் தவிர்க்க முடியாத குடும்பச் சிதைவுகளே கழுகுகள்- நாவலின் அடிநாதமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 351643).

**6742**

**காதலும் கடிதமும்.** கசின் (இயற்பெயர்: கனகசபை சிவகுருநாதன்). கொழும்பு 4: சி.சபாநாதன், 22, அசோகா காடின், பம்பலப்பிட்டி, 1வது பதிப்பு, 1995. (கொழும்பு: சிட்டிசன் பிரிண்டர்ஸ்).
70 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x13.5 சமீ.

ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளர்களில் ஒருவர் கசின் (20.12.1920-13.01.2003) இவரது முதல் நாவலான வண்டியில் வளர்ந்த கதை 1947இல் ஈழகேசரியில் தொடராக வெளிவந்தது. தொடர்ந்தும் ஈழகேசரியில் சகடயோகம் (1949), இதயஊற்று (1951), குமாரி ரஞ்சிதம்(1952), பச்சைக்கிளி (1957), ஆகிய நாவல்களையும், தினகரன் இதழில் கற்பகம் (1959), நிதானபுரி (1961), சொந்தக்கால் (1961) ஆகிய நாவல்களையும், தேடிவந்த செல்வம் (ஈழநாடு,1959), கண்டெடுத்த கடிதங்கள் (வீரகேசரி,1963) ஆகிய நாவல்களையும் எழுதியுள்ளார். இந்நூலில் இவர் 1947இல் எழுதிய வண்டியில் வளர்ந்த கதையும், 1963இல் எழுதிய கண்டெடுத்த கடிதங்களும் இந்நூலில் இடம்பெறுகின்றன.

**6743**

**காந்த மலர் அல்லது கற்பின் மாட்சி.** சி.வே.தாமோதரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: இ.சி.இரகுநாதையர், சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில், 1வது பதிப்பு, டிசம்பர் 1936. (யாழ்ப்பாணம்: சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில்).
(4), 262 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 21x13.5 சமீ.

இது ஒரு முக்கோணக் காதல் கதை. காந்தமலர் தீயகுணமுள்ள மைத்துனன் அரசநாயகத்தைப் புறக்கணித்து நற்குணமுள்ள லட்சுமிகாந்தனைக் காதலிக்கிறாள். அரசநாயகத்தின் பல்வேறு இடைஞ்சல்களுக்கும் தப்பிக் காதலர் ஒன்றிணைகின்றனர். தீயோர் தண்டிக்கப்படுகிறார்கள். நூலாசிரியர் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைச் சேர்ந்தவர். 27 வயதான அதிக கல்வியறிவில்லாத இவ்வாசிரியர், செல்வநாயகம் என்ற மாணவர் ஒருவரின் உதவியுடன் சிறந்த கற்பனைத்திறத்துடன் இதை எழுதியுள்ளார். நூலுருவான வேளையில் நூலாசிரியர் உயிருடன் இல்லை என்ற குறிப்பும் நோயுற்று 12.12.1936இல் காலமானதாகவும் ஒரு செய்தி நூலில் காணப்படுகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33617).

### 6744

**காலத்தின் விதி.** அ.பொ.செல்லையா. கொழும்பு 13: தாய்நாடு பதிப்பகம், 176, ஜம்பட்டா தெரு, 1வது பதிப்பு, நவம்பர் 1965. (கொழும்பு 13: இரஞ்சனா அச்சகம், 98, விவேகானந்தா மேடு).
(8), 50 பக்கம், விலை: ரூபா 1.75, அளவு: 19.5x13 சமீ.

சமூக ஊழல்களை விமர்சிக்கும் குறுநாவல். ஏழை-பணக்காரன் என்ற பேதத்தினால் ஏற்பட்ட கோட்பாடுகளினால் அழிவுற்ற ஒரு குடும்பத்தின் கதையாகவும் இது அமைகின்றது. நல்ல குறிக்கோளும் முயற்சியும் வாய்ந்தவன் திரையன். திரையனின் எளிமையான வாழ்வில் இன்பங்கண்டு அவனோடு வாழவேண்டுமெனத் துடித்தவள் திலகம். படித்துப் பட்டம் பெற்றவனாக இருந்தாலும் உள்ளத்தின் உண்மை நிலையை உணராது உடலின் வளத்தைப் பார்த்து மகிழ்ந்து திலகத்தை ஏமாற்றிய பித்தன் கணபதிநாதன். ஈற்றில் வாழமுடியாத நிலையில் திலகமும் அவளைத் தொடர்ந்தோடிய திரையனும் குளத்திலே மாண்டுபோகும் முடிவு. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275641).

### 6745

**குந்தளப் பிரேமா.** ரஜனி (இயற்பெயர்: K.V.S.வாஸ்). கொழும்பு: பெ.பெரி.சுப்பிரமணியச் செட்டியார், தலைவர், வீரகேசரி லிமிட்டெட், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1951. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).
iv, 228 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12.5 சமீ.

1949-50களில் வீரகேசரியில் தொடராக வெளிவந்த நாவல் இது. குந்தளம், ரகுபதி இருவரும் பால்யவிவாகம் (வைதவ்யம்) செய்தவர்கள். ரகுபதி அகால மரணமடைகிறான். விதவையான குந்தளம் விதவாவிவாகக் கருத்தை முன்வைத்து தன்னுடன் பழகும் மைத்துனன் சுந்தரத்தை மணம்முடிக்கிறாள். கதாநாயகியும், கதாநாயகனும் எழுத்தாளர்கள். இவர்களது வாழ்க்கையை சிக்கலாக்கவும், பின்னர் சிக்கலிலிருந்து விடுவிக்கவும் இவர்கள் எழுதும் கதைகளே பயன்படுகின்றன. இவ்வாறு கதைக்குள் கதைகள் பின்னிக்கொண்டு கிடக்கின்றன. இவர்களுக்கு மேலும் உதவிசெய்யச் சில பதிப்பாளர்களும் எழுத்தாளர்களும் வந்து சேர்கிறார்கள். நூலாசிரியர் வீரகேசரி இதழின் செய்தி ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் இது எழுதப்பட்டது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 115972).

### 6746

**கேட்டதும் நடந்ததும்.** தேவன்-யாழ்ப்பாணம், (இயற்பெயர்: இ.மகாதேவா)
யாழ்ப்பாணம்: S.S.சண்முகநாதன் அண்ட் சன்ஸ், 1வது பதிப்பு, தை 1956. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
(8), 302 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18x11.5 சமீ.

1954-55 காலப்பகுதியில் ஈழகேசரியில் தொடராக வெளிவந்தது. காதால் கேட்டதும், கண்ணால் கண்டதும் இணைத்து இருபாகங்களாகக் கதைகூறும் உத்தியைக் கையாண்டிருக்கிறார். கதைசொல்வோனும், இராஜமனோகரனும் நண்பர்கள். பழகும்வேளை இருவரும் மைத்துனர்கள் என்பது வெளியாகின்றது. கதைசொல்வோன் இராஜமனோகரனின் தமக்கை சகுந்தலையைக் காதலிக்கிறார். காதல் தோல்வியில் முடிய விரக்தியில் ரெயிலில் ஊரைவிட்டுக் கிளம்புகிறார் கதைசொல்வோன். அதே ரெயிலில் சகுந்தலையும் பிரயாணிக்கின்றாள். பிரிந்தவர் கூடுகின்றனர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 109849).

*6747*

***சதுரங்கம்: நாவல்.*** *ஆர். பாலகிருஷ்ணன், வ.அ.இராசரத்தினம், எஸ்.பொன்னுத்துரை, எம்.ஏ.ரஹ்மான், சாலை-இளந்திரையன். கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, நவம்பர் 1971. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231 ஆதிருப்பள்ளித் தெரு).*
*89 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18.5x12.5 சமீ.*

*ஐந்து இலக்கியவாணர்களின் கூட்டு இலக்கிய அனுபவமாக இந்நாவல் அமைந்துள்ளது. "அரசு" (ராஜ்மித்ரா), "காலாள்" (இ.பாலகிருஷ்ணன்), "குதிரை" (வ.அ.இராசரத்தினம்), "தேர்" (எஸ்.பொன்னுத்துரை), "யானை" (எம்.ஏ.ரஹ்மான்), "அமைச்சு" (சாலை இளந்திரையன்) ஆகியவை சதுரங்கத்தின் காய்களைச் சுட்டும் தலைப்புகளாகக் காணப்படுகின்றன. சாலை இளந்திரையனின் அமைச்சு - இக்கதைகளுக்கான ஒரு விமர்சனமாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 286433).*

*6748*

***சந்திரவதனா அல்லது காதலின் வெற்றி: 1வது பாகம்.*** H.நெல்லையா. *கொழும்பு: சரஸ்வதி புத்தகசாலை, 175 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, 1934. (கொழும்பு: ஸ்டான்லி பிரஸ், 63, மலிபான் வீதி).*
*(14), 467 பக்கம், தகடுகள், விலை: ரூபா 3.00, அளவு: 20.5x13.5 சமீ.*

*வரலாற்றுப் போலிக்கற்பனையாக வீரமும் காதலும் கதைப்பொருளாக அமைய எழுதப்பட்ட நாவல். இது வீரகேசரியில் தொடராக வெளிவந்தது. இந்நூலாசிரியர் கொழும்பில் வீரகேசரி பததிரிகையின் ஆசிரியராகப் பணியாற்றியவர். முதலாம் பாகத்தில் சந்திரவதனாவின் சபதம், இராகுலனின் தான்தோன்றி தர்பார், இராஜேஸ்வரியும் பாஸ்கரனும், மானம் பெரிதா பிராணன் பெரிதா, பாண்டியன் சுந்தரனும் விஜயாளும், அரசன் ஜெயசந்திரன், ஜெயசந்திரனும் விஜயாளும், சாவித்திரியின் காந்தர்வ மணம், ஜெயசந்திரனும் இராஜேஸ்வரியும், ஜெயசிங் விடுதலை, கமலத்தின் விடுதலை, இராஜேஸ்வரியின் உண்ணாவிரதம், கமலத்தின் மர்மம், சாவித்திரியின் துயரம், பாஸ்கரன் சந்திரவதனாவானான், பிரதாபசிங்கும் இராகுலனின் கலக்கமும், இராகுலன் கையில் சந்திரவதனா, பாண்டியன் சுந்தரனின் யுத்த முஸ்தீபு, இராகுலனும் விஜயாளும், சுந்தரன் முன்பு சாவித்திரி ஆகிய இருபது அத்தியாயங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35827).*

*6749*

***சந்திரவதனா அல்லது காதலின் வெற்றி: 2வது பாகம்.*** H.நெல்லையா. *கொழும்பு: எச்.நெல்லையா, வீரகேசரி ஆசிரியர், 1வது பதிப்பு, 1934. (கொழும்பு: ராபர்ட் அச்சுக்கூடம்).*
*486 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 3.00, அளவு: 21x13.5 சமீ.*

*இவ்விரண்டாம் பாகத்தில் அத்தியாயம் 21 முதல் 37 வரை இடம்பெறுகின்றது. பிரதாப சிங்கின் கல்யாணம், விஜயாளும் ஜெயசிங்கும், இராகுலனின் திகில், யுத்தகளத்தில் சந்திப்பு, இரத்னசேனனின் சூழ்ச்சி, கைதி சுந்தரனும் அரசன் இராகுலனும், சுந்தரன் விடுதலை, இராகுலனின் ஏமாற்றம், சுந்தரனும் ஜெயசந்திரனும், இரத்தினசேனனின் புதிய சூழ்ச்சி, கருணாகரனும் சாவித்திரியும், மாயா சந்திரவதனா, தண்டகாரண்ய மகாநாடு, இரணதீரனின் நிபந்தனை, ஜெயசந்திரனின் நிபந்தனை, சந்திரவதனாவின் வரலாறு, இராகுலனின் மனமாற்றம் ஆகிய தலைப்புக்களில் இந்நாவலின் இரண்டாம் பாகம் விரிகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35828).*

*6750*

***சாணைக்கூறை: சமூக நாவல்.*** *ஜுனைதா ஷெரீப். கண்டி: தமிழ்மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, மார்ச் 1985. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்).*
*226 பக்கம், விலை: ரூபா 23., அளவு: 17.5x12.5 சமீ.*

*இந்நாவல், கிழக்கிலங்கை முஸ்லீம்களினால் முறைப்பெண்ணுக்கு, மச்சினன் வீட்டார் சாணைக்கூறை வழங்கும் பழக்கத்தையும், திருமண சம்பிரதாயங்களையும், கலை, கலாச்சாரப் பண்பாட்டு அடையாளங்களையும் விளக்கி நிற்கின்றது. கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பேச்சுவழக்கு, கதைக்கு மேலும் மெருகூட்டுகிறது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் நிகழ்ச்சியில் வானொலி நாடகமாக ஒலிபரப்பப்பட்டது. பின்னர், தினகரன் பத்திரிகையில் தொடர்நாவலாக எழுத்துருவிலும் வெளியிடப்பட்டது.*

**6751**

***சாத்தானின் ஊழியர்கள்.*** *ஜி.நேசன். கொழும்பு: ஜனமித்திரன் வெளியீடு, வீரகேசரி பதிப்பகம், தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, 1977. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).*
*(8), 128 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 17.5x12.5 சமீ.*

*வீரகேசரி நிறுவனத்தின் 15ஆவது ஜனமித்திரன் வெளியீடாக வெளிவந்த நூல். இங்கிலாந்தின் செஷையர் பகுதியில் அலட்ரிப் எட்ஜ் என்ற இடத்திலுள்ள மாதா கோவிலில் ஆரம்பமாகும் இந்தக் கதை பெய் பிசாசுகள் பற்றியது. சாத்தானை வணங்கும் ஒரு குழவிலிருந்த அழகி மெக்சின் தனது திகில் அனுபவங்களை பத்திரிகையாளர்களுடன் பகிர்ந்துகொள்கிறாள். விறுவிறுப்பான இந்நாவலில் தான் பேயின் காதலியாக இருந்ததும், பேய் வணக்கம் எப்படி நிகழ்கின்றது என்பதும், பேயை ஏவிவிட்டு மனிதர்களைப் பழிவாங்கும் கலை பற்றியும் இந்நாவல் விபரிக்கின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 323506).*

**6752**

***சித்தகுமாரன்: இரு பாகங்களில்.*** *இடைக்காடர். யாழ்ப்பாணம்: நாகமுத்து இடைக்காடர், 1வது பதிப்பு, 1925. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சுக்கூடம்).*
*(4), 209 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 21x14 சமீ.*

*சித்தகுமாரனின் தம்பி மானதராசன் தமையனது நற்போதனைகளை மதியாமல், ஆசைத் தாசியாலும், புலநாகர்களாலும் ஈர்க்கப்பட்டுத் துன்புறுகிறான். இறுதியில் வழக்கு விசாரணைகளுக்குட்பட்டு மனம் தெளிந்து சித்தகுமாரனின் வழிக்குத் திரும்புகின்றான். செந்தமிழ் நடையிலமைந்த சைவசித்தாந்த உருவக நாவல். ஒரே நூலில் இரு பாகங்களில் அமைந்த இந்நூலின் முதற்பாகம் 1-114 பக்கங்களிலும், தொடர்ந்து இரண்டாம் பாகம் 115-209 பக்கங்களிலும் இடம்பெற்றுள்ளன. இடைக்காடர் என்ற பெயரில் ஈழத்து இலக்கியத்துறையில் ஆரம்பகால முன்னோடிகளுள் ஒருவராக குறிப்பிடப்படும் நாகமுத்து 1868-1932 காலப்பகுதியில் வாழ்ந்து மறைந்தவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37651).*

**6753**

***சித்திரா பௌர்ணமி: குறுநாவல்.*** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: சிரித்திரன் பிரசுரம், 67, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, மே 1972. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).*
*32 பக்கம், விலை: சதம் 80., அளவு: 19.5x13.5 சமீ.*

*பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் 1963இல் நடத்திய பல்கலைக்கழக மாணவர்களுக்கான குறுநாவல் போட்டியில் இரண்டாம் பரிசைப்பெற்ற வரலாற்றுக் கற்பனை நாவல். 15 சிறு இயல்களாகப் பிரிக்கப்பட்ட இக்குறுநாவல், ஈழநாடு வாரமலரில் 1964இல் தொடராகவும் வெளியிடப்பட்டது. ரோகா மாதம் ஒரு நூல் வெளியீட்டுத் தொடரில் 2வது நூலாகவும் இது வெளியிடப்பட்டது. நூலின் பின்னிணைப்பாக குளிரும் சூடும், வாழ்க்கை, துரதிர்ஷ்டம், நியதி, பசி, அற்பம், முடிச்சு, நிர்ணயம், விதி, ஆதாரம் ஆகிய 15 குட்டிக்கதைகளும் இடம்பெற்றுள்ளன. இவை சிந்தாமணி வாரப் பத்திரிகையில் 1968இல் வெளியிடப்பட்டவை. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 300858).*

**6754**

***சிந்து நதிக் கரையினிலே: சரித்திர நாவல்.*** *ஹஸன் (இயற்பெயர்: எம்.சையது மொஹம்மது ஹஸன்). சென்னை 600001: சுலைமானியா பப்ளிஷர்ஸ், 28 நாராயணசாரங் கார்டன் தெரு, த.பெ.எண் 1886,*

*4வது பதிப்பு, செப்டெம்பர் 1991, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1966, 2வது பதிப்பு, மே 1979, 3வது பதிப்பு, ஜுன் 1988. (சென்னை 600001: மில்லத் பிரின்டர்ஸ், 16 அப்பு மேஸ்திரி தெரு).*
*352 பக்கம், விலை: இந்திய ரூபா 32., அளவு: 18x12.5 சமீ.*

*இளமைத்துடிப்பால் சிந்துநதிப் பிரதேசம் மீது முஹம்மது காஸிம் படையெடுத்துச்சென்று வெற்றிகொண்ட வீரவரலாற்றைக் கூறும் நாவல். இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் தொடர்கதையாக ஒலிபரப்பானது. காதலும் வீரமும் இஸ்லாமியக் கருத்துக்களும் ஒருங்கே கலந்து அமைக்கப்பட்ட இந்நூலுக்கு தமிழக அரசின் பரிசும் கிடைத்தது. இந்நூலின் இலங்கைக்கான விசேட பதிப்பு முன்னதாக கல்ஹின்ன தமிழ்மன்றத்தால் 3ஆவது பதிப்பாக வெளியிடப்பட்டது. இலங்கை அரசின் உயர்நிலைப்பள்ளிகளில் துணைப்பாடநூல்களுள் ஒன்றாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 434871).*

***6755***
***சீதா.*** *சொக்கன் (இயற்பெயர் க.சொக்கலிங்கம்). கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1974. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).*
*115 பக்கம், விலை: ரூபா 3.40, அளவு: 18x12 சமீ.*

*வயற்காடு என்ற கிராமத்தில் இரண்டு வீடுகளில் நிகழும் சில நிகழ்ச்சிகளை மையமாகக்கொண்டு, ஒருவார கால இடைவெளியில் நடந்து முடியும் ஒரு கதைதான் சீதா. சாதியத்தைத் தீர்க்க மேலெழுந்தவாரியான சமரச உணர்வினாலோ கலப்புத்திருமணம் மூலமாகவோ விடைகாண முடியாது என்பதை விளக்கும் கதை. பகிரங்கமான சுயநலமற்ற தியாகத்தால் தான் இதற்குத் தீர்வுகாணலாம் என்ற கருத்தை விளக்கும் நாவல். தமிழ்-மலாயக் கலப்பினப் பெண்ணான சீதா, தனது தந்தையின் முதல் மனைவியான சிவபாக்கியம் (கணவரிலும் தாழ்ந்த சாதி), என்பவளால் வளர்க்கப்படுவதும், இவ்வுண்மை சீதாவுக்கு இறுதியில் தெரியவருவதும், அவளைக் காதலித்த பிராமண இளைஞனான ஆத்மநாதன் சமூக அபவாதத்துக்குப் பயந்து அவளைத் துறப்பதுமான சம்பவங்களைக் கருப்பொருளாகக் கொண்டு எழுந்த நாவல். இது 25ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 308577).*

***6756***
***சுவடுகள்.*** *இயல்வாணன் (இயற்பெயர்: சு.ஸ்ரீகுமரன்). யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, ஐப்பசி 1992. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலட்சுமி அச்சகம், 37, கண்டி வீதி).*
*(8), 104 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 19x13 சமீ.*

*நூலாசிரியர் தனது 21ஆவது வயதில் எழுதிய முதலாவது நாவல் இது. கதாநாயகன் சத்தியன் பாசம், பந்தம், கடமையுணர்வு என்பவற்றால் உந்தப்பட்டு தன் துகுடும்பத்தின் வளமான எதிர்காலத்தை விரும்பியும், ஊரில் நிலவிய போர்ச் சூழலை விரும்பாமலும் ஊரை விட்டு வெளியேறுகின்றான். அவனுக்குக் கிட்டும் புதிய வாழ்க்கை அனுபவங்கள், தமிழீழத்தின் உணர்வுமிக்க ஒரு இளைஞனாக அவனைத் திசைமாற்றி விடுகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 470314).*

***6757***
***செ.யோகநாதன் நாவல்கள்: பாகம் 1.*** *செ.யோகநாதன். சென்னை 600017: ராஜராஜன் பதிப்பகம், 19 கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2004. (சென்னை 600005: மணி ஓப்செட்).*
*237 பக்கம், விலை: ரூபா 325., இந்திய ரூபா ரூபா 100., அளவு: 21x14 சமீ.*

*ஈழத்துப் படைப்பாளி செ.யோகநாதனின் இரவல் தாய்நாடு, சாதிகள் இல்லையடி பாப்பா, இருள்கொண்ட அறைகள், கண்ணில் தெரியுதொரு தோற்றம் ஆகிய நான்கு நாவல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 597012).*

**6758**

**செ.யோகநாதன் நாவல்கள்: பாகம் 2.** செ.யோகநாதன். சென்னை 600017: ராஜராஜன் பதிப்பகம், 19 கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2004. (சென்னை 600005: மணி ஓப்செட்).
(3), 238-416 பக்கம், விலை: ரூபா 227., இந்திய ரூபா ரூபா 70., அளவு: 21x14 சமீ.

ஈழத்துப் படைப்பாளி செ.யோகநாதனின் இருபது வருஷங்களும் மூன்று ஆசைகளும், தோழமை என்றொரு சொல், பிரதமர் அவர்களே என்ன சொல்கிறீர்கள், சைக்கிள், சுந்தரியின் முகங்கள் ஆகிய ஐந்து நாவல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 597013).

**6759**

**செங்கை ஆழியான் நாவல்கள்.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, ஜனவரி 1992. (அச்சக விபரம் தரப்படவில்லை).
562 பக்கம், விலை: ரூபா 210., அளவு: 21x14 சமீ.

இந்த நாடு உருப்படாது, பிரளயம், முற்றத்து ஒற்றைப்பனை, கிடுகுவேலி, மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து, ஒரு மைய வட்டங்கள் ஆகிய ஆறு நாவல்கள் இத்தொகுதியில் தொகுக்கப்பட்டுள்ளன. இந்த நாடு உருப்படாது என்ற நாவல் 1981இல் எழுதப்பட்டு, 1986இல் வீரகேசரி வார இதழில் தீராத சுமைகள் என்ற தலைப்பில் தொடராகப் பிரசுரிக்கப்பட்டது. பின்னர் 1989இல் மண்ணின் தாகம் என்ற தலைப்பில் மீரா வெளியீடாகவும் வெளியிடப்பட்டது. செங்கை ஆழியான் நாவல்கள் என்ற தலைப்பில் கந்தையா முருகதாசன் அவர்கள் செங்கை ஆழியானின் நாவல்களை ஆய்வுசெய்து நூலொன்றை இலங்கை இலக்கியப்பேரவை வெளியீடாக வெளியிட்டுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 534922).

**6760**

**செந்தணல்.** அங்கையன் கயிலாயநாதன். கொழும்பு 4: அங்கையன் பதிப்பகம், H ½ அரசாங்கத் தொடர்மாடி, 1வது பதிப்பு, மே 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).
xiv, 242 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x14 சமீ.

கொழும்புப் பிரதேசத்தின் வாழ்வனுபவத்தின் பல்வேறு அம்சங்களையும் மிக நுட்பமான அவதானிப்புடன் இந்நாவலில் விபரித்துள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து தொழில்நிமித்தமாகக் கொழும்பில் வாழநேரிடும் தமிழர்களின் சமூகச் சிக்கல்களை இந்நாவல் பேசுகின்றது. கொழும்பு நகரின் குடும்ப உறவு, தொழில்பார்க்கும் பெண்கள் அலுவலகங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், குடும்ப முறிவு போன்றவற்றிற்கு இந்த நாவலில் அழுத்தம் தரப்பட்டுள்ளது. இந்நாவல் 1969இல் எழுதப்பட்டு மித்திரனில் இரு மாதங்கள் தொடர்ச்சியாக வெளியானது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 534144).

**6761**

**செல்வரத்தினம்: ஓர் இனிய கற்பனைச் சரித்திரம்.** வே.க..நவரத்தினம். கொக்குவில்: சோதிடப்பிரகாச யந்திரசாலை, 1வது பதிப்பு, 1935. (கொக்குவில்: சோதிடப்பிரகாச யந்திரசாலை).
(4), 208 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 21x14 சமீ.

மர்மநாவல். செல்வரத்தினம் இராசமணியைக் காதலிக்கிறான். நண்பன் நடராசா கொலைசெய்யப்பட்டுவிட்டதாக அறிந்து கொலைஞனைக் கண்டறிவதற்கு முயல்கிறான். துப்பறியும் வேதநாயகத்தின் துணையுடன் தீயோரது சூழ்ச்சிகளை முறியடிப்பதுடன் காதலர் இணைவதாக கதை நகர்கிறது. 20 அத்தியாயங்களைக் கொண்ட இந்நாவலின் தலைப்புகள் வாசகரைக் கவர்ந்திழுக்கத்தக்க வசனத்தொடர்களாக அமைந்துள்ளன. (உதாரணம்: உம்முடைய எண்ணமாகவே இருந்தேன், அடே இன்றுடன் நீ ஒழி, சிறையுள் அகப்பட்ட மடக்கிளி). கதாநாயகனே கதையைச் சொல்வதாக துப்பறியும் பண்புகள் கொண்ட இந்நாவல் வடிவமைக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் யாழ்ப்பாணம், நல்லூரைச் சேர்ந்தவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33616).

**6762**

**சோமாவதி அல்லது இலங்கை இந்தியா நட்பு.** H.நெல்லையா. கொழும்பு: வீரகேசரி வெளியீடு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1940. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).
(4), 120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

சிங்கள உயர்குடும்பப் பெண்ணான சோமாவதிக்கும் இந்திய வியாபாரியான சந்திரசேகரனுக்கும் இடையில் ஏற்படும் காதலுக்கு வகுப்புவாத நோக்கில் தடைவிதிக்கப்படுகின்றது. தடைகளை மீறி காதலர் இணைகின்றனர். 1938-39ம் ஆண்டுக் காலப்பகுதியில் தலையெடுத்த இலங்கை இந்திய வேற்றுமையுணர்வுப் பின்னணியில் இலங்கை இந்தியர் நட்புறவு அவசியம் என்ற கருத்தை முன்னெடுத்துச் செல்லும் கதையம்சம் கொண்ட நாவல். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35831).

**6763**

**தாயகம்: குறுநாவல்.** தொ.சிக்கன்ராஜு. பதுளை: அ.சா.மல்லிகைக்காதலன், குறிஞ்சிப்பண்ணை, 1வது பதிப்பு, ஜனவரி 1969. (நுவரெலியா: அசோகா அச்சகம், இறாகலை பஜார், ஆள்கருனோயா).
71 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 17x10.5 சமீ.

ஐந்து அத்தியாயங்களைக் கொண்ட ஒரு குறுநாவல். இலங்கை மலையகத் தமிழரின் அரசியல் அந்தஸ்து 1960-1970களில் பெரும் மாற்றத்துக்குள்ளானது. 1964ம் ஆண்டு ஒக்டோபர் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் பின் ஏற்பட்ட பாரிய அரசியல் சமூக பொருளாதார மாற்றத்தின் பின் அம்மக்களின் உள்ளக் குமுறல்களை, ஆற்றொணாத் துயரங்களை, அவலங்களை தாயகம் சிறப்பாகக் காட்டுகின்றது. மலையக மக்களின் பிரஜாவுரிமையைப் பின்னணியாகக் கொண்ட குறுநாவல்களில் குறிப்பிடத்தகுந்த நூல் இதுவாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275615).

**6764**

**துயரம் சுமப்பவர்கள்.** நீ.பி.அருளானந்தம். கல்கிசை: திருமகள் பதிப்பகம், இல. 7, லில்லியன் அவென்யு, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (தெகிவளை: ஏ.ஜே.பிரிண்ட்ஸ், 44 புகையிரத நிலைய வீதி).
iv, 443 பக்கம், விலை: ரூபா 630., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1055-06-6.

வாழ்நாட்காலம் முழுதும் மனித மலங்களை பீப்பாய்களில் சுமந்து திரிகின்ற தோட்டிவேலை செய்கின்றவர்கள் குறித்த சேரி நிலத்திலே அனுபவிக்கும் கஷ்டங்களையும், அவர்கள் வாழும் இடத்திலேயே கொஞ்சம் வேறுபட்ட தொழில் செய்யும் தொழிலாளர்களிடையே காணப்பட்ட உயர்வு தாழ்வு அடுக்கமைவுகளால் ஏற்பட்ட இழிவுகளை அகற்றமுடியாமல் மென்று விழுங்கி- ஏதோ பிறந்தவிட்டோம் மரணம் வரும்வரை வாழ்ந்தவிடுவோம் என்ற மனச் சலிப்புடன் உள உழைச்சலுக்கும் ஆட்பட்டுக் கருகிய இவர்களின் சமூகத்தை கதையாடல் செய்துள்ளது இந்நாவல். இந்நாவலின் பிரதான விடயப்பொருள் மனிதர்கள் மனிதர்களாக வாழ மேற்கொள்ளும் போராட்டமேயாகும்.

**6765**

**தெம்மாடுகள்: நாவல்.** எஸ்.ஏ.உதயன். மன்னார்: அருட்பணி வின்சன் பற்றிக், திருப்புமுனை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2009. (மன்னார்: வாழ்வுதய அச்சகம்).
165 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14.5 சமீ.

ஈழத்தமிழரின் அகதிவாழ்வினை கருவாகக் கொண்ட நாவல். மன்னார் பிரதேச மக்கள் போர்க்காலத்தில் அனுபவித்த துன்பங்களையும், கடல்கடந்து தமிழகம் சென்று அங்குள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் படும் இன்னல்களையும் இந்நாவல் பதிவுசெய்கின்றது. சுதந்திரமாக வாழ்ந்த அம்மக்கள் முட்கம்பி வேலிகளுக்குள் அடிமைகளான கொடுமையை இந்நாவல் உணர்வுகலந்து தருகின்றது. இயல்புமாறி, அறியாமையால் உழலும் அப்பாவிகளைத் தெம்மாடு என

*பிரதேச வழக்கில் அழைப்பர். இச்சொல் கேரளத்திலிருந்து மன்னாருக்கு வந்த வட்டாரச்சொல்லாகும்.*

***6766***

***தொலைதூரக் கனவுகள்.*** *சக்கரவர்த்தி இராசலிங்கம். சென்னை 600083: சந்தியா பதிப்பகம், நியூ டெக் வைபவ், 57A, 53ஆவது தெரு, அசோக் நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (சென்னை: மைக்ரோ பிரின்ட் லிமிட்டெட்).*
*420 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14 சமீ.*

*லண்டனிலும் பின்னாளில் பாரிசிலும் வெளியாகிய தமிழன் பத்திரிகையில் பல்வேறு துறைகளிலும் எழுதிவருபவர் இந்நாவலாசிரியர். சக்கரவர்த்தி, சராஜகன், காப்பாரிணி, இராசா, குறும்பன், விதேயன், இராசலிங்கம் எனப்பல புனைபெயர்களில் எழுதுபவர். தற்போது புலம்பெயர்ந்து சுவிட்சர்லாந்தில் வாழ்பவர். காதலைச் சமுதாயக் கண்ணோட்டத்தில் விபரிப்பதுடன், தாம் வாழ்ந்த தாயக வாழ்வை மறந்து தாமும் ஐரோப்பியர் என்றும் தமது பிள்ளைகளுக்குத் தமிழே வராது என்றும் பெருமைபேசும் ஒருபிரிவினரை இந்நாவல் எள்ளலுடன் நகைக்கின்றது. ஈழத்தமிழரின் அவலங்களை மட்டுமல்ல அவர்கள் வாழுகின்ற புலம்பெயர்ந்த நாடுகளில் சந்தித்துவரும் வாழ்வியல் முறைமைகளையும் மிக யதார்த்தமாக எடுத்தியம்புகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 616526).*

***6767***

***நட்டுமை.*** *ஆர்.எம்.நௌஸாத். இலங்கை: கலாசார அலுவல்கள் அமைச்சு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2007. (நுகேகொடை:* Deepani Printers & Publishers, 464 High Level Road, Gangodawila*).*
viii, *177 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.,* ISBN: *978-955-8377-96-3.*

*1930களில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கிராமமொன்றில் விவசாய நிலங்களுக்கு நீர்பாய்ச்சுவதில் எற்பட்டதொரு பிரச்சினையை பின்புலமாகக் கொண்டு முஸ்லிம் மக்களின் பண்பாடு, வாழ்க்கைமுறை, சமய நம்பிக்கை, பள்ளிவாசல் கொடியேற்றுவிழா, திருமணச்சடங்கு, போன்றவற்றை அம்மண்ணின் வாசனையுடன் இந்நாவல் சித்திரிக்கின்றது. வயல்களில் சேர்த்துவைத்திருக்கும் நீரைத் திருட்டுத்தனமாக வரப்புகளில் பிளவுகளை ஏற்படுத்தி வடித்தெடுத்து விடுவதைக் குறிக்கும்* ***நட்டுமை*** *என்ற பிரதேச வழக்குச் சொல், கிராமங்களில் மக்களிடையே ஏற்படும் களவொழுக்கத்தைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது. இதுவே நாவலின் கருத்தைப் புலப்படுத்தும் வகையில் தலைப்பாகவும் வைக்கப்பட்டுள்ளது. காலச்சுவடு அறக்கட்டளையின் சுந்தரராமசாமி 75 கவிதை இலக்கியப் போட்டியில் முதற்பரிசுபெற்ற நாவல் இது. 1980களில் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் தோன்றிய புதுக்கவிஞர்களில் தீரன் என்ற நௌஸாத் குறிப்பிடத்தக்கவர்.*

***6768***

***நந்திக் கடல்.*** *செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், மாநகரசபை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1969. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).*
*(10), 128 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 21.5x14 சமீ.*

*செங்கை ஆழியானின் முதல் நாவல். கலைச்செல்வி நடத்திய நாவல் போட்டியில் பாராட்டைப்பெற்றது. யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒரு பொற்காலத்தைச் சித்திரிக்கும் சங்கிலி, செகராசசேகரன், ஆட்சிக்காலத்தின் வரலாற்று நூல். காதலையும் வீரத்தையும் தியாகத்தையும் அரசியல் சதிகளையும் தமிழ் உணர்வுடன் இலக்கிய நடையில் சொல்லும் நூல். யாழ் இலக்கிய வட்டத்தின் 11வது நூலான இதில் யாழ்ப்பாண மன்னன் பரராஜசேகரனின் காமக்கிழத்தியின் மகனான சங்கிலி குமாரன் முடிக்குரியவர்களை சதிமூலம் அகற்றித் தானே பட்டம் சூடுகிறான். காதலி உதயவல்லியைக் கைவிட்டு அரசமாதேவியை மணம்புரிகிறான். போர்த்துக்கேயரின் துணையுடன் முடிக்குரியவர்கள் பின்னர் படையெடுத்துவரவே சங்கிலிகுமாரன் தப்பியோடிப் போர்த்துக்கேயரை அகற்றும் முயற்சியில் ஈடுபடுகிறான். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275632).*

***6769***

***நந்தினி (முதலாம் பாகம்).*** *ரஜனி (இயற்பெயர்:* K.V.S.*வாஸ்). கொழும்பு: வீரகேசரி லிமிட்டெட், 1வது பதிப்பு, 1952. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).*

x, *304 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17*x*12 சமீ.*

*வீரகேசரி பத்திரிகையின் செய்திப்பகுதி ஆசிரியராகப் பணியாற்றிய வேளையில் ரஜனி எழுதிய நாவல் இது. வீரகேசரியில் தொடராக வெளிவந்த பாராட்டுப் பெற்ற நிலையில் வீரகேசரி வெளியீட்டில் இரண்டாவது நூலாக வெளிவந்துள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 115955).*

***6770***

***நாம் ஒன்று நினைக்க.. :நாவல்.*** *ஒலுவில் அமுதன் (இயற்பெயர்: ஆ.அலாவுதீன்). அக்கரைப்பற்று 5: ரக்ஸானா வெளியீட்டகம், 67, புதுப்பள்ளி வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2000. (அக்கரைப்பற்று: செலெக்ஷன் ஓப்செற் பிறின்ரர்ஸ்).*

*104 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 18*x*12.5 சமீ.*

*மனக்கோலம், மரணம் வரும் வரைக்கும் ஆகிய இரு கவிதைத் தொகுதிகளையும், கலையாத மேகங்கள் என்ற சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்ட ஒலுவில் அமுதனின் முதலாவது நாவலாகவும், நான்காவது நூலாகவும் இது வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 534902).*

***6771***

***நீதியே நீ கேள்.*** *சுபைர் இளங்கீரன். சென்னை 1: பாரி நிலையம், 59, பிராட்வே, 1வது பதிப்பு, டிசம்பர் 1962. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

xvi, *472 பக்கம், விலை: இந்திய ரூபா 7.50, அளவு: 18.5*x*13 சமீ.*

*இந்நாவல் 1959இல் தினகரனில் தொடராக வெளிவந்தது. முதலாளி பரமசிவத்தின் மகன் கணேஷ்-தொழிலாளி வல்லிபுரத்தின் மகள் பத்மினியைக் காதலிக்கிறான். பொருளாதார ஏற்றத்தாழ்வின் காரணமாக காதல் தடைப்படுகிறது. தடையைமீறி அவளைக் கரம்பற்ற முனைகையில் பத்மினி அநியாயமாகக் கொல்லப்படுகிறாள். பரமசிவத்தின் மகள் தவமணி, இனவேறுபாட்டை மீறி பிரேமதாசா என்ற சிங்கள வாலிபனை காதலித்துக் கரம்பற்றுகிறாள். ஈழத்துப் பொருளாதார ஏற்றத்தாழ்வு சமூகத்தில் கருக்கொள்ளும் இனவாத சிந்தனைகள் என்பவற்றுக்கூடாக வர்க்கப்போராட்டமே விடிவைத்தரும் என்று புரியவைக்கமுனையும் கதைக்கரு. இந்நாவலுக்கான நீண்ட அணிந்துரையொன்று (*iii-xiv*) பேராசிரியர் க.கைலாசபதியினால் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275549).*

***6772***

***நீலகண்டன் ஓர் சாதி வேளாளன்.*** *நாகமுத்து இடைக்காடர். யாழ்ப்பாணம்: நாகமுத்து இடைக்காடர், 1வதுபதிப்பு, 1925. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சுக்கூடம்).*

*192 பக்கம், விலை: சதம் 50., அளவு: 21*x*13.5 சமீ.*

*வேளாள குலத்து புவிமன்னனுக்கும் பண்டாரப்பெண் கமலாவதிக்கும் பிறந்த நீலகண்டன், தன் தந்தையின் சொத்துக்களை பெற்றுக்கொள்ள நடத்தும் போராட்டமும், கேமளாதேவியின் காதலைப் பெற்று மனப்புவி என்ற எதிரியையும் அவன் நண்பர்களையும் தோற்கடிப்பதும் கதை. 20ம் நூற்றாண்டின் ஆரம்பகால யாழ்ப்பாணச்சூழல், சாதிப்பிரச்சினையின் பின்னணியில் சொத்துரிமைக்கான போட்டி என்பன கதையின் பின்புலமாகின்றன. பழமொழிகளால் அமைந்த அத்தியாயத் தலைப்புகள் இந்நூலுக்குரிய சிறப்பம்சமாகும். முகவுரையில் நூலாசிரியர் " இது சாதியபிமான மின்னதென விளங்காது தம்மிற்றாழ்ந்தவர்களை யிம்சை செய்பவர்களுக்குப் புத்தி புகட்டும் நோக்கமாகவும், ஏனையோருக்கு நம்மவர்களின் உண்மையான சாதிநிலையின்னதென வுணர்த்தும் நோக்கமாகவும், எழுதப்பட்ட ஓர் கற்பனாகதை. அனைவருக்கு முபயோகமா யிருக்குமெனவெண்ணி, சன்மார்க்கம், சற்போதனை முதலியவற்றைப்பற்றி யான்றோர் கூறியிருக்கும்*

உண்மைகளாங்காங்கே கொடுக்கப்பட் டிருக்கின்றன." என்று குறிப்பிட்டுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37654).

**6773**

**நீலாக்ஷி அல்லது துன்மார்க்க முடிவு எனும் இனிய தமிழ் நாவல்.** S.K.சுப்பிரமணியம். யாழ்ப்பாணம்: எஸ்.கே.சுப்பிரமணியம், 1வது பதிப்பு, 1923. (மதுரை 24: அஷ்டலக்ஷ்மி விலாசம் அச்சியந்திரசாலை).
(2), 168 + 142 பக்கம், தகடுகள், விலை: ரூபா 1.00, அளவு: 21x14 சமீ.

ஒழுக்கக்கேட்டின் தீமையினைப் போதிக்கும் இக்கதையின் பகைப்புலம் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மலேயாவில் குடியேறிய யாழ்ப்பாணத்தவரின் சமூகப்பின்னணியில் எழுதப்பட்டது. ஆடவரைத் தன் காமவலையில் சீர்குலைத்த நீலாக்ஷி என்ற பெண் இறுதியில் துன்புறுகின்றாள். தன் சுயசரிதையை கூறுவதாகக் கதை நகர்த்தப்படுகிறது. இக்கதை, புலோலியூர் க. சுப்பிரமணியம் அவர்கள் (மலேசியாவில் Krian Licensing Boardஇல் அங்கத்தவராயிருந்தவர்). மலாயாவில் பினாங்கு மாநிலத்தில் 1918இல் வெளியிட்டு இரு பாகங்களில் வெளியான முன்னைய படைப்பான **பாலசுந்தரம் அல்லது சன்மார்க்க ஜெயம்** (பார்க்க: நூல்தேட்டம் பதிவு 2701, மலேசிய நூல்தேட்டம் பதிவு 429) என்ற நாவலின் தொடர்ச்சி இது என்று கருதமுடிகிறது. அந்நாவலின் இரண்டாம் பாகத்தின் இறுதி அத்தியாயத்தில் குறிப்பிட்டபடி இந்நாவல் தலைப்பு அமைந்து வெளிவந்துள்ளது. கதாநாயகி நீலாட்சியின் சீவிய சரித்திரம் பாலசுந்தரம் நாவலிலிருந்து தொடர்கின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35334).

**6774**

**நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே: ஒரு சமகால வரலாற்று நாவல்.** செ.யோகநாதன். சென்னை 24: சத்யபாரதி பதிப்பகம், 1வது பதிப்பு, மே 1993. (சென்னை 14: சித்ரா பிரின்டோகிராபி, 24 பொன்னுசாமி தெரு).
512 பக்கம், விலை: இந்திய ரூபா 72., அளவு: 18x12.5 சமீ.

இலக்கியச் சிந்தனை பரிசுபெற்ற நாவல். குளத்தூர் என்ற யாழ்ப்பாணக் கிராமமொன்றில் நடப்பதாக உருவாகும் இந்நாவலில் ஈழத்தமிழரின் வரலாறு, இலங்கைமண்ணின் வளர்ச்சிக்கு சிங்களவர்களுடன் சரிசமமாகத் தோள்கொடுத்து நின்று அவர்கள் ஆற்றிய பணி, படிப்படியாக அவர்கள் இரண்டாம் தரப்பிரஜைகளாக்கப்பட்ட சோக வரலாறு என்பன இக்கதையில் வரும் பாத்திரங்களினூடாகச் சொல்லப்படுகின்றது. பாரிஸ் ஈழநாடு பத்திரிகையில் ஒருவருடம் தொடராக வெளிவந்தது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 461460).

**6775**

**பட்டினித் தோட்டம்.** சுபைர் இளங்கீரன். சென்னை 1: சக்தி பதிப்பகம், 14ஏ, குப்பையர் தெரு, 1வது பதிப்பு, ஏப்ரல் 1953. (சென்னை 1: முத்துக்குமரன் பிரஸ்).
80 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 17.5x12.5 சமீ.

தமிழகத்தின் திராவிடன் இதழில் வெளிவந்ததொரு உருவகக் கதையின் நூல்வடிவம் இது. இக்கதை இன்றைய சமுதாயத்தின் இரண்டு எதிர்மறையான வாழ்க்கை முறைகளை விபரிக்கின்றது. குபேரபுரியும், குடிசையூரும் இரண்டு வெவ்வேறு தள மக்களைப் பற்றியது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 116000).

**6776**

**பயங்கரவாதிகள்.** வஞ்சிவேந்தன். ஊர்காவற்றுறை: பவானி பிரசுராலயம், கரம்பொன், 1வது பதிப்பு, 1972. (யாழ்ப்பாணம்: சக்தி அச்சகம், ஸ்டான்லி வீதி).
(6), 96 பக்கம், விலை: ரூபா 2.90, அளவு: 17.5x13 சமீ.

தீவிரவாத இயக்கத்தில் பங்குகொண்டிருந்த வேந்தன் என்ற தமிழ் இளைஞன் அதன்போக்கில் வெறுப்புற்று அதன் இரகசியங்களை அரசுக்குக் காட்டிக்கொடுத்து நாட்டுக்குச் சேவைசெய்பவனாக மாறுகின்றான். 1971ம் ஆண்டு இலங்கையில் நிலவிய ஜனதா விமுக்தி பெரமுன என்ற JVP தீவிரவாத

இயக்கப் போராட்டப் பின்னணியில் எழுந்த நாவல். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 297500).

### 6777

**பவள காந்தன் அல்லது கேசரி விஜயம். (2 பாகங்களில்).** வரணியூர் A.C.இராசையா. சுன்னாகம்: தனலக்குமி புத்தகசாலை, 1வது பதிப்பு, 1932.( அச்சக விபரம் தரப்படவில்லை).
543 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 21.5x13.5 சமீ.

ஈழகேசரியில் தொடராக வெளிவந்த மர்மநாவல். ஜமீந்தாரின் மகன் தீயவரால் கடத்தப்படுகிறான். துப்பறியும் நிபுணன் விஜயகாந்தன், அவர்களின் திட்டங்களை முறியடித்து ஜமீந்தார் மகனை மீட்டெடுக்கிறார். கற்பின் மகத்துவம், காதலின் சிறப்பு, கதாநாயகனின் காருண்யச் செயல், துப்பறி வீரனின் அற்புத விளக்கம் என்ற விபரிப்புடன் 17 அத்தியாயங்கள் கொண்ட இந்நூல் வெளியாகியுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37703).

### 6778

**பாதை தெரியாத பயணம்.** திக்குவல்லை கமால். கொழும்பு 11: எம்.டி.குணசேன அன் கொம்பனி, 217, ஒல்கொட் மாவத்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 1999.(கொழும்பு 11: அச்சகப் பிரிவு, எம்.டி.குணசேன அன் கொம்பனி).
(8), 141 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x11.5 சமீ., ISBN: 955-21-1037-8.

இளந் தலைமுறையின் வாழ்வை இந்நாவல் பேசுகின்றது. அவர்களின் சலனம், சஞ்சலம், உடன்பாடு, முரண்பாடு, நம்பிக்கை, நிராகரிப்பு, கனவுகள் என்பவற்றால் நிரப்பப்பட்ட வாழ்க்கை இந்நாவலில் அழகாகச் சொல்லப்படுகின்றது. இன்றைய இளந்தலைமுறையினரின் கல்வித்தளமும், வாழ்வின் போக்கும் எப்படி அவர்களது வாழ்க்கை அடிப்படைகளை முரண்பாடுகளுக்குள்ளும் தோல்விகளுக்குள்ளும் தள்ளுகின்றன என்பதை நாவலாசிரியர் தெளிவாகச் சித்திரிக்கிறார். இந்நாவல் தினகரன் நாளிதழில் முன்னர் தொடராக வெளிவந்தது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 615292).

### 6779

**பாவையின் பரிசு.** துரை மனோகரன். உரும்பிராய்: துரை மனோகரன், உரும்பிராய் இந்துக்கல்லூரி, 1வது பதிப்பு, ஜுலை 1966. (யாழ்ப்பாணம்: சண்முகநாதன் அச்சியந்திரசாலை).
xii, 154 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 17.5x12.5 சமீ.

கொலைக்குற்றம் புரிந்து சிறைத்தண்டனை பெற்ற துரைசாமியின் மகள் தேவகியை மணம்புரிந்தவன் தெய்வேந்திரன். கணவனால் கைவிடப்பட்டு வழிதவறிய சரோஜாவுக்கு அடைக்கலம்தர முயன்று தேவகியால் சந்தேகிக்கப்படுகிறான். தேவகி குழந்தை ஒன்றைப் பெற்றதும் தற்கொலை செய்துகொள்கிறாள். சரோஜாவையும் மகேசனையும் இணைத்து வைத்த தெய்வேந்திரன் தன் குழந்தையையும் அவர்களிடம் ஒப்படைக்கிறான். பேராதனைப் பல்கலைக்கழகத் தலைவரான ஆசிரியர், உரும்பிராய் இந்துக்கல்லூரியில் உயர்வகுப்பு மாணவராக இருந்தபோது எழுதி வெளியிட்ட நாவல் இது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 246904).

### 6780

**பிசாசின் புத்திரர்கள்: பேய் பிசாசு பற்றிய ஆராய்ச்சி நூல்.** ஈழத்துப் பூராடனார் (இயற்பெயர்: க.தா.செல்வராசகோபால்). களுவாஞ்சிக்குடி: நா.சா.கதிர்காமத்தம்பி, ஜீவா பதிப்பகம், பிரதான பாதை, தேற்றாத்தீவு, 1வது பதிப்பு, தை 1972. (களுவாஞ்சிக்குடி: மனோகரா அச்சகம், பிரதான பாதை, தேற்றாத்தீவு).
xii, (6), 70 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 18x10.5 சமீ.

சூழ்வினை (பாலகாண்டம்), சூழல்வினை (ஆரண்யகாண்டம்), ஆழ்வினை (ஆரோக்கியகாண்டம்), அழல்வினை (மந்திரக்காண்டம்), செய்வினை (தந்திரக்காண்டம்), செயப்பாட்டுவினை

(விவேகக்காண்டம்), எச்சவினை (துலாம்பரக்காண்டம்), முற்றுவினை (வெளிப்படுத்தற்காண்டம்) ஆகிய எட்டு அத்தியாயங்களில் சொல்லப்பட்டுள்ள இக்கதை- ஒரு உண்மைக்கதையென்றும், 1910ம் ஆண்டு பிரித்தானிய ஏகாதிபத்திய காலகட்டத்தில் கிழக்கிலங்கையில் நடந்ததென்றும், பேய், பிசாசு, ஆவி பற்றிய மனோதத்துவ சமூகவியல் ஆராய்ச்சி தொடர்பானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஜீவா பதிப்பகத்தின் 42ஆவது பிரசுரம். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 297518).

**6781**

**பிரதாபன் அல்லது மஹாராஷ்டிர நாட்டு மங்கை.** H.நெல்லையா. கொழும்பு: H.நெல்லையா, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. கொழும்பு: ஸ்டான்லி அச்சகம், 3 பார்பர் வீதி).
340 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 20x13 சமீ.

இந்திய மஹாராஷ்டிரப் பிரதேசப் பின்னணியில் எழுதப்பட்ட வரலாற்றுப் போலிக் கற்பனையாலான நாவல். காதல், வீரம், மர்மச் சம்பவங்கள் ஆகியன மொத்தம் 21 அத்தியாயங்களில் கதையை வளர்த்துச் செல்கின்றன. இலங்கையில் வீரகேசரி பத்திரிகை 1931இல் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் ஆசிரியராகப் பணியாற்றியவர் எச்.நெல்லையா. வீரகேசரியில் இவர் தொடராகப் பல நாவல்களை எழுதியிருக்கிறார். சந்திரவதனா அல்லது காதலின் வெற்றி (1934), இரத்தினாவளி அல்லது காதலின் மாட்சி (1938), காந்தாமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி (1938) ஆகியவை இவரது முன்னைய நாவல்களாகும். சி.மௌனகுரு, மௌ.சித்திரலேகா, எம்.ஏ.நுஃமான் மூவரும் இணைந்து எழுதிய **இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்** என்ற நூலில் இந்நூல் வெளியிடப்பட்ட ஆண்டு 1941என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35829).

**6782**

**பிராப்தம்.** பறாளையூர் இ.பிரேமகாந்தன். கொழும்பு 13: ஞானகுருபரன் நிலையம், 82/3, ஆட்டுப்பட்டித்தெரு, 1வது பதிப்பு, ஜனவரி 1970. (கொழும்பு 13: ஆனந்தா அச்சகம். 82/3, 82/5, ஆட்டுப்பட்டித்தெரு).
50 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 20x13.5 சமீ.

நிறைவேறாத காதல் பற்றிய குறுநாவல். ஞானகுருபரன் நிலையத்தின் முதலாவது வெளியீடு. வேற்று மதத்தவள் ஒருத்தியைக் காதலித்த இளைஞனுக்கு அவளை அடையமுடியாத நிலை. பெற்றோரையும் உறவினரையும் உதறிவிட்டு அவளை அடைய நினைத்த வேளையில் பிரிவின் வேதனை தாங்காது காதலி இறந்து விடுகிறாள். சமூகத்திடமிருந்து ஒதுங்கியவன் மீண்டும் சமூகம் ஏற்காததொரு தீர்மானத்தை மேற்கொண்டு செயற்படுகிறான். உத்தியோகமும் பணமும் வந்து சேர- கூடவே பொல்லாதவன் என்ற பட்டமும் அவனைச் சேர்கிறது. இறுதியில் பெற்றோருடன் சேர்கிறான். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275689).

**6783**

**புதிய தலைமுறைகள்.** வை.அஹமத். கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஜனவரி 1976. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).
(8), 130 பக்கம், விலை: ரூபா 3.60, அளவு: 17.5x12.5 சமீ.

பழமைக்கும் புதுமைக்கும் இடையில் நடைபெறும் ஒரு பெரும் போராட்டமே இந்த நாவலாகும். வாழைச்சேனைக் கிராமத்தைச் சேர்ந்த மீனவ இளைஞனான கமால், அவ்வூர்க் கிராமசபைத் தேர்தலில் இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பள்ளிவாசல் நிர்வாகசபையினரை எதிர்த்து வெல்கிறான். பொறாமை கொண்டவர்கள் கமாலிலும் அவனது காதலி சல்மாவிலும் விபச்சாரக் குற்றஞ்சாட்டி மார்க்கத் தீர்ப்புக்கு முன்நிறுத்துகின்றார்கள். இருவரும் நிரபராதிகள் என்று தீர்ப்பாக காதலர் முறைப்படி இணைகின்றனர். கிழக்கிலங்கைத் தொழிலாளர், நடுத்தரவர்க்க முஸ்லீம் சமூகப் பகைப்புலத்தில் கதை நகர்த்தப்படுகிறது. 38ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளியிடப்பட்டது. 1945இல் பிறந்த வை.அஹமத், 1964இல் ஆசிரிய சேவையில் இணைந்து மட்டக்களப்பு ஓட்டமாவடி மகா வித்தியாலயம், வாழைச்சேனை முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றியவர். இளம்பிறை

*சஞ்சிகையில் இவரது முதலாவது சிறுகதை- அடித்த கரங்கள் என்ற தலைப்பில் வெளியாகியது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 317931).*

***6784***

***பூங்காவனம் (முதற் பாகம்).*** *மா.சிவராமலிங்கம்பிள்ளை. யாழ்ப்பாணம்: சோதிடவிலாச புத்தகசாலை, 1வது பதிப்பு, 1930. (கொக்குவில்: சோதிட பிரகாச பிரஸ்). 421 பக்கம், விலை: ரூபா 1-8-0, அளவு: 18x12 சமீ.*

*யாழ்ப்பாணத்திலும், மலாயா, பர்மா, இந்தியா ஆகிய நாடுகளிலும் நிலப்பிரபுத்துவ வர்க்கப் பின்னணியில் நிகழும் சம்பவங்களுடன்கூடிய மர்மநாவல். சோதிடவிலாச புத்தகசாலை வெளியிட்ட முதல் இலக்கிய நூல் இதுவாகும். யாழ்ப்பாணத்தின் வண்ணார்பண்ணையைக் களமாகக்கொண்ட இந்நாவல், பூங்காவனம் என்ற பெண்மணியின் கதையாகும். நாடகத் தன்மை கொண்ட உரையாடல்கள் விரவிக்கிடக்கின்றன. காதல் வீரம் கருணை முதலான பல ரசங்களும் படிப்போர் மனதைக்கவரும் வண்ணம் எழுதப்பெற்றுள்ளது. ஈழத்தின் ஆரம்பகால நாவல்களுள் இதுவும் ஒன்றாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33615).*

***6785***

***பூஞ்சோலை.*** *க.கணபதிப்பிள்ளை. பேராதனை: க.கணபதிப்பிள்ளை, தமிழ்ப் பேராசிரியர், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, தை 1953. (கும்பகோணம்: ஹோமியோபதி அச்சகம்). (6), 80 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18.5x12.5 சமீ.*

*19ம் நூற்றாண்டின் இறுதியில், ஜேர்மனிய நாவலாசிரியர் தியோடோர் சுதோம் (*Theodore Storm*) எழுதிய இம்மென்சே (*Immensee*) என்னும் நாவலின் தழுவல். பிறமொழித் தழுவலாக இந்நாவல் அமைந்தபோதும், ஈழத்துமண்ணின் கதாமாந்தரைக்கொண்ட சம்பவங்களே புனையப்பட்டுள்ளன. முதுமைப்பருவம், இளமைப்பருவம், புதர்களுக்கு நடுவில், தெருவோரத்தில் குழந்தை நின்றது, வீடு, கடிதம், பூஞ்சோலை, அன்னை எனக்கிட்ட ஆணையதால், கமலநாயகி, முதுமைப்பருவம் ஆகிய தலைப்புகளில் இந்நாவல் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87965).*

***6786***

***பூவுக்குள்ளே ஒரு பூகம்பம்.*** *ஹக்களை றிழ்வான். கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, பெப்ரவரி 1990. (சென்னை 600001: எம்கே பிரின்ட்ஸ், 2, 1வது ஒழுங்கை, அங்கப்ப நாயக்கன் தெரு). 80 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 18x12 சமீ.*

*ஆசிரியரின் முதலாவது சமூக நாவல் இதுவாகும். ஒரு நாவலுக்குச் சிறப்பூட்டும் அம்சமான துன்பம், துயர், நகைச்சுவை உணர்ச்சிகள் அதிர்ச்சி போன்ற விடயங்களை இயன்றவரையில் உள்ளடக்கிக் கதையை விறுவிறுப்பாக்கியுள்ளார். மலையகப் பிரதேசத்தைக் கதைக்களமாகக் கொண்டமைந்த நாவல்.*

***6787***

***பெருநாள் பரிசு: குட்டி நவீனக் கதை.*** *மருதூர்வாணன். (இயற்பெயர்: சா.லெ.அப்துல் லத்தீப்), மருதமுனை 2: தேன்மதி வெளியீடு, மகளிர் வித்தியாலய வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1969. (மருதமுனை: அச்சக விபரம் தரப்படவில்லை). 28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12.5 சமீ.*

*இஸ்லாமியக் கருத்துக்கள் பலவற்றைப் பின்னணியாகக்கொண்டு கிழக்கிலங்கை முஸ்லீம்களின் பேச்சுத் தமிழைப் புகுத்தி உணர்வுபூர்வமாக உருவாக்கப்பட்ட கதை இது. பணத்தினாலும், செல்வாக்கினாலும் எதையும் சாதித்துவிடலாமானாலும், மனச்சாட்சியின் உறுத்தலை இறுதிவரை மறுக்கமுடியாது என்ற கருத்தை இந்நாவல் வலியுறுத்துகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275712).*

**6788**

**பொன்னான மலரல்லவோ.** உதயணன். கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1975. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).

(6), 220 பக்கம், விலை: ரூபா 4.60, அளவு: 17.5x12 சமீ.

உயிருக்குயிராகக் காதலித்துவந்த மங்கை-வசந்தன் என்ற காதலர்களை விதி பிரித்து வைத்தது. சந்தர்ப்பம் சதி செய்தது. காதலியை அவன் வீடு வீடாகத் தேடினான். வீதி வீதியாகத் தேடினான். ஆயினும் அவள் அவனருகில்தான் இருந்தாள். அவனை ஒருநாள் நேரில் காணநேர்ந்தபோது அவள் மற்றொருவனது காதலுக்கும் உரியவளாகின்றாள். அவளது காதலனோ அவனது உற்ற நண்பன். காதலுக்கும் கடமைக்கும் இடையே நடக்கும் உணர்ச்சிகரமான மோதலே இந்நாவலாகும். சந்தர்ப்பவசத்தால் பிரிவுண்டவர்கள் இறுதியில் ஒன்று சேரும் கதை இது. 34ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளியிடப்பட்டது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 315307).

**6789**

**மண்ணின் குரல்.** வ.ந.கிரிதரன். கனடா: மங்கை பதிப்பகம், 38, Thorncliffe Park Dr., #510, Toronto, Ontario, M4M1JG, 1வது பதிப்பு, 1998. (சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 79, முதல் தெரு, குமரன் காலனி, வடபழநி).

358 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: அளவு 18x12.5 சமீ.

இந்நூலில் வ.ந.கிரிதரன் எழுதிய வன்னி மண், அருச்சுனனின் தேடலும் அகலிகையின் காதலும், கணங்களும் குணங்களும், மண்ணின் குரல் ஆகிய நான்கு குறுநாவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவரது எழுத்துக்களில் இயற்கையின் ஈடுபாட்டையும், வர்ணனையையும் பரந்து காணலாம். வன்னிமண் வெறும் காடுகளின், பறவைகளின் வர்ணனை மட்டுமல்ல. அந்த மண்ணில் அவர் கொண்ட பற்றையும் அது கூறுகின்றது. மனிதாபிமானமும் செய்நன்றி உணர்வும், தவறு நடந்தபோதும் அவரது கதாமாந்தர்களில் மேலெழும் பச்சாதாப உணர்வும் நான்கு கதைகளிலுமே காணமுடிகின்றது. வன்னிமண் சுமணதாச பாஸ், அர்ச்சுனனின் தேடலில் வரும் சிறுவன், டீச்சர், கணங்களும் குணங்களிலும் வரும் கருணாகரன், மற்றும் மண்ணின் குரலில் வரும் கமலா என்று பலரிலும் இவற்றைத் தரிசிக்கலாம். இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட கிரிதரன் கொழும்பு மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் கட்டடக் கலைத் துறையில் பட்டம் பெற்றவர். தற்போது கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்கிறார். அங்கும் பதிவுகள்.com என்ற இணையத்தளத்தை நடத்திவருகின்றார்.

**6790**

**மீட்டாத வீணை.** A.T.நித்தியகீர்த்தி (புனைபெயர்: ஏ.ரி.நிதி). பருத்தித்துறை: கமலா வெளியீடு, காக்கிய வளவு, புலோலி கிழக்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 1974. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).

(4), 166 பக்கம், விலை: ரூபா 4.50, அளவு: 18x12.5 சமீ.

யாழ்ப்பாணக் கிராமமொன்றின் சமூக உறவுநெறியில் நிலவும் ஊழல்கள், தலைமுறை வேறுபாடுகள் என்பவற்றுக்கிடையில் வறுமையின் கொடுமையைச் சமாளித்து வாழத்துடிக்கும் புதிய பரம்பரையொன்றின் கதை இது. 14 அத்தியாயங்களில் விரியும் இந்தச் சமூகநாவல் ஆசிரியரின் முதலாவது நூலாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 308575).

**6791**

**மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்.** இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன். யாழ்ப்பாணம்: டேவிட் லிகோரி, மீரா வெளியீடு, 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, ஆனி 1992. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லட்சுமி அச்சகம், 37 கண்டி வீதி).

(4), 96 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18.5x12.5 சமீ.

துன்பங்களும் சோதனைகளும் தொடர்ந்து வந்த போதும், தளராத மன உறுதியுடன் இந்த மண்ணை நேசித்து மானமுடன் தலைநிமிர்ந்து வாழமுனையும் ஒரு குடும்பத்தின் கதை. இது 12.7.1987 முதல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழமுரசு தினசரியின் வார வெளியீட்டில் தொடராக வெளிவந்தது. 10.10.1987 அன்று இந்திய அமைதிகாக்கும் படை ஈழமுரசு அலுவலகத்தைக் குண்டுவைத்துத் தகர்க்கும்வரை இந்நாவல் தொடர்ந்தது. முடிவுபெறாதிருந்த இந்நாவல் நூலுருவில் இப்போது பிரசுரமாகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 470320).

**6792**

**மொட்டுக்களை மலரவிடுங்கள்.** எஸ்.உதயசெல்வன். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆ.்.ப்செட்). viii, 352 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 18x12 சமீ.

நூலாசிரியர் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். நினைவெல்லாம் நீயே, காதல் பூட்டு ஆகிய நாவல்களின் வரிசையில் இவரது மூன்றாவது நாவல் இது. பெண்வாசகர்களை குறிப்பாக முன்வைத்து எழுதப்பட்டுள்ள இந்நாவலில் பெண்களுக்குத் தேவையான விழிப்புணர்வு, தன்னம்பிக்கை, தைரியம் என்பவற்றை காதல் கலந்து வழங்கியிருக்கிறார். ஆணாதிக்கத்துக்கு உள்ளாகிவரும் பெண்களைப்பற்றி இந்நாவல் விரிவாகப் பேசுகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 598853).

**6793**

**மௌன ஓலங்கள்.** சோ.ராமேஸ்வரன். கொழும்பு 5: திருமதி எஸ்.ராமேஸ்வரன், 4 ½ சித்ரா ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜுலை 1995. (கொழும்பு 4: Creative Hands Private Limited, Bambalapitiya). 88 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x14 சமீ.

நூலுருவில் வெளிவரும் ஆசிரியரின் ஐந்தாவது நாவல் இது. 1992இல் கொழும்பிலிருந்து வெளிவரும் வீரகேசரி வார வெளியீட்டில் **நிறைவேறாத சொர்க்கங்கள்** என்ற தலைப்பில் தொடர்கதையாகப் பிரசுரமானது. முடிவில் சிறிய மாற்றத்துடன் திருத்திய பிரதி நூலுருவாகியுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 479804).

**6794**

**யாருக்காக?** மொழிவாணன் (இயற்பெயர்: வீ.ஆர்.நீதிராஜா). கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஜுலை 1975. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).
(8), 208 பக்கம், விலை: ரூபா 3.90, அளவு: 17.5x11.5 சமீ.

மித்திரனில் தொடராக வெளியாகிய நாவல். காதலில் தோல்வியுற்ற கோபிநாத் விரக்தியுற்று தன் வாழ்க்கையை முடித்துக்கொள்கிறான். ராஜி தான் காதலித்தவனை அடைந்தாலும் பிரசவத்துடன் தன் வாழ்க்கையை முடித்துக்கொள்கிறாள். இது 32 ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளிவந்தது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 318880).

**6795**

**யோகராணி கொழும்புக்குப் போகிறாள்.**சோ.ராமேஸ்வரன். கொழும்பு 2: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1992. (கொழும்பு 2: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ, பாதுக்க).
(4), 130 பக்கம், விலை: ரூபா 85., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-610-097-0.

1969இல் எழுத்துத்துறையில் புகுந்தவர் சோ.ராமேஸ்வரன். பருத்தித்துறை அத்தியடியைச் சேர்ந்த இவர் வீரகேசரி நிறுவனத்தின் உதவி ஆசிரியராகவும், விவரண ஆசிரியராகவும் பதவிகளை வகித்தவர். 1980முதல் கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தில் தகவல் வெளியீட்டு உத்தியோகத்தராகக் கடமையாற்றியதுடன் கமநலம் சஞ்சிகையின் ஆசிரியராகவும் விளங்கியிருந்தார். நூலுருவில் வெளிவந்த இவரது முதலாவது நாவல் இதுவாகும். இந்நாவல் மித்திரன் தினசரியில் 1985இல்

தொடராக வெளிவந்தது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 468859).

**6796**

**வசந்தம் வந்தது.** ரதிவதனா சரவணபவன். லண்டன்: திருமதி ரதிவதனா சரவணபவன். 1வது பதிப்பு, 1996. (லண்டன் SW17 9JQ: Orient Creations, 247 Mitcham Road, Tooting).
46 பக்கம், விலை: ஸ்டேர்லிங் பவுண் 1.00, அளவு: 22x14 சமீ.

இக்குறுநாவல் கூட்டுக் குடும்பத்தில் பெண்களின் பாரம்பரிய சமூகப் பொறுப்புகளை பவிதா என்ற இளம் மனைவியின் பாத்திரத்தில் ஏற்றி விளக்குவதாயுள்ளது. நூலுக்கு முக்கியமான நூல்விபரங்கள் இன்றியும் தலைப்புப் பக்கம் இன்றியும் வெறும் பக்கக்கோர்ப்பாக இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**6797**

**வரலாறு அவளைத் தோற்றுவிட்டது.** K.R.டேவிட். கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, நவம்பர் 1976. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).
(8), 148 பக்கம், விலை: ரூபா 3.60, அளவு: 17x12 சமீ.

சாவகச்சேரியிலுள்ள மட்டுவில் பகுதியை பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர், 1971ம் ஆண்டில் ஆசிரியக் கடமையின் நிமித்தம் நுவரெலியாவில் வாழ்ந்த காலத்தில் எழுதப்பட்ட மலையகத்தைப் பின்புலமாகக்கொண்ட நாவல் இது, சுதந்திரன் சிறுகதை எழுத்தாளராக 1966இல் அறிமுகமானவர். இது 47ஆவது வீரகேசரி பிரசுரம். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 321930).

**6798**

**வன்னியர் திலகம்.** முல்லைமணி (இயற்பெயர்: வே.சுப்பிரமணியம்). வவுனியா: முத்தமிழ் கலாமன்றம், 1வது பதிப்பு, ஜுன் 1998. (வவுனியா: சுதன் பிரின்டர்ஸ்).
xiv, 146 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 18x13 சமீ.

வவுனியாவின் வடமேற்கே அமைந்துள்ள பனங்காமம் என்னும் கிராமத்தை இராசதானியாகக் கொண்டு கோலோச்சிய கயிலை வன்னியனது சரித்திரத்தை வன்னியர் திலகம் என்ற பெயரில் ஒரு சுவையான நாவலாக வெளியிட்டுள்ளார். நூலாசிரியர் முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளையைச் சேர்ந்தவர். முன்னாள் கல்விப்பணிப்பாளர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 517772).

**6799**

**வாடிய மலர்கள்.** தேவன்-யாழ்ப்பாணம் (இயற்பெயர்: இ.மகாதேவா). யாழ்ப்பாணம்: சண்முகநாதன் புத்தகசாலை, எஸ்.எஸ்.சண்முகநாதன் அன் சன்ஸ், வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு, 1949. (Trivandrum: The Popular Press).
94 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 18x12 சமீ.

காண்டேகரின் "கருகிய மொட்டு" பாணியில் தனித்தனிக் கதைகளாக அமைத்து இணைந்த நாவல் என அறியப்படுகிறது. ஆரம்பம், முதலாவது மலர்- பெயர் தெரியாது: சாலிவாஹன், இரண்டாவது மலர்- ராஜமல்லிகை: ராஜமோஹன், மூன்றாவது மலர்- ரோஜா: சுசீலா, நான்காவது மலர்: தாமரை: மீனா, ஐந்தாவது மலர்- சண்பகம்: மதனாகரன், ஆறாவது மலர்- செயற்கை: செல்வராஜன் ஆகிய ஆறு தலைப்புகளில் தனித்தனிக் கதைகளாகத் தோன்றினாலும், இவை அனைத்தும் ஒருங்குசேர ஒரு நாவலாக உருவம்கொள்கின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 74167).

**6800**

**வாழ்க்கைப் பயணம்.** நயிமா A.பஷீர். கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி 160, 1வது பதிப்பு, நவம்பர் 1974. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).
(8), 130 பக்கம், விலை: ரூபா 3.40, அளவு: 17x12 சமீ.

அன்பும் பணிபும் நிறைந்த ஒரு இஸ்லாமிய யுவதியின் காதல் காவியம். கல்லூரி ஆசிரியை ஹிதாயாவை அக்கல்லூரி அதிபர் ம∴றுப் காதலிக்கிறார். இக்காதல் நிறைவேற ம∴றுபின் மதினியும் தந்தை ஹாஜியாரும் தடையாகின்றனர். சந்தர்ப்பவசத்தால் காதலர் பிரிகின்றனர். மீண்டும் இருவரும் இணைய ஹாஜியார் சம்மதம் தந்த வேளையில் ஹிதாயா நீர்ச்சுழியில் சிக்கி உயிரிழக்கிறாள். அப்புத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்நூலாசிரியர் நயீமா சித்தீக் என்ற பெயரிலும் இலக்கிய உலகில் அறியப்பெற்றவர். தனது ஆரம்பக்கல்வியை அப்புத்தளை தமிழ் மகாவித்தியாலயத்திலும் காத்தான்குடி மத்திய மகாவித்தியாலயத்திலும் மேற்கொண்டவர். இது இவரது முதலாவது நாவலாகும். இந்நூல் 27ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளிவருகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 316232).

**6801**
**விடியலில் ஓர் அஸ்தமனம்.** எம்.ஏ.சுமைரா. கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, 25, அவ்வல் சாவியா வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2009. (கொழும்பு 13: டிசைன் லாப், 173-P2, ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை).
viii, 69 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-095-02-4.

மாமியார் கொடுமைகளால் பரிதவிக்கும் பிருந்தாவின் குடும்பத்தின் கதையுடன், அத்தகைய கொடுமைகளற்றுத் தனிக்குடித்தனம் செய்யும் தேவ்- திவி இளம் குடும்பத்தின் இனிமையான கதையை ஒப்புநோக்கி, இறுதியில் பிருந்தாவின் கணவன் ஆகாஷ் விழித்தெழுந்து தன் வீட்டில் மனைவிக்கு நடக்கும் கொடுமைகளை உணர்ந்து விடிவுதேடுகிறான். காலம் காலமாக குடும்பங்களில் நடப்பதாகக் காட்டப்படும் மாமியார்-மருமகள் முரண்பாடு, இந்நாவலிலும் எடுத்தாளப்படுகின்றது. குருநாகல், மல்லவப்பிட்டியைச் சேர்ந்த கலைப்பட்டதாரியான சுமைராவின் முதல் நாவல் இது.

**6802**
**விடிவுகால நட்சத்திரம்.** கே.விஜயன். கொழும்பு: வீரகேசரி வெளியீடு, த.பெட்டி இலக்கம் 160, 1வது பதிப்பு, ஜனவரி 1977. (கொழும்பு 14: Express Newspapers (Ceylon) Ltd.,185, Grandpass Road).
(4), 270 பக்கம், விலை: ரூபா 4.90, அளவு: 17.5x12.5 சமீ.

இந்நாவல் விரகேசரி பிரசுரத் தொடரில் 49ஆவது நூலாக வெளிவந்தது. ஈழத்துப் படைப்பாளி கே.விஜயனின் முதலாவது நாவல் இது. 1971- ஏப்ரல் மாதத்தில் இலங்கையில் உண்டான இரத்தக்களறி மிகவும் துக்ககரமானது. ஜே.வீ.பீ. கிளர்ச்சியும் அதனை ஒடுக்க அரசு கையாண்ட இராணுவ வழிகளும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைக் காவுகொண்டது. அக்காலகட்டத்தைப் பின்னணியாகக் கொண்டு சில பாத்திரங்களை உதிரியாக நடமாடவிட்டு மனித ஆத்மாவின் தாகம் என்பதற்கு விடைகாண முயலும் திசையில் கதை ஓடுகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 321928).

**6803**
**விதி வலியது.** ராஜதிலகம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
(4),112 பக்கம், விலை: இந்திய ரூபா 140., அளவு: 18x12 சமீ.

விதி வலியது, இறைவனின் லீலை ஆகிய இரு குறுநாவல்களை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. மலேசியாவில் பிறந்த ராஜதிலகம், தன் பெற்றோருடன் 14வது வயதில் இலங்கைக்குத் திரும்பியவர். தொழில்ரீதியாக கணக்காளரான இவர் இலங்கையிலும் மலேசியாவிலும் பணியாற்றியுள்ளார். தனது சொந்த நிறுவனமான Print Plus என்ற நிறுவனத்தை நடத்தி வருகின்றார். கணிதத்துறையில் மிகுந்த ஆர்வம்கொண்ட இவர் புதிர் கணக்கு பற்றி Maya New Puzzle.com என்ற இணையத்தையும்

*நடத்திவருகின்றார். தினக்குரல் பத்திரிகையில் மாணவர்களுக்கான அறிவு ஆரம் பகுதியில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.*

***6804***

***விதியின் கை.*** *கனக செந்திநாதன். கொழும்பு: வீரகேசரி வெளியீடு, தபால் பெட்டி எண் 160, 1வது பதிப்பு, மார்ச் 1977. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).*
*(18), 102 பக்கம், விலை: ரூபா 3.20, அளவு: 17.5x12 சமீ.*

*சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் 5.7.1953 இலிருந்து ஈழகேசரி பத்திரிகையில் தொடராக வெளிவந்த நாவல். இது 51ஆவது வீரகேசரி பிரசுரமாக வெளிவந்துள்ளது. கிராமத்துப் பாடசாலை, கிராமச் சங்கத் தேர்தல், காவடி ஆட்டம் என்பவற்றைப் பின்னணியாகக் கொண்டு நிலப் பிரபுத்துவமும் யுத்தகாலத்தில் உழைத்த புதுப்பணமும் ஏழைகளின் ஏக்கமும் உண்மைநிலையில் வைத்துச் சித்திரிக்கப்பட்டுள்ளன. தனது சிறுகதைகளில் காதலைச் சித்திரிக்காத கனக செந்திநாதன் தனது இந்த நாவலில் முதன்முதலாகக் கிராமத்துக் காதலைச் சித்திரிக்கிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 323499).*

***6805***

***விதியின் வழியிலே.*** *ரஜனி (இயற்பெயர்: K.V.S.வாஸ்). கொழும்பு: ஜனமித்திரன் வெளியீடு, தபால் பெட்டி 160, 1வது பதிப்பு, 1974. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).*
*(5), 213 பக்கம், விலை: ரூபா 2.90, அளவு: 17.5x12 சமீ.*

*மித்திரனில் தொடராக வெளிவந்த நாவல். கொள்ளைக்காரச் சாமுண்டியின் முயற்சிகளைத் துப்பறியும் சரத்பாபு முறியடித்து, அவனைக் கைதுசெய்கிறார். பெரிய மனிதப்போர்வையில் உள்ள சமூக விரோதிகளின் போக்கும் கதையில் விபரிக்கப்படுகிறது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 323524).*

***6806***

***வீடு யாருக்கு.*** *காவலூர் ராசதுரை. கொழும்பு 3: அபயன் பதிப்பாலயம், 51/9 ஹட்சன் வீதி, 1வது பதிப்பு, மே 1972. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி).*
*(4), 69 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 20.5x14 சமீ.*

*இந்நாவல், தினகரனில் தொடர்கதையாக வெளிவந்தது. 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கொழும்பில் வாழும் யாழ்ப்பாணத்து நடுத்தர வர்க்கத்துக்கும், இந்திய வர்த்தகர்களுக்கும் உள்ள பிரச்சினைகளை மையமாகக் கொண்ட நாவல். முதலாளி வர்க்கம், தனது வர்க்கநலன்களையே பேணும் என்பதை இந்நாவலில் அழகாகச் சித்திரித்தள்ளார். அப்புஹாமி முதலாளியின் வீட்டில் சந்தன நாடார், தம்பையா, லலிதா சுந்தரமூர்த்தி ஆகியோர் வாடகைக்குக் குடியிருக்கிறார்கள். டி.ஆர்.பி. காலாவதியான சந்தனநாடார் குடும்பம் தலைமறைவாகின்றது. தம்பையா குடும்பம் வீட்டைப்பெற முயல்கிறது. முதலாளி தன் தொழிலாளர்களை ஏவி வீட்டையே இடித்துவிடுகிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 300854).*

***6807***

**வேரறுந்த மரங்கள்.** *சிக்கன்ன ராஜு. கொட்டகலை: சாரல் வெளியீட்டகம், 7 பல்கூட்டுச் சந்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (கொட்டகலை:* Global Com System-IT, 135 Main Street*).*
*85 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 17.5x13.5 சமீ.,* ISBN: *955-8589-05-5.*

*இலங்கையில் 1960-70களில் இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டிருந்தவர் சிக்கன்ன ராஜு. தற்போது சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தத்தின் காரணமாக புலம்பெயர்ந்து தமிழகத்தில் வாழும் இவரது குறுநாவல் இதுவாகும். தன் கதையில் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் நெஞ்சில் கனவுகளை வளர்த்துக்கொண்டு தாயகம் திரும்பியவர்கள், கல்வி வசதி, வீட்டுக்கடன், தொழில்வாய்ப்பு என்று நம்பிப்போனவர்கள் படுகின்ற அவதிகளை தானே அனுபவித்து இந்நாவலை எழுதியிருக்கிறார். முன்னர்* ***மலையக மக்கள்***

***மறுவாழ்வு*** *என்ற சஞ்சிகையை சில ஆண்டுகள் நடத்தியவர் இவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 561530).*

***6808***

***வேள்வித் தீ.*** தாமரைச்செல்வி (இயற்பெயர்: ரதிதேவி கந்தசாமி). யாழ்ப்பாணம்: மீரா வெளியீடு, 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1994. (யாழ்ப்பாணம்: மகாலட்சுமி அச்சகம், மருத்துவமனை வீதி).
*(4), 32 பக்கம், விலை: ரூபா 28.00, அளவு: 14x22 சமீ.*

*1974இல் எழுத்துலகில் புகுந்து போர்க்காலச்சூழலில் துணிச்சலுடன் சமகாலப் பிரச்சினைகளைவைத்துத் தன் படைப்பிலக்கியங்களை வெளிக்கொண்டுவந்தவர் தாமரைச்செல்வி. இவரது 1வது நாவல் (சுமைகள்) 1977இல் வீரகேசரி 55ஆவது பிரசுரமாக வெளிவந்திருந்தது. இலங்கையின் போர்க்காலச் சூழலைப் பகைப்புலமாகக்கொண்டு வேள்வித்தீ எழுதப்பட்டுள்ளது. பாரம்பரிய அளவுகளிலிருந்து மாறி அகலப்போக்கில் வித்தியாசமாக இக்குறுநாவல் அச்சிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 460770).*

***6809***

***ஜயந்தி.*** ரஜனி (இயற்பெயர்: K.V.S.வாஸ்). கொழும்பு: ஜனமித்திரன் வெளியீடு, தபால் பெட்டி 160, 1வது பதிப்பு, 1973. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் ரோட்).
*(4), 232 பக்கம், விலை: ரூபா 4.60, அளவு: 17x12சமீ.*

*சிரித்துச் சிரித்து ஒரு அப்பாவியான பொன்னுத்துரையின் வாழ்க்கையைச் சீரழித்து சிறைத்தண்டனை பெறவைக்கிறார்கள் இரு பெண்கள். செய்யாத குற்றத்திற்காக ஐந்தாண்டுகள் சிறைத்தண்டனை பெற்று மீள்கிறான் பொன்னுத்துரை. அவனைத் தண்டனை பெறவைத்த உண்மைக் குற்றவாளிகள் இறுதியில் சட்டத்தின் பிடியில் சிக்குகின்றார்கள். ஜயந்தியும் அவர்களுள் ஒருத்தி. சிறைமீண்ட பொன்னுத்துரை புதுவாழ்வு பெறுகின்றான். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 315314).*

## *894.8(6) இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வுகள்*

***6810***

***அகப்பொருள் விளக்கம்.*** நாற்கவிராச நம்பி (மூலம்), அ.குமாரசுவாமிப்பிள்ளை, த.கனகசுந்தரம்பிள்ளை (உரையாசிரியர்கள்). வெளியீட்டு விபரம் தரப்படவில்லை, 1வது பதிப்பு, கார்த்திகை, 1912. (சென்னை: வித்தியானுபாலன யந்திரசாலை).
*(10), 197 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 21.5x14.5 சமீ.*

*அகப்பொருள் என்றால் உள்ளம்-மனம் சார்ந்த விடயங்களைக் குறிக்கும். கணவன்-மனைவி, காதலன்-காதலி என்போர் தாம் அனுபவிக்கும் வெளியே பகிரங்கப்படுத்தமுடியாத இன்பத்தை அகப்பொருள் விளக்கம் குறித்து நிற்கின்றது. இந்நூலில் சங்க இலக்கியமான அகப்பொருள் விளக்கத்தின் களவியல், வரைவியல், கற்பியல் ஆகியன விரிவாக உரைநடையில் தரப்பட்டுள்ளன.* ***களவியலில்*** *இயற்கைப் புணர்ச்சி, வன்புறை, தெளிவு, பிரிவுழிமகிழ்ச்சி, பிரிவுழிக் கலங்கல், இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கிமதியுடம்பாடு, பாங்கியிற்கூட்டம், பகற்குறி, பகற்குறியிடையீடு, இரவுக்குறி, இரவுக்குறியிடையீடு, வரைதல்வேட்கை, வரைவுகடாதல், ஒருவழித்தணத்தல், வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிவு ஆகிய விடயங்களும்,* ***வரைவியலில்*** *வரைவுமலிதல், அறத்தொடுநிலை, உடன்போக்கு, கற்பொடுபுணர்ந்தகவ்வை, மீட்சி ஆகிய விடயங்களும்,* ***கற்பியலில்*** *இல் வாழ்க்கை, பரத்தையிற் பிரிவு, ஓதற்பிரிவு, காவற்பிரிவு, தூதிற்பிரிவு, துணைவயிற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு ஆகிய விடயங்களும் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 6352).*

***6811***

**அகப்பொருள் விளக்கம்: மூலமும் உரையும்.** நாற்கவிராச நம்பி (மூலம்), சிவநந்தையர் (பரிசோதித்தவர்). யாழ்ப்பாணம்: சிவநந்தையர், தெல்லிப்பழை, 1வது பதிப்பு, பங்குனி 1907. (கொக்குவில்: சோதிடப்பிரகாச யந்திரசாலை).
(4), 115 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

அகப்பொருள் என்றால் உள்ளம்-மனம் சார்ந்த விடயங்களைக் குறிக்கும். கணவன்-மனைவி, காதலன்-காதலி என்போர் தாம் அனுபவிக்கும் வெளியே பகிரங்கப்படுத்தமுடியாத இன்பத்தை அகப்பொருளாகக்கொண்டு அதற்க இலக்கணம்கூறும்விதமாக இந்நூல் நாற்கவிராச நம்பியால் சங்ககாலத்தில் இயற்றப்பட்டது. இந்நூலில் அகத்திணையியல், ஒழிபியல், களவியல், கற்பியல், வரைவியல் ஆகிய ஐந்து தலைப்புகளின்கீழ் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 8908).

**6812**
**அண்மைக்கால அறுவடைகள்: திறனாய்வுப் பத்திகள்: தொகுதி -02 (2006-2009).** புலோலியூர் ஆ.இரத்தினவேலோன். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 291/6, 5/3 A, Edward Avenue, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (மஹரகம: தரஞ்ஜி பிரின்ட்ஸ், நாவின்ன).
vi, 142 பக்கம், விலை: ரூபா 270., அளவு: 18.5x12.5 சமீ.

இந்நூலில் இடம்பெற்றுள்ள 20 கட்டுரைகளும் 2006ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டு வரை ஈழத்தில் வெளியாகிய 20 நூல்களினூடு அக்காலகட்டத்து ஈழத்து சிறுகதையின் செல்நெறி பற்றிப் பேச முற்படுகின்றன. இவை அனைத்தும் ஞாயிறு தினக்குரலில் வெளியானவை. இன்னொரு புதிய கோணம் (தெணியான்), இளவேனில் மீண்டும் வரும் (தாட்சாயணி), ஓர் எழுதுவினைஞனின் டயரி (ஆனந்தமயில்), ஜலசமாதி (ஏ.எஸ்.உபைதுல்லா), பூபாள ராகங்கள் சிறுகதைத் தொகுதி 2007, தியாக பொம்மைகள் (நெலோமி), தொலைவில் ஒரு கனவு (கமலினி சிவநாதன்), ஒரு மணல்வீடும் சில எருமை மாடுகளும் (சிவனு மனோகரன்), காம்பு ஒடிந்த மலர் (தமிழ்ப்பிரியா), முதுசொமாக (வதிரி இ.இராஜேஸ்கண்ணன்), மனம் விந்தையானது தான் (யோகேஸ்வரி சிவப்பிரகாசம்), ஒரே இரத்தம் (திக்கவல்லை ஸப்வான்), கருமுகில் தாண்டும் நிலவு (தி.ஞானசேகரன்) தேடலே வாழ்க்கையாய் (பவானி சிவகுமாரன்), பசியடங்கா இருளிலிருந்து ஒன்பது கதைகள் (யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்), மீண்டும் அந்த வசந்தம் (புலோலியூர் க.குகநாயகி), கனகசெந்தி கதாவிருது பெற்ற சிறுகதைகள் (செங்கை ஆழியான்), துருவ சஞ்சாரம் (ஆனந்தி), பீலிக்கரை (பிரமீளா செல்வராஜா), பாட்டுத் திறத்தாலே (த.கலாமணி) ஆகிய நூல்கள் இங்கு விமர்சனத்துக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**6813**
**அந்தக் காலக் கதைகள்: நடைச்சித்திரம்.** தில்லைச்சிவன், (இயற்பெயர்: தி.சிவசாமி). யாழ்ப்பாணம்: மல்லிகைப் பந்தல், 234 B, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1997. (சென்னை 600026: குமரன் பதிப்பகம், 79, 1வது தெரு, வடபழநி).
132 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 17.5x12.5 சமீ.

சரவணைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் தில்லைச்சிவன். மல்லிகை இதழ்களில் 1993களில் அவ்வப்போது பிரசுரமான அவரது விவரணக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகின்றது. இத்தொகுப்பில் வேலணைத்தீவுச் சைவ இளைஞர் சபை, ஊரிமண்காடு, அன்பு வியாபாரி, தூக்கணாங்குருவி, புளிச்சாதம், எனது பாட்டனார் ஒரு துப்பாக்கி வைத்திருந்தார், பாட்டனார் சொன்ன தோம்புக்கதை, பண்டமாற்று, மாற்றம் வரும்போது, வண்டியின் பின்னால் வந்த பேய், திருமணங்கள் இரண்டு, ஐயனார் கோவில் திருவிழா, உமிரிக்கீரை, மீசை முளைத்தது, அராலிச்சந்தித் தண்ணீர்ப் பந்தல், வலம்புரிச் சங்கு, சித்திரை வெள்ளம், தேர்தல் வந்தது, கவிதை பிறந்த கதை, விசாலாட்சி விசுவநாதர் திருமணம், பாஞ்சாலி, பாட்டனாரின் கதை ஆகிய 22 தலைப்புக்களில் தில்லிச்சிவனின் விவரணங்கள் விரிகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 542667).

**6814**

**அமைதி கோர்ட் நடந்துகொண்டிருக்கிறது.** அந்தனி ஜீவா. சென்னை 600098: நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 41-B, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).
x, 107 பக்கம், விலை: இந்திய ரூபா 55.00, அளவு: 21x14 சமீ., ISBN: 978-81-234-1837-X.

கொழும்பு தினக்குரல் பத்திரிகையில் அந்தனி ஜீவா தொடர்ந்து எழுதிவந்த **பார்வையின் பதிவுகள்** என்ற பத்தி எழுத்துக்களில் தேர்ந்த 31 படைப்புக்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. அனைத்தும் அரிய பல இலக்கியத் தகவல்களைத் தேடி எடுத்து வாசகர்களுக்கு சுவையாக வழங்குவதாக அமைந்துள்ளன. மலேசிய-சிங்கப்பூர் நூல்தேட்டம் பற்றி ஆறாவது கட்டுரையும், நூலகர் என்.செல்வராஜாவின் நூல்தேட்டம் என்ற இருபதாவது கட்டுரையும் நூல்தேட்டம் பதிப்புப் பணிபற்றிய தகவல்களை வாசகர்களுக்கு வழங்குகின்றன. பிரேமிள், பிரேம்ஜி, இளஞ்செழியன், அ.ந.கந்தசாமி, பேராசிரியர் கைலாசபதி, கம்பதாசன், வானொலி சுந்தா என்று பல்வேறு இலக்கியவாதிகளையும், ஈழத்து-தமிழக தமிழ் நாடக உலகையும் பற்றிய பல அரிய தகவல்கள் இந்நூலில் பொதிந்துள்ளன. சமகாலத்தில் இதே பத்தி எழுத்துக்களில் தேர்ந்த 40 படைப்புக்களை உள்ளடக்கியதாக தாயகத்தின் கொடகே நிறுவனத்தின்மூலம் **பார்வையின் பதிவுகள்** என்ற தலைப்பில் மேலும் ஒரு நூல் வெளியிடப்பட்டுள்ளது. இதிலுள்ள பல கட்டுரைகள் அதிலும் இடம்பெற்றுள்ளன.

**6815**
**ஆய்வரங்கக் கோவை.** ஜின்னாஹ் ஷரிபுத்தீன், அஷ்ர.்.ப் சிஹாப்தீன், தாஸிம் அகமது. கொழும்பு 12: உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு 2002, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (தெகிவளை: ஏ.ஜே.பிறின்ட்ஸ், 44 புகையிரத நிலைய வீதி).
(6), 623 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15.5 சமீ., ISBN: 955-8806-17-x.

இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் அனுசரணையுடன் 2002ம் ஆண்டு ஒக்டோபர் 22-24 திகதிகளில் நடந்தேறிய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகளின் தொகுப்பாக இந்நூல் வெளியிடப்பட்டது. ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அமைப்புக்குழுத் தலைவராகவும், அஷ்ர.்.ப் சிஹாப்தீன் பொதுச்செயலாளராகவும், தாஸிம் அகமது ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றியிருந்தனர். அல்குர்ஆனின் இலக்கியக் கோட்பாடு (எம்.றிஸ்வி சுபைர்), அல்குர்ஆனில் இழையோடியிருக்கும் இலக்கிய இன்பம் (அஷ்-ஷெய்க்-அன்சார் பழீல் மௌலானா), திருமறையும் இலக்கியமும் (எம்.சீ.எம்.இக்பால்), அல்குர்ஆனும் அற்புதங்களும் (எஸ்.ஆமினா பர்வீன்), இறைமறையும் இஸ்லாமியத் தமிழிலக்கியமும் (ஏ.எம்.எம்.பாறுக்), அல்குர்ஆனும் இலக்கியமும் (எம்.கே.எம்.றிஸானா) ஆகிய ஆறு கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**6816**
**இராமாயணத்தின் வரலாற்று நம்பகத்தன்மை: விமர்சனரீதியான ஒரு மதிப்பீடு.** அம்பலவாணர் மயூரன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஏப்ரல் 2010. (பொல்கொல்லை: சீ.வீ.பப்ளிஷர்ஸ், த.பெ.எண் 01).
204 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-1779-39-9.

இராமாயணம் ஒரு வரலாறா, இலக்கியமா என்ற சர்ச்சைக்கான அடிப்படைக் காரணிகளை இனம்காணும் ஒரு முயற்சியாக இந்நூல் வெளிவந்துள்ளது. இராமாயணத்தின் வகைகள், மூல இராமாயணத்தின் தோற்றுவாய், அயோத்தி பற்றிய குழப்பநிலை, இராமாயணம் எழுந்த காலம் பற்றிய சர்ச்சை, சங்க இலக்கியங்களில் இராமாயணம் பற்றிய குறிப்புகள், இராமர்-சீதை பற்றிக் கூறப்படும் மாற்றுக் கருத்துகள், இராவணனின் பத்துத் தலைகள் பற்றிய குழப்பநிலை, இலங்கை பற்றிய குழப்பம், சர்ச்சைக்குட்படும் இராமர் பாலம், கம்பன் ஓர் அபரபிரமனாம், இராமாயணத்தில் இடைச்செருகல்கள், இலங்கை மாமன்னன் இராவணேஸ்வரன், சிவதாண்ட தோத்திரத்தை அருளிய இராவணன், சித்தவைத்தியன் இராவணன், இலங்கையில் பதிந்த இராவணன் தடங்கள், இலங்கைக்கு அப்பால் இராவணனின் தடங்கள், இராவணன் பற்றி எழுந்த நூல்கள் என்பன போன்ற இன்னோரன்ன தலைப்புகளினூடாக இவ்வாய்வு சுவைபட விரிகின்றது. இந்நூல் சிந்தனை

*வட்டத்தின் 316ஆவது நூலாக வெளியிடப்பட்டுள்ளது. ஈழத்தின் வன்னிப் பிரதேசத்தின் வவனிக்குளத்தில் 24.9.1979இல் பிறந்த அ.மயூரன், தனது உயர் கல்வியை வவுனியா விபுலானந்தர் மகாவித்தியாலயத்தில் பெற்றவர். தற்போது புலம்பெயர்ந்து லண்டனில் வாழ்ந்து வருகின்றார்.*

***6817***

***இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களும் கவிதைகளும்.*** *சிலோன் விஜயேந்திரன். சென்னை: சித்ரா பதிப்பகம், 26, டி.என்.எச்.பி. ஷொப்பிங் காம்பிளெக்ஸ், திருமங்கலம், அண்ணா நகர், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1994. (தமிழ்நாடு: சித்ரா கிராபிக்ஸ், 24 பொன்னுசாமித் தெரு, இராயப்பேட்டை).*

*344 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 18x12.5 சமீ.*

*இந்நூலில் சுப்பிரமணிய பாரதியார் முதல்இளந்தேவன் வரையிலான இந்திய, இலங்கை மற்றும் மலேசியத் தமிழ்க் கவிஞர்களில் 72 பேர் பற்றிய விபரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இதில் மஹாகவி, இ.முருகையன், நீலாவணன், காசி ஆனந்தன், பிரேமிள் சிவராம், எம்.ஏ.நு்.மான், சண்முகம் சிவலிங்கம், புதுவை இரத்தினதுரை, வ.ஐ.ச.ஜெயபாலன், சேரன், சில்லையூர் செல்வராசன் ஆகிய ஈழத்துக் கவிஞர்கள் பற்றிய விரிவான தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 468874).*

***6818***

***இலக்கிய ஒப்பியல்: வீடற்றவன், நாகம்மாள் நாவல்களின் ஒப்பாய்வு.*** *அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை, 30, கடைச்சாமி வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, ஜுன் 2008. (யாழ்ப்பாணம்: கங்கை பிறின்டேர்ஸ், 781 சிவலிங்கப்புளியடி, காங்கேசன்துறை வீதி).*

x, *60 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x15 சமீ.*

*இலக்கிய ஒப்பியல் நூலில் மலையகக் கவிஞரும் மூத்த எழுத்தாளரும் ஒரு காலத்தில் பாராளுமன்ற உறுப்பினருமாக இருந்த சி.வி.வேலுப்பிள்ளையின் வீடற்றவன் நாவலையும், தமிழகத்தின் கொங்கு வட்டாரத்தைச் சேர்ந்த எழுத்தாளர் ஆர். சண்முகசுந்தரத்தின் நாகம்மாள் என்ற நாவலையும் ஒப்பிட்டு விமர்சனம் செய்துள்ளார். வீடற்றவன், நாகம்மாள் ஆகிய இரண்டு நாவல்களையும் நாவலாசிரியர்கள், கதைச்சுருக்கம், பாத்திரப்படைப்பு, சூழ்நிலை சித்திரிப்பு, கதை சொல்லும் மொழி, நாவல்கள் கூறுவதென்ன, ஏன் எழுதினார், இரண்டிலும் உள்ள குறைபாடுகள் என்பன போன்ற தலைப்புகளில் ஆராய்ந்துள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 626638).*

***6819***

***இலக்கிய நெஞ்சம்.*** *மூனாக்கானா (இயற்பெயர்: மு.கணபதிப்பிள்ளை). மட்டக்களப்பு: அன்பு வெளியீடு, 18, நல்லையா வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (மட்டக்களப்பு: எவர்கிரீன் அச்சகம், 93, திருமலை வீதி).*

vi, *80 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 20x14 சமீ.*

*புலவர்களின் சொற்சிலம்பம், இலக்கியத்தில் நிந்தாஸ்துதி, கூத்துப் பாடல்களில் நவரசம், கூத்துப் பாடல்களில் கவிச்சுவை, வைகாசித் திங்கள் வருவோம், தமிழ் இலக்கியங்களில் விஞ்ஞானச் செய்திகள், கிராமியக் கவிகளின் சிறப்பு, தமிழ்மொழி எண் சீர்திருத்தம், கள்ளனுக்கு முள் அரணோ, முக்கூட்டுக் கலை, கூத்து ஒரு நோக்கு, திரு மு.கணபதிப்பிள்ளை அவர்களுடனான செவ்வி ஆகிய 12 படைப்புக்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகின்றது. ஆரையம்பதியைப் பிறப்பிடமாகக் (22.1.1924) கொண்ட நூலாசிரியர் மு.கணபதிப்பிள்ளை, ஓய்வுபெற்ற தமிழாசிரியர். கிழக்கிலங்கையில் நாட்டுக்கூத்துக் கலையில் ஆழமான ஈடுபாடு கொண்ட கலைஞர்.*

***6820***

***இலக்கியச் சோலை.*** *பொ.கிருஷ்ணபிள்ளை. சுன்னாகம்: பண்டிதர் பொ.கி.அவர்களின் பாராட்டுவிழாச் சபை, 1வது பதிப்பு, 1964. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*

xvi, *110 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 18x12 சமீ.*

*பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர் பண்டிதர் பொ.கிருஷ்ணபிள்ளை அவர்கள் எழுதிய 18 இலக்கியக் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இலக்கியச்சோலை, இல்லார்க்கு இல்லாதன இல்லை, அருமையில் எளிய அழகு, சீதையின் மனத்துடிப்பு, கூந்தலழகன், கண்ணின் மணி, சூரியனிற் சந்திரன், அறம் பாடிற்று, வள்ளுவர் காட்டும் உவமை, வள்ளுவர் சொல்லும் அரசு, தமிழில் ஒழுகும் அழகு, இலக்கியங்களில் நகைச்சுவை, வாடாமலர், வரையாது வழங்கும் வள்ளல்கள், பாலைவனப் பசுந்தரை, மகாகவி பாரதி, கவிமணி தேசிகவிநாயகன், தங்கத் தாத்தா ஆகிய 18 தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275027).*

***6821***

***இவர்கள் வித்தியாசமானவர்கள்.*** *அந்தனி ஜீவா. கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 340 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, 2000. (சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 3 மெய்கை விநாயகர் தெரு).*
*160 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18x12 சமீ.*

*இவருடைய பதிவுகள் வித்தியாசமானவை. பெரும்பாலும் தனக்கு நேரடியாகப் பழக்கமானவர்களைப் பதிவுசெய்திருக்கிறார். தன்னுடைய அந்த உறவினூடாக அவர்களுடைய ஆளுமைகளை, சாதனைகளை, சிறப்பம்சங்களை, நல்லியல்புகளை ஏன்- குறைகளையும் ஏக்கங்களையும் கூட இரசிக்கும் வண்ணம் பதிவுசெய்துள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 535053).*

***6822***

***இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சி.*** S.M. *ஹனிபா. கண்டி: தமிழ்மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, ஏப்ரல் 1982. (கொழும்பு 12:* Fair Print, 65 Prince's Gate*)*
*80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ.*

*கல்ஹின்ன தமிழ்மன்றத்தின் 11வது நூல். இஸ்லாமிய இலக்கியம் பற்றி அவ்வப்போது ஆசிரியர் இலங்கை, மலேசிய வானொலிகளில் நிகழ்த்திய உரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளியிட்ட கட்டுரைகள், மற்றும் இந்நூலுக்கென்றே எழுதப்பட்ட இரு கட்டுரைகள் ஆகியன தொகுக்கப்பட்டுள்ளன. ஆல்போல் வளர்க ஆர்வம் (அல்லாமா உவைஸ் அவர்களின் இலக்கியப்பணி பற்றிய கண்ணோட்டம்), முஸ்லிம் தமிழ் இலக்கியம் என்ன நிலையில் இருக்கிறது?, முஸ்லிம்களின் தமிழ்த்தொண்டு, இஸ்லாமிய இலக்கியம், சிறந்த வளர்ச்சி (தமிழக, ஈழத்து இலக்கியவாதிகள் பற்றியது), பேராதனையில் தமிழ் ஆராய்ச்சி, நிகரில்லாத அரும்பணி (1976இல் வெளியான உவைஸ் மலரிலிருந்து பெறப்பட்டது), முஸ்லீம் மக்கள் கீழ்நாட்டுக்கு வந்த வரலாறு, கல்ஹின்ன-கலாநிதி ம.மு.உவைஸ் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட* S.M.*ஹனிபா அவர்களின் கட்டுரைகளும், உத்தமர் உவைஸ் என்ற தலைப்பில் கலாநிதி சண்முகதாஸ் எழுதிய ஒரு கட்டுரையும் இடம்பெற்றுள்ளன.*

***6823***

***இஸ்லாமும் தமிழும் இலக்கிய சங்கமம்.*** *எஸ்.ஏ.ஆர்.எம்.செய்யித் ஹசன் மௌலானா. மருதமுனை: இஸ்லாமிய இலக்கியக் கழகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2005. (கொழும்பு: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44 புகையிரதநிலைய வீதி, தெகிவளை).*
xxvi, *(4), 316 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 25.5x18 சமீ.,* ISBN*: 955-1339-00-2.*

*நிந்தாவூரைச் சேர்ந்த நூலாசிரியர் எழுதிய பல்வேறு இலக்கியக் கட்டுரைகள், கவிதைகள் என்பவற்றின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. மொத்தம் 64 படைப்புக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. 30.11.1999இல் சென்னையில் நிகழ்ந்த அகில உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆறாம் மாநாட்டில் இவரது தமிழ்ப்பணிக்காக தமிழக முதல்வராக இருந்த கலைஞர் மு.கருணாநிதியினால் பொன்னாடை போர்த்து பொற்கிழியும் நினைவுச்சின்னமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 603982).*

***6824***

**ஈழத் தமிழ்ச் சிறுகதை மணிகள்.** செம்பியன் செல்வன். திருக்கோணமலை: முன்னோடிகள் கலை இலக்கிய விமர்சகர் குழு, 1வது பதிப்பு, ஜுலை 1973. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).
xx, 9-96 பக்கம், விலை: ரூபா 2., அளவு: 21x13.5 சமீ.

1966ம் ஆண்டுகளில் விவேகி சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவேளையில் எழுதிய கட்டுரைகளின் நூல்வடிவம். ஈழச் சிறுகதை இலக்கிய முன்னோடிகளின் கால-அரசியல், பொருளாதார, சமூக வாழ்க்கைப் பின்னணிகளினூடாக, அவை தொடர்பான ஈழச் சிறுகதை வளர்ச்சியின் செல்நெறி இங்கே காட்டப்பட்டுள்ளது. சி.வைத்தியலிங்கம் (பாற்கஞ்சி), இலங்கையர்கோன் (வஞ்சம்), சம்பந்தன் (துறவு), வரதர் (கற்பு), அ.செ.முருகானந்தம் (காளிமுத்துவின் பிரஜாவுரிமை), தாளையடி சபாரத்தினம் (ஆலமரம்), அ.ந.கந்தசாமி (இரத்த உறவு) ஆகிய படைப்பாளிகளையும் அவர்களது முக்கியமான படைப்பையும் இத்தொகுப்பில் தரிசிக்கமுடிகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 303567).

**6825**
**ஈழத்து அறிஞர் ஆளுமைகள்.** ஆ.வேலுப்பிள்ளை. கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
viii, 144 பக்கம், விலை: ரூபா 375., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-249-8.

இருபதாம் நூற்றாண்டில் புகழோடு வாழ்ந்த பாவலர் துரையப்பாபிள்ளை, வித்துவான் கணேசையர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தன் ஆகிய ஈழத்து அறிஞர்கள் நால்வரின் ஆளுமைகளையும் எடுத்துக்காட்டுவதாக இந்நூல் அமைகின்றது. பாவலர் துரையப்பாபிள்ளையின் யாழ்ப்பாணம்: அன்றும் இன்றும்-மீள்பார்வை, இலக்கணக் கொள்கைக் கட்டுரைகளிலே கணேசையரின் அணுகுமுறை, பண்டிதமணி போற்றிய யாழ்ப்பாணத்துச் சைவத்தமிழ்ப் பாரம்பரியம், பேராசிரியர் வித்தியானந்தன் காட்டும் ஈழத்துத் தமிழர் சால்புக் கோலம் ஆகிய தலைப்புகளில் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை முன்னர் எழுதிய ஆய்வுக்கட்டுரைகள் நான்கின் தொகுப்பு இதுவாகும்.

**6826**
**ஈழத்துக் கவிதை நயம்.** சிலோன் விஜயேந்திரன். சென்னை 18: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 522, டீ.டீ.கே.சாலை, ஆழ்வார்பேட்டை, 1வது பதிப்பு செப்டெம்பர் 2002. (சென்னை 18: அப்பர் அச்சகம்).
160 பக்கம், விலை: ரூபா 45., அளவு: 18x12 சமீ.

ஈழத்துக் கவிஞர்களில் பண்டிதர் க.சச்சிதானந்தன், மகாகவி,இ.முருகையன், ராஜபாரதி, நீலாவணன், காசி ஆனந்தன், எம்.ஏ.நு..மான், சண்முகம் சிவலிங்கம், புதுவை இரத்தினதுரை, வ.ஐ.ச.ஜெயபாலன், சேரன் ஆகியோர் பற்றியும் அவர்களது கவிதாபுலமை பற்றியும் தனித்தனி இயல்களில் விபரித்திருக்கிறார். மேலும் குறிப்பிடத்தக்க பிற கவிஞர்கள் என்ற தனி ஒரு இயலில், சி.சிவசேகரம், காரை.சுந்தரம்பிள்ளை, வே.குமாரசாமி, அம்பி, மு.பொன்னம்பலம், வி.கந்தவனம், நாவற்குழியூர் நடராஜன், யாழ்ப்பாணன், சில்லையூர் செல்வராசன், க.வேந்தனார், புரட்சிக் கமால், ம.பார்வதிநாதசிவம், அண்ணல், க.வீரகத்தி, இ.நாகராஜன், திமிலைத்துமிலன், யாழ். ஜெயம், பாண்டியூரான், சுபத்திரன் போன்றவர்களது கவிதைகள் பற்றி சுருக்கமாக விபரித்திருக்கிறார். இதே வகையில் இவர் எழுதிய **ஈழத்துக் கவிதை விமர்சனம்: 1940-1992** என்ற தலைப்பிலான நூலொன்றும் வெளிவந்திருக்கிறது. (பார்க்க: நூல்தேட்டம் பதிவு 6827). இந்நூல் முன்னைய நூலின் திருத்திய பதிப்பாகவே கருதப்பட்டிருக்கவேண்டும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 561833).

**6827**
**ஈழத்துக் கவிதை விமர்சனம்: 1940-1992.** சிலோன் விஜயேந்திரன். ஜேர்மனி: சன்ராஜ் பதிப்பகம், கோட்மேயர் ஸ்ராசா 32, 4415 சென்டன் கோர்ஸ்ட், 2வது பதிப்பு, ஒகஸ்ட் 1993, 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (இந்தியா: அச்சக விபரம் தரப்படவில்லை).
104 பக்கம், விலை: இந்திய ரூபா 18., அளவு: 18x12 சமீ.

ஈழத்துக் கவிஞர்களில் பண்டிதர் க.சச்சிதானந்தன், இ.முருகையன், ராஜபாரதி, நீலாவணன், காசி ஆனந்தன், சண்முகம் சிவலிங்கம், புதுவை இரத்தினதுரை, வ.ஐ.ச.ஜெயபாலன் ஆகியோர் பற்றியும் அவர்களது கவிதாபுலமை பற்றியும் தனித்தனி இயல்களில் விபரித்திருக்கிறார். மேலும் தனி ஒரு இயலில், சி.சிவசேகரம், காரை.சுந்தரம்பிள்ளை, வே.குமாரசாமி, அம்பி, மு.பொன்னம்பலம், வி.கந்தவனம், நாவற்குழியூர் நடராஜன், யாழ்ப்பாணன், சில்லையூர் செல்வராசன், க.வேந்தனார், புரட்சிக் கமால், ம.பார்வதிநாதசிவம், அண்ணல், க.வீரகத்தி, இ.நாகராஜன், திமிலைத்துமிலன், யாழ். ஜெயம், பாண்டியூரான், சுபத்திரன் ஆகியோரது கவிதைகள் பற்றி சுருக்கமாக விபரித்திருக்கிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 468909).

***6828***

***ஈழத்துச் சிறுகதைகளும் ஆசிரியர்களும்: 1962-1979.*** கே.எஸ்.சிவகுமாரன், சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600014: பி.வி.ஆர். பிரிண்டர்ஸ்).
viii, 184 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 17.5x12 சமீ.

திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன் 1962 முதல் 1998 வரையிலுமான காலப்பகுதியில் வெளியாகிய ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புக்கள், அதன் ஆசிரியர்கள் தொடர்பான தனது திறனாய்வு சார்ந்த மதிப்புரைகளை இருபாகங்களில் வெளியிட்டுள்ளார். இம்முதலாம் பாகம் 1962 முதல் 1979 வலையிலுமான காலத்தில் வெளிவந்த சிறுகதைத் தொகுப்புக்கள் பற்றியதாக அமைந்துள்ளது. இலங்கையர்கோன், செ.கணேசலிங்கன், வ.அ.இராசரத்தினம், டொமினிக் ஜீவா, காவலூர் இராசதுரை, நீர்வை பொன்னையன், வரதர், கே.டானியல், நாவேந்தன், பவானி ஆழ்வாப்பிள்ளை, எம்.ஏ.ரஹ்மான், செ.கதிர்காமநாதன், என்.எஸ்.எம்.ராமையா, செ.யோகநாதன், மு.தளையசிங்கம், மண்டூர் அசோகா, புலோலியூர் க.சதாசிவம், நெல்லை க.பேரன், அ.யேசுராசா, சாந்தன், மு.திருநாவுக்கரசு, நா.முத்தையா, யோ.பெனடிக்ற் பாலன், லெ.முருகபூபதி, சுதாராஜ், மருதூர் மஜீத், காவலூர் எஸ்.ஜெகநாதன் ஆகியோரது படைப்புக்கள் பற்றிய தனித்தனிக் கட்டுரைகளுடன், பொதுவான ஈழத்து இலக்கியப்போக்குகள் பற்றிய கட்டுரைகளுமாக மொத்தம் 35 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 625472).

***6829***

***ஈழத்துச் சிறுகதைகளும் ஆசிரியர்களும்: ஒரு பன்முகப் பார்வை (பாகம் 2) 1980-1998.*** கே.எஸ்.சிவகுமாரன், சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆ்.ப்செட்).
240 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18x12 சமீ.

திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன் 1962 முதல் 1998 வரையிலுமான காலப்பகுதியில் வெளியாகிய ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புக்கள், அதன் ஆசிரியர்கள் தொடர்பான தனது திறனாய்வு சார்ந்த மதிப்புரைகளை இருபாகங்களில் வெளியிட்டுள்ளார். இவ்விரண்டாம் பாகம் 1980 முதல் 1998 வரையிலுமான காலத்தில் வெளிவந்த சிறுகதைத் தொகுப்புக்கள் பற்றியதாக 38 தலைப்புகளில் அமைந்த கட்டுரைகளைக் கொண்டுள்ளது.

***6830***

***ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி.*** க.சொக்கலிங்கம். யாழ்ப்பாணம்: முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், 1வது பதிப்பு, 1977. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்).
xx, 298 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 19x13 சமீ.

1927 தொடக்கம் 1975வரை அச்சுருவில் வெளியான தமிழ் நாடகநூல்களைப் பகுப்பாய்வுசெய்து அதனோடு ஈழத்துத் தமிழ்நாடகத் தோற்றம் பற்றிய ஆதாரங்களுடன் கூடிய சுருக்கமான வரலாற்றையும் உள்ளடக்கியதோர் ஆய்வு இது. தமிழ் நாடக இலக்கியமும் அது ஈழத்திலே தோன்றிய வகையும், ஈழத்துத் தமிழ் நாட்டுக்கூத்துக்கள், சமய, தத்துவ, அறப்போதனைக்கால நாடகங்கள், சமூக விழிப்புக்கால நாடகங்கள், அரசியல் எழுச்சிக்கால நாடகங்கள், நாடகத்திலே புதிய

பரிசோதனைகளும் 1973ஆம் ஆண்டிற்கு முன்னும் பின்னும் வெளியான சில நாடகங்களும் ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் விரிகின்றது. இது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைக்கு நூலாசிரியரின் முதுகலைமானிப் பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுநூல். 1978இல் இலங்கை சாகித்திய மண்டல பரிசினைப் பெற்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 337281).

**6831**

**ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்.** நா.சுப்பிரமணியன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361,1/2 டாம் வீதி, 2வது பதிப்பு, 2009, 1வது பதிப்பு 1978. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).

xxvi, 309 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-192-7.

யாழ்ப்பாணம், முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் 1978 இல் வெளியிட்ட நூலின் திருத்திய இரண்டாவது பதிப்பாக வெளிவந்துள்ள இந்நூலில் இலங்கையில் தமிழ் நாவல் இலக்கியம் தோன்றி வளர்ந்த வகையினை வரலாற்று நோக்கிலே தொகுத்துநோக்கி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. முதற்பதிப்பு வெளிவந்த 30 ஆண்டுகாலப்பகுதியில் ஈழத்திலும் புலம்பெயர்சூழல்களிலும் வெளிவந்த நாவல்களின் வரலாற்றுச் செல்நெறிகளையும் வளர்ச்சிசார் அம்சங்களையும் இனம்காட்டும் வகையிலான பின்னிணைப்புகளும் நூல் பட்டியல்களும் இடம்பெறுகின்றன. துர் அதிர்ஷ்டவசமாக, ஏழாவது தொகுதிவரை 700 நூல்களைப் பதிவுசெய்துள்ள நூல்தேட்டம் தொகுப்பு பற்றியோ அதில் காணப்படும் நாவல்களின் பட்டியல்பிரிவு பற்றியோ எந்தவொரு தகவலும் இந்நூலில் குறிப்பிடப்படவில்லை.

**6832**

**ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்.** மயில்வாகனம் இரகுநாதன். கொழும்பு 6: தென்றல் பப்ளிகேஷன்ஸ், 135 கனல்பாங்க் வீதி, 1வது பதிப்பு, மே 2004. (சென்னை 1: மாணவர் மறுதோன்றி அச்சகம்).

xxiii, 335 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x14 சமீ., ISBN: 955-8621-65-X.

கலாநிதிப் பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வின் நூல்வடிவமான இந்நூல் 2004ம் ஆண்டுக்கான வடக்கு கிழக்கு மாகாண அரசின் சாகித்தியப் பரிசினை இலக்கிய ஆய்வுக்கும் விமர்சனத்துக்குமான நூலுக்காகப் பெற்றது. இந்நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர். இலக்கியமும் சமுதாயச் சிக்கலும், ஈழத்துத் தமிழிடையே காணப்படுகின்ற பிரதானமான சமுதாயச் சிக்கல்கள், சாதியம் தொடர்பான சிக்கல்கள், தொழிலாளர் தொடர்பான சமுதாயச் சிக்கல்கள், பெண்கள் தொடர்பான சமுதாயச் சிக்கல்கள் அகிய இயல்களினூடாக இவ்வாய்வை நகர்த்திச் செல்கின்றார். இவ்வாய்வில் 1960 முதல் 1980 வரையிலான காலகட்டத்து நாவல்களே ஆய்வுக்கெடுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 603927).

**6833**

**ஈழத்துப் பழைய இலக்கியங்கள்: வரலாறு தேடல்.** ஆ.வேலுப்பிள்ளை. கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ்).

viii, 112 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-204-7.

ஈழத்துப் பழைய இலக்கிய வரலாறு இன்னும் நன்கு தெளிவுபடாத நிலையிலேயே காணப்படுகின்றது. அந்தப் பழைய இலக்கிய வரலாற்றுக்கான தேடலாக இந்நூலிலுள்ள கட்டுரைகள் அமைகின்றன. தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும் (1986), அரசகேசரியின் இரகுவம்மிசமும் அது எழுந்த இந்துப் பண்பாட்டுச் சூழலும் (1988), இலங்கைத் தமிழர்களின் கயிலாச பாரம்பரியம் (1989), கோணேசர் கல்வெட்டுப் பற்றிய நுண்ணாய்வு (1985) ஆகிய நான்கு கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தென்புலோலியூரைச் சேர்ந்த ஆ.வேலுபபிள்ளை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று 1959இல் பட்டதாரியானவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை துணை விரிவுரையாளராகவும்,

*தமிழ்த்துறைத் தலைவராகவும், இணைப்பேராசிரியராகவும் 1983 வரை பணியாற்றியவர். பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1984-1990 காலப்பகுதியில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றியவர்.*

***6834***

***ஈழநாட்டுப் புலவர்களின் கவித்திறமும் தனிப்பாடல்களும்.*** *த.கனகரத்தினம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).*

*240 பக்கம், விலை: ரூபா 260., இந்திய ரூபா 65., அளவு: 18x12.5 சமீ.*

*தமது கவித்திறனால் இன்றும் நம்மிடையே வாழ்ந்துவரும் பல ஈழத்தமிழ்ப் புலவர்களின் வாழ்வும் பணியும் இந்நூலில் பதிவாகியுள்ளது. கவிநயம் என்ற தொடரில் ஆசிரியர் நிகழ்த்திய வானொலி உரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. சோமசுந்தரப்புலவர், புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, ஆசுகவி கல்லடி வேலன், முத்துக்குமார கவிராசசேகரன், சிவசம்புப் புலவர், முருகேச பண்டிதர், வித்துவ சிரோமணி கணேசையர், சி.வை.தாமோதரம்பிள்ளை, கவிஞர் மகாலிங்கசிவம், புலவர் மு.நல்லதம்பி, வே.சிவக்கொழுந்து, க.மயில்வாகனப் புலவர், பாவலர் துரையப்பாபிள்ளை, நட்டுவச் சுப்பையனார், முகாந்திரம் சதாசிவ ஐயர், அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர், புலவர் சிவங்கருணாலய பாண்டியனார், இளமுருகனார், சந்தக்கவி சி.சின்னையனார், அந்தகப் புலவர் செய்கு அலாவுதீன், கு.சிற்சபேசன், வித்தியாரத்தினம் நடராசன், வேந்தனார், விபுலானந்த அடிகள், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், ஆ.மு.ஷரிபுத்தீன், கவிஞர் நீலாவணன் (சின்னத்துரை) ஆகிய 27 தமிழறிஞர்கள் பற்றி இந்நூலில் புதிய விடயங்கள் பலவற்றை அறியமுடிகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 625467).*

***6835***

***ஊஞ்சல் இலக்கியம்.*** *ஈழத்துப் பூராடனார் (இயற்பெயர்: க.தா.செல்வராசகோபால்). கனடா: ஜீவா பதிப்பகம்,* 1108 Bay Street, Toronto, Ontario, *1வது பதிப்பு, செப்டெம்பர் 1992. (கனடா: றிப்ளெக்ஸ், அச்சகம், ரொரன்டோ).*

xvi, *160 பக்கம், விலை: கனேடிய டொலர் 10., அளவு: 21x14 சமீ.*

*தமிழில் ஊஞ்சல் இலக்கியம் பற்றிய விரிவான தேடலாக இந்நூல் அமைகின்றது. ஊஞ்சல் இலக்கியம், தாலாட்டிலிருந்து பாராட்டுவரை, ஊஞ்சல் பிரபந்தங்கள், திருப்பொன்னூசல், நல்லைநகர்க் கந்தன் பேரில் திருவூஞ்சல், கலைவாணி ஊஞ்சல், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மன் ஊஞ்சல் பாடல்கள், பத்திரகாளி ஊஞ்சல், சித்திரவேலாயுத சுவாமி ஊஞ்சல், நயினை ஊஞ்சல், கண்ணகியம்மன் ஊஞ்சல், ஆனந்த விநாயகர் திருவூஞ்சல், வேதநாயகம் சாஸ்திரியாரவர்களின் ஊஞ்சலிலக்கியம், திருச்சபை ஊஞ்சல், திருவிளையாட்டூசல், தலங்காவற் பிள்ளையார் திருவூஞ்சல், திருக்கோணேசர் திருவூஞ்சற் பதிகம், கல்வாரி ஊஞ்சல், பிள்ளையார் திருவூஞ்சல், சங்க ஏடுகளில் ஊஞ்சல் பற்றிய தகவல்கள், பிள்ளைத் தமிழில் ஊஞ்சல் இலக்கியம், மீனாட்சி பிள்ளைத் தமிழ், கலம்பக இலக்கியங்களில் ஊஞ்சல் இலக்கியம், மக்கள் பாட்டு நிலையில் ஊஞ்சல் இலக்கியம், பாரம்பரிய செவிவழி ஊஞ்சற்பாட்டுகள், ஊஞ்சலாட்டம், ஊஞ்சலிசை, வள்ளியம்மன் ஊஞ்சல், முதலாந்தரு, இரண்டாந்தரு, மூன்றாந்தரு, நான்காந்தரு, கண்ணகி ஊஞ்சல், முதலாந்தரு, இரண்டாந்தரு, மூன்றாந்தரு, நான்காந்தரு ஆகிய தலைப்புகளில் ஊஞ்சல் இலக்கியம் பற்றிய விரிவான தகவல்களை இத்தொகுப்பு கொண்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 444867).*

***6836***

***எட்டுத் தொகை பத்துப் பாட்டு நூல்கள்.*** *அன்புமணி. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 15: எம்.கே.எண்டர்பிரைசஸ்).*

*136 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 18x12 சமீ.*

சங்ககால இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகியவற்றில் அடங்கும் ஒவ்வொரு நூல் பற்றியும் சிறு விளக்கத்தை வழங்கி, அவற்றை சாதாரண வாசகர்களிடம் அறிமுகப்படுத்தும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. எட்டுத்தொகை நூல்களான நற்றிணை, குறந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் ஆகியனவும், பத்துப்பாட்டு நூல்களான திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி ஆகியனவும் இங்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன.

**6837**

**கடுக்கனும் மோதிரமும்.** கனக.செந்திநாதன். தெல்லிப்பழை: சன்மார்க்க சபை, குரும்பசிட்டி, 1வது பதிப்பு, ஜனவரி 1972. (அச்சக விபரம் தரப்படவில்லை).
vii, 8-64 பக்கம், விலை: ரூபா 1.75, அளவு: 18.5x12.5 சமீ.

கவிதை இரசனையை வளர்க்கும் கட்டுரைகளைக்கொண்ட நூல் இதுவாகும். முன்னதாக, பல்வேறு மலர்களிலும் ஆசிரியர் எழுதிய 14 கட்டுரைகள் வெற்றிமணி சிறுவர் சஞ்சிகையில் சுருக்கி வெளியிடப்பட்டன. அவற்றின் தொகுப்பாகவே இந்நூல் உருவாகியுள்ளது. திருக்குறள், இராமாயணம், குசேலோபாக்கியானம், நரி விருத்தம், பாரதி பாடல், தேசிக விநாயகம்பிள்ளை கவிதை, பிள்ளைத் தமிழ், வேதநாயகம்பிள்ளை பாடல், தனிப்பாடல்கள் எனப் பலவகைப்பட்ட கவிதைகளை இக்கட்டுரைகளின் வாயிலாக ஆசிரியர் அறிமுகம் செய்திருக்கிறார். ஆசிரியர் தனது 55ஆவது வயதில் ஆசிரியப்பணியிலிருந்து ஓய்வுபெறும்வேளையில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 289400).

**6838**

**கண்ணதாசன் ஒரு காவியம்.** சக்தி சக்திதாசன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
220 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 18x12 சமீ.

தமிழகத்தின் கவிஞர் கண்ணதாசன் பற்றியதும் அவர் எழுதிய பாடல்கள் பற்றியதுமானதொரு இலக்கியப் படையல் இந்நூலாகும். கடந்த மூன்று தசாப்தங்களாக பிரித்தானியாவில் வாழும் சக்திதாசன் யாழ்ப்பாணம் நல்லூரில் 1956இல் பிறந்தவர். 1975முதல் லண்டனில் வாழ்ந்து வருகின்றார். தமிழ்ப் பூங்கா என்ற மின்னிதழை நடத்திவரும் இவர் இணையத்தினூடாகத் தன் கவிதைகளையும், பிற படைப்பிலக்கியங்களையும் அவ்வப்போது எழுதிவருகின்றார். மணிமேகலைப் பிரசுரமாக இதுவரை 6 நூல்கள் வரை வெளியிட்டுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 630627).

**6839**

**கதை வளம்: ஏடு ஒன்று.** ரகுராமன். கொழும்பு 13: மரபு நிலையம், 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, ஜனவரி 1968. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231 Wolfandhal Street).
34 பக்கம், விலை: சதம் 50., அளவு: 18x12.5 சமீ.

இலங்கையில் வெளிவந்த தினபதி பத்திரிகையினால் தொடங்கப்பட்ட தினம் ஒரு சிறுகதைத் திட்டத்தின்கீழ் ஒக்டோபர் 1967இல் பிரசுரமான கதைகள் பற்றிய விரிவான விமர்சனமாக இக்கட்டுரை அமைகின்றது.

**6840**

**கதை வளம்: ஏடு இரண்டு.** ரகுராமன். கொழும்பு 13: மரபு நிலையம், 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, பெப்ரவரி 1968. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231 றுழடகயனொயட ளுவசநநவ).
42 பக்கம், விலை: சதம் 60., அளவு: 18x12.5 சமீ.

இலங்கையில் வெளிவந்த தினபதி பத்திரிகையினால் தொடங்கப்பட்ட தினம் ஒரு சிறுகதைத் திட்டத்தின்கீழ் நவம்பர் 1967இல் பிரசுரமான கதைகள் பற்றிய விரிவான விமர்சனமாக இக்கட்டுரை

அமைகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 299815).

### 6841

**கம்ப உவமைத் திறன்.** ஸ்ரீ பிரசாந்தன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: அகில இலங்கை கம்பன் கழகம், 1வது பதிப்பு, மே 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).
xx, 360 பக்கம், விலை: ரூபா 1200., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-9396-21-5.

17.5.2008 அன்று கொழும்பு கம்பன் விழாவில் வெளியிடப்பட்ட அகில இலங்கை கம்பன் கழகத்தின் 17ஆவது வெளியீடு. வித்துவான் சி.கணேசையர், வெ.இராமலிங்கம்பிள்ளை, கி.வா.ஜகந்நாதன், கிருபானந்த வாரியார், எஸ்.மகராஜன். சா.கணேசன், எஸ்.இராமகிருஷ்ணன், அ.சீனிவாசராகவன், அ.ச.ஞானசம்பந்தன், மு.மு.இஸ்மாயில், வி.இராமானுஜன், சுந்தர சண்முகனார், ச.வே.சப்பிரமணியன், பி.சி.சீதாபதி, அ.சண்முகதாஸ், தெ.ஞானசுந்தரம், இரா.வ.கமலக்கண்ணன், மனோன்மணி சண்முகதாஸ், கு.அரசேந்திரன், இ.ஜெயராஜ், ம.இலக்குமி நாராயணன், த.இராமலிங்கம், க.இரகுபரன், ஸ்ரீபிரசாந்தன் ஆகியோரின் 30 இலக்கியக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 625478).

### 6842

**கலை இலக்கியக் கோட்பாடுகள்.** சபா.ஜெயராசா. கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 340 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, 1993. (கொழும்பு 11: லங்கா ஆசியா பிரின்ட், எஸ்.26, 3வது மாடி).
(4), 52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12 சமீ.

மனித குல விழுமியங்களை மேம்படுத்துகின்ற கலை இலக்கியக் கோட்பாடுகள் பற்றி இந்நூல் விரிவாக விளக்குகின்றது. மேற்குலக நாடுகளின் சித்தாந்தங்கள் சிலவற்றினை தமிழ்க் கலை இலக்கியகர்த்தாக்களுக்கு அறிமுகப்படுத்தும் முயற்சியாகவும் இந்நூல் அமைகின்றது. கலாநிதி சபா ஜெயராஜா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றியவேளையில் எழுதப்பட்ட நூல் இது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 464350).

### 6843

**கலையும் பண்பும்.** பிறையன்பன் (இயற்பெயர்: சு.வித்தியானந்தன்). பேராதனை: சு.வித்தியானந்தன், 28/1 பழைய கலகா வீதி, 2வது பதிப்பு, மார்கழி 1962, 1வது பதிப்பு, மார்கழி 1961. (யாழ்ப்பாணம்: கலைஞானி அச்சகம்).
(4), 190 பக்கம், விலை: ரூபா 3.25, அளவு: 17.5x12.5 சமீ.

தமிழ் இலக்கியம் மாத்திரமின்றி இஸ்லாமியருடைய கலை, பண்பாடு பற்றிய ஆய்வுகளையும் உள்ளடக்கியதாக எழுதப்பட்ட இந்நூல், இலங்கை அரசின் சாஹித்திய மண்டலப் பரிசைப்பெற்றது. தமிழில் ஏற்கெனவே தோன்றிய காப்பியம், கலம்பகம், அம்மானை, அந்தாதி, ஆற்றுப்படை, திருப்புகழ், கும்மி, தாலாட்டு, மாலை போன்ற இலக்கிய வடிவங்களை இஸ்லாமியப் புலவர்கள் கையாண்டமை பற்றியும் தமிழ் இலக்கியத்தை வளம்படுத்த அவர்கள் முனாஜாத். படைப்போர், கிஸ்ஸா, மசலா, நாமா முதலிய இலக்கிய வடிவங்களை அறிமுகப்படுத்தியமை பற்றியும் விரிவாக இந்நூலில் ஆராய்ந்துள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 169269).

### 6844

**கவிஞர் ஏ.இக்பால் கவிதைகள் சில- ஒரு மதிப்பீடு.** ஏ.எச்.றஜபுன்னிஸா. தர்காநகர்: படிப்பு வட்டம், 9 செய்கு பாஸி மாவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1987. (தர்காநகர்: எவரெஸ்ட் பிரிண்டர்ஸ், 147 பிரதான வீதி).
xviii, 62 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 18x12.5 சமீ.

கவிஞர் ஏ.இக்பால் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற படைப்பாளி. அறுபதுகளுக்கு முன்னரே கவிதைகள் எழுதத்தொடங்கிய இவர் அறுபதுகளிலும் எழுபதுகளிலும் அதிகமான கவிதைகளை எழுதியிருக்கிறார். எண்பதுகளில் தனது வேகத்தைக் குறைத்துக்கொண்டாலும், அவ்வப்போது நல்ல கலைத்துவம் மிக்க கவிதைகளைத் தந்துள்ளார். ஏ.எச்.றஜபுன்னிஸா, 1983-84 காலப்பகுதியில் அளுத்கம முஸ்லிம் ஆசிரியர் கல்லூரியில் ஆசிரிய தமிழ்கல்வி நெறியைப் பின்பற்றியவர். கவிதை வரலாறு பண்பு, கவிஞரின் கவிதைகளிலுள்ள பொதுத்தன்மைகள், நுணுக்கமான பார்வைகள், கவிஞரின் மனத்தாக்கங்கள், மானிதம், சமயம், காதல் போன்ற கருப்பொருட்கள், கவித்துவ வெற்றி, கவிஞன் காணும் உலகம் ஆகிய தலைப்புகளில் கவிஞர் ஏ.இக்பால் பற்றிய இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**6845**

**காலத்தை வென்ற பெண்கள்: பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஓர் உசாத்துணை நூல்.** மனோன்மணி சண்முகதாஸ். சென்னை 600014: அறிவுப் பதிப்பகம், 142 ஜானி ஜான்கான் ரோடு, ராயப்பேட்டை, 1வது பதிப்பு, நவம்பர் 2006. (சென்னை 600011: சொந்தம் பிரின்டர்ஸ், 64, மதுரை சுவாமி மடம் வீதி).
viii, 182 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 21x14 சமீ., ISBN: 81-88048-62-3.

இந்நூலில் ஏழு கட்டுரைகள் உள்ளன. பழந்தமிழர் வாழ்வியலில் பரத்தமையின் சமூக ஏற்புடைமை (சங்ககாலத்தில் நிலவிய பரத்தையர் பற்றி இக்கட்டுரையில் ஆராய்கின்றார்.), கருங்கண்ணும் செங்கண்ணும் (கண்ணகியையும் மாதவியையும் மதிப்பீடு செய்து ஆடவர் பெண்டிரின் கண்களை நன்கு கண்டறிந்து செயற்படவேண்டும் என்பதனைச் சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டுகின்றது என்று கூறுகிறார்.), காரைக்கால் அம்மையார் புராணம்-ஒரு காலகட்டத்தின் தேவையே (கணவன் பரமதத்தன் அஞ்சி நடுங்கி மனைவி புனிதவதியாரை விட்டு விலகியபின் புனிதவதிக்குத் துறவு மேற்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை எனக்காண்கிறார் சேக்கிழார்), உமறு படைக்கும் கதீஜா (நபிகள் நாயகத்தைவிட கதீஜா மூத்தவராக இருந்தபோதிலும், அக்காலத்தில் நடைபெற்ற புரட்சித்திருமணமாக அதை உமறுப்புலவர் சீறாப்புராணத்தில் உயர்த்திச் சிறப்பிக்கின்றார் என்பதை விளக்கும் கட்டுரை), ஆய்ந்திடில் துயரமெல்லாம் போகும் (பாஞ்சாலி சபதத்தில் பெண்மையின் சிறப்பு, புதுமைப்பெண் பழமையிலிருந்து எவ்வாறு எழுகின்றாள் என்பதை விளக்குகின்றார்), நொறுங்குண்ட இருதயம் (இலங்கையில் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் நிலவிய யாழ்ப்பாணத்துச் சமுதாயத்தில் பெண்களின் நிலை பற்றிப் பேசுவதாக எழுந்த ஒரு நாவல் பற்றிய ஆய்வு இது,), யாழ்ப்பாணத்துத் தாயும் சேயும்(இலங்கைத் தமிழர்கள் சமூகத்தில் பெண்மையை, தாய்மையை, குழந்தை வளர்ப்பில் கையாளும் நடைமுறைகள், மருத்துவம், பராமரிப்பு, கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்கின்றார்) ஆகிய இலக்கியச்சுவை செறிந்த கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 609999).

**6846**

**கைலாசபதி + சில்லையூர் செல்வராசன் (தான்தோன்றிக் கவிராயர்) விமர்சன நோக்கு.** அ.முகமது சமீம். கொழும்பு 6: முற்போக்கு கலை இலக்கியப் பேரவை, 11, இராஜசிங்க வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2007. (கொழும்பு 6: டெக்னோ பிரின்டர்ஸ், 55 Dr. E.A.Cooray Mawathe).
xviii, 134 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x14.5 சமீ.

தனது பார்வையில் பேராசிரியல் கைலாசபதி, சில்லையூர் செல்வராசன் ஆகியோர் பற்றிய மனப்பதிவுகளை இந்நூலில் அ.முகமது சமீம் வழங்கியிருக்கிறார். பிரபல கல்விமானும், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும், மார்க்சியச் சிந்தனையாளரும், கல்வி அமைச்சின் திணைக்களப் பணிப்பாளர்களில் ஒருவருமாகிய நூலாசிரியர் தனது ஆப்த நண்பர் கைலாசபதியிடம் ஆழமாக நட்புப்பாராட்டியவர். அவரைப்பற்றிய விரிவான பதிவுகள் இதில் இடம்பெற்றுள்ளன. தனது மற்றொரு இலக்கிய நண்பர் சில்லையூர் செல்வராசன் பற்றிய உயர்ந்த எண்ணங்களை நேரிய பார்வையுடன் பதிவுசெய்துள்ளார். சில்லையூரின் கவிதைப் பரிமாணங்களில் மூழ்கி எழுந்து தன் எண்ணக் கருவூலங்களை வடித்துள்ளார்.

**6847**

**சிந்தனைத் துளிகள் (கதம்பம்).** கண்டி எம்.ராமச்சந்ரன் (இயற்பெயர்: ஆர்.முத்துக்கருப்பன்). கண்டி: எம்.ராமச்சந்ரன், 2/1 ரிவடேல் ரோட், அனிவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2008. (கண்டி: வெனுஷா. 30, பேராதெனிய வீதி).
iv, 56 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 17.5x12.5 சமீ.

சமூக விழிப்புணர்வினை ஊட்டல் என்று தான் கருதும் சிறு சம்பவங்களை அங்கதச் சுவையுடன் இந்நூலில் தொகுத்திருக்கிறார். மலையகத்தவரான ராமச்சந்திரன் ஈ.வே.ரா.பெரியாரின் சிந்தனைகளை உள்வாங்கிக்கொண்டவர். தனது எழுத்துக்களில் வித்தியாசத்தைப் புகுத்தி எழுதிவருபவர். கை என்ற எழுத்தை கய் என்றும் லை என்ற எழுத்தை லய் என்றும் எழுதும் இவரது படைப்புக்கள் பலராலும் விமர்சனத்துக்குள்ளாகி வந்துள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 625456).

**6848**
**சிந்தனைக் களஞ்சியம்.** சி.கணபதிப்பிள்ளை. யாழ்ப்பாணம்: இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை பாராட்டுவிழாச்சபை வெளியீடு, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1978. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
xx, 252 பக்கம், விலை: ரூபா 12., அளவு: 18x12.5 சமீ.

மேற்படி சபையின் மூன்றாவது வெளியீடாக இந்நூல் பிரசுரமாகியுள்ளது. இதில் பண்டிதமணியின் வள்ளுவர் வாழ்க்கை விளக்கு, தமிழ், வான்மீகிதானோ, வடுவடு நுண்ணயிர், சீவகசிந்தாமணி, இலக்கிய உலகில் கிழக்கும் மேற்கும், நெய்தல், பூர்வமீமாம்சையும், புறத்திணையிற் பாடாணும், நளன் தூது நாடகம், ஆரியமுந் தமிழும், சங்கத் தமிழ், சங்ககாலத்துக்குப் பிறகு, தாடலைப்பட்டார் மணிவாசகனார், கலியுகம் 1ஆந்தேதி, கந்தபுராணம் வைதீக சைவ பொக்கிஷம், காரைக்கால் அம்மையார், எது சமயம், தர்மத்துக்குத் தவணையில்லை, அர்த்தந் தெரிந்தவர்களின் தர்மமே வேறு, தர்மார்த்தத் தம்பதிகள், மக்கட்பண்பு என்னும் தமிழ்ப்பண்பு, தஜருமறையும் நமது நிலையும், திருமுறைக்கு முன், திருமுறைப்பயன், நாவலர் நீதிமான், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை, புலவர் பெருமான் திரு. அ.கு.அவர்கள், அளவெட்டி தந்த அறிவுச் செல்வம், பிராசீனர் நவீனர் வகுத்த சமயங்கள், பாரத தர்மம் ஆகிய 30 இலக்கியக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 337249).

**6849**
**சுந்தாவின் விழுதுகள்.** இ.சி.சுந்தரலிங்கம் (புனைபெயர்: சுந்தா). கரவெட்டி: தேவி இல்லம். வதிரி மேற்கு, 1வது பதிப்பு மாசி 2010. (அல்வாய்: மதுரன் கிராப்பிக்ஸ் அன்ட் ஓ∴ப்செட் பிரின்டர்ஸ்).
vi, (4), 130 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

ஓவியங்கள், ஆய்வுக்கட்டுரைகள், நேர்காணல்கள், செய்திக் கட்டுரைகள் என்பனவற்றின் வாயிலாக ஈழத்தீபன் என்று பரவலாக ஊடகத்துறையில் அறியப்பட்டவர் சுந்தா. இவரது பல்துறைசார்ந்த சுவாரஸ்யமான பலவினக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இதில் சமயம், சமூக நடைமுறைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், ஒடுக்குமுறைக்கு எதிரான காத்திரமான கருத்துக்கள், குழந்தை வளர்ப்பு, வரலாற்றுச் சான்றுகள் என்று பல்பரிமாணங்களில் இவை விரிகின்றன.

**6850**
**சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள்: தொகுதி 1.** சுவாமி விபுலாநந்தர் (மூலம்), சா.இ.கமலநாதன், வ.சிவசுப்பிரமணியம் (பதிப்பாசிரியர்கள்). மட்டக்களப்பு: சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை, 1வது பதிப்பு, மே 1995.(தெகிவளை: உதயம் கிராபிக்ஸ், C/2/3, வைத்தியசாலை வீதி).
viii, 240 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x13.5 சமீ.

மூன்று தொகுதிகளில் வெளியிடப்பெற்ற சுவாமி விபுலானந்தரின் ஆக்கங்களின் திரட்டின் முதலாவது தொகுதி இதுவாகும். அவர் 1914 முதல் 1924 வரை எழுதிய 33 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. இவற்றில் 7 ஆங்கிலக் கட்டுரைகளாகும். மேற்றிசைச் செல்வம், விஞ்ஞான தீபம், தத்தம் நிலையிற்றாம் பெரியவரே, பொருணூற் சிறப்பு, உயிர்வாழ உழைப்பு, வரகுணதேவர் சரித்திரம்,

*மாதவர் நோன்பும் மடவார் கற்பும் மன்னவர் நீதியும், இளமைப் பருவத்தின் பெருவனப்பு, வைதிக நெறி, நம் நாட்டின் பெருமை, வினைப்பயன், அறத்துப் பாலாராய்ச்சி, தமிழ்மொழியின் தற்கால நிலைமையும் தமிழர் கடமையும், ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திராசிரியர் குறிப்பு, விஜயத்துவஜம், பாவலர் விருந்து, பழந்தமிழ் நாட்டுச் சமவாய வாழ்க்கை, மானத சக்தியும் காரிய சித்தியும், மானிடனும் அவன் மனதின் ஆற்றலும், விநாயகக் கடவுள், அழுதபிள்ளை பால் குடிக்கும், சர்வம் சக்திமயம், அருநிதியம் விலைசரசம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டன.*

***6851***

***செ.கணேசலிங்கனின் அண்மைக்கால நாவல்களில் பெண் பாத்திரங்கள்: ஒரு பெண்நிலை நோக்கு.*** *லறீனா ஏ.ஹக். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*
xxii, *106 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18x12 சமீ.,* ISBN: ***955-9429-63-9.***

*செ.கணேசலிங்கனின் வாழ்க்கைப் பின்னணியும் இலக்கியப் பணியும், செ.கணேசலிங்கனும் பெண்ணியமும், செ.கணேசலிங்கனின் நாவல்களில் பெண் பாத்திரங்களினூடே அடையாளப்படுத்தப்படும் பெண்கள் பிரச்சினைகள் ஆகிய மூன்று தலைப்புகளில் இவ்வாய்வு விரிகின்றது. நூலாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை விரிவுரையாளராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 605198).*

***6852***

***செம்புலம்: கலை இலக்கியக் கட்டுரைகள்.*** *செல்லத்துரை சுதர்சன். பேராதனை: செ.சுதர்சன், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).*
*84 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x12.5 சமீ.,* ISBN: ***955-544-0-4.***

*செம்புலம்-மறு வாசிப்பு, பக்திக் கவிதை: மொழி - அழகியல் மொழி - தத்துவமொழி, பாரதியின் அக்கினிக்குஞ்சு: ஒரு சமூகவியற் பார்வை, மறுமலர்ச்சி இதழும் மஹாகவியின் படைப்புகளும், காமன் கூத்தின் கலைப்பயணம் ஆகிய ஐந்து கலை இலக்கியக் கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. இவை முன்னர் இளங்கதிர், இந்து தருமம், ஏகலைவன், மல்லிகை, மத்திய மாகாண சாஹித்திய விழா மலர் ஆகியவற்றில் பிரசுரமானவை. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 612657)*

***6853***

***சொன்னாற்போல 01.*** *கே.எஸ்.சிவகுமாரன். கொழும்பு 06: மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (வத்தளை: பேஜ் அண்ட் இமேஜ், 202/2*B, *ரோயல் பேர்ள் கார்டன்ஸ்).*
vi, *86 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 17.5x12 சமீ.*

*2005இல் இரண்டாவது தொகுதியை (நூல்தேட்டம் பதிவு 3771) முதலில் வெளியிட்டு மூன்றாண்டுகளின் பின்னர் முதலாவது தொகுதி வெளிவருகின்றது. தினக்குரல் பத்திரிகையில் பத்தி எழுத்துக்களாக அறிமுகமான 24 கட்டுரைகள் இங்கு நூலுருவாகியுள்ளன. பன்னாட்டு இலக்கியப் புலமை, எளிமையான ஆற்றொழுக்கு உரைநடை, சுருக்கமான கட்டுரைகள் என்பன இந்நூலின் சிறப்பம்சங்களாகும். மீரா பதிப்பக வெளியீட்டு வரிசையில் 74ஆவது நூலாக வெளிவந்துள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 629173).*

***6854***

***சொன்னாற்போல 03: கே.எஸ்.சிவகுமாரனின் பார்வையில்.*** *கே.எஸ்.சிவகுமாரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600014: பி.வி.ஆர்.ஆப்செட்).*
xvi, *284 பக்கம், விலை: ரூபா 300., இந்திய ரூபா 90., அளவு: 18x12 சமீ.*

இலக்கியச் செல்நெறிகள் என்ற முதலாவது பிரிவில் Post Modernism, பின் நவீனத்துவம்-ஈழத்துத் தமிழ் நூல்கள், செ.கணேசலிங்கம் என்ற ஆய்வறிவாளர், ஒரு மார்க்சியவாதி அழகியலை நோக்கும் பாங்கு, மேலை இலக்கியம்/ மெய்ப்பொருள், 21ஆம் நூற்றாண்டுப் புலமையும் ஆய்வறிவும் இணைந்த உலகத் தமிழன், மற்றுமோர் இலக்கிய வரலாற்று நூல், ஆய்வுகளுக்கிடையே, பி.எம்.புன்னியாமீனின் தேடல்கள் ஆகிய ஒன்பது விமர்சனங்களும், ஈழத்துக் கவிதை என்ற இரண்டாவது பிரிவில் ஈழத்துக் கவிஞர்களும் புலவர்களும், நான்கு இஸ்லாமியர்களின் கவிதை நூல்கள், திருக்கோணமலையிலிருந்து ஒரு பெண் பாவலர், சடகோபனின் தாயக நாட்டம் (Nostalgia), அடுக்கடுக்காய் நிகழ்ச்சிகள், செவிநுகர் இன்பம், நீர்வையின் கதைகள் பற்றிய ஆய்வரங்கு ஆகிய ஏழு கட்டுரைகளுமாக மொத்தம் 16 படைப்புக்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 629176).

**6855**

**தமிழ் இலக்கிய அறிமுகம்.** அன்புமணி. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 15: எம்.கே.எண்டர்பிரைசஸ்).
vi, 134 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 18x12 சமீ.

ஈழநாதம் பத்திரிகையில் 2005இல் தொடர்ந்து வெளிவந்த 21 கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். சங்க நூல்கள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள், தொல்காப்பியச் சிறப்பு, பல்லவர்கால, சோழர்கால, நாயக்கர்கால இலக்கியங்கள், நாயக்கர்கால பிரபந்த இலக்கியங்கள், தமிழில் இலக்கண நூல்கள், நாம் இழந்துவிட்ட பொக்கிஷங்கள், காப்பியங்கள், காவியங்கள், சமய இலக்கியங்கள், சோழர்காலத்தின் சில புலவர்கள், உரையாசிரியர்கள், சங்க இலக்கிய, சங்க மருவியகால இலக்கியப் பாடல்கள், சமய இலக்கியப் பாடல்கள், தமிழன் கண்ட தத்துவம் ஆகிய விடயங்களில் இக்கட்டுரைகள் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளன.

**6856**

**தமிழ் இலக்கியம்: பார்வையும் பதிவும்.** துரை மனோகரன். கண்டி: நியு கலைவாணி புத்தக நிலையம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1993. (கண்டி: செனித் அச்சகம்).
v, 150 பக்கம், விலை: ரூபா 95., அளவு: 21.5x14.5 சமீ.

பழந்தமிழ்ப் புலமையும் நவீன இலக்கிய நோக்கும், தமிழ் இலக்கியத்தில் பொது மக்கள் பற்றிய உணர்வு: பள்ள இலக்கிய அடிப்படையில் ஒரு நோக்கு, ஆக்க இலக்கிய வளர்ச்சியும் தமிழ் உரைநடையின் பயன்பாடும், சுவாமி விபுலானந்தரின் கலை-இலக்கியப் பணிகள், இருபெரும் பேராசிரியர்கள்: பேராசிரியர்கள் வையாபுரிப்பிள்ளை, கைலாசபதி பற்றிய ஒரு நோக்கு, இலக்கியத்தை விளங்கிக்கொள்ளலும், மதிப்பிடுதலும், இலக்கியத் திறனாய்வு: சில அறிமுகக் குறிப்புகள், இலங்கைப் பல்கலைக்கழகங்களும், இலக்கியத் திறனாய்வும், தமிழ் நாவல்களில் உத்திமுறைகள், மலையகத் தமிழ்க்கவிதை, மலையக வரலாற்றில் ஒரு புதிய பங்களிப்பு, ஒரு புதிய தேடல், திரைப்படமும் நாடக வடிவங்களும், இலக்கியமும் இறைபுகழும், மானுடம் பாடாத மகளிர், அப்பரின் ஆளுமையும் அருள்நெறியும் ஆகிய தலைப்புகளில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளரான துரை.மனோகரனின் இரண்டாவது நூல். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 450775).

**6857**

**தமிழ் மறை விருந்து.** கா.பொ.இரத்தினம். வேலணை: தமிழ்மறைக் கழகம், 1வது பதிப்பு, மே 1980. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 213 காங்கேசன்துறை வீதி).
(8), 120 பக்கம், விலை: ரூபா 5.00, அளவு: 18x12.5 சமீ.

தமிழ்மறையின் தனிமாண்பு, தமிழ்மறை, புரட்சிக் களஞ்சியம், நாடும் நல்லாட்சியும், வெற்றிக்கு வழி, மலரினும் மெல்லிது, நிறை விளக்கு, பெற்றதாய், அளவைகளும் அடையாளங்களும், தற்கொலை, பொருளாதாரம், உன்னை நீ காதலிக்கின்றாயா, அறப்போரும் தமிழ்மறையும், திருக்குறளை விளக்கும் நூல்கள், திருவள்ளுவர் தொடர் ஆண்டு, தலைமை உரை ஆகிய 16 தலைப்புகளில் அமைந்த கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தமிழ்மறைக்கழகம் கா.பொ.இரத்தினம்

*அவர்களால் 23.11.1952இல் நிறுவப்பட்டது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19049).*

***6858***

***தமிழியல் ஆய்வுக் கட்டுரைகள்.*** *அ.சண்முகதாஸ். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம்,* B3-G3, *ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம்,* B3-G3, *ரம்யா பிளேஸ்). (6), 186 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-659-220-7.*

*இப்படியும் பிரிக்கலாமா? புறநானூறு காட்டும் தமிழர் சால்பு, பழந்தமிழர் வாழ்வியலில் நிலம், சங்க இலக்கியப் பாடல் மரபு, திருக்குறளில் சைவம், பக்தி இலக்கியங்கள் புலப்படுத்தும் நல்லிணக்கம், கம்பனின் சந்தமும் சந்தர்ப்பமும், கற்பு-சங்கச் சான்றோர் முதல் பாரதி வரை, கண்ணன் பாட்டில் அணிநயம், கிறிஸ்தவத் தமிழ் இலக்கிய வளர்ச்சி, இலங்கைத் தமிழ் இலக்கியம்: யாழ்ப்பாண மன்னர் காலம் இலக்கியமும் செந்நெறி மரபும், இலங்கைத் தமிழ்ப் புலமை மரபில் முதல் தமிழ்ப் பெண் புலவர், ஈழத்து நவீன தமிழ் இலக்கியம், விபுலானந்த அடிகளாரும் இலக்கியமும் ஆகிய 14 தமிழியல் ஆய்வுக் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. பேராசிரியர் அ.சண்முகதாஸ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வாழ்நாட் பேராசிரியராவார்.*

***6859***

***தமிழில் வரலாற்று நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்.*** *க.அருணாசலம். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*
xviii, *470 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5*x*14 சமீ.,* ISBN: *955-9429-71-*x.

*தமிழில் 1960களின் இறுதிவரை எழுதப்பட்ட வரலாற்று நாவல்களைப் பற்றிய ஆய்வுநூல் இதுவாகும். வரலாற்று நாவலும் தமிழில் அதன் தோற்றமும், தொடக்ககால வரலாற்று நாவல்கள், தமிழில் வரலாற்று நாவலின் வளர்ச்சி, மதிப்பீடு ஆகிய நான்கு இயல்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பின்னிணைப்பாக தமிழ் வரலாற்று நாவல்கள், சமகால வரலாற்று நாவல்கள், இவ்வாய்வுக்குதவிய தமிழ் வரலாற்றுச் சிறுகதைகளும் வரலாற்று நாடகங்களும் ஆகிய மூன்று பட்டியல்கள் தரப்பட்டுள்ளன. கலாநிதி க.அருணாசலத்தின் கலாநிதிப் பட்டத்திற்காக 1978இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு இதுவாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 613664).*

***6860***

***தமிழின் கவிதையியல்.*** *கார்த்திகேசு சிவத்தம்பி. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*
xiv, *234 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-659-068-4.*

*இலக்கிய நிலைப்பட்ட தமிழ்க் கவிதையின் ஆக்கம், அமைப்பு, கருத்துநிலை அடிப்படைகள், பற்றிய வலுவான தமிழாய்வு இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் இலக்கிய நிலைப்பட்ட தமிழ்ப்பா கவிதையின் இடையறாத பாய்வு பற்றிய ஒரு பார்வையினை இந்நூல் தருகின்றது. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழிலக்கியத் துறையில் 2004இல் விரிவுரைத் தொடராக வழங்கப்பட்டதன் நூல் வடிவம் இதுவாகும். சங்க இலக்கியங்கள், அற இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காப்பிய இலக்கியங்கள், அரசவை இலக்கியங்கள், கோயில் இலக்கியங்கள், சமூக நோக்கு இலக்கியங்கள், எனப் பேரலைகள் பல மேற்கிளம்பிய தமிழ்க் கவிதையின் அடிப்படைகளை இனங்கண்டுகொள்வதற்கு உதவும் வகையில் இந்நூலில் காலநிலைப்பட்ட தமிழ்க் கவிதையோட்டத்தின் பருநிலைப் பார்வை தெளிவாக்கப்படுகின்றது. 1932இல் பிறந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1978-1996 காலப்பகுதியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றித் தற்போது அதே பல்கலைக்கழகத்தில் தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியராகவுள்ளார்.*

***6861***

**தமிழினைத் தமிழன் போற்றின்.** *சி.எஸ்.எஸ்.சோமசுந்தரம். சென்னை 600020: உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகப் பதிப்பகம், 1/10 புஷ்பா அப்பார்ட்மென்ட்ஸ், முதலாவது தெரு, பரமேஸ்வரி நகர், அடையாறு, 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (சென்னை 20: உலகத் தமிழர் அச்சகம், த.பெ.எண் 2062).*
*(20), 644 பக்கம், விலை: இந்திய ரூபா 250., அளவு: 21.5x13.5 சமீ.*

*ஐக்கிய நாடுகள் சபையில் ஈழத்தமிழர் பிரச்சினையை எடுத்துரைத்த கிருஷ்ணா வைகுந்தவாசன் அவர்களுக்கு காணிக்கையாக்கியுள்ள இந்நூலில் சி.எஸ்.எஸ்.சோமசுந்தரம் அவர்கள் எழுதிய 36 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அனைத்தும் உலக அரங்கில் தமிழின் புகழ்பாடுவதாகவும், தமிழனின் வாரலாற்றில் பொதிந்துள்ள புகழையும் பெருமைகளையும் அடுத்த தலைமுறையினருக்கு இனம்காட்டுவதாகவும் அமைந்துள்ளன.*

***6862***
**தென்னிலங்கையில் முஸ்லிம் இலக்கிய வளர்ச்சி.** *எம்.எச்.எம்.ஷம்ஸ். திக்குவல்லை: இனிமை விஷேட வெளியீடு, ஷீனா ஹவுஸ், யோனகபுர, 1வது பதிப்பு, ஜுலை 1987. (கொழும்பு 6: பஹன் பஹருவ, 59 ஸ்ரீ விஜய வீதி, வெள்ளவத்தை).*
*32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x15 சமீ.*

*தென்னிலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் பற்றிய ஆய்வு இதுவாகும். திக்குவல்லை ஸப்வானை ஆசிரியராகக் கொண்டு திக்குவல்லை, யோகனபுரவிலிருந்து* ***இனிமை*** *என்ற பெயரில் சில காலங்கள் வெளிவந்த கலை இலக்கியச் சஞ்சிகையின் சிறப்பு வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது. இவ்வாய்வு ஏற்கெனவே ஏ.எல்.எம்.ஸும்ரியை இதழாசிரியராகக் கொண்டு வெளிவந்த* ***தென்னமுதம்*** *ஆண்டு மலரில் பிரசுரமானது. விரிந்த வாசகர் பரப்பினை நாடி இவ்வாய்வு தனிநூலாக வெளியிடப்பட்டுள்ளது.*

***6863***
**தெறிப்பு.** *வண்ணையூரான் (இயற்பெயர்: சிவசுப்பிரமணியம் சிற்சபேசன்). யாழ்ப்பாணம்: சபேசன் பதிப்பகம், 17/2, அய்யனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2007. (சென்னை 600094: உலகத் தமிழர் பதிப்பகம், 4, சௌராட்டிரா நகர், ஏழாம் தெரு, சூளைமேடு).*
*216 பக்கம், விலை: நியுசிலாந்து டொலர் 10., அளவு: 21.5x14 சமீ.*

*நியுசிலாந்து நாட்டின் வருமானவரித்துறை அதிகாரியாகப் பணியாற்றிய இந்நூலாசிரியர் தான் அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரில் பணியாற்றியபோது வானொலி, சஞ்சிகைகள் போன்றவற்றில் எழுதிய கருத்துக்களின் தொகுப்பாக 65 கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. அரசியல், சமூகவியல், புலம்பெயர் வாழ்வியல் ஆகியவை இக்கட்டுரைகளின் கருத்துக்களாக அமைந்துள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் 3 பக்கங்களுக்குமேற்படாதவகையில் அமைந்துள்ளன.*

***6864***
**தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும்.** *ஆ.வேலுப்பிள்ளை. யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, மார்ச் 1986. (யாழ்ப்பாணம்: கொமேர்ஷியல் பிரின்டர்ஸ், 70, பிரதான வீதி).*
*(4), 28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புலமைசார் நிகழ்ச்சிகளுள் ஒன்றாக இடம்பெறும் தொடக்கப் பேருரையின் நூல்வடிவம் இது. தொடக்க கால ஈழத்து இலக்கியங்கள், சோதிட வைத்திய நூல்கள், 14ம் நூற்றாண்டு வரையிலான சாசனச் சான்றுகள், ஈழத்துப் பூதந்தேவனார் ஒருவரா?, பூதந்தேவனாரின் சொந்த இடம் எது?, பூதந்தேவனாரின் செய்யுள்களின் காலமுறை, பூதந்தேவனார் சிறப்பு ஆகிய தலைப்புகளின்கீழ் இவ்வாய்வுரை விரிகின்றது. ஈற்றில் வுயஅடையெனர யனெ ளுசை டுயமெய என்ற கட்டுரையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் தென் புலோலியூரைச் சேர்ந்த பேராசிரியர் வேலுப்பிள்ளை தன் ஆரம்பக் கல்வியை பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றில் பயின்று 1955இல் இலங்கைப்*

*பல்கலைக்கழகத்தில் உயர்கல்விபெற நுழைந்தார். 1959இல் தமிழ் சிறப்புப் பட்டத்தையும், 1962இல் கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றார்.*

**6865**

**நதிப் பாதையின் மேலே.** வி.கௌரிபாலன். *மட்டக்களப்பு: நனவிலி, 200 ஏ, விபுலாநந்தர் வீதி, குருக்கள் மடம், 1வது பதிப்பு, ஜனவரி 2010. (திருக்கோணமலை: அஸ்ரா பிரின்டர்ஸ், 43, திருஞானசம்பந்தர் வீதி).*
*56 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18.5x12.5 சமீ.*

*சரிநிகர், சுட்டும்விழி, விளக்கு, ஞானம், தினக்கதிர், பெண் ஆகிய சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட ஒன்பது இலக்கியக்கட்டுரைகள். பின் காலனித்துவ இயங்கியல் பரிணாமங்கள் (சுட்டும் விழி 2003), புரொய்லர் கோழி வளர்ப்பு முறையும் நவ காலனித்துவ கல்வி முறையும் (சுட்டும் விழி 2003), நினைவினுள் அழிதல் (விளக்கு 2002), நதிப்பாதையின் மேலே (ஞானம் 2001), மந்திரச் சேவல்களும் விலங்குகளும் (தினக்கதிர் 2002), சிறகு முளைத்த மணல்கால் குதிரை (பெண் தொகுதி 3 இலக்கம் 3), சார்பு மனம் - கற்பு-லட்சுமிகளின் இருப்பு (சரிநிகர்), வேட்டைப் பல் இடுக்கில் கபாலபதி (கபாலபதி-நூல் வெளியீட்டு விழா, 2000), மனிதம் மையப்படுத்தும் எண்ணக்கருக்கள் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.*

**6866**

**நவநீத கிருஷ்ண பாரதியார் இயற்றிய உலகியல் விளக்கம்.** நவநீதகிருஷ்ண பாரதியார் *(மூலம்), ச.பூபாலபிள்ளை (உரையாசிரியர்), எஸ்.மயில்வாகனம் (பதிப்பாசிரியர்). இலங்கை: எஸ்.மயில்வாகனம் (சுவாமி விபுலானந்தர்), 1வது பதிப்பு, 1922. (யாழ்ப்பாணம்:* Clough Printing Works*).*
*(4), 100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.*

*தமிழகத்தில் கிருஷ்ணாபுரம் என்னும் பேரூரில் பிறந்த நவநீதகிருஷ்ண பாரதியார் இயற்றிய பாடல்கள் இவை. சங்கநூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு போன்றவற்றை நன்கு ஆராய்ந்து புலமையினைப்பெற்று இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32514).*

**6867**

**நாற்றுமேடை: பத்திரிகை எழுத்துக்கள்.** கந்தையா ஸ்ரீகணேசன் *(புனைபெயர்: பேராயிரவர்). வவுனியா: வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், 1வது பதிப்பு, டிசம்பர் 2008. (வவுனியா: மல்டி விஷன் அச்சுக்கலையகம், இல. 77, முதலாம் குறுக்குத் தெரு).*
xviii*, 92 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17x12 சமீ.,* ISBN*: 978-955-97524-5-5.*

*நூலாசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தின் ஆங்கில மொழிப் போதனாபீடத்தின் தலைவர். வவுனியாவிலிருந்து வெளிவந்த செந்தணல் என்ற பத்திரிகையில் 12.7.2003 முதல் 12.6.2004 வரை எழுதிய 18 பத்தியெழுத்துக்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. கட்டுரைகள் சமகால நிகழ்வுகளின் அடிப்படையில் அமைந்துள்ளன. அவற்றில் சமூக மேம்பாட்டின் சிந்தனைக் கருவூலங்கள் இடம்பெற்றிருக்கின்றன. சமயம், இலக்கியம், சினிமா, நாடகக் கலை, கலை விழாக்கள், தமிழ்த் திறன் போட்டிகள், ஒற்றுமையின்மை, மாறுகின்ற காலத்திற்கேற்ப அமையவேண்டிய வாழ்க்கையின் பரிமாணம் என்று பல்வேறு அம்சங்களை இக்கட்டுரைகள் பேசுகின்றன. வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 20ஆவது வெளியீடு.*

**6868**

**படகோட்டியின் பாடல்.** *காசி ஆனந்தன். கொழும்பு 3: க.பத்மநாதன், ரகுநாதன் பதிப்பகம், 303 காலி வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 1972. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).*
*80 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12 சமீ.*

*1962ஆம் ஆண்டு தமிழகத்தில் ஈரோடு சின்னச்சாமி அவர்களை ஆசிரியராய்க் கொண்டு வெளிவந்த சமநீதி இதழில் ஈழத்துக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் படகோட்டியின் பாடல் எனும்*

தலைப்பில் எழுதிய தத்துவத் தமிழ்த் தொடர் கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 300830).

**6869**

**பண்டைய கிரேக்க முதன்மையாளர்கள்.** கே.எஸ்.சிவகுமாரன். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 291/6, 5/3 A, Edward Avenue, 1வது பதிப்பு, பெப்ரவரி 2009. (வத்தளை: பேஜ் அன்ட் இமேஜ், 202/2B, ரோயல் பேர்ள் கார்டின்ஸ்).
viii, 40 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 17.5x12.5 சமீ.

1980இன் முற்பகுதிகளில் வீரகேசரியில் சாளரக் காட்சிகள் என்ற பத்தியில் எழுதப்பட்ட எட்டுக் கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். அவற்றுடன் தினகரன் வாரமஞ்சரியில் ஈஸ்வரபுத்ரா என்ற பெயரில் எழுதிய ஒன்றும், மல்லிகை இதழில் எழுதிய மற்றொன்றுமாக மொத்தம் 10 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பண்டைய கிரேக்கர் பெற்ற மதிப்பு, கிரேக்க பௌராணிக உலகம், கிரேக்க புராணங்களிலும் இந்துமதக் கடவுளர் போலப் பலர், பண்டோராவின் பெட்டி, கிரேக்க கடவுளரும் காவியங்களும், ஹெரோடோட்டஸ்: முதலாவது வரலாற்றாசிரியன், தூஸிடிடெஸ்: அறிவியல் சார்ந்த வரலாற்றாசிரியன், ஈடிப்பஸ் கொம்ப்ளக்ஸ், ஹெஸியோடின் வேலைகளும் நாட்களும், கிரெக்கரின் வழியில் துன்பீற்று நாடகம் ஆகிய 10 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

**6870**

**பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள்.** அன்புமணி. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 15: எம்.கே.எண்டர்பிரைசஸ்).
136 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 18x12 சமீ.

சங்க காலத்திற்குப் பின்னர் வெளிவந்த நூல்களை பதினெண்கீழ்கணக்கு நூல்கள் என்று குறிப்பிடுவர். கி.பி.600 -850 காலகட்டத்தில் இவை உருவாகியிருக்கலாம் என்று அறியப்படுகின்றது. இதில் 18 நூல்கள் அடங்குகின்றன. இவை தமிழரின் அறவாழ்வு பற்றிப் பேசுகின்றன. அன்புமணி, இந்நூலில் பதினெண்கீழ்கணக்கு நூல்கள் அனைத்தையும் பற்றிய அறிமுகக் குறிப்புகளைத் தந்திருக்கிறார். இது முன்னர் 2006இல் தொடர்கட்டுரை உருவில் ஈழநாதம் வாரமலரில் வெளிவந்திருந்தன.

**6871**

**பனை மரம்.** க.சோமசுந்தரப் புலவர். யாழ்ப்பாணம்: இலங்கை விளைபொருள் விற்பனையாளர் சங்கம் (The Ceylon Produce marketing Agency), 1வது பதிப்பு, டிசம்பர் 1937. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
8 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x12.5 சமீ.

Poem relating to Palmyrah Palm என்ற ஆங்கிலத்தலைப்புடன் வெளியாகியுள்ள கவிதைகள் இவை. பனைமரம் பற்றிய 47 பாடல்கள் இதில் அடங்குகின்றன. காப்பு, பனைப்பெயர்கள், பனை உண்டாக்குதல், பயன்கள், கங்குமட்டை, ஓலை, ஓலைக்கருகு, மட்டை, நார், ஈர்க்கு, ஓலைச்சட்டம், ஓலைச்சார்வு, ஓலைப்பொல்லு, குரத்து, பாளைவாருதல், குரும்பை, நுங்கு, சார்வாய், பனம்பழம், பனாட்டு, வேறுபயன், ஊமல், கருப்பநீர், கள்ளு, பனையைப் பேணல், வாழ்த்து ஆகிய தலைப்புகளில் இப்பாடல்கள் அமைந்துள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37493).

**6872**

**பார்வையின் பதிவுகள்.** அந்தனி ஜீவா. கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்த, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (வெல்லம்பிட்டிய: சதுர பிரின்டர்ஸ், இல. 69, குமாரதாச பிளேஸ்).
128 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-30-2814-3.

கொழும்பு தினக்குரல் பத்திரிகையில் அந்தனி ஜீவா தொடர்ந்து எழுதிவந்த **பார்வையின் பதிவுகள்** என்ற பத்தி எழுத்துக்களில் தேர்ந்த 40 படைப்புக்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. அனைத்தும் அரிய பல இலக்கியத் தகவல்களைத் தேடி எடுத்து வாசகர்களுக்கு சுவையாக வழங்குவதாக அமைந்துள்ளன. நூலகர் என்.செல்வராஜாவின் நூல்தேட்டம் என்ற பதினைந்தாவது கட்டுரை நூல்தேட்டம் பதிப்புப் பணிபற்றிய தகவல்களை வாசகர்களுக்கு வழங்குகின்றது. பிரேமிள், பிரேம்ஜி, இளஞ்செழியன், அ.ந.கந்தசாமி, பேராசிரியர் கைலாசபதி, கம்பதாசன், வானொலி சுந்தா என்று பல்வேறு இலக்கியவாதிகளையும், ஈழத்து-தமிழக தமிழ் நாடக உலகையும் பற்றிய பல அரிய தகவல்கள் இந்நூலில் பொதிந்துள்ளன. சமகாலத்தில் இதே பத்தி எழுத்துக்களில் தேர்ந்த 31 படைப்புக்களை உள்ளடக்கியதாக தமிழகத்தின் ஷோடீர் நிறுவனத்தின்மூலம் **அமைதி கோர்ட் நடந்துகொண்டிருக்கிறது** என்ற தலைப்பில் மேலும் ஒரு நூல் வெளியிடப்பட்டுள்ளது. இதிலுள்ள பல கட்டுரைகள் அதிலும் இடம்பெற்றுள்ளன.

**6873**

**பாரதி பன்முகப் பார்வை.** க.தணிகாசலம், சோ.தேவராஜா (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, வசந்தம் புத்தக நிலையம், இல.S44, 3வது மாடி, CCSM Complex, 1வது பதிப்பு, 1984. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், 213 காங்கேசன்துறை வீதி).
viii, 212 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 21.5x14 சமீ.

1982இல் பாரதி நூற்றாண்டு நினைவாக தேசிய கலை இலக்கியப் பேரவை யாழ்ப்பாணத்தில் நடத்திய தொடர் ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு, பேராசிரியர் கைலாசபதியின் வழிகாட்டலில் அவரது தலைமையில் இடம்பெற்ற பாரதி ஆய்வரங்கில் 10 கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. இ.முருகையன், கே.செந்திவேல், அ.ஜெயரட்ணம், மௌ.சித்திரலேகா, மா.சின்னத்தம்பி, ந.இரவீந்திரன், சி.மௌனகுரு, சிவ இராஜேந்திரன். எம்.ஏ.நுஃமான். சி.தில்லைநாதன் ஆகிய ஈழத்து ஆய்வாளர்கள் பாரதியைப் பன்முகப்பட்ட நோக்கில் அங்கு ஆய்வுசெய்தனர். இந்நூலே தே.க.இ.பேரவையின் முதல்நூலாகவும் அமைகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 386462).

**6874**

**பாரதி மணி மலர்.** நயமணி கல்கிதாசன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 10: பாரதி இளைஞர் சங்கம், 43 மாளிகாகந்தை வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1957. (அச்சக விபரம் தரப்படவில்லை).
(10), 92 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 21x13.5 சமீ.

பாரதியார் தொடர்பான பல கட்டுரைகளையும் கவிதைகளையும் உள்ளடக்கிய தொகுப்பாக இம்மலர் அமைந்துள்ளது. பாரதியார் (சிவானந்த சரஸ்வதி), பாரதியார் பாடல்கள் (இராசமாணிக்கனார்), பொங்கி எழுந்த கவிதை (கா.பொ.இரத்தினம்), காலத்தை வென்ற கவிதை (நா.பார்த்தசாரதி), பாரதியும் தமிழும் (க.கணபதிப்பிள்ளை), அமரகவி பாரதியார் (ஆ.முத்துசிவன்), பாரதி என் தோழன் (சிங்காரவேலனார்), சுற்றி நில்லாதே போ (குலசை வீரசிவம்), காதலெனும் கவிதைப் புரட்சி (திருலோகசீதாராம்), புதுயுக கவியரசு (பரலி சு.நெல்லையப்பர்), பாரதியார் பிறந்தார் (கி.வா.ஜகந்நாதன்), பாரதி காட்டிய பாதை (கு.பா.வெங்கடாசலம்), கவிக்குயில் பாரதியார் (க.இராமசந்திரா), பாரதி சொன்ன சமுதாயம் (கலைதாசன்), வாழ்க பாரதி நாமம் (அ.சிதம்பரநாத பாவலர்), உனக்கு ஈடுண்டோ (பரமஹம்சதாசன்), பாரதி காட்டிய ஞான ஒளி (ச.கார்த்திகேசு), பாரதியின் கவித்தொண்டு (டி.பி.இருதயராசு), பாரதியாரும் மாணவர்களும் (கே.வி.சண்முகசுந்தரராசன்), பாரதியின் நீதிமுரசு (வி.கே.ஆறுமுகம்), அமரகவி பாரதியார் (கா.சிவகுருநாதன்), தேனூறும் பாடல்கள் (கு.ச.வேலாயுதம், பாரதி பரம்பரை (எம்.பி.பாரதி), இன்றுபோய் நாளைவா (எஸ்.டி.சிவநாயகம்) ஆகிய தலைப்புகளில் ஈழத்து-தமிழக இலக்கியப் படைப்புக்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 117690).

**6875**

**பாரதியின் கன்னிக் குயிலின் இன்னிசைப்பாட்டு.** மனோன்மணி சண்முகதாஸ். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361,1/2 டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).

viii, *64 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-659-157-6.*

*பாரதியின் சுயசரிதை, கன்னிக்குயிலின் இன்னிசைப் பாட்டு, பாரதியார் கவிதைகளில் பெண்மை: மரபுநிலையும் புரட்சிநிலையும் ஆகிய மூன்று கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் சிறப்பு இளங்கலைமாணிப் பட்டத்தினையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி, கலாநிதிப் பட்டங்களையும் பெற்றவர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ். ஜப்பானில் உள்ள ஹக்சுயின் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர். பின்னாளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றியவர்.*

**6876**

**பிரேம்ஜி கட்டுரைகள்.** *பிரேம்ஜி (இயற்பெயர்: என்.ஞானசுந்தரன்). கனடா* M9N 1RO: *நான்காவது பரிமாணம் வெளியீடு, 1565 ஜேன் வீதி, த.பெ. எண் 34515, டொரொன்டோ, ஒன்ராரியோ, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B*, புளூமெண்டால் வீதி).*
xvi, *292 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x13 சமீ.*

*இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இலக்கியச் செயற்பாடுகளிலும், பத்திரிகை ஊடகத் துறைப் பணிகளிலும் அரசியல்தள நடவடிக்கைகளிலும் ஆரம்பம் முதல் தீவிரமாக ஈடுபட்டவர் ஞானா அல்லது பிரேம்ஜி எனப்படும் என்.ஞானசுந்தரன். தற்போது கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் இவர் எழுதிய கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கடந்த அரை நூற்றாண்டுக்கால ஈழத்துக் கலை, இலக்கியம், சமூகம், அரசியல், சர்வதேசியம், தேசியம், தேசிய இனம் பற்றியவற்றின் கருதுகோள்களையும் நிலைப்பாடுகளையும் இக்கட்டுரைகள் திட்டவட்டமாக வெளிப்படுத்துகின்றன. இக்காலப்பகுதியின் முற்போக்கு இலக்கிய இயக்கத்தினதும், முற்போக்கு அரசியல்-சமூக இயக்கத்தினதும் வரலாறுபூர்வமான நிலைப்பாடுகளை ஆவணப்படுத்தவும் இந்நூல் முனைகின்றது.*

**6877**

**பெண்ணே நீ பெரியவள் தான்: நகைச்சுவைக் கட்டுரைகள்.** *பொ.சண்முகநாதன். யாழ்ப்பாணம்: தமயந்தி பதிப்பகம், அச்சுவேலி, 1வது பதிப்பு, ஆனி 1971. (அச்சுவேலி: சிவகுமாரன் அச்சகம்).*
*76 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 18.5x12.5 சமீ.*

*யாழ்ப்பாண மாவட்டத்தின் சங்குவேலியைச் சேர்ந்த நூலாசிரியரின் 12 நகைச்சுவைக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. குடும்பாளுமன்றம், பிழைப்புக்குச் சில வழிகள், பெண்ணே நீ பெரியவள்தான், புலவர் பொன்னம்பலம் பேசுகின்றார், கதைவாணன் கதை எழுதுகிறான், இதோ ஒரு பத்திரிகை, தொலைபேசி ஒரு தொல்லை, கல்வி அமைச்சரின் கவனத்திற்கு, இப்படி எத்தனை ஐந்து சதங்கள், நாற்பது நிமிட நாடகம், திருமணப்பரிசு, பக்கத்துவீட்டு றேடியோ ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 280610).*

**6878**

**மட்டக்களப்பு உழவர் மாட்சிக் கலம்பகம்: பிரபந்த இலக்கியம்.** *ஈழத்துப் பூராடனார் (இயற்பெயர்: க.தா.செல்வராசகோபால்). எட்வேட் இதயச்சந்திரா (பதிப்பாசிரியர்). கனடா: நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், 1வது பதிப்பு, ஜனவரி 1992. (கனடா: றிப்ளக்ஸ் அச்சகம், 24* Daven Avenue, Mississauga, Ontario*).*
xxx, *96 பக்கம், விலை: கனேடிய டொலர் 8., அளவு: 20.5x14 சமீ.*

*109 செய்யுள்களைக் கொண்ட இந்நூல் மட்டக்களப்பு கிராம மக்களின் வாழ்வில் அன்றாடம் நிகழும் அகத்திணைசார்ந்த சம்பவங்களையும் காலத்திற்கு ஏற்றதாக அகத்திணை மாற்றங்களையும் அடிப்படையாகக் கொண்டு கலம்பகமாகப் படைக்கப்பட்டுள்ளது. இந்நூல் அகத்திணை சார்ந்த இன்பியல் நூலாக இருந்தபோதிலும் ஆங்காங்குள்ள புத்திமதிகள் இளைய சந்ததியினருக்கு அறிவூட்டுவதாகவும் அமைகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 140056).*

**6879**
**மரபுக் கவிதை எழுத...** கண்டி எம்.ராமச்சந்ரன் (இயற்பெயர்: ஆர்.முத்துக்கருப்பன்). கண்டி: எம்.ராமச்சந்ரன், 2/1 ரிவடேல் ரோட், அனிவத்தை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2003. (கண்டி: Asiri Printers, 14, Katukella Lake Road).
x, 50 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ., ISBN: 955-984-38-0-X.

மரபுக்கவிதையில் எழுத்து, அசை, சீர், தளை, வரி, அடி, தொடை ஆகிய அம்சங்கள் பற்றி இந்நூல் விபரிக்கின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 574149).

**6880**
**மலரும் மணமும்.** ஆ.கந்தையா. இலங்கை: ஆ.கந்தையா, தலைவர், தமிழ் இந்துப் பண்பாட்டுத் துறை, களனிப் பல்கலைக்கழகம், 2வது பதிப்பு, மே 1980, 1வது பதிப்பு, ஜுன் 1962. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், 213, காங்கேசன்துறை வீதி).
vii, 128 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 18x12.5 சமீ.

தமிழறிவை விருத்திசெய்யும் வகையில் அமைந்த 13 இலக்கியக் கட்டுரைகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. மயக்குறு மக்கள், இன்பமும் துன்பமும், மலரும் மணமும், திருவெம்பாவை, பக்திக் கண்கள், சொல்லாட்சி, கவிதைத் திறன், கற்பனை வளன், இரண்டு காட்சிகள், கம்பன் கவிநயம், கவிதை உள்ளம், சோகச்சுவை, பெருமையும் சிறுமையும் ஆகிய தலைப்புகளில் இவ்விலக்கியக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. இந்நூலின் முதற்பதிப்பு சென்னை பாரிநிலைய வெளியீடாக தமிழகத்தில் வெளிவந்தது. சென்னை வேங்கடேஸ்வரப் பல்கலைக்கழகம் பல்கலைக்கழக புகுமுக வகுப்பிற்கான பாடநூலாக இதைத் தேர்வுசெய்திருந்தது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 422135).

**6881**
**மலையகம் தேசியம் சர்வதேசம்: கலை இலக்கிய சமூகவியல் நோக்கு.** லெனின் மதிவானம். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ்).
xxvi, 221 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-233-7.

மலையகத்தில் ஹட்டனைச் சேர்ந்த லெனின் மதிவானம், பெருந்தோட்டத்துறைசார்ந்த மக்களோடு நெருங்கிய உறவைப் பேணும் உணர்வுடன் கலை இலக்கியச் செயற்பாட்டை முன்னெடுப்பவராக இன்றளவில் இனம்காணப்பட்டவர். மலையக இலக்கியம், வாசிப்புத் தொடர்பான கருத்தாடல், நூல் விமர்சனங்கள், படைப்பாளிகளின் இலக்கிய ஆளுமைகள் பற்றிய அவதானிப்பகள், அஞ்சலிகள், என இவர் எழுதிப் பல்வேறு அச்சு, இணைய ஊடகங்களில் பிரசுரமான 15 இலக்கியக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**6882**
**மனிதன் மாமனிதனாக.** எஸ்.ஐ.எம்.அப்துல் ஜப்பார். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆ.்.ப்செட்).
xiv, 162 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 18x12.5 சமீ.

மனிதன், ஆசை, நிலையும் நினைப்பும், வெற்றி அதிர்ஷ்டம், நிம்மதி, நம்பிக்கை, பணம், முடியாட்சி அரசியல், குடியாட்சி, ஜனநாயக அரசியல், சட்டம், போர், ஆட்சி, தலைமை, சமாதானம், உறவு, சுதந்திரம், நாடு, தொழிலாளி, முதலாளி, அதிகாரம் ஆகிய 21 தலைப்புகளில் எழுதிய கட்டுரைகள் இந்நூலில் அடங்குகின்றன. நூலாசிரியர் புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

**6883**

**மஹாகவியியல்: மஹாகவி குறித்த விமர்சனத் தொகுப்பு நூல்.** ஸ்ரீபிரசாந்தன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 340 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஜனவரி 2008. (வத்தளை: கிறிப்ஸ் பிரிண்டேர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).
327 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-9396-19-2.

மஹாகவி-ஓர் அறிமுகம், மஹாகவியும் தமிழ்க் கவிதையும், மஹாகவி கவிதைகள்-ஒரு மதிப்பீடு, மஹாகவியின் சிறு நாடகங்கள், மஹாகவியின் குறும்பா, உலக இலக்கியப் பரப்பில் மஹாகவியின்ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், எளியநடைக் கவிதையும் ஈழத்து மஹாகவியும், மஹாகவியின் வாழ்க்கை நோக்கு, மஹாகவியின் கிராமம், மஹாகவி, நீலாவணன், முருகையன், யதார்த்தமும் ஆத்மார்த்தமும்- மஹாகவி, நீலாவணன் இருவரையும் முன்நிறுத்திய ஒப்பாய்வு, மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் மஹாகவி உருத்திரமூர்த்தியும், கம்பரும் மஹாகவியும், ஈழத்து நவீன கவிஞர் மூவர்- மஹாகவி, நீலாவணன், முருகையன் கவிதைகள் குறித்த ஆய்வு ஆகிய 14 ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். இவற்றை எம்.ஏ.நுஹ்மான், சண்முகம் சிவலிங்கம் உள்ளிட்ட ஒன்பது திறனாய்வாளர்கள் இவற்றை எழுதியுள்ளனர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 618133).

**6884**
**வழியும் மொழியும்.** அல்லாமா ம.முஹம்மது உவைஸ். சென்னை 600001: பஷாரத் பப்ளிஷர்ஸ், 83, அங்கப்ப நாயக்கன் தெரு, 1வது பதிப்பு, ஜுலை 1991. (சென்னை 600001: திறீ எம் பிரிண்டர்ஸ்)
298 பக்கம், விலை: இந்திய ரூபா 25., அளவு: 17.5x12.5 சமீ.

1953ஆம் ஆண்டு முதல் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் பகுதிநேர நிகழ்ச்சித் தயாரிப்பாளராகக் கடமைபுரிந்து பிற்காலத்தில் தொடர்நிகழ்ச்சிகள் பலவற்றை முஸ்லிம் நிகழ்ச்சியில் நடத்தியுள்ள ஆசிரியர் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பற்றி ஆற்றிய 54 வானொலி உரைகளின் தொகுப்பு இதுவாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 454618).

**6885**
**வாசிகம்: வாசிப்பு கலாச்சாரம் பற்றிய வரி-வடிமங்கள்.** சு.வில்வரத்தினம். திருக்கோணமலை: கூடல் வெளியீடு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2005. (திருக்கோணமலை: ரெயின்போ மினிலாப், 361, கோர்ட் வீதி).
64 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 14.5x12 சமீ.

இலங்கையில் நல்ல இதழியற் சூழல், நல்ல புத்தக வாசிப்புச் சூழல், நல்லிலக்கிய ஆக்கச்சூழல், போன்றவற்றில் மந்தநிலை காணப்படும் இன்றைய நிலையில் அதை விலக்கித் துலக்கிடச்செய்யும் துணையாகவும், தூண்டியாகவும் அமையும் 22 சிறு ஆக்கங்கள் இந்நூலில் இடம்பெறுகின்றன. கவிதைப்பாங்கும் இழையோட, புதிய பரிசோதனைகளினதும் கலவை வார்ப்பாக இப்படைப்புகள் உள்ளதால் ஆசிரியர் இவற்றை வரிவடிமங்கள் என அழைக்கிறார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 608190).

**6886**
**விடியலைத் தேடும் புதுயுகப் பெண்கள்.** சந்திரகாந்தா முருகானந்தன். சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆர்ட்ஸ்).
208 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 18x12.5 சமீ.

யாழ்ப்பாணம் கரவெட்டியில் விக்னேஸ்வரா கல்லூரியில் கற்றவர் சந்திரகாந்தா. கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிவரும் இவர் கிளிநொச்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத் தலைவியாகத் தனது சமூகப் பணிகளை ஆரம்பித்துத் தொடர்ந்து முதியோர் இல்லம், சிறுவர்களின் விடுதி எனத் தனது சேவைகளைப் பல தளங்களில் விரிவுபடுத்தியவர். 2003முதல் பெண்ணிய எழுத்துத்துறையில் மல்லிகை இதழ்வாயிலாக அறிமுகம் கண்டவர். இந்நூல் சாதாரண குடும்பப் பெண்கள், கடின உழைப்பாளிகளான பெண்

*தொழிலாளர்கள், மேல்நிலைப் பெண்கள் என எல்லா நிலைகளிலும் பெண்களின் பிரச்சினைகளை அணுகி ஆராய்கின்றது. மதம், பாரம்பரியம், கலாசாரம், பண்பாடு, பண்டைய இலக்கியம், ஆதி மனிதனின் வாழ்வுமுறை அனைத்தையும் தனது ஆய்வுத் தேவைக்காகப் பயன்படுத்தியுள்ளார். பாலியல் பிரச்சினைகள், சமூகப்பணிகள், ஊடகங்களில் பெண்களின் நிலை, பெண்களின் பாதுகாப்பு, பெண் விடுதலைக்கான தடைக்கற்கள், இளைஞர்களிடம் காணப்படவேண்டிய மனமாற்றம் என்று பல்வேறு தளங்களிலும் இதிலுள்ள 41 கட்டுரைகளையும் வடித்திருக்கின்றார்.*

***6887***

**விடியாத இரவில்லை.** *எம்.ஜி.ஹாமித். புத்தளம்: எம்.ஜி.ஹமீட், சஞ்ஜீதா வத்தை, நுரைச்சோலை, 1வது பதிப்பு, ஜுன் 2004. (கொழும்பு 13: ட்ரீம்லாண்ட் பிரிண்டர்ஸ், 139, ஸ்ரீ ரட்ணஜோதி சரவணமுத்து மாவத்தை).*

*81 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-98697-0-1.*

*புத்தளம் பிரதேசத்தில் முத்துக்குப் பெயர்பெற்ற சிலாவத்துறை மண்ணைச்சேர்ந்தவர் நூலாசிரியர். இக் கட்டுரை நூலில் ஆங்கிலமொழியின் அவசியம் எமது பரந்துபட்ட அறிவுவளர்ச்சிக்கு அவசியம் என்பதை பல அனுபவங்களினூடாக வலியுறுத்துகின்றார்.*

***6888***

**வித்தியின் தமிழியற் பதிவுகள்.** *சு.வித்தியானந்தன் (மூலம்), திருநாவுக்கரசு கமலநாதன், தெட்சணாமூர்த்தி மதுசூதனன் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, யுஜீ 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை).*

*128 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1857-73-8.*

*பேராசிரியர் சு.வித்தியானந்தன் எழுதிய முக்கியமான 14 கட்டுரைகளின் தொகுப்பு இது. நாவலரும் தமிழகமும், நாவலர் இருவர், நாவலர் சாதனைகளும் நம்மை எதிர்நோக்கும் பணிகளும், ஈழமும் தமிழ் இலக்கணமும், ஈழத்தில் தமிழ் இலக்கியம், ஈழத்திற் கிறித்தவரின் தமிழ்ப் பணி, ஈழத்திலே சமயமும் கல்வியும், ஈழத்தின் கிராமிய நாடகங்கள், ஈழத்தில் நாட்டுக்கூத்து மரபு, இஸ்லாமியர் நாடோடிப் பாடல்கள், இஸ்லாமியரும் தமிழிற் புதிய பிரபந்த வகைகளும், மட்டக்களப்புத் தமிழகத்தில் விஷ்ணு வழிபாடு, மன்னார்-முல்லைத்தீவு நாட்டுப்புறப் பாடல்கள் ஓர் ஒப்பியல் நோக்கு, கண்ணகி வழிபாடும் கண்டிப் பெரஹராவும் ஆகிய 14 கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன.*

***6889***

**விழிகளால் கதைகள் பேசி.** *எஸ்.அரசரெத்தினம். கல்முனை 2: எஸ்.அரசரெத்தினம், ராஜ்பதி, வீ.வீ. வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. (மருதமுனை: இளம்பிறை ஓ∴ப்செற்).*

*78 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21x15 சமீ.*

*சங்க இலக்கியங்கள், நாட்டார் பாடல்கள், திரைப்படப்பாடல்கள் எனப் பல இடங்களிலுமிருந்தும் உதாரணங்களைக்காட்டி இந்நூலில் காதல் பற்றிய ஆறு இலக்கியக் கட்டுரைகளைத் தந்துள்ளார். உருவான காதலினால் உளங்களித்த சிலநாட்கள், கண்ணால் கதைகள் பேசிக் கருத்தால் ஒருமித்த காதலர்கள், மறுக்கப்பட்ட காதலினால் மறக்கப்பட்ட காதலர்கள், மாறாத சோதனைகள் மறவாத நினைவலைகள், காத்திருந்து சந்திப்பும் கவிதைகளால் வர்ணிப்பும், மணத்தில் முடிந்த காதலதும் மனத்தில் முறிந்த காதலரும் ஆகிய தலைப்புகளில் இவ்விலக்கியக் கட்டுரைகள் அமைந்துள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 534088).*

### *894.8(7) பலவினத் தொகுப்பு*

***6890***

**ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை நூல்கள்: வெல்லை அந்தாதி, இல்லற நொண்டி, கீர்த்தனா சங்கிரகம், பஞ்சரத்தினம், சுகமரணா பீஷ்டம், ஞானவெண்பா அடங்கிய ஆறு நூல்களின் தொகுப்பு.** ஆர்ணல்ட்

சதாசிவம்பிள்ளை. வட்டுக்கோட்டை: ஜே.ஆர்.ஆர்னோல்ட் புத்தக நிதியம், தென்னிந்திய திருச்சபை, 1வது பதிப்பு, மார்ச் 2005. (யாழ்ப்பாணம்: அமெரிக்க இலங்கை மிஷன் அச்சகம்).
viii, 80, 92, 58, 38, 26 பக்கங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x13.5 சமீ.

அருணாசலம் சதாசிவம்பிள்ளை 1820ம் ஆண்டு மானிப்பாய், நவாலியில் ஒரு வைதிக-சைவக் குடும்பத்தில் பிறந்தவர். சிறந்த தமிழறிஞரான இருபாலை சேனாதிராய முதலியாரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றவர். உயர்கல்விபெறும் நோக்குடன் 1823இல் அமெரிக்க மிஷனரிமாரால் நிறுவப்பட்ட வட்டுக்கோட்டைச் செமினரியில் சேர்ந்து கல்விகற்றவர். அவ்வேளையில் மதமாற்றத்துக்குள்ளாகித் தனது பெயரை யோவேல் ரசல் ஆர்ணல்ட் என்று மாற்றித் திருமுழுக்குப் பெற்றவர். செமினரிப் பட்டதாரியாகியபின் மானிப்பாய், உடுவில், சாவகச்சேரி ஆகிய இடங்களில் அமெரிக்க மிஷன் பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றி 1881இல் யாழ்ப்பாணக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார். உதயதாரகை பத்திரிகையின் ஆசிரியராக 1857முதல் 1895இல் தான் மரணிக்கும்வரை, 38 வருடங்கள் பணியாற்றியவர். இவரது ஆறு நூல்கள் இத்தொகுதியில் மீள்பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 587405).

### 6891

**இணுவை இரகுவின் ஆக்கங்கள் உரைகள் உணர்வுகள்.** ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன். (புனைப்பெயர்: இணுவை இரகு). கொழும்பு 6: சுமதி பதிப்பகம், 91/5, 3/2 ஹம்டன் லேன், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 2006. (கொழும்பு 13: கீதா பப்ளிக்கேஷன்ஸ்).
72 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 19.5x13 சமீ.

ஆசிரியரின் சொந்த ஆக்கங்களும், படித்துச் சுவைத்த பிறரது ஆக்கங்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆற்றிய உரைகள், பல்வேறு பிரமுகர்களுடன் இவர் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் என்று இணுவை இரகுவின் சுயவரலாற்றுப் பதிவாக அமைந்துள்ளது.

### 6892

**இளவாலை தமிழ்கங்கை அமுது ஐயாவின் அற்புதப் படைப்புகள்.** அடைக்கலமுத்து அமுதசாகரன் (மூலம்), மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு (தொகுப்பாளர்கள்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7 (ப.எ.4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600014: பி.வி.ஆர். ஆஃப்செட்).
1200 பக்கம், விலை: இந்திய ரூபா 500., அளவு: 22x14.5 சமீ.

இளவாலை அமுதுப் புலவர் (15.09.1918-23.02.2010) எழுதிய அன்பின் கங்கை அன்னை தெரேசா (நூல்தேட்டம் பதிவிலக்கம் 874), நெஞ்சே நினை (நூல்தேட்டம் பதிவிலக்கம் 2867), இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள் (நூல்தேட்டம் பதிவிலக்கம் 3848), மடுமாதா காவியம் (நூல்தேட்டம் பதிவிலக்கம் 508), அமுதுவின் கவிதைகள் (நூல்தேட்டம் பதிவிலக்கம் 1387) ஆகிய 5 நூல்களின் தொகுப்பாக இப்பாரிய நூல் வெளியிடப்பெற்றுள்ளது. நூல்களுக்குத் தனித்தனியாக பக்க எண்ணிடப்பட்டுள்ளன. இளவாலை அமுதுவின் மறைவுக்கு முன்னர் வெளியான இறுதி நூல் இதுவாகும்.

### 6893

**காலத்தின் குரல்: கலாநிதி நா.சுப்பிரமணியனின் படைப்புகள், நேர்காணல்கள், நூல்கள்சார் பதிவுகள் மற்றும் அவரைப் பற்றிய கணிப்புகள்.** கௌசல்யா சுப்பிரமணியன் (பதிப்பாசிரியர்). சென்னை: சவுத் விஷன், 132 அவ்வை சண்முகம் சாலை, கோபாலபுரம், 1வது பதிப்பு, மார்ச் 2005. (சென்னை: மகேந்திரா கிராப்பிக்ஸ்).
xvi, 502 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21x13.5 சமீ.

கலாநிதி நா.சுப்பிரமணியனின் படைப்புகள், நேர்காணல்கள், நூல்கள்சார் பதிவுகள் மற்றும் அவரைப் பற்றிய கணிப்புகளின் மற்றுமொரு தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. முதலாவது பகுதியில் பாக்கள் என்ற பிரிவில் இலங்கை முள்ளியவளைக் காட்டு விநாயகர் திருவூஞ்சற் பதிகம், இலங்கை

பேராதனைத் திருமுருகன் ஆற்றுப்படை, கனடா ரொரன்ரொ மார்க்கம்வழி பிரம்மராம்பிகா சமேத சந்திரமௌலீஸ்வரப் பெருமான் திருவூஞ்சல் பாடல்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. இரண்டவதாக கவிதைப் பிரிவில் சுவைத்து முடியவில்லை என்ற கவிதையும், மூன்றாவது பிரிவில் பலவீனம், பொய்யாதொழுகின், பரிதாபத்திற்குரிய ஆகிய மூன்று சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன. நூலின் இரண்டாம் பகுதியில் தமிழகத்திலும் இலங்கையிலும் ஊடகங்களுக்கு நா.சுப்பிரமணியன் வழங்கிய 9 நேர்காணல்கள் இடம்பெற்றுள்ளன. மூன்றாம் பகுதியில் நூல்கள் சார் பதிவுகளும், பின்னிணைப்பாக அவரது ஆளுமை தொடர்பான பிற பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. **மேலும் பார்க்க:** கலாநிதி நா.சுப்பிரமணியனின் ஆய்வுகள், பார்வைகள், பதிவுகள்: இரு தொகுதிகள் நூல்தேட்டம் பதிவிலக்கம் 3762,3763. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 611903).

**6894**

**லைட் ரீடிங்.** மானா மக்கீன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 10: மானா எம்.எம்.மக்கீன், டீ 54 - ½, தேசிய வீடமைப்புத் திட்டம், மாளிகாவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1994. (சென்னை 600004: நவமணி பதிப்பகம், 12, 2ஆவது மெயின் ரோடு, சி.ஐ.டி.காலனி).
96 பக்கம், புகைப்படங்கள், விலை குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13.5 சமீ.

பல்வேறு சுவையான ஊடகச்செய்திகளைத் தொகுத்து வெளிவரும் உலகளாவிய பலவினத் தகவல் நூல். தினகரன் வாரமஞ்சரியில் தொடர்ந்து வெளிவந்த மானாமக்கீனின் பத்தி எழுத்துருக்களில் இத்தகவல்கள் முன்னர் பிரசுரமாகியிருக்கின்றன. (இரண்டாம் பாகத்திற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4789).

## 899 பிறமொழி இலக்கியங்கள்

### 899.(1) பிறமொழிக் கவிதைகள்

**6895**

**ஒரு வரம்: முருகையன் மொழிபெயர்ப்புக்கள்.** இ.முருகையன், கொழும்பு 2: இ.சரவணமுத்து, பாவலர் பதிப்பகம், 151, சேர்ச் வீதி, 1வது பதிப்பு, தை 1964. (கொழும்பு: ராஜா அச்சகம், கிருல்லப்பனை).
(4), 38 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 17.5x12.5 சமீ.

இந்நூல் முருகையனின் 19 மொழிபெயர்ப்புக் கவிதைகளை உள்ளடக்கியுள்ளது. 2007இல் சாஹித்திய இரத்தினம் விருது பெற்ற கவிஞர் இராமுப்பிள்ளை முருகையன் சாவகச்சேரி, கல்வயல் கிராமத்தில் 23.4.1935இல் பிறந்தவர். தன் 12ஆவது வயதில் கவிதை புனையத் தொடங்கியவர். 1950 முதல் கவிதை எழுதிவரும் இவர் பல பிறமொழிக் கவிதைகளையும் தமிழுக்குத் தந்துள்ளார். நோக்கு என்ற காலாண்டுக் கவிதை இதழின் (1964-1965) இணை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கௌரவ கலாநிதிப் பட்டமும் இவருக்குக் கிடைத்திருந்தது.

**6896**

**பணிதல் மறந்தவர்: ஒடுக்குமுறைக்கு எதிரான மூன்றாம் உலகக் கவிதைகள்.** சி.சிவசேகரம். கொழும்பு 11: தேசிய கலை இலக்கியப் பேரவை, வசந்தம், 44, 3வது மாடி, மத்திய சந்தைக் கூட்டுத் தொகுதி, இணை வெளியீட்டாளர் சென்னை 2: சவுத் ஏஷியன் புக்ஸ், 6/1, தாயார் சாஹிப் 2ஆவது சந்து, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1993. (சென்னை 17: சூர்யா அச்சகம்).
(4), 104 பக்கம், விலை: இந்திய ரூபா 12., அளவு: 18x12 சமீ.

இத்தொகுதியிலுள்ள பெருவாரியான கவிதைகள் இனஒடுக்கலுக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டலுக்கும் ஒடுக்குதலுக்கும் உட்பட்ட எந்தச் சமுதாயத்தினரும் எளிதாக உறவு கொள்ளக்கூடியவையாகும். நாட்டுக்கு உழைத்திடவும், நலம் ஓங்கிடுமாறு வருந்திடவும் போரிட நின்றிடும் போதும் உளம் பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞ்ஞானத்தைக் கண்டிடவும் பயன்படத்தக்க வகையில் பல்நாட்டுக் கவிஞர்களின் வாழும் கவிதைகள் இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மொத்தம் 36 கவிஞர்களின் 91 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மனித வரலாற்றில் பணிதல் மறந்தவர் பலரது வாழ்வுப்பணிகளே

*மாற்றுப்பண்பாட்டு நெறிகளாக மாறிவருகின்றன என்பதை இக்கவிதைகள் கூறுகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 460800).*

***6897***

***மா.ஓ.சேதுங் கவிதைகள்.*** *மா.ஓ.சே துங் (மூலம்), சி.சிவசேகரம் (மொழிபெயர்ப்பு). கண்டி: கலாச்சாரக்குழு, 1வது பதிப்பு, 1976. (ஹட்டன்: மக்கள் அச்சகம்).*
*48 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 21x14 சமீ.*

*சீனத் தலைவர் மா.ஓ.சே துங் எழுதிய கருத்துச் செறிவும் கலையம்சமும் பொருந்திய கவிதைகளின் தொகுப்பு. ஒவ்வொரு காலகட்டத்திலும், அவ்வச் சூழலுக்கேற்ப எழுதப்பட்டவை. சீன சமுதாயத்தைக் குறித்த ஆழ்ந்த ஈடுபாடும், அதன் கலாச்சாரப் பின்னணி, வரலாறு குறித்த தெளிவும் எதிர்கால சமூக மாற்றங்கள் குறித்த தீர்க்கதரிசனமும் இக்கவிதைகளின் அத்திவாரமாக அமைகின்றன. இதில் உள்ள கவிதைகள் சீனப் புரட்சி வரலாற்றுடன் பிணைந்துவந்து இறுதியாக சர்வதேச அரசியல் நிலவரங்களுடனும் சங்கமிக்கின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 321087).*

***6898***

***மௌனத்தின் ஓசைகள்: மொழியாக்கக் கவிதைகள்.*** *லறீனா ஏ.ஹக். கெலி ஓய: லறீனா ஏ.ஹக், 1வது பதிப்பு, ஏப்ரல் 2008. (கெலி ஓய: திளின அச்சகம், கெலி ஓய).*
xiii, *46 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17x12.5 சமீ.,* ISBN: *955-98241-3-9.*

*பேராதனைப் பல்கலைக்கழக சங்கப் பலகையில் அறிமுகமான முஸ்லிம் பெண் கவிஞர்களுள் லறீனா முக்கியமானவர். மனம் சிதைத்த விதி, குழந்தைப் பருவம், அச்சமூட்டும் எதிர்பார்ப்புகள், உனதும் எனதுமான நோக்குகை போன்ற தலைப்புகளில் லறீனா தெரிவுசெய்த பல்வேறு பிறமொழிக் கவிதைகளின் தமிழாக்கம் இதுவாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 621032).*

### *899.(4) பிறமொழிச் சிறுகதைகள்*

***6899***

***அலிபாபாவின் மரணம்.*** *வி.ஆனந்தன் (மொழிபெயர்ப்பாளர்), த.மலர்ச்செல்வன் (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: மறுகா, ஆரையம்பதி 3, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008, (சென்னை 18:* Image & Impression*).*
*70 பக்கம், விலை: ரூபா 170., அளவு: 21.5x14 சமீ.*

*மலையாள மொழியில் வெளிவந்த 10 சிறுகதைகளின் தமிழாக்கம் இது. ஈழத்தமிழர்களிடையே மலையாள இலக்கியத்தை அறிமுகம் செய்த முன்னோடிகளுள் அமரர் வீ. ஆனந்தனும் ஒருவர். மட்டக்களப்பு வாசகர் வட்டத்தினருடன் அதிக ஈடுபாடுகொண்டிருந்தவர். இவர் தன் வாழ்நாளில் சுமார் 18 மொழிபெயர்ப்புக் கதைகளை வெளியிட்டுள்ளதாகக் குறிப்புள்ளதெனினும் 10 கதைகளே கைக்கெட்டியுள்ளன. முப்பது வெள்ளிக் காசுகள், நசரேத்தில் ஒரு பொம்மை, ஒரு மனோதத்துவப் பிரச்சினை, கப்பல் விபத்து, அலிபாபாவின் மரணம், சினிமா, விடுதலை, ராதாகிருஷ்ணனின் சுயதுக்கங்கள், இஸ்த்திரிக்கை, திரியும் தீபமும் ஆகிய பத்துக் கதைகளும் ஈழத்தமிழர்களுக்கு மலையாள இலக்கியத்தைச் சுவைக்க இந்நூல்வழியாக வழியமைத்துள்ளன.*

### *899.(5) பிறமொழி நாவல்கள், குறுநாவல்கள்*

***6900***

***கிராமப் பிறழ்வு.*** *மார்ட்டின் விக்கிரமசிங்க (சிங்கள மூலம்), ம.முஹம்மது உவைஸ் (தமிழாக்கம்). கொழும்பு: ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலம், 135 தர்மபால மாவத்தை, 1வது பதிப்பு, 1964. (கொழும்பு: கொழும்பு அப்போத்திக்கரீஸ் அச்சகம்).*
xiv, *238 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

*சிங்களக் கிராம மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட "கம்பெரலிய" என்ற சிங்கள நாவலின் தமிழாக்கம். சிங்கள இலக்கிய வரலாற்றில் திருப்பத்தை ஏற்படுத்திய நாவல் என்ற வகையில் இது முக்கிய இடம்பெற்றது. இந்நாடு அன்னியர் ஆதிக்கத்துக்குள்ளானதன் விளைவாக ஏற்பட்ட மாற்றங்களை இந்நாவல் புலப்படுத்துகின்றது. பிறநாட்டவர் படையெடுப்புடன் அற்றைவரை வலுப்பெற்று நிலைத்திருந்த மானிய முறைமையினை முறியடித்து முதலாளித்துவ ஆட்சி தலைதூக்குவதனையும் கிராமப்பிறழ்வு இலக்கிய உருவில் எடுத்துக்காட்டுகின்றது. தென்மாகாணத்திலுள்ள ஊர்மனை ஒன்றினைப் பின்னணியாகக்கொண்டு இந்நாவல் எழுகின்றது.*

***6901***

***முதற் காதல்.*** *ஐவான் டர்ஜனீவ். (ரஷ்ய மூலம்), இலங்கையர்கோன் (தமிழாக்கம்). சென்னை 4: கலைமகள் காரியாலயம், 2வது பதிப்பு, 1955. 1வது பதிப்பு, 1942. (திருவிடைமருதூர்:* Madras Law Journal Branch Press*).*

iv*, 86 பக்கம், விலை: 10 அணா, அளவு: 18*x*12.5 சமீ.*

*ஸினைடாவைப் பலர் காதலிக்கின்றனர். ஒரு பிரபு, ஒரு கவிஞன், விலாட்மீர் என்ற இளைஞன், அவனுடைய தந்தை பெட்ரோவிச் யாவருக்கும் அவள் காதற்பொருளாக இருந்தாலும் அவள் மனது பெட்ரோவிச்சையே நாடுகின்றது. இந்நாவலில் கதைசொல்லியாக இளைஞன் விலாட்மீர் இருக்கிறான். அவனது பார்வையில் இக்கதை விரிகின்றது. விலாட்மீர் தான் காதலிக்கும் முதற் காதலி தன் தந்தையைக் காதலிக்கும் விந்தையைக் கண்டு வியப்படைகிறான். தந்தையோ அவளை அடக்கி ஆள்கிறார். அவளோ அந்தத் துன்பத்திலும் காதல் இன்பத்தை நுகர்கிறாள். உண்மையான அன்பு உண்டானால் எதையும் சகித்துக்கொள்ளலாமோ என்று எண்ணுகின்றான் விலாட்மீர். அவளது மகத்தான காதலின்முன் தனது காதல் குழந்தை விளையாட்டாக உணர்கிறான். ஸினைடாவின் காதல் கைகூடவில்லை. அவன் தந்தை இறக்கிறான். அவளும் ஒப்புக்கு வேறொருவனை மணந்து விரைவிலேயே இறந்துவிடுகிறாள். மரணத்திலும் அவள் தன் தந்தையையே காதலுடன் தொடர்ந்தாளோ என்று அதிசயிக்கிறான் கதைசொல்லி விலாட்மீர். ரஷ்ய மொழியில் பிரபல்யமான இந்நாவல் இலங்கையர்கோனால் தமிழாக்கம் செய்யப்பட்டு தமிழகத்தில் பிரசுரிக்கப்பட்டது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275552).*

## *900 புவியியல், வரலாறுகள்*

### *901 பொது வரலாறு*

***6902***

***தரம் 7: வரலாறு.*** நா.மயில்வாகனம். கொழும்பு: நா.மயில்வாகனம், சென் தோமஸ் பாடசாலை, *1வது பதிப்பு, ஜுன் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*112 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 22*x*14 சமீ.*

*2005இல் புதிதாக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வரலாறு 7 நூலுக்கான குறிப்புகள், பயிற்சிகள். வினாவிடைகள், கணிப்பீட்டுப் பயிற்சிகள், தவணைப்பயிற்சிகள் என்பன இந்நூலில் அடங்குகின்றன. பாடசாலை மட்டக் கணிப்பீடு (*SBA*) நிகழ்ச்சித் திட்டத்திற்கமைவாகத் தயாரிக்கப்பட்டது.*

### *909 நாகரீகங்கள்*

***6903***

***இஸ்லாமிய நாகரீகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்.*** எம்.எச்.எம்.நாளிர். கொழும்பு *11:* ஹாதி புத்தக *நிலையம், 52/7 2ம் குறுக்குத்தெரு, 2வது பதிப்பு, ஓகஸ்ட் 1991. 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1982. (சென்னை 600001: திரீயெம் எக்ஸ்போர்ட்).*

x*, 218 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18*x*12.5 சமீ.*

*இஸ்லாமிய நாகரீகம், நபித்துவம், முகம்மத் ஸல் அவர்களின் நபித்துவம், ஹிஜ்ரத், மதீனாவில் முஸ்லிம் சமூக அமைப்பு, முஸ்லிம் அரசின் தோற்றம், ஆட்சிமுறை, அரசியல் வளர்ச்சி, மனிதன்*

*யார், அல் குர்ஆனும் சுன்னாவும், அறிவுபெறத் தூண்டல், மஸ்ஜிதின் பங்கு, அறபு மொழியும் இலக்கியமும், ஹதீஸ்கலை, பிக்ஹுக் கலை, தப்ஸீரும் கிறா-அத்தும், தஸவ்வுப், அறிவியற் கலைகள், கவின்கலைகள், சட்டமும் சமூக மரபும் ஆகிய 20 இயல்களில் இஸ்லாமிய நாகரீகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் இங்கு விளக்கப்படுகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 438188).*

**6904**

**இஸ்லாமிய நாகரிகம்: கடந்தகால வினாக்களும் விடைகளும்: க.பொ.த.உயர்தரம்.** எஸ்.எம்.மூசா. *கல்முனை: அல்-மனார் வெளியீட்டுப் பணியகம், மருதமுனை, பதிப்பு விபரம் இல்லை. (கல்முனை: முனைப்பு பிரிண்டர்ஸ், பிரதான வீதி, மருதமுனை).*
*(6), 117 பக்கம், விலை: ரூபா 55., அளவு: 20.5x14 சமீ.*

*ஹிஜ்ரத், நபி(ஸல்) வழியில் கலிபா அபுபக்கர்(ரலி), கலிபா உமர்(ரலி) நிர்வாக முறைகள், அரசியல் பிளவுகளுக்கு மத்தியில் உதுமான் (ரலி), அலி(ரலி), இமாம் ஷாபிஃ. (ரஹ்)-வாழ்வும் பணியும், இஸ்லாத்தில் செய்யப்பட்ட ஆரம்பகால உடன்படிக்கைகள், இறுதி ஹஜ்ஜு-கர்பலா-ஹரிஜீன்கள், கலாசாரத்தின் அத்திவாரம் அல்-குர்ஆன், ஹதீஸ் கலை, பிக்ஹு கலையும் இமாம் அபு ஹனிபா(ரஹ்) அவர்களும், ஜாதிலிய்யாக் காலம், உமைய்யக் கலிபா அப்துல் மலீக், உமைய்யக் கலிபா இரண்டாம் உமர், உமய்ய ஆட்சி (பரிபாலனம், அறிவுத்துறை, வீழ்ச்சி), அப்பாஸிய கலிபா மாமூன் (ஆட்சி, அறிவுப்பணி), அப்பாஸிய ஆட்சியின் உயர்ச்சிக்கு பர்மஹிக்கள், அப்பாஸிய ஆட்சியின் பரிபாலனம், இஸ்பானியாவில் இஸ்லாமிய ஆட்சி உதயம், இஸ்பானியா (பொருளாதாரம், நிர்வாகம், கட்டடக்கலை), சியாக்கள் (தோற்றம், வளர்ச்சி, கொள்கை), இசைக் கலை - மு.ஃ.தஸிலா, மருத்துவத்துறையும் முஸ்லிம்களும், சுருக்க வினாவிடை ஆகிய விடயங்கள் இப்பதிப்பில் உள்ளடங்குகின்றன.*

**6905**

**இஸ்லாமிய நாகரீகம் 1ம் பாகம்: முஹம்மத் (ஸல்).** கே.எம்.எச்.காலிதீன். *அக்கரைப்பற்று: கலை, கலாசார பீடம், தென் கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில், 1வது பதிப்பு, ஜுன் 2001. (அக்கரைப்பற்று: மல்ட்டி ஓ.ஃப்செட் அச்சகம்).*
x, *102 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20x14.5 சமீ.,* ISBN: *955-8220-02-7.*

*ஜாஹிலிய்யாக் காலம், முஹம்மத் (ஸல்), ஹிஜ்ரத் ரஸுலுல்லாஹ், இஸ்லாத்தின் மறுமலர்ச்சி, சர்வதேச தலைவர்களுக்கு இஸ்லாத்தின் அழைப்பு, மக்காவில் இஸ்லாமியப் பிரகடனம், ரஸுலுல்லாஹ்வின் ஆளுமைச் சிறப்பு ஆகிய ஏழு தலைப்புகளில் இஸ்லாமிய நாகரீகத்தின் வரலாற்றுக் காலகட்டத்தின் ஒரு பகுதி இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. ஜாஹிலிய்யாக் காலம் என்பது ஈஸா(அலை) அவர்களுக்குப் பின் அவரது உண்மையான போதனைகள் கைவிடப்பட்டு, பல்வேறு சமய நம்பிக்கைகளில் மக்கள் ஈடுபட்டிருந்த 200 ஆண்டுகளைக் குறிப்பிடுவதாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர். அக்காலப் பின்னணியிலேயே முஹம்மது (ஸல்) அவர்களின் வருகை அமைகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 543879).*

**6906**

**இஸ்லாமிய நாகரிகம்: தொகுதி 1.** முகம்மது இப்றாகிம் ஆலிம் சாஹிபு முஹம்மது அமீன் *(எம்.ஐ.எம்.அமீன்). பேருவளை: அல்-கலம் பதிப்பகம், 26/2, யூசுப் அவென்யு, சீனன்கோட்டை, 1வது பதிப்பு, டிசம்பர் 1996. (கொழும்பு 13:* Quick Graphics Print, 5-1/20, *நவீன சந்தை, கொட்டஹேன).*
*(26), 222 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *955-9454-03-*X.

*இஸ்லாமிய நாகரீகம் அறிமுகம், இஸ்லாமிய கலாசாரத்தின் மத்திய தலங்கள் (மக்கா, மதீனா, பஸரா, கூபா, கோடோவா, பக்தாது, கெய்ரோ, டமஸ்கஸ், புது நகர நிர்மாணம்), இஸ்லாமிய சமூகம் (இஸ்லாமிய சமுதாய மாண்புகள், சமூகக் காப்பரண்கள்), கல்வியும் பண்பாட்டுப் பயிற்சியும், கிலாபத் கோட்பாடும் அல்குலபாஉற்றாசிதூண்கள் காலப்பரிபாலன முறையும் ஆகிய ஐந்து இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அறபு*

இஸ்லாமிய நாகரீகத்துறைத் தலைவராவார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 493988).

### 915 பிரதேசப் புவியியல்

**6907**

**யாழ்ப்பாணத்தின் நீர்வளம்.** க.நடனசபாபதி. கொழும்பு 11: புதிய பூமி வெளியீட்டகம், 47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (கொழும்பு 11: World Vision Graphics).
(2), 42 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ.

1966ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட நில நீர் ஆராய்ச்சிப் பகுதியில் இரசாயன ஆய்வாளராகப் பணியாற்றிய நூலாசிரியர் பருத்தித்துறை, புலோலியைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணத்தின் நீர்வளத்தை எவ்வாறு மீட்டெடுப்பது என்ற அக்கறையுடன் பல்வேறு கோணங்களில் ஆய்ந்தறிந்து அவர் பெற்ற பயனுள்ள தகவல்களும் யாழ்ப்பாண இயற்கை வளத்தின் விருத்தியும் பயன்பாடும் பற்றிய அவரது சமூகப் பயன்மிக்க சிந்தனைகளும் பல ஆய்வுகளைத் தர வழிசமைத்தன. தனது ஆய்வுகளை புதியபூமி மாத சஞ்சிகையில் தொடராக முன்னர் எழுதிவந்தார். அக்கட்டுரைகளின் நூலுருவே இதுவாகும்.

### 920 வாழ்க்கை வரலாறு, ஞாபகார்த்த மலர்கள்

### 920.01 துறைசாரா வாழ்க்கைவரலாறுகள்

**6908**

**செல்வ மலர்.** அமரர் செல்வதி சம்பந்தன் நினைவு மலர். லண்டன்: ஐ.தி.சம்பந்தன், 15 Rutland Road, Forrestgate, London E7 8PQ, 1வது பதிப்பு, ஜுலை 2010. (லண்டன்: ஜே.ஆர்.பிரின்ட்).
68 பக்கம், புகைப்படங்கள், விலை: அன்பளிப்பு, அளவு: 21x14.5 சமீ.

லண்டனில் புலம்பெயர்ந்துவாழும் ஈழத் தமிழறிஞரும், சுடரொளி வெளியீட்டுக்கழக தாபகரும், சுடரொளி சஞ்சிகையின் ஆசிரியருமான ஐ.தி.சம்பந்தன் அவர்களின் துணைவியார் 27.5.2010 அன்று அமரத்துவமடைந்தார். அவரது சபிண்டீகரண தினத்தின்போது, 25.7.2010 அன்று வெளியிடப்பெற்ற இம்மலரில் அன்னார் பற்றிய குடும்பத்தினர், நண்பர்கள், மற்றும் அவரை அறிந்த உலகத் தமிழறிஞர்களின் இரங்கலுரைகளின் தொகுப்பாக இம்மலர் வெளிவந்துள்ளது.

### 920.1 ஊடகவியலாளர், ஒலிபரப்புத்துறையினர்

**6909**

**மலையக நிர்மாணச் சிற்பி கோ.நடேசையர்.** சாரல் நாடன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
44 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-659-159-0.

இலங்கைத் தமிழ்ச் சுடர்மணிகள் வரிசையில் பன்னிரண்டாவதாக வெளிவந்துள்ள இந்நூல், பத்திரிகையாளரும் மலையகத்தினரின் அபிமானியுமான கோ.நடேசையரின் வாழ்வும் பணிகளும் பற்றி மலையகமும் இந்திய வம்சாவளியினரும், நடேசையரின் இலங்கை வருகை, நடேசையரின் தொழிற்சங்க உலகம், நடேசையரும் சட்டசபையும், நடேசையரின் பத்திரிகை உலகம், நடேசையரின் பதிப்பலகம் ஆகிய ஆறு இயல்களில் பதிவுசெய்கின்றது.

### 922 சமயத் தலைவர், சிந்தனையாளர்

**6910**

**இமய ஜோதி சுவாமி சிவானந்தர்.** த.துரைசிங்கம். யாழ்ப்பாணம்: பூரண யோக சமாஜம், 46 வைமன் வீதி, நல்லூர், 1வது பதிப்பு, ஒகஸ்ட் 2003. (கொழும்பு 12: Perfect Printers, 130, டயஸ் பிளேஸ்).

*(6), 59 பக்கம், புகைப்படங்கள், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.*

*தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் பத்தமடை கிராமத்தில் பிறந்தவரும், திவ்ய ஜீவன சங்கத்தின் தாபகருமான குருதேவர் சுவாமி சிவானந்தரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம். 08.09.1887 இல் பிறந்த சுவாமி சிவானந்தர் 14.7.1963இல் மறைந்தார். நல்லூர் பூரணயோக சமாஜம் தமது குருநாதர் சுவாமி ஸ்ரீ சச்சிதானந்த மகராஜ் அவர்களின் முதலாவதாண்டு நினைவாக இந்நூலை வெளியிட்டுள்ளது.*

***6911***

***ஈழத்துத் தபோதனர்கள்.*** *ஆழ்கடலான் (இயற்பெயர்: முருக.வே. பரமநாதன்). கனடா: மேருபுரம் ஸ்ரீ மகாபத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்,* 1510 Birchmount Road, Unit 104 Scarborough, Ontario, M1P 2G6, *1வது பதிப்பு, 2010. (கனடா: கிராப்பிக் லாண்ட், ஸ்காபரோ).*
xxvi, *141 பக்கம், புகைப்படங்கள், விலை: கனேடியன் டொலர் 10., அளவு: 21x14 சமீ.*

*இலங்கையில் பிறந்த சைவ அருளாளர்களான வைரவியார் சுவாமிகள், மாம்பழம் சுவாமிகள், ஊதுவர்த்திச் சுவாமிகள், மூச்சம்புலவுச் சுவாமிகள், வேதாந்த மடத்தின் குரு பரம்பரை, சார்ஜன் சுவாமிகள், நமசிவாயம் சுவாமிகள், கனகரத்தினம் சுவாமிகள், இடைக்காட்டுச் சுவாமிகள், ஆறுமுக சுவாமிகள், பெரிய சந்நியாசியார், மகாதேவ சுவாமிகள், திருவாசகச் சுவாமிகள், வடிவேற் சுவாமிகள், சோமாஸ்கந்தவேள் சுவாமிகள், தாளையான் சுவாமிகள், பஞ்சாட்சர அம்மா, சரவணமுத்துச் சுவாமிகள், நவநாத சித்தர், தேரடிச் சித்தர் செல்லப்பா, கோண்டாவில் கந்தையாச் சுவாமிகள் (குடைச்சுவாமி) உள்ளிட்ட பலரைப் பற்றிய அரிய தகவல்களை இந்நூலிலுள்ள 24 கட்டுரைகளும் கொண்டுள்ளன.*

***6912***

***சடையப்பர் சுவாமிகளும் திராய்மடுத் திருத்தலமும்.*** *கா.சிவலிங்கம். மட்டக்களப்பு: திராய்மடு ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபை, பாலமீன்மடு, திராய்மடு, 1வது பதிப்பு, 2009. (மட்டக்களப்பு: துர்க்கா அச்சகம், 1ம் குறுக்கு, கொக்குவில்).*
xxvi, *82 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ.*

*மட்டக்களப்பில் வாழ்ந்ததொரு சித்தரான சடையப்பர் சுவாமிகளது (13.7.1909-13.7.2009) நூறாவது ஜனன தினத்தைக் குறிக்குமுகமாக இந்நூல் வெளியிடப்படுகின்றது. வரைபடத்துடன் கூடிய பிரதேச வரலாற்றுடன் திராய்மடு ஸ்ரீமுருகன் ஆலயத்தின் தாபகரும் தர்மகர்த்தாவுமான ஸ்ரீ சற்குருநாத சடையப்பர் நல்லதம்பி சுவாமிகளின் வாழ்வும் பணிகளும் இந்நூலில் பதிவுக்குள்ளாகியுள்ளன. நூலாசிரியர் கார்த்திகேசு சிவலிங்கம் மட்டக்களப்பு பாலமீன்மடு கிராமத்தைச் சேர்ந்தவர். இலங்கை, வாழைச்சேனை காகித ஆலையின் 11 வருடங்கள் கணக்காளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர்.*

***6913***

***சுவாமி சரிதம் என்னும் சிவயோக சுவாமிகள் திருச்சரிதம்.*** *க.கி.நடராஜன். யாழ்ப்பாணம்: க.சி.நடராஜன், யோக பவனம், பொன்னப்பா வீதி, வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு, மே 1974. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).*
xxxii, 58+20 *பக்கம், தகடுகள், விலை: ரூபா 7.75, அளவு: 24.5x18.5 சமீ.*

*பிரம்மஸ்ரீ சி.கணேசையரின் மாணவராகவிருந்து தமிழ்கற்றவர் செந்தமிழ்ச் சிரோமணி, பண்டித வித்துவான் க.கிநடராஜன். இவர் யாழ்ப்பாணம், யோகர்சுவாமிகளின் பக்தனாகவும், அவரது பணிகளைப் போற்றும் சிவதொண்டன் நிலையம், சிவதொண்டன் பத்திரிகை, மற்றும் புராண படனங்கள் முதலானவற்றில் தீவிர பங்காற்றியவர். யோகர் சுவாமிகள் வரலாற்றை அவர் வாழ்ந்த 92 ஆண்டுகளிலும் நடந்த சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டமைந்ததாகச் செய்யுள்வடிவில் இந்நூலில் வழங்கியிருக்கிறார். இச்செந்தமிழ்ப் பாக்களில் பொருணயம், ஓசைநயம், சொன்னயம். சந்தச் சிறப்புகள் என்பன சிறப்பாக அமையப்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 314513).*

***6914***

**தியாகச் சுடர்: ஹுஸைன் ரலி அவர்களின் வரலாறு.** எம்.எச்.எம்.ஹலிம்தீன். கல்ஹின்ன: மணிக்குரல் பதிப்பகம், 1வது பதிப்பு, நவம்பர் 1969. (கண்டி: ரோயல் பிரின்டர்ஸ், 190, கொழும்பு வீதி).
60 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 16x11 சமீ.

இஸ்லாம் சமயத்தின் போதகர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பேரக் குழந்தைகளுள் ஒருவரான ஹுஸைன் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக கவிதை உருவில் நூலாசிரியர் இந்நூலில் வழங்கியுள்ளார். கவிஞர் எம்.எச்.எம்.ஹலிம்தீன், கண்டி மாவட்டத்தில் கல்ஹின்னையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது முதலாவது நூல் இதுவாகும்.

### 923 சமூகவியல்துறை சார்ந்தோர்

### 923.2 அரசியல் துறையினர்

**6915**
**கம்யூனிஸ்ட் கார்த்திகேயன்: நகைச்சுவை ஆளுமை தீர்க்கதரிசனம்.** சண்முக சுப்பிரமணியம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம். 18, 6/1 கொலிங்வுட் பிளேஸ், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (கொழும்பு 6: R.S.T. என்டர்பிறைஸஸ், 114 W.A. சில்வா மாவத்தை).
viii, 98 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1810-16-0.

கம்யூனிஸ்ட் கார்த்திகேயன் அறக்கட்டளை நிதியத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ள இந்நூலில் தோழர் காத்திகேயனின் அர்த்தபுஷ்டியான நகைச்சுவைகள் 40 சிறு கட்டுரைகளின் வடிவில் தொகுக்கப்பட்டுள்ளன. சமயோசிதமாகவும், சுவைமிகுந்ததாகவும் தனது உரையாடல்களுக்கிடையே கார்த்திகேயன் தன் கருத்துக்களை நகைச்சுவை உணர்வுடன் பயன்படுத்தியிருந்தார். கார்த்திகேயனுடன் தான் 1965இல் அறிமுகமான ஸ்கந்தவரோதயா கல்லூரியின் மாணவப்பருவத்திலிருந்து, கார்த்திகேயன் செப்டெம்பர் 1977இல் மரணிக்கும் வரை அவரது அரசியல் மாணவனாக இருந்து கற்றறிந்த கருத்துக்களையே இந்நூலில் ஆசிரியர் தொகுத்திருக்கின்றார்.

**6916**
**ரவிவம்சம்: அமரர் நடராஜா ரவிராஜ் நினைவுமலர்.** மலர் வெளியீட்டுக் குழு. கொழும்பு: அமரர் நடராஜா ரவிராஜ் நினைவுமலர் வெளியீட்டுக் குழு, 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (கொழும்பு 13: ஈகுவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பெட்டா வீதி).
118 பக்கம், புகைப்படங்கள், விலை: அன்பளிப்பு, அளவு: 24.5x18 சமீ.

25.6.1962இல் சாவகச்சேரியில் பிறந்த ரவிராஜ், 1984-1986 காலகட்டத்தில் கொழும்பு சட்டக் கல்லூரியில் கற்றுத் தேர்ந்து சட்டத்தரணியானவர். மனித உரிமைப் பணிகளில் தீவிரமாகச் செயற்பட்டவர். தந்தை செல்வாவின் அரசியல் நடவடிக்கைகளால் ஈர்க்கப்பட்ட இவர் சட்டத்தரணி பொன் சிவபாலன் யாழ்ப்பாண மேயராகியவேளை துணைமேயராகப் பதவியேற்று, அவரின் மரணத்தின் பின்னர் 2001முதல் யாழ்ப்பாண மேயராகப் பணியாற்றினார். டிசம்பர் 2001இல் யாழ் மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினர்களுள் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டவர். 10.11.2006 அன்று கொழும்பு மனிங்ரவுன் இல்லத்திலிருந்து நாரஹென்பிட்டி இராணுவ வைத்தியசாலைக்கு அண்மையில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது நினைவாக 10.12.2006இல் வெளியிடப்பட்ட மலர் இதுவாகும்.

### 923.4 சட்ட அறிஞர்கள்

**6917**
**அமரர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் சரிதை.** ச.சதாசிவம் சேவியர். கனடா: ஜே.ஜே.பிரிண்டிங், ஸ்காபரோ, 1வது பதிப்பு, ஜுன் 2003. (கனடா: சுவானி கிராப்பிக்ஸ்).
x, (16), 144 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

சட்ட மாமேதை அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களின் வாழ்வும் பணியும் பற்றிய சுவாரஸ்யமான தகவல்களை 88 தலைப்புக்களில் இந்நூல் வழங்குகின்றது. நூலாசிரியர் அமரர் ஜி.ஜியுடன் கொண்ட நெருங்கிய தொடர்புகளின் பின்னணியில் அவரது அரசியல் வாழ்க்கை, சட்டவாழ்க்கை என்பன பற்றியும், அவர் நடத்தி வென்ற பிரபல்யமான வழக்குகள் பற்றியும் இந்நூல் சுவையான தகவல்களைத் தருகின்றது. இந்நூலின் மேலட்டையில் நூலின் தலைப்பு சட்ட மாமேதை ஜி.ஜி.பொன்னம்பலம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**6918**

**மாபெரும் தலைவர் சட்டமாமேதை அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் நினைவுக் கட்டுரைகள்.** அப்பாத்துரை விநாயகமூர்த்தி. யாழ்ப்பாணம்: அ.விநாயகமூர்த்தி, தலைவர், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், 1வது பதிப்பு, 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).
36 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் - இராணி வழக்கறிஞர் (வீரகேசரி, 8.11.2003), தமிழ் மக்களின் உரிமைக்காக இறுதிவரை உழைத்த மாபெரும் தலைவர் (வீரகேசரி, 08.11.2002), சிங்களவர்-தமிழர் சமபிரதிநிதித்துவ கோட்பாட்டை முன்வைத்து அதற்காக போராடிய தலைவர் ஜீ.ஜீ. (உதயன், 09.02.2001), பிரஜாவுரிமைப் பிரச்சினையில் ஜீ.ஜீ. இன் அணுகுமுறை: விநாயகமூர்த்தி விளக்கம் (தினக்குரல், 11.10.2003), தந்தை செல்வாவை இனங்காட்டிய ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் அரசியல் (தினக்குரல், 17.03.2000), மந்திரி பதவிக்காக பொன்னம்பலம் எவரிடமும் மண்டியிடவில்லை (13-சுடர் ஒளி, 19.08.2002), எதிர் கருத்துடையோருக்கு விளக்கம் (தினகரன் 06.12.2002), தமிழ் மக்களின் உரிமைக்காகவும் நலன்களுக்காகவும் இறுதிவரை உழைத்த மாபெரும் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் 27ஆவது சிரார்த்ததினம் (வீரகேசரி, 09.02.2004) ஆகிய ஆசிரியரின் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 923.6 சமூக சேவகர்கள்

**6919**

**சேர். பொன் அருணாசலந்துரை அவர்களின் சீவிய சரித்திரச் சுருக்கம்.** க.சோமசுந்தரம்பிள்ளை. நவாலி: க.சோமசுந்தரம்பிள்ளை, 1வது பதிப்பு, 1928. (வயாவிளான்: சுதேச நாட்டிய அச்சுக்கூடம்).
10 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x12.5 சமீ.

51 செய்யுள்களில் சேர்.பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் வாழ்க்கை வரலாறு இயற்றப்பட்டுள்ளது. சேர் பொன்.அருணாசலம் செப்டெம்பர் 14, 1853 அன்று பிறந்தவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37494).

**6920**

**புரவலர் சில பதிவுகள்.** கலைச்செல்வன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: இலக்கிய முற்றம், இல. 46, பிரட்றிகா றோட், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).
xvi, 155 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-51803-0-6.

இலங்கையின் மேமன் சமூகத்தைச் சேர்ந்த புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் அவர்களின் வாழ்வும் பணிகளும் பற்றிய பல்வேறு படைப்பாக்கங்களின், பத்திரிகைச் செய்திகளின், புகைப்படங்களின் தொகுப்பு இதுவாகும். இத்தொகுப்பின்வழி, புரவலரின் பல்வேறு பரிமாணங்களும் பதிவுக்குள்ளாகின்றன. ஈழத்துப் படைப்பிலக்கியவாதிகளுக்கு ஆதரவு தந்து அவர்களின் நூல்வெளியீடுகளின்போது அங்கு பிரசன்னமாகிப் பல பிரதிகளைப்பெற்று நிதி வழங்கி ஆதரவு வழங்குவதுடன், புரவலர் புத்தகப் பூங்கா என்ற வெளியீட்டகத்தின் வாயிலாக ஈழத்தின் தமிழ்ப் படைப்பாளிகளின் நூல்களை அச்சிட்டு வெளியிட்டு விநியோகம் செய்தும் வருகின்றார்.

## 923.61 விடுதலைப் போராளிகள்

***6921***

***சங்கரண்ணா சாவு உனது முடிவல்ல.*** *சி.நிர்மலன் (தொகுப்பாசிரியர்). கிளிநொச்சி: அறிவு அமுது பதிப்பகம், யாழ் நெடுஞ்சாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2003. (கிளிநொச்சி: படைய அறிவியல் கல்லூரி, மகளிர்).*

*(10), 415 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 20.5x14 சமீ.*

*26.9.2003 அன்று இடம்பெற்ற கேணல் சங்கர் (18.9.1949-26.09.2001) அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவின் போது இந்நூல் வெளியிடப்பட்டது. கேணல் சங்கர் (இயற்பெயர்: வைத்திலிங்கம் சொர்ணலிங்கம்) முகிலன் என்றும் அறியப்பட்டவர். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினைச் சேர்ந்தவர். இம்மலரில் விடுதலைப்புலிகள் அமைப்பின் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், முன்னைநாட் போராளிகள், பொதுமக்கள் எனப் பல்வேறு தளங்களிலும் இருந்து பதிவுசெய்யப்பட்ட சங்கரண்ணாவைப் பற்றிய மனப்பதிவுகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 577314).*

***6922***

***சூரியப் புதல்வர்கள் 1998.*** *தமிழீழ விடுதலைப் புலிகள். தமிழீழம்: வெளியீட்டுப் பிரிவு, அனைத்துலகத் தொடர்பகம், தமிழீழ விடுதலைப் புலிகள், 1வது பதிப்பு, நவம்பர் 1998. (அச்சக விபரம் அறிய முடியவில்லை).*

*32 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x24 சமீ.*

*27 நவம்பர் 1998 இல் இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவாக வெளியிடப்பெற்ற மலர். மாவீரரான போராளிகள் பலரின் வாழ்க்கைக் குறிப்புகளுடனும் மாவீரர் நினைவாக படைக்கப்பட்ட உணர்வுக் கவிதைகளுடனும் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. சுப.வீரபாண்டியன், பழ.நெடுமாறன் ஆகிய தமிழக அரசியல் பிரமுகர்களினதும், கவிஞர்களினதும் படைப்புகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.*

***6923***

***மாவீரன் செண்பகராமன்.*** *யோகா பாலச்சந்திரன். கொழும்பு: கொழும்பு கலைச் சங்கம், த.பெ.எண் 675, 1வது பதிப்பு, 1967. (கொழும்பு 13:* The rainbow Printers, 231 Wolfendhal Street*).*

*40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.*

*"செண்பகராமன் என்ற ஒரு தமிழன்" என்ற தலைப்பில் சிந்தாமணி வார இதழில் அறுபதுகளில் வெளியான கட்டுரையின் நூல்வடிவம். தமிழகத்தில் திருவனந்தபுரத்தில் சின்னசாமிப்பிள்ளை-நாகம்மாள் தம்பதியினரின் மகனாகப் பிறந்த செண்பகராமன் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடியவர். 15 வயதில் ஐரோப்பா சென்று அங்கு சுவிட்சர்லாந்தில் பல்கலைக்கழகக் கல்வியைப் பெற்றவர். தொடர்ந்து பேர்லினில் பொறியியல்துறையில் பயின்று கலாநிதியானார்.* Pro India *என்ற ஆங்கிலப் பத்திரிகையை ஜெர்மனியில் நடத்தியவர். இவருக்கு ஜெர்மன் அரசு வொன் (*Von*) என்ற பட்டமளித்து கௌரவித்தது. யுத்த காலத்தில் ஜேர்மனியரின் ஹம்டன் நீர்மூழ்கி யுத்தக்கப்பலின் பொறியியலாளராகப் பணியாற்றிய இவரது மரணம் நஞ்சூட்டப்பெற்ற கொலையாகியது வேதனை மிகுந்த வரலாறு.*

### *923.8 கல்வியியலாளர்கள்*

***6924***

***ஆறுமுக நாவலர்.*** *இரா.வை.கனகரத்தினம். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*

*61 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ.,* ISBN*: 978-955-659-089-7.*

*இலங்கைத் தமிழ்ச் சுடர்மணிகள் வரிசையில் ஐந்தாவதாக வெளிவந்துள்ள இந்நூல், ஆறுமுக நாவலரின் (18.12.1822-05.12.1879) வாழ்வையும் அவர் ஆற்றிய பணிகளையும் காலமும் சூழ்நிலையும், சமயப்பணி, கல்விப்பணி, பதிப்பும் உரையும், சமுதாயப் பணியும் நோக்கும், யுகப்புருஷர் ஆகிய 6*

*தலைப்புகளில் விபரித்துள்ளார். நாவலர் வாழ்வில் முக்கியத் திகதிகள், நாவலர் நூல்கள் ஆகிய இரண்டு விடயங்களும் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.*

***6925***

***இளைஞர் தளபதி இர.சிவலிங்கம்.*** *சாரல்நாடன். கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச்சங்கம், இல.7, 57ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜுலை 2010. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207 சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).*

*(12), 132 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x15 சமீ.,* ISBN: *978-955-8564-16-5.*

*மலையகத்தில் வாழ்ந்து 09.07.1999 இல் மறைந்த கல்வியாளரும், சமூக சிந்தனைவாதியுமான இர.சிவலிங்கம் அவர்கள் பற்றிய நூல். இந்நூல் ஆறு தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளது. இர.சிவலிங்கம் ஆசிரியப்பணியில், கலை இலக்கியப்பணியில், இலங்கைத் தோட்டச் சேவையாளர் சங்கத்தில், தாயகம் திரும்பிய தமிழர்களின் மத்தியில், கனவு காணும் சமூகம், மிண்டும் மலையகத்தில் ஆகிய தலைப்புகளில் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இர.சிவலிங்கம் சாமிமலை ஸ்டொக்ஹாம் தோட்டக் கணக்கப்பிள்ளை இரத்தினசபாபதிக்கும் பச்சையம்மாளுக்கும் மகனாகப் பிறந்தவர். அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியிலும், சென்னை கிறிஸ்தவக்கல்லூரியிலும் பயின்றவர். அறிஞர் அண்ணாவிடம் விருதுபெற்றவர். ஆசிரியர் சேவையில் பல நன்மாணாக்கர்களை உருவாக்கியவர். மலையக இளைஞர் முன்னணியை உருவாக்கியவர்.*

***6926***

***எ.எம்.எ. அஸீஸ்.*** *எம்.எஸ்.எம்.அனஸ். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*

*54 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-659-163-7.*

*இலங்கைத் தமிழ்ச் சுடர்மணிகள் வரிசையில் ஏழாவதாக வெளிவந்துள்ள இந்நூல், குடும்ப வாழ்வும் கல்வியும், அஸீஸும் ஸாஹிராவும், அஸீஸும் இஸ்லாமியக் கலை இலக்கியமும், அஸீஸின் கல்விச் சிந்தனைகள், முஸ்லிம் அரபுத் தமிழும் கல்வி மொழியும், பொதநலச் சேவைகள், மேற்கு நாகரிகமும் இஸ்லாமும், மார்க்கக் கல்வியும் நவீன அறிவும், நவீனத்துவ சிந்தனைகள் ஆகிய ஒன்பது இயல்களில் முஸ்லிம் தமிழ் அறிஞரான எ.எம.எ. அஸீஸ் அசல்களின் வாழ்வும் பணியும் பற்றி இந்நூல் பேசுகின்றது. பின்னிணைப்பாக அஸீஸின் வாழ்வின் முக்கிய திகதிகள், அஸீஸின் ஆக்கங்கள், அஸீஸ் பற்றிய எழுத்துக்கள் ஆகிய மூன்று பட்டியல்கள் தரப்பட்டுள்ளன.*

***6927***

***எ.எம்.எ.அஸீஸ்: கல்விக் கொள்கையும் நவீனத்துவ சிந்தனைகளும்.*** *எம்.எஸ்.எம்.அனஸ். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*

viii, *106 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 22x14.5 சமீ.,* ISBN: *978-955-659-095-1.*

*சமூக சேவைகளினாலும் சிந்தனையினாலும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தப் பாடுபட்ட ஒருசில முஸ்லிம் தலைவர்களில் எ.எம்.எ.அஸீஸ் 20ம் நூற்றாண்டின் முக்கிய தலைவராவார். அறிமுகம்: சிந்தனை ஆளுமை, பிறப்பும் வாழ்வும், ஸாஹிறா அதிபர், கலை இலக்கியக் கண்ணோட்டம், கல்விச் சிந்தனைகள், முஸ்லிம்களும் மொழிப் பிரச்சினையும், அறபுத் தமிழ் ஆராய்ச்சி, பொதுநலச் சேவைகள், கிழக்கு மேற்கு இஸ்லாம், மார்க்க கல்வியும் நவீன மாற்றங்களும், நவீனத்துவ சிந்தனைகள், ஆகிய 11 இயல்களில் எ.எம்.எ.அஸீஸ் அவர்களின் வாழ்வும் பணிகளும் ஆராயப்பட்டுள்ளன. பின்னிணைப்பாக அஸீஸின் ஆக்கங்களும், அஸீஸ் பற்றிய பிறரின் எழுத்துக்களும் இணைக்கப்பட்டுள்ளன.*

***6928***

***எ.எம்.எ.அஸீஸ்: பன்முகப் பார்வை.*** S.H.M.*ஜெமீல், மருதூர் ஏ.மஜீத் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 6: கலாநிதி எ.எம்.எ.அஸீஸ் மன்றம், 47/2*A *பிரெட்ரிகா வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).*

*86 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 21x15 சமீ.,* ISBN: *978-955-96694-6-3.*

கலாநிதி எ.எம்.எ.அஸீஸ் அவர்களின் 36ஆவது நினைவுதின வெளியீடாக 24.11.2009 அன்று வெளியிடப்பட்ட நூல். தந்தையைப் பற்றி ஒரு மகளின் இளமைக்கால நினைவுகள் (மரீனா இஸ்மாயில்), கல்முனைக்காலம்: 65 வருடங்களுக்கு முன்னர் கிழக்கின் அபிவிருத்திக்கு அஸீஸ் ஆற்றிய பங்களிப்பு (S.H.M.ஜெமீல்), அஸீஸ் என்னும் தயாளனே- கவிதை (கவிஞர் அப்துல் காதர் லெவ்வை), எ.எம்.எ.அஸீஸ் அவர்களை நினைவுகூருதல் (பேராசிரியர் கா.சிவத்தம்பி), கலாநிதி எ.எம்.எ.அஸீஸ்: 20ம் நூற்றாண்டின் முஸ்லிம் தலைவர்களுள் ஒருவர் (முஹம்மத் மன்சூர் ஆலம்) ஆகிய 5 ஆக்கங்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. கலாநிதி எ.எம்.எ.அஸீஸ் அவர்களின் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளையும் சந்திப்புகளையும் விளக்கும் புகைப்படத் தொகுப்பும் இறுதியில் இடம்பெற்றுள்ளது.

***6929***

***பிறையொளி: அதிபர் அன்பு ஜவஹர்ஷா பிரிவுபசார மலர்-2005.*** *அதிபர் அன்பு ஜவஹர்ஷா பிரிவுபசாரக் குழு. அனுராதபுரம்: அதிபர் அன்பு ஜவஹர்ஷா பிரிவுபசாரக் குழு, சாஹிரா மகாவித்தியாலயம், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*116 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ.*

இலங்கையின் பிரபல எழுத்தாளர்களுள் ஒருவரும், ஆசிரியரும், சுமார் 15 வருடகாலம் அனுராதபுரம் தேசிய பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றியவருமான வீ.சீ.எம். ஜவஹர்ஷா அவர்களின் சேவை ஓய்வின்போது வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். கல்வி மற்றும் இலக்கியத்துறையில் அவரது சிறந்த பணிகள் பற்றி பல்வேறு பிரமுகர்களின் நினைவுப்பதிகையாக இம்மலர் வெளிவந்துள்ளது.

***6930***

***வாழ்க்கைச் சுவடுகள்.*** *எஸ்.பிரான்சிஸ். மட்டக்களப்பு: அன்பு வெளியீடு, தவபதி, ஆரையம்பதி, 1வது பதிப்பு, 1996. (மட்டக்களப்பு: புனிதவளனார் கத்தோலிக்க அச்சகம், இல.10, வழக்கறிஞர் தெரு).*
*xi, 172 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.*

கல்வித்துறையில் நீண்டகாலம் பணியாற்றிய கிழக்கிலங்கையைச் சேர்ந்த ஆசிரியரின் வாழ்க்கை அனுபவங்கள் 31 சிறு அத்தியாயங்களில் தனித்தனியாக எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிலும் வாசகருக்கு ஒரு சுவையான செய்தியுண்டு. தனது வாழ்வில் தான் சந்தித்த கசப்பான அனுபவங்கள், மேற்கொண்ட முயற்சிகள், இனியதும் சுவைமிகுந்தவையுமான சம்பவங்கள் என்பன இவ்வத்தியாயங்களில் விரிகின்றன.

***6931***

***வித்துவ சிரோமணி கணேசையர்.*** *எஸ்.சிவலிங்கராஜா. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*
*56 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-090-0.*

இலங்கைத் தமிழ்ச் சுடர்மணிகள் வரிசையில் எட்டாவதாக வெளிவந்துள்ள இந்நூல், உரையாசிரியராகவும், இலக்கணப் பேரறிஞராகவும், கட்டுரையாளராகவும், பாடபேத ஆய்வாளராகவும், விவாத அறிஞராகவும், கவிபாடும் புலமைமிக்கோனாகவும், போதனாசிரியராகவும், பல்வேறு பரிமாணங்களில் அறியப்பட்ட சி.கணேசையரின் வாழ்வும் அவரது பன்முகப் பணிகளும் இந்நூலில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. அவர் உருவாக்கிச்சென்ற மாணாக்கர் பரம்பரை பற்றியும் இந்நூலில் குறிப்புகள் காணப்படுகின்றன. கணேசையரின் வாழ்வில் முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்த திகதிகள், கணேசையர் எழுதிய நூல்கள் ஆகியவை பின்னிணைப்பாகத் தரப்பட்டுமுள்ளன.

### *923.8* வர்த்தகர்கள்

***6932***

**உயர்திரு ஆர்.ஆர்.பூபாலசிங்கம் நினைவு மலர்.** மலர்க்குழு. யாழ்ப்பாணம்: அமரர் பூபாலசிங்கம் நினைவு மலர் வெளியீட்டுக் குழு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1982. (யாழ்ப்பாணம்: அபிராமி அச்சகம், 17 ஜும்மா பள்ளிவாசல் வீதி).
62 பக்கம், புகைப்படங்கள், விலை: அன்பளிப்பு, அளவு: 21.5x14 சமீ.

பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் ஆர்.ஆர்.பூபாலசிங்கம் அவர்களின் மறைவையொட்டி வெளியிடப்பட்ட நினைவு மலர். இலங்கையிலும் தமிழகத்திலும் இருந்து அவரது மறைவையொட்டி அனுப்பிவைக்கப்பட்ட அஞ்சலி உரைகளும், அவரது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 925 விஞ்ஞானிகள்

**6933**
**நோபல் பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள்.** நா.சு.சிதம்பரம். கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U G 50, பீப்பிள்ஸ் பார்க், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).
50 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 130., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1857-81-3.

நோபல் பரிசு இயற்பியல், பேரியல், மருந்தியல்- உடலியல், ஆகிய அறிவியல் துறைகளில் வழங்கப்பட்டு வருகின்றது. இதைவிட இலக்கியம், பொருளாதாரம். சமாதானம் போன்றவற்றுக்கும் வழங்கப்படுகின்றது. இந்நூல் நோபல் பரிசுபெற்ற இயற்பியல் அறிஞர்கள் வரிசையில் முதலாவது தொகுதியாக வெளிவந்துள்ளது. இதில் Wilhelm Conrad Rontgen, Hendrik Antoon Lorentz, Fyder Zeeman, Antoine Henri Becquerel, Maria Skboedowska Manya (Marie Curie), Pierre Curie, John William Strutt 3rd Baron Rayleigh, Philipp Edward Anton Von Lenard, Joseph John Thomson, Albert Abraham Michelson ஆகிய 10 அறிஞர்கள் இடம்பெறுகின்றார்கள்.

## 927 கலைஞர்கள்

### 927.5 ஓவியக்கலைஞர்கள்

**6934**
**சுந்தரின் கோகிலம்.** மலர் வெளியீட்டுக் குழு. (வெளியிட்ட இடம், வெளியீட்டு விபரம் தரப்படவில்லை). 1வது பதிப்பு, பெப்ரவரி 2005. (அச்சிட்ட இடம், அச்சக விபரம் தரப்படவில்லை).
63 பக்கம், புகைப்படங்கள், விலை: அன்பளிப்பு, அளவு: 21x15 சமீ.

சிரித்திரன் ஆசிரியர் சிவஞானசுந்தரம் அவர்களின் துணைவியாரான திருமதி கோகிலம் சிவஞானசுந்தரம் (3.12.1936-13.1.2005) அவர்களின் மரணத்தின்போது வெளியிடப்பெற்ற அஞ்சலி மலர். லண்டனில் சில இதழ்கள் மட்டுமே வெளிவந்த மனம் பேசுது (ஆசிரியர் ஈ.கே.ராஜகோபால்) சஞ்சிகையில் திருமதி கோகிலம் தன் கணவர் சிரித்திரன் சுந்தர் பற்றி எழுதிய வாழ்க்கை நினைவுகளுடன் தொடங்கி, துன்னாலை செல்வம், அகளங்கன், ராதேயன், பத்திரிகையாளர் விஜயராகவன், சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம், செம்பியன் செல்வன், செ.யோகநாதன், திக்கவயல் தர்மகுலசிங்கம், கமலாவதி செல்வராஜா, வே.ஜே.போஸ், நவாலியூர் நடேசன், சுப்பிரமணியக் குருக்கள், புதினம் ராஜகோபால், கனக.சுகுமார், சுதாராஜ், எம்.கே.முருகானந்தன் ஆகியோரின் சிரித்திரன் குடும்பம் பற்றிய மலரும் நினைவுகளும் இம்மலரில் புகைப்பட நினைவுகளுடன் இடம்பெற்றிருக்கின்றன.

## 928 இலக்கிய அறிஞர்கள்

**6935**
**அமரர் வை.அநவரத விநாயகமூர்த்தி: சில இலக்கியப் பதிவுகள்.** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்னை: சிந்தனை வட்டம், 14, உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, ஜனவரி 2010. (Udatalawinna: C.V/Publishers Ltd., Printing Division, 14 Udatalawinna Madige).
36 பக்கம், படங்கள், விலை: அன்பளிப்பு, அளவு: 14x13 சமீ., ISBN: 978-955-1779-29-0.

யாழ்ப்பாண மாவட்டத்தின் இணுவில் கிராமத்தில் பிறந்த அமரர் வைத்தியலிங்கம் அநவரத விநாயகமூர்த்தி (31.08.1923-07.12.2009) அவர்கள் ஈழத்தின் குறிப்பிடத்தக்க படைப்பாளியும் ஊடகவியலாளருமாவார். அன்னாரின் மறைவையொட்டி அஞ்சலி மலராக வெளியிடப்பெற்றுள்ள இந்நூலில் இடம்பெற்றுள்ள அவரது வாழ்வும் பணிகளும் பற்றிய விரிவான கட்டுரை முன்னதாக ஞாயிறு தினக்குரல் பத்திரிகையிலும், இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத் திரட்டு தொகுதி 11இலும் (இவர்கள் நம்மவர்கள்-பாகம்1) வெளிவந்திருந்தது.

**6936**

**இவர்கள் நம்மவர்கள் பாகம் 5.** பீ.எம்.புன்னியாமீன். உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்டம், 14 உடத்தலவின்னை மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (உடத்தலவின்னை 20802: சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவு, 14, உடத்தலவின்னை மடிகே).
212 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு 21.5 x14.5 சமீ., ISBN: 978-955-1779-17-7.

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி - 15 ஆகவும் குறிப்பிடப்பெற்று வெளிவந்துள்ள இந்நூல் **இவர்கள் நம்மவர்கள்** என்ற புதிய தொடரில் பாகம் 5 ஆகத் தொடர்கின்றது. இந்நூலில் தி.ஞானசேகரன், லெ.முருகபூபதி, சக்தீ அ.பாலஐயா, திமிலைத்துமிலன், ஏறாவூர் தாஹிர், கந்தையா செல்வநாயகம், த.கோபாலகிருஷ்ணன், தில்லையடிச் செல்வன், நீலாபாலன், வயிரமுத்து கந்தசாமி, செபஸ்தியாம்பிள்ளை ஞானராசா, மண்டூர் அசோகா, கனிவுமதி சந்திரசேகரம், முருகப்பன் கணபதிப்பிள்ளை, கனகசபை சிவகுருநாதன், கண்டாவளைக் கவிராயர் - சி.கு.இராசையா, அ.அந்தோனிமுத்து, மொஹம்மது நிசார், தாமரைத்தீவான்-சோ.இராசேந்திரன், பெரியதம்பி ஐங்கரன், இளையதம்பி நடராசா, எஸ்.எம்.ஹனிபா, ஆனந்தன் மோகனதாஸ், எஸ்.எம்.எம்.மஹ்ரூப், செல்லத்தம்பி மகேஸ் ஆகிய 25 படைப்பாளிகளின் வாழ்வும் பணிகளும் புகைப்படச் சான்றுகளுடன் பதிவிடப்பட்டுள்ளது. பின்னிணைப்பில் அரசியலால் பந்தாடப்பட்ட இலக்கிய விழா என்ற தலைப்பில் நூலாசிரியரினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஒரு இலக்கியவிழா பற்றிய இணையத்தளக் கட்டுரையும், இணையத்தள பின்னூட்டங்களும் (தேசம் நெற்) இடம்பெற்றுள்ளன.

**6937**

**ஈழத்தின் தமிழிலக்கியச் சுடர்கள்.** கா.சிவத்தம்பி. கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3 ரம்யா பிளேஸ், 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
xlvi, 249 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-242-9.

இத்தொகுதியில் இலங்கையில் ஆங்கிலவாட்சிக் காலத்திலேயும் அதன் பின்னரும் ஈழத்து இலக்கிய உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் முக்கிய இடத்தைப் பெறுகின்ற பின்வரும் பதினொருவர் பற்றிய அறிமுகவாய்வு இடம்பெற்றுள்ளது: ஆறுமுக நாவலர் (1822-1879), சி.வை.தாமோதரம்பிள்ளை (1833-1901), ச.வயித்திலிங்கம்பிள்ளை (1843-1900), சுவாமி விபுலானந்தர் (1892-1947), பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை (1899-1986), பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை (1903-1968), பேராசிரியர் வி.செல்வநாயகம் (1907-1973), வண.தனிநாயகம் அடிகள் (1913-1980), பேராசிரியர் ம.முஹம்மது உவைஸ் (1922-1996), பேராசிரியர் சு.வித்தியானந்தன் (1924-1989), பேராசிரியர் க. கைலாசபதி (1933-1982). இந்நூலின் பின்னிணைப்பாக ஈழத்தின் தமிழ் இலக்கிய வரலாறு (பிரித்தானியர் காலம் வரை) என்ற கட்டுரையும் இடம்பெற்றுள்ளது.

**6938**

**ஈழத்து முஸ்லீம் புலவர்கள்: தொகுதி 1: கருங்கொடியூர்க் கவிவளம்.** ஏயாரெம் ஸலீம். அக்கரைப்பற்று: பிறைப்பண்ணை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1962. (கொழும்பு 13: ரெயின்போ பிரின்டர்ஸ், 231 ஆதிருப்பள்ளித் தெரு).
74 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18x12.5 சமீ.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம் புலவர்கள் ஆற்றிய தொண்டினை இந்நூல் பதிவுசெய்கின்றது. புலவர்களின் வாழ்வும் பணிகளும் சொல்லப்பட்டிருப்பதோடு, இவர்கள் எழுதிய பாடல்களும் இங்கு பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவ்வகையில் வரகவி ஷெய்கு மதார்ப் புலவர்,

முஹம்மது றாவிப் புலவர், முஹம்மது ஹாஷிம் ஆலிம் புலவர், அப்துற்றஹ்மான் லெப்பை ஆலிம் புலவர் ஆகியோர் பற்றி இந்நூல் விரிவாகத் தகவல்களைத் தருகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 280606).

**6939**

**ஈழம் தந்த கேசரி.** கனக.செந்திநாதன். தெல்லிப்பழை: ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், குரும்பசிட்டி, 1வது பதிப்பு, 1968. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).
xiv, xxiv, 152 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18x12.5 சமீ.

ஈழகேசரி பொன்னையா அவர்களின் நினைவாக அவரது வாழ்வும் பணிகளும் பற்றிய பதிவினை இந்நூல் மேற்கொண்டுள்ளது. தான் பிறந்த சாதாரணக் கிராமமான குரும்பசிட்டியில் சன்மார்க்க சபையை தாபித்து வளர்த்து, அதன் மூலம் குரும்பசிட்டியை உலகறியச் செய்தவர் ஈழகேசரி நா.பொன்னையா அவர்கள். சி.வை.117, விளையும் பயிர், சகடக்கால், இரண்டு கண்கள், பயன் மரம், உத்தரவராகம், மூன்றாங்கண், சன்மார்க்க சபை, என்கடன் பணிசெய்து கிடப்பதே, நல்ல கமக்காரன், நீர் நிறைந்த ஊருணி, அணைந்த தீபம், கன்றுங் கனியுதவும் ஆகிய 13 தலைப்புகளில் இந்நூல் அன்னாரின் வாழ்க்கையை விதந்து எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275042).

**6940**

**கலைப்புலவர் க.நவரத்தினம்.** தமிழினி கமல்ராஜ். கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா வீதி, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 10: குமரன் பதிப்பகம், B3-G3, ரம்யா வீதி).
45 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-161-3.

இலங்கைத் தமிழ்ச் சுடர்மணிகள் வரிசையில் வெளிவந்த பதின்நான்காவது நூல். இந்நூல் கலைப்புலவர் கந்தையாபிள்ளை நவரத்தினம் (1898-1962) அவர்களின் வாழ்வையும் அவரது பணிகளையும் பதிவுசெய்துள்ளார். அறிமுகம், கலைப்புலவரின் கருத்துருவாக்கமும் எழுத்துருவாக்கமும், கலைப்புலவரின் கலாநிலையம், கலைப்புலவரும் கலை எழுத்துக்களும், கலைப்புலவரின் சமய, சமூக. மொழிப் பணிகள், நிறைவுரை ஆகிய ஆறு இயல்களில் இப்பணிகள் ஆவணப்படுத்தப்படுகின்றது. பின்னிணைப்பாக கலைப்புலவர் வாழ்வில் முக்கிய திகதிகள், கலைப்புலவரின் நூல்கள், 1955இல் நடந்த கலைப்புலவரின் இலங்கையின் கலை வளர்ச்சி நூலின் வெளியீட்டு விழாவுக்கான அழைப்பிதழ் ஆகியன இடம்பெற்றுள்ளன.

**6941**

**தமிழ்ப் பேரறிஞர் சைமன் காசிச்செட்டி வரலாறும் பணிகளும்: கட்டுரைகளின் தொகுப்பு.** க.இ.க.கந்தசுவாமி (தொகுப்பாசிரியர்). கொழும்பு: பேரறிஞர் சைமன் காசிச்செட்டி நினைவுப் பெருமன்றம், 1வது பதிப்பு, மார்ச் 2007. (கொழும்பு 6: டெக்னோ பிரின்டர்ஸ், 55 Dr. E.A.Cooray Mawathe).
108 பக்கம், தகடுகள், விலை: ரூபா 200., அளவு: 22x14.5 சமீ.

சைமன் காசிச்செட்டி அவர்களின் 200 ஆண்டு நிறைவு வெளியீடாக 21.3.2007 அன்று வெளியிடப்பட்ட இந்நூல் அன்னார் பற்றிய 13 கட்டுரைகளை உள்ளடக்கியது. வடமேல் பிரதேசப் பெரியார் திரு. சைமன் காசிச்செட்டி, தமிழ் ஆய்வுத்துறைப் பேரறிஞர் சைமன் காசிச்செட்டி, சைமன் காசிச்செட்டியார் 1807-1860, ஈழத்துத் தமிழ்ச் சான்றோர் சைமன் காசிச்செட்டி 1807-1860, சைமன் காசிச்செட்டி தந்த சிலோன் கசெற்றியர், காலத்தாற் கரையாத கருங்கற்சிலை சைமன் காசிச்செட்டி, பேரறிஞர் காசிச்செட்டி வாழ்வகம், வடமேற்குப் பிரதேச வரலாற்று ஆய்வு, மார்க்போலோ பிரயாண நூல், வாழ்த்துரை, இலங்கையின் அறிவியல் மரபுக்கு வித்திட்ட பேரறிஞர் சைமன் காசிச்செட்டி ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 615996).

**6942**

**பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஈழத்துத் தமிழ்ப் புலவர் உடுப்பிட்டி அ.சிவசம்புப் புலவர் வரலாறும் அவரது ஆக்கங்களும்.** ந.நகுலசிகாமணி. கனடா: வல்வை வரலாற்று

ஆவணக் காப்பகம், Valvai Historical Document conservation Centre, 3947, Lawrence Avenue East, 413, Scarborough, Ontario, *1வது பதிப்பு, 2010. (கனடா: விவேகா அச்சகம்).*
*(4), 194 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19*x*13 சமீ.*

*உடுப்பிட்டி சிவசம்புப் புலவரின் வாழ்க்கை வரலாறும் அவர் எழுதிய பல்வேறு பாடல்களும் இந்நூலில் மீள்பதிப்புக்குள்ளாகியுள்ளன. பருத்தித்துறை கலித்துறை, கந்தவனநாதர் ஆசிரிய விருத்தம், வல்வைக் கலித்துறை, இராமநாதபுரம் பாற்கரசேதுபதி, கல்லாடக் கலித்துறை, பருத்தித்துறைப் புலோலி நால்வர் மணிமாலை, வல்வை வாளிச் சித்திவிநாயகர் ஊஞ்சல் எச்சரீக்கை, பராக்கு, லாலி, மங்களம் என்பன, ஆறுமுகநாவலர் சிதம்பர நடராஜர் நிழலை அடைந்தபோது சொல்லப்பட்ட செய்யுள்கள், 1876 பருத்தித்துறை புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் பிள்ளைகளைப் பரீட்சிக்கப்போயிருந்தபோது இயற்றிய செய்யுள் என்பன இந்நூலில் மீள்பதிப்புக்கண்டுள்ளன.*

***6943***
***யார் இந்த புலவர் ச.தம்பிமுத்துப்பிள்ளை.*** *மியர் ஜேம்ஸ் துரைராஜா (ஆங்கில மூலம்), அ.யோண் ஜோர்ஜ் (தமிழாக்கம்). கல்கிசை: திருமகள் பதிப்பகம், இல.7 லில்லியன் அவென்யூ, 1வது பதிப்பு, ஆனி 2010. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட், 44 புகையிரத நிலைய வீதி).*
vi, *57 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21*x*15 சமீ.,* ISBN: *978-955-1055-08-0.*

*1857இல் அச்சுவேலி பத்தமேனியில் பிறந்த தம்பிமுத்துப்பிள்ளை (06.08.1857- 1934) வட்டுக்கோட்டை முத்து மரியான் செட்டியாரின் மகனான சந்தியாகுபிள்ளையின் மகனாவார். மானிப்பாய் சிற்றம்பலம் கார்டினரின் மகளை 1878இல் விவாகம் செய்தவர். சிறந்த கவிஞரான இவர் சுகுணநெறிப் போதகம், அர்ச. சூசையப்பர் பதிகம், மடுமாதாவின் கீர்த்தனம், வியாகுலாமாதாவின் ஒப்பாரி உள்ளிட்ட 16 நூல்களை எழுதியவர். இதைவிட 28 நாடக நூல்களையும் பதிப்பித்திருக்கிறார். இவரது வளர்ப்புமகனாரே சுவாமி ஞானப்பிரகாசராவார்.*

***மேலும் பார்க்க:*** *6824*

*940 ஐரோப்பிய வரலாறு*

***6944***
***உரோமானிய வரலாற்றுச் சுருக்கம்.*** *எச்.எவ்.பெல்கம். கொழும்பு: வெளியீட்டுப் பிரிவு, அரசாங்க பாஷைப் பகுதி, 5, பொன்சேக்கா வீதி, 1வது பதிப்பு, 1966. (இலங்கை: அரசாங்க அச்சகம்).*
xii, *432 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*14 சமீ.*

*நூலாசிரியர்* H.F.Pelham, *பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் திரித்துவக் கல்லூரி அதிபராகவும், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் முன்னாள் சரித்திரப் பேராசிரியருமாகப் பணியாற்றியவர். அவர் எழுதிய* Outlines of Roman History *என்ற நூலின் 5வது பதிப்பின் தமிழாக்கம் இதுவாகும். க.செ.நடராசா அவர்கள் இந்நூலின் முதல் 159 பக்கங்களையும் மொழிபெயர்க்க, 160-421 வரையுள்ள பக்கங்களை திரு. ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் மொழிபெயர்த்துள்ளார். ரோமாபுரியின் நிர்மாணம் முதற்கொண்டு கி.பி.4ம் 5ம் நூற்றாண்டு வரையில் நிகழ்ந்த மிலேச்சர் படையெடுப்பு, மேலைத்தேசங்களின் ஆதிபத்தியம் ஆகியன வரையிலான உரோம வரலாற்றினை எடுத்துக்கூறுகின்றது.*

*941 பிரித்தானிய வரலாறு*

***6945***
***இங்கிலாந்தின் வரலாறு 1ம் பாகம்.*** *யோ.ம.திரவெலியன். கொழும்பு 7: வெளியீட்டுப் பிரிவு, அரசகரும மொழித் திணைக்களம், 1வது பதிப்பு, 1964. (இலங்கை: அரசாங்க அச்சகம்).*
xiv, *(2), 556 பக்கம், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*14 சமீ.*

நூலாசிரியர் G.M.Trevelyan, 1940-1951 வரை பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் திரித்துவக் கல்லூரி அதிபராகவும், முன்னதாக கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் தற்கால வரலாற்றுத்துறை பேராசிரியராகவும் இருந்தவர். லோங்மன்ஸ், கிரீன் வெளியீட்டகத்தின் அனுமதியுடன் இந்நூல் இலங்கை அரசினால் வெளியிடப்பட்டுள்ளது. ஆங்கில முதனூலின் முதலாம், இரண்டாம், மூன்றாம் நூல்களை உள்ளடக்கிய பதிப்பு இதுவாகும்.

**6946**

**இங்கிலாந்தின் வரலாறு 2ம் பாகம்.** யோ.ம.திரவெலியன். கொழும்பு 7: வெளியீட்டுப் பிரிவு, அரசகரும மொழித் திணைக்களம், 1வது பதிப்பு, 1964. (இலங்கை: அரசாங்க அச்சகம்).
xii, (4), 556 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

நூலாசிரியர் G.M.Trevelyan, 1940-1951 வரை பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் திரித்துவக் கல்லூரி அதிபராகவும், முன்னதாக கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் தற்கால வரலாற்றுத்துறை பேராசிரியராகவும் இருந்தவர். லோங்மன்ஸ், கிரீன் வெளியீட்டகத்தின் அனுமதியுடன் இந்நூல் இலங்கை அரசினால் வெளியிடப்பட்டுள்ளது.

## 950 ஆசிய வரலாறு

**6947**

**விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்: ஆய்வரங்குச் சிறப்பு மலர்.** மலர்க்குழு. கொழும்பு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
viii, 201 பக்கம், வண்ணத்தகடுகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

கி.பி.1336இல் வைதீக சமயத்தைக் காக்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட விஜயநகரப் பேரரசின் மன்னர் முதலாம் புக்கரின் மகன் குமாரகம்பணன் தமிழகத்தில் கி.பி.1371இல் விஜயநகரப் பேரரசின் மேலாதிக்கத்தை நிலைநாட்டினார். இந்து சமய வரலாற்றின் புத்தெழுச்சிக் காலமாகக் கருதப்படும் விஜயநகர நாயக்கர் காலம் பற்றிய பல்வேறு வரலாற்று நிகழ்வுகளை இந்நூலிலுள்ள 13 ஆய்வுக்கட்டுரைகள் பதிவுசெய்கின்றன. விசயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்: ஆய்வரங்கச் சிறப்புரை 2009 (பேராசிரியர் கு.சேதுராமன்), விஜயநகரப் பேரரசு (பேராசிரியர் க.அ.நீலகண்ட சாஸ்திரிகள்), நாடும் மக்களும் (கலாநிதி தெ.வே.மகாலிங்கம்), விஜயநகரப் பேரரசுக் காலச் சமுதாயமும் பண்பாடும் (மங்கள முருகேசன்), விஜயநகரப் பேரரசுக் காலச் சமய நூல்கள்: கி.பி.1100-1700 (பேராசிரியர் மு.வரதராசன்), விஜய வேந்தர் காசுகள் (கலாநிதி நடனகாசிநாதன்), நாயக்கர் காசுகள் (கலாநிதி நடனகாசிநாதன்), விஜயநகரக் கலைப்பாணி (பேராசிரியர் சி.பத்மநாதன்), நாயக்கர் கலைப்பாணி (பேராசிரியர் சி.பத்மநாதன்), விஜயநகர காலச் சிற்பக்கலை (கலாநிதி இராசு காளிதாஸ்), நாயக்கர் கால சிற்பக் கலைகள் (பேராசிரியர் சி.பத்மநாதன்), விஜயநகர காலத்து ஓவியங்கள் (பேராசிரியர் சி.பத்மநாதன்), நாயக்கர் காலத்து ஓவியங்கள் (பேராசிரியர் சி.பத்மநாதன்) ஆகிய 13 கட்டுரைகள் இச்சிறப்பு மலரில் தொகுக்கப்பட்டுள்ளன.

## 954 இந்திய வரலாறு

**6948**

**ஆழ்கடலுக்குள் என் ஆருயிர் முன்னோர்: ஒரு தொல்குடி தோன்றலின் உள் உயிர்த்தேடல்.** ந.சிவநாதன். சென்னை 600017: நவரத்தினம் பதிப்பகம், 62/49, பர்கிட் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2007. (சென்னை 600017: சித்ரா அச்சக உலகம், தி.நகர்).
xvi, 544 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: இந்திய ரூபா 300., அளவு: 21.5x14 சமீ.

இந்து சமுத்திரத்தின் உயர்வையும் தாழ்வையும் உற்றுநோக்கி அதன் காரண காரியங்களை அறியவேண்டும் என்ற நூலாசிரியரின் தேடலே இவ்வாய்வு நூலின் வருகையாகும். உலக அமைதி, அரசியல், நீதி, உரிமைகள், ஒருமைப்பாடு, மனிதநேயம், கீழைத்தேயங்களின் தொன்மையான வரலாறு, தமிழர்களின் வளர்ச்சி, வீழ்ச்சி, தமிழிமொழியின் பிறப்பு, உயிர்ப்பு, பூகோளவியல்,

மானுடவியல், மதக் கோட்பாடுகள், அகழ்வாய்வுகள், அறிவியல், புலம்பெயர் வாழ்வின் நன்மைகளும் தீமைகளும் ஆகியவற்றை நூலாசிரியர் ஆழமாக ஆய்வுசெய்துள்ளார். ஈழத்தின் முதுபெரும் புலவர் நல்லதம்பியின் மகனான நூலாசிரியர் புலவர் ந.சிவநாதன் 30 ஆண்டுகளுக்கும் மேலாக லண்டனில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருபவர்.

**6949**

**இந்து சமுத்திரத்தின் முத்துக்கள்: அழிந்துபோன லெமூரியாக் கண்டமும் அழியாத அரிய உண்மைகளும்.** சதா விவேகானந்தா. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600014: பி.வி.ஆர்.ஆப்செட்).
172 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 21.5x14.5 சமீ.

இனம் மதம் மொழி தோன்றிய பூர்வீகத் தமிழ்நாடு, பூர்வீகத் தமிழ்மக்கள் வாழ்ந்த வாழ்க்கை, ஒருபிடி சோற்றில் உலகைக் காணலாம், காலந் தெரியாத மொழி தமிழ்மொழி, இல்லறம்-பேரன்புக்குப் பயிற்சி, மரணத்திற்குப் பின்னால், ஆன்மார்த்த பூசைக்குரியது சிவபுராணம், சிவபெருமானால் ஆடப்பெற்ற சிவதாண்டவங்கள், மதங்களும் மனிதர்களும்-ஆன்மீக முத்துக்களில் சில, கர்ம யோகம், புத்தரின் பொன்மொழிகள், பிரபஞ்சம் பேரண்டம், பிரபஞ்சம் சிற்றண்டம், மக்கட்பேறு, புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் கடமை ஆகிய தலைப்புகளில் தமிழரின் வாழ்வியல் பெருமைகூறும் 15 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

**6950**

**கம்பனியாட்சியிலும் முடியாட்சியிலும் பிரித்தானிய இந்தியாவின் வரலாறு: 2ம் பாகம்.**
P.E.உறோபேட்சு (மூலநூலாசிரியர்), T.G.P.இசுப்பியர் (முற்றுப்படுத்தியவர்). கொழும்பு 7: வெளியீட்டுப் பிரிவு, அரசகரும மொழித் திணைக்களம், 1வது பதிப்பு, ஜுன் 1965. (இலங்கை: அரசாங்க அச்சகம்).
(10), 242 பக்கம், படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

History of British India under the Company and the Crown என்ற தலைப்பில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவந்த நூலின் இரண்டாம் பாகத்தின் தமிழாக்கமாகும். இது இலங்கை அரசாங்கப் பதிப்பாக வெளியீட்டாளரின் அனுமதியுடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதன் தமிழ் மொழிபெயர்ப்பாளர் திருமதி ப. கிருஷ்ணன் அவர்கள்.

**6951**

**சோழர்காலத்துக் கோயிலும் சமூகமும்.** வல்லிபுரம் மகேஸ்வரன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).
xxii, 355 பக்கம், விலை: இந்திய ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-098-6.

கோயிலை ஒரு சமூக நிறுவனம் என்ற நோக்கில் ஆராய்ந்து இந்நூலில் வெளிப்படுத்தியுள்ளார். கோயிலுக்கும் அரசுக்கும் இடையே இருந்த தொடர்பு, கோயில் நடவடிக்கைகளில் இடையர் மற்றும் பெண்களின் பங்களிப்பு, கோயில் நிர்வாகத்தில் உள்ளூர் சமூகத்தின் பங்கு ஆகியவற்றினை விரிவாக விளக்கியுள்ளார். தமிழகத்தில் கோயில் கட்டட மரபின் வரலாற்றை இலக்கியத் தரவுகளோடு தொல்லியல் தரும் செய்திகளையும் பயன்படுத்தி நிரல்படச் சொல்லியுள்ளார். மக்கள் பரவலாகப் போற்றிய கிராமத் தெய்வங்கள், பிடாரி போன்ற பெண் தெய்வங்கள், நாளடைவில் பல்லவ, சோழ அரச குலங்களால் போற்றப்பட்டன என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட வ.மகேஸ்வரன் (1955), பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரான இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் சிறப்புக் கலைமாணிப்பட்டத்தையும் முதுதத்துவமாணிப் பட்டத்தையும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்தினையும் பெற்றவர்.

**6952**

***தமிழகப் பூர்வீக வரலாறும் அரிய செய்திகளும்.*** *தனபாக்கியம் குணபாலசிங்கம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2008. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).*
*432 பக்கம், விலை: ரூபா 600., இந்திய ரூபா 125., அளவு: 17.5x12.5 சமீ.*

*தமிழ்-தமிழர், தமிழகம்-தமிழ்நாடு: ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம், ஆரியர்-ஆரியம் கருத்தாய்வு, தமிழ் இலக்கியங்களில் ஆரியர்-ஆரியம்: ஒரு இலக்கியக் கண்ணோட்டம், கிழக்கே வங்கம் வரை பரவிய ஆரியமும் ஈழத்தில் வங்க இளவரசர் விஜயனின் குடியேற்றமும், கடைச்சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்ற வைதீக வழிபாட்டு நெறிகள், தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்ற அந்தணர்கள், ஆய்வுகள் கடந்து நிற்கும் தமிழகமும், வரலாறுகளும், தமிழகத்து ஆய்வேளிர் குடியரசுகளின் பூர்வீகமும் கருத்துகளும், வாழ்ந்துகொண்டிருக்கும் மழவராயர்கள், அருவாளர்-தொண்டையர்: நாக சோழ பல்லவர், வேத காலப்பிராமணர் சமூக உருவாக்கமும் புலம் பெயர்தல்களும் ஆகிய தலைப்புகளில் அமைந்த 11 இலக்கிய ஆய்வுக்கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 630641).*

***6953***
***வியத்தகு இந்தியா: முகமதியர் வருகைக்கு முன் இந்தியத் துணைக் கண்டத்திலே நிலவிய பண்பாட்டை ஆராய்வது.*** *ஏ.எல்.பசாம் (மூல ஆசிரியர்), செ.வேலாயுதபிள்ளை, மகேசுவரி பாலகிருட்டினன் (தமிழாக்கம்). இலண்டன்: சிட்சுவிக்கு, யாக்சன் கம்பனியார் இணை வெளியீடு, பத்தரமுல்லை: இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுருபாயா, 2வது பதிப்பு, 2005, 1வது பதிப்பு, 1963. (இலங்கை: அரசாங்க அச்சகம்).*
xxvi, *706 பக்கம், விலை: ரூபா 495., அளவு: 24.5x15.5 சமீ.*

*இந்நூல் ஏ.எல்.பசாம் ஆங்கிலத்தில் எழுதிய* The wonder that was India *என்ற நூலின் தமிழாக்கமாகும். இந்திய வரலாற்றையும் இந்தியப் பண்பாட்டையும் பற்றி இந்நூல் விளக்குகின்றது. இந்நூலின் சிறப்பியல்பு, இந்தியாவின் அரசியல் வரலாற்றிலும் பார்க்க அதன் பண்பாட்டு வரலாற்றில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளமையாகும். அரசியல் வரலாற்றில் பிரபலமான கதைகளை இரத்தினச் சுருக்கமாகவும், பண்டைய பண்பாடு, ஆசாரம் முதலியவற்றை விளக்கமாகவும் ஆசிரியர் தந்துள்ளார். வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாய் முகலாயர் படையெடுப்பு வரையும் நிகழ்ந்த, பல்வேறு பகைவரின் படையெடுப்புகளையும், மற்றும் பண்பாட்டு மோதுகைகளினால் இந்தியாவிலே சமயம், சமூகம், வரலாறு, கவின் கலைகள், சிற்பம் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களையும் இந்நூல் விபரிக்கின்றது.*

***954.93*** *இலங்கை வரலாறு*

***954.93(1)*** *இலங்கையின் பொது வரலாறு*

***6954***
***தமிழ் மன்னன் மாகோனின் மகத்தான வரலாறு.*** *க.தங்கேஸ்வரி. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 4: ஸ்ரீ முருகன் ஆ.்.ப்செட்).*
xxiv, *216 பக்கம், வரைபடம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 90., அளவு: 21x14 சமீ.*

*களனிப் பல்கலைக்கழக தொல்லியல் சிறப்புப் பட்டதாரியான தங்கேஸ்வரி, மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தராகப் பணியாற்றியவர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகவும் சேவையாற்றியவர். இவ்வாய்வினை மாகோன் அறிமுகம், மாகோன் பற்றிய வரலாறுகள், கலிங்கமும் ஈழமும், மாகோன் வருகை, ஈழத்தில் மாகோனின் ஆட்சி, மாகோனின் துணைவர்கள், மாகோன் வகுத்த வன்னிமை, பண்பாட்டுக் கோலங்கள், மாகோன் காலத்தில் ஈழத்தில் இடம்பெற்ற பாண்டியர் படையெடுப்புக்கள், மாகோனுக்கு ஏற்பட்ட பாதிப்புகள், மாகோனும் வட இலங்கையும், முற்றுப்பெறாத காவியம் ஆகிய இயல்களினூடாக விரிவாக முன்னெடுத்துச் சென்றுள்ளார்.*

***954.93(2)*** *இலங்கை இனப்பிரச்சினை வரலாறு*

***6955***

***அவசரகாலமும் பாராளுமன்றமும்: 1997 ஜனவரி-ஜுலை ஏழு அவசரகால விவாதங்கள் பற்றிய ஆய்வு.*** *மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம். கொழும்பு 7: மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், 32/3 பிளவர் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1997. (கொழும்பு 10: குளோப் அச்சகம், 01 கே.டி.டேவிட் மாவத்தை).*

vi, *59 பக்கம், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22*x*29 சமீ.,* ISBN*: 955-955-04-0.*

*இந்நூல் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவசரகாலமும் பாராளுமன்றமும் என்ற முதலாவது பிரிவில் முன்னுரை, அறிமுகம்-நோக்கம், விவாதத்தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் மாவட்ட மற்றும் கட்சி பிரதிநிதித்துவம், அவசரகால விவாதம் பற்றிய ஓர் ஆய்வு, உரைகளின் உள்ளடக்கம், அவசரகால விவாதத்திற்கு பங்களிப்புச்செய்த பா.உ களது உரைகளின் உள்ளடக்கமும் இயல்பும், அவசரகால விவாதத்தின்போது யுத்தம் தொடர்பான செய்திகள் குறித்த ஆய்வு, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்களின் பிரச்சினைகள், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக முன்வைக்கப்பட்ட யோசனைகள், யுத்தமும் பொருளாதாரமும், அவசரகாலம் மீதான வாக்கெடுப்பு, எல்லைப் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் கருத்துக்கள், அவசரகால விவாதத்தில் இருந்து தோற்றம்பெறும் ஏனைய விடயங்கள், முடிவுரை, உரைகளின் மேலதிக விபரங்கள் பற்றிய தொகுப்பு ஆகியவை இடம்பெற்றுள்ளன. அவசரகாலம், அரசியல். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற இரண்டாவது பிரிவில், அறிமுகம், உரைகளின் பிரதான குணாம்சம், பிரதான இரண்டாந்தர பிரச்சினைகள், சமாதானம், மோதல் தீர்வு என்பவை தொடர்பான நடத்தைகள், விரக்தி, ஒரே நாடு, ஒரே தேசம், ஒரே மக்கள், தீர்வுத்திட்டம், பங்குபற்றுதல் பிரச்சினை ஆகிய தலைப்புகளில் இடம்பெற்றுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 502172).*

***6956***

***ஆவணி அமளி: சன்சோனி ஆணைக்குழு முன் தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம்.***
*க.சச்சிதானந்தன் (தொகுப்பாளர்). கொழும்பு 3: தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம், 17, அல்பிரட் பிளேஸ், 1வது பதிப்பு, மார்ச் 1978. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 213 காங்கேசன்துறை வீதி).*

*(6),* 66+6+170 *பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18*x*12 சமீ.*

*1977 ஆவணி மாதம் இலங்கைத் தீவடங்கிலும் தமிழ்-சிங்கள இனக் கலவரம் இடம்பெற்றது. இக்கலவரங்களில் நடைபெற்ற நிகழ்வுகள், நிகழ்வுகளின் தன்மை, கலவரத்திற்குக் காரணம், அதனால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணம், கலவரம் மீண்டும் நடைபெறாதிருக்க வழிவகைகள் என்பனவும் பிறவும் பற்றி விரிவான அறிக்கையைத் தருமாறு எம்.சி.சன்சோனி அவர்கள் இலங்கைக் குடியரசின் தலைவரால் பணிக்கப்பட்டார். பாதிக்கப்பட்ட தமிழர்களின் சார்பில் தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம் முன்வைத்த ஆங்கில அறிக்கையின் தமிழாக்கம் இதுவாகும். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 337261).*

***6957***

***இலங்கை: ஒரு கசந்துபோன அறுவடை.*** *எலிசபெத் நிசான் (ஆங்கில மூலம்), எஸ்.அன்ரனி நோபேர்ட் (பதிப்பாசிரியரும் மேற்பார்வையாளரும்). லண்டன்* SW9 7DE*: சிறுபான்மை உரிமைக்குழு, 379* Brixton Road*, 1வது பதிப்பு, 1997. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B*, புளுமெண்டால் வீதி).*

*62 பக்கம், அட்டவணை, வரைபடம், விலை: ரூபா 125., அளவு: 30*x*20.5 சமீ.,* ISBN*: 955-580-022-7.*

*சிறுபான்மை உரிமைக்குழு (*Minority Rights Group*) அறிக்கையாக வெளிவந்துள்ள இந்நூலின் ஆசிரியர்* Elizabeth Nissan *தென்னாசிய விடயங்களில் நிபுணத்துவம் பெற்ற ஒரு ஆலோசக எழுத்தாளர். லண்டன் பல்கலைக்கழகத்தில் பொதுநலவாய ஆய்வுகள் நிறுவனத்தில் ஆய்வாளராகப் பணியாற்றுகின்றார். இந்நூல் கொழும்பு, இனத்துவத்துக்கான சர்வதேச நிலையத்தினால் (*International Centre for Ethnic Studies, Colombo*) விநியோகிக்கப்பட்டது. அரசும்*

*சிறுபான்மையினரும், தமிழ் போராட்டத்திற்கான பாதையும் இந்தியக் குறுக்கீடும், வளர்ச்சியில் சிறுபான்மையினரின் பங்கேற்பு, சிறுபான்மையினரின் குடியுரிமை மற்றும் அரசியல் உரிமைகள், கல்வி: பாரபட்சங்களை நிரந்தரமாக்குதல், ஆகிய பிரதான தலைப்புகளில் இவ்வறிக்கை விரிந்துள்ளதுடன் சில பரிந்துரைகளும் வழங்கப்பட்டுள்ளன.*

***6958***

***இலங்கையில் சமாதானம் பேசுதல்: முயற்சிகள், தோல்விகள், மற்றும் பாடங்கள் தொகுதி 1.*** *குமார் ரூபசிங்க (தொகுப்பாசிரியர்). கொழும்பு 3: ஆய்வு மற்றும் ஆவண நிலையம், சகவாழ்வுக்கான மன்றம், 105/3, ஐந்தாவது ஒழுங்கை, 2வது பதிப்பு, பெப்ரவரி 2006, 1வது பதிப்பு, 2002. (மகரகம: இம்பல்ஸ் அச்சக மற்றும் வெளியீட்டாளர்கள், இல.83, பிலியந்தலை வீதி).*
xxxii, *464 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22*x*14 சமீ.*, ISBN: *955-1358-04-*x.

*திம்புக் கோட்பாடுகளை மீட்டுப்பார்த்தல்: ஓர் ஒருங்கிணைப்புக் கண்ணோட்டம் (சுமனசிறி லியனகே, நிரூபா விக்கிரமசிங்க),* LTTE*யின் தோற்றமும் 1987ஆம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தமும் (தோமஸ் ஏப்ரஹாம்), இலங்கையில் இந்தியத் தலையீடும் 1987ம் ஆண்டின் இலங்கை-இந்திய ஒப்பந்தமும்: ஒரு பின்நோக்கிய மதிப்பீடு (*J.N.*டிக்ஷிட்), இலங்கை அரசாங்கமும் இந்திய-இலங்கை ஒப்பந்தம் வரையிலான சமாதான முயற்சிகளும்: படிப்பினைகளும் அனுபவங்களும் (பேர்னாட் திலகரட்ன), இந்திய-இலங்கை ஒப்பந்தமும் இனப்பிரச்சினையும்: படிப்பினைகளும் அனுபவங்களும் (கேதீஸ்வரன் லோகநாதன்), புலனாய்வு மற்றும் பாதுகாப்பு முகவர்களின் வகிபங்கு (எம்.கே.நாராயணன்), ஜனாதிபதி பிரேமதாசவின் இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் 1989-1990 (பிரட்மன் வீரக்கோன்), ஜனாதிபதி பிரேமதாசவுக்கும்* LTTE*யிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை: ஒரு பின்னோக்கிய மதிப்பீடு (*A.J.I.*சந்திரகாந்தன்), ஆண்டு 1989-90 பிரேமதாச-*LTTE *பேச்சுவார்த்தைகள் ஏன் தோல்வியடைந்தன? உண்மையில் நடந்தது என்ன? (தயான் ஜயதிலக்க), அரசாங்கம்* LTTE *பேச்சுவார்த்தைகள் 1994-1995 மற்றுமொரு இழந்த வாய்ப்பு (*P.*இராஜநாயகம்), இலங்கையின் இன முரண்பாடு தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தமை பற்றியதொரு பகுப்பாய்வு (ஜெஹான் பெரேரா), நோர்வே நாட்டு வசதிப்படுத்தல் மூலமான அரசாங்கம்* LTTE *பேச்சுவார்த்தை முயற்சி 2000 சூழமைவு, சிக்கனத் தன்மைகள் மற்றும் பாடங்கள் (ஜயதேவ உயங்கொட), இலங்கையில் தொடரும் முரண்பாடுகளும், அணி திரட்டப்பட்ட புலம்பெயர் தமிழர்களின் தாக்கமும் (ரொஹான் குணரட்ன), சமாதானத்திற்கான முக்கிய தடை மனப்பாங்கு (ராஜன் ஸ்ரீஸ்கந்தராஜா) ஆகிய 14 கட்டுரைகளும், இவை தொடர்பான கடிதங்களும், மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் பின்னிணைப்பாகவும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 608885).*

***6959***

***இலங்கையில் சமாதானம் பேசுதல்: முயற்சிகள், தோல்விகள், மற்றும் பாடங்கள் தொகுதி 2.*** *குமார் ரூபசிங்க (தொகுப்பாசிரியர்). கொழும்பு 3: ஆய்வு மற்றும் ஆவண நிலையம், சகவாழ்வுக்கான மன்றம், 105/3, ஐந்தாவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2006. (மகரகம: இம்பல்ஸ் அச்சக மற்றும் வெளியீட்டாளர்கள், இல.83, பிலியந்தலை வீதி).*
xcix, *556 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22*x*14 சமீ.*, ISBN: *955-1358-05-8.*

*சமாதான நடவடிக்கைகளை ஆரம்பித்தலும் நிலைபெறச் செய்தலும்: மூலங்களும் சவால்களும் (பிரட்மன் வீரக்கோன்), சமாதான நடைமுறையும், பாதுகாப்புப் பிரச்சினைகளும் (ஒஸ்ரின் பெர்னாண்டோ), போர் நிறுத்த உடன்படிக்கை: பிரச்சினைகளும் எதிர்பார்ப்புகளும் (ஜீ.எல்.பீரிசுடனான நேர்காணல்), போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பான மீறல்கள், வன்முறைகள் மற்றும் கண்காணிப்புக் குழுவின் பங்கு (பிரியான் செனிவிரட்னவும் டினிது என்ரகலவும்), இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்பக் குழு ஹக்றுப் ஹோக்லண்ட் அவர்களுடனான நேர்காணல் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர், தமிழர் பக்கத்திலான பார்வை (தர்மரட்ணம் சிவராம்), நோர்வேயின் அனுசரணையில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்கள் ''யுத்தமும் சமாதானமும்'' எனும் அன்ரன் பாலசிங்கத்தின் நூலின் இறுதி அத்தியாயம் தொடர்பான ஒரு மீளாய்வு (காயத்ரி விக்ரமசிங்க), பொருளாதார பலாபலனுடன் முரண்பாட்டை மாற்றியமைத்தல் (சமன் கெலெகம), அபிவிருத்தி எவ்வாறு சமாதானத்தை பலவீனப்படுத்தியது (சுனில் பஸ்ரியான்),*

*சிவில் சமூகமும் சமாதான செயன்முறைகளும் (சுமணசிறி லியனகே), இலங்கையின் சமாதான நடவடிக்கைகள்: முன்னால் இருப்பது என்ன? (பேர்னார்ட் ஏ.பி.குணதிலக), இலங்கையின் சமாதான நடவடிக்கைகளும் முஸ்லிம் பிரச்சினையும் (எம்.ஐ.எம்.முகைதீன்), நோர்வே நாட்டின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் மற்றும் இலங்கைச் சமாதானப் பணிகளுக்கான அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் அவர்களுடனான ஒரு நேர்காணல் (குமார் ரூபசிங்க), சர்வதேச சமூகத்தின் வகிபங்கு (கீத் நொயர்), சமாதான நடவடிக்கைகள்: ஒரு யதார்த்தரீதியான பரிசீலனை (என்.ராம்) ஆகிய 15 ஆக்கங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 608882).*

**6960**

**இலங்கையில் ஜனநாயகம் தழைப்பதற்குரிய பட்டயம்.** *நெவில் ஜெயவீர (நேர்காணல்). கொழும்பு: ஜனாதிபதி செயலகம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு:* ANCL Commercial Printing Department*).*
*(104) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*அமரர் ஆர் .பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் முன்னாள் யாழ்ப்பாண அரச அதிபரும், தற்போது லண்டனில் வாழ்பவருமான நெவில் ஜெயவீர அவர்கள் இலங்கை சென்று ஜனாதிபதி பிரேமதாசாவை விரிவாகப் பேட்டிகண்டிருந்தார். அதன் எழுத்து வடிவம் தமிழ் சிங்களம் ஆங்கில மொழிகளில் இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

**6961**

**இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள்: இடர்ப்பாடுமிக்க திருப்புமுனையில் கோட்பாடுகள் அடிப்படையிலான பேச்சுவார்த்தைகளுக்கும் முரண்பாட்டுநிலை மாற்றத்திற்குமான படிப்பினைகள், வாய்ப்புக்கள், கருத்துக்கள்.** *ரிரோல் பேர்டினன்ஸ், குமார் ரூபசிங்க, பாக்கியசோதி சரவணமுத்து, ஜயதேவ உயன்கொட, நோபேட் றோபர்ஸ். கொழும்பு 7: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 24/2 28ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).*
xi, *43 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x20.5 சமீ.*

*கொழும்பில் இயங்கும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (*CPA*), சகவாழ்விற்கான மன்றம் (*FCE*), அரசியல் மற்றும் முரண்பாட்டு நிலைமாற்றத்திற்கான முன்முயற்சி (*INPACT*), சமூக விஞ்ஞானிகள் சங்கம் (*SSA*), முரண்பாட்டுக் கற்கை நெறிகளுக்கான பேர்கோவ் நிறுவனம்- இலங்கை அலுவலகம் (*Berghof Foundation*) ஆகிய ஐந்து நிறுவனங்களும் இணைந்து வெளியிட்டுள்ள பிரசுரம். ரிரோல் பேர்டினன்ஸ், குமார் ரூபசிங்க, பாக்கியசோதி சரவணமுத்து, ஜயதேவ உயன்கொட, நோபேட் றோபர்ஸ் ஆகிய ஐந்து சமூகவியலாளர்களின் தனிப்பட்டமுறையிலான ஒன்றிணைந்த முயற்சியாக இவ்வறிக்கை அமைகின்றது. இவ்வறிக்கை, அறிமுகம், சமாதான முன்னெடுப்புப் பற்றிய மீளாய்வு, தென்பகுதியிலும் வடக்கு-கிழக்கிலும் இடைக்கால அதிகாரப் பகிர்வு, பிரச்சினைகளைத் தீர்த்தல் - அவற்றுக்கான ஏற்பாடுகளை நோக்கி, அடுத்தகட்ட சமாதான முன்முயற்சிகளில் எதிர்கொள்ளவேண்டிய விடயங்கள், அடுத்தகட்ட சமாதானப் பேச்சுகளை முன்னேற்றுவதற்கான ஆலோசனைகள், முடிவுரை ஆகிய ஆறு தலைப்புகளில் இவ்வறிக்கை விரிகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 571359).*

**6962**

**இலங்கையின் தேசிய இனத்துவப் பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும்.** *லயனல் குருகே (தொகுப்பாசிரியர்), கொழும்பு 7: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 24/2 28ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு, ஒக்டோபர் 2004, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (கொழும்பு 10: குளோப் அச்சகம், 01 கே.டி.டேவிட் மாவத்தை).*
*(116) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.,* ISBN: *955-8037-71-0.*

*இனத்துவப் பிரச்சினையின் பின்னணி, முழு நாட்டுக்கும் சிங்களச் சட்டம், தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டம், 1985 திம்பு பேச்சுவார்த்தை, 13ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தம், 1997ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரையிலான யாப்புரீதியிலான விதிமுறை, முஸ்லிம் காரணிகள், அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை, மோதலின்*

*நிகழ்கால நிகழ்வுகள், அதிகாரப் பகிர்வின் ஏற்பாடுகள் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் அமைந்துள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 580488).*

***6963***

***எமது பாதை.*** *மத்திய செயற்குழு. இலங்கை: தமிழீழ விடுதலை இராணுவம், 1வது பதிப்பு, 1984. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*(56) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.*

*தமிழ் ஈழ விடுதலை இராணுவம் (*Thamil Eelam Liberation Army*) ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பல தீவிரவாதக் குழுக்களில் ஒன்றாகும். இது ஒபறோய் தேவன் (17.4.1958-14.8.1983) என்ற இளைஞனின் தலைமையில் இயங்கியது. 1983இல் இவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டவர். இந்த அமைப்பினரின் செயற்பாடுகள், இயக்கத்தின் செயற்பாடுகள், கொள்கைத்திட்டம், ஈழவிடுதலைப் போராட்டம் பற்றி தமிழகத் தலைவர்களின் கருத்துக்கள், இயக்கப் படுகொலைகளுக்கு எதிரான கருத்துக்கள் மற்றும், ஒபறோய் தேவன் மரணிப்பதற்கு முன்னர் "1974ம் ஆண்டு முதல் நான் கண்ட களங்களும் சென்ற வழியும்" என்ற தலைப்பில் எழுதிச் சென்ற நாட்குறிப்புகள் என்பன இந்நூலில் இடம்பெற்றுள்ளன.*

***6964***

***கொலைநிலம்: தியாகு-ஷோபாசக்தி முரண் அரசியல் உரையாடல்.*** *ஷோபாசக்தி, தியாகு. சென்னை 600 024: வடலி வெளியீடு, 13-54, 10ஆவது குறுக்குத் தெரு, ட்ரஸ்ட் புரம், கோடம்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*96 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 21x14 சமீ.,* ISBN: *978-81-908405-5-2.*

*புலி அரசியலை முற்றாக ஈழத்திலும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களிடமும் அற்றுப்போகச் செய்யவேண்டும். அந்த வெற்றிடத்திலிருந்து புதிய அரசியல் வழிமுறைகளை நாம் உருவாக்கவேண்டும் என்ற கொள்கையைக் கொண்ட எழுத்தாளர் ஷோபாசக்தியும், தமிழகத்தின் தமிழ் அரசியலில் சமரசமற்ற சக்தியாகச் செயற்படுபவரும், ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் தன்னை தீவிரமாக ஈடுபடுத்திக்கொண்ட தமிழக அரசியல்வாதி தோழர் தியாகுவும் சந்தித்து மேற்கொண்ட உரையாடலின் நூலுரு இதுவாகும். இரண்டு தனிநபர்களுக்கும் இடையிலான ஆரோக்கியமான முரண் அரசியல் உரையாடல் இது.*

***6965***

***சமாதானப் போர்: யுத்தம் அன்றும் இன்றும்.*** *பொதுஜன ஐக்கிய முன்னணி. கொழும்பு: இன உறவு அலுவல்கள், தேசிய நல்லிணக்க அமைச்சு, 1வது பதிப்பு, மே 1995. (கொழும்பு: இலங்கை அச்சகத் திணைக்களம்).*
*62 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான தனது நிலைப்பாட்டை விளக்கும் இந்நூலில், ஆளும்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி, யுத்தம் நடைபெறும் சந்தர்ப்பத்திலேயே அதற்குச் சமமாக அல்லது அதைவிட வேகமாக அரசியல் தீர்வொன்றை முன்வைத்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமாக தமிழ்மக்களிடையே சந்திரிகாவின் அரசாங்கம் கட்டியெழுப்பியுள்ள நம்பிக்கையை மென்மேலும் உறுதிசெய்து தமிழ் மக்களைப் புலிகள் இயக்கத்தின் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ள முடியுமென்பதை வலியுறுத்துகின்றது.*

***6966***

***சிங்கள-முஸ்லிம் இனமோதல்கள் ஒரு சமூக அரசியல் பார்வை.*** *றவூத் ஸெய்ன். இலங்கை: சமூக விஞ்ஞானங்களுக்கான இப்னு கல்தூன் ஆய்வகம், 1வது பதிப்பு, பெப்ரவரி 2006. (திஹாரிய:* FR Graphics*).*
*(6), 66 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x15 சமீ.,* ISBN: *955-1431-00-6.*

*சிங்கள-முஸ்லிம் இனமுரண்பாடுகள்: ஒரு சமூக-வரலாற்றுப் பார்வை, கம்பளைக் கலவரம் 1915: இருபதாம் நூற்றாண்டின் முதற்பெரும் இனமோதல், காலி கலவரம் 1982, பன்னல-அலபெடகம வன்முறைகள் 1999, மாவனல்லைத் தாக்குதல் 2001: இனவாதப் பாசிசத்தின் இன்னொரு கோரமுகம், பேருவளை இனமோதல் ஆகிய ஆறு இயல்களில் இவ்வாய்வுக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 611460).*

**6967**

**சிறுபான்மையினர் சில அவதானங்கள்.** எம்.எம்.எம்.நூறுல்ஹக். சாய்ந்தமருது 5: மருதம் கலை இலக்கிய வட்டம், 129 B, ஒஸ்மன்ட் வீதி, 1வது பதிப்பு, மே 2002. (கொழும்பு 3: கொழும்பு, மிலேனியம் அட்வர்டைசிங் அன்ட் பிரிண்டிங் லிமிட்டெட் அச்சகம், 417/2 காலி வீதி).
*(12), 100 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22.5x14.5 சமீ., ISBN: 955-8105-01-5.*

*இந்நூலில் 22 சமகால அரசியல் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. எம்.எம்.எம்.நூறுல்ஹக் பத்திரிகைத்துறையில் நீண்டகால அனுபவம் மிக்கவர். அரசியல்சார்ந்தும், இஸ்லாமிய கோட்பாடுகள் சார்ந்தும் இவரது ஆழமான கருத்துச்செறிவான கட்டுரைகள் அவ்வப்போது பத்திரிகைகளின் கவனத்தை ஈர்த்துவந்துள்ளன. முஸ்லீம் மக்களின் ஏக்கத்தையும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அரசியல் அநீதிகளையும் தன் இனத்தின் உரிமைக்குரலாக இக்கட்டுரைகளில் பதிவுசெய்துள்ளார். பேரினவாத அரசியல் காரணங்களுக்காக முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளைக் குழிதோண்டிப் புதைத்த சிறுபான்மை இன அரசியல்வாதிகளைத் துணிச்சலுடன் இக்கட்டுரைகளில் ஆசிரியர் அடையாளப்படுத்தியுள்ளார்.*

**6968**

**தமிழரின் விடிவு.** தில்லைக்கூத்தன். (இயற்பெயர்: இ.நடராஜா). கொழும்பு: இ.நடராஜா, 1வது பதிப்பு, 2003.(தெகிவளை: ஏ.ஜே.பிரின்டர்ஸ்).
*(12), 215 பக்கம், அளவு: 21x14.5 சமீ.*

*ஏப்ரல் 2002 முதல் ஜுலை 2003க்க இடைப்பட்ட காலகட்டங்களில் தினக்குரல், வீரகேசரி பத்திரிகைகளில் வெளியான தில்லைக்கூத்தனின் அரசியல் கட்டுரைகளின் தொகுப்பு. 41 தமிழ்க் கட்டுரைகளும் 2 ஆங்கிலக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. பொருளாதார, சமூக, அரசியல் சீர்கேடுகளை விமர்சித்து எழுதப்பட்டுள்ள இக்கட்டுரைகளின் அடிநாதமாக மனித உரிமை மீறல்கள் கேள்விக்குள்ளாகியுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 576242).*

**6969**

**தர்மத்தின் குரல்கள்.** கே.ஜி.மகாதேவா. சென்னை 24: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (சென்னை 24: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 32/9 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்).
*136 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18x12 சமீ., ISBN: 978-81-89748-84-5.*

*கோவைஞானி, பா.செயப்பிரகாசம், எஸ்.பொன்னுத்துரை, பழ.நெடுமாறன், வைகோ, தொல்.திருமாவளவன், கவிதா முரளிதரன், புலமைப்பித்தன், சி.மகேந்திரன், பேராசிரியை சரஸ்வதி, இல.கணேசன், சிவாஜிலிங்கம், ஆறுமுகம் கலையரசன், அமரந்தா, முத்துவேலழகன் ஆகிய 15 பிரமுகர்களுடனான நேர்காணல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஈழத்தமிழர் போராட்டம் தொடர்பான தமிழக, இலங்கைப் பிரமுகர்களின் கருத்துக்கள் இங்கு பெரும்பாலான நேர்காணல்களில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் கண்டி-செய்தி, யாழ்ப்பாணம்-ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் ஊடகவியலாளராக இருந்த நூலாசிரியர், பின்னாளில் தமிழ்நாட்டுக்குப் புலம்பெயர்ந்துசென்று அங்கும் தன் ஊடகவியல் பணிகளை மேற்கொண்டு வருபவர். தமிழகத்தில் இவரத நான்கு நூல்கள் வெளிவந்துள்ளன. தர்மத்தின் குரல்களில் இடம்பெற்றுள்ள மகாதேவாவின் நேர்காணல்கள் கொழும்பு-தினக்குரல் பத்திரிகையில் தொடர்ந்து வெளிவந்தவை.*

**6970**

**தீவும் தீர்வுகளும்.** எம்.எம்.எம்.நூறுல் ஹக். சாய்ந்தமருது 5: மருதம் கலை இலக்கிய வட்டம், 129 B, ஒஸ்மன் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1998. (கொழும்பு 10: மிலக்ஷ் கிரபிக்ஸ், 87 மாளிகாகந்த வீதி). (10), 110 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x13.5 சமீ.

இலங்கையில் இஸ்லாத்தின் தோற்றமும் வளர்ச்சியும், முஸ்லிம்களின் மௌனம் தவறாகப் புரியப்பட்டதா? வடக்கு-கிழக்கு இணைப்பும் முஸ்லிம்களின் நிலைப்பாடும், முஸ்லிம் அரசியற் கட்சி முஸ்லிம்களின் இன்றைய தேவை, முஸ்லிம் மாகாணசபையும் முஸ்லிம் அமைப்புகளும், வடக்கு முஸ்லிம்களும் மீள்குடியேற்றமும், அமைச்சர் அஷ்ர.்.ப் அமைச்சுக் குறைப்பும் அதரவு விலக்கலும், முஸ்லிம்களும் தனிக்கட்சியும், அரசு-புலிகள் பேச்சுவார்த்தை முஸ்லிம்களுக்கு இன்னலாகுமா? முஸ்லிம் ஊர்காவல் படையும் அவர்களின் எதிர்காலமும், தமிழ்-முஸ்லிம் கலவரங்களும் பரஸ்பர குற்றச்சாட்டுகளும், முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ்கின்றனர்? கிழக்கு பிரிந்தால் முஸ்லிம் விகிதாசாரம் பாதுகாக்கப்படுமா? முனைப்புடன் நிகழும் சினமூட்டல்கள், இலங்கைத்தீவும் இலக்கில்லாத் தீர்வுகளும், வடக்கு மாகாண முஸ்லிம்கள் தொடர்ந்தும் அகதிகள் தானா? பேரினவாத சகதிக்குள் முஸ்லிம் உரிமைகள், தெரிந்த விடைகளுக்கான கேள்விகள், முஸ்லிம்கள் தமிழர்களின் விரோதிகள் ஆகிய 19 தலைப்புகளிலான கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் ஊடகத்துறையில் டிப்ளோமா கல்வித்தரம் பெற்றவர். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 507737).

**6971**

**போராடுவோம்.** அ.அமிர்தலிங்கம். கொழும்பு 6: அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் சங்கம், 344, காலி வீதி, 1வது பதிப்பு, 1978. (கொழும்பு 12: நியூ லீலா அச்சகம்).
42 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 21.5x14 சமீ.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர் அ.அமிர்தலிங்கம் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் தேசியப் பேரவையில் 3.8.1978 அன்று சமர்ப்பிக்கப்பட்டபோது, விவாதத்தைப் புறக்கணிப்பதற்கு முன்பு ஆற்றிய 5 மணிநேர உரையின் தொகுப்பு.

**6972**

**மலையக இந்திய வம்சாவளியினர்: இருளும் ஒளியும்.** எஸ்.இராமநாதன். மாத்தளை: முரசு வெளியீடு, 89 தர்மபால மாவத்தை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2009. (கொழும்பு 10: குமரன் அச்சகம், B3-G3 ரம்யா பிளேஸ்).
xx, 96 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-51957-0-6.

இந்தியத் தொழிலாளர் வருகை, பெரிய கங்காணிமுறை, இந்திய மக்களுக்கு எதிரான குரல், தோட்டத் தொழிலாளர் தொடர்பான சட்டங்கள், வாக்குரிமையும் குடியுரிமை பறிப்பும், தொழிற்சங்கங்களும் தொழிலாளர் போராட்டமும், இன்று மலையக மக்களை எதிர்நோக்கியுள்ள சவால்கள் ஆகிய ஏழு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர், லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனின் பொதுச் செயலாளராகவும், லங்கா சமசமாஜக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினராகவும், தோட்டத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவராகவும் இலங்கை தொழிலாளர் சம்மேளனத்தின் உபதலைவராகவும் பணியாற்றியுள்ளார். இத்தகைய பின்புலங்களின் வழியே தான் பெற்ற ஐம்பதாண்டு அனுபவத்தின் வெளிப்பாடாக இந்நூலை எழுதியிருக்கிறார்.

**6973**

**வரலாற்றில் தமிழும் தமிழரும்: ஆய்வுக் கட்டுரைகள்.** சி.தர்மகுலசிங்கம். மட்டக்களப்பு: மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், CONGOB, இல.9, பெர்ணாண்டோ லேன், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1999. (மட்டக்களப்பு: ஈஸ்ரன் கிராப்பிக்ஸ் அச்சகம், 205/02 பார் வீதி).
viii, 60 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 21.5x14.5 சமீ.

இலக்கியத்திலும் வரலாற்றிலும் தமிழர் வரலாற்றியல் சம்பந்தமாகச் சில தகவல்களைத் தருவதும் இது தொடர்பாக இனிவரும் ஆய்வாளர்களைத் தூண்டுவதும் இந்நூலின் நோக்கம். சிதைக்கப்படும் வரலாறுகள்: மொழித் திரிபு வாதங்கள், தமிழ் மக்களின் தொன்மைக்குச் சான்றுதரும்

*திருக்கோணமலைத் தொன்மங்கள், சிங்கள மன்னர் சபைகளில் ஆட்சி புரிந்தது தமிழே, புத்தமதத்தை வளர்த்த தமிழ்த் துறவிகள், இலங்கைத் தமிழர் வரலாற்றுக்கு உரமூட்டும் சீனத்து வரலாற்று ஆதாரங்கள், வன்னியும் அதன் அழியாத வரலாறும், கிறிஸ்துவுக்கு முன் இலங்கையில் தமிழராட்சி நடைபெற்றதை தெட்டத்தெளிவாகக் காட்டும் மன்னார் மாதோட்டம், பாலஸ்தீனியரும் இலங்கைத் தமிழரும் ஒரு பன்முகப் பார்வை, தமிழரின் வரலாற்றை ஆவணப்படுத்திய முதலியார் இராசநாயகம், தமிழில் ஆங்கில ஆதிக்கம் ஏற்படுத்திய பாதிப்பு, மறுமதிப்பீடு செய்யவேண்டிய மாபெரும் தமிழ் அறிஞன் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, இலங்கை வரலாற்றில் அர்த்தம் இல்லாத வரலாற்றுத் திறனாய்வுகள் ஆகிய 12 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

***6974***

**விஞ்ஞானிகள் அறிவுஜீவிகளுக்கு.** *தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம். சென்னை 600026: தமிழர் சமூக அறிவியல் ஆராய்ச்சி நிலையம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், இல.11, தேசிகர் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1984. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*(10) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.*

*தமிழீழ விடுதலைப்போரின் ஓரங்கமாக அறிவுஜீவிகளின் பங்களிப்பினை எதிர்பார்த்து இச்சிறுநூல் தமிழ் ஆங்கில மொழிகளில் உருவாக்கப்பட்டு தமிழர் சமூக அறிவியல் ஆராய்ச்சி நிலையத்தின் நிர்வாகப் பொறுப்பாளர் எஸ்.எம்.கஜன் அவர்களின் ஒப்பத்துடன் நிறைவுசெய்யப்பட்டுள்ளது.*

**மேலும் பார்க்க:** *6201, 6206*

### *954.93(3) இனங்கள் இன உறவுகள்*

***6975***

**அக்கரைப்பற்று காசிம்ஜியின் தென்கிழக்கிலங்கை முஸ்லிம்களின் மான்மியத்துக்கு முன்னோரளித்த அருஞ்செல்வம் (2 பகுதிகள்).** *எம்.எம்.எம்.காசிம்ஜி. கொழும்பு: உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு- 2002, முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. ((கொழும்பு 3: மிலேனியம் அட்வர்டைசிங் அன்ட் பிரின்டர்ஸ், 417/2, காலி வீதி).*
viii, 119+170 *பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15 சமீ.,* ISBN: *955-8806-15-3.*

*இலங்கையின் தென்கிழக்கு முஸ்லிம்களின் மான்மியம் அவர்களுடைய சமய, கலாசார பண்பாடுகளுடனும் அவர்களுடைய மொழி இலக்கிய வளர்ச்சிகளுடனும், அவர்களுடைய முன்னோர்களுடனும், அவர்களைச் சார்ந்தோர்களுடனும் அவர்களின் பாரம்பரியங்களுடனும் பின்னிப்பிணைந்ததாக இந்நூலின் இரு பாகங்களிலும் வரும் பாடல்கள், கதைகள், மேற்கோள்கள் என்பன கூறுகின்றன. இந்நூல் துறைமுகங்கள் அபிவிருத்தி கப்பற்றுறை அமைச்சு, கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் அமைச்சு, இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் ஆதரவுடன் 2002 ஒக்டோபர் 22, 23, 24ம் திகதிகளில் நடத்திய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின்போது வெளியிடப்பெற்ற மீள்பிரசுரங்களில் ஒன்று.*

***6976***

**அமெரிக்க கறுப்பு இன முஸ்லிம்கள்.** *ஏ.அஸீஸ் (ஆங்கில மூலம்), எஸ்.எம்.ஏ.ஹசன் (தமிழாக்கம்). பேராதனை: எஸ்.எம்.ஏ.ஹசன், விரிவுரையாளர், ஆங்கில ஆசிரிய கலாசாலை, 1வது பதிப்பு, 1978. (அக்குறணை: சன் ஷைன் அச்சகம்).*
*(6), 16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x14 சமீ.*

Black Muslims of America *என்ற தலைப்பில் தொழிற்சங்கத் தலைவரும், சிறந்த அரசியல் ஞானியும், சமூக சிர்திருத்தவாதியுமான ஏ.அஸீஸ் ஆற்றிய உரைகளைப் பின்னணியாகக் கொண்டு இந்நூல் தமிழில் தரப்பட்டுள்ளது. ஆசிய-ஆபிரிக்க ஒருமைப்பாட்டு இயக்கத்தின் தூதுக்குழுவில் ஒருவராக ஐக்கியநாடுகள் சபைக்குச் சென்றிருந்த நூலாசிரியர் அங்கு அமெரிக்க கறுப்பின முஸ்லீம்கள் பற்றியும் அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் பற்றியும் அவர்கள் மேற்கொண்ட உரிமைப்போராட்டங்கள் பற்றியும் ஆர்வத்துடன் தகவல்களைச் சேகரித்திருந்தார். அவற்றை அடிப்படையாகக் கொண்டு இவர் பல்வேறு அறிவியல் மேடைகளில் ஆற்றிய உரைகளின்*

தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. அமெரிக்க கறுப்பு இன முஸ்லிம்களின் உரிமைப்போராட்டத்தைப் பற்றிய பல விடயங்களை இந்நூல் உள்ளடக்குகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 332666).

**6977**

**இனிய உறவில் இரு சமூகங்கள்.** மானா மக்கீன். தமிழ்நாடு: வடக்கு கோட்டையார் முகம்மது அப்துல்லா அறக்கட்டளை, 96, பெரிய தெரு, கூத்தாநல்லூர் 614101, திருவாரூர் மாவட்டம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (அச்சக விபரம் தரப்படவில்லை).
216 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.,

இந்தியாவில் நிலவுகின்ற நெடுங்கால இந்து-முஸ்லிம் உறவுகளை சான்றுகளுடன் எடுத்துரைக்கும் நூல். தமிழக் முதல்வர் கருணாநிதியின் விருப்பிற்கொப்ப சமய நல்லிணக்க ஒருமைப்பாட்டு நூல்களை வெளியிடும் பணியை மேற்கொண்டுள்ள கூத்தாநல்லூர் வடக்குக் கோட்டையார் முகம்மது அப்துல்லாஹ் அறக்கட்டளையின் அறங்காவலர் ஹாஜி வ.மு.செய்யது அகமது அவர்கள் தனது முதலாவது நூலாக இதை ஈழத்து எழுத்தாளர் மானா மக்கீனின் துணையுடன் நிறைவேற்றியுள்ளார்.

**6978**

**இஸ்லாமியத் தென்றல்.** அல்லாமா ம.முஹம்மது உவைஸ். பதுளை: மணிக்குரல் பதிப்பகம், 1வது பதிப்பு, டிசம்பர் 1961. (பதுளை: மொடர்ன் பிரிண்டர்ஸ்).
120 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12.5 சமீ.

இலங்கை வித்தியோதய பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத்தலைவரான எம்.எம். உவைஸ் அவர்கள் ஈழத்தில் இஸ்லாமியரின் வாழ்வும் பணியும் பற்றி எழுதிய இந்நூல் இந்தியாவில் முஸ்லிம் மக்கள், ஈழநாட்டு முஸ்லிம்கள், வாணிபமும் பொருளாதாரமும், கலையும் கலாசாரமும், கல்வியும் இலக்கியமும், முஸ்லிம்களும் தமிழ்மொழியும், காப்பியங்கள் (சீறாப்பராணம், புதுகுஷ்ஷாம், திருமணிமாலை, குதுபுநாயகம், இராசநாயகம், நாகூர்ப் புராணம்), ஏனைய பிரபந்தங்கள் (ஆற்றுப்படை, அந்தாதி, மக்காத்திரிபந்தாதி, நாகையந்தாதி, பிள்ளைத்தமிழ் நூல்கள், அம்மானை, கலம்பகம்), சிற்றிலக்கியங்கள் (ஏசல், மாலை, திருப்புகழ், கீர்த்தனங்கள், சிந்து, கும்மி, தாலாட்டு, ஆனந்தக் களிப்பு), முஸ்லிம் பிரபந்தங்கள், உரைநடை, சமய தத்துவமும் ஒழுக்கநெறியும், முஸ்லிம் ஞானிகள், அறபுத்தமிழ் ஆகிய பதினான்கு தலைப்புகளில் விரிகின்றது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 280592).

**6979**

**தமிழீழத் தமிழர்கள்: வரலாறு கலாச்சாரம் பாரம்பரியம்.** ரீற்றா பற்றிமாகரன். லண்டன் SE18 7JW: அருண உதயம் தமிழ்ப் பாடசாலை, பிளம்ஸ்டெட், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (லண்டன்: ஜே.ஆர்.பிரின்ட்).
28 பக்கம், வரைபடம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

பன்னிரண்டு வயதுக்கு உட்பட்டோருக்கு இலங்கைத் தமிழரின் வரலாறு, அவர்களது கலாச்சாரம், பாரம்பரிய விழுமியங்கள் என்பவற்றைக் கற்பிக்கும் நோக்குடன் இச்சிறு நூல் ஆசிரியரால் உருவாக்கப்பட்டுள்ளது. வி.முத்துக்குமாரசுவாமி, சி.க.சிற்றம்பலம், தனபாக்கியம் குணபாலசிங்கம் ம.கங்காதரம் போன்ற வரலாற்றாசிரியர்களின் நூல்களை அடிப்படையாகக்கொண்டு புலம்பெயர் நாடுகளின் தமிழ்ப் பள்ளிகளில் பயன்படுத்தும் நோக்கில் எளிய தமிழ்நடையில் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

**6980**

**மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா சிறப்பு மலர் 2003: மலையகத் தமிழர் வரலாறு.** சாரல்நாடன். இலங்கை: மத்திய மாகாண கல்வி, கைத்தொழில் கால்நடை அபிவிருத்தி, உணவு வர்த்தகம், வாணிப சுற்றுலாத்துறை, இந்து கலாச்சார அமைச்சு, 1வது பதிப்பு, 2003. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).
xvi, 234 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

*நிலவரி, ரயத்துவாரி முறை, பஞ்சம், தமிழர்கள் கடல் கடத்தல், மலையகத் தமிழரின் அரசியல் அனுபவங்கள், நாடற்றோர் பிரச்சினை, மறக்க முடியாத நிகழ்வுகள், மலையக மக்கள் சமூகம், தோட்டப்புறக் கல்வி, வீடுகள், காணிகள், மாறிவரும் நிலைமைகள், மலையக மக்களின் வளர்ச்சிப்படிகளில், நுவரெலியாவின் சரித்திரம் ஆகிய 9 தலைப்புகளில் மலையகத் தமிழரின் வரலாறு இந்நூலில் சொல்லப்படுகின்றது. இந்நூல் மலையகத் தமிழர் வரலாறு என்ற தலைப்பில் நவம்பர் 2003இல் கொட்டகலை, சாரல் வெளியீட்டகத்தினால் 330 பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளது. (முன்னைய நூலுக்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3974)*

***6981***

***முத்தான முத்துப்பேட்டை.*** *மானா மக்கீன். சென்னை 600004: ரஹ்மத் பப்ளிக்கேஷன்ஸ், (29) 6, 2வது பிரதான சாலை, சி.ஐ.டி.காலனி, மயிலாப்பூர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 14: டிஜிட்டல் பிரின்ட் சிஸ்டம்ஸ்).*

*189 பக்கம், வண்ணத் தகடுகள், வரைபடம், விலை: இந்திய ரூபா 95., அளவு: 21.5x14 சமீ.*

*மானா மக்கீனின் முப்பதாவது நூல். தமிழ்நாட்டில் மகாகவி பாரதியார் இல்லத்தில் 15.12.2007 அன்று வெளியீடுகண்ட சிறப்பு இந்நூல் வெளியீட்டுக்கு உண்டு. இலங்கைக்கு முத்துச் சம்பா அரிசியையும், கருவாட்டையும், உலர் தேங்காய் (கொப்பறா)களையும் ஏற்றுமதி செய்த தமிழகத்தின் ஊர் இது. இவை தவிர வேறும்பல முத்துப்பேட்டை இலங்கைத் தொடர்புகள் இந்நூலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.*

***6982***

***முஸ்லிம்கள் வளர்த்த அறிவியல் அழகியற் கலைகள்.*** *எம்.ஐ.எம்.அமீன். ஹெம்மாத்தகம: அல்-ஹஸனாத் வெளியீட்டுப் பதிப்பகம், முஅஸ்ஸலதுல் ஹஸனாத், F 67, ஹிஜ்ராகம, 1வது பதிப்பு, ஏப்ரல் 2008. (மாவனல்ல: எம்.ஜே.எம். ஓப்செட் பிரின்டர்ஸ், 119, பிரதான வீதி).*

xvi, *220 பக்கம், விலை: ரூபா 325., அளவு: 21x14.5 சமீ.,* ISBN: *978-955-99588-1-9.*

*நூலாசிரியர் முஹம்மது இப்ராஹிம் ஆலிம் சாஹிப் முஹம்மது அமீன், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அறபு இஸ்லாமிய நாகரிகத்துறையின் முன்னாள் முதுநிலை விரிவுரையாளராவார். அல் குர்ஆனும் விஞ்ஞானக் கலையும், வானவியற்கலை, முஸ்லிம் உலகின் மருத்துவத்துறைப் பங்களிப்பு, கணிதவியற் கலை, புவியியற்கலை, அறபு வரலாற்றுக் கலை, ஆரம்பகால முஸ்லிம் உலகில் இடம்பெற்ற தொழில்நுட்ப வளர்ச்சி, விவசாய விஞ்ஞானம், அழகியல் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம், அரபு எழுத்தணிக்கலை, முஸ்லிம்களின் ஆட்சிக்கால இசைக்கலை வளர்ச்சி, இஸ்லாமியக் கட்டிடக்கலை, ஓவியக்கலை, இலங்கை முஸ்லிம்களின் கலாசாரப் பாரம்பரியங்களின் பரிணாம வளர்ச்சி ஆகிய தலைப்புகளில் முஸ்லிம்கள் வளர்த்த அறிவியல் மற்றும் அழகியற் கலைகள் பற்றிய ஆய்வை இந்நூலில் மேற்கொண்டுள்ளார். (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 625460).*

***6983***

***வரலாற்றில் இலங்கை கண்ட குமரி: முதல் பாகம்.*** *மானா மக்கீன் (மூலம்), லேனா தமிழ்வாணன் (பதிப்பாசிரியர்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆ∴ப்செட்).*

*228 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18x12 சமீ.*

*முஸ்லிம் சமூக வரலாறுகளை-குறிப்பாக இலங்கை-தமிழகத் தொன்மைத் தொடர்புகளை எளிமையாக இனிமையாக அழகு தமிழில் ஆய்வுசெய்துவருபவர் மானா மக்கீன். இலங்கை-கீழக்கரை இனிய தொடர்புகளில் ஆரம்பித்து, கீழக்கரைப் பண்பாட்டுக் கோலங்கள், நீடூர் நெய்வாசல் நெஞ்சங்கள், வரலாற்றில் இலங்கையும் காயல்பட்டினமும் எனத் தொடர்ந்து இப்பொழுது இந்நூல் வெளிவந்துள்ளது. குமரி, கோட்டாறு-ஒரு பார்வை, தரீக்காத் தழைக்கச் செய்தோர், ஆலிம்கள் முதல் ஆசாரிமார்கள் வரை, குமரித்தலைநகரில், வரலாற்றுப் புகழ் குளச்சல், பட்டினமாம் பட்டினம், இனயம்-ஆளூரிலிருந்து கன்னியாகுமரிவரை ஆகிய எட்டு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

***6984***

**வரலாற்றில் இலங்கையும் காயல்பட்டினமும்.** *மானா மக்கீன் (மூலம்), லேனா தமிழ்வாணன் (பதிப்பாசிரியர்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2001. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆ.்.ப்செட்).*
*304 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 65., அளவு: 18x12 சமீ.*

*பலநூறு ஆண்டுகளுக்கு முன் பாண்டிய மன்னனால் ஆளப்பெற்ற துறைமுகப் பட்டினங்களுள் ஒன்று காயல்பட்டினம். நெல்லையிலிருந்த 36 மைல் தொலைவிலும், தூத்துக்குடியிலிருந்து 18 மைல் தொலைவிலும், திருச்செந்தூரிலிருந்து 5 மைல் தொலைவிலும் உள்ள இஸ்லாமியத் தமிழர்களை பெருமளவில் கொண்ட இப்பட்டினத்துக்கும் இலங்கைக்கும் இருந்த தொடர்புகள் இந்நூலில் 10 அத்தியாயங்களில் ஆராயப்பட்டுள்ளன.*

**6985**
**வரலாற்றில் வள்ளல் ஹபீபு முஹம்மது அரசர்.** *மானா மக்கீன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2004. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆ.்.ப்செட்).*
*252 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 80., அளவு: 18x12 சமீ.*

*முஸ்லிம் சமூக வரலாறுகளை-குறிப்பாக இலங்கை-தமிழகத் தொன்மைத் தொடர்புகளை எளிமையாக இனிமையாக அழகு தமிழில் ஆய்வுசெய்துவருபவர் மானா மக்கீன். இந்நூலில் ஆய்வு ஒரு ஆழ்கிணறு, இரண்டாம் சீதக்காதி, இளவயதில் இமயம், ஹபீபு அரசரின் கடலாதிக்கம், ஏத்தாலை ஏகாதிபதி, முத்துச் சலாப பதி, ஹபீபு முஹம்மதுபுரம், ஓடைக்கரைப் பள்ளி - உரத்த சிந்தனைகள், அற்புத நிகழ்வுகளும் அகால மறைவுகளும் (ஹபீபு முஹம்மது அரசர் பேரில் இயற்றிய துஆ), வழித் தோன்றல்களை நோக்கி ஒரு பறவைப்பார்வை, மறக்கவும் மறைக்கவும் முடியாத மற்றொரு மனிதருள் மாணிக்கம் ஆகிய தலைப்புக்களில் இந்நூலில் 200 ஆண்டுகளுக்கு முன்னர் கீழக்கரையில் வாழ்ந்த ஒரு முஸ்லிம் பெருமகன் பற்றிய வரலாறு எழுதப்பட்டுள்ளது. புத்தளம் மாவட்டத்துடன் தமிழகம் கொண்ட தொடர்புபற்றி ஏராளமான தகவல்களையும் இடையிடையே ஆசிரியர் வழங்கியுள்ளார்.*

**மேலும் பார்க்க:** *6146*

*954.93(4) பிரதேச வரலாறு*

**6986**
**எங்களுர் வல்லிபுரம்: ஒரு தேடல்.** *ஆழ்கடலான் (இயற்பெயர்: முருக.வே. பரமநாதன்). அமெரிக்கா: நினைவர் வெளியீடு, ஆழ்வார் ஆய்வு மையம், 1வது பதிப்பு, ஜுலை 2010. (கனடா: விவேகா அச்சகம்).*
*144 பக்கம், விலை: கனேடியன் டொலர் 10., அளவு: 21.5x14 சமீ.*

*இலங்கையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின்வடமராட்சி வடக்கின் பருத்தித்துறை நிர்வாகப் பிரிவில் உள்ள ஊரே வல்லிபுரமாகும். பண்டைய வரலாற்றுப் பதிவுகள் கொண்ட இத்தொன் நகரம்தான் சிங்கை நகர் என வரலாற்றாய்வாளர் கருதுவர். பிரபல்யமான வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் அமைந்துள்ள இப்பிரதேசம் பற்றிய பிரதேச வரலாற்று நூலாக 20 பிரிவுகளில் இது எழுதப்பெற்றுள்ளது.*

**6987**
**கிழக்கிலங்கைப் பூர்வீக வரலாறு.** *க.தங்கேஸ்வரி. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆ.்.ப்செட்).*
*192 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 75., அளவு: 18x12 சமீ.*

*குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியே இலங்கைத்தீவு, குமரிக் கண்டத் தொன்மைவாய்ந்த கோணேசர் ஆலயம், மட்டக்களப்புப் பிரதேசத்தின் வரலாற்றுக்கு முற்பட்டகாலத் தடயங்கள், மட்டக்களப்பின்*

பூர்வீக வரலாற்றுச் சான்றுகள், பூர்வீக மட்டக்களப்புப் பிரதேசம், பண்டைய மட்டக்களப்புப் பிரதேசத்தில் பெருங்கற்கால கலாச்சாரம், மண்முனை மேற்குப் பிரதேசம், கொக்கட்டிச்சோலைப் பதியின் தொன்மை வரலாறு, திருக்கோயில் பிரதேசம், ஈழத்தில் நாற்பது ஆண்டுகள் ஆட்சிசெய்த தமிழரசன் மாகோன் ஆகிய பதினொரு வரலாற்றுக் கட்டுரைகளும் அனுபந்தமாக Batticaloa's enduring Legacy of the past என்ற ஆற்கிலக் கட்டுரையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

*6988*

**திருப்பழுகாமம் ஒரு சுருக்க வரலாறு.** ஆ.மு.சி.வேலழகன் (இயற்பெயர்: சி.வேல்முருகு). மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இல. 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (தெகிவளை: ஏ.ஜே.பிரிண்ட்ஸ், 44 புகையிரத நிலைய வீதி).
148 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-8715-51-2.

திருப்பழுகாமத்தில் பிறந்து தாழங்குடாவில் வசித்துவரும் நூலாசிரியர் கிழக்கிலங்கையின் மூத்த படைப்பாளிகளுள் ஒருவர். திருப்பழுகாமம் பற்றிய இலக்கியக் கூற்றுக்களில் தொடங்கி, அதன் பூர்வீக வரலாறு, வயல்வளம், கல்வி வளர்ச்சி, ஆலய வரலாறு, சமூக வரலாறு, பாரம்பரியச் சிறப்பு, மக்கள் மாண்பு, நீர்ப்பாசனம், மருத்துவத்துறை, கலை இலக்கியத்துறை, வரலாற்றுச் சிறப்புத் தகவல் ஆகிய தலைப்புகளின்கீழ் அக்கிராமத்தின் வரலாறு இங்கு தரப்பட்டுள்ளது. பின்னிணைப்பாக அப்பிரதேசத்தின் புள்ளிவிபரங்கள், அங்கு பணியாற்றிய பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், அரச அலுவலர்கள், பிற உத்தியோகத்தர் ஆகியோரின் பட்டியல்கள், ஆலயப்படங்கள், கல்சுவடுகள், தரைத்தோற்றப் படங்கள் என்பனவும் தரப்பட்டுள்ளன. இந்நூல் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 46ஆவது வெளியீடு.

*6989*

**பிறந்த மண்ணில் பெற்ற சுகந்தம் பாகம் 2.** செல்லையா செந்திலாதன் (தொகுப்பாசிரியர்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2007. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆப்செட்).
544 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 19x13 சமீ.

இந்நூலில் ஈழத்தின் 45 கிராமங்கள் பற்றி அவ்வூரின் மக்கள் எழுதிய 45 கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. கனடாவில் சூரியன் பத்திரிகையை வெளியிட்டபோது "பிறந்தபதியினும் சிறந்ததொன்றுமில்லை" என்ற தலைப்பில் தமது ஊரின் சிறப்புகளையும் தனித்தன்மைகளையும் எழுதலாம் என்ற அறிவிப்புக்கிணங்க எழுதி அனுப்பப்பட்ட கட்டுரைகள் இவை. சூரியன் இதழிலும் தொடர்ந்து உதயன் இதழிலும் வெளிவந்தவை. இவற்றுடன் பிரசுரமாகாத வேறும் சில பிரதேச வரலாற்றுக் கட்டுரைகளையும் சேர்த்து இத்தொகுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் செந்திலாதன் (செந்தி), ஆதவன் வெளியீடு என்ற நிறுவனத்தின் வாயிலாக தமிழன் வழிகாட்டி என்ற வணிக வழிகாட்டியை ஆண்டுதோறும் வெளியிடுபவர். (இந்நூலின் முதலாம் பாகம் பற்றிய தகவல்களுக்கு, நூல்தேட்டம் பதிவு இலக்கம் 2956)

*6990*

**ரங்வெடியாவை கிராமத்தின் வரலாறு.** சால்தீன் முஹம்மது சப்ரி. கலேவெலை: இஸ்லாமிய நலன்புரிச் சங்கம், ரங்வெடியாவை, கலேவெலை, 1வது பதிப்பு, ஜுன் 2002. (மாத்தளை: Salcalink - Matale).
24 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x14 சமீ.

ரங்வெடியாவை (Ranwediyawa) இயற்கை எழில்கொஞ்சும் ஒரு முஸ்லிம் கிராமமாகும். இலங்கையின் மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளைத் தேர்தல் தொகுதியில் கலேவெல நகருக்கு அண்மையில் இது அமைந்துள்ளது. இக்கிராமத்தின் குடியேற்றம், மக்களின் தொழில், சமூக கலாச்சார பாரம்பரியங்கள் என்று பலதையும் சுருக்கமாகத் தொகுத்து இந்நூலில் நூலாசிரியர் வழங்கியுள்ளார். சால்தீன் முஹம்மது சப்ரி- பேராதனைப் பல்கலைக்கழக கலைத்துறை மாணவராக இருந்தவேளையில் எழுதப்பட்ட நூல்.

**மேலும் பார்க்க:** *6373*

## *999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்*

*999 பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்*

***6991***

***அற்ப ஜீவிகள்: 1979ம் ஆண்டின் சிறந்த சிறுகதைகள்.*** *இலக்கியச் சிந்தனை தெரிவுக்குழு (தொகுப்பு). சென்னை 18: இலக்கியச் சிந்தனை, வானதி பதிப்பக வெளியீடு, 1வது பதிப்பு, ஏப்ரல் 1980. (சென்னை 14: வள்ளல் பாரி அச்சகம், 52 முத்து முதலித் தெரு).*
xlii, *150 பக்கம், விலை: இந்திய ரூபா 7., அளவு: 18x12.5 சமீ.*

*தமிழகத்தின் சி.பாலசந்தரி, ஜோதிர்லதா கிரிஜா, திருப்பூர் சு.கிருஷ்ணன். அ.முத்தானந்தம், மெய்யடியான், ராஜேஷ்குமார், ஸ்டெல்லா புருஸ், தி.மதுசூதனன், மலர்மன்னன், நாஞ்சில்நாடன், ஸ்ரீதரன் ஆகியோருடைய சிறுகதைகளுடன் தமிழகத்தின்* ***தீபம்*** *சஞ்சிகையில் ஜுலை 1979இதழில் வெளியான ஈழத்துப் படைப்பாளி ச.முருகானந்தனின்* ***மீன் குஞ்சுகள்*** *என்ற சிறுகதையும் இத்தொகுப்பில் சிறந்த கதைகளுள் ஒன்றாகப் பதிவுபெற்றுள்ளது.*

***6992***

***ஈழத் தமிழர்களே ஒன்றுபட்டுப் போராடுங்கள்.*** *மு.கருணாநிதி. சென்னை: திராவிட முன்னேற்றக் கழக வெளியீடு, 1வது பதிப்பு, 1985. (அச்சக விபரம் தரப்படவில்லை).*
*16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.*

*25.7.1983 வெலிக்கடைச் சிறைச்சாலையில் நடந்த தமிழ் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து 25.7.1984 அன்று பெரியார் திடலில் நடந்த இலங்கைத் தமிழர் படுகொலை கண்ணீர் நாள் கூட்டத்தில் கலைஞர் ஆற்றிய உரை.*

***6993***

***உலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம்: 5வது மாநில மாநாடு: மாநாட்டு சிறப்பு மலர்.*** *மலர் வெளியீட்டுக்குழு. தமிழ்நாடு: உலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம், ஒற்றைத் தெரு, வத்தலகுண்டு, 1வது பதிப்பு, பெப்ரவரி 2010. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை).*
*64 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

*தமிழ்நாடு, நெல்லை மாவட்டம், குற்றாலத்தில் அமைந்த திருவிதாங்கூர் அரண்மனையில் 21.2.2010 அன்று நடைபெற்ற உலகத் தமிழ்ச் சிற்றிதழ்களின் ஐந்தாம் மாநில மாநாட்டின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இது. இலங்கை இந்திய தமிழ்ச் சிற்றிதழாளர்களின் இணைந்த நிகழ்வாக இது அமைந்துள்ளது. மலரிலும் ஈழத்தமிழர்களின் பங்களிப்புகள் கணிசமாகக் காணப்படுகின்றன. அந்தனி ஜீவா, செங்கதிரோன் இதழாசிரியர் த.கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் வாழ்த்துக்களும், தம்புசிவாவின் "ஈழத்தின் கலை இலக்கிய வளர்ச்சியில் சிற்றிதழ்களின் பங்களிப்பு" என்ற கட்டுரையும் இம்மலரில் பிற தமிழகப் படைப்பாளிகளின் கட்டுரைகளுடன் இணைந்துள்ளன. உறுப்பினர்களாக இணைந்துள்ள இலங்கை இந்திய தமிழ்ச் சிற்றிதழ் வெளியீட்டாளர்களின் முகவரிகள் கொண்ட பட்டியலும் காணப்படுகின்றது.*

***6994***

***எனக்குள் பெய்யும் மழை: மூன்றாம் உலகப் பெண்நிலைவாதம்: இருபத்திரண்டு ஆசியக் கவிகள்.*** *யமுனா இராஜேந்திரன் (தொகுப்பாசிரியர்). பிரான்ஸ்:* EXIL, 27 Rue Jean Moulin, 92400 Courbevoie, *1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (சென்னை 600005: மணி ஆ.்.ப்செட் பிரிண்டர்ஸ்).*
*175 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 21.5x14 சமீ.*

*இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள கவிதைகளில் வெளிப்படும் பெண்களின் அனுபவம், உலகம் முழுவதுமுள்ள பெண்களுக்குரிய பொதுவான அனுபவங்களையும், அதே வேளை மூன்றாம் உலகப் பெண்களான ஆசியப் பெண்களுக்குரிய விஷேடமான அனுபவங்களையும் கொண்டிருக்கின்றது. இதிலுள்ள கவிஞர்களில் கிஸ்வர் நஹீத் பாகிஸ்தானைச் சேர்ந்தவர். சுஜாதா பட் இந்தியாவில் பிறந்து*

அங்கேயே தனது இளமை நாட்களைக் கழித்து, பின்னர் அமெரிக்கா, ஜேர்மன், பிரிட்டன் எனவாழ்ந்துப்பட்ட அனுபவங்களைப் பெற்றவர். பிற 20 கவிஞர்களும் இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளில் பிறந்தவர்கள். புலம்பெயர்ந்தவர்களும், காலனித்துவ ஆதிக்கத்தில் வாழ்ந்த பெற்றோருக்குப் பிறந்தவர்களும் அடங்குகின்றனர்.

**6995**

**கதைக் கோவை: தொகுதி 1.** குப்புசாமி ஐயர் (தொகுப்பாசிரியர்), நா.ரகுநாதன் (பதிப்பாசிரியர்). சென்னை 600004: அல்லயன்ஸ் கம்பெனி, 244 ராமகிருஷ்ணா மடம் சாலை, த.பெ. 617, மயிலாப்பூர், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1989. (சென்னை 600014: சூர்யசந்திர அச்சகம்).
xvi, 472 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 17.5x12 சமீ.

1938-1948ம் ஆண்டு காலகட்டத்தில் கதைக்கோவை என்ற தலைப்பில் நான்கு சிறுகதைத் தொகுப்புகளை மேற்கொண்டு 300க்கும் அதிகமான சிறுகதைகளைப் பதிவுக்குள்ளாக்கியவர் குப்புசாமி ஐயர். முதலாவது தொகுப்பில் 40 பிரபல தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகள் உள்ளடங்கியது. அதில் ஈழத்துச் சிறுகதையாளர்களான இலங்கையர்கோன் (தந்தை மனம்), சி.வைத்திலிங்கம் (மூன்றாம் பிறை), க.தி.சம்பந்தன் (விதி) ஆகியோரின் கதைகள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 1989இல் மீள்பதிப்புக்குள்ளாகியுள்ளது. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 469078).

**6996**

**சாதனை மன்னர் சங்கரண்ணா.** கே.என்.நாகராஜன் (பதிப்பாசிரியர்). சென்னை 17: தமிழோசை தமிழ் மன்றம், தபால் பெட்டி எண் 4962, தியாகராய நகர், 1வது பதிப்பு,அக்டோபர் 1991. (சென்னை 14: அபிராமி பிரிண்டிங் வேர்க்ஸ், இராயப்பேட்டை),
88 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 18.00, அளவு: 20x14 சமீ.

பீ.பீ.சீ. தமிழோசையின் நிகழ்ச்சித் தயாரிப்பாளரான திரு. சங்கரமூர்த்தியின் வாழ்வும் பணியும் இந்நூலில் பல்வேறு தமிழக, ஈழத்து ஊடகவியலாளர்களால் விதந்துரைக்கப்பட்டுள்ளது. 1931இல் திருநெல்வேலி, தென்காசி என்ற ஊரில் பிறந்த சங்கர், 1966 பெப்ரவரி முதல் லண்டன் சென்று பீ.பீ.சீ தமிழோசையில் தனது பணியைத் தொடங்கியிருந்தார். தமிழக ஊடகவியலாளர்களுடன் விமல் சொக்கநாதன், எஸ்.கே.பரராஜசிங்கம், சில்லையூர் செல்வராசன் ஆகியோரின் நினைவுப் பதிவுகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

**6997**

**சிங்களவர்: அரசியல் சமயம் இலக்கியம்.** இரா.அறவேந்தன். விழுப்புரம் 605652: திருவரசு வெளியீடு, 1.61, நடுத்தெரு, வி.சாத்தனூர் அஞ்சல், விக்கிரவாண்டி வழி, 1வது பதிப்பு, நவம்பர் 1997. (அச்சக விபரம் தரப்படவில்லை).
x, 104 பக்கம், விலை: இந்திய ரூபா 22., அளவு: 18x12.5 சமீ.

தமிழ்நாடு, புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை விரிவுரையாளரான டாக்டர் இரா.அறவேந்தன் இலங்கையின் பிரதான இனமான சிங்களவர்களின் அரசியல், சமயம், இலக்கியம் ஆகிய விடயங்களை இந்நூலில் ஆய்வுசெய்துள்ளார். அரசியல். சமயம், இலக்கியம், மொழி, இலக்கணம் ஆகிய தலைப்புகளின் கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. சமயப்பிரிவில் பௌத்த ஆலயத்தில் பண்பாட்டு இணைவு, புத்தர் வழிபாட்டு முறையில் கட்டொருமைப்பாடு, பிக்கு வழிபாட்டில் வழக்கடிப்பாடுகள், பௌத்தத் துறவு ஆகிய விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இலக்கியப் பிரிவில் அனுராதபுரக் கால இலக்கியங்கள், பொலந்நறுவைக்கால இலக்கியங்கள், தம்பதெனியாக் கால இலக்கியங்கள், கோட்டைக்கால இலக்கியங்கள் என்று பிரித்து விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 507276).

**6998**

**தகத்தகாய தங்கம்மா.** அண்ணா கண்ணன். சென்னை 600002: காந்தளகம், 834 அண்ணா சாலை, 1வது பதிப்பு, ஆவணி 2001. (சென்னை 600002: காந்தளகம், 834 அண்ணா சாலை).

*128 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.*

*காந்தளகம் அதிபர் மரவன்புலவு கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் அவர்களின் தாயார் தங்கம்மா கணபதிப்பிள்ளை (1917) அவர்களின் வாழ்க்கை வரலாற்றினூடாக இலங்கைத் தமிழரின், குறிப்பாக யாழ்ப்பாணத்தவரின் ஒரு காலகட்ட சமூக வரலாற்றைப் பதிவுசெய்யும் முயற்சி இதுவாகும். தமிழகத்தைச் சேர்ந்த கவிஞர் அண்ணா கண்ணன், திருமதி தங்கம்மா அவர்களை தமிழகத்தில் அடிக்கடி சந்தித்து உரையாடிப்பெற்ற தகவல்களும், அவரது சேகரிப்பிலிருந்த புகைப்படங்களும் இந்நூலினை மேலும் பொலிவாக்குகின்றன.*

***6999***

***தமிழா இனவுணர்வு கொள்.*** *அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிய பரமாச்சாரிய சுவாமிகள். சென்னை 600007: திராவிடர் கழக வெளியீடு, 50 ஈ.வெ.கி.சம்பத் சாலை, 1வது பதிப்பு, 1983. (சென்னை 600007: அறிவுக்கடல் அச்சகம், வேப்பேரி).*
*56 பக்கம், விலை: இந்திய ரூபா 1.25, அளவு: 18x12 சமீ.*

*23.09.1983 அன்று தூத்துக்குடியில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற **ஈழத் தமிழரின் கண்ணீர்க்கதை கண்காட்சி** திறப்புவிழாவிலும், 17.10.1983 அன்று திருச்சியில் அய்ரோப்பிய நாடுகளுக்குச் சென்றுவந்த கி.வீரமணி அவர்களுக்கு திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற பாராட்டுவிழாவிலும் கலந்துகொண்டு மதுரை மடாதிபதி 292ஆவது குருமகா சன்னிதானம் தவத்திரு அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆற்றிய உரை.*

***7000***

***பேரினவாதத்தின் ராஜா.*** *டி.அருள் எழிலன். சென்னை 600005: புலம் வெளியீடு, 332/216, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, திருவல்லிக்கேணி, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (சென்னை 600005: சுப்ரா பிரின்டெக்).*
*232 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 125., அளவு: 20.5x14 சமீ.*

*தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவரீதியாக வெற்றிகொள்ளப்பட்ட மே 2009 முதல் முட்கம்பி வேலிகளுக்குள் முடக்கப்பட்டனர் வன்னிமக்கள். அதன் பின்னரான இலங்கையின் அரசியல் நிலைப்பாட்டை விரிவாக இந்நூல் பதிவுசெய்கின்றது. பிராந்திய வல்லரசுகளின் சந்தை வெறியை, இந்திய பேராதிக்கத்தின் விரிவாக்கக் கனவை, அதன் பேரினவாதத்தை அரசியல் பின்னணியோடு விவரிக்கும் இந்நூல், தமிழார்வலர்கள் பேசித்தீர்த்த தமிழர் வீரமும், ஆண்ட பரம்பரை நினைவுகளும், ஈழத்தமிழர் படுகொலையை வேடிக்கை மட்டும் பார்க்கமுடிந்த கையாலாகாதத் தனத்தையும், போலித்தனத்தையும், அதிகார பீடங்களின் கள்ள மவுனத்தையும் குற்ற உணர்வோடு நம்மை எதிர்கொள்ள வைக்கின்றது.*

# *பின்னிணைப்பு*

**இப்பிரிவில் உள்ள நூல்கள் ஏற்கெனவே நூல்தேட்டம் முன்னைய தொகுதிகளில் பதியப்பெற்றவை. மூலநூற்பதிவுக்குப் பின்னர் வெளியாகிய திருத்திய பதிப்புக்களை ஆவணப்படுத்தும் நோக்கில் இத்தொகுதியின் கீழுள்ள நூல்கள் இடம்பெறுகின்றன. அடைப்புக்குறிக்குள் இந்நூல்களுக்கான நூல்தேட்டத்தின் முன்னைய பதிவிலக்கங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுக்குத் தனியான நூல்தேட்டம் தொடரிலக்கம் வழங்கப்படவில்லை.**

***7 A 01***

***அடிப்படைத் தமிழ் இலக்கணம்.*** *எம்.ஏ.நுஃமான். கல்முனை 7: வாசகர் சங்கம், 139, சாஹிராக் கல்லூரி வீதி, மீள்பதிப்பு, ஜுன் 2007, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1999, 2வது பதிப்பு, ஜுலை 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 48 B, புளுமென்டால் வீதி).*
*(8), 214 பக்கம். விலை: ரூபா 270. அளவு: 22x14 சமீ., ISBN: 955-96699-0-7.*

*தமிழ்மொழியை ஒரு பாடமாகப் பயிலும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்படும் வகையில் விரிவாக எழுதப்பட்ட இலக்கண ஆய்வுநூல். மரபுவழி இலக்கணக் கருத்துக்களோடு, நவீன மொழியியல் கருத்துக்களையும் இணைத்துத் தற்காலத் தமிழ் மொழியின் இலக்கண அமைப்பை மிக எளிமையாக விளக்க இந்நூல் முயல்கின்றது. எழுத்தியல், சொல்லியல், தொடரியல், புணரியல் என்னும் நான்கு பிரிவுகளில் தமிழ் இலக்கண அமைப்பினைப் புதிய நோக்கில் இந்நூல் விளக்குகின்றது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 241).*

**7 A *02***

***அருள் வாக்கி.*** *எஸ்.எம்.ஏ.ஹஸன். கண்டி: இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம், 1வது பதிப்பு, ஜனவரி 1973. (அக்குறணை: அக்குறணை அச்சகம், மாத்தளை வீதி).*
*82 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 17.5x12 சமீ.*

*ஆசிரியர் புலவர் மலை, அருட்காட்சி, யார் இந்தச் சிறுக்கன், சங்கப்புலவர், தமிழ்ப்பணி, வித்துவதீபம், தீபசித்தி, புலவர் காலத்து இலக்கியப்பண்பு, இலக்கிய இன்பம், புலவரின் குடும்பம் ஆகிய பத்துத் தலைப்புகளில் அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவரின் வாழ்க்கை விபரங்களையும், இலக்கியப் பணிகளையும், பல செய்யுள்களின் ஆதாரத்துடன் கூறி, அவரது இஸ்லாமிய ஞானம், இலக்கியப் புலமை போன்றவற்றையும் விளக்கியுள்ளார். இலக்கிய இன்பம் என்ற பகுதியில் அருள்வாக்கியின் நூல்கள் சிலவும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 295027. **அருள்வாக்கி அப்துல் காதிர்** என்ற தலைப்பிலான பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1889)*

**7 A *03***

***இலக்கியமும் கருத்து நிலையும்.*** *கார்த்திகேசு சிவத்தம்பி. சென்னை 600005: தமிழ்ப் புத்தகாலயம், 58, டி.பி.கோயில் தெரு, திருவல்லிக்கேணி, 1வது பதிப்பு, மே 1982. (சென்னை 600005: ஸ்ரீ கோமதி அச்சகம், 7, சின்னப்ப ராவுத்தர் தெரு, திருவல்லிக்கேணி).*
*116 பக்கம், விலை: இந்திய ரூபா 6., அளவு: 18x12.5 சமீ.*

*இந்நூல் முற்றிலும் இலக்கிய விமரிசனம் பற்றியது. இலக்கியக்கோட்பாடு, சமூகப் பிரச்சினை, ஆக்க இலக்கியகர்த்தன், நவீன தமிழிலக்கியத்தின் பண்புகளும் கருத்துநிலை அடிப்படையும், மொழிபெயர்ப்பும் உலகப் பண்பாடும் ஆகிய முதல் மூன்று அத்தியாயங்களும் பெரும்பாலும் கருத்து நிலைப்பட்டவை. லியோ ரோல்ஸ்ற்றோயின் இலக்கிய மேன்மை, தமிழ் மரபிற் பெண்மையும் பெண் விடுதலையும், புனைகதை எழுத்தாளரும் இலக்கிய வரலாறும் ஆகிய இறுதி மூன்று அத்தியாயங்களும் முன்னர் கருத்து நிலையிலும் வரலாற்ற நிலையிலும் வைத்து ஆராயப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ள பிரயோக விமரிசனங்கள். (பின்னைய விரிவான பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2729).*

**7 A *04***

***இலங்கை வாழ் தமிழர் வரலாறு.*** *க.கணபதிப்பிள்ளை. கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, மீள் பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*
xii, *50 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-9429-35-3.*

*வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் ஈழத்தில் தமிழர் இடையீடின்றி வாழ்கின்றனர் என்பதும் அவர்கள் தமக்கெனத் தனியரசொன்றைக் கொண்டிருந்தனர் என்பதும் ஆசிரியருடைய கோட்பாடு. புராணம், இலக்கியம், சாசனம், மகாவமிசம் முதலிய சிங்கள மூலநூல்கள், பயணிகள் குறிப்புகள், பல்வேறு வரலாற்று நூல்கள் என்பனவற்றை ஆதாரமாகக்கொண்டு வரலாற்றுக்கு முற்பட்டகாலம் முதல் போர்த்துக்கேயர் காலம் வரையிலான ஈழத்தமிழர் வரலாற்றை சுருக்கமாக வரைந்துள்ளார். சரித்திரகாலத்துக்கு முந்திய யாழ்ப்பாணம், உக்கிரசிங்கன் தொடக்கம் பாணன் வரை, பாணன் தொடக்கம் ஆரியச் சக்கரவர்த்தி வரை, ஆரியச் சக்கரவர்த்திகள் முதலாம் பரம்பரை, பிற்கால யாழ்ப்பாணத்தரசர், விடுதலைப் போராட்டம் ஆகிய 6 தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது. இதன் முதற்பதிப்பு, ஆவணி 1956இல் ஆசிரியரால் கொழும்பு, சுதந்திரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு 38 பக்கங்களுடன் வெளிவந்தது. ஆசிரியரின் **சங்கிலி** என்ற நாடக நூலில் ஒரு பகுதியாகவும்*

*இக்கட்டுரை வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 970)*

**7 A 05**

***இலங்கையின் புராதன சைவாலயங்கள்: நல்லூர் கந்தசுவாமி.*** *குல.சபாநாதன். கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 2வது பதிப்பு, 2007. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*

xxxiv, *230 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ.,* ISBN: *978-955-9429-82-5.*

*முதலியார் குல.சபாநாதன் யாழ்ப்பாணம் கரம்பொனைச் சேர்ந்தவர். இலங்கையின் புராதன சைவாலயங்கள் என்ற தொடரில் இவர் எழுதிய மூன்றாவது நூல் இது. நல்லூர், தமிழ் அரசர்களின் இராசதானியாக விளங்கியதும் தமிழ் அரசர் காலத்தில் புவனேகபாகு என்ற மன்னன் நல்லூர் கோவிலை அமைத்ததும், கோவிலின் சிறப்பும், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் அதன் நிலையும், பிறகு ஆங்கிலேயர் காலத்தில் புனருத்தாரணம் செய்யப்பட்டமையும், பூசைக்கிரமங்களும் மகோற்சவங்களின் சிறப்பும், சுகாதார வசதிகளும், கோயில் நடத்துவோரின் திறமையும் என்று இன்னோரன்ன விடயங்கள் இந்நூலில் பதிவாகியுள்ளன. இதன் முதற்பதிப்பு நல்லூர் தேவஸ்தான வெளியீடாக 1971இல் வெளிவந்தது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4123)*

**7 A 06**

***ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி.*** *சில்லையூர் செல்வராசன். (இயற்பெயர்: சூசைப்பிள்ளை மரியதாஸ்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 2வது பதிப்பு, 2009, 1வது பதிப்பு, 1967. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*

x, *88 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 17.5x12.5 சமீ.,* ISBN: *978-955-659-197-2.*

*1950களின் பிற்பகுதியிலிருந்து இலங்கை முற்போக்கு இலக்கிய இயக்கம் தோற்றுவித்த இலக்கிய உந்துதலின் வழியாக மேற்கிளம்பிய மறக்கமுடியாத இலக்கிய கர்த்தாக்களில் சில்லையூர் செல்வராசன் (1933-1996) முக்கியமானவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1962இல் நடத்திய முதலாவது அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டையொட்டி வெளியிடப்பட்ட மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரையின் நூல்வடிவம் இதுவாகும். ஈழத்தின் தமிழ் நாவல் வளர்ச்சி பற்றிய பல்வேறு அரிய தகவல்களை இந்நூல் வழங்குகின்றது. அநுபந்தங்களாக, ஈழத்துத் தமிழ் நாவல்களின் உரைநடைப் போக்கினை விளக்கும் வகையில் மாதிரிப் பந்திகளையும், 1962 வரையான ஈழத்துத் தமிழ் நாவல்களின் பட்டியலையும் தொகுத்து வழங்கியிருக்கின்றார். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5747).*

**7 A 07**

***ஈழத்துச் சிதம்பரம்.*** *ச.கணபதீசுவரக் குருக்கள். காரைநகர்: சுந்தரேசுவரர் தேவஸ்தான திருப்பணிச்சபை, திண்ணபுரம், 2வது பதிப்பு, மார்கழி 2002, 1வது பதிப்பு, 1961. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).*

xxiv,32+62 *பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.*

*ஈழத்தின் பெருமையும், யாழ்ப்பாணத்தின் சிறப்பும், காரைநகரின் கவினும், தினகரன் என்னும் அந்தணரின் ஞாபகமாகத் திண்ணபுரம் என்னும் பெயர் வந்த வகையும், ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படும் எழின்மிகு சிவத்தலத்தின் மாண்பும், வரலாறும், பிறவும் படிப்போருள்ளத்தில் படம் வரைந்தாற்போலப் பதியுமாறு இந்நூல் எழுதப்பெற்றுள்ளது. ஈற்றில் திண்ணபுரவந்தாதி, திண்ணபுரச் சுந்தரேசர் திருப்பதிகம், திண்ணபுரத் திருவூஞ்சல், திண்ணபுர வெண்பா என்னும் பக்திச் சுவை நிறைந்த பிரபந்தங்களும் பிற்சேர்க்கைகளாக இடம்பெற்றுள்ளன. திருத்திய இப்பதிப்பில் 1962-2002 காலப்பகுதியில் ஆலய வளர்ச்சியும் ஆதீனகர்த்தாக்களின் சிவ கைங்கரியப் பணிகளும் பரிபாலனமும் சுரக்கமாகக் கூறப்பட்டுள்ளது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5204)*

**7 A 08**

**எனக்குள்ளே நான்.** ஏ.எப்.எம்.ரியாட். கிண்ணியா 6: குரல் (நேயம்), தபால் பெட்டி எண் 1, 1வது பதிப்பு, ஆவணி 2003. (திருக்கோணமலை: ரெயின்போ மினி லாப், 361 பீ, நீதிமன்ற வீதி).
106 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 80., அளவு: 17x12.5 சமீ.

இந்நூலாசிரியர் திருக்கோணமலை கண்டி வீதியில் தம்பலகாமத்துக்கும் கந்தளாய்க்கும் இடையில் அமைந்துள்ள முள்ளிப்பொத்தானையைச் சேர்ந்தவர். தி/ஆல்ஹிஜ்ரா மகாவித்தியாலயம், கிண்ணியா மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராகிய இவரின் முதல் கவிதைத் தொகுதியான இத்தொகுதியில் 53 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கவிதைகள் காதல், இயற்கை, அகதி வாழ்வு, அரசியல், சமூகம் போன்ற பல்வேறு உணர்வுகளை எடுத்துக் காட்டுகின்றன. (இந்நூல் ஏற்கெனவே **எனக்குள்ளே நீ** என்ற தலைப்பில் தவறுதலாகப் பதியப்பட்டுள்ளது. முன்னைய பதிவுக்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4428)

**7 A 09**

**ஒப்பியல் இலக்கியம்.** க.கைலாசபதி. சென்னை 600001: பாரி நிலையம், 59, பிராட்வே, 1வது பதிப்பு, மார்ச் 1969. (சென்னை 600014: Maruthy Press, 83, Peters Road).
x, 323 பக்கம், விலை: இந்திய ரூபா 6., அளவு: 18.5x13 சமீ.

பண்டைத்தமிழ் இலக்கியங்களின் சிறப்பினையும் தமிழ் இலக்கியப் போக்கினையும் தமிழர் பண்பாட்டினையும் நன்கு விளங்கவும், தனிப் பண்புகளை இனங்கண்டு கொள்ளவும், ஒப்பியல் அணுகுமுறை இன்றியமையாதது. இத்தகைய இலக்கிய ஒப்பியல் ஆய்வு பற்றிய விளக்கங்களையும் நடைமுறைகளையும் வெளிப்படுத்துவதாக இந் நூல் அமைகின்றது. பத்திரிகைகளுக்கு அவ்வப்போது அனுப்பிய 11 கட்டுரைகள் இவை. ஒப்பியலின் தத்துவங்கள், தமிழில் ஒப்பியல் ஆய்வு, தமிழ் வீரயுகப் பாடல்கள், இரு கோட்பாடுகள், பெரும்பெயர் உலகம், பொற்காலமும் புதுயுகமும், காதலும் கட்டுப்பாடும், சித்தர் தத்துவம், சிந்துக்குத் தந்தை, பாரதியும் சுந்தரம்பிள்ளையும், பாரதியும் மேனாட்டுக் கவிஞரும் ஆகிய தலைப்புக்களில் இக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (சமகாலத்து குமரன் பதிப்பகப் பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2737).

**7 A 10**

**கங்காகீதம்.** சி.வைத்தியலிங்கம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2006. (சென்னை 600014: பி.வி.ஆர்.பிரிண்டர்ஸ்).
vii, 229 பக்கம், விலை: இந்திய ரூபா 55., அளவு: 18x12 சமீ.

தனது 17வது வயதில் பாற்கஞ்சி என்ற கதையை ஆனந்த விகடனில் முத்திரைக்கதையாக ஆசிரியர் கல்கியின் மூலம் பிரசுரித்ததிலிருந்து தன் எழுத்துலகப் பிரவேசத்தைத் தொடங்கி ஈழத்தின் சிறுகதை இலக்கியத்தின் முன்னோடிகளுள் ஒருவராக விளங்கியவர் அமரர் சி.வைத்தியலிங்கம். இவர் 1939-1956 வரை எழுதி ஆனந்தவிகடன், கலைமகள், ஈழகேசரி, கதைக்கோவை, கிராம ஊழியன் ஆகிய இதழ்களில் பிரசுரமான பாற்கஞ்சி, ஏன் சிரித்தார், மின்னல், களனி கங்கைக் கரையில், பார்வதி, தியாகம், நந்தகுமாரன், ஏமாளிகள், பூதத்தம்பி கோட்டை, விதவையின் இதயம், மரணத்தின் நிழல், அழியாப் பொருள், மூன்றாம் பிறை, நெடுவழி, பைத்தியக்காரி, கங்காகீதம், சிருஷ்டி ரகசியம், உள்ளப்பெருக்கு ஆகிய 18 சிறுகதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் 1வது பதிப்பு, நவம்பர் 1990இலும் 2வது திருத்திய பதிப்பு, டிசம்பர் 1997இலும் வெளிவந்துள்ள போதிலும் மணிமேகலைப் பிரசுரத்தினர் 1வது பதிப்பாக இதை அறிமுகப்படுத்தியுள்ளனர். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1614)

**7 A 11**

**கடற் கோட்டை.** செங்கை ஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10 A, பிறவுன் வீதி, 3வது பதிப்பு, ஓகஸ்ட் 2008, 1வது பதிப்பு, ஜனவரி 1985, 2வது பதிப்பு, ஓகஸ்ட் 1993. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).
124 பக்கம், வரைபடம், சித்திரங்கள், விலை: ரூபா 320., அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-1200-06-3.

*கடல்கோட்டை, யாழ்ப்பாண வரலாற்றில் போர்த்துக்கேயரின் ஆட்சி மறைவும் ஒல்லாந்தரின் ஆட்சி உதயமும் நிலவிய காலகட்டத்தை படம்பிடித்துக் காட்டுகின்றது. அக்காலத்தில் நிலவிய சமய, சமூக, கலாச்சார, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளை யதார்த்தமாகச் சித்திரிக்கின்றது. ஈழநாடு வாரமலரில் 1984 இல் 20 வாரங்கள் தொடராக வெளிவந்தது. (முன்னைய பதிப்பிற்கான (கடல் கோட்டை) நூல்தேட்டம் பதிவிலக்கம் 645).*

**7 A *12***

***கல்விக் கோட்பாடுகளும் மாற்றுச் சிந்தனைகளும்.*** சபா.ஜெயராஜா. கொழும்பு *11:* சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples park, *2வது பதிப்பு, 2010, 1வது பதிப்பு, 2008. (*கொழும்பு *11:* சேமமடு பதிப்பகம்*).*

*160 பக்கம், விலை: ரூபா 360., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-1857-00-4.*

*உலகக் கல்விப் பரப்பில் கல்வியியல் தொடர்பான மரபுவழிக் கருத்துக்களையும் மாற்றுக் கருத்துக்களையும் அறிந்துகொள்ளவேண்டிய தேவை எழுந்துள்ள நிலையில் இந்நூல் வெளிவந்துள்ளது. சுமார் 25 கல்விச் சிந்தனையாளர்களின் தத்துவார்த்தப் புலப்பாடுகள், தத்துவ விசாரணைகள் தொடருறு அறிவுச் சேகரமாக மையம்கொள்வதை இந்நூலில் இனம்காணலாம். பிளேட்டோ, ரூசோ, புரொபல், மார்க்ஸ், ஜோன் டுயி, ஐசாக்ஸ், வைகோட்சி, ரொஜர்ஸ், ஏ.எஸ்.நீல், ஹரோல்டு றக், ஹேபர்ட் றீட், ரெயிலர், ஸ்கின்னர், புளூம், புறூனர், கிளார்க் கேர், லியோதார்த், மிசேல் பூக்கோ, போலோ பிறெறி, இவான் இலிச், செய்மோர் சராசன், மிசேல் டபிள்யூ அப்பிள், ஹென்றி கிரொக்ஸ், லொடோவின் பேட் ஆகியோரின் சிந்தனைகள் இங்கே பதிவாகியுள்ளன. மேலதிகமாக இப்பதிப்பில், குழந்தைக் கல்விச் சிந்தனைகள், ஆறுமுக நாவலரதும் சுவாமி விபுலானந்தரதும் கல்விச் சிந்தனைகள், மீட்புக்குரிய கல்விக்கோட்பாடு ஆகிய கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன. பேராசிரியர் சபா ஜெயராஜா தமிழில் கல்வியியல்துறை சார்ந்த நூல்கள் பல எழுதி, அத்துறையின் விருத்தியில் முதன்மையான பங்கு வகித்து வருபவர். இலக்கியம், உளவியல், தத்துவம் எனப் பல்வேறு துறைசார் புலங்களுடன் ஊடாடி வருபவர். ஈழத்தில் நிலைகொண்ட சேமமடு பதிப்பகத்தின் முதல் வெளியீடாக இந்நூல் வெளிவந்திருந்தது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4206)*

**7 A *13***

***கல்வியில் அளவீடும் மதிப்பீடும்.*** க.சின்னத்தம்பி. கொழும்பு *11:* சேமமடு பொத்தகசாலை, *யுஜீ 50, பீப்பிள்ஸ் பார்க், 3வது பதிப்பு, 2010, 1வது பதிப்பு, ஏப்ரல் 1986, 2வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (*கொழும்பு *11:* சேமமடு பொத்தகசாலை*).*

*244 பக்கம், விலை: ரூபா 540., அளவு: 21.5*x*15 சமீ.,* ISBN: *978-955-1857-58-5.*

*கல்வித்தொழிற்பாடானது இன்று வகிக்கும் உன்னத நிலை ஏற்பட உறுதுணையாக அமைந்ததும், எதிர்காலக் கல்வி அபிவிருத்தியை நிர்ணயிப்பதுமான அளவீடு பற்றிய அறிவு நூல். மதிப்பீட்டுத் தொழிற்பாட்டின் ஒரு பிரதான கூறாக இருக்கும் அளவீடு பற்றிய அறிவினை ஆசிரியர்களும் கல்வியியலாளர்களும் பெற உதவும் நூல். அளவீடும் மதிப்பீடும், அளவீட்டில் கல்விக் குறிக்கோள்கள், அளவிடு கருவியின் இயல்புகள், கட்டுரை அடைவுச் சோதனைகள், புறவய அடைவுச் சோதனைகள், வினையாற்றல் அடைவுச் சோதனைகள், உளச்சார்பின் அளவீடு, ஆளுமையின் அளவீடு, அடைவுச் சோதனைகளைத் தயாரித்தல், ஆசிரியர்களுக்கான அடிப்படைப் புள்ளிவிபரவியல் ஆகிய 10 இயல்களில் இவ்வாய்வு விரிகின்றது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 194).*

**7 A *14***

***கல்வியும் உளவியலும்.*** *ச.முத்துலிங்கம்.* கொழும்பு *11:* சேமமடு பொத்தகசாலை, U.G.50, Peoples park, *4வது பதிப்பு, 2010, 1வது பதிப்பு, 1980, 2வது பதிப்பு 1995, 3வது பதிப்பு,2002. (*கொழும்பு *11:* சேமமடு பதிப்பகம்*).*

*280 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-1857-76-9.*

*பேராசிரியர் கலாநிதி ச.முத்துலிங்கம் (25.8.1927-24.8.2003) இலங்கையின் முக்கியமான கல்வியியலாளர்களுள் ஒருவர். கல்வி உளவியல் என்ற பொருட்பரப்பில் ஆசிரிய மாணவர்கள்*

*முழுமையாக ஈடுபாடு கொள்ளவும் இச்சிந்தனைத் தொடர்ச்சியின் முழுமையை உள்வாங்கவும் சாதகமான சூழலை உருவாக்க முன்நின்று உழைத்தவர். இவரது கல்வியும் உளவியலும் என்ற நூல் இன்றுவரை இத்துறையின் அடிப்படை நூல்களுள் ஒன்றாக விளங்குகின்றது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4209, 5337).*

**7 A 15**

***கலைத் திட்டம்.*** *சபா. ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை,* U.G.50, Peoples park, *2வது பதிப்பு, 2010, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2007. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்).*
*164 பக்கம், விலை: ரூபா 380., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-1857-80-6.*

*நவீன கல்வி முறைமையின் உருவாக்கம், கலைத்திட்டம் சார்ந்த கருத்து, மற்றும் கோட்பாடாக்கம் சார்ந்த அகல்விரி சிந்தனையின் தொகுப்பாகவே அமைந்துள்ளது. கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் உள்ளவர்களுக்கு கலைத்திட்டம் பற்றிய அறிவு இன்றியமையாது வேண்டப்படுகின்றது. கலைத்திட்டம் பற்றிய கோட்பாட்டுரீதியான விளக்கத்தினை வழங்கும் நோக்குடன் கலைத்திட்டம் சார்ந்த 28 கட்டுரைகளுடன் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. (அகவிழி வெளியீடாக வெளிவந்த முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5339).*

**7 A 16**

***கிராமத்து இதயம்: இலங்கை முஸ்லீம்களின் நாட்டுப்புற இயல்.*** S.H.M.*ஜெமீல் (பதிப்பாசிரியர்). கொழும்பு 5: முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, 73/19* E, *கிருலப்பனை அவெனியு, திருத்திய 2வது பதிப்பு, மார்ச் 2008, (தெகிவளை: ஏ.ஜே. பிரின்ட்ஸ், இல.14, ஸ்டேஷன் வீதி).*
xviii, *240 பக்கம், விலை: ரூபா 400, அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-96694-3-2.*

*இலங்கை முஸ்லிம்களிடையே காணப்படும் பெருந்தொகையான நாட்டுப்புறப் பாடல்கள் பற்றிய ஆய்வுரீதியான தொகுப்பு இந்நூலாகும். கவியின் கதை, பாலர் பாடல்கள், அன்புப் பாடல்கள், உவமானச் சிறப்பு, அறபுச் சொல்வளம், திருமணச் சம்பிரதாயங்கள், வழிநடைச் சிந்து, சந்தேஸ காவியங்கள், நாட்டார் கலைகள், நாடகப் பாடல்கள், அம்பா, இசைக் கோகிலம் மீரா உம்மா, காவியம் (இப்பிரிவுக்குள் சூறாவளிக் காவியம், கிழக்கின் சூறாவளிகள், மழைக் காவியம், வெள்ளக் காவியம் என்பன உள்ளடங்குகின்றன) ஆகிய அத்தியாயங்களில் சுமார் 700 பாடல்களும், அவற்றிற்கான ஆய்வுரீதியான விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. பின்னிணைப்பாயுள்ள இலங்கை நாட்டாரியல் பற்றி இதுவரை வெளிவந்துள்ள நூல்களின் பட்டியல் மிகப் பிரயோசனமானதாகும். 1995ஆம் ஆண்டுக்குரிய இலக்கிய ஆய்வுக்கான சாஹித்திய மண்டலப் பரிசும் வடக்கு கிழக்கு மாகாண சாஹித்திய மண்டலப் பரிசும் இந்நூலின் முதற் பதிப்புக்கு வழங்கப்பட்டது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4240).*

**7 A 17**

**தம்மபதம்.** நவாலியூர் சோ.நடராஜன் (பாளி மூலத்திலிருந்து தமிழாக்கம்). கொழும்பு 12: குமரன் *புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி, 2வது பதிப்பு, 2008. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, 1/2, டாம் வீதி).*
vi, *113 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-659-136-2.*

*கி.மு. 500களில் தொகுக்கப்பெற்ற அறவழி என்னும் அர்த்தத்தைத் தரும்* **தம்மபதம்** *என்ற இந்நூல் பௌத்தர் மத்தியில் மிகவும் பிரசித்தமான தர்மநூலாகும். இது பௌத்த பிடகங்களில் ஒன்றான சுத்தபிடகத்தைச் சேர்ந்த குத்தக நிகாயம் என்ற நூலின் ஒரு பகுதியாகும். பாளி மொழியில் 423 சூத்திரங்களாக 26 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. புத்தர் பெருமான் அவ்வப்போது கூறிய வாக்கியங்களாலான இது பௌத்த மதத்தவரின் பாராணய நூலாகவும், பிரமாண நூலாகவும் அமைகின்றது. வளர்ச்சியடைந்த பல உலக மொழிகளில் தம்மபதமானது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூல் பாளி மூலத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது. புத்த அறநூல் வெளியீட்டு வரிசையில் இரண்டாவது நூலாக இதன் முதற்பதிப்பு 1982இல் வெளியிடப்பட்டது. நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் இரண்டாவது புதல்வரான நூலாசிரியர் இலங்கை வானொலியின் முதல் தமிழ் அறிவிப்பாளராவார். இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர், கல்வி இலாகாவில் வித்தியாதரிசிகராகவும், பரீட்சைப் பிரிவின்*

*அத்தியட்சகராகவும், அரசகரும மொழிகள் திணைக்களத்தில் மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளராகவும் கல்வி நூல்வெளியீட்டுத் திணைக்களத்தில் பணிப்பாளராகவும் பல உயர் பதவிகளை வகித்தவர். தமிழ், ஆங்கிலம், சிங்களம், பாளி, சமஸ்கிருதம் முதலிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3085).*

**7 A *18***

***தமிழ் ஓலைகள் 2010.*** *தி.ஸ்ரீஸ்கந்தராஜா, ஏ.ஞானேந்திரன் (நிர்வாக ஆசிரியர்கள்), இலண்டன்:* British Tamil Directories, 52 Kingsley Road, Wimbledon, London SW19 8HF, *17வது பதிப்பு, 2010, முதற் பதிப்பு 1994 (இலண்டன்: அச்சக விபரம் குறிப்பிடப்படவில்லை).*
***512 பக்கம், வண்ணப்படங்கள், விலை: இலவசம், அளவு: 21*x*14.5 சமீ.,*** ISSN: ***1477-1179.***

*1994 முதல் ஆண்டு இதழாக வெளிவரும் பிரித்தானிய, ஐரோப்பிய வர்த்தக வழிகாட்டியின் 2010வது ஆண்டுக்கான 17ஆவது பதிப்பு. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவு இலக்கம் 13, 1025).*

**7 A *19***

***தமிழ் கற்பித்தலில் உன்னதம்: ஆசிரியர் பங்கு.*** *கார்த்திகேசு சிவத்தம்பி. சென்னை 98: நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிட்டெட், 41 பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், 1வது பதிப்பு, நவம்பர் 1996. (சென்னை: ராஜேஸ்வரி லித்தோ பிரஸ்).*
vi, ***58 பக்கம், விலை: இந்திய ரூபா 15., அளவு: 16.5*x*12 சமீ.,*** ISBN: ***81-234-0538-3.***

*இன்றைய நிலையில் தமிழைத் தய்மொழியாகக் கற்பித்தலில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் பற்றிய ஓர் ஆய்வு. இது 1992இல் சிங்கப்பூரில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழாசிரியர் மகாநாட்டில் உயிர்ப்புரையாக அமைந்த கட்டுரையின் நூல்வடிவம். மொழி கற்பித்தல் மேற்கொள்ளப்படும்போது இருக்கவேண்டிய கருத்துத் தெளிவு, தமிழ் கற்பித்தலின் இன்றைய நிலைமைகள், வளர்ச்சியடைந்த நாடுகளில் இன்று தாய்மொழி கற்பித்தல் நடத்தப்பெறும் முறைமையும் அம்முறைமைக்கான கல்வியியல் எடுகோள்களும், தமிழ்ப் பாரம்பரியத்தில் தமிழ் கற்பித்தல் முறைமை தமிழாசிரியர் நமது பண்பாட்டிற் பெறும் இடம் இவற்றுக்கான கருத்துநிலைப் பின்புலம், தமிழ் மொழிப் பயில்வு, ஆசிரியருக்கு வழங்கவேண்டிய அறிவுப் பயிற்சி, தமிழ் பயிற்றலுக்கான நவின தொழில்நுட்பத் துணைக் கருவிகள் என்பன இவ்வாய்வில் உள்ளடங்குகின்றன. (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 520071. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1228).*

**7 A *20***

***தமிழர் சால்பு: சங்ககாலம்.*** *சு.வித்தியானந்தன். கண்டி: தமிழ்மன்றம். கல்ஹின்ன, 1வது பதிப்பு, புரட்டாசி 1954. (கும்பகோணம்: சாரதாவிலாச அச்சகம்).*
***324 பக்கம், விலை: ரூபா 4-0-0., அளவு: 21*x*14 சமீ.***

*தமிழரரின் வரலாற்று நூலான இது தமிழ்மன்றத்தின் 3வது வெளியீடாகும். பேராசிரியரின் கலாநிதிப் பட்டத்திற்காக இலண்டன் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்த ஆங்கில ஆய்வுநூலின் தமிழாக்கமே இது. சங்ககாலத்தைக் கூறுபடுத்தி, நுணுக்கமாக ஆராய்ந்து 14 இயல்களில் பேராசிரியர் வித்தியானந்தன் விளக்கம் தருகிறார். தமிழ் இலக்கிய வரலாற்றைப் படிக்கும் எவருக்கும் பயனளிக்கும் இந்நூல் சங்ககாலத்தைப் பற்றிய முழுத்தகவல்களையும் ஒருங்கே திரட்டித் தருகின்றது. (பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 98936. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1792)*

**7 A *21***

***தரையும் தாரகையும்.*** *செ.கணேசலிங்கன். சென்னை 600001: பாரி நிலையம், 59, பிராட்வே, 1வது பதிப்பு, டிசம்பர் 1968. (சென்னை 17: ராமன் பிரின்டிங் பிரஸ், 81/5, பாண்டி பஜார், தி. நகர்)*
***300 பக்கம், விலை: இந்திய ரூபா 5.50., அளவு: 18*x*12 சமீ.***

*கீழ் நடுத்தர வர்க்கம் தரையில் நின்றுகொண்ட தாரகையைத் தொடமுனைந்து தோல்வியடைவதை சித்திரிக்கும் கதை. காதலில் ஏமாற்றமடைந்த கந்தசாமி கொழும்பில் பல உளப் பாதிப்புக்களை*

எதிர்நோக்குகின்றான். பாலசிங்கம் என்ற இடதுசாரி இயக்க நண்பனின் போதனைகளின் மூலம் வாழ்வில் திருப்பத்தைக் காண்கிறான். தனிமனித உறவுப் பிரச்சினைகளுக்கு சமூக வர்க்கப் பின்னணியில் தீர்வினைக் காணவேண்டும் எனவும் பிரச்சினையின் அடித்தளத்தைக் கண்டறிவதன்மூலமே நிரந்தரத் தீர்வுக்கு வழிகோலலாம் என்பதையும் சித்திரிக்கும் கதை. 1958.இன் இனக்கலவரத்தின் ஆரம்ப காலகட்டம் இந்நாவலில் கூறப்படுகின்றது. இலங்கையின் மத்தியதர வர்க்கத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள், அரசியல் பாதிப்புக்கள், நிறைவேறாத ஆசைகள், காதல், குடும்பப்பிரச்சினைகள் யாவையும் இந்நாவல் தொட்டுச் செல்கின்றது. (பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 275563. பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2688)

**7 A 22**

**நலமுடன்.** எஸ்.சிவதாஸ். கிளிநொச்சி: கிளிநொச்சி மருத்துவ சங்கம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2005. (கொழும்பு 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பட்டா வீதி).
iv, 126 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 17.5x12 சமீ.

ஆழிப்பேரலையின் பாதிப்பின் பின்னர் வெளியான உளவளத்துணை நூல். மனநல மருத்துவர் எஸ் சிவதாஸ் எழுதிய இந்நூல் 2004இல் ஏற்பட்ட ஆழிப்பேரலையின் பின்னரான மீட்புப்பணிகளில் ஈடுபட்ட அனுபவங்களையும், கண்ட காட்சிகளையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு அளித்த பராமரிப்புச் சிகிச்சைகளையும் அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூலில் சொல்லப்படுகின்ற அறிவு, தத்துவங்கள், கோட்பாடுகள், உதவும் முறைகள் எல்லாம் பிற அனர்த்த உளமீட்புப் பணிகளுக்கும் பொருந்துவனவாக உள்ளன. உங்களிடம், பனையிடைவெளி, அறிமுகம், நெருக்கீட்டினை எதிர்கொள்ளல், தீவிர நெருக்கீட்டு எதிர்த்தாக்கம், நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடுநோய், இழிவிரக்கம், மெய்ப்பாடு, தற்கொலை, மதுப்பழக்கம், பதகளிப்பு, மனச்சோர்வு, சிறுவர்களைப் பாதுகாத்தல், உதவும் வழிமுறைகள், வேர்களிலிருந்து அரும்புவோம் ஆகிய 15 தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது. ஒவ்வொரு அத்தியாயத்தின் ஆரம்பத்திலும் கலைத்துவமான முழுப்பக்க புகைப்படமொன்றும், ஆழிப்பேரலையுடன் தொடர்புபட்ட கவிதையொன்றும் காணப்படுகின்றது. (பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 588141. பின்னைய நிகரி வெளியீட்டகப் பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4049)

**7 A 23**

**நொறுங்குண்ட இருதயம்.** மங்களநாயகம் தம்பையா (மூல ஆசிரியர்), எஸ்.சிவலிங்கராஜா (பதிப்பாசிரியர்). கொழும்பு 10: புனைவகம், B3-G3, ரம்யா பிளேஸ், 3வது பதிப்பு, 2010, 2வது பதிப்பு, 1996, 1வது பதிப்பு, 1914. (கொழும்பு 10: குமரன் புத்தக இல்லம், B3-G3, ரம்யா பிளேஸ்).
xvi, 284 பக்கம், விலை: ரூபா 475., அளவு: 18x12 சமீ., ISBN: 978-955-0350-01-8.

ஈழத்தின் முதலாவது சமூக நாவலாகவும் ஈழத்தின் முதல் பெண் எழுத்தாளரின் படைப்பாகவும் இது உருவாகியுள்ளது. யாழ்ப்பாணத்துக் கிராமமொன்றில் சமூக ஊழல்களால் மனம் பாதிப்புக்குள்ளான ஒரு பெண்ணின் கதை. சுப்பிரமணியரின் மக்களான பொன்னுத்துரையும் கண்மணியும் அவள் கணவனான அருளப்பாவும், பொன்னுத்துரையின் காதலியான பொன்மணியும் முக்கிய பாத்திரங்கள். கணவனால் பலவகையிலும் கொடுமைப்படுத்தப்பட்ட கண்மணி மனமுடைந்தவளாக, கிறிஸ்தவ பாதிரியாரின் அருளுரைகளால் அமைதி காண்கிறாள். இறுதியில் அருளப்பா நல்லவனாக அன்பு செலுத்த வந்தபோது அவள் ஆவி பிரிகிறது. பலத்த எதிர்பார்ப்புகளை மீறி, பொன்மணி பொன்னுத்துரையை மணம்முடிக்கிறாள். 20ம் நூற்றாண்டு ஆரம்பகால யாழ்ப்பாணப் பிரதேச கிறிஸ்தவ மிஷனரிகளின் சமயப் பிரச்சாரப் பின்னணியில் அமைந்த கதை. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3715).

**7 A 24**

**பண்டாரவன்னியன்: வரலாற்று நாடகம்.** முல்லைமணி (இயற்பெயர்: வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்). சென்னை 17: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2006. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆர்ட்ஸ்).
140 பக்கம், விலை: இந்திய ரூபா 40., இலங்கை ரூபா 150., அளவு: 18x12.5 சமீ.

*17 காட்சிகளில் அமையும் பண்டாரவன்னியன் என்னும் வரலாற்று நாடகத்தில் மக்கள் நலனை மனதுட் கொண்டு தேசப்பற்றுடன் ஆண்ட ஒரு தலைவனை அவனது நற்பண்புகள் மக்களுக்கு விளங்குமாறு நேருக்கு நேராக இந்நாடகப் பாத்திரத்தின் மூலம் ஆசிரியர் முன்நிறுத்தியிருக்கின்றார். பண்டார வன்னியன், கைலாயவன்னியன், பெரிய மெயினார், நல்லநாச்சன், பெருவன்னிச்சி, குமாரசிங்க வன்னியன், காக்கை வன்னியன், ஒல்லாந்த தேசாதிபதி வொன் அங்கிள் பீக், ஆங்கிலத் தளபதி கப்டன் வொன்டிறிபேக், தளபதி யுவெல், சேனைத் தலைவன் எட்வர்ட் மெட்சி, ஆங்கிலத் தேசாதிபதி நோர்த் ஆகியோர் கதாபாத்திரங்களாவர். ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் போர்முரசு கொட்டிப் போரிட்ட வீரமன்னனின் தியாக வரலாறு இது. (முன்னைய 1999ம் ஆண்டு இலங்கைப் பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2571).*

**7 A 25**

**பன்னிரு திருமுறை (தோத்திரப் பாடல்களுடன்).** *சபாபதி மகேஸ்வரன் (தொகுப்பாசிரியர்). லண்டன்: விஜயலட்சுமி மகேஸ்வரன், 65,* Bedonwell Road, Bexleyheath, Kent DA7 5PS, *2வது பதிப்பு, ஜனவரி 2010, 1வது பதிப்பு, 2006. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48* B, *புளூமெண்டால் வீதி).*
xx, *182 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5*x*14.5 சமீ.*

*பரம்பொருளாகிய சிவபெருமானுடைய பெருமைகளை, அவர் அளித்த அருள்களை, அவர் காட்டிய அற்புதங்களை முறைப்படுத்திப் பாடப்பெற்றவையே பன்னிரு திருமுறைகள். திரு என்பது இறைவனையும், முறை என்பது இறைவனின் பெருமையையும் குறித்துநிற்கின்றது. பன்னிரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படும் திருமுறைகளை மொத்தம் 27 அருளாளர்கள் பாடியுள்ளனர். முதல் 7 திருமுறைகளும் தேவாரங்களாகும். இவை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர் பாடியருளினர். 8ம் திருமுறையான திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இரண்டையும் மாணிக்கவாசகர் பாடியிருந்தார். 9ஆம் திருமுறையான திருவிசைப்பா திருமளிகைத் தேவர், சேந்தனார், கரூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர், என ஒன்பது அருளாளர்களும், 10ம் திருமுறையான திருமந்திரத்தை திருமூலரும் பாடினர். 11ம் திருமுறையின் நாற்பது பிரபந்தங்களையும் திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள், நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணர், இளம்பெருமான் அடிகள், அதிரா அடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி, ஆகிய பன்னிரு அருளாளர்களும், 12ம் திருமுறையான பெரியபுராணத்தை சேக்கிழார் பெருமானும் பாடியருளியிருந்தனர். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4113)*

**7 A 26**

**பிள்ளை அழுத கண்ணீர்.** *சி.ஜெய்சங்கர். மட்டக்களப்பு: மூன்றாவது கண் பதிப்பு, உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு, சீலாமுனை, 1வது பதிப்பு, பெப்ரவரி 2007. (மட்டக்களப்பு: வணசிங்கா அச்சகம், 126/1, திருமலை வீதி).*
v, *45 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 75., அளவு: 20*x*15 சமீ.*

*இன்று உலகைக் குலுக்கும் பிரச்சினையான சூழல் மாசடைதல் என்ற பரந்த கருப்பொருளின் ஒரு பகுதியான மரம் வளர்த்தல் தொடர்பான கருத்தாழம் மிக்க நாடகம் இதுவாகும். அன்ரனியோ கிராம்ஷியின் குட்டிக்கதை ஒன்றினையும், பாலுக்குப் பாலகன் என்னும் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகத்தையும் தழுவி ஆக்கப்பெற்றது.* Tears of the child *என்ற தலைப்பில் இந்நாடகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பாளர் எஸ்.எம். பீலிக்ஸ். நூலாசிரியர் மட்டக்களப்பு, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பிரிவின் விரிவுரையாளராவார். (திருக்கோணமலை, கீழைத் தென்றல் கலாமன்றம் வெளியிட்ட முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3361)*

**7 A 27**

**பொது அறிவு.** *ஆறுமுகம் கந்தையா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: அஷ்டலட்சுமி வெளியீட்டகம், கைதடி, 1வது பதிப்பு, 1990. (யாழ்ப்பாணம்: சிவா பிரின்டர்ஸ், கைதடி).*
*(6), 108 பக்கம், விலை: ரூபா 42., அளவு: 21.5*x*14 சமீ.*

*சூரியக்குடும்பம், விண்வெளி அறிவியல், பூமியும் அதன் நிலைகளும், உலகநாடுகளின் தலைநகரங்கள், உலக நாடுகளின் நாணயங்கள், உலக செய்தி ஸ்தாபனங்கள், நதியோர நகரங்கள், நாடுகளும் அவற்றின் உற்பத்திகளும், நாடுகளின் புதுப்பெயர்கள், நாடுகளும் பாராளுமன்றங்களும், நாடுகளின் அடையாளங்கள், இந்தியா, விளையாட்டுக்கள், கருவிகளும் பயன்களும், இயற்பியல் வேதியியல், உலகின் பெரியவை, கனிமங்களும் குறியீடுகளும், உலக அதிசயங்கள், உடல் உறுப்புகளும் நோய்களும், சாஸ்திரப் பெயர்களும் நிகழ்வுகளும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், உயிரியல், உடலின் வேதியியல், ஐ.நா.அமைப்பு, அதனுடன் இணைந்துள்ள சர்வதேச நிறுவனங்கள், உலக நிறுவனங்கள், மூன்றாம் உலக நாடுகள், இலங்கை அரசியல் அமைப்பு, புதிய கல்வித்திட்டம், உள்ளூர் தபால், விமானக் கட்டணங்கள், வெளிநாட்டுத் தூதராலயங்கள் ஆகிய பல்வேறு பிரிவுகளின்கீழ் தகவல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3013).*

**7 A *28***

***மதங்க சூளாமணி என்னும் ஒரு நாடகத் தமிழ் நூல்.*** *விபுலானந்த அடிகள். மதுரை: தமிழ்ச் சங்கம், 1வது பதிப்பு, 1926. (மதுரை: தமிழ்ச்சங்க முத்திராசாலை).*
vi,*(13),142 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*13.5 சமீ.*

*ஷேக்ஸ்பியர் மீதும் அவரது நாடகங்கள் மீதும் மதிப்பும், மரியாதையும் வைத்திருந்த அடிகளார் அவருக்கு செகசிற்பியர் (செகப்பிரியர்?) என்று தமிழில் பெயர் வழங்கியவர். ஷேக்ஸ்பியரின் அடியொற்றி, நாடகப் பாத்திரங்கள், சம்பாஷணைகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதையெல்லாம் மிக நுணுக்கமாக ஆராய்ந்து அடிகளார் இந்நூலில் தந்திருக்கிறார். மதுரைத் தமிழச்சங்கத்துப் பண்டிதரும், லண்டன் மாநகர்ப் பல்கலைக்கழகத்தின் பௌதிக சாஸ்திர விற்பன்னருமான விபுலாநந்தரின் பெயர் கூறும் நாடகத்தமிழ் ஆய்வு நூல் இதுவாகும். இந்நூல் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செந்தமிழ்ப் பிரசுரத் தொடரில் 51ஆவது (ரூக) பிரசுரமாக வெளிவந்துள்ளது. (பின்னைய 1987ம் ஆண்டு பிரதேச அபிவிருத்தி அமைச்சின் பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2384).*

**7 A *29***

***மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது.*** *நீலவண்ணன். யாழ்ப்பாணம்: கமலம் வெளியீடு, 3வது பதிப்பு, மார்ச் 2003, 1வது பதிப்பு, ஜுலை 1981, 2வது (வரதர்) பதிப்பு, ஆகஸ்ட் 1981. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B*, புளூமெண்டால் வீதி).*
*(4), 80 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 175., அளவு: 22*x*14.5 சமீ.*

*1981 மே 31 ம் திகதி இரவு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தற் பிரச்சாரக் கூட்டத்தில் ஆரம்பமான வன்செயல்களும் அதையொட்டி யாழ் நகரெங்கும் பரவி, யாழ். பொது நூலகம், ஈழநாடு அலுவலகம். நாச்சிமார் கோவில், வீடுகள், கடைகள், வாகனங்கள் என யாழ் நகரமே அரசபடைகளினால் எரியூட்டப்பட்டமையும் இந்நூலில் செய்திகள், புகைப்படங்கள், நேரடி அறிக்கைகள் ஆகியவற்றின் துணையுடன் தொகுக்கப்பெற்றுள்ளது. புகைப்பட உதவி கே.வி.சாமி, ஏ.வி.எம். (வரதர் வெளியீடாக 1981இல் வெளிவந்த முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 965)*

**7 A *30***

***யதார்த்தமும் ஆத்மார்த்தமும்.*** *மு.பொன்னம்பலம். கொழும்பு 6: நாகா பப்ளிஷர்ஸ், இல.6, சென்.மேரீஸ் ஒழுங்கை, 2வது பதிப்பு, ஜுன் 2009, 1வது பதிப்பு, ஏப்ரல் 1991. (கொழும்பு 13: கே.வி.பிரின்டர்ஸ், 58, கிரீன் லேன்).*
*(6), 154 பக்கம். விலை: ரூபா 250., அளவு: 22*x*15 சமீ.*

*ஏற்கெனவே ஊடகங்களில் வெளிவந்த சில கட்டுரைகள் உள்ளடங்கலாக பத்து இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். இலக்கியமும் இடதுசாரியும், கலை என்றால் என்ன, யதார்த்தமும் ஆத்மார்த்தமும், கவிதையில் ஏன் நாடகம் எழுதவேண்டும், கவிதை நாடகம்- இருதளப் பார்வை, சொற்களும் சொற்கடந்ததைச் சொல்லுதலும், கலையும் விடுதலையும், ஸென் பௌத்தமும்*

*ஹாய்க்கு கவிதைகளும், ஓர் கலைஞனின் தேடல், இனி வரும் இலக்கியம் ஆகிய கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. (சென்னை, தமிழியல் வெளியீடாக வந்த முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 806).*

**7 A *31***

***யாழ் நூல் என்னும் இசைத்தமிழ் நூல்.*** *விபுலாநந்த சுவாமிகள். தஞ்சாவூர்: கரந்தைத் தமிழ்ச் சங்கம், 1வது பதிப்பு, சர்வசித்து ஆண்டு, ஜுன் 1947, (தஞ்சாவூர்: கரந்தை கூட்டுறவுப் பதிப்பகம்).*
(20) + 76+401 *பக்கம், தகடுகள், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 24.5x18.5 சமீ.*

*யாழ் நூல்- தமிழிசையின் அனைத்துவகைப் பரிமாணங்களையும், இசையின் ஊடாட்டங்களையும் தெளிவாகக் கற்றுக்கொடுக்கும் ஒரு நூல். தமிழிசையின் அடையாளமாகவும், நமது தேசியஇசைச் சின்னமாகவும், சங்க இலக்கியங்களில், காப்பியங்களில், தேவார திருமுறைகளில் பெரிதும் பேசப்பட்ட யாழ் பின்நாளில் என்னவாயிற்று என்ற கேள்விக்கு விடைகாண வேர்களைத்தேடியவர் அடிகளார். பண்ணெடுங்காலம் தாம் கற்ற தமிழ், வடமொழி, ஆங்கிலம், கணிதம், இயற்பியல் துணைகொண்டு 12 ஆண்டுகள் ஆய்வுசெய்து வெளிக்கொண்டுவந்த பண்டைத்தமிழர் மரபிசை வரலாற்று நூல் இது. பாயிர இயல், யாழ் உறுப்பியல், இசைநரம்பியல், பாலைத் திரிபியல், பண்இயல், தேவார இயல், ஒழிபியல் ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் பகுத்துத் தரப்பட்டுள்ளது. (கனேடிய வெளியீடாக 2003இல் வெளிவந்த மூன்றாவது பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1323). (இந்நூல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 64788).*

# தலைப்பு வழிகாட்டி

*அக்கரைக்கு இக்கரை பச்சை 6718*
*அக்கரைப்பற்று அசனார் லெப்பை புலவரின் சறு சறு படைப்போர் 6448*
*அக்கரைப்பற்று காசிம்ஜியின் தென்கிழக்கிலங்கை முஸ்லிம்களின் மான்மியத்துக்கு முன்னோரளித்த அருஞ்செல்வம் 6975*
*அக்கா 6626*
*அகப்பொருள் விளக்கம் 6810-11*
*அகிலம்: வருடாந்த சிறப்பு மலர் 6023*
*அசன்பே சரித்திரம் 6719*
*அஞ்சாதே என் அஞ்சுகமே 6720*
*அட்டாளைச்சேனை அப்துர் ரஹ்மான் புலவரின் மணமங்கல மாலை 6449*
*அடிப்படை உளவியல் 6036*
*அடிப்படைக் கிரயக் கணக்கீடும் முகாமைக் கணக்கீடும் 6372*
*அடிப்படைத் தமிழ் இலக்கணம் 7A01*
*அண்ணல் கவிதைகள் 6450*
*அண்மைக்கால அறுவடைகள்: தொகுதி -02. 6812*
*அதிபரின் வகிபாகம் 6222*
*அது 6451*
*அந்தக் காலக் கதைகள் 6813*
*அந்தரத் தீவு 6721*
*அந்தரத்து உலவுகிற சேதி 6452*
*அந்திப் பொழுதும் ஐந்தாறு கதைகளும் 6627*
*அப்துஸ்ஸமது ஆலிம் புலவரின் அழகு தமிழ்க் காவியங்களும் சிந்தைக்கினிய சிந்துகளும் 6618*
*அப்துஸ்ஸமது ஆலிம் புலவரின் மரணரெத்தின மாலையும் மற்றும் சில படைப்புகளும் 6453*
*அபிவிருத்தியின் சமூகவியல் 6182*
*அம்பாள் செய்யும் அற்புதங்கள் 6070*

*அம்பிப் பாடல்கள் 6391*
*அம்மாவுக்குத் தாலி 6628*
*அமரத்துவம் 6629*
*அமரர் வை.அநவரத விநாயகமூர்த்தி: சில இலக்கியப் பதிவுகள் 6935*
*அமரர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் சரிதை 6917*
*அமெரிக்க கறுப்பு இன முஸ்லிம்கள் 6976*
*அமைதி கோர்ட் நடந்துகொண்டிருக்கிறது 6814*
*அமைதியின் இறகுகள் 6630*
*அயன மண்டல மருத்துவம் 6357*
*அயோத்தி மன்னன்: நாட்டுக்கூத்து 6310*
*அரங்க அலைகள் 6585*
*அரங்க ஆற்றுகைகளும் ஆய்வு வழிகாட்டியும் 6586*
*அரசறிவியல்: ஓர் அறிமுகம் 6156*
*அரசறிவியல் மூல தத்துவங்கள் 6157*
*அரசாங்கத்துறை முன்னேற்றம்-1973. 6183*
*அரசியல் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், பொதுசன அபிப்பிராயம் 6158*
*அரசியல் சீர்திருத்த, தேர்தல் முறை மாற்ற சிந்தனைகளும் இந்திய வம்சாவளி தமிழ் மக்களும் 6201*
*அரசியல் விஞ்ஞானம்: அரசியல் செயற்பாடும், அரசியல் செயல்முறையும் 6159*
*அரசியல் விஞ்ஞானம்: அரசு பற்றிய கற்கையும், அரசை இனங்காணலும் 6160*
*அரசியலமைப்பாக்கச் சிந்தனைகள் 6202*
*அரசியலமைப்பின் 17வது திருத்தச் சட்டம் 6203*
*அருணோதயம் அல்லது சிம்மக்கொடி 6722*
*அருவி 6454*
*அருள் வாக்கி* 7A02
*அல்-இன்ஷிராஹ்-2007. 6299*
*அல்குர்ஆன் கூறும் ஆகார வகைகள் 6100*
*அல்குர்ஆன் ஞானமணிக் கோவை-1. 6101*
*அல்குர்ஆனின் எண்ணியல் அதிசயங்கள் 6102*
*அலிபாபாவின் மரணம் 6899*
*அலைகள் அழைத்த பூக்கள் 6631*
*அவசரகாலமும் பாராளுமன்றமும் 6955*
*அவர்கள் துணிந்துவிட்டார்கள் 6632*
*அழகான இருட்டு 6455*
*அழகிய ஆட்டம் 6430*
*அழகியலில் ஓவியக் கலை-பாகம் 1. 6374*
*அழகும் ஆரோக்கியமும் 6376*
*அற்ப ஜீவிகள் 6991*
*அறியப்படாத மூங்கில்சோலை 6456*
*அன்பழைப்பு 6457*
*அன்பே என் ஆருயிரே 6723*
*அன்றில் பறவைகள் 6587*
*அன்னய் திரேசா 6458*
*அனர்த்த முகாமைத்துவத்தில் பால்நிலையின் பரிமாணங்கள் 6368*
*ஆக்கிரமிப்பின் கால்தடம் 6459*
*ஆங்கிலத்தில் திருக்குறள் 6053*
*ஆசிரியரின் பங்கு 6223*
*ஆசிரியருக்குத் தொழில்சார் கல்வி அவசியம் 6224*
*ஆத்திசூடி 6054*
*ஆத்ம விமோசனம்: அபரக்கிரியை 6308*
*ஆதி பகவன் 6619*
*ஆப்பிள் பழவாசமும் நெருஞ்சி முட்களின் உறுத்தல்களும் 6633*
*ஆய்கூடங்களும் ஆய்கூட உபகரணங்களும் 6225*
*ஆய்வரங்கக் கோவை 6815*

*ஆய்வு முறையியல்: முறைகளும் நுட்பங்களும் 6226*
*ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை நூல்கள் 6890*
*ஆரோகணம்  6039*
*ஆவணி அமளி 6956*
*ஆவி உலகம்: ஆப்ரகாம் டி.கோவூர் நூற்றாண்டு நினைவு வெளியீடு. 6040*
*ஆழ்கடலுக்குள் என் ஆருயிர் முன்னோர் 6948*
*ஆளுமை 1. 6227*
*ஆளுமை 6228*
*ஆளுமை உளவியல் 6037*
*ஆறாம் அறிவின் சிந்தனைக் கோவை 6071*
*ஆறு நாடகங்கள் 6588*
*ஆறுமுக நாவலர் 6924*
*ஆனந்தத் தேன் 6460*
*ஆனந்தப் பொய்கை 6072*
*ஆஷா 6724*
*இங்கிலாந்தின் வரலாறு 6945-46*
*இடி விழுந்த வம்மி 6461*
*இணக்கப்பாட்டின் மூலம் சமாதானத்தை நோக்கி 6161*
*இணுவை இரகுவின் ஆக்கங்கள் உரைகள் உணர்வுகள் 6891*
*இணுவைச் சின்னத்தம்பிப் புலவர் அருளிய சிவகாமியம்மை தமிழ் 6073*
*இதய ஊனம் 6725*
*இதயங்கள் 6726*
*இதயப் பூக்கள் 6462*
*இதயமே அமைதிகொள் 6634*
*இது தான் ஆரம்பம் 6727*
*இதோ ஒரு நாடகம் 6589*
*இந்து சமுத்திரத்தின் முத்துக்கள் 6949*
*இந்து நாகரிகத்தின் மூலங்கள் 6060*
*இந்து மதம் ஓர் ஆழமான பார்வை 6074*
*இமய ஜோதி சுவாமி சிவானந்தர் 6910*
*இமிடேஷன் தோடு 6635*
*2009 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள்: 1. 6001-04*
*இரணிய சம்ஹார அம்மானை 6463*
*இராமாயணத்தின் வரலாற்று நம்பகத்தன்மை 6816*
*இராமாயணம் அயோத்தியா காண்டம்: பாதுகா பட்டாபிஷேகம். 6590*
*இரு குருவிகள் 6464*
*இரு நூற்றாண்டுகளில் இலங்கையிற் கல்வி 6229*
இரு வேறு எ/குப் பூக்கள் 6465
*இருண்ட குகைக்குள் என்ன விசேஷம் 6431*
*இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களும் கவிதைகளும் 6817*
*இருளும் ஒளியும் 6041*
*இலக்கண சந்திரிகை 6325*
*இலக்கணக் கொத்து 6326*
*இலக்கிய ஒப்பியல்: வீடற்றவன், நாகம்மாள் நாவல்களின் ஒப்பாய்வு 6818*
*இலக்கிய நாடகங்கள் 6591*
*இலக்கிய நெஞ்சம் 6819*
*இலக்கியச் சோலை 6820*
இலக்கியமும் கருத்து நிலையும் 7A03
*இலங்கை அரசியலமைப்பு 6204*
*இலங்கை: ஒரு கசந்துபோன அறுவடை 6957*
*இலங்கை: சமாதானத்தின் முகவராக வர்த்தகம் 6303*
*இலங்கை முஸ்லிம்களின் அரசியல் இதயம்: அம்பாறை மாவட்டம் 6162*

*இலங்கை, வடபிரதேசக் கிராமப் பள்ளிக்கூடங்களின் மேம்பாடு 6230*
*இலங்கைச் சட்டங்கள்: ஓர் அறிமுகம் 6194*
*இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் வேதனையும் சோதனையும் சாதனையும் 6466*
*இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்க மிஷன் 6231*
*இலங்கையில் கல்வியும் இனஉறவும் 6232*
*இலங்கையில் குழந்தைகளினதும் கட்டிளம் பருவத்தினருக்குமான தேவைகள் 6366*
*இலங்கையில் சமாதானம் பேசுதல்: முயற்சிகள், தோல்விகள், மற்றும் பாடங்கள் 6958-59*
*இலங்கையில் பாடசாலைகளின் பாடவிதானம் 6233*
*இலங்கையில் ஜனநாயகம் தழைப்பதற்குரிய பட்டயம் 6960*
*இலங்கையிலே தமிழ்க் கல்வியும் ஆய்வும் 6234*
*இலங்கையின் அரசியல் திட்டங்கள் 1833-1978 கோல்புரூக் முதல் இரண்டாம் குடியரசு வரை. 6205*
*இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான அரசியல் யாப்பு முன்மொழிவுகள் 6206*
*இலங்கையின் கல்வித்துறை: ஊழல்களும் பரிமாணங்களும் 6235*
*இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள் 6961*
*இலங்கையின் தமிழ்க் கல்விச் சமூகம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒரு பார்வை 6236*
*இலங்கையின் தேசிய இனத்துவப் பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும் 6962*
*இலங்கையின் தேர்தல் தொடர்பான அரசியல் வன்செயல்கள் பற்றிய வரலாறு 6163*
*இலங்கையின் பத்தாவது பொதுத் தேர்தலும் (1994) முஸ்லிம்களும் 6164*
*இலங்கையின் பாடசாலை அமைப்பு முறையின் பரம்பல் 6237*
*இலங்கையின் புராதன சைவாலயங்கள்: நல்லூர் கந்தசுவாமி.* 7A05
*இலங்கையின் பேரினப் பொருளாதாரமும் சுகாதார மேம்பாட்டு முன்முயற்சிகளும் சுகாதாரத்துக்காக முதலிடுதலும் 6184*
*இலங்கைவாழ் தமிழர் வரலாறு.* 7A04
*இலந்தைப் பழத்துப் புழுக்கள் 6467*
*இவர்கள் நம்மவர்கள்-பாகம் 5. 6936*
*இவர்கள் வித்தியாசமானவர்கள் 6821*
*இளம் முல்லை 6636*
*இளவாலை தமிழ்கங்கை அமுது ஐயாவின் அற்புதப் படைப்புகள் 6892*
*இளைஞர் தளபதி இர.சிவலிங்கம் 6925*
*இறைதூதர் இன்றேல் 6103*
*இறைதூதரும் இல்லற வாழ்வும் 6104*
*இறைநீதியும் மனித நீதியும் 6198*
*இறைவனும் பிரபஞ்சமும் 6105*
*இன்னும் வரக் காணனே 6042*
*இனம் தெரியாத பறக்கும் தட்டுகள் 6355*
*இனி வரும் வசந்தங்கள் 6728*
*இனிய உறவில் இரு சமூகங்கள் 6977*
*இஸ்லாத்தில் இனவாதத்திற்கு இடமில்லை 6106*
*இஸ்லாம் - முஸ்லிம் சமூகம் - முஸ்லிம் உலகம்: மதிப்பீடு 6154*
*இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சி 6822*
*இஸ்லாமிய சட்டக்கலை: மூலாதாரங்கள் 6199*
*இஸ்லாமிய நாகரீகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் 6903*
*இஸ்லாமிய நாகரிகம் 6904*
*இஸ்லாமிய நாகரீகம் 1ம் பாகம்: முஹம்மத் (ஸல்) 6905*
*இஸ்லாமிய நாகரிகம்-1. 6906*
*இஸ்லாமிய வரலாறு 6107*
*இஸ்லாமிய வரலாறு: பாகம் 1, பகுதி 2. 6108*
*இஸ்லாமிய விழுமியங்கள்: பகுதி 1. 6109*
*இஸ்லாமிய வீரர்கள்: இப்னு ரூஷ்த் 6110*
*இஸ்லாமியக் குடும்ப வாழ்வு 6305*
*இஸ்லாமியத் தென்றல் 6978*

இஸ்லாமும் தமிழும் இலக்கிய சங்கமம் 6823
இஸ்லாமும் தொடர்பு சாதனங்களும் 6111
ஈமானின் உண்மையை நீ அறிவாயா? 6112
ஈரநிலப் பிரதேச அறிக்கை (சாராம்சம்) முதலாம் பாகம் 6192
ஈழத் தமிழ்ச் சிறுகதை மணிகள் 6824
ஈழத் தமிழர்களே ஒன்றுபட்டுப் போராடுங்கள் 6992
ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி 7A06
ஈழத்தின் தமிழிலக்கியச் சுடர்கள் 6937
ஈழத்து அறிஞர் ஆளுமைகள் 6825
ஈழத்து நாககோட்டம் 6096
ஈழத்து நாட்டார் பாடல்கள்: மட்டக்களப்பு மாவட்டம்: ஆய்வும் மதிப்பீடும் 6304
ஈழத்து முற்போக்குச் சிறுகதைகள்-தொகுதி 1. 6637
ஈழத்து முஸ்லீம் புலவர்கள்: தொகுதி 1: கருங்கொடியூர்க் கவிவளம் 6938
ஈழத்துக் கவிதை நயம் 6826
ஈழத்துக் கவிதை விமர்சனம்: 1940-1992. 6827
ஈழத்துச் சிதம்பரம் 7A07
ஈழத்துச் சிறுகதைகளும் ஆசிரியர்களும் 6828-29
ஈழத்துத் தபோதனர்கள் 6911
ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி 6830
ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் 6831
ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள் 6832
ஈழத்துப் பழைய இலக்கியங்கள்: வரலாறு தேடல் 6833
ஈழத்துப் பாரதியார் கவிதைகள்-1. 6468
ஈழநாட்டுப் புலவர்களின் கவித்திறமும் தனிப்பாடல்களும் 6834
ஈழம் தந்த கேசரி 6939
உங்கள் இருதயத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள் 6359
உங்களுக்கு அறிவும் கண்களுக்கு ஒளியும் 6358
உடற்கல்வி அறிமுகமும் ஆசிரியர் பொறுப்புக்களும் 6238
உடைந்த நினைவுகள் 6469
உண்டு மகிழ்வோம் 6392
உண்மை தந்த உயர்வு 6421
உண்மை விளக்கம் 6061
உணர்வுக் கோலம் 6470
உத்தேசிக்கப்பட்டுள்ள இலங்கை விஞ்ஞானத் தொழில்நுட்ப இலங்கை நூதனசாலை பற்றிய விஞ்ஞான நூதனசாலைக் குழுவின் அறிக்கை 6026
உமையாள்புரத்து உமா 6729
உய்யும் வழி 6471
உயர்கல்வியில் பெண்கள் 6239
உயர்தர உயிரியல் பல்தேர்வு வினாக்கள் 1000. 6352
உயர்திரு ஆர்.ஆர்.பூபாலசிங்கம் நினைவு மலர் 6932
உயிர் வாழ ஓர் இடம், திருந்திய உள்ளங்கள் 6730
உயிர்க் கூடு 6731
உயிர்ப்பு: இனப்பெருக்க சுகாதாரம் ஓர் அறிமுகம் 6363
உரோமானிய வரலாற்றுச் சுருக்கம் 6944
உலக அரங்க வரலாறு 6380
உலக அரசியலும் நடைமுறை பிரச்சினைகளும் 6165
உலகக் கல்வி வரலாறு 6240
உலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம்: 5வது மாநில மாநாடு 6993
உலகமயம் பண்பாடு எதிர்ப்பு அரசியல் 6141
உலகாபிவிருத்தி மணிமாலை **பார்க்க** லோவெட சங்கராவ
உள்மை 6472
உள்ளக் கிடக்கைகள் 6473

உள்ளத்தின் கதவுகள் 6732
உள்ளம் பெருங்கோயில் 6043
உளவியல்சார் உளவளத்துணை அணுகுமுறை 6044
உறவுகள் 6393, 6638
உன் நினைவுதிரா வசந்தம் 6474
உன் மனம் நானறிவேன் 6639
உன்னையே உறவென்று 6733
ஊஞ்சல் இலக்கியம் 6835
ஊடகவியல்: புதினப்பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைகாட்சி 6027
ஊதிய விளக்கு 6640
ஊமை உள்ளங்கள் 6734
ஊமை நெஞ்சின் சொந்தம் 6735
ஊமைக் காயங்கள் 6475
ஊழியில் ஆழி 6351
எ.எம்.எ. அஸீஸ் 6926
எ.எம்.எ.அஸீஸ்: கல்விக் கொள்கையும் நவீனத்துவ சிந்தனைகளும் 6927
எ.எம்.எ.அஸீஸ்: பன்முகப் பார்வை 6928
எங்களூர் வல்லிபுரம் 6986
எட்டுத் தொகை பத்துப் பாட்டு நூல்கள் 6836
எண்ணக் கோலம் 6476
எமது பாதை 6963
எயிட்ஸ் இல்லாத உலகம் 6360
எழுதுகோலும் என் வெள்ளைத் தாளும் 6477
என் தமிழ்த் தாய்க்கு முதல்முத்தம் 6478
என் மன வானில்  6479
என்னுடைய ஏக்கங்கள் 6480
என்னுள் உறைந்தாய் 6481
எனக்குப் பசிக்குதே 6432
எனக்குள் பெய்யும் மழை 6994
எனக்குள்ளே நான் 7A08
எனது நோக்கில் இலங்கைப் பாராளுமன்றம் 6166
ஏ.இக்பால் கவிதைகள் 100. 6482
ஏகத்துவப் பாடல்கள் 6113
ஏகத்துவம் பற்றி அல்குர்ஆன் 6114
ஏணியும் தோணியும் 6641
ஏழாவது ஊழி 6210
ஏன் இந்த மௌனம் 6483
ஐக்கிய நாடுகள் பற்றிய அடிப்படையான விடயங்கள் 6208
ஒப்பியல் அரசாங்கம் 6167
ஒப்பியல் இலக்கியம் 7A09
ஒரு கூட்டில் இரு பறவைகள் 6484
ஒரு தோட்டத்து மலர்கள் 6485
ஒரு பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி 6736
ஒரு மழைக்கால இரவு 6642
ஒரு வரம்: முருகையன் மொழிபெயர்ப்புக்கள் 6895
ஒரு விலைமகளைக் காதலித்தேன் 6737
ஒலிச் சக்தியும் ஒலி ஊடுகடத்தலும் 6241
ஓ பாலஸ்தீனமே: நஜி அல் அலியும் ஹன்சல்லாவும் 6486
ஓரங்காட்டுகையை நீக்குவது தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அனைத்துலக அமைப்புகளின் சாதனங்கள் 6178
ஔவையின் அருள்மொழிகள் 6055
கங்காகீதம் 7A10

*கங்கு மட்டை 6643*
*கட்டாந்தரை 6487*
*கட்டுரை வரைதலும் சுருக்கமெழுதுதலும் 6242*
*கடத்தல்காரர்கள் 6433*
*கடல் 6644*
*கடவுள் சிரித்தார் 6645*
*கடற் கோட்டை 7A11*
*கடுக்கனும் மோதிரமும் 6837*
*கடைசி வரிகள் 6488*
*கண்ணகி வெண்பா 6489*
*கண்ணகை அம்மன் பத்ததியும் பாடல்களும் 6311*
*கண்ணதாசன் ஒரு காவியம் 6838*
*கண்ணான மச்சி 6312*
*கண்ணியத்திற்குரிய நபிமார்கள்: ஷிர்க்கை தகர்த்த இளைஞர் இப்றாஹீம் (அலை) 6115*
*கண்ணுக்குள் சுவர்க்கம் சிறுகதைகள் 6646*
*கணித ஆசிரியன் 6243*
*கணிதச் செயல்நூல் தரம் 3. 6341*
*கணிதப் பயிற்சி செயல்நூல் தரம் 2. 6342-43*
*கணிதம்: தரம் 5. 6344*
*கணிதம் செயல்நூல்: தரம் 2. 6345*
*கணிதம் செயல்நூல்: தரம் 4. 6346*
*கணிதம் செயல்நூல்: தரம் 5. 6347*
*கணிதம் பயிற்சிநூல் புதிய பாடத்திட்டம் தரம் 9. 6348*
*கதிரை மகத்துவம் 6075*
*கதை வளம்: ஏடு ஒன்று 6839*
*கதை வளம்: ஏடு இரண்டு 6840*
*கதைக் கோவை: தொகுதி 1. 6995*
*கந்தன் கருணை 6592*
*கம்ப உவமைத் திறன் 6841*
*கம்பனியாட்சியிலும் முடியாட்சியிலும் பிரித்தானிய இந்தியாவின் வரலாறு: 2ம் பாகம். 6950*
*கம்யூனிஸ்ட் கார்த்திகேயன்: நகைச்சுவை ஆளுமை தீர்க்கதரிசனம் 6915*
*கரவை வேலன் கோவை 6490*
*கருகிய ரோஜா: குறுநாவல் 6738*
*கருத்தியல் என்னும் பனிமூட்டம் 6136*
*கருத்துச் சுதந்திரம் 6028*
*கருவியேடு 6179*
*கரையைத் தேடும் கட்டுமரங்கள் 6739*
*கல்பொளி கொண்ட கவி 6593*
*கல்வளை அந்தாதியும் கல்வளைப் பிள்ளையார் கோவில் வரலாறும் 6097*
*கல்வி உளவியற் கருத்துக்கள் 6244*
*கல்வி நுட்பவியல் 6245*
*கல்வி முகாமைத்துவத்தில் விடய ஆய்வு 6246*
*கல்விக் கோட்பாடுகளும் மாற்றுச் சிந்தனைகளும் 7A12*
*கல்வித் தொழில் நுட்பம் 6247*
*கல்விப் புள்ளியியல் விளக்கம் 6248*
*கல்வியியல்: அடிப்படை எண்ணக்கருக்கள் 6249*
*கல்வியியல் ஆய்வின் இயல்புகள் 6250*
*கல்வியியல் ஆய்வு வினாக்கொத்துக்கள் 6251*
*கல்வியியல் ஆய்வொன்றைத் திட்டமிடல் 6252*
*கல்வியியல் செயல்நிலை ஆய்வு 6253*
*கல்வியியலும் நவீனத்துவமும் 6254*
*கல்வியில் அளவீடும் மதிப்பீடும் 7A13*

கல்வியின் நவீன செல்நெறிகள் 6255
கல்வியின் நோக்கங்களும் குறிக்கோள்களும் 6256
கல்வியும் உளவியலும் 7A14
கல்வியும் மனிதவள விருத்தியும் 6257
கலாசாரமும் பெண் வெளிப்பாடும் 6144
கலை இலக்கியக் கோட்பாடுகள் 6842
கலைகள் செய்வோம் 6394
கலைச்சோலை 6340
கலைத் திட்ட மாதிரிகைகள் 6258
கலைத் திட்டம் 7A15
கலைப் புலவர் க.நவரத்தினம் 6940
கலையும் பண்பும் 6843
கவ்வாத்து 6740
கவிக் கற்பரசி 6491
கவிக் குழந்தை 6492
கவிஞர் ஏ.இக்பால் கவிதைகள் சில- ஒரு மதிப்பீடு 6844
கவிதை 6493
கவிதை நெஞ்சம் 6494
கவிதை மடல் 6495
கவிதைகள் பேசட்டும் 6496
கவிதையில் துடிக்கும் காலம் 6497
கவியரங்கில் கந்தவனம் 6498
கழுகுகள் 6741
களவுக் காதலர் கையாண்ட விடுகதைகள் 6320
கற்பிக்கும் கலை புதிய பிரவேசங்கள் 6259
கற்றல் எவ்வாறு நிகழ்கின்றது? 6260
கற்றறிந்த காக்கைகள் 6499
கனடாவில் தமிழர்- கால் நூற்றாண்டு பார்க்க தமிழர் தகவல்: 19ஆவது ஆண்டு மலர் 6025
கனவுக்கன்னி 6500
கனவுகளின் பிரசவம் 6501
கனீமத்துல் இஸ்லாம் பீ நிழாமில் அஹ்காம்: இஸ்லாமிய சட்டக் களஞ்சியம் 6200
காசிம் ஜீயின் இரு குருவிகள் 6464
காணிக்கை: கவிதைகள் 6502
காணிக்கை: சிறுகதைகள் 6647
காதலி ஆற்றுப்படை 6503
காதலும் கடிதமும் 6742
காதியானிகள் ஓர் எச்சரிக்கை 6116
காதியானிப் பிரச்சினை 6117
காந்த மலர் அல்லது கற்பின் மாட்சி 6743
காந்தி பாமாலை 6504
காந்தீயக் கதைகள் 6648
காமன் கூத்தும் மலையகப் பாரம்பரியமும் 6313
காமாட்சியும் ஒரு கண்ணகி தான் 6594
காரை வசந்தம் 2007. 6016
கால தரிசனம் 6649
கால வெள்ளம் 6650
காலத்தின் காலடியில் 6505
காலத்தின் குரல் 6893
காலத்தின் குரல்கள் 6651
காலத்தின் விதி 6744
காலத்தை வென்ற பெண்கள் 6845
காலம்: ஏ.ஜே.கனகரட்ணா சிறப்பிதழ் 6024

*கிண்ணஞ்சொட்டு 6652*
*கிண்ணியா ஜம் இய்யதுல் உலமா சபையினரின் திருத்தப்படவேண்டிய தீர்வுகள் 6118*
*கிராமத்து இதயம் 7A16*
*கிராமத்துக் கதைகள் 6422*
*கிராமப் பிறழ்வு 6900*
*கிழக்கிலங்கை முஸ்லீம்களின் கிராமியக் கவியமுதம் 6314*
*கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்கள் 6306*
*கிழக்கிலங்கைப் பூர்வீக வரலாறு 6987*
*கீறல்கள் 6506*
*குகைக்குள் யார் 6434*
*குட்டி முயலுக்குப் பரிசு 6435*
*குட்டிக் கரடியும் சுட்டிப் பூனையும் 6436*
*குடைத் திருடன் 6437*
*குத்துவிளக்கு: இலங்கைத் தமிழ்த் திரைப்படம்: மீள்வாசிப்பு 6386*
*குந்தளப் பிரேமா 6745*
*குயில் வாழ்ந்த கூடு 6507*
*குயிலோசை 6395*
*குருளைச் சாரணர் கையேடு 6221*
*குழந்தைகளின் உடல் வளர்ச்சி. 6261*
*குழந்தைகளின் நுண்ணறிவு வளர்ச்சி 6262*
*குழந்தையின் கல்விக்கான தொழில்நுட்ப முறைகள் 6263*
*குழந்தையின் மனவெழுச்சி வளர்ச்சி 6264*
*குளோனிங் மற்றும் நானோ தொழில்நுட்ப அதிசயங்கள் 6356*
*குற்றவாளிக் கூண்டில் தஸ்லீமா நஸ்ரின் 6029*
*குறிஞ்சி மலர்கள் 6653*
*குறும்புக்கார இளவரசியும் கனிவான தேவதையும் 6423*
*கூட்டத்தில் கூடிநின்று 6654*
*கூத்தர் வெண்பா 6381*
*கூத்தின் முதல் மீளுருவம், கீசகன் வதை: வடமோடி நாடகம் 6315*
*கூத்து மீளுருவாக்கம்: கோட்பாடும் செயற்பாடும் 6382*
*கூன் நிமிர்கிறது 6655*
*கேட்டதும் நடந்ததும் 6746*
*கைலாசபதி + சில்லையூர் செல்வராசன் (தான்தோன்றிக் கவிராயர்) விமர்சன நோக்கு 6846*
*கொல் ஈனுங் கொற்றம்: கூத்துருவ நாடகம் 6316*
*கொலைநிலம் 6964*
*கொன்றைப் பூக்கள் 6656*
*கொன்றைவேந்தன் 6056*
*கோர இரவுகள் 6045*
*சக்காராம் பைண்டர் 6595*
*சங்ககாலச் சமூகமும் சமய-மெய்யியற் சிந்தனைகளும் 6031*
*சங்கரண்ணா சாவு உனது முடிவல்ல 6921*
*சங்கிலியம் 6620*
*சடையப்பர் சுவாமிகளும் திராய்மடுத் திருத்தலமும் 6912*
*சண்டை 6438*
*சண்ணரது கல்வியியல் அரங்கு 6383*
*சதுரங்கத்தில் இறுதியாட்டம் 6387*
*சதுரங்கம்: நாவல் 6747*
*சந்தனப் பொய்கை 6508*
*சந்தான தீபிகை 6065*
*சந்திரவதனா அல்லது காதலின் வெற்றி 6748-49.*
*சந்நிதிக் கந்தர் சதகம் 6076*
*சமஷ்டி எண்ணக்கரு 6168*

சமாதான ஆதரவுக்குழு சகல அரசியல் கட்சிகளுக்கும் ஒரு பகிரங்கக் கடிதம் 6169
சமாதான ஊடகவியல்: பிரச்சினைத் தீயை பேனா மையினால் அணைப்போம் 6030
சமாதான வழி நோக்கி 6509
சமாதானப் போர்: யுத்தம் அன்றும் இன்றும் 6965
சமூக அசைவியமும் சமூகக் கல்வியும் 6265
சமூக மூலதனம்: அபிவிருத்திக்கான ஓர் அடிப்படைக் காரணி 6185
சமூக மோதல்கள்: ஓர் கோட்பாட்டு அறிமுகம் 6137
சமூகப் பிரச்சினைகள்: பாகம் 1. 6138
சமூகப் புனரமைப்பில் மஸ்ஜிதுகளின் பங்கு 6139
சர்வதேச அரசியல் சில பார்வைகள் 6170
சர்வதேச சமாதானமும் பாதுகாப்பும் 6209
சர்வதேச நினைவு தினங்கள்: பாகம் 1. 6005
சலங்கை ஒலி 6596
சாடிகள் கேட்கும் விருட்சங்கள் 6510
சாணைக்கூறை 6750
சாத்தானின் ஊழியர்கள் 6751
சாதனை மன்னர் சங்கரண்ணா 6996
சாலையின் திருப்பம் 6657
சிங்கள-முஸ்லிம் இனமோதல்கள்: ஒரு சமூக அரசியல் பார்வை 6966
சிங்களவர்: அரசியல் சமயம் இலக்கியம் 6997
சித்தகுமாரன் 6752
சித்திரவதையற்ற சமுதாயம் 6180
சித்திரா பௌர்ணமி 6753
சிதைகிறதே செந்தமிழ் 6511
சிந்தனய்த் துளிகள் 6847
சிந்தனைக் களஞ்சியம் 6848
சிந்தனைப் பூக்கள்: பாகம் 3. 6046
சிந்து நதிக் கரையினிலே 6754
சிரட்டையும் மண்ணும் 6512
சிரிக்க விடுங்கள் 6396
சிரிக்கும் பூக்கள் 6397
சிலப்பதிகாரத்தில் சிலை எடுத்த சேரன் 6597
சிலம்பொலி 6513
சிலோன் விஜயேந்திரன் கவிதைகள்: 3ம் தொகுப்பு 6514
சிவஞானசித்தியார் சுபக்கம் 6062
சிவதத்துவ நிலை 6063
சிவப்பிரகாசம் 6064
சிவஜோதி 6077
சிறந்த கற்றலுக்கான பாடசாலை 6266
சிறார்க்கான அறிவியற் கதைகள் 6447
சிறு விளையாட்டுக்கள், உப விளையாட்டுக்கள், பிரதான விளையாட்டுக்கள் 6267
சிறுபான்மையினர் சில அவதானங்கள் 6967
சிறுவர் செந்தமிழ் 6398
சிறுவர் பாடல் 6399-6400
சிறுவர் பாடல்கள் 6401
சிறுவர்களுக்கான சிந்தனைக் கதைகள் 1. 6424
சிறுவர்களே இஸ்லாத்தை தெரிந்துகொள்ளுங்கள் 6119
சிறையில் பூத்த உணர்வின் ஒளி 6515
சின்னச் சிட்டுக்கள் 6402
சின்னச் சின்னப் பிள்ளைகள் 6268
சின்னஞ்சிறு கதைகள்: முதலாம் தொகுதி 6658
சீடோ பற்றி பெண்கள் ஏன் அறிந்திருக்க வேண்டும் 6145
சீதனம் 6307

*சீதா 6755*
*சீலாமுனை கூத்து மீளுருவாக்கம்: அனுபவப் பகிர்வு 1. 6384*
*சீனா-இந்தியா பொருளாதார அபிவிருத்தி: ஓர் ஒப்பீட்டு ஆய்வு 6186*
*சுகாதாரக் கல்வி அறிமுகம் 6269*
*சுகாதாரமும் உடற்கல்வியும் தரம் 7. 6388*
*சுகாதாரமும் உடற்கல்வியும் தரம் 8. 6389*
*சுகாதாரமும் உடற்கல்வியும் தரம் 11. 6390*
*சுட்டிக் குருவிகள் 6403*
*சுந்தரின் கோகிலம் 6934*
*சுந்தாவின் விழுதுகள் 6849*
*சுநாதங்கள் 6659*
*சுமைகள் 6660*
*சுமைதாங்கி 6661*
*சுயநிர்ணய உரிமையில் முஸ்லிம்கள், மலையக மக்கள் 6171*
*சுவடுகள் 6756*
*சுவாமி சரிதம் என்னும் சிவயோக சுவாமிகள் திருச்சரிதம் 6913*
*சுவாமி பிள்ளைத் தமிழ் 6078*
*சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள்: தொகுதி 1. 6850*
*சுற்றாடல் அடிப்படையிலான செயற்பாடுகளும் செயல்நெறியும் தரம் 3. 6211*
*சுற்றாடல் சார் செயற்பாடுகள் தரம் 5. 6213*
*சுற்றாடல் சார் செயற்பாடுகள்: செயல்நூல் தரம் 2. 6212*
*சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் தரம் 5. 6214*
*சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் தரம் 2. 6215*
*சுற்றாடல் செயல்நூல் தரம் 5. 6216*
*சுற்றாடல் செயற்பாடு: தரம் 1. 6217*
*சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரின் இலக்கண சந்திரிகை, வினைப்பகுபத விளக்கம் 6327*
*சுனாமியினால் பாதிக்கப்பட்ட இலங்கை, மட்டக்களப்பு, டச்பாரைச் சேர்ந்த பறங்கியினப் பெண்கள் 6146*
*சூரிய வழிபாடும் கோளறு பதிகமும் 6079*
*சூரியப் புதல்வர்கள் 1998. 6922*
*சூழல்சார் சுற்றுலாத்துறை 6218*
*செ.கணேசலிங்கனின் அண்மைக்கால நாவல்களில் பெண் பாத்திரங்கள்: ஒரு பெண்நிலை நோக்கு 6851*
*செ.யோகநாதன் நாவல்கள்: பாகம் 1. 6757-58*
*செகராசசேகர மாலை மூலமும் உரையும் 6066*
*செங்கை ஆழியான் நாவல்கள் 6759*
*செந்தணல் 6760*
*செம்புலம்: கலை இலக்கியக் கட்டுரைகள் 6852*
*செல்வ மலர் 6908*
*செல்வரத்தினம்: ஓர் இனிய கற்பனைச் சரித்திரம் 6761*
*செவ்வாய் மனிதன் 6404*
*செழிப்பைத் தேடும் பறவைகள் 6662*
*செழுங்கமலச் சிலம்பொலி 6516*
*சேர். பொன் அருணாசலந்துரை அவர்களின் சீவிய சரித்திரச் சுருக்கம் 6919*
*சைவப் பிரகாசனம் 6049*
*சைவமும் நாமும் 6080*
*சொற்கோவை 6321*
*சொற்பொருள் விளக்கம் என்னும் தமிழகராதி 6322*
*சொன்னாற்போல 01. 6853*
*சொன்னாற்போல 03. 6854*
*சோதிடப் புரட்டு 6067*
*சோமாவதி அல்லது இலங்கை இந்தியா நட்பு 6762*
*சோலைக் குயில் 6405*

சோழர்காலத்துக் கோயிலும் சமூகமும் 6951
ஞானதீபம் 6081
டக்கென்று வருவேன் 6439
டாக்டர் கோவூரின் பகுத்தறிவுப் பாடங்கள் 6047
டானியல் கதைகள் 6663
தகத்தகாய தங்கம்மா 6998
தகவல் வளங்களும் சேவைகளும் 6012
தச்சைச் சிலேடை வெண்பா 6082
தடங்கள் 6517
தடை செய்யப்பட்ட கவிதை 6518
தடைகளைத் தாண்டி: பெண்களின் இயலாற்றல்களை மேம்படுத்துதல் 1. 6147
தத்துவச் சாறு 6519
தந்தப் பேழை 6664
தம்பயா 6440
தம்மபதம் 7A17
தமிழ் இலக்கிய அறிமுகம் 6855
தமிழ் இலக்கியம்: பார்வையும் பதிவும் 6856
தமிழ் ஓலைகள் 2010. 7A18
தமிழ் கற்பித்தலில் உன்னதம். 7A19
தமிழ் செயல்நூல்: தரம் 1. 6329
தமிழ் செயல்நூல்: தரம் 4. 6330-31
தமிழ் செயல்நூல்: தரம் 5. 6332
தமிழ் தரம் 1: செயல்நூல் 6333
தமிழ் தரம் 3: செயல்நூல் 6334
தமிழ் தரம் 4: செயல்நூல் 6335-36
தமிழ் மறை விருந்து 6857
தமிழ் மன்னன் மாகோனின் மகத்தான வரலாறு 6954
தமிழ் மொழியியற் சிந்தனைகள் 6323
தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 10: செயல்நூல் 6337
தமிழ்ப் பேரறிஞர் சைமன் காசிச்செட்டி வரலாறும் பணிகளும் 6941
தமிழகத்தில் முருக வழிபாடு 6083
தமிழகப் பூர்வீக வரலாறும் அரிய செய்திகளும் 6952
தமிழர் சால்பு: சங்ககாலம் 7A20
தமிழர் தகவல்: 19ஆவது ஆண்டு மலர்: கனடாவில் தமிழர்- கால் நூற்றாண்டு 6025
தமிழரின் விடிவு 6968
தமிழன் கனவு 6520
தமிழன் நினைவு 6521
தமிழா இனவுணர்வு கொள் 6999
தமிழியல் ஆய்வுக் கட்டுரைகள் 6858
தமிழில் வரலாற்று நாவலின் தோற்றமும் வளர்ச்சியும் 6859
தமிழில் வழங்கும் எழுத்துப் பெயர்ப்பு முறைகள் 6324
தமிழின் கவிதையியல் 6860
தமிழினைத் தமிழன் போற்றின் 6861
தமிழீழத் தமிழர்கள்: வரலாறு கலாச்சாரம் பாரம்பரியம் 6979
தர்க்க கௌமுதி 6050
தர்க்க பாஷை 6051
தர்சனம் 6032
தர்மத்தின் குரல்கள் 6969
தரம் 7: வரலாறு 6902
தரிசனங்கள் 6665
தரிசனம் 6522
தரீகாக்கள் அவசியம் தானா? 6120

*தருக்க சாத்திரச் சுருக்கம் 6052*
*தரையும் தாரகையும் 7A21*
*தற்கால இஸ்லாமியச் சிந்தனை: இஸ்லாத்தில் நவீனத்துவவாதமும் புத்துயிர்ப்புவாதமும் 6121*
*தற்கொலைப் பிரச்சினையும் தடுப்பும் 6181*
*தற்பெருமை வேண்டாம் 6057*
*தனித்துத் திரிதல் 6523*
*தனிமுறைப் போதனை: கல்விசார் செயற்பாடுகள் பற்றிய கைந்நூற்றொடர் 5. 6270*
*தாய் மகளுக்குத் தோழி 6148*
*தாய் மண்மேல் ஆணை 6524*
*தாயகம் 6763*
*தாயும் தாய்நாடும் 6525*
*தால விலாசம் 6526*
*தாலி சிரித்தது 6666*
*திசைகள் தேடும் பறவைகள் 6667*
*தியாகச் சுடர்: ஹுஸைன் ரலி அவர்களின் வரலாறு 6914*
*திராட்சை ரசம் 6527*
*திருக்குர் ஆன் தீர்ப்பு 6122-23*
*திருக்குறள் கதைகள்: பொருட்பால் 381-480. 6668*
*திருக்குறள் கதைகள்: பொருட்பால் 481-580. 6669*
*திருக்குறளும் முகாமைத்துவமும்: ஓர் ஒப்பீட்டு ஆய்வு 6369*
*திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய திருக்கோளறு பதிகம் 6084*
*திருத் திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் என்னும் ஈழத்துச் சிதம்பர புராணம் 6085*
*திருந்திய உள்ளங்கள் 6730*
*திருநபி காவியம் 6621*
*திருப்பழுகாமம் ஒரு சுருக்க வரலாறு 6988*
*திருமண வாழ்வும் குடும்பமும் 6309*
*திருமறையும் நபிவழியும் 6124*
*திருமுருகாற்றுப்படை விளக்கவுரை 6086*
*திரைப்படத் துறைக்கு ஏற்ற அருமையான கதைகள் 6670*
*திறந்தே கிடக்கும் வீடு 6528*
*தினமும் ஓதத் திருநபிகளாரின் திக்ர்கள் 6125*
*தீட்சண்யம் 6529*
*தீவும் தீர்வுகளும் 6970*
*துதிப்பா திரட்டு 6087*
*துயரக் கொழுந்துகள் 6530*
*துயரம் சுமப்பவர்கள் 6764*
*துருவ சஞ்சாரம் 6671*
*துளிர்த்தெழும் புதுச்செடிகள் 6531*
*தெம்மாடுகள் 6765*
*தெய்வ மகன் 6672*
*தெரு விளக்கு 6532*
*தெறிப்பு 6863*
*தென்மராட்சி-கொடிகாமம்-கச்சாய் ஸ்ரீநரசிங்க பைரவர் ஆலய மான்மியம் 6098*
*தென்மோடி நாட்டுக்கூத்து: பண்டாரவன்னியன் 6317*
*தென்னிலங்கையில் முஸ்லிம் இலக்கிய வளர்ச்சி 6862*
*தேச அபிவிருத்தியில் தமிழர் கல்வி 6271*
*தேசத்தின் பாடல்கள் 6673*
*தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை 6272*
*தேசிய வருமானமும் தேசிய உற்பத்தியும் 6187*
*தேயிலைத் தோட்ட மக்கள் பாடல்கள் 6533*
*தேர்தல்: கவிதைகள் 6534*
*தேர்தல் சட்டம் குற்றங்களும் தண்டனைகளும் 6195*
*தேர்தல் முறைகளும் அவற்றின் பரிமாணங்களும் 6172*

*தேன் சிட்டு: சிறுவர் பாடல்கள் 6406*
*தேன் நிலவுப் பயணம் 6674*
*தேனாறு 6535*
*தொடக்கக் கல்வி பற்றிய சிந்தனைகளும் பாடத்திட்டமும் 6273*
*தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும் 6864*
*தொடக்கப் பகுப்புக் கேத்திரகணிதம் 6349*
*தொலைக் கற்பித்தல் 6274*
*தொலைதூரக் கனவுகள் 6766*
*தொழிற்படும் விலங்கு 6353*
*தொழுகை விவரம் ஷாபி 6126*
*தோட்டத்தில் ஆடு 6425*
*நட்சத்திரத் துகள்கள் 6536*
*நட்டுமை 6767*
*நட்பே உயர்வு 6407*
*நண்டுகள் சத்தமிடுமா? 6441*
*நதிகளைத் தேடும் சூரிய சவுக்காரம் 6537*
*நதிப் பாதையின் மேலே 6865*
*நந்திக் கடல் 6768*
*நந்தினி 6769*
*நபிகள் வாழ்வில் நடந்த கதைகள் 6538*
*நரி மாப்பிள்ளை 6598*
*நல்வழி 6058*
*நலமுடன்* 7A22
*நவநீத கிருஷ்ண பாரதியார் இயற்றிய உலகியல் விளக்கம் 6866*
*நவராத்திரி வழிபாடும் தோத்திரப் பாடல்களும் 6088*
*நவீன நாடகம் 6385*
*நவீன விக்கிரமாதித்தன் கதைகள் 6675*
*நாம் ஒன்று நினைக்க... 6770*
*நாம் பிறந்த மண் 6676*
*நாமகள் புகழ்மாலை 6089*
*நாமும் சுற்றாடலும் செயல்நூல் தரம் 2. 6219*
*நாவலர் நாடகம் 6599*
*நாற்றுமெடை 6867*
*நான் அரசன்: சிறுவர் பாடல்கள் 6408*
*நான் அவள் 6677*
*நானாடகம் 6600*
*நானிலம்: கலாசார விழா சிறப்பு மலர் 2006. 6017*
*நானிலம்: கலாசார விழா சிறப்பு மலர் 2007. 6018*
*நானிலம்: கலாசார விழா சிறப்பு மலர் 2008. 6019*
*நானிலம்: கலாசார விழா சிறப்பு மலர் 2009. 6020*
*நிமிர் நடை 6539*
*நிரற்போட்டி ஒழுங்கமைப்பு 6275*
*நிலவிலே பேசுவோம் 6678*
*நிலா முற்றம் 6540*
*நிவாரணம் 6601*
*நிறங்கள் 6679*
*நின்னையே நிழல் என்று 6680*
*நினைவுள் மீள்தல் 6541*
*நிஜங்கள் 6681*
*நீ நடந்த பாதையிலே 6542*
*நீதிக் கரங்கள் 6622*
*நீதியே நீ கேள் 6771*
*நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி: பொன்விழா மலர் 1954-2004. 6300*

நீரர மகளிர் 6623
நீரர மங்கையர் 6624
நீரிழிவுக்கு ஒரு சவால் 6362
நீலகண்டன் ஓர் சாதி வேளாளன் 6772
நீலாக்ஷி அல்லது துன்மார்க்க முடிவு 6773
நீலாவணனின் கவிதை நாடகங்கள் 6625
நீறுபூத்த நெருப்பு 6602
நுண்ணங்கியியல் 6354
நூலகப் பகுப்பாக்கம்: ஓர் அறிமுகம் 6013
நூலகப் பட்டியலாக்கம்: ஓர் அறிமுகம் 6014
நெஞ்சம் தொடாத உறவு 6543
நெஞ்சம் மலராதோ? 6544
நெஞ்சில் பூத்த நெருஞ்சி 6545
நெடும் பகல் 6546
நெடும் பகல்: முருகையன் கவிதைகள் 6547
நெருப்பு 6682
நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே 6774
நொறுங்குண்ட இருதயம் 7A23
நோபல் பரிசுபெற்ற இயற்பியலறிஞர்கள் 6933
பங்குச் சந்தை முதலீடும் செயற்பாடுகளும் 6190
பங்கேற்பு பயிற்சிக் கையேடு 6276
பசி 6683
பஞ்ச கம்மாளர் 6153
பஞ்சம் 6684
பட்டினித் தோட்டம் 6775
படகோட்டியின் பாடல் 6868
படிப்பும் நடிப்பும் 6603
பண்டாரவன்னியன்: வரலாற்று நாடகம் 7A24
பண்டைய கிரேக்க முதன்மையாளர்கள் 6869
பண்பாடு: சமூக மெய்யியல் நோக்கு 6142
பண்பாடும் பெண் 6149
பணிதல் மறந்தவர் 6896
பணியாரப் பயில்வான் 6442
பத்தாண்டு வளர்ச்சி: சீசெல்சு அருள்மிகு நவசக்தி விநாயகர் ஆலயம் 1992-2002. 6099
பத்தினித் தெய்வம் 6379
பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஈழத்துத் தமிழ்ப் புலவர் உடுப்பிட்டி அ.சிவசம்புப் புலவர் வரலாறும் அவரது ஆக்கங்களும் 6942
பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் 6870
பந்தடிப்போம் 6409
பயங்கரவாதிகள் 6776
பயன்பாடுள்ள எழுத்துப் பயிற்சிகள் 6277
பரத நாட்டியம் செய்முறை தாள விளக்கம் 6378
பல்கலைக்கழகங்களை பலிபீடமாக்கும் பகிடிவதை 6278
பலாத்காரம் 6685
பலி **பார்க்க** ரவீந்திரநாத் தாகூரின் மூன்று நாடகங்கள்
பவள காந்தன் அல்லது கேசரி விஜயம் 6777
பன்னிரு திருமுறை 7A25
பனை மரம் 6871
பாக்குப் பட்டை 6686
பாட்டாளிக்குப் பரிசு 6548
பாட்டு 6410
பாட்டும் படமும் 6411

*பாடசாலை அபிவிருத்தி 6279*
*பாடசாலை சுகாதார வேலைத்திட்டம் 6280*
*பாடசாலைகளில் விஞ்ஞானம் கற்பித்தல் 6281*
*பாடத் திட்டமும் ஆசிரியர் கைந்நூலும்: இஸ்லாம் தரம் 5. 6282*
*பாடந் திட்டமிடல் 6283*
*பாடநூலாசிரியர்களுக்கான பொதுக் கைந்நூல் 6284*
*பாடவிதான கையேடு 6285*
*பாடி மகிழ்வோம்: சிறுவர் இலக்கியம் 6412*
*பாடு மனமே 6549*
*பாதை தெரியாத பயணம் 6778*
*பாம்பு நரம்பு மனிதன் 6550*
*பார்வையின் பதிவுகள் 6872*
*பாரதி பன்முகப் பார்வை 6873*
*பாரதி மணி மலர் 6874*
*பாரதியின் கன்னிக் குயிலின் இன்னிசைப்பாட்டு 6875*
*பாராயணப் பாமாலை: திருமுறை மற்றும் அருட்பாடல்களின் தொகுப்பு 6090*
*பாராளுமன்றத்தில் ரவுப் ஹக்கீம் 6173*
*பால்நிலா 6413*
*பாலர் கல்விப் பாடல் 6414*
*பாலர் மலர் 6338*
*பாலர்களுக்கான சிந்தனைக் கதைகள் 3. 6426*
*பாலர்களுக்கான சிந்தனைக் கதைகள் 4. 6427*
*பாலர்களுக்கான சிந்தனைக் கதைகள் 5. 6428*
*பாலன் வருகிறான் 6429*
*பாவிருந்து: சிறுவர் பாடல்கள் 6415*
*பாவையின் பரிசு 6779*
*பிசாசின் புத்திரர்கள்: பேய் பிசாசு பற்றிய ஆராய்ச்சி நூல் 6780*
*பிட்டும் தேங்காய்ப் பூவும் 6551*
*பித்அத் துக்கு உண்மையின் சவுக்கடி 6127-28*
*பிரகாசம்: அரச ஊழியர்களது இலக்கிய ஆக்கங்கள் 6687*
*பிரதாபன் அல்லது மஹாராஷ்டிர நாட்டு மங்கை 6781*
*பிரம்படி 6688*
*பிராப்தம் 6782*
*பிரேம்ஜி கட்டுரைகள் 6876*
*பிள்ளை அழுத கண்ணீர் 7A26*
*பிள்ளைத் தமிழ் 6416*
*பிள்ளையார் கதை 6091*
*பிறந்த மண்ணில் பெற்ற சுகந்தம் பாகம் 2. 6989*
*பிறையொளி: அதிபர் அன்பு ஜவஹர்ஷா பிரிவுபசார மலர்-2005. 6929*
*புதிதாய் ஒன்றுமில்லை 6552*
*புதிய தலைமுறைகள் 6783*
*புதிய பொது அறிவுச் சுடர் 1996. 6006*
*புது யுகத்தை நோக்கி 6174*
*புது வாழ்வு 6689*
*புதுமெய்க் கவிதைகள் 6553*
*புரவலர் சில பதிவுகள் 6920*
*புல்லுக்கு அலைந்த மில்லா 6443*
*புலமைக் களஞ்சியம்: தரம் 3,4,5. 6007*
*புவியியலில் கணினியின் பயன்பாடுகள் 6350*
*பூங்காவனம் (முதற் பாகம்) 6784*
*பூச்சிகள், மீன்கள், பறவைகள், விலங்குகளுடன் நாங்களும் வாழ்வோம் 6417*
*பூஞ்சோலை 6785*
*பூமியில் சமாதானம் நிலவட்டும் 6068*

பூரணன் கதை 6554
பூவுக்குள்ளே ஒரு பூகம்பம் 6786
பெண்கள் நலன்: சுகாதாரக் கையேடு 6364
பெண்களும் மனிதர்கள் என்றுணர 6604
பெண்ணே நீ பெரியவள் தான் 6877
பெண்ணே போற்றி 6690
பெண்நிலைவாதமும் கோட்பாட்டு முரண்பாடுகளும் 6150
பெருநாள் பரிசு: குட்டி நவீனக் கதை 6787
பெற்றோரும் பிள்ளைகளும் 6367
பேரழிவுகளுக்குப் பெண்கள் முகம் கொடுத்தல் 6151
பேராசிரியர் மர்ஹூம் எம்.எம்.உவைஸ் அவர்களின் பிரத்தியேக நூலகத்தை கையேற்கும் வைபவத்தை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பிதழ் 6015
பேரினவாதத்தின் ராஜா 7000
பொது அறிவு 6008-09, 7A27
பொது அறிவுச் சுடர் 6010
பொது உளச்சார்பு நுண்ணறிவு பொது விவேகம் 6011
பொதுத் துறை நிர்வாகம்: ஓர் அறிமுகம் 6207
பொன்னான மலரல்லவோ 6788
போதையின் பிடியில் பேதைகள் 6361
போர்க்களம் 6691
போராடுவோம் 6971
போரும் வேரும் 6692
மகாவலி புள்ளிவிபரக் கைநூல் 1995. 6193
மச்சானைப் பாத்தீங்களா 6605
மட்டக்களப்பில் இந்து சமய கலாச்சாரம் 6155
மட்டக்களப்பு உழவர் மாட்சிக் கலம்பகம் 6878
மட்டக்களப்புக் கலைவளம் 6373
மண்ணின் குரல் 6789
மண்புழு மாமா வேலை செய்கிறார் 6444
மண்பூனைகளும் எலி பிடிக்கும் 6693
மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா சிறப்பு மலர் 2003: மலையகத் தமிழர் வரலாறு. 6980
மதங்க சூளாமணி என்னும் ஒரு நாடகத் தமிழ் நூல் 7A28
மதமும் அறிவியலும் 6129
மதிப்பீடு 6286
மதுக் கலசம் 6555
மயிலணி அந்தாதி 6092
மரணத்தின் வாசனை: போர் தின்ற சனங்களின் கதை 6694
மரபு 6695
மரபுக் கவிதை எழுத... 6879
மல்லிகைச் சிறுகதைகள் 6696
மலர்ந்த வாழ்வு 6697
மலராத மொட்டுக்கள் 6606
மலரும் மணமும் 6880
மலரும் மொட்டுக்கள் 6418
மலரும் மொட்டுகள் 6556
மலையக இந்திய வம்சாவளியினர்: இருளும் ஒளியும் 6972
மலையக நிர்மாணச் சிற்பி கோ.நடேசையர் 6909
மலையக மக்களின் சமூக-பொருளாதாரம்: ஒரு வரலாற்றுப் பார்வை 6188
மலையகத் தமிழ்ச் சஞ்சிகைகள்: ஓர் ஆய்வு 6021
மலையகத் தமிழர் வரலாறு **பார்க்க** மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா சிறப்பு மலர்
மலையகம் தேசியம் சர்வதேசம் 6881
மலையாண்டி 6607

*மழலைக்கோர் பாட்டு 6419*
*மன்னல்: மன்னார் பிரதேச இலக்கிய விழா 2008 சிறப்பு மலர் 6022*
*மனங்களிலே நிறங்கள் 6698*
*மனச் சுமைகள் 6699*
*மனித உரிமைகள் சட்டமும் மனிதாபிமானச் சட்டமும் 6196*
*மனித விருத்திக்கான கல்வி பற்றிய தொலைநோக்கு 6287*
*மனிதர்கள்? 6700*
*மனிதர்கள் 6608*
*மனிதரும் சமூக வாழ்வும் 6140*
*மனிதன் இருக்கிறான் மனுசி எங்கே? 6609*
*மனிதன் மாமனிதனாக 6882*
*மனிதவள முகாமைத்துவம் 6370-71*
*மனிதனும் சூழலும்: சூழற் கல்வி பற்றிய அறிமுகம் 6220*
*மனோன்மணி 6610*
*மஹாகவியியல்: மஹாகவி குறித்த விமர்சனத் தொகுப்பு நூல் 6883*
*மஹாகவியின் குறும்பா 6557*
*மா.ஓ.சேதுங் கவிதைகள் 6897*
*மாகாண சபைத் தேர்தல் சட்டங்கள்  6197*
*மாங்கல்யம் தந்து நீயே 6701*
*மாணவர் அடைவுகளை மதிப்பிடல் 6288*
*மாணவரின் வகுப்பறை நடத்தை 6289*
*மாணவரை விளங்கிக் கொள்ளல் 6290*
*மாபெரும் தலைவர் சட்டமாமேதை அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் நினைவுக் கட்டுரைகள் 6918*
*மாமனிதம்: கவியரங்கக் கவிதைகள் 6558*
*மார்க்சிய உளவியலும் அழகியலும் 6038*
*மாலைக்கு மாலை 6559*
*மாவீரன் செண்பகராமன் 6923*
*மானிடம் சாகவில்லை 6611*
*மிலேனியம் கனவுகள் 6560*
*மீட்டாத வீணை 6790*
*மீண்டும் புதிதாய்ப் பிறப்போம் 6791*
*மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது* 7A29
*மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள் 6561*
*முகவரியைத் தொலைத்தவர்கள் 6562*
*முகிலன் கவிதைகள் 6563*
*முடிந்துபோன தசையாடல் பற்றிய கதை 6702*
*முடிவில்லாப் பேச்சுக்கள் 6564*
*முத்தான முத்துப்பேட்டை 6981*
*முத்துமீரான் கவிதைகள் 6565*
*முதலாம் கலீபா அபூபக்ர் ஸித்தீக் (றழி) 6130*
*முதலிரவு 6703*
*முதற் காதல் 6901*
*முதன்மொழி தமிழ் இலக்கியம்(ஆ-பாடத்திட்டம்) சீறாப்புறாணம்- ஹிஜ்றத்துக் காண்டம் தாத்துற்றஹாக்குப் படலம் 6339*
*முருக மந்திரம் 6093*
*முற்போக்குக் காலகட்டத்துச் சிறுகதைகள் 6704*
*முற்றத்து மல்லிகை 6566*
*முறுகல் சொற்பதம் இரு படி 6567*
*முறைமைசாராக் கல்வி முறையில் நாட்டுக்கூத்துக்கள் 6291*
*முஸ்லிம்கள் வளர்த்த அறிவியல் அழகியற் கலைகள் 6982*
*முஹம்மதுற்றஸூலுல்லாஹ் (மக்காக் காலப் பகுதி) 6131*
*மூலதனப் பாதீடிடல் 6191*
*மூன்று முழு நிலவுகள் 6612*

மெய்யியல் 6033
மெய்யியல்: அறிமுக உரைகள் 6034
மெய்யியல்: ஓர் அறிமுகம் 1. 6035
மேட்டு நிலம் 6705
மேதின வரலாறு 6189
மேலதிக மொழிகளைக் கற்பித்தல்: கல்விசார் செயற்பாடுகள் பற்றிய கைந்நூற்றொடர் 6. 6292
மொட்டுக்களை மலரவிடுங்கள் 6792
மொழியும் பிள்ளையின் அபிவிருத்தியும் 6293
மோட்ச முழக்கம் 6568
மோதக மாமா 6445
மோதல் தீர்வு எண்ணக் கருக்கள் 6175
மோதல் தீர்வும் சமாதான செயன்முறைகளும் 6176
மௌன ஓலங்கள் 6793
மௌன தேசம்: மரபுக் கவிதைத் தொகுதி 6569
மௌனத்தின் ஓசைகள்: மொழியாக்கக் கவிதைகள் 6898
யதார்த்தமும் ஆத்மார்த்தமும் 7A30
யார் இந்த புலவர் ச.தம்பிமுத்துப்பிள்ளை 6943
யாருக்காக? 6794
யாழ் நூல் என்னும் இசைத்தமிழ் நூல் 7A31
யாழ்ப்பாண திருத்தலங்கள் மீது பாடப்பட்ட அருளிசைப் பாடல்கள் 6094
யாழ்ப்பாணக் கதைகள் 6706
யாழ்ப்பாணத்தின் நீர்வளம் 6907
யாழ்ப்பாணத்து மரபுவழிக் கல்வி 6294
யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் மடமும் மடக்கட்டடக் கலையும் 6143
யாழமுதன் கவிதைகள் 6570
யுக ராகங்கள்: புதுக்கவிதைகள் 6571
யுகப் பிரவேசம்: சிறுகதைகள் 6707
யுகம் 6708
யோகராணி கொழும்புக்குப் போகிறாள் 6795
ரங்வெடியாவை கிராமத்தின் வரலாறு 6990
ரசிகர் குழு போட்டிக் கதைகள் 6709
ரமழான் என்றால் என்ன? 6132
ரமழான் நோன்பு: ஓர் ஆய்வு 6133
ரவிவம்சம்லூ அமரர் நடராஜா ரவிராஜ் நினைவுமலர் 6916
ரவீந்திரநாத் தாகூரின் மூன்று நாடகங்கள்: 2.வேந்தனும் அரசியும் 6613
ரவீந்திரநாத் தாகூரின் மூன்று நாடகங்கள்: 3. பலி 6614
ராத்ரி... (புதுக் கவிதைகள்) 6572
லைட் ரீடிங் 6894
லோவெட சங்கராவ அல்லது உலகாபிவிருத்தி மணிமாலை 6069
வசந்தம் வந்தது 6796
வட இலண்டன் தமிழ்ப் பாடசாலை 21ஆவது ஆண்டுவிழா 6301
வண்ணமாதல் 6375
வந்திடுமா வசந்தகாலம் 6573
வயல் செய்வோம் 6420
வரலாற்றில் இலங்கை கண்ட குமரி: முதல் பாகம் 6983
வரலாற்றில் இலங்கையும் காயல்பட்டினமும் 6984
வரலாற்றில் தமிழும் தமிழரும் 6973
வரலாற்றில் வள்ளல் ஹபீபு முஹம்மது அரசர் 6985
வரலாறு அவளைத் தோற்றுவிட்டது 6797
வலிகளைத் தாங்கி 6574
வழி கெடுக்கும் இயக்கங்கள் 6134
வழியும் மொழியும் 6884

*வளமான வாழ்விற்கு உணவே மருந்து 6365*
*வன்னியர் திலகம் 6798*
*வாசிகம்: வாசிப்பு கலாச்சாரம் பற்றிய வரி-வடிமங்கள் 6885*
*வாடிய மலர்கள் 6799*
*வாழ்க்கைச் சுவடுகள் 6930*
*வாழ்க்கைப் பயணம் 6800*
*வாழ்வியல் வசந்தங்கள்: பாகம் 2. 6059*
*வாழ்விழந்தார் புலம்பல் ஒப்பாரி 6318*
*வாழ்வும் வயதும் 6048*
*வானம் சிவக்கிறது 6575*
*விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகள் 6295-96*
*விஞ்ஞானம் கற்பிக்கும் முறைகள் 6297*
*விஞ்ஞானிகள் அறிவுஜீவிகளுக்கு 6974*
*விடிய இன்னும் நேரமிருக்கு 6615*
*விடியலில் ஓர் அஸ்தமனம் 6801*
*விடியலின் ராகங்கள் 6576*
*விடியலைத் தேடும் புதுயுகப் பெண்கள் 6886*
*விடியாத இரவில்லை 6887*
*விடிவுகள் அடிவானில் 6710*
*விடிவுகால நட்சத்திரம் 6802*
*விடிவெள்ளி கவிதைகள் 6577*
*விடுதலை 6177*
*விடுமுறைக்கு விடுமுறை 6711*
*விண்ணும் மண்ணும் 6712*
*வித்தியின் தமிழியற் பதிவுகள் 6888*
*வித்துக்கள்: ஈழ மண்ணில் வேத சாட்சிகள் 6319*
*வித்துவ சிரோமணி கணேசையர் 6931*
*விதி வலியது 6803*
*விதியின் கை 6804*
*விதியின் வழியிலே 6805*
*விபுலாநந்தர் வாழ்கின்றார் 6578*
*விபுலானந்தர் அம்மானையும் அவரது இரு மாணவர்களினதும் வாழ்க்கை வெண்பாவும் 6579*
*வியத்தகு இந்தியா 6953*
*விழிகளால் கதைகள் பேசி 6889*
*விழுதுகள் 6302*
*விளையாட்டு விழாக்களை ஒழுங்கு செய்தல் 6298*
*விற்பனைக்கு ஒரு கற்பனை 6580*
*வினைப் பகுபத விளக்கம் 6328*
*விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும் 6947*
*விஜயன்-விஜையை திருமணம் 6616*
*வீடு யாருக்கு 6806*
*வீரவில்லாளி 6617*
*வெசக் தீபம் 6446*
*வெள்ளிப் பாதசரம் 6713*
*வெளிச்சம்: சிறுகதைகள் 6714*
*வெற்றி (கவிதைகள்) 6581*
*வெற்றிலை நினைவுகள் 6582*
*வென்றெடுத்த உரிமைகள்: பாகம் 2. 6152*
வேந்தனும் அரசியும் **பார்க்க** ரவீந்திரநாத் தாகூரின் மூன்று நாடகங்கள்
*வேர்கள் அற்ற மனிதர்கள் 6583*
*வேரறுந்த மரங்கள் 6807*
*வேள்வித் தீ 6808*
*வைகறைப் பூக்கள் 6715*

*வைகறையில் ஒரு வானம்பாடி 6584*
*ஜயந்தி 6809*
*ஜலசமாதி 6716*
*ஸப்தஸ்வரப் புன்னகை 6377*
*ஹலாலும் ஹறாமும் 6135*
*ஹாஜியார் வீட்டு நோன்புக் கஞ்சி 6717*
*ஷேத்திரத் திருவெண்பா: பதினொராம் திருமுறையுள் அடங்குவது 6095*
-----------

# ஆசிரியர் வழிகாட்டி

*அக்ரம், எல்.வஸீம் 6459*
*அகத்திமுறிப்பான்* **பார்க்க** *பரீத், செய்னுதீன் எஸ்.*
*அகத்தியர் 6091*
*அகமது, தாஸிம் 6815*
*அகளங்கன் 6379, 6396, 6402-03, 6409, 6587, 6591*
*அகிலன், த. 6694*
*அங்கையன் 6760*
*அசோகா, மண்டூர்* **பார்க்க** *மண்டூர் அசோகா*
*அட்டாளை நஷி 6484*
*அண்ணா கண்ணன் 6998*
*அத்துகோறள, கருணாதிஸ்ஸ 6181*
*அப்துல்லாஹ் (ரஹ்), எம்.எஸ்.எம். 6112-14, 6122-23, 6127-28*
*அபயக்கோன்,* A.M.S. *6293*
*அபயக்கோன், சுமனா குமாரி 6267, 6280, 6298*
*அபயசிங்க,* W. *6264*
*அபயவர்த்தன,* R.R. *6260, 6264, 6295-96*
*அபார் 6461*
*அபூசிபா* **பார்க்க** *சலாகுத்தீன், மவ்லவி எச்.*
*அபூபக்கர் 6555*
*அபூபக்கர்,* A.M. *6108*
*அபேகோன், சுமனா 6275,*
*அம்பலத்தாடிகள்- நடிகர் ஒன்றியம் 6592*
*அம்பலவாணர், கந்தப்பு 6016*
*அம்பி* **பார்க்க** *அம்பிகைபாகன், இ.*
*அம்பிகைபாகன், இ. 6391, 6622*
*அமரகுணசேகர,* S.D.*லயனல் 6227-28, 6233, 6237, 6262, 6264, 6283, 6295-96*
*அமரசிங்க, ரஞ்சித் 6161*
*அமரசிங்க, வீ. 6238, 6269*
*அமரதுங்க, கே. 6248, 6260, 6286, 6295,*
*அமிர்தகழியான்* **பார்க்க** *குணரத்தினம், செ.*
*அமிர்தநாதர், ச. 6416*
*அமிர்தலிங்கம், அ. 6971*
*அமீர்தீன், வீ. 6207*
*அமீன், எம்.ஐ.எம். 6130-31, 6199, 6305, 6906, 6982*
*அமீன், ஸீ.எம்.ஏ. 6139*
*அமுதசாகரன், அடைக்கலமுத்து 6892*
*அரசரெத்தினம், எஸ். 6889*
*அரவிந்தன், குரு. 6680*
*அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை* **பார்க்க** *சுந்தரம்பிள்ளை, அராலியூர் ந.*
*அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிய பரமாச்சாரிய சுவாமிகள் 6999*
*அருணந்தி சிவாச்சாரியார் 6062*
*அருணாசலம், எஸ். 6192*
*அருணாசலம், க. 6859*
*அருணாசலம், சரோஜினிதேவி 6435, 6437-38, 6440, 6442, 6445-46*
*அருந்தவராஜா, க. 6679*
*அருள் எழிலன், டி. 7000*
*அருளானந்தம், நீ.பி. 6628, 6633, 6714, 6764*

அருளானந்தன், கதிர்காமத்தம்பி 6586
அல்லையூர் சி.விஜயன் **பார்க்க** விஜயகுமார், சின்னத்துரை
அல்வினா, ம. 6302
அலாவுதீன், M. **பார்க்க** ஒலுவில் அமுதன்
அலியார், U.L. 6229
அலெக்சாந்தர், ம.செ. 6242, 6277, 6293
அவ்தா, அப்துல் காதிர் 6198
அறவேந்தன், இரா. 6997
அன்ஸார், ஏ.எல். **பார்க்க** மருதூர் அன்ஸார்
அன்ஸார், கோவை **பார்க்க** கோவை அன்சார்
அன்பு மணி 6836, 6855, 6870
அன்பு மலர் 6068
அன்பு முகையதீன் 6538
அனந்தன், இ. 6441
அனஸ், எம்.எஸ்.எம். 6034, 6121, 6926-27
அ∴லாமௌதுதி, ஸெய்யித் அபுல் 6117, 6119
அஸ்மின், யூ.எல்.எம். 6576
அஸ்லம், ஏ.எல்.முஹமட் 6187
அஸாட், M.S. 6238, 6269
அஸீஸ், ஏ. 6976
அஸுமத், இப்னு 6572
அஷ்ரப், எம்.எச்.எம். 6174
அஹமத், வை. 6783
அஹமட், ஏ.நஸீர் 6187
ஆதம்பாவா, S.H. 6107
ஆதம்பாவா, U.L. 6647
ஆராச்சி, எஸ்.ஜாதுங் 6283, 6286
ஆராச்சி, எச்.ஜெயதுங்க 6223, 6247-48, 6286
ஆருத்ரா, இ. 6431
ஆரையூர் இளவல் 6578, 6602
ஆரையூர் தாமரை 6580
ஆலிம், அப்துர் ரஹ்மான் 6449
ஆலிம், அப்துஸ்ஸமது 6453, 6618
ஆலிம், முஹம்மது சாலிஹு 6485
ஆலிம், முஹம்மது யூசுப் 6200
ஆழ்கடலான் **பார்க்க** பரமநாதன், முருக.வே.
ஆறுமுக நாவலர் 6326
ஆறுமுகம், ஓ. 6276
ஆறுமுகம், கண. 6311
ஆறுமுகம், சி. 6622
ஆறுமுகம், நா. 6622
ஆனந்தகுமார், அம்பிகை 6083
ஆனந்ததியாகர் 6090
ஆனந்தநடராஜா, மாதினியார் 6671
ஆனந்தன், வி. 6899
ஆனந்தி **பார்க்க** ஆனந்தநடராஜா, மாதினியார்
இக்பால், ஏ. 6482
இசுப்பியர், T.G.P. 6950
இடைக்காடர், நாகமுத்து 6752, 6772
இணுவை இரகு **பார்க்க** பாலஸ்ரீதரன், ஆ.இரகுபதி
இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் 6791
இத்ரீஸ் (நளீம்), அஷ்-ஷெய்க் ஏ.பீ.எம். 6028

இதயச்சந்திரா, எட்வேட் *6579*
இந்திரகுமார், ஜெ. *6359*
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் *6088, 6308, 6947*
இந்து மகேஷ் *6737*
இமயவரம்பன் *6171*
இமானுவல், சரளா *6151*
இமையவன் *6708*
இயல்வாணன் *6756*
இரகுநாதன், கனகையா *6172*
இரகுநாதன், மயில்வாகனம் *6832*
இரகுநாதையர், இ.சி. *6065*
இரகுபதி, பொ. *6636*
இரத்தினதுரை, புதுவை **பார்க்க** புதுவை இரத்தினதுரை
இரத்தினபாலன், பொன். *6665*
இரத்தினம், கா.பொ. *6857*
இரத்தினம், முருகு *6293*
இரத்தினவேலோன், புலோலியூர் ஆ. *6812*
இராகி **பார்க்க** கிருஷ்ணபிள்ளை, இராமக்குட்டி
இராசதுரை, அன்னலட்சுமி *6732*
இராசதுரை, இ. *6333-34, 6345*
இராசரத்தினம், வ.அ. *6747*
இராசலிங்கம், சக்கரவர்த்தி *6766*
இராசேந்திரம், சோ. **பார்க்க** தாமரைத்தீவான்
இராசையா, E.S. *6722, 6777*
இராசையா எ.சி. **பார்க்க** இராசையா, E.S.
இராசையா, வரணியூர் A.C. **பார்க்க** இராசையா, E.S.
இராசையா, வீ. *6224, 6227-28, 6256, 6260, 6261-63, 6295-96*
இராமசாமி, கே.வி. *6023*
இராமநாதன், எஸ். *6972*
இராமலிங்க முனிவர் *6065*
இராமலிங்கம், தா. *6502, 6553*
இராமலிங்கம், மு. *6320*
இராஜசிங்கம், சி. **பார்க்க** சுதாராஜ்
இராஜரட்ணம், கே.எஸ். *6224, 6256, 6263-64,*
இராஜரத்தினம், பீ. *6298*
இராஜேந்திரக் குருக்கள், சு. *6086*
இராஜேந்திரன், யமுனா *6994*
இராஜேஸ்வரன், ப. *6271*
இலக்கியச் சிந்தனை தெரிவுக்குழு *6991*
இலங்கை மகாவலி அதிகார சபை *6193*
இலங்கையர்கோன் *6713, 6901*
இளங்கீரன், சுபைர் *6771, 6775*
இளந்திரையன், சாலை *6747*
இளநெஞ்சன் முர்ஷிதீன் *6560*
இளமுருகனார், சோ. *6085, 6554*
இளையவன் *6691*
இன்டர்நெஷனல் அலர்ட் *6303*
இஸ்மாயில், எஸ்.எச்.எம். *6029, 6057, 6116, 6118*
இஸ்மாயில், U.L.M. *6655*
இஸ்ஸதீன், ஹாபிஸ் *6110*
ஈ.பீ.ஆர்.எல்.எப். பத்மநாபா அணி *6206*
ஈரவலயப் பாதுகாப்புத் திட்டம் *6192*

ஈழத்துச் சிவானந்தன் 6726
ஈழத்துப் பூராடனார் 6381, 6463, 6579, 6780, 6835, 6878
உடுவை தில்லை நடராசா **பார்க்க** தில்லை நடராசா, உடுவை
உதயகுமார், சமரபாகு சீனா 6469
உதயசந்திரன், வி.என்.எஸ். 6411
உதயசெல்வன், எஸ். 6792
உதயணன் 6788
உதயன், எஸ்.ஏ. 6765
உபசேன, பி.பி. 6286
உபைத்துல்லா, ஏ.எஸ். 6716
உமாபதி சிவாசாரியார் 6064
உயன்கொட, ஜயதேவ 6961
உருத்திரமூர்த்தி, து. **பார்க்க** மஹாகவி
உவைஸ், அல்லாமா ம.முஹம்மது 6339, 6884, 6900, 6978
உறோபேட்சு, P.E. 6950
எழில் 6472
ஏ.ரி.நிதி **பார்க்க** நித்தியகீர்த்தி, A.T.
ஏகாம்பரநாதன், ச. 6074
ஏறாவூர் தாஹிர் 6488
ஐக்கிய நாடுகள் தாபனம் 6178-79, 6208-09
ஐங்கரநேசன், பொ. 6210
ஐயடிகள் காடவர்கோன் நாயனார் 6095
ஒலுவில் அமுதன் 6698, 6770
ஔவையார் 6054, 6056, 6058
கங்காதரன், B. 6180
கச்சதீவுக் கவிராயர் 6318
கசின் 6742
கடம்பநாதன் 6268
கண்ணதாசன், சிறிதேவி 6378
கணபதிப்பிள்ளை, ஓ. 6310
கணபதிப்பிள்ளை, க. 6082, 6503, 6600, 6624, 6785, 7A04
கணபதிப்பிள்ளை, சி. 6848
கணபதிப்பிள்ளை, மு. 6494, 6819
கணபதீசுவரக் குருக்கள், ச. 7A07
கணேசமூர்த்தி, எம். 6184, 6188
கணேசலிங்கம், க. 6470, 6476
கணேசலிங்கம், கே.ரீ. 6170
கதிரேசர்பிள்ளை, செ. 6622, 7A21
கதிரைவேற்பிள்ளை, குமாரசுவாமி முதலியார் 6051
கந்தசாமி, ரதிதேவி **பார்க்க** தாமரைச்செல்வி
கந்தசாமி, வி.கே. **பார்க்க** புதுமைலோலன்
கந்தசுவாமி, க.இ.க. 6073, 6338, 6941
கந்தவனம், வி. 6471, 6498, 6549
கந்தையா, ஆ. 6274, 6880
கந்தையா, ஆறுமுகம் 7A27
கந்தையா, மு. 6095
கமல்ராஜ், தமிழினி 6940
கமலசூரிய, J.S. 6248
கமலநாதன், சா.இ. 6850
கமலநாதன், திருநாவுக்கரசு 6222, 6254, 6265, 6888
கமிலஸ், டீ. 6032
கயிலாயநாதன் **பார்க்க** அங்கையன்

கயிலாயபதி, குமாரசுவாமி **பார்க்க** யாழமுதன்
கரீம், M.H.A. 6505
கருணாகரன், ஆர்.சி. 6180
கருணாநிதி, மு. 6992
கருணாரத்ன, சுனேத்திரா 6241
கருணாரத்ன, யூ.எல். 6280
கருணானந்தம் 6047
கல்கிதாசன், நயமணி 6874
கல்லடி றொபேட் 6515
கல்வீட்டுக் கவிராயர் **பார்க்க** ஹலீம்தீன்
கலாவேந்தன், P. 6362
கலீல், கலைவாதி **பார்க்க** கலைவாதி கலீல்
கலீல், மடவளை **பார்க்க** மடவளை கலீல்
கலை அலோய் **பார்க்க** தேவ-அலோய்சியஸ்
கலைச்செல்வன் 6595, 6920
கலைமகள், கி. 6564
கலையமிர்தன் **பார்க்க** இரத்தினபாலன், பொன்.
கலைவாதி கலீல் 6486
கவிஞர் அண்ணல் **பார்க்க** சாலிஹ், எம்.எஸ்.எம்.
கவிஞர் துரையர் **பார்க்க** துரைசிங்கம், சு.
கனகசபாபதி, பொ. 6321
கனகசுந்தரம்பிள்ளை, த. 6810
கனகரத்தினம், இரா.வை. 6924
கனகரத்தினம், K.T. 6223 , 6224, 6227-28, 6233, 6237, 6248, 6256, 6261-63, 6264, 6283, 6295-96
கனகரத்தினம், த. 6339, 6400, 6834
கனகரத்தினம், தி. 6260
கனகராசன், மு. 6615
கனிவுமதி 6487
கஸ்ஸாலி, முஹம்மத் அல் 6104
காசி ஆனந்தன் 6520, 6868
காசிம் ஜீ, எம்.எம். 6464, 6975
காத்தான்குடி நசீலா 6646
காதர், எம்.எல்.ஏ. 6164
காதிரி, எஸ்.எச்.பௌஸுர் ரஹீம் 6120
காரை.செ.சுந்தரம்பிள்ளை **பார்க்க** சுந்தரம்பிள்ளை, காரை.செ.
காலிதீன், கே.எம்.எச். 6154, 6905
கிரிதரன், வ.ந. 6789
கிருஷ்ணபிள்ளை, இராமக்குட்டி 6638
கிருஷ்ணபிள்ளை, எஸ். 6260, 6262, 6295,
கிருஷ்ணபிள்ளை, கே. 6224
கிருஷ்ணபிள்ளை, சின்னையா **பார்க்க** திமிலைத் துமிலன்
கிருஷ்ணபிள்ளை, பொ. 6820
கிருஷ்ணபிள்ளை, மு. 6256
கிருஷ்ணமோகன், தனபாலசிங்கம் 6159-60
கிருஷ்ணராஜா, சோ. 6031, 6050-51, 6142
கீதபொன்கலன், எஸ்.ஐ. 6137, 6175-76
கீர்த்தி 6670
கீர்த்திசிங்கம், குமரேஸ்வரன் **பார்க்க** கீர்த்தி
குணசேகர, எஸ்.டி.எல். 6247
குணசேகர, H.D.L. 6260
குணசேகரம், கே.வி. 6668-69
குணத்திலக்க, M.D.J. 6223, 6227-28, 6233, 6260, 6295,

குணத்திலக்க, M.D.S. *6264*
குணதாச, ஏ.டீ. *6281*
குணநாதன், ஓ.கே. *6735*
குணபாலசிங்கம், தனபாக்கியம் *6952*
குணரட்ண, அநுராதா *6180*
குணரத்தினம், செ. *6462, 6710*
குணரத்தினம், வேலுப்பிள்ளை *6158*
குணரத்ன, M.D.S. *6281, 6297*
குணராசா, க. *6009, 6634, 6696, 6704, 6753, 6759, 6768,* 7A*11*
குணவர்த்தன, ஆர்.பி. *6286*
குணவர்த்தன, A.J. *6225, 6285,*
குப்புசாமி ஐயர் *6995*
குமாரசாமி, கல்வயல் வே. *6567*
குமாரசாமி, சி. *6242*
குமாரசுவாமி, எஸ். *6277*
குமாரசுவாமி, சந்திரா *6276*
குமாரசுவாமிப் பிள்ளை *6810*
குமாரசுவாமிப் புலவர், அ. *6325, 6328*
குருகே, லயனல் *6962*
குருப்பு, L.U.C. *6272*
குலரத்தினம், க.சி. *6060*
குலேந்திரன், பொன். *6454*
குவைலீத், யூ.எல்.எம். *6519*
குறூஸ், றோபேர்ட் *6146*
கேசவன், சுபாசினி *6687*
கைலாசபதி, க. 7A*09*
கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் **பார்க்க** உமாபதி சிவாசாரியார், கொற்றவன்குடி
கோபாலன், தி.இரா. *6048*
கோவூர், ஏபிரகாம் T. *6040-41, 6045, 6047*
கோவை அன்சார் *6501*
கௌரிபாலன், வி. *6865*
கௌரீஸ்வரன், து. *6382, 6604*
சக்திதாசன், சக்தி *6838*
சக்திவேல், கணேசபிள்ளை *6016*
சக்திவேல், பொன். *6211*
சகாதேவராஜா, வி.ரி. *6351*
சங்கர பண்டிதர் *6049*
சங்கரலிங்கம், எஸ். *6495*
சங்குப்பிள்ளை, பாலா *6733*
சச்சிதானந்தசிவம், வை. **பார்க்க** ஞானரதன்
சச்சிதானந்தம், சாந்தி *6147*
சச்சிதானந்தன், க. *6460, 6956*
சடாட்சரன்,மு. *6705*
சண்முகசுந்தரம், யோகேஸ்வரி *6013-14*
சண்முக சுப்பிரமணியம் *6915*
சண்முகதாஸ், அ. *6858*
சண்முகதாஸ், மனோன்மணி *6845, 6875*
சண்முகநாதன், என். **பார்க்க** யாழ்வாணன்
சண்முகநாதன், சித்தி. *6725*
சண்முகநாதன், நா. **பார்க்க** யாழ்வாணன்
சண்முகநாதன், பொ. *6589, 6877*
சண்முகபாலன், மு. **பார்க்க** புரட்சிபாலன்.

சண்முகப்பிரபு, நல்லையா 6466
சண்முகபாலன், கந்தசாமி **பார்க்க** புரட்சிபாலன்
சண்முகலிங்கம், க. 6136, 6144, 6182
சண்முகலிங்கன், கௌரி 6232
சத்தியதீசன் **பார்க்க** சிகண்டிதாசன்
சத்தியசீலன், பா. 6410
சதாசிவ ஐயர், தி. 6490
சதாசிவம், புலோலியூர் க. 6707
சதாசிவம்பிள்ளை, ஆர்ணல்ட் 6890
சந்திரகுமார், ந. 6213
சந்திரசிறி, Y.A.D. நிமல் 6293
சந்திரசேகரம், செ. 6186
சந்திரசேகரன், சோ. 6255, 6257, 6270, 6292
சப்ரி, சால்தீன் முஹம்மது 6990
சபாநாதன், குல. 7A05
சபாபதி ஐயர், வி. 6066
சபாரத்தினம், த. 6220
சபாரத்தினம், தாழையடி **பார்க்க** தாழையடி சபாரத்தினம்
சபாரத்தினம், ப. 6241, 6281, 6288
சபாரத்தினம், பத்மாவதி 6220
சம்பந்தர், முத்து **பார்க்க** முத்து சம்பந்தர்
சம்பந்தன், இரா. 6584
சம்பந்தன், ஐ.தி. 6908
சமரசேகர, பி. 6248
சமாதான ஆதரவுக்குழு 6169
சமி, சுலைமா ஏ. 6699, 6715
சமீம், அ.முகமது 6846
சர்மிளாதேவி, இரா. 6021
சரசாலையூரான் 6405
சரத்சந்திர, K.A.D.S. 6241
சரவணபவன், ரதிவதனா 6730, 6796
சரவணமுத்து, பாக்கியசோதி 6961
சலாகுத்தீன், மவ்லவி எச். 6367
சஹாப்தீன், S.A.M. 6007
சஹாப்தீன், ஏ.எம்.முஹம்மத் 6105
சாந்திகம் 6042
சாம், D. 6372
சாயிசசி 6659, 6664
சாரல் நாடன் 6909, 6925, 6980
சாருமதி **பார்க்க** யோகநாதன், கந்தசாமி
சாலிஹ், எம்.எஸ்.எம். 6450, 6504
சாஹிப், உஸ்மான் 6106
சிக்கன்ராஜு, தொ. **பார்க்க** ராஜு, தொ. சிக்கன்
சிகண்டிதாசன் 6509
சித்தமழகியான் **பார்க்க** முருகையன், இ.
சித்தீக், M.Y.M. 6190
சிதம்பர திருச்செந்திநாதன் **பார்க்க** இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்
சிதம்பரநாத பாவலர், அ. 6495
சிதம்பரம், நா.சு. 6933
சிதம்பரராமலிங்கம்பிள்ளை, வி. 6049
சிபானி, பாத்திமா 6138
சில்லையூர் செல்வராசன் 7A06

சிலோன் விஜயேந்திரன் **பார்க்க** விஜயேந்திரன், சிலோன்
சிவக்கொழுந்து, வே. *6559*
சிவகுமார், எம். *6189*
சிவகுமார், மணியம் *6036-37*
சிவகுமாரன், கே.எஸ். *6828-29, 6853-54, 6869*
சிவகுமாரன், புஷ்பா *6270, 6292*
சிவகுருநாதன், எஸ். *6168*
சிவகுருநாதன், கனகசபை **பார்க்க** கசின்
சிவசாமி, தி. **பார்க்க** தில்லைச் சிவன்
சிவசுப்பிரமணியம், க. *6063*
சிவசுப்பிரமணியம், வ. *6850*
சிவசுப்பிரமணியம், விஜயரத்தினம் *6099*
சிவசேகரம், சி. *6896-97*
சிவஞானசுந்தரம், இ.க. *6330*
சிவஞானசுந்தரம், ந. **பார்க்க** இலங்கையர்கோன்
சிவஞானப்பிரகாசம், இராஜி **பார்க்க** சாயிசசி
சிவத்தம்பி, கார்த்திகேசு *6860, 6937,* 7A*03,* 7A*19*
சிவதாஸ், எஸ். 7A*22*
சிவநடேஸ், செ. *6279*
சிவநாதன், ந. *6948*
சிவநாயகம், செ. *6384*
சிவநேசன், சின்னையா *6598*
சிவநந்தையர் *6811*
சிவப்பிரகாச சுவாமிகள் *6051*
சிவப்பிரகாசம், எஸ். *6280, 6285,*
சிவயோகன், சா. *6363*
சிவயோகன், சி. *6364*
சிவராமலிங்கம்பிள்ளை, மா. *6784*
சிவராஜசிங்கம், வ. *6082*
சிவராஜா, அம்பலவாணர் *6157, 6205, 6224, 6243,*
சிவராஜா, A. *6256, 6261-63, 6285, 6293,*
சிவராஜா, ந. *6363*
சிவராஜா, வ. *6679*
சிவலிங்கம், கா. *6912*
சிவலிங்கராஜா, எஸ். *6931,* 7A*23*
சிவானந்தமூர்த்தி, கனகசபை *6035*
சிவானந்தராஜா, எஸ். *6094*
சிற்சபேசன், சிவசுப்பிரமணியம் **பார்க்க** வண்ணையூரான்
சிறிகந்தநேசன், பெ. *6662*
சிறிஜீவகன், பொ. *6679*
சின்னத்தம்பி, அ. *6357*
சின்னத்தம்பி, க. 7A*13*
சின்னத்தம்பி, மா. *6239, 6257*
சின்னத்தம்பிப் புலவர் *6073, 6490*
சினேகலதா, S.M. *6238*
சிஹாப்தீன், அஷ்ரப் *6443, 6561, 6815*
சீதரன், நாகராணி **பார்க்க** ராணி சீதரன்
சீதரன், ராணி **பார்க்க** ராணி சீதரன்
சீமன், ரெஜி *6358*
சீவரத்தினம், T. *6223, 6233*
சுக்ரி, எம்.ஏ.எம். *6103, 6129*
சுகுமார், பால. *6380*

சுகுமாரன், ஜெகநாதன் *6594*
சுசீந்திரராசா, சு. *6323*
சுத்தானந்த பாரதியார் *6599*
சுதர்சன், செல்லத்துரை *6852*
சுதாராஜ் *6685*
சுந்தரம்பிள்ளை, அராலியூர் ந. *6027, 6385, 6603, 6608, 6818*
சுந்தரம்பிள்ளை, காரை.செ. *6535, 6620*
சுந்தரலிங்கம், இ.சி. **பார்க்க** திருமலை சுந்தா
சுந்தரேசன், அனுசுயாதேவி *6376*
சுந்தா **பார்க்க** திருமலை சுந்தா
சுப்பிரமணிய சாஸ்திரி, ச. *6322*
சுப்பிரமணியம், S.K. *6773*
சுப்பிரமணியம், வே. *6242, 6293, 6798*, 7A24
சுப்பிரமணியன், கௌசல்யா *6893*
சுப்பிரமணியன், நா. *6831*
சுபாகரன், எஸ்.பி. *6008*
சுபாஷினி, எஸ். *6032*
சுபேஸ், கார்த்திகாயினி *6424, 6426-28*
சுபைர், எம்.ஐ.எம். *6455*
சுமைரா,  எம்.ஏ. *6801*
சுரேஷ்குமார், சு. *6478*
சுரேஷ்குமார், ந. *6192*
சூதின்,  S.M.R. *6282, 6286,*
செகராசசேகரன் *6066*
செங்கை ஆழியான் **பார்க்க** குணராசா, க.
செங்கொடி பெண்கள் இயக்கம் *6152*
செந்திநாதன், கனக. *6622, 6804, 6837, 6939*
செந்திலாதன், செல்லையா *6989*
செந்திவேல், சி.கா. *6140*
செம்பியன் செல்வன் *6612, 6615, 6630, 6712, 6824*
செல்லத்தம்பி, க. **பார்க்க** ஆரையூர் இளவல்
செல்லத்தம்பி, தா.மா. **பார்க்க** வளவை வளவன்
செல்லத்தம்பி, தாமரைச்செல்வி **பார்க்க** ஆரையூர் தாமரை
செல்லத்துரை, இ. *6061*
செல்லத்துரை, சரோஜா *6525*
செல்லத்துரை, சு. *6097*
செல்லத்துரை, நவாலியூர் நா. *6597*
செல்லையா, அ.பொ. *6744*
செல்வகுணபாலன், செ. *6194*
செல்வகுமாரன், சந்திரவதனா *6529*
செல்வம் *6024*
செல்வநாதன், கே.ஆர். *6495*
செல்வரத்தினம், க.ம. *6731*
செல்வராசகோபால், க.தா. **பார்க்க** ஈழத்துப் பூராடனார்
செல்வராசன், சில்லையூர் **பார்க்க** சில்லையூர் செல்வராசன்செல்வராசா, ஞா.ம. *6317*
செல்வராஜா, மா. *6249, 6273*
செனவிரட்ன, லக்மினி *6145*
சேவியர், ச.சதாசிவம் *6917*
சேனாநாயக்க, S.M.P. *6238*
சேனாநாயக்க, S.M.S.P. *6269*
சேனநாயக்க, சினேகலதா *6280, 6298*
சேனாநாயக்கா, செனேஹலத்தா பீ. *6267, 6275*

சொக்கலிங்கம், க. *6293, 6610, 6644, 6755, 6830*
சொக்கன் **பார்க்க** சொக்கலிங்கம், க.
சொல்லன்பன் நசிறுதீன் **பார்க்க** நசிறுதீன், S.M.M.
சோதிப்பெருமாள், எஸ். *6293*
சோமசுந்தரக் குருக்கள், குமுதா *6143*
சோமசுந்தரப் புலவர், க. *6079, 6089, 6398, 6526, 6871*
சோமசுந்தரம், C.S.S. *6861*
சோமசுந்தரம், தயா *6268*
சோமசுந்தரம்பிள்ளை, க. *6919*
சோலைக்கிளி *6550*
ஞானகாந்தன், வடிவேலு *6096*
ஞானகுமாரன், N.S. *6362*
ஞானகுமாரன், நா. *6033*
ஞானசுந்தரன், என். **பார்க்க** பிரேம்ஜி
ஞானசேகரன், தி. *6649, 6740*
ஞானப்பிரகாசர், சுவாமி *6052*
ஞானரதன் *6734*
ஞானராசா, செ. *6412*
ஞானேந்திரன், ஏ. 7A*18*
ட்ராச்டென்பர்க், அலெக்ஸாண்டர் *6189*
டயஸ், கந்தசாமி அன்ரன் *6035*
டர்ஜனீவ், ஐவான் *6901*
டான், லிஹுவா *6292*
டானியல், கே. *6663*
டி.சில்வா, அமலா *6184*
டி.மெல், K.P. *6237*
டெண்டுல்கார், விஜய் *6595*
டொப்பிங், கீத் *6270*
டேவிட், K.R. *6797*
டேவிட், P.D. *6227-28, 6264,*
டேவிட், P.A. *6237, 6247-48, 6283, 6286, 6295-96*
டேவிட், V.A. *6223, 6260, 6262*
த சில்வா, பூர்ணா *6223, 6238, 6267, 6269, 6275, 6280*
த சொய்சா, முக்தலதா *6286*
தங்கவடிவேல், எஸ்.கே. *6606*
தங்கவேலு, வேலுப்பிள்ளை **பார்க்க** நக்கீரன்
தங்கேஸ்வரி, க. *6306, 6373, 6954, 6987*
தணிகாசலம், க. *6688, 6873*
தணிகாசலம்பிள்ளை, நாகமுத்து *6230, 6291*
தம்பையா, மங்களநாயகம் 7A*23*
தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம் *6956*
தமிழ்நேசன் *6022*
தமிழ்மாறன், த. *6054, 6056, 6058*
தமிழ்மாறன், வி.ரி. *6196, 6202*
தமிழ்வாணன், லேனா *6983-84*
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் *6974*
தமிழீழ விடுதலை இராணுவம் *6963*
தமிழீழ விடுதலைப் புலிகள் *6922*
தமீம், மருதூர் ஏ.முஹம்மது *6517*
தயாபரன், வசந்தி *6430, 6444*
தர்மகுலசிங்கம், சி. *6521, 6973*

தர்மதாசன், வடிவேல்முருகன் 6370-71
தர்மராஜா, நா. **பார்க்க** அகளங்கள்
தர்மலிங்கம், ஏரம்பு 6098
தவராஜா, த. 6368
தனபாலன், பாலசுப்பிரமணியம் 6246, 6254, 6259, 6271
தனரத்தினம், எஸ்.என். 6045
தாகூர், ரவீந்திரநாத் 6613-14
தாசீன், யூ.எம். 6117
தானா விஷ்ணு 6541
தாமரைச்செல்வி 6642, 6808
தாமரைத்தீவான் 6457, 6506
தாமோதரம்பிள்ளை, சி.வே. 6743
தாழையடி சபாரத்தினம் 6689
திக்குவல்லை கமால் 6778
திசாநாயக்க, சேனக 6180
திசாநாயக்க, வில்சன் 6225, 6281, 6297
திசாநாயக்க, W. 6288
திசைவீரசிங்கம், லாலினி 6609
தித்தவல்ல, நொயெல் 6204
திமிலைத் துமிலன் 6544, 6623
தியாகு 6964
திரவெலியன், யோ.ம. 6945-46
திருச்சந்திரன், செல்வி 6150
திருச்செல்வம், எஸ். 6025
திருஞானசம்பந்தன், ம.வே. 6590
திருநாவுக்கரசு, V.T. **பார்க்க** நாவேந்தன்
திருமலை சுந்தா 6677, 6849
திருமாறன், கணேசன் 6016
திருவதிகை-மனவாசகங் கடந்தார் 6061
திருவிளங்கம், மு. 6062, 6064
தில்லைக் கூத்தன் 6968
தில்லைச் சிவன் 6500
தில்லைநடராசா, உடுவை 6615
தில்லைநாதன், எஸ். 6080, 6155
தில்லைநாதன், சி. 6234
திலகரத்ன, P.A. 6241
திலீபன், எஸ். 6348
துரைசிங்கம், சு. 6392, 6407, 6420, 6425, 6429, 6532
துரைசிங்கம், த. 6329, 6335, 6337, 6397, 6401, 6421, 6910
துரைராசா, த. 6315
துரைராஜா, உதயகரன் 6558
துரைராஜா, மியர் ஜேம்ஸ் 6943
தெட்சணாமூர்த்தி, செ.து. 6393, 6395, 6413,
தெணியான் 6741
தெருத்தூசியோன் **பார்க்க** ராஜ்குமார், ராஜசிங்கம் சார்ள்ஸ்
தேவ-அலோய்சியஸ் 6601
தேவகாந்தன் 6682
தேவகௌரி, சு. 6439
தேவதாசன் 6319
தேவதாசன், ஜே.ரூபராஜ் 6436
தேவதாஸ், தம்பிஐயா 6386
தேவதாஸ், பவானி 6711

தேவதாஸ், வாசுகி *6180*
தேவராஜ், பி.பி. *6201*
தேவராஜன், சி.ந. *6616*
தேவராஜா, சோ. *6873*
தேவன்-யாழ்ப்பாணம் *6746, 6799*
தேவி *6481*
தேன்மொழியான் **பார்க்க** சுரேஷ்குமார், சு.
தோரதெனிய, S.P. *6225, 6281, 6288, 6297*
தௌபிக், ஹிப்ஷி *6100*
நக்கீர முனிவர் *6086*
நக்கீரன் *6067*
நகுலசிகாமணி, ந. *6942*
நசிறுதீன், எஸ்.எம்.எம். *6652*
நசீலா, காத்தான்குடி **பார்க்க** காத்தான்குடி நசீலா
நடராசன், க.செ. *6491, 6513*
நடராசன், நாவற்குழியூர் **பார்க்க** நடராசன், க.செ.
நடராசா, செல்லப்பா *6166*
நடராஜன், க.கி. *6078, 6913*
நடராஜன், K.V. *6706*
நடராஜன், நவாலியூர் சோ. 7A17
நடராஜா, இ. **பார்க்க** தில்லைக்கூத்தன்
நடராஜா, கே. *6269*
நடராஜா, பாலாம்பிகை *6596*
நடனசபாபதி, க. *6907*
நடேசன், கே. *6242, 6277, 6293*
நத்வி, அபுல் ஹசன் அலி *6103*
நந்தகுமார், வை. *6226*
நமசிவாய தேசிகர், இ. *6076*
நல்லையா, இரா. *6573*
நல்லையா, ஞா. *6364*
நவநீதகிருஷ்ண பாரதியார் *6866*
நவநீதன், சி. *6363*
நவரத்தினம், சுவர்ணா *6223, 6233, 6237, 6247-48, 6260, 6296,*
நவரத்தினம், வே.க. *6761*
நவாலியூரான் **பார்க்க** செல்லத்துரை, நவாலியூர் நா.
நளினசேன, K.D. *6224, 6260-61, 6263*
நளீம், எஸ். *6561*
நளீம், மூதூர் இ. *6475*
நஜிமுதீன், எம்.எல். *6102*
நஸ்புள்ளாஹ், கிண்ணியா ஏ. *6537*
நஸிறுதீன், S. 6690
நாகராஜன், இ. *6399, 6507, 6622*
நாகராஜன், கே.என். *6996*
நாகலிங்கம், இரா. *6381*
நாகேந்திரன், எஸ். *6358*
நாச்சியாதீவு பர்வின் *6512*
நாயுடு, உ.வி. *6364*
நாவற்குழியூர் நடராசன் **பார்க்க** நடராசன், க.செ
நாவேந்தன் *6672*
நாளிர், M.H.M. *6282, 6903*
நாற்கவிராச நம்பி *6810-11*
நிசார், H.L.M. **பார்க்க** நிசார், உ.

நிசார், உ. 6415, 6527
நிசான், எலிசபெத் 6957
நித்தியகீர்த்தி, A.T. 6790
நித்தியானந்தன், இரா. 6562
நியாஸ், அபூபக்கர் முகம்மட் **பார்க்க** மருதநிலா நியாஸ்
நிர்மலவாசன், சுசிமன் 6375
நிர்மலன், சி. 6921
நீதிராஜா, வீ.ஆர். **பார்க்க** மொழிவாணன்
நீர்வை பொன்னையன் 6637, 6650
நீலவண்ணன் 7A29
நீலாபாலன் 6467
நீலாவணன் 6625
நு:்மான், எம்.ஏ. 7A01
நுபைல், ஏ.ஏ.முஹமட் 6187
நூதனசாலைக் குழு 6026
நெடுந்தீவு முகிலன் 6510
நெல்லையா, H. 6748-49, 6762, 6781
நேசமணி,ஜி. **பார்க்க** ஷர்மிளா
நேசன், ஜி. 6751
நோர்பேட், சூசைப்பிள்ளை அன்ரனி 6350, 6957
நௌபர், யூ.எல்.எம். 6044
நௌஸாத், ஆர்.எம். 6767
பசாம், ஏ.எல். 6953
பஞ்சாட்சரம், ச.வே. 6658
பஞ்சாட்சரம், பிரேமலதா 6524
பண்டா, A.G.டிங்கிரி 6238, 6269, 6275
பண்டார, P.M.L.R. 6227-28, 6247-48, 6264, 6283, 6286,
பண்டார, P.M.S.R. 6295-96
பண்டார, V.M.L.R. 6223, 6260
பத்மநாதன், எஸ். 6046
பத்மானந்தகுமார், வைத்தியரட்ணம் 6218
பர்வின், நாச்சியாதீவு **பார்க்க** நாச்சியாதீவு பர்வின்
பரமநாதன், முருக.வே. 6911, 6986
பரமேசுவரியார், இ. 6085
பரமேசுவரியார், பா. 6089
பரமேஸ்வரன், கலா 6651
பரீத், செய்னுதீன் எஸ். 6115, 6307
பருத்தியூர் பால வயிரவநாதன் **பார்க்க** பால வயிரவநாதன், பருத்தியூர்
பளீல், ஏ.எல்.எம். 6011
பழீல், எஸ்.எச்.எம். 6111
பழீல் மௌலானா, அபுல்கலாம் அல்ஹாஜ் அஸ்ஸெய்யித் 6101
பற்றிமாகரன், சூ.யோ. 6084
பற்றிமாகரன், ரீற்றா 6979
பன்னீர்செல்வம், சி. 6528
பஷீர், நயிமா A. 6800
பாத்திமா மைந்தன் **பார்க்க** ராசீக், மு.
பாலகிருட்டினன், மகேசுவரி 6953
பாலகிருஷ்ணன், ஆர். 6747
பாலகிருஷ்ணன், எம். 6465, 6474
பாலச்சந்திரன், இரா. 6605, 6674
பாலச்சந்திரன், கே.எஸ். 6739
பாலச்சந்திரன், யோகா 6923

பாலசிங்கம், அன்ரன் 6177
பாலசுந்தரம், இ. 6304
பாலநடராசன், க. **பார்க்க** இளையவன்
பாலவயிரவநாதன், பருத்தியூர் 6059
பாலமுனை பாறூக் 6508
பாலஸ்ரீதரன், ஆ.இரகுபதி 6891
பாலேஸ்வரி, ந. 6661
பாவலவன் **பார்க்க** சத்தியசீலன், பா.
பாறூக், பாலமுனை **பார்க்க** பாலமுனை பாறூக்
பாஸ்கரன், கனகசபை 6253
பாஸ்கரன், யசோதா 6418
பியதாச, W.M. 6243,
பிரதீபன், பிரமிளா 6686
பிரதேச கலாசாரப் பேரவை, ஏறாவூர்பற்று 6017-20
பிரம்மஞானி **பார்க்க** பாலசிங்கம், அன்ரன்
பிரான்சிஸ், எஸ். 6930
பிரிட்டோ, எம்.எம்.ஜி. 6216, 6219, 6343
பிரேம்ஜி 6876
பிரேமகாந்தன், பறாளையூர் இ. 6782
பிரேமசந்திர, பீ.வீ. 6238, 6267, 6269, 6298
பிரேமராஜன், எஸ்.ரி **பார்க்க** பிறேமராஜன், எஸ்.ரி
பிலோமின், ம. 6317
பிலோமினா, ஆர். 6635
பிறேமராஜன், எஸ்.ரி. 6529
பிறையன்பன் 6843
பீர்முஹம்மத், கம்பம் 6307
பீரிஸ், K.W.S. 6297
பீரிஸ், M.K. 6225
புகன்ஸ்ரீந்திரன், ந. **பார்க்க** சரசாலையூரான்
புண்ணியமூர்த்தி, கிருஷ்ணபிள்ளை 6258
புதுமைலோலன் 6738
புதுவை இரத்தினதுரை 6575
புயல் **பார்க்க** சிறிகந்தநேசன், பெ.
புரட்சிபாலன் 6692, 6729
புலேந்திரன், சி. 6224, 6227-28, 6242, 6256, 6260-63, 6295-96,
புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் **பார்க்க** இரத்தினவேலோன், புலோலியூர் ஆ.
புலோலியூர் க.சதாசிவம் **பார்க்க** சதாசிவம், புலோலியூர் க.
புவன், சுப்பிரமணியம் 6221
புவனேந்திரராசா, மு.வ. 6468
புவனேந்திரன், அ. 6679
புவிலக்ஷி 6473
புன்னியாமீன், பீ.எம். 6001-05, 6935-36
புன்னியாமீன், மஸீதா 6001-04
புஷ்பகுமார, வசந்த 6203
புஷ்பராஜ், சி. 6165
புஷ்பராஜா, சி.எஸ். **பார்க்க** கனிவுமதி
புஹாரி, M.H.M. 6282
பூபாலபிள்ளை, ச. 6866
பூபாலரத்தினம், என். **பார்க்க** நீலாபாலன்
பெருமாள், ராதிகா **பார்க்க** லுணகல ஸ்ரீ
பெரேரா, என்.எம். 6183
பெரேரா, A.P.N.H. 6241

பெல்கம், எச்.எவ். 6944
பேமச்சந்திரா, பீ.வீ. 6275
பேர்டினன்ஸ், ரிரோல் 6961
பேராசிரியன், எஸ். 6340, 6356
பேராயிரவர் **பார்க்க** ஸ்ரீகணேசன், கந்தையா
பேரின்பநாதன், ஆ. 6361
பேனா மனோகரன் 6499
பைரூஸ், எம்.பீ.எம். 6013-14
பொதுஜன ஐக்கிய முன்னணி 6965
பொன்னம்பலம், மு. 6146, 6394, 6404, 6408, 6432-34, 6451, 6497, 6702, 7A30
பொன்னுத்துரை, எஸ். 6648, 6747
பொன்னையன், நீர்வை **பார்க்க** நீர்வை பொன்னையன்
மகாதேவா, இ. **பார்க்க** தேவன்-யாழ்ப்பாணம்
மகாதேவா, கே.ஜி. 6969
மகாலிங்கம், சிவ. 6077, 6081, 6093
மகாலேகம், P.M.S. 6227-28, 6288
மகேசன், K.S. 6721
மகேந்திரன், கோகிலா 6043, 6268
மகேஸ்வரன், சபாபதி 7A25
மகேஸ்வரன், சின்னையா **பார்க்க** இந்து மகேஷ்
மகேஸ்வரன், வல்லிபுரம் 6951
மடவளை கலீல் 6530
மண்டூர் அசோகா 6656
மணிமொழி 6563
மணிவண்ணன், சுதாகரி 6585
மதிவானம், லெனின் 6141, 6881
மதுசூதனன், தெ. 6144, 6888
மப்றூக், யு.எல். 6518
மயில்வாகனம், எஸ். 6866
மயில்வாகனம், நா. 6902
மயூரன், அம்பலவாணர் 6816
மரியதாஸ், கௌரி 6344
மரியதாஸ், சூசைப்பிள்ளை **பார்க்க** சில்லையூர் செல்வராசன்
மருதநிலா நியாஸ் 6583
மருதூர் அன்ஸார் 6556
மருதூர்க் கனி 6693
மருதூர்வாணன் 6703, 6787
மலர்ச்செல்வன், த. 6523, 6899
மலல்கொட, மாதவி 6368
மலையமான் 6666
மறையும் நிழல் **பார்க்க** குவைலீத், யூ.எல்.எம்.
மன்சூர், எம்.எம். 6242
மன்சூர், எம்.ஏ.எம். 6104,
மனோகரன், துரை 6779, 6856
மனோகரன், பேனா **பார்க்க** பேனா மனோகரன்
மஜீத், மருதூர் ஏ. 6928
மஹ்ரூப், ஏ.ஆர்.எம். 6132
மஹ்ரூப், S.L.M. 6006, 6010, 6374
மஹாகவி 6408, 6557
மஹிந்தரத்ன, G.ஹேமஜித் 6243, 6248, 6256, 6263
மாணிக்கவாசகர், மு.வ. **பார்க்க** முகிலன்
மாணிக்கவேலுப்பிள்ளை, ரெ.மு. 6075

மாதகல் செல்வா 6683
மாயவன் 6727
மார்க்க நிறுவனம் 6366
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 6955
மாறன் விதானை 6463
மானா மக்கீன் 6894, 6977, 6981, 6983-85
மிராண்டா, கரிடாட் ஏ. 6284
மிஹ்ராஜ், M.N. 6282
மீஆது, எம்.வை.எம். 6133
முகியிதீன், செ.பசுலு 6339
முகிலன் 6563
முகிலன், நெடுந்தீவு **பார்க்க** நெடுந்தீவு முகிலன்
முகைதீன், மூதூர் **பார்க்க** மூதூர் முகைதீன்
முகையதீன், அன்பு **பார்க்க** அன்பு முகையதீன்
முத்து சம்பந்தர் 6548, 6681
முத்துக்கருப்பன், ஆர். **பார்க்க** ராமச்சந்ரன் எம்.
முத்துக்குமாரசுவாமி, வை. 6613-14
முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, கு. 6092, 6489
முத்துக்குமாரன், எஸ். 6617
முத்துமீரான், S. 6314, 6565, 6611
முத்துலிங்கம், அ. 6626
முத்துலிங்கம், ச. 7A14
முத்தையா, க.பே. **பார்க்க** விடிவெள்ளி
முர்தளா, முழுமதி எம். 6552
முர்ஷிதீன், இளநெஞ்சன் **பார்க்க** இளநெஞ்சன் முர்ஷிதீன்
முருகானந்தன், ச. 6360, 6531, 6542, 6632, 6676
முருகானந்தன், சந்திரகாந்தா 6886
முருகையன், இ. 6072, 6324, 6546, 6547, 6619, 6895
முல்லைமணி **பார்க்க** சுப்பிரமணியம், வே.
முழுமதி எம்.முர்தளா **பார்க்க** முர்தளா, முழுமதி எம்.
முனசிங்க, T.W. 6280
முஸ்லிம் மாதர் ஆராய்ச்சி செயல் முன்னணி 6660
மூசா, எஸ்.எம். 6904
மூதூர் இ.நளீம் **பார்க்க** நளீம், மூதூர் இ.
மூதூர் முகைதீன் 6551
மூனாக்கானா **பார்க்க** கணபதிப்பிள்ளை, மு.
மெக்கோல்ட்ரிக், என்னபல் 6030
மொலோனி, பி.சி. 6349
மேகன், S. 6362
மேமன் கவி 6571
மொழிவாணன் 6794
மௌலானா, எஸ்.ஏ.ஆர்.எம்.செய்யித் ஹசன் 6823
மௌலானா, யாஸின் 6135
மௌனகுரு, சித்திரலேகா 6151, 6496
யாகூத், M.H.M. 6225, 6267, 6275, 6280, 6282-83, 6286, 6297-98
யாழ் நங்கை **பார்க்க** இராசதுரை, அன்னலட்சுமி
யாழ்ப்பாணன் **பார்க்க** சிவக்கொழுந்து, வே.
யாழ்வாணன் 6629, 6697
யாழமுதன் 6570
யாழினி 6615
யோகநாதன், கந்தசாமி 6456
யோகநாதன், செ. 6627, 6728, 6757-58, 6774

யோகரத்தினம், செல்லையா *6053*
யோகராசா, எஸ்.ஜே. *6309*
யோகராஜா, ஆ. *6388-90*
யோகராஜா, ஏ. *6214, 6331-32, 6346-47*
யோகராஜா, ஏ.எஸ். *6290*
யோகானந்தன், க. *6419, 6479*
யோதிலிங்கம், சி.அ. *6156, 6167,*
ரகுநாதன், N.K. *6592, 6678, 6736*
ரகுராமன் *6839-40*
ரசாக், அப்துல் கரீம் அப்துல் **பார்க்க** மேமன் கவி
ரணதுங்க, T.W. *6248*
ரகுநாதன், நா. *6995*
ரமேஷ், சுபதினி *6327*
ரவீந்திரன், எஸ். *6180*
ரவீந்திரன், சோதிமலர் *6313*
ரஜனி *6720, 6724, 6745, 6769, 6805, 6809*
ரஜா, S.F.L.மொஹிடீன் *6336, 6717*
ரஜீவ்ராஜா, S. *6362*
ரஸ்ஸாக், எம்.ஐ.அப்துர் *6109*
ரஹ்மான், இளம்பிறை எம்.ஏ. *6695, 6709, 6747*
ரஹீம், கிச்சிலான் அமதுர் *6492*
ராசதுரை, காவலூர் *6806*
ராசீக், மு. *6545*
ராணி சீதரன் *6406, 6701*
ராமச்சந்ரன், எம். *6458, 6493, 6533-34, 6581, 6607, 6654, 6847, 6879*
ராமேஸ்வரன், சோ. *6684, 6718, 6793, 6795*
ராஜ்குமார், யோ.யோன்சன் *6316*
ராஜ்குமார், ராஜசிங்கம் சார்ள்ஸ் *6480*
ராஜதிலகம் *6645, 6675, 6803*
ராஜபக்ஷ, P.D.M. *6262*
ராஜபக்ஷ, ராணி *6286*
ராஜரத்தினம், பீ. *6280*
ராஜு, சிக்கன்ன *6807*
ராஜு, தொ. சிக்கன் *6763*
ரியாட், ஏ.எப்.எம். 7A08
ரினோஷா, என்.எம். *6536*
ரூபசிங்க, குமார் *6958-59, 6961*
ரூபசிங்கம், செ. *6352-54*
லத்தீப், சா.லெ.அப்துல் **பார்க்க** மருதூர்வாணன்
லியறி, வேர்ஜீனியா ஏ. *6196*
லியனகே, N.J. *6241,6281, 6288*
லியனாராச்சி, ஜகத் பண்டார *6180*
லீலானந்த, G.G. *6247, 6288, 6297*
லுணகல ஸ்ரீ *6568*
லெப்பை, அசனார் *6448*
லெப்பை, அஹமட் **பார்க்க** ஏறாவூர் தாஹிர்
லெப்பை, எம்.ஐ.அகமது *6448-49*
லெம்பேட், அன்ரனி ஜெனிபர் அருள்மொழி *6377*
லெவ்வை, முஹம்மது காசிம் சித்தி *6719*
லோகநாதன், வி. *6640*
வசந்தகுமாரன், தங்கவேலு *6350*
வஞ்சிவேந்தன் *6776*

வண்ணையூரான் 6863
வரதசுந்தரம், வே. 6070
வரதராசா, மு. 6543
வல்லிபுரநாதன், ராஜி 6639
வஹாப், Y.L.A. 6224, 6227-28, 6233, 6237, 6247-48, 6256, 6260-64, 6295-96
வாகீசமூர்த்தி, ந. 6220, 6241, 6281, 6284, 6288
வாசுகி, கமலா 6417
வாஸ், K.V.S. **பார்க்க** ரஜனி
வாஹிது, M.அப்துல் 6238
விக்கிரமசிங்க, ஆரியபந்து மைத்ரீ 6368
விக்கிரமசிங்க, சூரியா 6196
விக்கிரமசிங்க, மார்ட்டின் 6900
விடிவெள்ளி 6577
வித்தியாதரன், சி. 6387
வித்தியானந்தன், சு. 6888, 7A20
வித்தியானந்தன், சு. **மேலும் பார்க்க** பிறையன்பன்
விநாயகமூர்த்தி, அப்பாத்துரை 6918
விநாயகமூர்த்தி, வெற்றிவேல் 6071
விபுலாநந்தர் 6850, 7A31, 7A28
விமலநாதன், கனி 6355
வில்வரத்தினம், சு. 6885
விவேகானந்தராசா, த. 6604
விவேகானந்தா, சதா 6949
விஜயகுமார், சின்னத்துரை 6667
விஜயேந்திரன், சிலோன் 6514, 6817, 6826-27
விஜயன், கே. 6802
வீரகத்தி, க. 6516
வெத்தசிங்ஹ, சிபில் 6435, 6437-38, 6440, 6442, 6445-46
வேங்கடசாமி நாட்டார், மு. 6054, 6056, 6058
வேல்நம்பி, தி. 6191, 6369
வேல்முருகு, சி. **பார்க்க** வேலழகன், ஆ.மு.சி.
வேலழகன், ஆ.மு.சி. 6988
வேலாயுதபிள்ளை, செ. 6953
வேலுப்பிள்ளை, ஆ. 6825, 6833, 6864
வேலுப்பிள்ளை, சு. 6339
வைத்தீசுவரக் குருக்கள், க. 6085, 6095
வைத்தியலிங்கம், சி. 7A10
வோல்பேர்க், ஹேர்பர்ட் ஜே. 6292
றஜபுன்னிஸா, ஏ.எச். 6844
றஜீபன், கு. 6574
றிழ்வான் **பார்க்க** ஹக்களை றிழ்வான்
றொபேட், கல்லடி **பார்க்க** கல்லடி றொபேட்
றோபர்ஸ், நோபேட் 6961
ஜஃபார், ப.கா. பக்கீர் 6250-52, 6266, 6289
ஜப்பார், S.I.M.A. 6593, 6882
ஜப்பார், றகுமான் ஏ. 6631
ஜயசிங்க, ரிட்லி 6044
ஜயசூரிய, இந்திரா 6358
ஜயசூரிய, சன்ன 6358
ஜயசேகர, R.P.A. 6225, 6241, 6281, 6297
ஜயதிலக்க, எச்.எம். 6267, 6275, 6280, 6298
ஜவ்பர்கான், ரீ.எல். 6569

ஜவஹர், உஷா 6423, 6511
ஜவாத், முஹம்மத் 6522
ஜீவகாருணியம், இ. **பார்க்க** இமையவன்
ஜீவா, அந்தனி 6653, 6814, 6821, 6872
ஜீவா, டொமினிக் 6657
ஜுட், எலியட் எல் 6292
ஜெகநாதன், காவலூர் எஸ். 6700
ஜெபநேசன், எஸ். 6231
ஜெமீல், S.H.M. 6928, 7A16
ஜெயசங்கர், சி. 6383, 6609, 7A26
ஜெயசிங், தேவதாசன் 6039
ஜெயசிங், ரூபராஜ் 6039
ஜெயசேகரா, F.P.C.A.T. 6223
ஜெயசேகரா, H.G.C.A.T. 6224, 6233, 6237, 6243, 6247-48, 6256, 6260-61, 6263, 6283, 6285-86, 6293, 6295-96,
ஜெயசேகரா, H.G.C.T. 6227-28, 6264
ஜெயபாலன், த. 6236
ஜெயராசா, சபா. 6038, 6240, 6244-45, 6294, 6414, 6422, 6447, 6842, 7A12, 7A15
ஜெயவீர, நெவில் 6960
ஜெஸ்ரின், ஜோர்ஜ் 6582
ஜேக்லிஞ்ச் 6030
ஜோசப், ரூபராணி 6641
ஜோர்ஜ், அ.யோண் 6943
ஜோர்ஜ், றொசாரியோ 6365
ஜௌசி, எஸ்.சி.எம். 6299
ஜௌபர், ஏ.எஸ். 6215
ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் 6326
ஸ்ரீ ஞனாலங்கார தேரோ 6069
ஸ்ரீ தம்மானந்தா, கே. 6068
ஸ்ரீகணேசன், கந்தையா 6867
ஸ்ரீகந்தநேசன், பெ. **பார்க்க** சிறிகந்தநேசன், பெ.
ஸ்ரீகாந்தலட்சுமி, அருளானந்தம் 6012
ஸ்ரீகாந்தன், ஆர். 6276
ஸ்ரீகுமரன், சு. **பார்க்க** இயல்வாணன்
ஸ்ரீதரசிங், பூ. 6704
ஸ்ரீதரன், இராசையா 6153
ஸ்ரீபிரசாந்தன் 6055, 6452, 6539, 6841, 6883
ஸ்ரீஜீவகன், பொ. **பார்க்க** சிறிஜீவகன், பொ.
ஸ்ரீஸ்கந்தராஜா, தி. 7A18
ஸதக்கா, ஏ.ஜி.எம். 6561
ஸமது, அ.ஸ.அப்துஸ் 6566
ஸயலானி, எம்.ஐ.அப்துஸ் ஸமத் மக்தூமி சாபிஈ 6134
ஸலாஹுதீன் 6135
ஸலீம், ஏயாரெம் 6938
ஸுபைர், எம்.சி.எம். 6312
ஸெய்ன், றவூத் 6966
ஷம்ஸ், எம்.எச்.எம். 6862
ஷர்மிளா 6723
ஷரிபுத்தீன், ஜின்னாஹ் 6124, 6815
ஷரீப், A.H.M.யஹ்யா 6278
ஷரிபுத்தீன், ஜின்னாஹ் 6621
ஷாஜஹான், கலாநெஞ்சன் 6483

ஷிப்லி, M.P.M. 6243
ஷிப்னா, எம்.என்.ஆர். 6540
ஷியாத், தஸ்லிம் **பார்க்க** அட்டாளை நஷி
ஷெரீப், ஜுனைதா 6750
ஷோபாசக்தி 6964
ஹக், எம்.எம்.எம்.நூறுல் 6967, 6970
ஹக், கே.எம்.எம்.பளீல் 6185
ஹக், லறீனா ஏ. 6851, 6898
ஹக், றூஹுல் 6198
ஹக்களை றிழ்வான் 6786
ஹக்கீம், ரவூப் 6162, 6173
ஹமாதா, அல்லாமா அஷ் ஷெய்கு அப்துல் கனி 6120
ஹரீஸ், ஷல்மானுல் 6477
ஹரூன், ரஷிட் 6110
ஹலீம்தீன் 6125
ஹலிம்தீன், எம்.எச்.எம். 6914
ஹனிபா, S.M. 6822
ஹஸன், எம்.சையது மொஹம்மது 6754
ஹஸன், எஸ்.எம்.ஏ. 6976, 7A02
ஹஸன், வஸீரா 6148
ஹாமித், எம்.ஜி. 6887
ஹாஸிம், ஏ.எம்.எம். 6174
ஹுசைன், நூருல் அயின் நஜ்முல் 6149
ஹெம்மாத்தகம, சந்திரா 6238, 6267, 6280, 6298

***பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தின் தமிழ்ப்பிரிவுப் பொறுப்பாளராகப் பணியாற்றும் இ.மகேஸ்வரன் அவர்களால் எழுதப்பெற்று, தமிழகத்தில் 2010இல் நடைபெற்ற தமிழ் செம்மொழி மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரை இதுவாகும். ஆய்வாளரின் அனுமதியுடன் மீள்பிரசுரமாகின்றது. இக்கட்டுரை இலங்கையில் வெளியிடப்பெற்றதும் நூலுருவில் வெளியானதுமான இலங்கையரின் தமிழ் ஆவணங்களின் பதிவேடான இலங்கைத் தேசிய நூல்விபரப்பட்டியலை ஆய்வுசெய்வதுடன் நூல்தேட்டம் தொகுதிகளுடன் அதனை ஒப்புநோக்குகின்றது.***

# இலங்கைத்தமிழ் ஆவணங்கள்:
## *ஆவணப்படுத்துதல் -வரலாறு - அதன் முக்கியத்துவம்*

***இராசையா மகேஸ்வரன்*** (B.A(Hons), Master of Library & Information Science)
***(சிரேஷ்ட துணைநூலகர், பேராதனை பல்கலைக்கழகம், இலங்கை)***

***அறிமுகம்:***

*உலகில் சகல நாடுகளிலும் ஆவணக்காப்பகங்கள் உண்டு. ஆவணக்காப்பகங்கள் என்பது குறிப்பேடுகளை, வெளியீடுகளை தொகுத்து வைத்து பாதுகாக்கும் இடமாகும். இன்றைய ஆவணங் களை வருங்காலத்தவர்களுக்கு பாதுகாத்து வழங்குவது இதன் பணிகளுள் முக்கியமானதாகும். இலங்கையில் ஆவணப்பாதுகாப்புக்கு நீண்டகால வரலாறு உண்டு. மூன்றாம் நூற்றாண்டில் மன்னர்காலந்தொட்டு இலங்கையின் பௌத்தமடாலயங்களிலும், கோயில்களிலும், நூல்கள் பாதுகாக்கப்பட்டும், பயிலப்பட்டும் வந்துள்ளன. மகாவிகாரைகள், அபயகிரி விகாரை ஆகியன ஆவணப்பாதுகாப்பு நிலையங்களாக விளங்கியிருந்தன. இலங்கையில் 3ம் நூற்றாண்டு முதல் ஆவணப்பாதுகாப்பு ஆரம்பிக்கப்பட்ட போதும் ஐரோப்பிய ஆட்சிக்காலத்திலேயே 16ம் நூற்றாண்டில் ஆவணப்படுத்துதல், நூலகம் என்பன முறைப்படி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

*பண்டைக்காலத்தில் மன்னர்களால் வழங்கப்பட்டவை குறித்துவைத்த ஆவணம்"பின்பொத்" (*Pinpoth*) என அழைக்கப்பட்டது. இதனை வைத்துக்காத்தவர் "பொத் வருன்" (*Poth Varun*) நூல்காப்பாளர் என அழைக்கப்பட்டுள்ளனர். கோட்டை இராச்சியகாலத்தில் (1415 -1597) மன்னரால் வழங்கப்பட்ட வாய்மூல தண்டனைகளைக் குறித்துவைத்த "முகவெட்டி" (*Mukavetti*) என்ற ஆவணம் பயன்படுத்தப்பட்டதாவும், கண்டி இராச்சியகாலத்தில் ஆவணங்களை "மகாமோட்டி" (*Mahamoutti*) பாதுகாத்ததாக வரலாறுகளில் காணப்படுகின்றன. இக்காலத்தில் மன்னர்கள் கொடையாக வழங்கிய காணிகளுக்கான ஓலைச்சீட்டு (*"olai Sittu', "Cul Put'*) என அழைக்கப்பட்டதுடன் இவ்வாவணங்களை எழுதுபவரும், பாதுகாப்பவரும் "எழுதுனர்" (*liannah*) எனவும் அழைக்கப்பட்டதாகவும் வரலாற்றில் காணப்படுகின்றது. அநுராதபுரகாலத்தில் (300-1017) மன்னரது இராச்சியநிதிக்கணக்குகள் "பண்டக பொத்தகம்" (*Pandaka–Pottagam*) என அழைக்கப்பட்டுள்ளது. அதேபோல் வரிஅறவிட்டவை "வரி பொத்தகம்" (*Vari-Pottagam*) என அழைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் வரலாற்றினை கூறும் மகா வம்சம், சூளவம்சம் என்பன தீபவம்சம் (*Dipawamsa, Attakatha*) எனும் 4ம்-6ம் நூற்றாண்டு ஆவண ஏடுகளைத் துணைக்கொண்டு எழுதப்பட்டுள்ளன.*

*போர்த்துக்கேயரே (1515-1656) ஆவணப்படுத்துதலை 16ம் நூற்றாண்டில் ஆரம்பித்துள்ளனர். ஒல்லாந்தர் (1640 - 1796) போர்த்துக்கேயரிடமிருந்து கொழும்பை 1656இல் கைப்பற்றியபோது ஆவணப்படுத்தப்பட்ட ஆவணங்களை கையளிக்கமறுத்து போத்துக்கேயர்கள்*

அழித்துள்ளனர். ஒல்லாந்தர் 1660-1662 காலப்பகுதியில் ஆவணப்படுத்துனர் (Record Keeper – Mr.Pieter de Bitter) நியமிக்கப்பட்டுள்ளார். இக்காலத்தில் பல நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு என ஆவணப் படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒல்லாந்தர்களிடமிருந்து பிரித்தானியர் (1796-1947) இலங்கையை கைப்பற்றிய போது 1798 இல் ஒல்லாந்தரினால் (டச்சுக்காரர்) ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளன. 1815இல் கண்டிஇராச்சியம் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டபோது கண்டி ஆவணங்கள், அழிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் மாவட்டக்காரியாலயங்களில் ஆவணக்காப்பாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். 1870களில் நூலகங்களும், 1877ல் நூதனசாலையும் நூலகமும் (Museum and Library) ஆரம்பிக்கப்பட்ட பின் உள்ளூர் வெளியீடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. அச்சகம் மற்றும் வெளியீட்டாளர் சட்டம் 1885ல் கொண்டு வரப்பட்டுள்ளது. இலங்கை 19ம் நூற்றாண்டிலே நூல்கள் ஆவணப்படுத்தலை ஆரம்பித்துள்ளது. 1902ம் ஆண்டு ஆவணக்காப்பாளர் பதவிக்கு ஒருவர் நியமிக்கப்பட்டு கொழும்புக் கச்சேரியில் ஓர் அலுவலகமும் அமைக்கப்பட்டுள்ளது. 1902ம் ஆண்டு ஆவணப்படுத்தலில் ஒரு திருப்புமுனையாக ஆவணப்படுத்தல் மீண்டும் மாவட்டமட்டத்தில்ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கண்டி, யாழ்ப்பாணம், காலி, கொழும்பு ஆகிய இடங்களில் நூதனசாலைகள்(Museums) ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1942-1943 காலப்பகுதியில் 2ம் உலக யுத்தகாலத்தில் ஜப்பான் கொழுப்பில் குண்டுபோட்டதால், ஆவணக்காப்பகம் கொழும்பிலிருந்து நுவரெலியாவுக்கு மாற்றப்பட்டுள்ளது. இதேவேளை பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் (1876-1947) காலனித்துவ நாடுகளின் வெளியீடுகள் காலனித்துவ பதிப்புரிமைச்சட்டத்தின் கீழ் (Colonial copy right Act) சேர்க்கப்பட்டு பிரித்தானிய நூதனசாலையில் ஆவணப்படுத்தப்பட்டது.

1796 இலிருந்து 1948 வரையிலான காலப்பகுதி வெளியீடுகள், ஆவணங்கள் பிரித்தானியாவில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. 1947 இலங்கை சுதந்திரம் பெற்றபின், சிலகாலம் கல்வியமைச்சின் கீழ் ஆவணக்காப்பகம் காணப்பட்டுள்ளது. 1951இல் அச்சக பதிப்புச்சட்டம் ("Printing press ordinance"-1951-20ம் சட்டம்) கொண்டுவரப்பட்டுள்ளது. 1952 இல் இலங்கை தேசிய நூல்விபரப் பட்டியலுக்கான உபஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்ட பின், கல்வி அமைச்சிலிருந்து ஆவணக்காப்பகம் உள்ளூராட்சி மற்றும் கலாசாரஅமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. 1962இல் முதலாவது தேசியநூற்பட்டியல் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்தே வெளியிடப் படடதுடன், இதன் வெளியீட்டுக்கு பிரித்தானிய தேசியநூல்விபரப்பட்டியலின் பிரதமஆசிரியர் திரு.எ.ஜெ.வேல்ஜ்ஜின் சேவையும் பெறப்பட்டுள்ளது. 1963 தொடக்கம் வித்தியலங்கார பல்கலைக்கழகத்தில் ஆவணங்கள் ஆவணப்படுத்தப்பட்டு 1975இல் ஆவணக்காப்பகம் பதியகட்டிடத்துக்கு மாற்றப்பட்டுள்ளன. 1974ஆம் ஆண்டிலிருந்து தேசியநூற்பட்டியல் தேசியசுவடிகள் திணைக்களத்திலிருந்து தேசியநூலகசபை பொறுப்பில் விடப்பட்டுள்ளது.

இத்தேசியநூற்பட்டியல் சட்டவைப்பு நூற்சேர்க்கையின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. 1962 தொடக்கம் 1974ஆம் ஆண்டு வரையிலான தேசியநூற்பட்டியல் தேசியசுவடிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. 1974ஆம் ஆண்டு 48ஆம் இலக்கச்சட்டத்தின் மூலம் இத்திணைக்களம் தேசியஆவணக்காப்பகம் என பெயர் மாற்றப்பட்டுள்ளது. இதன் நோக்கம், 1974ஆம் ஆணடு 48ஆம் இலக்கச்சட்டத்திலும், 1981ம் ஆண்டு 30ஆவது இலக்கச் சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1885ஆம் ஆண்டின் அச்சகம் வெளியீட்டு பதிவுச்சட்டத்திற்கு அமைவாக, அச்சகங்களும் வெளியீட்டாளர்களும் சகல நூல்களினதும் பிரதிகள் ஐந்தினை வழங்கவேண்டும். இதில் ஒரு பிரதி 1973க்குப் பின், தேசிய நூலகசபைக்கு வழங்கப்பட வேண்டும். இன்னுமோர் பிரதி 1952இலிருந்து போராதனை பல்கலைக்கழக நூலகத்திலும், ஒரு பிரதி சுவடிகள் திணைக்களத்திலும் சட்டச்சேர்க்கையாக (Legal depository) ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

1951 அச்சக வெளியீட்டாளர்கள் சட்டத்தின் பின், 1973இல், 45வது சட்டமாக தேசியசுவடிகள் சட்டம் (The National Archives Low No 48, 1973) கொண்டுவரப்பட்டது.

*1973இல், 51வது சரத்துக் கேற்ப இலங்கை தேசியநூலகசேவைகள் சபை (*The Sri Lanka National Library Services Board) *ஸ்தாபிக்கப்பட்ட பின், இலங்கையில் வெளியிடப்படும் சகல வெளியீடுகளும் சட்டப்படி இச்சபை மூலம் ஆவணப்படுத்தப்பட்டுவருகின்றன. 1976 இல் இலங்கை தேசியநூலகசேவைகள் (*The Sri Lanka National Library service) *உருவாக்கப்பட்டதுடன் 1990 ஆம் ஆண்டில் இலங்கை தேசிய நூலகம் (*The Sri Lanka National Library*) ஆரம்பிக்கப்பட்டது. 1986ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் வெளியிடப்படும் நூல்களுக்கு சர்வதேச தராதர நூல் எண் (*ISBN*) வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையில் சர்வதேச தராதர நூல்எண் (*ISBN*) பெற்றுக்கொண்டால் மாத்திரமே இலங்கை தேசிய நூற்பட்டியலில் (*National Bibliography*) பதியப்படுகின்றது. இலங்கையைச் சேர்ந்தவர்கள் சர்வதேச தராதரநூல் எண்களை (*ISBN*) வேறு நாடுகளில் பெற்றுக் கொண்டால் இலங்கையரது நூலாயினும் இலங்கை தேசியநூற்பட்டியலில் பதியப்படுவதில்லை.*
*இலங்கை உள்நாட்டு யுத்தம் நடைபெற்றகாலத்தில் "தமிழ் ஈழம்" பிரதேசத்தின் வெளியீடுகள், ஆவணங்கள் தமிழ் ஈழவிடுதலைப் போராட்ட இயக்கங்களின் மூலம் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இவை 2009இல் நடைபெற்ற யுத்தத்தினால் அழிந்துள்ளதாகக் கருதப்படுகின்றது. இதேபோல் யாழ்ப்பாணம் குரும்பசிட்டி கனகரத்தினம் என்னும் தனிநபரால் ஆவணப்படுத்தப்பட்ட தமிழ்ஆவணங்கள் பற்றிய தகவல்களையும் அறிந்துகொள்ள முடியவில்லை.*

## *ஆய்வின் பிரச்சினைகள்:*

*இலங்கையில் தமிழ்ஆவணங்கள் முழுமையாக ஆவணப்படுத்தப்படுவதில்லை. தமிழ் நூல்கள் பல இந்தியாவிலும் பிறநாடுகளிலும் அச்சிட்டு வெளியிடப்படுவதும், இலங்கையில் வெளியிடப்படும் நூல்களுக்கு சர்வதேச தராதர நூல் எண் பெறப்படாமையும் எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் அக்கறையின்மையும், போதிய தமிழ் உத்தியோகத்தர்களின்மையும், பாராமுகத்தன்மையும் காரணமாக இலங்கைத் தேசிய நூற்பட்டியலில் தமிழ்நூல்கள் பதியப்பட்டு ஆவணப்படுத்தப்படாதுள்ளன. இதனால் ஆய்வாளர்கள், எதிர்காலச் சந்ததியினர் இவை பற்றி அறியமுடியாதுள்ளனர்.*

## *ஆய்வு முறை:*

*வரலாற்றுத் துணையுடன் இலக்கிய வரலாற்று ஆய்வு நூல்களின் ஆதாரங்களுடன் இத்துறைசார்ந்த இரண்டாம் நிலை சான்றுகளுடன் களநிலையில் நேரடி அவதானிப்புகளுடனும், விளக்கநிலை வாயிலாகவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.* ***"நூல் தேட்டம்" என்ற நூல்பட்டியல் ஆவணம் முதலாம் தொகுதி முதல் ஐந்தாம் தொகுதி வரை அவதானிக்கப்பட்டது.*** *வெளியீட்டாளர்களின் விலைப்பட்டியல்கள், நூலகங்களில் வைப்பிலுள்ள நூல்கள், வகுப்பாக்கப்பட்டியல்கள் ஆகியன அவதானிக்கப்பட்டன. இவற்றுள் அநேகமான நூல்கள் நூல்தேட்டத்தில் பதியப்பட்டுள்ளதால், நூல்தேட்டப் பதிவுகளை அடிப்படையாகக் கொண்டே கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வில் துண்டுப்பிரசுரங்கள், பாடசாலை பாடநூல்கள், பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்ட நூல்கள், வினாவிடைகள் வர்த்தமானி வெளியீடுகள், அரசதிணைக்கள அறிக்கைகள் ஆகியன தவிர்க்கப்பட்டுள்ளது.*

## *ஆய்வின் நோக்கம்:*

*இலங்கைத்தமிழ் ஆவணங்களை ஆவணப்படுத்துதல் பூரணமாக நடைபெறவில்லை என வெளிக் காட்டல், இலங்கைத்தமிழ் ஆவணங்களை ஆவணப்படுத்துதலில் உள்ள இடர்பாடுகளை கண்டறி தலும், இவற்றினை களையும் வழிமுறைகளை கண்டறிதலும் தீர்வு காண்பதுமே இவ்வாய்வினது நோக்கமாகும்.*

**ஆய்வின் போது கண்டறிந்தவையும் அவதானிப்புகளும்:**

"சுவடிகள் ஆற்றுப்படை" என்ற நான்கு தொகுதிகளாக எஸ்.ஏச்.எம்.ஜெமீல் இலங்கை முஸ்லீம் எழுத்தாளர்களது நூல்களை ஆவணப்படுத்தியுள்ளார். சா.ஜோ.செல்வராஜா மட்டக்களப்பு மாவட்ட நூலியல் தொடர்பான வரலாற்றினை ஆவணப்படுத்தியுள்ளார். க.குணராசா(செங்கை ஆழியான்) இலங்கை நாவல்கள் பற்றியும், கனக செந்திநாதன், சில்லையூர் செல்வராசன் மற்றும் பேராசிரியர் பூலோகசிங்கம் ஆரம்பகால வெளியீடுகள் பற்றியும் ஆவணப்படுத்தியுள்ளனர். **இதே போல் புகலிட மண்ணிலே நூல்களின் பதிவுகளை ஒன்று திரட்டியும் இலங்கையில் வெளியிடப்பட்ட நூல்களினது பதிவுகளையும் "நூல்தேட்டம்" என்ற நூல்தொகுதியாக இலண்டனில் உள்ள நூலகர் என்.செல்வராஜா வெளியிட்டுள்ளார்.** ஆயிரம் நூல்களுக்கு ஒரு தொகுதி என்ற வகையில் ஆறு (6) நூல் தேட்டங்கள் வெளியிட்டுள்ளதுடன் மலேசிய, சிங்கப்பூர் வாழ் தமிழர்களால் வெளியிடப்பட்ட நூல்கள் ஒரு தேட்டமாகவும் வெளியிடப்பட்டுள்ளன. தொடந்தும் இலங்கைத் தமிழ்நூல்களை பதிந்து வெளிக்கொணர்தலில் ஈடுபட்டுள்ளார்.

ஆய்வுக்காக உதாரணமாக, 2005ஆம் ஆண்டினை நோக்குவோமாயின், "நூல்தேட்டம்" என்ற நூலின் பதியப்பட்டுள்ள தமிழ் நூல்களினை எடுத்துக்கொண்டால், தொகுதி ஒன்று - ஆறு வரை மட்டும் 2005ஆம் ஆண்டில் 361 இலங்கைத்தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் பதியப்பட்டு காணப்படுகின்றன. இந்நூல்களில் இலங்கையில் 197 நூல்களும், சென்னையில் 99 நூல்களும், இங்கிலாந்தில் 24 நூல்களும், கனடாவில் 13 நூல்களும், ஜேர்மனியில் 08 நூல்களும், பாரிஸில் 07 நூல்களும், அவுஸ்ரேலியாவில் 05 நூல்களும், நோர்வேயில் 03 நூல்களும், டென்மார்க்கில் ஒரு நூலும் வெளியிடப்பட்டதாக பதியப்பட்டுள்ளன. இது 2005ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூல்களின் பதிவின் இறுதி முடிவல்ல. பின்தொடரும் ஏனைய தொகுதிகளிலும் 2005ஆம் ஆண்டு வெளியீடுகள் பதிப்படவுள்ளன. ஆனால் இலங்கைத் தேசியநூல்பட்டியலில் (National Bibliogrphy) 91 இலங்கைத்தமிழ் நூல்கள் மட்டுமே அக்காலப்பகுதியில் பதியப்பட்டுள்ளன. இதில் இந்தியாவில் வெளியிடப்பட்ட நூல்களில் இரண்டு மத்திரமே பதியப்பட்டுள்ளன. 270 இலங்கைத் தமிழ்நூல்கள் பதியப்படாது காணப்படுகின்றன. எனவே இலங்கை தேசியநூல்பட்டியலானது பூரணமானதல்ல என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

மணிமேகலை பிரசுரம் வெளியிட்டுள்ள விலைப்பட்டியலில் 72 இலங்கை நூலாசிரியர்களின் நூல்கள் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆனால் இலங்கை தேசிய நூல்பட்டியலில் மணிமேகலைப் பிரசுரத்தின் ஒரே ஒரு நூல் மாத்திரமே பதியப்பட்டுள்ளது. இது இலங்கை தேசியநூற் பட்டியலானது பூரணமானதல்ல என்பதற்கு மற்றொரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். அத்துடன் இலங்கை நூலகங்களில் வைப்பிலுள்ள பல நூல்களுக்கும் இலங்கை தேசியநூல்பட்டியலில் பதிவுகளைக் காணமுடியவில்லை. இதுவும் தேசியநூல்பட்டியலானது பூரணமானதல்ல என்பதற்கு ஒரு சிறந்ததோர் எடுத்துக்காட்டு ஆகும்.

மேலும், புகலிட மண்ணிலே இலங்கைத்தமிழர்களின் நூல்களை ஒன்று திரட்டியும், இலங்கையிலே ஒன்று திரட்டியும் ஈழத்தமிழர் தேசியநூல்களின் ஆவணப்படுத்தலினை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான பணியை மேற்கொள்ளும் அமைப்புகளாவன:

ஐரோப்பிய தமிழ் ஆவணக்காப்பகமும் ஆய்வகமும் (European Tamil Documentation and Research centre-ETDRC.) , லண்டன்.

உலகத் தமிழ் நூலகம் ஸ்கார்பரோ, ஒன்றாரியோ, கனடா.

வல்வை (நகுலசிகாமணி) ஆவணக் காப்பகம், கனடா.

முல்லை அமுதன் ஆவணக்காப்பகம், லண்டன்.

தமிழ்தகவல் மையம் - ஆவணக்காப்பகம் - (Tamil Information Centre-TIC Library), லண்டன்.

மலையகஆவணக்காப்பகம் -புசல்லாவ,- (இந்திய வம்சாவளி இலங்கையரது ஆவணங்கள்)

*பிரித்தானிய நூலகம் (*British Library*)*
*இலண்டன் பல்கலைக்கழக நூலகம்-*SOAS–School of Oriental and African Studies Library, University of London*)*

## தமிழ் நூல்களின், வெளியீடுகளின் ஆவணப்படுத்துதலில் காணப்படும் பிரச்சினைகள்:

*1. இலங்கையில் ஆவணப்படுத்துதலில் தொடர்ச்சியின்மை:*
*2. இலங்கை தவிர்ந்த பிறநாடுகளில் தமிழ் நூல்கள் வெளியிடுதல்:*
*2.1.1 நூல்களை வெளியிடுவோர், எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள், குறைந்த செலவு மற்றும் சந்தை வாய்ப்பு போன்ற பொருளாதாரக் காரணங்களினால் பல இலங்கைத் தமிழ் நூல்களை தமிழ்நாட்டில் வெளியிடுகின்றனர். இவ்வாறு சென்னையில் வெளியிடப்பட்ட நூல்களுக்கு  பதிவுகள் எதுவும் இலங்கையில் இல்லை. இவற்றுக்கு சர்வதேச தராதர எண் பெறப்படுவதும் இல்லை. எனவே, இவை இந்தியாவிலும் பதிவுசெய்யப்படுவது இல்லை.*
*2.1.2. 1983-85 ஆண்டுக்காலப்பகுதியில் அரசியல்காரணங்களுக்காக பல நூல்கள் தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டு இலங்கை தவிர்ந்த பிற நாடுகளுக்கு விநியோகிக்கப்பட்டன. இவை இலங்கையில் தடைசெய்யப்பட்ட பிரசுரங்களாகும்.  இவ்வெளியீடுகளின் பதிவுகள் இந்தியாவிலும் இலங்கையிலும் இல்லை.*
*2.1.3 தமிழகத்தில் சென்னையில் வெளியிடுவதற்கான காரணங்களில் பிரதானமானது, சென்னையில் வெளியீட்டாளர்களின் மூலம் வெளியிடப்படும் நூல்களை தமிழகஅரசு கொள்வனவு செய்வதே. எனவே எழுத்தாளர்கள் இந்தியாவில் வெளியிட ஆர்வம் காட்டுகின்றனர். இவ்வாறு வெளியீடு செய்யும் போது தமிழகஅரசுக்கு விற்பனை செய்யும் நோக்குடன் இரண்டாம் பதிப்புகூட "இரண்டாம் பதிப்பு" என குறிப்பிடப்படாது வெளியிடப்படுகின்றன.*
*2.1.4 ஈழத்து எழுத்தாளர்கள் தமது நூல்களின் முதல் பதிப்பினை இலங்கையில் வெளியிட்டு வரையறுக்கப்பட்ட விநியோகம் காரணமாக மீண்டும் தமிழகத்தில் மீள்பதிப்புச் செய்து இந்தியவாசகர்களுக்காக வெளியிடுகின்றனர். மாநிலமொழி அல்லாத நூல்களுக்கு விதிக்கப்படும் இறக்குமதி கட்டுப்பாடுகள் இருந்தபோதும், தமிழ்மொழி என்பதால் இலங்கை நூல்களுக்கு கட்டுப்பாடுகள் எதுவும் தமிழ்நாட்டில் இல்லை.*
*2.1.5 இந்தியாவில் வெளியிடப்படும் நூல்களுக்கு சர்வதேச தராதர எண்(*ISBN*) பெறப்படாமைக்கு வெளியீட்டாளர்கள், அச்சகங்கள் "தீர்வை அல்லது வரி" யிலிருந்து விலக்குப் பெற்று தப்புவதற்காக எனக் கருதலாம்.*
*2.2 புலம்பெயர்ந்தோர் வெளியீடுகள்*
*2.2.1. 1786இல் மலேசியாவின் பினாங்கு தீவினை கைப்பற்றிய பின் ஆங்கிலேயரால் வரவழைக்கப்பட்டு பின் அங்கு குடியேறிய இலங்கைத்தமிழர்களதும், 1950களுக்கு முன் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு தொழில் நிமித்தம் குடியேறிய இலங்கைத்தமிழர்களதும் வெளியீடுகள் எங்கும் பதியப்படவில்லை. மலேசியா வாழ் யாழ்ப்பாணத் தமிழர்கள் "இலங்கைத் தமிழர்" என்ற வரையறைக்குள்ளும் அடக்கப்படவில்லை.*
*2.2.2 உள்நாட்டு–தமிழ்ஈழ யுத்தம் காரணமாக புலம்பெயர்ந்து இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மன், நோர்வே, டென்மார்க், சுவிற்சலாந்து, கனடா, கென்யா, அவுஸ்திரேலியா, ஐக்கியஅமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், பிஜி போன்ற நாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களது வெளியீடுகளும் நூல்களும் எங்கும் பதியப்படாது ஆவணப்படுத்தப்படாது காணப்படுகின்றன. புலம்பெயர்ந்த நாடுகளில் புலம்பெயர்ந்தோர் வெளியீடுகள் அந்த அந்த நாடுகளில் தேசியநூற் பட்டியலில் இடம்பெறுவதும் இல்லை. ஆவணப்படுத்தப்பட்டு இருப்பில்/சட்டவைப்பில் வைக்கப்படுவதுமில்லை.*

## இலங்கை தேசியநூற்பட்டியலில் பதியப்படாமை:

*3.1 இலங்கையில் வெளியிடப்படும் நூல்களில் சர்வதேசதராதர எண் பெறப்படாதவை தேசிய நூற்பட் டியலில் சேர்த்துக்கொள்ளப்படாதது போல் அச்சகம், வெளியீட்டாளர் சட்டப்படி கையளிக்கப்படாத தமிழ் நூல்களைத் "தேடிப்பெறல்" இடம்பெறுவதுமில்லை.*
*3.2 இலங்கையில் கலாசார அமைச்சின் மூலம் சாகித்திய விருது வழங்கப்பட்ட நூல்கள் சிலவற்றின் பதிவுகளும் தேசிய நூற்பட்டியலில் காணப்படவில்லை. முன்னர் இலங்கையில் வெளியிடப்பட்ட நூல்களுக்கு மட்டும் சாகித்திய விருது வழங்கப்பட்டது. தற்போது பல சிறந்த எழுத்தாளர்கள் இலங்கையில் வெளியிடுவது செலவு அதிகம் என்ற காரணத்தினால் இந்தியாவில் அச்சிடுகின்றனர். அவற்றுக்கு விருதுகளும் வழங்கப்படுகின்றன. ஆனால், இவை ஆவணப்படுத்தப்படவில்லை. தேசியநூற்பட்டியலிலும் இல்லை. அதனால் சட்டவைப்பிலும் இல்லை.*
*4 உள்நாட்டு யுத்தமும் அதன் தாக்கமும்:*
*4.1 இலங்கையின் யுத்தசூழல்காரணமாக புலம்பெயர்ந்தோர் தம் நூல்களை இலங்கையில் வெளியிடுவதற்கு பயங்கொள்ளுகின்றனர். ஈழமக்கள் விடுதலை தொடர்பான தகவல்கள் இருப்பின் இலங்கையில் வெளியீட்டாளர்கள் பல விசாரணைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருப்பதால் பல நூல்கள் இந்தியாவில் வெளியிடப்பட்டன. தற்போது இந்தியாவிலும் வெளியிடுவது சிக்கலாகியுள்ளதால் ஐரோப்பாவில் வெளியீட்டு முயற்சிகள் சிறப்புப்பெற்றுள்ளன. ஆனால் இவை இலங்கையில் தேசிய நூற்பட்டியலில் சேர்ப்பதற்கு எவ்வித பிரயத்தனமும் எடுக்கப்படவில்லை.*
*4.2 "ஈழம்" என்ற வார்த்தைப்பிரயோகமும் இலங்கையில் நூல்களை அச்சிட்டு வெளியிட பல சிக்கல்களை தோற்றுவித்துள்ளமை மற்றொரு காரணமாகும். வடகிழக்கு தமிழ் எழுத்தாளர்கள் தமது விடுதலை பிரச்சினைகள் தொடர்பான இலக்கிய நூல்களை இலங்கையில் வெளியிடாமல் வெளி நாடுகளிலேயே வெளியிட்டனர். இந்தப் பதிப்புத்தளமாக இந்தியாவே அமைந்தது.*
*4.3 யுத்தசூழலில் இலங்கை வெளியீட்டாளர்கள், பதிப்பகத்தார் ஈழத்தமிழரின் நூல்களை வெளியிட ஆர்வம் காட்டவில்லை. இவர்கள் எழுத்தாளர்களை அணுகவும் இல்லை. இச்சந்தர்ப்பத்தினை இந்திய வெளியீட்டாளர்கள், பதிப்பகத்தார் பயன்படுத்திக்கொண்டார்கள்.*

## எழுத்தாளர், வெளியீட்டாளரின் புறக்கணிப்பும் திணைக்களத்தின் புறக்கணிப்பும்:

*தமிழ் பிரதேசஅச்சகங்களும், வெளியீட்டாளர்களும், பதிப்பகத்தார்களும் அச்சகச் சட்டமூலத்தின்படி சுவடிகள் காப்பகத்துக்கு ஒழுங்காக நூல்களை அனுப்பிவைக்காமை, தமிழ்நூல்கள் சுவடிகள் காப்பகத்துக்கு அனுப்ப வேண்டும் என்ற அக்கறையின்மை, தேசிய சுவடிகள் திணைக்களத்துக்கு தமிழ் நூல்கள் கிடைக்காமை, இலங்கைச்சுவடிகள் திணைக்களத்திலும், தேசியநூலகத்திலும் தமிழில் வேலைசெய்யக் கூடிய தேவையான தமிழ்ஆட்பலமின்மை,*
*என்பன நூற்பட்டியல் தயாரிப்பில் பின் தங்கியநிலை ஏற்பட ஒரு காரணமாகின்றது. இதனால் எதிர்கால சந்ததியினரின் ஆய்வுகளுக்குத் தேவையான பதிவுகள் குறைவடைந்துள்ளமை மாத்திரமல்லாது ஆவணப்படுத்துதல் இல்லாது போயுள்ளமை பெரும்குறைபாடு.*

## தீர்வும் முடிவுரையும்:

*இலங்கையில் நூற்பதிவு இலக்கத்துடன் வெளியீட்டாளர் வெளியிடுவதை ஊக்கப்படுத்த வேண்டும்.*
*தமிழக அரசு இலங்கை தமிழ்நூல்கள் வெளியிடுவோரை "நூல் பதிவு" இலக்கம் பெற வேண்டும் எனக் கட்டாயப்படுத்த வேண்டும். நூல் வெளியீட்டாளரும் நூல் பதிவு இலக்கம்*

*பெற ஆர்வம் காட்டவேண்டும். நூல் பதிவு இலக்கம் பெறாமல் வெளியிடுவோர் தமது நூல்களை வெளியிடுவதை இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும். வெளியீடுகள் அனைத்தும் தேசிய நூலகத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு தேசியநூல் பட்டியலில் பதிவு செய்ய வழிகோல வேண்டும். இதற்காக அரசாங்கத்தினை வலியுறுத்த வேண்டும்.*

*தமிழ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். பாராமுகப்போக்கு தவிர்க்கப்படவேண்டும்.*

*இலங்கையிலும், பிறநாடுகளிலும் சட்டப்படி நூல்பதிவுஎண் பெறாத நூல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படுவதன் மூலம் நூற்பதிவினை ஊக்குவிக்க வேண்டும்.*

*அரச சார்பற்ற நிறுவனமாக எழுத்தாளர், வெளியீட்டாளர்கள் ஒன்றிணைந்து ஒரு ஆவணகாப் பகத்தினை அமைத்து தமிழ்நூல் ஆவணப்படுத்தலினை மேற்கொள்ள ஆவனசெய்ய வேண்டும்.*

*புகலிட நாடொன்றில் முழுமையான ஆவணக் காப்பகம் ஒன்றினை நிறுவுதல் வேண்டும். தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள ஐரோப்பிய தமிழ் ஆவணக்காப்பகத்துக்கு (*ETDRC*) எழுத்தாளர், வெளியீட்டாளர்கள் நூல்களை வழங்க வேண்டும்.*

*சுவடிகள் திணைக்களம், தேசிய நூலகம் ஆகியன தமிழ் நூல்களை தேடிப்பெற வேண்டும். மற்றும் சர்வதேச தராதர எண் பெறாத நூல்களையும் தேசிய நூல்பட்டியலில் சேர்த்து பதியப்படவேண்டும். மேலும் புலம்பெயர்ந்தவர்களின் நூல்களையும் தேடிப்பெறல் வேண்டும். சுயதணிக்கைக்குட்படாது இலங்கையைச் சேர்ந்த, புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் நூல்களை சுவடிகள் திணைக்களம், தேசிய நூலகம் ஆகியனவற்றுக்கு வழங்க வேண்டும்.*

*தமிழ் சாகித்திய பரிசு மற்றும் விருதுகள் வழங்கும் போது நூல் பதிவு இலக்கம் பெற்ற நூல்களை மட்டும் மதிப்பீடு செய்து பரிசுகள் வழங்கவேண்டும்.*

## ***உசாத்துணை நூல்கள்:***

*கனக.செந்திநாதன், "ஈழத்து இலக்கிய வளர்ச்சி" கொழும்பு, அரசு வெளியீடு, (1964)*

*செல்வராஜா, என்., "மலேசிய சிங்கப்பூர் நூல்தேட்டம் -தொகுதி - 1", ஐக்கிய இராச்சியம், அயோத்தி நூலக சேவைகள், 2007.*

*செல்வராஜா, என்., "நூல்தேட்டம் - தொகுதி -1-5", ஐக்கிய இராச்சியம், அயோத்தி நூலக சேவைகள், 2002-2008.*

*செல்வராஜா, என்., "வேரோடி விழுதெறிந்து", கொழும்பு, ஞானம் பதிப்பகம், 2009.*

*நடராசா, எப், எக்ஸ், சி.,"ஈழத்துதமிழ் நூல் வரலாறு" கொழும்பு, அரசு வெளியீடு, 1970.*

*பூலேகசிங்கம், பொ., "தமிழ் இலக்கியத்தில் ஈதைத்தமிழர் பெருமுயற்சிகள்", கொழும்பு, குமரன் இல்லம்", 1970.*

*மகாலட்சுமி, தி.,நிர்மலா, சூ., பூமிநாதன், த., "சுவடிச்சுடர்",சென்னை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 2002.*

*ஜெமீல்,எஸ்,எச்,எம், "சுவடி ஆற்றுப்படை" கல்முனை, இஸ்லாமிய நூல் வெளியீட்டுப்பணியகம், 1994*

Maheswaran, R.,(2007), "Bibilometric Study of Tamil Publications in Sri Lanka in 2005", Colombo, University Librarian Association of Sri Lanka.

National Library of Sri Lanka: Colombo; Sri Lanka National Library Service Board, 1995.

Wimalaratne, K, D, G,. "An Introduction to the National Archives in Sri Lanka" Colombo, Social Science Research Centre, National Science Council of Sri Lanka, 1978.

**நூல்தேட்டம் ஏழாவது தொகுதி முற்றிற்று**